6
2

5 7

ന. ൨൫൧, ൨൫൩— ൨൬൨.

JL
V21194:191ZM9 N218
W45
144428

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்]  1945-ம் ஞு ஜூன் மீ 11உ திங்கட்கிழமை  [ந. 251


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் **CCLI.**

## பிரிடிஷ் அயல்நாட்டு நடவடிக்கைகளுக்கு மூலாதாரங்கள்.

### *பிரிடிஷ் ருஷ்ய ஒப்பந்தத்தின் முக்கியத்வம்.*

(டைம்ஸ் பத்திரிகை).

*பொதுத் தேருதல் நிர்வாகத்தின் ஒரு இலாகா சம்பந்தப்பட்டமட்டில் கண்காணிப்பும் பொறுப்பும் நின்றுவிடும்படி செய்துவிட முடியாது.*

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலிருந்து திரும்பிவந்துள்ள மிஸ்டர் ஈடன் ஐரோப்பாவில் யுத்த நிலைமையிலிருந்து சமாதான நிலைமைக்கு வரவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய முறையில் பிரிடனின் அயல்நாட்டு நடவடிக்கைகளை மாற்றியமைக்கும் பிரச்னையை கவனிக்கவேண்டும். குறிப்பாகச் சொன்னால் யுத்த நிலைமையிலிருந்து சமாதான முறைக்கு மாறுவது மிகவும் முக்கியமானது. புனருத்தாரண திட்டங்களும் நாசத்திற்குரிய திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆகிலும் திடீரென்று மாறுதல் ஏற்படுவதற்கு இரண்டு குதாவடைகள் இருக்கின்றன. முதலாவதாக முன்னெச்சரிக்கையும், தண்டனையுமுள்ள நடவடிக்கைகள் எதிரியின் பிரதேசத்தில் சில காலம் வரையில் கையாளப்படவேண்டும். அதே சமயத்தில் புனருத்தாரண, உலக சீர் திருத்த திட்டங்களும் நிறுவப்படவேண்டும்.

இரண்டாவதாக யுத்தத்துக்காக அமைக்கப்பட்ட சர்வதேச ஒன்றுபட்ட நடவடிக்கை சமாதான காலத்திலும் தொடர்ந்து நடைபெறவேண்டும். சமாதானத்தின் ஸ்தைரியத்தை அந்த ஒன்றுபட்ட நடவடிக்கைதான் ஊர்ஜிதப்படுத்தி உத்தரவாதம் செய்யக்கூடும். அமைப்பில் மாறுதலிருந்தாலும் முறைகளில் வித்தியாசமில்லாமல் தொடர்ச்சியாக நடைபெறவேண்டும். பிரிடன் சம்பந்தப்பட்டமட்டில், யுத்த காலத்திய வெற்றிகரமான தந்திரத்திற்கு அஸ்திவாரக் கல்லாகயிருந்த, அமெரிக்க, ருஷ்ய நாடுகளுடன் நெருங்கிய நட்பும் ஒத்துழைப்பும்தான் சமாதான கால மாறுதலுக்கும் பிரிடனின் அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படையாக இருக்கவேண்டும்.

உலகம் பூராவிலுமுள்ள, இங்கிலிஷ் பாஷையைப் பேசும் மக்களைப் பிணைத்துவரும் பொதுவான ஐதீகம், பொதுவான அக்கறை என்ற பாந்தவ்யங்களின் வலிமை அச்சுக்கூட்டாளிகளில் எஞ்சியுள்ள நாட்டைத் தாக்குவதில் காணக்கூடிய சோர்வற்ற ஊக்கமுள்ள பொது

144428



வான போரின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. பிரிடிஷ் கொள்கையின் ஒவ்வொரு அம்சத்துக்கும் இந்த ஒற்றுமையை வளர்ச்சிப்பது அத்தியாவசியமானது. அகில பிரிடன் உலக வல்லரசுகளுடன் ஐரோப்பிய வல்லரசுங்கூட ஐரோப்பாவிலிருந்து அப்பால் இருந்தது. [illegible] சாஸ்திரத்தின் முற்போக்கினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. தீவாக உள்ள [illegible] தன்மை இன்னும் [illegible] மதிக்கக்கூடாததாகயிருந்தாலும், அது தனிப்பட்டு பத்திரமாக இனிமேல் இருக்கமுடியாது. மேலும் அதன் பத்திரத்துக்கு அவசியமான உதவிப் படைகளை பிரிடன் இனிமேல் ஐரோப்பாவுக்கு வெளியிலுள்ள நாடுகளிலிருந்து மட்டும் பெற முடியாது.

ஐரோப்பாவின் பொதுப்படையான ஸ்தைரியமும், பத்திரமும், அமெரிக்கா கவலைப் படக்கூடிய விஷயங்கள். பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள பலமான, உருவான சம்பந்தங்கள் பிரிடிஷ் அமெரிக்க ஒப்பந்தத்துக்கு உபபலம் போன்றவை.

பிரிடிஷ் அயல்நாட்டுக் கொள்கைக்கு இரண்டாவதான, முக்கியத்வமுள்ள மூலாதாரம் ருஷ்யாவுக்கும் பிரிடனுக்குமுள்ள ஒப்பந்தம். இதுதான் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமாக இருந்தது. இது ருஷ்ய பிரிடிஷ் ஒப்பந்த மூலமாக உருவாக்கப்பட்டு, மூன்று வருஷங்களாக அமுலிலிருந்து வருகிறது. இந்த ஒப்பந்தம் ஐரோப்பாவில் பிரிடிஷ் கொள்கையின் லக்ஷியங்களைப் பூர்த்தி செய்து விடாதென்று சொல்லத்தேவையில்லை. முக்கியமாக இப்பொழுது உள்ள நிலைமை, பிரிடன், பிரான்ஸ், மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் முதலியவற்றிற்குள் இதற்கு முன்னிருந்ததைவிட சிலாக்கியமான முறையில் ராஜீய, பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட தகுதியுள்ள சந்தர்ப்பங்களை அளிக்கிறது. ஆகிலும் பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமுள்ள ஒப்பந்தம் அவசியமாக தொடர்ந்து இருக்கவேண்டும். அவ்விதம் இல்லாவிடில் வரையறுக்கப்பட்ட அல்லது பிரதேச ஒப்பந்தங்கள் அர்த்தமற்றதாயும் பிரயோஜனமற்றதாயும் ஆகிவிடும். வெற்றிக்கு கூட்டு முயற்சிதான் காரணம் என்பது போல, கூட்டு முயற்சியைத் தொடர்ச்சியாக பரிபாலிப்பதுதான் ஐரோப்பாவில் சாச்வதமான ஏற்பாட்டைச் செய்ய நம்பத் தகுந்த, மதிக்கத் தகுந்த அடிப்படையாகும். பிரிடனும் ருஷ்யாவும் தங்களுடைய ஸ்தானங்களிலிருந்துகொண்டு கண்காணிப்புச் செய்து வருவதுடன், அவர்களுக்குள் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் பலமாக நிலைபெற்று வந்தால் ஐரோப்பாவில் சமாதானம் நிச்சயமாக நிலவும். இஷ்டப்பட்டாலும் பிரிடனும் ருஷ்யாவும் அவர்களிடையே பிளவும் சச்சரவும் உண்டாகக்கூடிய கொள்கைகளை வெகுகாலம் கடைப்பிடிக்கமுடியாது. அவ்விதம் செய்து வந்தால் அந்தந்த நாட்டின் தேசிய அக்கரைக்கு தீங்கு ஏற்படுவதுடன் ஐரோப்பாவின் பொதுவான அக்கரையையும் வித்தியாசங்கள் பாதித்துவிடும். பிரிடிஷ் உற்று நோக்காளருக்கு ருஷ்யாவின் கொள்கைகளும் எண்ணங்களும் ஒருவர் மற்றொருவரின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளக்கூடாமலும் பரஸ்பர நம்பிக்கையை, வளர்ச்சி செய்யாமலும் புதிர் போல் மறை முகமாக இருக்கின்றனவென்று தோன்றுகின்றன. விவகாரத்துக் குட்பட்ட பிரச்னைகள் சம்பந்தமாக தகவல்களையும் அபிப்பிராயங்களையும் ராஜ தந்திர முறையில் பரிமாறிக்கொள்ளுவதிலும் ருஷ்யா பகிரங்கமாக அவைகளை வெளியிடவில்லை என்று புகார் செய்வதற்கும் முகாந்திரம் இருக்கிறது. இந்தக் கூடமான மனப்பான்மை ருஷ்யாவின் முறைகளையும் லக்ஷியங்களையும் பற்றிய சந்தேகத்தை அனாவசியமாக பலப் படுத்துகின்றது. மேலும் வித்தியாசங்களை மிகைப்படுத்தி, முக்கியமாக ஒற்றுமை அக்கரை யுள்ளதை மறந்தும் இருக்கும் சிலரின் கக்ஷியை பலப்படுத்துகின்றது.

இருதரப்பாரின் தலைவர்களிடம் ஒப்பந்தத்தை உண்மையென்றும் உபயோகமுள்ளதென்றும் காட்டுவதற்கான தனிப்பட்ட மன உறுதியை ஒருவரும் சந்தேகிக்கவில்லை. இந்த நோக்கம் கிரைமியாவிலும் விசேஷமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஆகிலும் சிரமங்கள் உண்மையானவைதான். யுத்தத்துக்குப்பின் சரிப்படுத்திக்கொள்ளவேண்டிய சில மாதங்களில் வித்தியாசங்கள் எதிர்பார்க்கப்படவேண்டியவைதான். தலைமை ராஜதந்திரிகள் பேசுவதற்கு இடையிலுள்ள நீண்ட காலங்களில் யதார்த்தமாகவும், தொடர்ச்சியாகவும் அபிப்பிராயங்களை பரிமாறிக்கொள்ள ராஜதந்திரமற்ற உத்தியோக வட்டாரங்கள் முயன்று வரவேண்டியது அத்தியாவசியமாகும். அவ்விதம் செய்தால்தான் குறிப்பிட்ட அளவுக்கு வித்தியாசங்கள் இருந்தவரும். அந்த வித்தியாசங்களும் பொதுவான அக்கரையில் முக்கியமான அஸ்திவாரங்களையும் அறுத்துவிடாமல் தடுக்கப்பட்டுவிடும்.

கிரைமியா மகாநாட்டில் மூன்று வல்லரசுகளின் மந்திரிகளும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை கூடிப்பேசவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. முதலாவது கூட்டம் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்குப்பின் லண்டனில் கூட்டப்படும்.



மிஸ்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ட்ரூமனும் மூன்று வல்லரசுகளும் கூடிய சீக்கிரத்தில் கூடிப்பேசுவார்களென்று வெளியிட்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் இனிமேல் தாமதப்படக்கூடாதென்பது விரும்பத்தக்கதாகும். தோல்விபெற்ற ஜெர்மனி பொதுவான நடவடிக்கை மூலம் தீர்த்துவிடக்கூடிய அநேக பிரச்னைகளை உண்டுபண்ணிவருகிறது.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 30—5—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் ஓகினுவாவில் ஜப்பானியத் தற்காப்புகளை ஊடுருவிச் சென்றார்கள். |
| 31—5—45 (வியாழக்கிழமை). | டிகாலி ஸிரியாவில் சுடுவதை நிறுத்தும்படி உத்தரவிட்டார். தென்கிழக்கு ஆசியா கமாண்ட் பிரிடிஷ் மயமாகிவிட்டது. |
| 3—6—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கர்கள் தெற்கு ஓகினுவாவில் சினென் தீபகற்பத்தைத் துணித்துவிட்டார்கள். |
| 6—6—45 (புதன்கிழமை). | பிரேஸில் ஜப்பான் பேரில் போர் தொடுத்தது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ஐரோப்பா.**—(1) யூகோஸ்லேவியாவில் இதாலிய கொரில்லாப் படைகளுக்கும் மார்ஷல் டிடோவின் படைகளுக்கும் போர் மூண்டது என்று சொல்லப்படுகிறது.

(2) பாரசிக வளைகுடா வழியாக அனுப்பப்பட்ட அமெரிக்க யுத்த சப்பளைகள் ஜூன் மாதம் 1 தேதி நடுராத்திரி முதல் நின்றுவிட்டன.

(3) மே மாதம் 28-ம் தேதி நடு ராத்திரி முதல் போர் புரியாதவர்களுக்கு அனுப்பப்பட்ட சாமான் கப்பல்கள் நின்றுவிட்டன. அது முதல் கப்பல்களில் பூர்ணமான வெளிச்சம் ஏற்றப்படும்.

**லேவாண்ட்.**—பிரிடிஷாரின் யோசனைக்கு இணங்க பிரெஞ்சுக்காரர்கள் சுடுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

**பஸிபிக்.**—(1) ஓகினுவாவுக்கான போர் கடைசி கட்டத்தை அடைந்தது. சினென் தீபகற்பம் துணிக்கப்பட்டது, நாகாகுஸுகன் விரிகுடா திறக்கப்பட்டுவிட்டது. ஓகினுவாவைச் சேர்ந்த ஓரோகு தீபகற்பத்தில் படைகளிறங்கின. நாஹாத்துறைமுகத்தின் மத்தியிலுள்ள ஒனோயாமாத் தீவை அடைய பாலங்கள் தயார் செய்யப்படுகின்றன. நாஹா விமானதளம் பூராவும் அமெரிக்க வசமாகிவிட்டது. தெற்குக் கோடியிலுள்ள 25 சதுர மைல்கள் கொண்ட பிரதேசம்தான் ஜப்பானியர்கள் வசமிருந்து வருகிறது.

(2) பிலிப்பைன்ஸிலுள்ள மிண்டானோத் தீவில் முன்னேற்றம் இருந்துவருகிறது.

(3) போர்னியோவில் தாரகானிலுள்ள மார்கேல் பிடிபட்டது. பிரிடிஷ் வடக்கு போர்னியோவின் தலைநகரமான சாண்டகேயி தாக்கப்படுகிறது.

**சைனா.**—குவாங்ஸி பிரதேசத்தில் ஜப்பான் பின்வாங்கி வருகிறது. சீனர்கள் தெற்கு சைனாவுக்கும் இந்தோ சைனாவுக்கும் மத்தியிலுள்ள ஜப்பானிய தெற்கு இடைவெளியைத் துணித்துவிட்டு, பிண்டாங், சூலோ, சியங்கியாங், டியன்ஹோ, லோக்சர்க், யங்க்ஷியன் முதலியவற்றைப் பிடித்தார்கள்.

**பர்மா.**—ஜப்பானியப் படைகள் பெகுவுக்கு சமீபத்தில் ஸிட்டாங் நதியை மறுபடியும் திரும்பித் தாண்ட முயன்று வருகின்றன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**30—5—45.** (புதன்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—தென் ஆகினவா (Southern Okinawa).

பர்மா (Burma).

கடற்படை தளங்கள்.—ஸிதாஹிப் (Sitahip).
பாலம், சேமிப்புகள்.—பாங்காக், ஸிங்கப்பூர் (Bangkok-Singapore) ரயில்வே.

**31—5—45** (வியாழக்கிழமை)

துரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

ஜப்பானியப் படைகள்.—பெகு (Pegu)வின் வடமேற்கு.

**1—6—45.** (வெள்ளிக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஆர்சனல்.—ஒஸாகா (Osaka).

பர்மா (Burma).

கடற்படை தளங்கள்.—ஸிதாஹிப் (Sitahip).
ராஜபுரி ரயில்வே தளங்கள்.—பாங்காக் (Bangkok), ஸிங்கப்பூர் (Singapore).
துருப்பு முகாம்கள்.-மோல்மீன் (Moulmein).

**2—6—45** (சனிக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—குயுஷு (Kyushu).

பர்மா (Burma).

துருப்பு பிரதேசங்கள்.—தாழி (Thazi), ஸியாம் (Siam) தப்பும் ரஸ்தாக்கள்.

**3—6—45.** (ஞாயிற்றுக்கிழமை).

துரக்கிழக்கு (Far East.)

ரயில் லயன்கள் விமான நிலயங்கள்.-குயுஷு (Kyushu).

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**4—6—45.** (திங்கட்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஹொன்ஸு தீவிலுள்ள கோப் (Kobe).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**5—6—45.** (செவ்வாய்க்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் தற்காப்புகள்.—தெற்கு ஆகினவா (Southern Okinawa).

பர்மா (Burma).

கால நிலையை உத்தேசித்து எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**6—6—45.** (புதன்கிழமை)

துரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நிலயங்கள் கடற்கரைப் பட்டணங்கள்.—போர்னியோ (Borneo).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

### எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**31—5—45.** (வியாழக்கிழமை) to **7—6—45.** (வியாழக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**ஹிட்லரின் ஆகஷி ஒழிந்தது.** ஜூன் மாதம் 5-ம் தேதி பிற்பகல் 2-மணிக்கு ஆக்கிரமிப்பு ஜெர்மனியின் நிர்வாகத்துக்காக நேசதேச மேற்பார்வை கமிஷன் நியமிக்கப்பட்டதுடன் வஞ்சகத்தினாலும் பலாத்காரத்தினாலும் ஹிட்லர் அமைத்த மூன்றாவது ரீச் மறைந்தது. ஆஸ்திரியாவும் சுடேடன்லாந்தும் ஜெர்மன் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டன. ஜெர்மனி நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு பிரிடிஷ், ருஷ்ய, அமெரிக்க, பிரெஞ்சு ராணுவத்தலைவர்களின் ஆகஷிக்குட்படுத்தப்பட்டு விட்டது. அந்தந்த ராணுவத் தலைவர்கள் அவரவர்களுடைய வட்டாரத்தில் தங்களுடைய தாய்நாட்டு நிர்வாகங்களின் அமுலுக்குட்பட்டு அதிகாரம் செலுத்துவார்கள். ஜெர்மனியின் பொதுவான விஷயங்களை ஆலோசிப்பதற்காக நான்கு கமாண்டர்களுமடங்கிய மத்திய சபை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு ஒவ்வொரு தலைவரும் முறைப்படி தலைமை



வகிப்பார்கள். இவ்விதமாக அதிகாரம் ஏற்றுக்கொண்டதிலிருந்து ஜெர்மனியைக் கவர்ந்து விடுவார்கள் என்று பொருள்படாது. தேசங்களைத் திருத்தியமைத்துக்கொள்ளும் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. இதுவரையில் சரண்புகுந்துவிடாத எல்லா ஜெர்மன் படைகளும் சரணாகதி செய்யவேண்டும். ஜெர்மானியர்கள் நிராயுதபாணிகளாகச் செய்யப் படுவார்கள். எல்லா யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளும் மூடப்படும். ஜெர்மன் தொழிலாளர்கள் சிதைவுற்றிருக்கும் ஜெர்மன் பொருளாதாரத்தைச் சரிப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது அமைந்திருக்கும் நிர்வாகத்தின் தன்மை எவ்விதமென்பதை பிரிடிஷ் வட்டாரத்தின் சேனாதிபதியான பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி மே 30-ம் தேதியன்று விளக்கி பிரசுரம் செய்திருக்கிறார்.

"ஜெர்மனியில் பிரிடிஷ் சேனை ஆக்கிரமித்திருக்கும் வட்டாரத்தில் அதிகாரம் செலுத்தவும் அதை ஆளவும் என்னை பிரிடிஷ் அரசாங்கம் நியமித்திருக்கிறது. என்னுடைய ஆக்ஞைப்படி ராணுவ நிர்வாகம் இந்த வட்டாரத்தில் அமுல் நடத்தும்.

"நாடெங்கும் சாதாரணமான ஒழுங்குமுறையுள்ள வாழ்க்கையை அமைப்பதுதான் என்னுடைய முதல்வேலையாகும்.

"முதல்முதலாக ஜனங்களுக்கு உணவுப்பொருளும், வீடும், வியாதியில்லாமல் இருக்கும் சுதந்திரமும் வழங்கப்படும். போக்குவரத்து மார்க்கங்கள் மறுபடியும் அமைக்கப்படவேண்டும். தபால் தந்தி வசதிகள் மறுபடியும் அமைக்கப்படவேண்டும். சில தொழிற்சாலைகள் மறுபடியும் வேலை செய்துவரவேண்டும். இவைகளைப் பூர்த்திசெய்ய ஒவ்வொருவரும் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்.

"சர்வதேச சட்டப்படி யுத்தத்தில் குற்றம் செய்தவர்கள் தகுந்தபடி நடத்தப் படுவார்கள்.

"என்னுடைய ஆக்ஞைப்படி ஜெர்மானியர்கள் ஜன சமூகத்திற்கு வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைத் தேடிக்கொடுக்கவேண்டும். நாட்டின் பொருளாதார நிலைமையை நிலைநாட்டவும் அவர்கள் உழைக்கவேண்டும்.

"பிரிடிஷ் வட்டாரத்திலுள்ள ஏராளமான ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் சில பகுதிகளில் ஒன்று திரட்டப்படுகிறார்கள். ஜெர்மன் சேனையும் மற்ற கவசம்பூண்ட படைகளும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கலைக்கப்பட்டுவிடும். ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் அவர்களுடைய தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் தகுந்தபடி பிரிக்கப்படுகிறார்கள். சில நாட்களுக்குள்ளாக அவர்கள் போர்ப்படைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுடைய வேலையைத் துவக்க அனுப்பப்படுவார்கள்.

"இப்பொழுது அத்யாவசியமானது அறுவடைதான். முதலில் விவசாயிகள் விடுவிக்கப்படுவார்கள். அதன்பின் மற்ற தொழிலாளர்கள் அனுப்பப்படுவார்கள்.

"வேலை எவ்விதம் நடைபெறுகிறதென்று ஒலிபரப்பு மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். இந்த வேலையை நீங்கள் மனமொப்பி திறமையுடன் செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்".

வி வி வி வி வி

**ஆக்கிரமிப்பு வட்டாரங்கள்.** இன்னும் இறுதியாக நிர்ணயிக்கப்படவில்லை. பொதுவாகச் சொன்னால் பிரிடன், வடமேற்கு ஜெர்மனியையும், ருஷ்யா, கிழக்கு ஜெர்மனியையும், அமெரிக்கா தென் மேற்கு ஜெர்மனியையும், பிரான்ஸ் மேற்கு ஜெர்மனியையும் ஆக்கிரமிக்கும். ருஷ்யாவின் வட்டாரம் ஜெர்மனியின் பாதிபாகம் கொண்டது. ஆனால் அங்கு ஜெர்மனியின் ஜனத்தொகையில் கால்பாகம்தான் இருந்து வருகிறது. அது பெரும்பாலும் விவசாயம் மிகுந்தபாகம். மேற்கு நேசதேசத்தார்களிடம் உள்ள பிரதேசம் தொழிற்சாலைகளுள்ளது. ருஷ்ய வட்டாரம் லூபக்குக்குக் கிழக்கில் சில மைல்களுக்குப்பின் ஆரம்பமாகும். மாக்டிபர்க், துரிங்கியா, சாக்ஸனி முதலிய இடங்கள் அதில் அடங்கியுள்ளன.

**நாஸிகளின் கீழறுப்பான் வேலை.** ஆக்கிரமிப்பு சேனைகளைக்கண்டு ஜெர்மானியர்கள் அமைதியுள்ளவர்கள்போல் காணப்படுவதிலிருந்து ஜெர்மனியில் நாஸிகளின் செல்வாக்கு நின்றுவிட்டதென்று நினைப்பது தவறாகும். சந்தர்ப்பம் வாய்த்தால் குழப்பத்தை உண்டுபண்ண அவர்கள் முயலுவார்கள். மத்திய ஜெர்மனியிலுள்ள ஜெனரல் பிராட்லியின் தலைமை காரியாலயத்திலுள்ள உலக பத்திரத்தலைவர்கள் பலவகைகளில் ஜெர்மானியர் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களையும், யுத்த தளவாடங்களையும், வெடிமருந்துகளையும், முக்கியமான தஸ்தாவேஜுகளையும் கண்டுபிடித்ததாகச் சொல்லுகிறார்கள். இது எதிர்பார்க்கக்கூடியதுதான். இதிலிருந்து ஜெர்மானியர்களின் புத்தி சாதுர்யமும் வெளிப்படுகிறது. ஒரு புதைகுழியைப்பார்த்தபொழுது ஜெர்மன் நடவடிக்கையைப்பற்றி சந்தேகம் கொண்ட நேசதேச ஆக்கிரமிப்பு சேனைகள் அதைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது அதில் சேனை சம்பந்தமாக உள்ள தஸ்தாவேஜுகள் அடங்கிய 7 பெட்டிகளையும் ஒரு கல் அறைக்குள் வைக்கப்பட்டிருந்த விசித்திரமான சவப்பெட்டியையும் கண்டார்கள். அது அதிக துர்க்கந்தமுள்ளதால் அதை ஒன்றும் செய்யக்கூடாதென்று புதைகுழி ஸ்தல டிரெக்டர் சொன்னார். அதன் பேரில் சந்தேகம் அதிகரித்தது. அதைத்திறந்த உடன் அதில் நாஸி அடையாளங்களும், உடுப்புகளும், கொடிகளும், ஹிட்லரின் உருவப்படமும் காணப்பட்டன. ஜெர்மனியிலுள்ள பண்ணைகளில் சிறிய ஆயுதசாலைகளும் காணப்படுகின்றன. ஹாம்பர்க்கில் ஒரு குடியானவன் வீட்டில், உண்மையைச் சொல்லாவிடில் வீட்டை தீக்கிரையாக்கிவிடுவோம் என்று சொன்னமாத்திரத்தில் குடியானவன் வைக்கோல் போரில் ஒரு துவாரத்தை உண்டுபண்ணி, அங்கிருந்த மண்ணைத் தோண்டினான். அப்பொழுது ஒரு கதவு தென்பட்டது. அதைத்திறந்தபொழுது அங்கு துப்பாக்கிகளும், வெடிமருந்தும், ஆடைகளும் மற்ற மூஸ்தீப்புகளும் காணப்பட்டன.

வி வி வி வி வி

**குற்றவாளிகளின் விசாரணை.** பாழடைந்த ஐரோப்பாவை புனருத்தாரணம் செய்யும் வேலை நடைபெறும்பொழுதே ஐரோப்பிய யுத்தக் குற்றவாளிகளை பரிசீலனை செய்யும் நடவடிக்கையையும் நேசதேசத்தார்கள் கையாண்டு வருகிறார்கள். ருஷ்யர்கள் இதை துரிதமாக நடத்த வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கு வல்லரசுகளுக்கும் இதில் அக்கறை குறையவில்லை. அவசரப்பட்டு ஆலோசனைக் குறைவுள்ள காரியங்களைச் செய்யக்கூடாதென்று அவர்கள் நினைக்கிறார்கள். நியாயாதிபதிகளின் வேலையும் சுலபமானதல்ல. பலவிதமான யுத்தக் குற்றவாளிகள் இருக்கிறார்கள். ஹிட்லர் ஒரு தனிப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். அவன்தான் பெரிய குற்றவாளி. அவன் இறந்துவிட்டாலும், இல்லாவிட்டாலும் அவனில்லாமலே நோட்டீஸின் பேரில் அவன் பேரில் விசாரணை நடத்தப்படும். பிரான்ஸில் ராஜத்துரோகியான லவால் "ஒத்துழைத்தவன்" என்று இப்பொழுது சொல்லுகிறான். ஸ்பானியர்டுகள் அவனை நேசத் தலைவர்களிடம் ஒப்புவித்துவிடுவதாகச் சொல்லிவிட்டார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்க அவன் தயார் செய்துவருகிறான் என்று சொல்லப்படுகிறது. அடுத்தபடி ருஜுத் தேவையில்லாத குற்றங்களைச் செய்த கோயரிங்கும், டோனிட்ஸூம், ரோஜன்பர்க்கும் இருக்கிறார்கள். அவர்களையும் விசாரணை செய்து தண்டனைக்குள்ளாக்கவேண்டும். குற்றங்கள் சர்வதேச சம்பந்தமுள்ளவையாகையால் சர்வதேச நியாயஸ்தலம் அமைக்கப்பட வேண்டும். அடுத்தபடியாக ராஜத்துரோகிகளான அமெரிக்க எஸ்ராபண்டும், பிரிடிஷ் ஹாஹா பிரபுவும் அந்த அந்த நாட்டாரால் விசாரணை செய்யப்படவேண்டும். கடைசியாக, ஜெர்மன் ராணுவ காரியாலய சிப்பந்திகளும் மற்ற ராணுவ கடற்படை விமானப்படை ஆபீஸர்களும் பரிசீலனை செய்யப்பட்டு, தூக்கிலிடுவதோ, தேசப்பிரஷ்டம் செய்வதோ, காவல் தண்டனை முதலிய தண்டனைக் குட்படுத்தப்படவேண்டும். மனித வர்க்கத்தின் எதிர்கால உலக பத்திரத்தை உத்தேசித்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

வி வி வி வி வி

**சான்பிரான்ஸிஸ்கோ.** உலக பத்திர மகாநாடு கால அட்டவணையை ஒத்து நடைபெறவில்லை. பிரதிநிதிகள், தர்மகர்த்தா முறை, பிரதேச ஒப்பந்தங்கள் முதலிய பிரச்னைகளை மறுபடியும் கிளப்பி சர்ச்சை செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பாலஸ்தீனத்திற்குள் யஹூதிகள் நுழையும் பிரச்னை மறுபடியும் தோன்றிவிட்டது. சுயேச்சைக்கும் சுய நிர்ணயத்துக்கும் இடையே தகராறு உண்டாகி விட்டது. மாஸ்கோவிலும், லண்டனிலும் விவரங்களை நேர்முகமாக சர்ச்சை செய்வதற்காக ஜனாதிபதி ட்ரூமென், மிஸ்டர் டேவிஸ்ஸையும், மிஸ்டர் ஹாரிஹாப்கின்ஸையும்



அமெரிக்க பிரதிநிதிகளாக அனுப்பியிருக்கிறார். இதே சமயத்தில் ருஷ்ய பிரதிநிதியான M. A. A. சோபாலெவ் திடீரென்று திரும்பி அழைக்கப்பட்டிருக்கிறார். உலகபத்திர கௌன்ஸிலின் வேலையில் எந்த கூட்டத்திலும் அதை நிராகரிக்க பெரிய வல்லரசுகளுக்கு உரிமை உண்டென்ற சிக்கலான பிரச்னை சம்பந்தமாக ஐந்து வல்லரசுகளும் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள் என்று கடைசியாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

வி வி வி வி வி

**ஸிரியா.** ஸிரியாவில் பிரிடிஷ் துருப்புகளின் நடவடிக்கையினால் நிலைமையில் அபிவிருத்தி காணப்படுகிறது. பிரெஞ்சுக்காரர்கள் கலகத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்குள் உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது தகராறு செய்துவரும் பிரான்ஸ், ஸிரியா, லெபானன் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் உலக சமாதானத்தை நிறுவ உத்தேசித்து நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் கெடுதலான பாகம் யாதெனில் மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை செய்தபோதிலும் லெவாண்டின் கலவரத்துக்கு பிரிடன்தான் காரணமென்று டிகால் அவதூறு சொல்லி மத்தியக்கிழக்கு பிரச்னையைத் தீர்க்க ஐந்து வல்லரசு மகாநாடு கூட்டப்படவேண்டுமென்றும் சொல்லுகிறான். இதே சமயத்தில் கெய்ரோவில் கூடியிருக்கும் அராபிய சமஷ்டி சபை ஸிரியாவிலிருந்து எல்லா பிரெஞ்சு துருப்புகளும் வெளியேறவேண்டுமென்று வற்புறுத்துகிறது. டமாஸ்கஸ்ஸின் நகர பரிபாலன சபை மே மாதம் 29-ம் தேதியை துக்கமான நாளாகக் கொண்டாடுவதென்றும், பிரெஞ்சுப் பெயர்களுள்ள தெருக்களின் பெயர்களை மாற்றிவிடுவதென்றும், டமாஸ்கஸ்ஸில் பிரெஞ்சு நடவடிக்கையால் உயிர் துறந்தவர்களுக்கு ஒரு ஞாபகச்சின்னம் அமைப்பதென்றும் முடிவு செய்திருக்கிறது.

வி வி வி வி வி

**பாரசீகம் (இரான்).** ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதினால் இரானிலிருந்து நேசதேசப் படைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று இரானிய நிர்வாகம் வேண்டிக்கொண்டிருக்கிறது. 1942-ம் வருஷம் ஜனவரி 29-ம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தப்படி பாரசீக வளைகுடா வழியாக ருஷ்யாவுக்கு குத்தகைக்கடன் மசோதாப்படி சர்ப்பராக்களை அனுப்ப ஒத்தாசை செய்வதற்காக பாரசீகத்தில் வைக்கப்படும் நேசதேசச்சேனைகள் யுத்த நிறுத்தத்திற்குப்பின் ஆறு மாதங்கள் வரையில் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பியப் போர் முடிந்தபின்னும் ஜப்பானிய யுத்தம் நடைபெறுகிறது. ஒப்பந்தத்துக்கும் ஜப்பானியப் போருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று இரானிய நிர்வாகம் வாதாடுகிறது. நேசதேசத் துருப்புகள் வாபஸ் வாங்கப்படும் வரையில் நேசதேசத்தாருடன் எண்ணெய் சம்பந்தமான பிரச்னைகளை சர்ச்சை செய்யவும் அது மறுத்துவிட்டது. இப்பொழுது சீர்கெட்டிருக்கும் பொருளாதார நிலைமையை நேசதேசப்படைகளின் இருப்பு ஒருவாறு அபிவிருத்தி செய்து வருகிறதென்பதை அது மறந்துவிட்டது. நேசதேசத்தார்கள் 50,000 பாரசீகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். நேசதேசப்படைகள் வாபஸ் பெறப்பெற்றால் துயரம் அதிகரித்துவிடும். பாரசீகத்தின் வேண்டுகோளை கவனிப்பதாக பிரிடன் வாக்குறுதி செய்திருக்கிறது. ருஷ்யாவும், அமெரிக்காவும் அதைப் பரிசீலனை செய்து வருகின்றன.

வி வி வி வி வி

**பஸிபிக் போர்.** டோக்கியோவும் மற்ற ஜப்பானிய நகரங்களும் தினசரி விமானங்களால் தாக்கப்படுகின்றன. ஜப்பானிய நிர்வாகம் சக்ரவர்த்திக்கு தினசரி ஏதாவது மன்னிப்புச் சொல்லிவருகிறது. இவைகள் விமான நடவடிக்கையின் ஆரம்பம். இனிமேல் 2,000 சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் 20,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை வீசக்கூடும். பெர்லினை ஒரு பொழுதும் விட்டகலமாட்டோமென்று ஜெர்மனி சொன்னது போல ஜப்பானும் சொல்லி வருகிறது. இது வீண் பிதற்றல்.

10 வாரங்களாக நடைபெற்றுவரும் ஓகினாவாப் போர் இப்பொழுது உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. ஜப்பானியர்கள் கோரமாகப் போரை நடத்துகிறார்கள். ஆகிலும் ஓகினாவா நிச்சயமாக விழுந்துவிடும். தப்பி ஓட வழியன்னியில் ஜப்பானியப் படைகள் தீவின் தெற்குக் கோடியிலுள்ள 25 சதுர மைல்களில் அடைபட்டிருக்கின்றன. ஜப்பானிலிருந்து 350 மைல்களிலுள்ள நாகா விமான தளம் அமெரிக்க வசமாகிவிட்டது. ஜப்பானில்

படையெடுப்பு வெகு சீக்கிரத்தில் ஏற்படலாமென்றும், ஆகினாவா நடவடிக்கைகளிலும் அமெரிக்கப் படைகளை அழிப்பதிலும் உபயோகப்படும் தற்கொலைப் படைகளைப்போல் ஏராளமாகத் தயாரித்து ஜப்பானைத்தற்காப்பு செய்யவேண்டுமென்றும் ஜப்பானியப்பத்திரிகைகளில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. கடற்தளபதி செஸ்டர் நிமிட்ஸ் சொன்னபிரகாரம் ஆகினாவாவிலுள்ள அமெரிக்க 10-வது சேனை திறமையுடன் போர் புரிந்திருக்கிறது. நியூ யார்க் ஸன் போன்ற அமெரிக்கப் பத்திரிகைகளில் ஆகினாவாப் போரில் அதிக நஷ்டம் ஏற்பட்டது என்று காணப்படும் வியாக்யானங்கள் பொறுப்பற்ற செய்திகள். இந்தப் போரில் ஒரு ஜப்பானிய சேனை பூராவும் அழிக்கப்பட்டது. நேசதேசத்தார்களுக்கு ஜப்பானிலிருந்து 350 மைல்களில் ஒரு முக்கிய தளம் ஏற்பட்டுவிட்டது. இவை தகுந்த லாபங்கள்தான்.

அமெரிக்கப் பத்திரிகை அறியாவிட்டாலும் ஜப்பானியர்களுக்கு இந்தப் போரின் அர்த்தம் புலப்படும். ஜப்பானிய விமான இலாகா மந்திரியான ருசுகி ஆகினாவாப் போர் முடிவானதென்றும் ஜப்பானின் விதி அப்போரின் முடிவைப் பொருத்ததென்றும் ஒப்புக் கொள்ளுகிறான்.

பஸிபிக்கிலுள்ள அமெரிக்க சேனை இப்பொழுது இருப்பதைவிட இரண்டு பங்காகவும் ஐரோப்பாவிலிருந்ததைவிட அதிகமாகவும் அதிகரிக்கப்படுமென்று ஜனாதிபதி ட்ருமென் சொல்லியிருக்கிறார். அமெரிக்க விமானப் படையும் அதிகரிக்கப்படும். ஐரோப்பாவிலிருந்து 20 விமானப்படைகள் இங்கு அனுப்பப்படுகின்றன. பர்மாவில் தென் கிழக்கு ஆசியா கமாண்டின் கீழ் வேலைசெய்து வந்த அமெரிக்க விமானப்படையும் ஜப்பானுக்கு அருகிலுள்ள தளங்களுக்குக் கொண்டுபோகப்படும்.

வி வி வி வி வி

**சைனா யுத்தம்.** ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் சைனாவிலும் ஜப்பானியப் போர் தற்காப்பு முறைக்கு மாறிவிட்டது. ஜெர்மனியைப்போல் படைகளைச் சிதறவிடால் அவைகளைப் பின்வாங்கி ஒன்று திரட்டி வைக்க வேண்டுமென்று ஜப்பான் எண்ணுகிறது. ஒரு வருஷத்திற்குமுன் ஜப்பான் முன்னேறித் தாக்கி ஹாங்கோ காண்டன் இருப்புப் பாதையைச் சுத்தி செய்தது, சைனாவை இரண்டு துண்டாகத் துணித்தது. ஹெங்கியாங், குவெயிலின், லூசௌ, நான்னிங் போன்ற அமெரிக்க தளங்களைக் கைப்பற்றியது. அது சைனாவின் தலைநகரமான சுங்கிங்கை நோக்கியும் முன்னேறிற்று. மூன்று வாரங்களுக்கு முன்னும் எதிரி இந்தத் தாக்குதல்களைத் தவக்கிறான். இப்பொழுது ஜப்பானின் யுத்த தந்திரத்தில் மாறுதல் காணப்படுகிறது. தெற்குப் பக்கத்தில் முன்னேறிய இடங்களிலிருந்து பின்வாங்கிப் படைகளைத் தற்காப்புக்காகத் தயார் செய்து வருகிறது. சீன கொரில்லர்ப்படைகளை வெஞ்சௌ, பூசௌ, சுவாடேன் முதலிய துறைமுகங்களை ஆக்கிரமிக்கும்படிக்கும் ஜப்பான் அனுமதித்துவிட்டது. குவாங்ஸியின் தலைநகரமும், பலமான கேந்திரஸ்தானமுமான நானின்கையும் அது விட்டுவிட்டது. விஸ்தாரமான போர் முனையைக் குறுக்கிக்கொண்டு வடக்கு சைனாவில் தற்காப்பு அரணை பலப்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறது. அங்கிருந்து தெற்கிலிருந்து ஏற்படும் பிரிஷ் அமெரிக்கத் தாக்குதலையும் வடக்கிலிருந்து ஏற்படும் ருஷ்யத் தாக்குதலையும் சமாளித்துவிடலாமென்று ஜப்பான் எண்ணியிருக்கிறது. இந்த அபிப்பிராயம் சரியானதென்று வைத்துக்கொண்டால் ஜப்பானியப் போரின் இறுதி கட்டம் வந்துவிட்டதென்று சொல்லலாம். ஐரோப்பாவைப்போல் இரண்டு போர்முனைகள் தூரக்கிழக்கில் ஏற்பட்டால் ஜெர்மனியின் கதிதான் ஜப்பானுக்கும் ஏற்படும். ஜெர்மனியைவிட ஜப்பான் பலமாக எதிர்த்துப் போராடுமென்றாலும் அதுவும் இறுதியில் வீழ்ச்சி பெற்றுவிடும்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) பிரதம மந்திரி பதவியை மார்ஷல் சியாங்கே ஷேக் ராஜீனாமாச் செய்துவிட்டார். மிஸ்டர் T. V. சூங் அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

(2) கிரீஸும், பிரேஸிலும் ஜப்பானுடன் போர் தொடுத்தன.

(3) கௌதமாலா, ஸால்வடார் என்ற மத்திய அமெரிக்க குடியரசு நாடுகள் ஒப்பந்தப்படி ஒன்றுசேர்ந்துவிட்டன. சிறிய நாடுகள் சமஷ்டியில் சேருவதற்கு இதுதான் முதல் நடவடிக்கை.



# ஐரோப்பாவில் 30 மிலியன் அகதிகள்.

## செஞ்சிலுவை சங்கத்தின் சேவை.

(டெயிலி டெலிகிராப் பத்திரிகை).

ஜெர்மனி எவ்வளவு அகதிகளுக்கும், காணாமற்போனவர்களுக்கும், ஜவாப்புச் சொல்ல வேண்டுமென்பது ஒருவராலும் அறியமுடியாதது. குடும்பங்களுடனும், நண்பர்களுடனும், சேர்ந்துகொள்ளப் பிரியப்படுகிறவர்கள் ஐரோப்பாவில் மட்டும் 30 மிலியன் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பிட்டிருக்கிறது. ஜெர்மனி சரண்புகுந்தபின் கிடைத்துவரும் தகவல்களிலிருந்து அகதிகளைச் சொந்த நாட்டிற்கு அனுப்பும் பிரச்னைதான் மகத்தானதென்று தெரியவருகிறது.

சுறுசுறுப்பாக வேலை செய்துவரும் ஸ்தாபனங்களில் செஞ்சிலுவை, ஸெயின்ட் ஜான் யுத்தஸ்தாபனம் முக்கியமானது. ஜெனிவாவிலுள்ள சர்வதேசசெஞ்சிலுவை சங்கத்துடனும், தேசீய செஞ்சிலுவை ஸ்தாபனங்களுடனும், அது அதனுடைய அயல்நாட்டு விவகார இலாகா மூலம் அபாரமான வேலை செய்துவருகிறது. ஐரோப்பாவிலுள்ள அதன் பிரதிநிதிகள் தனிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, காணாமற்போனவர்களையும் அகதிகளையும் கணக்கிடுகிறார்கள்.

உதாரணமாக இதாலியில் 10 மாதங்களுக்குள் இந்த நிலயம் 67 பல்வேறு தேசங்களைச் சேர்ந்த 70,000 பேர்களைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த நிலயம் மிஸ்ட்டர் தாமஸ் பாரிங்டனால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பின் அவர் பெல்ஜியத்திற்கு மாற்றப்பட்டார். பிரஸ்ஸல்ஸில் அவருக்கு மிஸ் வெலின்பார்க் ஒத்தாசை செய்கிறாள். அவளுக்கு ஆறு பாஷைகள் தெரியும். அவளிடம் தணிக்கை செய்யப்பட்ட செஞ்சிலுவைச் செய்திகளும், பிரச்னைகளும் அடங்கிய 9 ராத்தல் எடையுள்ள பார்சலிருந்துவருகிறது.

ஆரம்பம் முதற்கொண்டே வேலை அதிகமாக இருந்தது. நான்கு மாதங்களில் 7,000-க்கு மேற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்களில் 12 சத விகிதமுள்ளவர்களின் சந்ததி கண்டுபிடிக்கப்பட்டது. 2 சத விகிதம் கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றவர்களைப் பற்றி விசாரணை நடந்துவருகிறது.

ஒரு அகதிக்கு அல்லது காவலிலுள்ளவருக்கு ஆடையும், ஆகாரமும், சிகிச்சையும் வழங்கப்பட்டபின் அவனுடைய குடும்பத்தாருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று அவன் விரும்புகிறான். குடும்பத்தாரின் விலாசத்தைப்பற்றி ஐந்து வருஷங்களுக்கு முன்னிருந்த ஒரு தகவலை அவன் கொடுக்கிறான். இப்பொழுதுதான் அயல்நாட்டு சம்பந்த வேலைக்காரர்கள் தோன்றுகிறார்கள்.

முதலில் லண்டனிலுள்ள இலாகாவின் தஸ்தாவேஜுகளிலிருந்தும், அல்லது நேசதேச செஞ்சிலுவை சங்கங்களிலிருந்தும், அல்லது செஞ்சிலுவை விசாரணை நடைபெற்ற ஸ்தாபனங்கள், சங்கங்களிலிருந்தும், அதன்பின் ஜெனிவாவிலுள்ள பிரம்மாண்டமான அட்டவணையுள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலமும் விசாரணை செய்யப்படும். ஒரு கேஸையும் தள்ளிவிடுவதில்லை; ஏனெனில் புதிதாகக் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து அடையாளம் கண்டுபிடித்துவிடலாமென்ற நம்பிக்கையிருந்து வருகிறது.

வீட்டை இழந்தவர்களும், அகதிகளும், தங்களுக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளப்படுகிறதென்று அறிவதினால் அவர்களின் மன உறுதி பலப்படுகிறது. மனைவி, குழந்தைகளிடமிருந்து பிரிக்கப்பட்டு அநேக வருஷங்களாகத் தனியே இருந்துவரும் ஒருவனுக்கு அவன் மீண்டும் மனிதனாகிவிட்டான் என்ற அறிவு அவனுக்கு அதிக ஊக்கம் அளிக்கும். அவனுடைய பூரா விவரங்களுமடங்கிய ஒரு செய்தி அவனுடைய கையெழுத்துடன் விளம்பரம் செய்யப்படுவதென்றால் அது அவனை ஆழ்ந்த யோசனைகளில் ஆழ்த்தி விடுகிறது. ஒரு பெரிய சர்வதேச ஸ்தாபனம் அவனுக்கு ஒத்தாசை செய்ய முன்வந்திருக்கிறதென்று அவன் உணருவான்.

ஒவ்வொரு அயல்நாட்டிலும் பிரிடிஷ் பிரதிநிதிகள் தேசீய செஞ்சிலுவை சங்கத்துடன் ஒத்துழைத்து வருகிறார்கள். தேசீய செஞ்சிலுவை சங்கங்களை ஜெர்மனி ஆக்கிரமிப்பு காலத்தில் சிதைத்திருக்கிறது. பெல்ஜியத்தில் தேசீய செஞ்சிலுவைச் சங்கம் பலமாகவும், திறமையுடனும், ஒற்றுமையுடனும் வேலை செய்துவருகிறது.

அயல்நாட்டு சம்பந்தமான ஸ்தாபனம் தனிப்பட்டவர்களின் குடும்பங்களைத் தேடுவதுடன் நின்றுவிடவில்லை. மேலும் அகதிகளிடம் அக்கரை காட்டிவரும் பிரிடிஷ் அயல்நாட்டு ஸ்தானிகருக்கு அந்த இலாகா ஓரளவு துணிமணிகள், ஆகாரம், விசேஷமான ஆகாரம், பார்சல்கள், வைத்திய மருந்துகள் முதலியவற்றை அகதிகளின் வசதிக்காக வழங்கி வருகிறார்கள்.

அயல்நாட்டு சம்பந்த இலாகாவின் மற்றொரு அம்சத்தையும் இங்கு கூறுவோம். ஒரு வயது முதிர்ந்தவன் அந்த ஆபீஸுக்கு வந்து "என்னுடைய மகனை பிரிடிஷ் விமானி தப்பி ஓடுவதற்கு ஒத்தாசை செய்தானென்று ஜெர்மானியர்கள் சுட்டுக்கொன்றார்கள்" என்று சொன்னான். பிரிடிஷ் விமானி இங்கிலாந்துக்கு பத்திரமாக வந்துவிட்டானாவென்று உற்சாகமடைந்த தகப்பன் அறிய விரும்புகிறான். அதை அறிந்தால் அவனுடைய மகன் வியர்த்தமாக உயிரைத் துறக்கவில்லையென்று அறிந்து அவன் சந்தோஷப்படுவான். விமானி பாராசூட் மூலம் இறங்கி, பிரஸ்ஸல்ஸுக்குக் கால்நடையாகச் சென்று இந்த பெல்ஜிய வாலிபனை சந்தித்தான். வாலிபன் அவனுக்கு பொதுஜனத்திற்குறித்ததான ஆடைகளையும், உணவுப்பொருள்களையும், பொருளையும் கொடுத்து ரயிலில் பிரயாணம் செய்வித்தான். ஒரு வாரத்திற்குப்பின் வாலிபன் கைது செய்யப்பட்டான். அயல்நாட்டு விவகார இலாகா அவனுடைய தகப்பனார் கொடுத்த அற்பமான விவரங்களையும் தகவல்களையும் கொண்டு விமானியைத்தேட முயன்றுவருகிறது.

---

# பிரிடிஷ் ஸோல்ஜரும், ஜெர்மன் ஸோல்ஜரும். ஒப்பிட்டுப் பார்ப்பது.

S. L. ஸாலன் (நியூஸ் குரானிகள்).

## (A)

## போர்முனையிருந்து வந்த பிரிடிஷ் ஸோல்ஜர்.

நீ அவனைக் கண்டு பிடித்து விடுவாய். அவனிடம் மாறுதல்கள் காணப்படுகின்றன. அவன் முன்னைவிட பெரியவனாகவும் ஒரு சிறிது பருமனாகவும் சற்று வயது முதிர்ந்தவனாகவும் காணப்படுவான். அவன் அதிகமாகப் பேசுவதில்லை. இன்னும் கொஞ்ச காலத்திற்கு அவன் அவ்விதம் தானிருப்பான்.

ஒரு வருஷத்துக்கு முன் டி தினத்தன்று ஆர்ன் நதிக்குத் தெற்கில் அவன் சாதாரண ஸோல்ஜராக இருந்தான். 88 விமானத்தின் குண்டுகளால் ஆபீஸரும் மூன்று கமிஷன் பெறாத உத்யோகஸ்தர்களும் கொல்லப்பட்டார்கள். சாமான்களை இறக்கும் கோஷ்டியின் தலைவராக அவன் நியமிக்கப்பட்டான்.

இன்னும் வெடிகுண்டினால் புகைந்து கொண்டிருந்த வேலைத்தளத்திற்குச் சென்றபொழுது அவன் சொன்னான் "இவ்விதமாக வெகுசீக்கிரத்தில் உத்யோக உயர்வு ஏற்படும்" என்று நான் நினைக்கவில்லை.

அவன் அதிக உணர்ச்சியுள்ளவன். ஆனால் அவ்விதம் பிறர் நினைக்கக்கூடாதென்றும் அவன் விரும்புவான். அவனுடைய பையில் அவனுடைய மனைவி, தாயார், பெண் குழந்தைகளைப் பற்றிய ஒளிப்படங்கள் இருக்கின்றன. அகழ்களில் ஜலத்தில் நனைந்துகொண்டு இருந்தாலும் அவன் ஒளிப்படங்களின் சிறந்தவைகளை பிஸ்கோத்து டப்பியில் அடைத்து நனைந்து விடாமல் வைத்திருப்பான்.

அவனுக்கு ராஜியத்தைப்பற்றி அதிகம் தெரியாது. ஆகிலும் எந்த ராஜிய வாதியும் அவனை ஏமாற்றிவிட முடியாதென்று அவன் அறிவான். அவனுக்கு சொற்பொழிவுகளைக் கேட்க பிரியமில்லையென்று அவன் சொல்லுவான். ஆகிலும் சந்தர்ப்பம் வரும்பொழுது அவைகளைப் படிப்பான். போர்முனையில் பிரதம மந்திரியின் சொற்பொழிவின் ஓரளவு சக்தியுள்ள ஒருவர் இல்லாத எந்த பிரிடிஷ் படையும் இல்லையென்று நான் நினைக்கிறேன். மனிதர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்தால் அற்புதச் செய்கைகளை நிறைவேற்றலாம் என்ற தோற்றம் அவனுக்குப் போரினின்றும் உண்டாகியிருக்கிறது. குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான முறையில் அவன் தன்னைத் திருத்தி அமைத்துக்கொள்ள முடியாதென்பதைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. அவ்விதம் நடந்து கொள்ளலாமென்று அவனுக்கு நிச்சய



புத்தி உண்டு. அவன் யுத்தத்தை வெறுக்கிறான். ஆகிலும் சேனையில் அவனுக்குப் பிரியமான அநேக விஷயங்கள் இருக்கின்றனவென்று அவன் கண்டுபிடித்து விட்டான். அவன் தாய் நாட்டிற்குத் திரும்பியபின் முதலாவதாக யுத்தத்தினால் ஏற்பட்ட வலுவான நட்புகள் மறைந்து விடுமேயென்று வருந்துவான். இரண்டாவதாக தினசரி ஒழுங்காக உள்ள வாழ்க்கையும் மறைந்துவிடும்.

மிகவும் கஷ்டமான நிலைமையிலும் சௌக்யமாக வாழும் முறைகளை அவன் தெரிந்து கொண்டிருக்கிறான். மழை பெய்யும்பொழுது சாப்பாட்டை அடுப்பில் தயாரிக்கக்கூடிய ஒருவன் புதிய முறைகளை ஏற்றுக்கொள்ள பிரியமில்லாதவனாக இருக்கமாட்டான். யுத்த சமயத்தில் புதிய ஆயுதங்கள் எவ்விதம் மாறுபாடடைந்தனவென்று அவன் கண்டான். புதிய முறைகளின்படி சமாதானத்தை அபிவிருத்தி செய்வதில் அவன் பயப்படமாட்டான். அவனுடைய ஐதிகமான சாந்தகுணத்திற்கு பரிக்ஷை ரூபமான அனுபவமும் சேர்க்கப்பட்டு விட்டது.

இப்பொழுது அமெரிக்கர்களும், பிரிடிஷார்களும் தாராளமாகப் பரிகாசம் செய்து கொள்ளுவதும் உரக்கப் பேசுவதுமாகக் காணப்படுகிறார்களென்றால் அவர்களுக்குள் நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கின்றதென்பதற்கு அத்தாக்ஷியாகும். அவர்கள் போர் என்ற பரிக்ஷையில் மற்றொருவரை அறிந்திருக்கிறார்கள். முதலில் யுத்த அவசியத்தினால் ஏற்பட்ட தொடர்பு என்று எண்ணியதுபோக பரஸ்பர நம்பிக்கை உண்மையான அன்பிலும் நல்லுணர்ச்சியிலும் அடிப்படையாக வேரூன்றி விட்டது.

யுத்தத்தின் மகத்தான தியாகத்தை அவன் அறிவான். அவன் மறக்கமுடியாத அநேக விஷயங்கள் இருக்கின்றன. அவனுடைய ஸ்நேகிதர்கள் ஆபிரிகா, ஸிஸிலி, நார்மண்டி, ஹாலந்து, ஜெர்மனி, ஆர்டெனிஸ், மற்ற அநேக இடங்களில் உயிர் துறந்து விட்டார்கள். ஒவ்வொருவரிடமும் சில ரகசியங்கள் இருந்து வருகின்றன. அவன் திரும்பி வருகிறான். அவனை நீங்கள் கண்டுபிடித்து விடுவீர்கள். அவனிடம் விசேஷ மாறுதல்கள் காணப்படுகின்றன.

## (B)

## ஜெர்மானியரின் குணநிசயம்.

(F. W. பர்பெக்ட், டெயிலி டெலகிராப் பத்திரிகை).

நான் பிரமர் ஹேவனிலுள்ள ஒரு விடுதியிலிருந்தேன். அது ஒரு சிறிய வீடு. ஆனால் அழகாக இருந்தது. அதன் வாசிகள் 24-மணிகளுக்கு முன்தான் அப்புறப்படுத்தப்பட்டார்கள். ஆகிலும் அவர்கள் வீட்டை நாசம் செய்துவிடவில்லை. அதன் சாமான்களும் மரசாமான்களும் பிரிடிஷ் குடித்தன ஸ்திரீக்கு பொறாமையை உண்டுபண்ணிவிடும். புத்தகங்கள், சிதார், அழகிய கண்ணாடி சாமான்கள், கலா விசேஷங்கள் முதலியவை அந்த ஜனங்கள் உயர்தரமான வாழ்க்கையும் கலை ஞானமும் உள்ளவர்கள் என்று வெளிப்படுத்தின.

என்னையறியாமையிலேயே நான் அங்கு இல்லாத வீட்டு ஸ்வான்தார்களைப்பற்றி நினைக்க ஆரம்பித்தேன். நிச்சயமாக இவர்கள் நல்லொழுக்கமுள்ள ஜெர்மானியர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்கும் கொடுமை முகாம்களை அமைத்த காட்டுமிராண்டிகளுக்கும் முற்றிலும் வித்தியாசமுண்டு.

ஒரு நாள் விறகுக்காக தேடிவரும் பொழுது நான் ஒரு தாழ்வரைக் கதவைத் திறந்தேன். சுவற்றில் ஒரு கசை காணப்பட்டது. அந்த ரம்யமான வீட்டில் அந்தக்கொடுமையைக் கண்டபொழுது சூர்ய வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குள் சென்று இருட்டான, கோரமான, கொடிய உலகம் தோன்றியதுபோல் தோன்றிற்று. அதில் ஜெர்மன் குடித்தன ஸ்திரீயின் பெயர் கைப்பிடியில் எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து இரண்டு உலகமும் ஒன்றுதான் என்று தோன்றிற்று.

ஜெர்மனியிலிருந்த அடிமை வேலைக்காரர்களை அடிப்பதற்காக இந்தக் கசைகள் ஏராளமாக, தயாரிக்கப்பட்டனவென்று நான் பின்பு தெரிந்துகொண்டேன். பிரெமென் பிரதேசத்தில் இவ்விதான ஆயிரக்கணக்கான கசைகள் காணப்பட்டன. புதிதான நூற்றுக்கணக்கான கசைகள் ராணுவ முகாம்களில் காணப்பட்டன. 30-வது படையின் கமாண்டரான ஜெனரல் ஹோரோக்ஸின் ஆதாரத்தின் பேரில் அநேக கசைகள் சேனையின் பண்டகசாலைகளில் ஜெர்மன் துருப்புகளுக்கு விற்கப்பட்டனவென்று நான் அறிகிறேன். கசைகளைக் கண்டுபிடித்தபின் ஜெர்மானியர்களிடம் நேசதேசத் துருப்புகளுக்கு அதிக வெறுப்பு உண்டாகியிருக்கிறது.

நிச்சயமாக ஜெர்மானியர்கள் நல்ல நடத்தை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஜெர்மன் ஸோல்ஜர்களின் கூட்டத்தின் வழியாக ஒருவர் தனியாகச் செல்லலாம். அவர்கள் உன்னைப் பார்த்தால் ஸலாம் வைப்பார்கள். வழியைக்கேட்டால் அவர்கள் மரியாதையுடன் காண்பிப்பார்கள். ஒரு சில நாட்களுக்கு முன்தான் இவர்கள் நேசதேசத்தார்களைக் கொலை செய்து வந்தார்களென்று நினைப்பது கடினமாக இருக்கிறது. அவர்கள் கொலையாளிகளைப் போலிருக்கவில்லை. உலகத்தை இரண்டு தடவை ரெத்தவெள்ளத்தில் மூழ்கடித்த அவர்களின் ஸ்வபாவம் இப்பொழுது நேசதேசக் கட்டுப்பாட்டின் கீழ் மறைந்து கிடக்கிறது.

ஜெர்மானியர் பிரியப்படுவதெல்லாம் அதிகாரம்தான். இப்பொழுது அதிகாரம் நேசதேசத்தாரிடம் இருந்துவருகிறது. ஜெர்மானியர் அதிகாரத்திலுள்ள எவருக்கும் கீழ்படிந்து நடப்பார்கள். ராணுவ நிர்வாக ஆபீஸர்கள் இதேமாதிரி என்னிடம் அநேகம் தடவை சொல்லியிருக்கிறார்கள். ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு நேசதேச ஸோல்ஜரும் இவ்வளவு கண்யமுள்ளவர்கள்போல் காணப்படும் ஜெர்மானியர்கள் பெல்ஸன் போன்ற அக்கிரமங்களை எவ்விதம் செய்தார்கள் என்று கேட்டதற்கும் இதுதான் பதில்.

எவர் அதிகாரம் வகித்தாலும் அதற்கு அவர்கள் கீழ்படிந்து நடப்பார்கள். மனச்சாக்ஷியையும் மற்ற எதையும்விட ஜெர்மானியருக்கு கீழ்படிந்து நடப்பதுதான் முக்கியமான நற்குணம். நேசதேசத்தார்கள் அதிகாரம் செலுத்திவரும் வரையில் ஜெர்மானியர்கள் ஒரு தொந்திரவும் அளிக்கமாட்டார்கள். அவர்கள் திருப்தியுடனிருப்பார்கள். உத்திரவுகளைமாற்றி வேண்டுகோள்களை விடுத்தால் கசையும், பெல்ஸனும், பூகன்வால்டும் உள்ள தீமை ஸ்வபாவம் தோன்றிவிடும். உலகத்தில் மறுபடியும் தொந்திரவு ஏற்படும். இது உண்மையென்றால், இது முதற்கொண்டு ஜெர்மானியர்களுக்குத் தகுந்த அதிகாரிகள் உத்திரவுகளை பிறப்பிக்க வேண்டும்.

---

## தூரக்கிழக்குப் போர் எப்பொழுது, எவ்விதம், எங்கு ஆரம்பம் ?

### நேசதேச யுத்த தந்திரத்திற்கு வழிகாட்டிகள்.

பஸிபிக் போரின் காலவரையை பாதிக்கக்கூடிய மிகவும் அத்யாவசியமான அம்சங்கள் பின்வருமாறு. (1) ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பான் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தியின் அளவு. (2) துருப்புகளையும், மூஸ்தீப்புகளையும், புதிய போர் அரங்கத்திற்குக் கொண்டுபோவதற்கு நேசதேசத்தார்களுக்குத் தேவைப்படும் கால அளவு. (3) நேசதேசத்தாரின் சலனத்துக்கு பருவகால சிரமங்கள் குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவு. மற்றும் நாம் அறியாத சில அம்சங்களும் இருக்கின்றன. ஆகிலும் இவைகள்தான் முக்கியமான அம்சங்களென்று அமெரிக்க அறிக்கை வெளியிடுகிறது.

எல்லா விஷயங்களையும் கவனித்தால் அடுத்துவரும் ஆறு மாதங்களில் நேசதேசத்தார்கள் எதிரியைத் தாக்கக் குவிக்கக்கூடிய படைகளின் பலத்தைப் பொருத்து போரின் நீடிப்பு காலம் நிர்ணயிக்கப்படும்.

அமெரிக்கப் படைகளும், ஐரோப்பியப் படைகளும் பஸிபிக்குக்குச் செல்லப் புறப்பட்டுவிட்டன. அந்தப்படைகளுக்கு ஜப்பானியப் போர்ப் படைகளைப்பற்றியும் அவையுடன் போர் நடத்தும் முறைகளிலும் இரண்டு மாதங்கள் வரையில் பயிற்சியளிக்கப்படும். இப்பொழுது பருவ காலம் முன்போல அவ்வளவு இடையூறாக இருக்காதென்று கருதப்படுகிறது. சமுத்திரத்தில் கொந்தளிப்பும், குறைவான திருஷ்டியும், சக்தியும் ஏற்பட்டாலும் இந்த அபாயங்களை நவீன அனுபவத்தினாலும், மூஸ்தீப்புகளாலும் ஒரு சிறிது தவிர்த்து விடலாம்.

தூரக்கிழக்கில் அடுத்த படியாக நடவடிக்கைகள் எவ்வகைப் பட்டவையென்றும் அவை எவ்விதம் நிறைவேற்றப்படுமென்பதும்தான் தற்போதிய முக்கியமான பிரச்னைகள். நேசதேசத்தாரின் அலுவல்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

*பர்மாவைத் திருப்பிப் பிடிப்பது, வங்காள விரிகுடாவிலிருந்தும், ஸியாம், பிரெஞ்சு இந்தோ-சைனா, மலேயா, கிழக்கு இந்தீஸ் தீவுகளிலிருந்தும் ஜப்பானியர்களை துரத்தியடிப்பது. நியூகினியாவில் எஞ்சியுள்ள ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலிருந்தும், பிலிப்பைன்ஸிலிருந்தும், பஸிபிக்கிலுள்ள மற்ற தீவுக்கூட்டங்களிலிருந்தும் எதிரியைச் சுத்திசெய்வது, ஆசியா கண்டத்திலிருந்து ஜப்பானியர்களை அப்புறப்படுத்துவது.



ரெங்கூனை சமீப காலத்தில் பிடித்ததென்பது டோக்கியோவுக்குச் செல்லும் ரஸ்தாவில் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். அடுத்த படியாக பர்மாப் போரில் சால்வீன் நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசம் சுத்திசெய்யப்படவேண்டும். மோல்மீன் ஆக்கிரமிக்கப்பட வேண்டும். அதன்பின் மலேயாவுக்குப் போகும் குறுகலான பூ பாகம் சுத்திசெய்யப்படவேண்டும். வங்காள விரிகுடாவில் அந்தமான், நிகோபார் தீவுகளிலிருந்து ஜப்பானியர்களை அப்புறப்படுத்தவேண்டும்.

அதன்பின் அநேக நடவடிக்கைகள் சாத்யமானவை. தென் கிழக்கு ஆசியா சம்பந்தப்பட்ட மட்டில் மலேயாவும் சிங்கப்பூரும் திரும்பிப் பிடிக்கவேண்டும். தென் கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த படைகள் தரைமூலமாகவும், ஆகாய மூலமாகவும் ஸியாமுக்கும், பாங்காக்குக்கும் செல்லக்கூடும். ஆனால் தரைமார்க்கம் அவ்வளவு சுலபமானதல்ல.

இந்தப் போர் பிராந்தியத்தில் மற்றொரு பகுதியில் ஒன்றுபட்ட கடல், ஆகாய நடவடிக்கை மூலம் படைகள் இறக்கப்படவேண்டும். ஸியாமையும் சுமாத்ராவையும் ஒரே சமயத்திலும் தாக்குவதும் சாத்யமானது. அவ்விதம் நடைபெறுவிடில் நேசதேசப்படைகள் பிறைவடிவமாக மலாக்கா ஜலசந்தியின் வடக்குக்கோடி, சுமத்ரா, ஜாவா பிராந்தியங்களில் தாக்குதல் செய்யக்கூடும். சபாங்கையும் அதற்குத் தெற்கிலுள்ள சுமத்ராவையும் வெடிவிமானங்கள் பலமான முறையில் தாக்கி வருவதுதான் இந்த யுத்த தந்திரத்திற்கு சூசகங்கள்.

---

## ஜப்பானைத்தாக்கும் முறை.

### பஸிபிக்கில் இருவகை அபாயம்.

(லெப்டினென்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

ஜெர்மனியைத் தாக்கும்போர் பிரிட்டனுடையவும், அமெரிக்காவினுடையவும், முக்கியமான கவனத்தையும், ருஷ்யாவின் பூரா கவனத்தையும், ஆகர்ஷித்து வந்தபொழுது கடற்தளபதி நிமிட்ஸும், ஜெனரல் மாக் ஆர்தரும் அமெரிக்கப்படைகளுக்கும், ஜப்பானுக்கும் மத்தியிலுள்ள கடல், தரைமார்க்கமான தூரத்தை பலமாகக் குறைத்து வந்தார்கள்.

தென்மேற்கு பஸிபிக் தீவுகளிலுள்ள ஜப்பானியப் படைகளை ஜெனரல் மாக் ஆர்தர் தாண்டிச் சென்றபொழுது ஆஸ்திரேலியப் படைகள் துடைக்கும் வேலையில் ஏவப்பட்டன. இப்பொழுது ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்திரங்களில் அமெரிக்கக் கடற்படை தயார்செய்து வரும்பொழுது பிரிடிஷ் கடற்படையின் ஒரு பெரும்பாகம் அதனுடன் ஒத்துழைத்து வருகிறது.

மேற்குப் பக்கத்திய போரைப்போல பஸிபிக் போரும் நேசதேச முயற்சிதான். ஆகிலும் தென்கிழக்கு ஆசியா கமாண்டில் பிரிடிஷ் சாம்ராஜ்யப்படைகள் அதிகமாகவும் பஸிபிக்கில் அமெரிக்கப்படை அதிகமாகவுமிருக்கின்றன.

பஸிபிக்கில் நேசதேசப் படைகளின் நிலைமையைப் பின்வருமாறு சொல்லலாம். மாக் ஆர்தர் பிலிப்பைன்ஸ் கூட்டத்திலுள்ள தீவுகள் எல்லாவற்றையும் அநேகமாகத் திருப்பிப் பிடித்து விட்டான். ஜப்பானியர்கள் லூஸானின் வடக்குத் தீவான வடக்கு மணிலாவில் எதிர்த்துப் போராடுகிறார்கள். மிண்டானோத் தீவின் மத்தியிலுள்ள மலைப்பிரதேசத்திற்கு ஜப்பானிய அகதிகள் துறத்தியடிக்கப்படுகிறார்கள். ஆகிலும் பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதால் அமெரிக்கக் கடற்படைக்கும் விமானப்படைக்கும் அது முக்கியமான தளமாக இருக்கக்கூடும். இந்த தளங்களிலிருந்து மலேயா, ஸியாம், தெற்கு நாடுகளிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்குச் செல்லும் சர்பரா கடல் மார்க்கங்களை அமெரிக்கப் படைகள் தாக்கக்கூடும். பார்மோஸாவை விமானமூலம் தாக்குவதிலிருந்து பார்மோஸாவுக்கும் சீன கடற்கரைக்கும் மத்தியிலுள்ள கடல் மார்க்கம் முற்றுகை செய்யப்படுமென்று தோன்றுகிறது.

வடக்குப் பக்கத்திய போரைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸைவிட முக்கியமான தளத்தையும் அமைத்து விட்டார்கள். அவர்கள் முன்னணி தளமான ஆகினாவாவை பூராவாகப் பிடித்து விட்டார்கள். இதன் மூலம் தரைப்படைகள் முன்னேறும் தளமும் கிடைத்து விட்டது.

பிலிப்பைன்ஸ் இருகையுள்ள உறைவாள் என்றும் அமெரிக்கக் கடற்படையும் விமானப் படையும் அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறதென்றும் கருதினால், ஆகினாவாவென்பது வாளின் முனையாகும். அது அங்கிருந்து வடக்கில் 350 மைல்களிலுள்ள ஜப்பானைத் தாக்கக்கூடிய சமீப ஸ்தலம். ஸ்காபாவுக்கு ஒப்பிடக்கூடிய ஒரு துறைமுகம் ஆகினாவாவில் இருக்கிறது. இருதரப்பாருக்கும் ஆகினாவா மிகவும் முக்கியத்வமுள்ளதென்று அறிந்தால் அதற்காக ஏழு வாரங்களாக ஜப்பான் கடுமையாகப்போரை நடத்தியதென்பது சகஜம் என்று தோன்றும்.

அதற்குக் கிழக்கில் 1000 மைல்களுக்கு அப்பாலில் மாரியனாஸ் தீவுகளும் ஐவோஜிமாத் தீவும் ஜப்பானிய ராணுவ அதிகாரிக்கு மற்றொரு பிரச்னையை உண்டு பண்ணுகின்றன. அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் மாரியனாஸில் இருக்கின்றன. ஐவோஜிமா ஜப்பானின் முக்கிய தீவான ஹான்ஷூவிலிருந்து 650 மைல்களிலிருக்கிறது. படைகளை இறக்க அது ஒரு முன்னணி தளம்.

பிலிப்பைன்ஸிலிருந்தும் மாரியனாஸிலிருந்தும் ஏற்படும் இருவகைப்பட்ட அபாயங்களும் ஆகினாவா, ஐவோஜிமா என்ற முன்னணி ஸ்தலங்களும் ஜப்பானைத் தாக்கும் முறையை விளக்கிக்காட்டுகின்றன. ஒன்றுபட்ட பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படைகள் ஜப்பானைச்சுற்றியுள்ள சமுத்திரங்களில் சஞ்சாரம் செய்து ஜப்பானியக் கடற்படையில் எஞ்சியிருக்கும் பாகத்தை வலுச்சண்டைக்கு அழைக்கின்றன.

இந்தக் கடற்படை, விமானப்படை அபாயம், ஜப்பானை சரணாகதி செய்யும்படி கட்டாயப்படுத்த போதுமானதா, அல்லது பர்மாவிலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்யப் படைகள் வடக்கில் வெகுதூரம் முன்னேறி சீனக் கடற்கரையிலிருந்து ஜப்பானைப் படையெடுக்கும் வரையில் காத்துக்கொண்டிருக்கவேண்டுமோ என்பதுதான் முக்கியமான பிரச்னை.

வெடிகுண்டு வீச்சின் மூலம் மட்டும் எந்த யுத்தத்திலும் வெற்றிபெற முடியாதென்று அடிக்கடி சொல்லுவதுண்டு. அந்த முறையினால் மட்டும் எந்த யுத்தமும் வெற்றிகரமாக முடிவடையவில்லையென்பதும் உண்மைதான். ஆகிலும் ஜப்பானில் நவீன யுத்தத்திற்குரிய யுத்த முஸ்தீப்புகளை உற்பத்தி செய்யப் போதுமான தாவரப்பொருள்கள் கிடையாது. ஜெர்மனியைப் போலில்லாமல் ஜப்பானுக்குத் தேவையான நிலக்கரியின் பெரும்பாகமும் இரும்பு உலோகமும் சைனாவிலிருந்தும் கொரியாவிலிருந்து சூஷிமா ஜலசந்தி வழியாகவும் மஞ்சூரியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படவேண்டும். ஜப்பானின் பெரிய நகரங்களைச் சுற்றிலும் உள்ளதும் சுலபமான லக்ஷியங்களுமான தொழிற்சாலைப் பிரதேசங்கள் வெடிகுண்டுகளின் தாக்குதலின் மூலம் ஜெர்மனியில் ஏற்பட்டதைவிட ஜப்பானுக்கு அதிக நாசத்தை விளைவிக்கின்றன. விமான நடவடிக்கை மூலம் தாதுப்பொருள்களின் குவியல்கள் அழிக்கப்படுகின்றன. அவைகளை ஈடுசெய்ய முடியாது.

வெடிகுண்டு வீச்சின் மூலம் ஜப்பரனின் போர்புரியும் சக்தி அழிக்கப்படும். அதற்கு உதவியாக ஒன்று கடல் விமானப்படை ஜப்பானியக் கடற்கரையை முற்றுகை செய்யும், இதன் மூலம் யுத்தம் சீக்கிரமாக முடிவடையக்கூடும். இல்லாவிடில் நீண்டகாலப்போர் நடைபெற வேண்டும். வடக்கு ஆபிரிகாவுக்கு வெகுதூரம் சென்றுவது அல்லது டி தினத்தன்று நார்மண்டி கடற்கரைக்கு சமீபதூரம் சென்றுவது படையெடுப்பு ஏற்பட்டதுபோல் ஜப்பான் படையெடுக்கப்படவேண்டும். அத்துடன் போர்முடியும்.

---

## ஜப்பானை கடற்படை மூலம் பலமாகத் தாக்குவது.

### பஸிபிக்குக்கு கடற்படைகள்.

*பிரியான் டன்ஸ்டால்.*

சாகாஷிமாஸ் தீவின் பேரில் விமானமூலம் கப்பல்கள் மூலம் இடைவிடாது ஸர் H. B. ராலிங்க்ஸிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை குண்டுகளை வீசிவருவது அதற்குப் பக்கத்திலுள்ள ஆகினாவாத் தீவுக்கூட்டத்தின் முக்கியமான தீவில் போர்புரிந்துவரும் ஜப்பானியர்களுக்கு மிகவும் கெடுதலாக இருந்துவருகிறது. சாகாஷிமாஸ் தீவை கடற்படை தாக்குவதற்கு இரண்டு லக்ஷியங்கள் உண்டு. ஒன்று, ஆகினாவாப்போரில் இந்தத் தீவிலுள்ளவர்கள் சேர்ந்துகொள்ளாமல் தடுத்துவிடுவது. இரண்டாவதாக, ஜப்பானுக்கும் பார்மோஸாவுக்கும் இடையிலுள்ள பிரதேசம் பூராவிலும் நேசதேசப்படைகளின் பலத்தை அதிகரிப்பது



இந்த ஒன்றுபட்ட வலிமை மிகவும் அதிகமாயிருப்பதால் ஜப்பானியர்களிடம் எஞ்சியுள்ள கடற்படை ஆகினாவாவிலிருந்து அமெரிக்கப்படைகளைத் துரத்தியடிக்க முடியவில்லை.

சாகாஷிமாஸ் நடவடிக்கை முக்கியத்துவமுள்ளதென்பது பிரிடிஷ் கடற்படையை ஜப்பானிய தற்கொலை விமானங்கள் அநேகம்தடவை தாக்கியிருப்பதிலிருந்தே தெரியவரும். சமீப காலத்தில் நடைபெற்ற தாக்குதலில் ஏழு ஜப்பானிய விமானங்கள் கடற்படையின் பலமான குண்டு வீச்சுகளையும் லக்ஷியம் செய்யாமல் சென்று பிரிடிஷ் கப்பல்களில் மோதியோ அல்லது கப்பல்களுக்கு சமீபத்தில் விழுந்தோ நாசமாகின. எந்நிலைமையிலும் இரண்டுமணி நேரத்துக்கு மேற்படாமல் வேலை செய்ய முடியாதபடி நஷ்டம் ஏற்பட்டதே ஒழிய அதிகச் சேதம் உண்டாகவில்லை.

ஆஸ்திரேலியாவின் முக்கியமான தளங்களிலிருந்தும் பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க முன்னணி தளங்களிலிருந்தும் மரியனாஸ் தீவுகளிலிருந்தும் வெகுதூரத்தில் மிகவும் சக்தி வாய்ந்த கடற்படை இடைவிடாது வேலைசெய்து வருகிறதிலிருந்து டெபோ, பழுதுபார்க்கும் கப்பல்கள், சாமான் கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், வெடிமருந்துக் கப்பல்கள் உள்ள ஒரு கப்பல் கூட்டம் இப்பொழுது நடமாடிவருகிறதென்று தெரியவருகிறது. மற்றொரு யுத்த அரங்கத்தில் பிரிடனின் கிழக்கு இந்தீஸ் கடற்படை போரில் மற்றொரு வெற்றியைப் பெற்றது. சமீபகாலத்தில் இரு இரவில் காப்டன் M. L. பவர் R. N. இடமிருந்த ஸாக் மாரக்ஸ், வீனஸ், விராகோ, விஜிலண்ட், வெருலாம் என்ற நாசகாரிகள்கொண்ட கடற்படை மலாக்கா ஜலசந்தியிலுள்ள பினாங்குக்கு 50 மைல் தூரத்தில் பத்து, எட்டு அங்குல பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்த நாடி வகுப்பைச்சேர்ந்த 10,000 டன்கள் எடையுள்ள ஜப்பானிய சஞ்சாரியை மூழ்கடித்தன. இந்த நாசகாரிபேரில் பிரிடிஷ் விமானந்தாங்கிக் கப்பலான ஷாவில் சென்ற விமானங்கள் இதற்குமுன் வெடிகுண்டுகளை வீசியிருக்கின்றன.

ஜெர்மன் யுத்தம் முடிந்துவிட்டதினால் ஏராளமான நாசகாரிகளும் மற்ற சிறிய யுத்தக் கப்பல்களும் ஜப்பானைத்தாக்க அனுப்பப்படும். போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிகளை அழிக்கும் கார்வெட்டிகளும், சுரங்கவாரிக் கப்பல்களும், கவசம்பூண்ட டிராலர்களும் லேசான கடற்கரைப் படகுகளும் செல்லக்கூடும். இவ்விதமாக துணைக்கர்வலுக்கும், நீர்மூழ்கியைத் தாக்குவதற்கும், சுரங்கவெடிகளை அகற்றுவதற்கும் தெற்கு சீனக்கடலிலும் கிழக்கு இந்தீஸ் தீவுகளுக்கிடையிலும் ஜப்பான் கடற்கரையோரமாகக் கொண்டுபோகும் சாமான் கப்பல்களையும் தாக்கவும் கப்பல் வசதிகள் கிடைத்துவிட்டன.

இதே சமயத்தில் ஜப்பானுக்கும் ஜெர்மன் கடற்படைக்கும் தொடர்பு இருக்கிறதென்பது வெளியாகிவிட்டது. தகரம், மாலிபட்டனம், உல்ப்ரம், ரப்பர், குவினைன் முதலிய சாமான்களை ஏற்றிச்சென்ற ஜெர்மன் யூ-படகு 532 லிவர்ப்பூல் கப்பல் பழுதுபார்க்கும் தளத்திற்கு வந்தது. இந்த சாமான்கள் ஜப்பான் வசமுள்ள நாடுகளில் வாங்கப்பட்டு, பிரிடிஷ் முற்றுகையைத்தாண்டிச் செல்லக்கூடிய ஒரே ஒரு உபாயமான யூ-படகு மூலம் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டது. நியூபௌண்ட்லாந்துக்கருகில் கனடிய யுத்தக் கப்பல்கள் வெகு நேரம் துரத்தியடித்து 1,600 டன்கள் எடையுள்ள மற்றொரு ஜெர்மன் யூ-படகைப் பிடித்தன. அதில் மூன்று ஜெர்மன் விமானப்படை ஜெனரல்களும் இரண்டு ஜப்பானிய ஆபீஸர்களும் முக்கியமான ஆகாய மார்க்கப் படங்களும் முஸ்தீப்புகளும் இருந்தன. இரண்டு ஜப்பானியர்களும் தற்கொலை செய்துகொண்டு விட்டார்கள்.

ஐரோப்பாவில் வடக்குக் கடலிலும், பால்டிக்கிலும் உள்ள துறைமுகங்களிலும் ஜெர்மன் வசமிருந்த டேனிஷ் துறைமுகங்களிலும் இருந்த சிறிய ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் நேசதேச வசமாகிவிட்டன. அவைகளில் இ-படகுகளும் R. படகுகளும், M. ரக சுரங்கவாரிக் கப்பல்களும், சுரங்கவெடி பிராந்தியத்தை ஊடுருவிச் செல்லக்கூடியவைகள் (ஸ்பெர் பிரக்கர்), துணைக்காவல் கப்பல்கள், டிராலர்கள், படைகளை இறக்கும் படகுகள் முதலியவைகள் இருந்தன. அவைகள் ஜப்பானைத்தாக்க உபயோகிக்கப்படும் என்று நாம் சொல்லாவிட்டாலும் அவைகள் பிரிடிஷ் கடற்படைக்கு ஒத்தாசை செய்வதினால் பிரிடிஷ் கப்பல்களை கிழக்குக்கு அனுப்ப வசதி ஏற்படும். அவ்விதம் செய்யாவிடில் சுரங்கவெடிகளை அகற்றுவதற்கும் ஜெர்மன் துறைமுகங்களைத் திறப்பதற்கும் அங்கு நேசதேச கடற்படையின் கண்காணிப்புக்கும் அவசியமான பல்வேறு வேலைகளைச் செய்வதற்கும் பிரிடிஷ் கடற்படை ஐரோப்பாவிலேயே தங்கியிருக்கவேண்டி நேரிடும்.

ஐரோப்பியப் போரின் இறுதி கட்டத்தில் இரண்டு பேர் ஓட்டும் சிறிய நீர்மூழ்கிகளையும் ஒருவர் செல்லும் இரண்டு ரகமுள்ள சிறிய நீர்மூழ்கிகளையும் ஜெர்மனி

உபயோகித்து வந்ததென்று கடற்படை இலாகாவும் விமானப்படை இலாகாவும் வெளியிட்டிருக்கிறது. அவைகள் பிரிடிஷ் கிழக்குக் கடற்கரையிலிருந்து ஷெல்ட் நதி முகத்துவாரத்திற்குச் சென்ற நேசதேச சாமான் கப்பல்களை மூழ்கடிக்கமுயன்றன. அவைகளின் பிரயத்தனம் வீணாகிவிட்டது. ஏனெனில் அவைகளுக்கு இ-படகுகளைத்தவிர ஜெர்மன் விமானப் படையாவது அல்லது ஜெர்மன் கடற்படையாவது ஒத்தாசை செய்யவில்லை. பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும் சேர்ந்து 170 யூ-படகுகளைத் தாக்கியிருக்கின்றன. 81 யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது அநேகமாக மூழ்கியிருக்கலாம் அல்லது பிடிபட்டன.

1945-ம் ஞு மேமாதம் 8-ம் தேதிவரையில் பிரிடனுக்கு நஷ்டமான 163 கப்பல்களின் பெயரை பிரிடிஷ் கடற்படை இலாகா வெளியிட்டிருக்கிறது. எதிரிக்கு இந்தத் தகவல்கள் தெரியவராதென்று நம்பப்படுகிறது. அவைகளில் பிரிடனுக்கு அமெரிக்கத் துருப்புகளை ஏற்றிச்சென்ற க்வீன்மேரி என்ற பெரிய சாமான் கப்பலால் துண்டாடப்பட்ட குராஷியோ என்ற சஞ்சாரியும் மற்றும் 10 நாசகாரிகளும், எட்டு நீர்மூழ்கிகளும் சேர்ந்தவை. நாசமடைந்துவிட்டதாகச் சொல்லப்படும் இந்த உபரிக்கப்பல்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ள கடற்படைகளைவிட அதிக பலம் பொருந்தியவையென்று சொல்லலாம்.

---

# பஸிபிக்கில் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானப்படை.

## நேசதேச வெற்றிக்குக் காரணம்.

### E. கோல்ஸ்டன் ஷெபர்ட்.

ஆறு மாதங்களுக்கு மேலாக ஜப்பானிய விமானிகளின் தற்கொலை தந்திரத்தைப்பற்றி தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. சமீபகாலத்தில் பிரிடிஷ் கப்பல்களில் எதிரியின் விமானங்கள் வந்திறங்கியதாக செய்தி கிடைத்திருக்கிறது. இவைகளை கவனித்தால் ஜப்பானியக் கடற்படை, ராணுவப்படைக்கு ஒத்தாசை செய்யும் விமானப்படைக்கு அதிக சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்று ருஜுவாகுகிறது. விமானப்படை ஆதிக்கத்தை இழந்த ஒரு வல்லரசுதான் பிராசீனமான தந்திரத்தைக் கை விட்டுவிடும்.

விமானந் தாங்கிகளை இழக்க ஆரம்பித்த பொழுதே, அதாவது மூன்று வருஷங்களுக்கு முன்பே; விமானப்படை ஆதிக்கத்தைப் பெறமுடியுமென்ற நம்பிக்கையை ஜப்பான் இழந்துவிட்டது. ஜப்பான் வசம் ஏராளமானத் தீவு தளங்கள் இருந்ததினால் அது அதன் நஷ்டங்களின் மிகுதியை அது பொருட்படுத்தவில்லை. தரையிலிருந்து புறப்படும் விமானங்கள் கப்பல்களில் இருந்து புறப்படும் விமானங்களைவிட உயர்வானவையென்று அடிக்கடி சொல்லப்படும் அறிக்கையை அப்படியே ஜப்பான் நம்பிவிட்டது. இந்த அறிக்கை அநேக வருஷங்களாக உண்மையாக இருந்தது. பொதுவாக அதை இன்றும் ருஜு செய்யலாம்.

ஆனால் 20 வருஷங்களாக இருந்த மற்றொரு உண்மையான, வேகத்தைவிட யுத்த தந்திரத்திற்கு வெகுதூரம் செல்லுவதுதான் முக்கியமென்பதை ஜப்பான் மதித்துப்பார்க்கவில்லை. தீவுகளைத் தாக்கும் போரில் விமானந் தாங்கிகள்மூலம் விமானங்களுக்கு அதிக தூரம் செல்லும் சக்தி உண்டாகிவிடுகிறது. விமானந் தாங்கிகள் தரையிலிருந்து புறப்படும் ஜப்பானியச் சண்டை விமானங்களின் வட்டாரம் தாண்டி நின்றபொழுது அவைகள் பத்திரமாக இருந்தன. அதாவது பத்தில் ஒன்பது அபாயங்களிலிருந்து தப்பித்து வந்தன. அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களைத் தாக்கச் சென்ற வெடி விமானங்களுக்கு ஜப்பான் சண்டை விமானங்களை ஒத்தாசைக்கு அனுப்பமுடியாமல் போனது முதல் ஜப்பானின் விமான சக்திக்கு அந்தியகாலம் வந்துவிட்டது.

அதாவது அமெரிக்காவின் மிதக்கும் விமான தளங்களைவிட ஜப்பானின் விமான தளங்கள் நிச்சயமாக நாசம் செய்யப்படக்கூடியவை என்று ஏற்பட்டது. இவ்விதமான அறிக்கை முறண்பட்டதாகத் தோன்றலாம். ஆகிலும் அதுதான் உண்மை. இதற்குத் தெளிவான காரணங்கள் உண்டு, விமானந் தாங்கி என்பது சிறிய அசைந்து செல்லும், லக்ஷியம். அதில் தற்காப்புக்காக சண்டை விமானங்களும் தாக்குவதற்காக வெடி விமானங்களும் கொண்டுபோகப்படுகின்றன. எதிரியின் சண்டை விமான வட்டாரம் தாண்டி விமானந் தாங்கி தாக்கப்பட்டால் தாக்கும் வெடி விமானங்களை விமானந் தாங்கியிலுள்ள சண்டை விமானங்கள் அவைகளின் வட்டாரத்திற்குள் வந்தவுடனேயே தாக்க ஆரம்பித்துவிடும். விமானந் தாங்கியை நெருங்கிவரும்பொழுதே வெடி விமானங்களுக்கு அதிக நஷ்டம்



ஏற்படும். எஞ்சியவைகளும் வெடிகுண்டுகளை வீச யத்தனம் செய்யும்பொழுது தாக்கப்படும். அவைகளின் லக்ஷியமும் எண்ணம் நிறைவேறவொட்டாமல் அங்குமிங்கும் நிருதியில்லாமல் அசைந்துகொண்டிருக்கும். ஆகையால் கப்பலை நேராக அடிப்பதென்பது அபூர்வம் தான்.

ஆகிலும் விமானந்தாங்கியிலிருந்து செல்லும் விமானங்கள் ஒரு தரை விமான தளத்தைத் தாக்க முயன்றால் லக்ஷியம் அசைந்து செல்லுவது என்பதைத் தவிர மற்றெல்லா இடையூறுகளும் காணப்படும். மேலும் விமானந் தாங்கியின் கமாண்டர் முன்னேறித் தாக்குவதற்கும் தற்காப்புக்கும் ஏற்பாடுகள் செய்துகொள்ளாவிட்டால் இந்த சிரமங்கள் தோன்றும். விமானந் தாங்கிகள் இருக்கும் பல திசைகளிலிருந்தும் எதிரியின் தற்காப்பு அமைப்புக்குக் குழப்பம் ஏற்படும் வகையிலும் அடிக்கடியும் கமாண்டர் தரை விமான தளத்தைத் தாக்கலாம். தற்காப்பு விமானப்படையை சண்டைக்கு இழுத்த பின்னும் லக்ஷியம் ஸ்திரமாக இருக்கிறதென்ற நிச்சய புத்தியுடன் அவன் லக்ஷியத்தைத் தாக்க முற்படலாம். அவன் கொண்டுவரக்கூடிய விமானந்தாங்கிகளின் சங்கியையைப் பொருத்து ஒரு தீவிலுள்ள விமான தளம் அநேக தடவை தாக்கப்படலாம். அவன் ஒவ்வொரு விமானந் தாங்கியாக இழந்தாலும் எதிரிக்கு வெற்றிகரமாக தற்காப்பு செய்யும் சந்தர்ப்பம் குறைவாகத் தானிருக்கும். தீவுதளங்களை அமெரிக்கா திரும்பிப்பிடித்ததற்கு முன் அமெரிக்க விமானந் தாங்கிகளில் சென்ற விமானங்கள் ஜப்பானிய விமானதாங்கிகளில் சென்ற விமானங்களை அழிக்கவும் தீவுகளிலுள்ள ஜப்பானிய விமான தளங்களை நொருக்கவும் முயற்சிசெய்துவந்தன. சென்ற சில மாதங்களில் விமானந் தாங்கிகளிலிருந்த விமானங்கள் ஜப்பானைச் சேர்ந்த தீவுகளைத் தாக்க அனுப்பப்பட்டன. அவ்விதம் தாக்க விமானந் தாங்கிகள் ஜப்பானிய தரை விமான தளங்களிலுள்ள சண்டை விமானங்களின் வட்டாரம் தாண்டி சுமாராக 300 மைல்களுக்கப்பாலில் நின்றுகொண்டிருந்தன. ஆகையால் ஜப்பானிய வெடி விமானங்களுக்கு சண்டை விமானங்களின் துணை கிடைக்கமுடியாமல் போய்விட்டது. அதன் விளைவு யாதெனில் சென்ற அக்டோபர் மாதத்திலிருந்து ஜப்பானிய தற்கொலை தந்திர நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஐரோப்பிய, அட்லாண்டிக் சமுத்திரங்களில் பிரிடிஷ் கடற்படை ஈடுபட்டிருந்ததால் இந்தக் கொள்கையை அமெரிக்க கடற்படை மகத்தான முறையில் பிரதிபாதனம் செய்து வந்தது. இந்த வேலையை அமெரிக்க விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் திறமையுடன் செய்துவந்தன. தூரக்கிழக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படைப் படைகள் இந்த வேலையில் கலந்துகொண்டு அந்தக் கொள்கைகளை வெற்றிகரமாக பிரயோஜனப்படுத்திவருகின்றன. 80 விமானங்கள் உள்ள ஒரு பிரிடிஷ் விமானந்தாங்கி இந்தக் கொள்கையை ஐந்து வருஷங்களுக்குமுன் அமுலுக்குக் கொண்டுவந்தது. 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 11-ம் தேதி இரவில விமானந்தாங்கிகளில் சென்ற ஸ்வார்ட்பிஷ் விமானங்கள் டாரொண்டா துறைமுகத்திலிருந்த இதாலிய கடற்படையின் பெரும் பாகத்தைத் தாக்கின, விமானந்தாங்கிக்கு யாதொரு பழுதும் ஏற்படவில்லை. அப்பொழுது அது எதிரியின் தரை விமான தளங்களிலிருந்து 200 மைல்களுக்குள் சஞ்சாரம் செய்துவந்தது.

பஸிபிக்கிலுள்ள விமானந்தாங்கிகளின் விமான சக்திதான் முக்கியமாக உபயோகிக்கப்படுகிறது. ஆரம்பகாலத்தில் விமானந்தாங்கிகளிலும், தரை விமான தளங்களிலும் எதிரி பெற்றிருந்த விமான ஆதிக்கத்தை அது அழித்துவந்தது. ஆங்காங்கு கிடைத்த விமானப்படை ஆதிக்கத்தைக்கொண்டு தீவுகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆகினுவா பிடிபட்டால் நேசதேசத் தரை விமான தளங்கள், ஜப்பானியத் தீவுகளில் தளங்களைக் கைப்பெற்றுமலேயே சமீபதூரத்திலேயே கிடைத்துவிடும். விமானந்தாங்கிகளில் வந்த கனமான வெடிவிமானங்கள் தாக்கும் தூரத்தில் வந்துவிட்டன. அவைகளின் உதவிகொண்டு விமானப்படையைப் பெருக்கி அதைப் பரிபாலிப்பதென்ற ஜப்பானின் சக்தி அழிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுதுதான் சண்டை விமானங்கள் பறந்துசெல்லும் வட்டாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. விமானந்தாங்கிகளின் வெற்றிகரமான லாபங்களை சேனைகளும் கனமான வெடிகுண்டுகளை அபரிமிதமாகப்போடும் பெரிய வெடிவிமானப்படைகளும், பயன்படுத்திக் கொண்டிராவிட்டால் விமானந்தாங்கிகள் எதிரியின் தரை விமான தளங்களுக்கருகில் நிலைபெற்றிருக்கமுடியாது. விமானந்தாங்கிகளை இவ்வளவு பயன்படும்படியாக உபயோகிக்கக்கூடிய மற்றொரு யுத்தம் கிடையாது. ஆகிலும் இந்த ரகசிய ஆயுதத்தின் உபயோகத்தைக் கண்டுபிடித்திருக்கும் அமெரிக்கர்களும் பிரிடிஷார்களும் இந்தக் கப்பல்களைக்கொண்டே ஜப்பானின் அந்தியகாலத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

# பர்மாவில் புகழ் சம்பாதிப்பது.

## மேற்கு ஆபிரிக்கப் படைகளின் வீரம்.

(ஹவார்ட் ஜார்டைன்).

பிரிட்டிஷ், இந்தியத் துருப்புகளுடன் தோளோடு தோள் நின்று போர் புரிந்துவரும் 81-வது மேற்கு ஆபிரிக்க டிவிஷனும் பர்மாப் போரில் புகழ்பெற்று வருகின்றது.

ஆபிரிக்கப் படைகளின் சகிப்புத் தன்மையை ஒருவரும் மதிக்காமலிருக்கமுடியாது. அவைகள் குறைவான ஆகாரத்துடனும், ஓய்வுடனும், தண்ணீருடனும் நடந்துசென்று, சிரமப்பட்டு, போர் புரியும். அவைகள் பர்மாவில் காணப்படும் உஷ்ணத்தையும் அசௌகரியங்களையும் சமாளித்துவரும்.

பிரிடிஷ் படைகளுடன் சேர்ந்து முதல் முதலாக இப்பொழுதுதான் மேற்குப் படைகள் போர் புரிகின்றன என்பதில்லை. அவைகள் முதல் உலக யுத்தத்திலும், இரண்டாவது உலக யுத்தத்தில், அபிஸீனியாப் போரிலும் ஈடுபட்டிருக்கின்றன.

பெரும்பாலும் நைஜீரியர்கள் கொண்ட இந்த டிவிஷனின் ஒரு பாகம் சிண்டிட் நடவடிக்கையின்பொழுது பிரபல்யமுள்ளதாக இருந்தது. ஜெனரல் விங்கேட் அவர்களை முக்கியமாக அனுப்பும்படி வேண்டினர். மேற்கு ஆபிரிக்காவிலிருந்து புறப்படும் முன்பே அவர்களுக்கு வேலை கட்டளையிடப்பட்டது.

டிவிஷனின் பாக்கித் துருப்புகள் காலாடான் நதிக்கு அனுப்பப்பட்டன. அங்கு பர்மாவில் முன்னேற ஆரம்பித்தபொழுது ஜப்பானியக் கைதிகளைப் பிடித்த புகழை அவர்கள் பெற்றார்கள். தென்கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த படைகளால் அவர்களுக்குத்தான முதன் முதலில் சாமான்கள் விமான மூலம் அனுப்பப்பட்டன. அந்தப் படைதான் ஆக்கியாவுக்கு வெகு சமீபத்திற்கு வந்தது.

ஆனால் மேற்கு ஆபிரிக்க ஸோல்ஜரின் மனுஷியத்தைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். யுத்த ஆரம்பத்தில் அவனை பயிற்சி பெற்றது முதல் இன்றுவரை எனக்கு ஞாபகம் வருகிறது. முக்கியமாக மேற்கு ஆபிரிக்காவின் சிறந்த போர் வீரர்களான ஹாஸாஸைப்பற்றிக் கூறுகிறேன். அவர்கள் வடக்கு நைஜீரியாவிலுள்ள பத்துமில்லியன் ஜனத்தொகையிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள். அவர்கள்தான் பர்மாவில் போர் புரியும் படைகளின் பெரும் பாகமாக இருக்கிறார்கள். ஆகிலும் அவர்களைப்பற்றிச் சொல்லக் கூடிய விவரங்களெல்லாம் கோல்ட் கடற்கரை, ஸைராலியோன், கம்பியாவிலிருந்து வந்த எந்த ஜாதி, மதம், பாஷை, கலைஞானத்தைச் சேர்ந்த மேற்கு ஆபிரிக்கர்களுக்கும் பொருந்தும்.

அவர்களுடன் வேலை செய்கிற எவரும் அவர்களைப் பாராட்டி நேசிப்பார்கள். யுத்த ஆரம்பத்தில் அவர்களுக்கு பயிற்சியளிக்க மேற்கு ஆபிரிக்காவுக்கு அநேக ஐரோப்பிய ஆபீஸர்களும், ஸார்ஜண்டுகளும் சென்றார்கள். அவர்களுக்கு நாடும், அதன் வாசிகளும், சீதோஷ்ண ஸ்திதியும் புதியவைகள். இங்கிலாந்திலுள்ள பயிற்சிபெற்ற படைகளை விட்டுவிட்டு ஒரு விஷயங்களையும் அறியாத ஜாதியாரைப் பயில்விக்கவேண்டியிருந்தது. அவர்கள் யுத்தத்தின் முக்கிய அரங்கங்களை விட்டுவிட்டு ஒன்றுக்கும் உபயோகப்படாத ஒரு பிரதேசத்தில் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு பீதி அதிகமாக இருந்தது. மனோபாவமும் நிம்மதியாக இல்லை. ஆகிலும் ஆபிரிக்கப் படைகளிடம் அன்பில்லாதவர் ஒருவருமில்லை.

ஆபிரிக்கரின் சொந்த குணத்தின் தன்மையினால்தான் மனித வர்க்கத்தின் சாதாரணமான தொத்து நோய் போன்ற, விவரிக்க முடியாத வேண்டுகோளை இடைவிடாது கடைப்பிடிக்கவும் பொறுமையுடனிருக்கவும் ஒருவருக்கு சாதகமேற்பட்டது.

முதல் முதலாக ஆபிரிக்கர்களுக்கு விநோதப் பேச்சில் மிகுந்த ஆசை உண்டு. அவர்கள் சதாகாலமும் ஒருவருடைய சொந்தமான இடைச் சொற்களையும், தோற்றத்தையும், தொடர் சொற்களையும், பரிகாச உக்தியையும், விகையான ரூபத்தையும் அல்லது அவரைப்போல் நடிப்பதிலும் குதூகலமடைவார்கள்.

அவர்கள் பரிகாசப் பேச்சையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகிலும் அவர்களுக்கு அதிலிருந்தும் அதிக உணர்ச்சி ஏற்படும்.



திறமையைப் பரிபாலிப்பதற்கு உபரி ஒத்திகையையும் அல்பமான அபராதங்களையும் விட பரிகாச உக்தி மிகவும் உபயோகமுள்ளது. ஒரு குற்றவாளியுடையவோ அல்லது திறமையுடன் வேலை செய்யாதவருடையவோ செய்கையை ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை என்று சொன்னால் போதுமானது. அதில் யாதொரு மன கிலேசமும் ஏற்படாது. அவரும் பரிகாசப் பேச்சில் கலந்துகொள்ளுவார்.

அவர்கள் ஐரோப்பியர்களை இரண்டு காரணப் பெயர் மூலம் அழைப்பார்கள். ஒன்று எல்லோரும் உபயோகிக்கக்கூடியது. பெயரை மறந்துவிட்ட ஐரோப்பிய ஆபீஸரை உனக்கு அறிமுகப்படுத்தவேண்டுமானால் அவன் அவனுடைய காரணப் பெயரைச் சொல்லுவான். நீ ஒரு ஸீனியர் ஆபீஸராகவோ, அல்லது பரிகாசத்தை ஆதரிக்கும் மனப்பான்மை இல்லாதவராகவோ இருந்தால் அவன் அவ்விதம் சொல்லமாட்டான். பெரிய கண்கள் உள்ளவரை குதிரைக் கண்கள் உள்ளவரென்றும், வளைந்த தோள் வளைகள் உள்ள வரை சாப்பாட்டு மூட்டையைக் கட்டிச் செல்லுகிறவரென்றும், மற்றவர்களை, வௌவால் காது உள்ளவரென்றும், "இஞ்சியைப்போல் மீசை உள்ளவரென்றும்" கோபிஷ்டரென்றும், அழைப்பார்கள். மற்றொரு பெயரை அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளுவார்கள். இந்தப் பெயர்கள் ஐரோப்பியர்களிடம் வெளியிடப்படுவதில்லை. ஆனால் அந்தப் பெயர்கள் அநேகமாகச் சரியாகப் பொருத்தமாக இருக்கும்.

பர்மாவில் போர் புரியும் அநேக ஆபிரிக்கர்கள் மேற்குக் கரையிலுள்ள அறுகுறையான பாலைவன பீடபூமிகளிலிருந்து வந்தவர்கள். ஆகிலும் அவர்கள் காட்டுப் போரில் நிபுணர்களாகி விட்டார்கள்.

அவர்கள் பொறுமையுடன் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை பாராட்டத் தக்கது. அவர்களின் வீரச் செய்கைகளுக்கும் அதுதான் காரணம். கத்திகளை மற்றும் உபயோகப்படுத்தி அவர்கள் டோக்கியோவுக்குப் போகும் மேற்கு ஆபிரிக்க ரஸ்தா என்று பெயருள்ள 70 மைல்கள் நீளமுள்ள ரஸ்தாவை காட்டு மார்க்கத்தில் அமைத்து விட்டார்கள். அது ஒரு நதிக்குச் சென்றது. எதிரியின் பலமான படைகளால் சூழப்பட்டபொழுதும் போர் புரிந்துகொண்டே பின்வாங்கி 17 நாட்கள் சமாளித்து வந்ததால் சிண்டிட்டுப் படைகள் கெடுதலான நிலைமைக்குட்படாமல் தப்பித்துக்கொண்டன. அந்தப் பொறுமைக்கு அடிப்படையாக எல்லாம் இனிது முடியும் என்ற பிரகாசமான நம்பிக்கையும், எதிர்பாராமல் தோன்றும் பரிகாச மனப்பான்மையும் இருக்கின்றன.

ஆபிரிக்க ஸோல்ஜரின் பலத்தை நாம் எப்பொழுதும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். முக்கியமாக பர்மாவிலுள்ள காமரோனியர்கள் ஒரு சமயத்தில் ஆபிரிக்கப் படைகளுக்கு வந்தனம் செலுத்தும்படியாக நேரிட்டது. சிண்டிட் ஆபிரிக்கப் படைகள் போரிலிருந்து விலகிக்கொள்ளுவதற்காகப் பின்வாங்கிச் சென்றபொழுதுங்கூட காயம்பட்ட காமெரோனியர்களை அவர்கள் காப்பாற்றினார்கள். அவர்கள் காயம்பட்டவர்களையும் இரட்டிப்பு மூஸ்திப்புகளையும் எடுத்துச் செல்லுவதில் அதிக சிரமப்பட்டார்கள்.

பலமாகக் காயம்பட்டவர்களுள்ள டோலிகளை தூக்கிச் சென்றவர்கள் மூஸ்திப்புகளையும் ஆயுதங்களையும் தலையில் வைத்துக்கொண்டே சென்றார்கள். அவ்விதம் தலையில் அனாயாசமாகக் கொண்டுபோவது ஆபிரிக்கர்களுக்கு சுலபமானது. "அவர்களுடைய முயற்சிகளை வர்ணிக்க முடியாதென்று" காமெரோனியர்களின் கமாண்டர் சொன்னார்.

எல்லாவற்றையும்விட ஆபிரிக்கர்கள் ஆழ்ந்த ராஜ விசுவாசமுள்ளவர்கள். யுத்தத்தில் மிகுந்த அனுபவம்பெற்ற ஒரு ஆபீஸர் இவர்களின் உதவிகொண்டு போரை நடத்தலாமென்று ஒரு சமயம் சொன்னான்.

அவர்களுக்குத் தன்னைத்தானே பெருமை பாராட்டிக்கொள்ளும் குணம் மிகுதியாக உண்டு. அவர்கள் அணிவகுத்துச் செல்லுவது பார்ப்பதற்கு ரம்யமாக இருக்கும். அவர்கள் சுலபமான நடையுடனும் தாளத்துடனும் செல்லுவார்கள். அவர்கள் லாரிகளை ஓட்டுவார்கள். பிரென் துப்பாக்கிகளை அவர்கள் அணிவுடனும் சுறுசுறுப்புடனும் உபயோகிப்பார்கள். அவர்கள் பீரங்கிகளை பிரயோகம் செய்வார்கள். பர்மாவில் ஒரு நடவடிக்கையில் ஒரு பீரங்கி 20 நிமிஷத்தில் 600 குண்டுகளைப்போட்டு எதிரிக்கு நாசம் விளைவித்தது.

அவர்கள் எந்த வேலையையும் ஊக்கத்துடன் செய்வார்கள். இது அவர்களுக்கு இயற்கை குணம் அதனால்தான் அவர்களை எல்லோரும் நேசிக்கிறார்கள். அபிஸீனியாவில் அவர்கள் தெற்கு ஆபிரிக்கர்களுடன் நட்பு ஏற்படுத்திக்கொண்டார்கள். ஒருவருக்கு மற்றொருவருடைய

பாஷை தெரியாவிட்டாலும் அவர்களுக்கு தெற்கு ஆபிரிக்கர்கள் சிகரெட்டுகளைக் கொடுத்து அவர்களுடன் சிரித்து விளையாடி வந்தார்கள்.

ஆபிரிக்கர்களுடன் வசித்த எவரும் அணிவகுத்துச் செல்லும்பொழுது அவர்கள் பாடும் கீதங்களை மறந்துவிடமாட்டார்கள். அவர் முறை வைப்பதுபோல் பாடுவார்கள். தலைவரான ஒருவர் பாடுவார். மற்றவர்கள் சற்று மந்தமான குரலில் அதையே மறுபடியும் பாடுவார்கள். ஆரம்பத்தில் அது கோர்வையாக இராது. தலைவர் மறுபடியும் ஒரு அடி பாடுவார். மற்றவர்கள் உரக்கப் பாடுவார்கள். அடுத்தபடியாக பாட்டின் த்வனி அதிகரித்துவிடும். அதைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவருக்கு அதிக உல்லாசம் ஏற்படும். இவ்விதமான கீதம் அநேக மணிகள் நேரம் நடைபெறும்.

ஆபிரிக்க ஸோல்ஜரின் பரிகாச மனப்பான்மையும், விஸ்வாசமும், நம்பிக்கையும் அடக்க முடியாதது. பிறருக்கும் பரவக்கூடியது. அவர்களைக்கண்டு வசப்படாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

ஜெனரல் ஸ்லிம் 81-வது டிவிஷன் படைகளைப் பாராட்டி ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார். அது பின்வருமாறு:—

"சந்தோஷகரமாக சகித்து நிற்கும் தன்மையில் உங்களை எவரும் மிஞ்சமுடியாது. நீங்கள் ஜப்பானியர்களை நாசம் செய்த எண்ணிக்கையும், உங்களுடைய ஜதிகமான தீரமும், கஷ்டங்களை அநுபவித்ததினால் உங்களுக்கு ஏற்பட்ட படிப்பினையும் எதிர்காலத்தில் உங்களைக் கண்டு அஞ்சும்படியாக ஜப்பானியர்களைச் செய்துவிடும்."

---

## பருவ காலத்திய ஆகாய விமானங்கள்.

### தென் கிழக்கு ஆசியாவில் புயல்காற்றுகளின் பலத்தை சமாளிப்பது.

**விங் கமாண்டர் L. V. பிரேசர்.**

ரெங்கூனிலுள்ள பிரிட்டிஷ், தரை, கடல், விமானப் படைகள் பருவ காலத்துடன் கடுமையாகப் போட்டி போடுகின்றன. இந்த வருஷத்தில் இந்த மகத்தான துறைமுகத்தின் பூராப் பிரயோஜனத்தையும் அடைய வேண்டுமானால் மூன்று வருஷங்களாகப் போரின் மூலம் ஏற்பட்ட நாசத்தை சரிப்படுத்தவேண்டும். பன்னிரண்டு வருஷங்களாக இல்லாத அதிக மான வெப்பமுள்ள சூர்ய வெளிச்சமும் பருவ காலத்துக்கு முன்னதான கனமான மழைக்கும் மத்தியில் எல்லா படைகளைச் சேர்ந்த இஞ்ஜினியர்களும் பருவகால மழை அவதுமுன் ரெங்கூனைப் பழுது பார்க்க சிரமப்பட்டு வருகிறார்கள்.

முதன் முதலாக மிங்கலாடன் விமான தளத்தைப் பழுது பார்த்து அதை உபயோக முள்ளதாகச் செய்யவேண்டும். பழுதுபட்ட துறைமுகத்திலிருந்த கட்டடத்தூள்களைச் சுத்தம் செய்து சாமான் கப்பல்கள் தங்கி சாமான்களை இறக்குவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

மேல் கூரை இல்லாத கட்டடங்களிலிருந்து இடிந்த பாகங்கள் அப்புறப்படுத்தப்பட்டு சாமான்களை வைப்பதற்காக டார்பாலினாலும் மற்ற அவசரத்துக்குரிய சாமான்களாலும் மேல் கூரைகள் அமைக்கப்படுகின்றன. அக்டோபர் மாதம் வரையில் தென் கிழக்கு ஆசியா போர் மழையிலும், சகதியிலும், வெள்ளப்பெருக்கிலும் நடைபெறவேண்டும். அடுத்த நான்கு அல்லது ஐந்து மாதங்களில், நிழலில் நகியின் முகத்துவாரப் பிரதேசத்தில் 100 அல்லது அதற்கு அதிகமாக உள்ள உஷ்ணம், 20 டிகிரி குறைந்துவிடும். ஆனால் இதிலிருந்து ஒரு சௌகரியமும் ஏற்படாது. ஏனெனில் சூர்ய வெப்பம் அதிகரித்துவிடும். அரக்கானில் சூர்ய வெப்பம் 93 சதவிகிதம் இருந்துவரும். அந்த உஷ்ணம் வலிமையையும் ஊக்கத்தையும் குறைக்கக்கூடும்.

நீர்வளம் பொருந்திய இந்தப் பிரதேசத்தில் விசித்திரமான காற்றுகள் மணிக்கு 100 மைல்கள் வேகத்துடனும், வீசும். சாதாரணமாகத் தோன்றும் மேகக்கூட்டங்களில் பனிக் கட்டியும், காற்றுச் சுழல்களும் தோன்றும். இந்த நிலைமையுடன்தான் தென் கிழக்கு ஆசியாவைச்சேர்ந்த நேசதேச விமானங்கள் அடுத்து வரும் மாதங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஜப்பானியர்களின் குழப்பத்தை பூர்த்தி செய்ய அவைகள் தொடர்ச்சியாகத் தாக்கி வரும் என்பதில் சந்தேகமில்லை. 1943-ம் வருஷத்தில் எதிரியின் விமானங்களும் விமானி



களும் பின்னணியிலுள்ள விமான தளங்களுக்கு ஓய்வெடுத்துக்கொள்ளச் சென்றபொழுதும் நமது விமானங்கள் நடமாடி வந்தன. கெட்ட பருவ காலத்தையும் நேசதேசப் படைகள் பயன்படுத்திக்கொண்டன. அப்பொழுதும் விமான நடவடிக்கை நடைபெற்றது. சென்ற வருஷம் பருவ காலத்திலும் நடவடிக்கை நின்று விடவில்லை. இரண்டு பருவ காலங்களில் கிடைத்த அனுபவத்தை விமானிகள் இப்பொழுதும் பயன்படுத்துவார்கள்.

பர்மாவில் பிரிடிஷ் 14-வது சேனை வேகமாக முன்னேறியதற்கு நேசதேச விமானப் படை ஆதிக்கம்தான் காரணமாக இருந்தது. இப்பொழுது விமானப் படை சேனைக்கு நன்றி செலுத்தவேண்டிய நிலைமையிலிருக்கிறது. ஏனெனில் தரைப் படைகள் முன்னேறியதினால் தூரக்கிழக்கு விமானிகளுக்கு மழையினால் ஏற்படும் சிரமங்கள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் சின் மலைகளைத்தாண்டி விமான தளங்களைச் சம்பாதித்துக் கொடுத்துவிட்டன.

10,000 அடி உயரமுள்ள அந்த மலைகளைச் சுற்றி பருவகால மழைக்கு ஆர்ப்பாட்டம் காணப்படுகிறது. ஜப்பானின் புதிய சாம்ராஜ்யத்திற்கு மலைகள் காவலாளர்களாக இருந்தன. அவைகளின் மேரில் காணப்படும் முரட்டு சுபாவமுள்ள காற்றுகள் அதைத் தாண்டிச் செல்லுகிறவர்களுக்கு சாவுப்பொறிகள் போல் இருந்தன. இன்று தூரக்கிழக்கு விமானப் படையைச்சேர்ந்த விமானங்கள் அபாயம் பொருந்திய குன்றுகளைத் தாண்டியுள்ள தளங்களிலிருந்து புறப்படுகின்றன.

தெற்கில் அதிக தூரம் முன்னேறியதினால் சில அசௌகரியங்கள் ஏற்பட்ட போதிலும் இந்த லாபங்கள் அபாரமானவை. ஏனெனில் பருவகாலம் தெற்கிலிருந்து ஆரம்பமாகி வடக்கிலிருந்து பின்வாங்கிச் செல்லுகிறது. ஆகையால் துருப்புகளும், விமானிகளும் இதற்கு முன் சென்ற வருஷங்களைவிட இப்பொழுது அதிக கஷ்டங்களுக்குள்ளாகவேண்டும்.

மேமீ முதல் வாரத்தில் தெற்கு சயாமில் பருவகால மழை ஆரம்பமாகும். மாத மத்தியில் ரங்கூனில் மழை பெய்யும். இரண்டு வாரங்களுக்குப்பின் அது வடக்கு பர்மாவுக்குப் பரவும். அக்டோபர்மீ முதல் வாரத்தில் அது தெற்கு நோக்கிச் செல்லும். அதன்பின் ஒரு மாதம் கழித்து தெற்கு சயாமில் மழை நின்றுவிடும்.

பருவகால நிலைமையைப்பற்றி ஊகித்துச் சொல்லமுடியாது. அது திடீரென்று தோன்றுவதால் ஜோஸ்யம் கூறுகிறவர்கள் விமானிகள் செல்லுவதற்கு எது சௌகரியமான மார்க்கம் என்றுதான் ஆலோசனை சொல்லக்கூடும். இந்த சமயத்தில் 125 மைல்கள் விசாலமான சூறைக்காற்றுள்ள பிரதேசத்தைத் தாண்டிச் செல்லுவதுடன் 40,000 அடிகள் உயரம் வரையிலுள்ள வெண்மையான மேகக்கூட்டங்களையும் தாண்டிச் செல்லவேண்டும். வெண்மையான மேகத்திற்குள் கோரமான குழப்பங்கள் இருக்கும். அவைகள் விமானத்தைத் தூளாக்கிவிடும்.

கருவிகளும் குழப்பமான பருவ காலத்தில் குயுக்தியான நடவடிக்கைகளைக் காண்பிக்கும். விமானம் 1-நிமிஷத்துக்கு 1-மைல் உயரச்செல்லும்பொழுது கருவிகள் 250-மைல் வீதம் பாய்ந்து செல்வதாகக் காண்பிக்கும். பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த லிபரேடர் விமானத்தின் காப்டன் பர்மாவில் ஒரு இரவில் புயல்காற்றில் அகப்பட்டுக் கொண்டான். 90-நிமிஷங்கள் வரையில் காற்றினால் அவஸ்தைப்பட்டான். அவன் தப்பித்தபொழுது விமானம் 6,000 அடியில் இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக விமானத்திலிருந்தவர்கள் பிரக்ஞையை இழந்தார்கள். அவர்கள் சோர்ந்துவிட்டார்கள் என்று காப்டன் நினைத்தான். பிராண வாயுவின் ஒத்தாசையில் அவர் தன்னுடைய வலுவை திரும்பப் பெற்றார். திடீரென்று உயரமளக்கும் கருவி 18,000 அடியைக் குறிப்பிட்டது. புயல்காற்றில் அது குளிர்ச்சி அடைந்துவிட்டது. விமான வேலைக்காரர்கள் பிராணவாயு இல்லாததால் சோர்ந்து விழுந்து கொண்டிருந்தார்கள்.

ஸ்பிட் பயரில் சென்ற விமானி மற்றொரு விருத்தாந்தத்தை வெளியிட்டார். அதிக உயரம் சென்று வேவு பார்த்துவிட்டுத் திரும்பியபொழுது அவன் இருப்பிடத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். விமானம் 20,000 அடி உயரத்திலிருந்து விழுந்துகொண்டிருந்தது. பிரக்ஞையை இழந்த விமானி ஆயிரக்கணக்கான அடிகள் கீழே விழுந்தபின் சுய புத்தியை அடைந்தான். அப்பொழுது பாராசூட் கயிற்றை இழுத்துத் தப்பித்துக்கொண்டான்.

தரையில் போர் புரிகிறவர்களுக்கு பருவகால மழை அவ்வளவு கஷ்டங்களை உண்டு பண்ணுகிறது. ஆகிலும் அந்தக் காலத்தில் அதிக அசௌகரியமும் அதிக கஷ்டமும் ஏற்படும்.

மழை தூக்குத் தூக்காகப் பெய்யும். மத்திய பர்மாவின் வரட்சையான பிரதேசத்திலுள்ள மாண்டலேயைவிட ரங்கூனில் மூன்று மடங்கு அதிகமாகப் பெய்யும். அரக்கான் யோமாஸுக்கு மற்றொரு புறத்தில் ஆக்யாபில் ஜூலை மாதத்தில் 50"-க்கு மேல் மழை பெய்யும். இது நியூயார்க் நகரத்தில் ஒரு வருஷத்தில் பெய்யும் மழைக்கு அதிகமானது. அஸ்ஸாம் மலைகளிலுள்ள சிரபுஞ்சியில் வருஷத்திற்கு 428" மழை பெய்கிறது. ஒரு வருஷத்தில் ஒரு சமயம் 905" மழை பெய்தது. ஒரே நாளில் 41" மழை பெய்தது. விமான தளத்துக்கு அருகில் ஒருவர் மூங்கிலால் அமைக்கப்பட்ட குடிசையில் வசிக்க நேரிடும்பொழுது மழையினால் மிகுந்த சங்கடம் ஏற்படும். இந்த சங்கடத்தை தென் கிழக்கு ஆசியாவிலுள்ள விமானப் படையைச்சேர்ந்த தரைப்படைகள் சகித்துக்கொள்ளுகின்றன. அவர்களின் மனோதிடமும் பர்மாவில் நேசதேசத்தாருக்கு ஏற்பட்ட வெற்றிகளின் மூலம் வலுவடைந்திருக்கிறது.

## ஜாப்களும், ஜிப்புகளும்.

பர்மாவிலுள்ள ஜப்பானியர்களுக்கு எதிராக வெகுகாலமாகவும், தீரத்துடனும், திறமையுடனும் நடைபெற்ற போரின் முடிவாக ரங்கூன் விடுவிக்கப்பட்டு, அதிலிருந்த ராணுவ, பொதுஜனக் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அதன் மூலம் பர்மாவில் ஜப்பானின் ஆதரவில் நடைபெறும் ஐந்தாம்படையான ஜிப்புகளைப்பற்றிய தகவல்களும் வெளியாகு விட்டன.

பர்மாவில் இந்தியத் துருப்புகளுடையவும் அவர்களின் சகாக்களுடையவும் நடவடிக்கையானது ஜப்பானின் பிரசார முறைகளைச் சிதற அடித்தபின் ஜிப்புகளைப்பற்றி விவரங்கள் நமக்கு ருசிகரமான தகவலாக இருக்குமேயல்லாது வேறு முறையில பிரயோஜனப்படாது. ஜப்பானுடன் ஒத்துழைக்கிறவர்கள் என்று சொல்லபபட்ட நபர்கள் இப்பொழுது அவமானம் அடைந்துவிட்டார்கள். எதிரியின் கெட்ட எண்ணத்துக்குட்பட்ட பிரியமில்லாதவர்களும் தங்களுடைய புத்தி பிரமத்தினாலோ அல்லது ஜப்பானின் அருட்டலினாலோ அல்லது கொடுமையினாலோ ஜப்பானுடன் ஒத்துழைத்தவர்களுமான அநேகரைப்பற்றி நாம் கேள்விப்படக்கூடும். ஆகிலும் எவ்வகையிலும் நிலைமையானது ஜப்பானுடையவும் அதன் நண்பர்களுடையவும் பிரசாரர்கள் வெகு காலமாகவும் விடாமுயற்சியுடனும் வர்ணித்து வந்த தோற்றத்திற்கு முற்றிலும் மாறானது.

### எதிரியின் பொய்கள் வெளியாகிவிட்டன.

முதலாவதாக ஜப்பானியர்கள் ஒரு அபத்தமான அடுக்குத்தொடரை வெளியிட்டார்கள். எதிரியின் ஒலிப்பெருக்குகள் மிகைப்படுத்தி வந்த ஆஸாத் ஹிந்துஸ்தான் சேனைக்கும் இந்திய சுதந்திரத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று ஆதிமுதலே வெளியாகும். இதை ஜப்பானிய நடவடிக்கைகளும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றன. சட்ட பூர்வமாகவும் உண்மையிலும் அது ஒரு சேனையில்லை. ஏதாவது ஒரு வேலைக்கு ஜப்பான் அமர்த்திக்கொண்ட இந்தியர்களின் சங்கியையை மதித்துச் சொல்ல முடியாது. ஆகிலும் அதை ஜப்பானிய, அச்சு ஒலிப்பெருக்குகள் மிகைப்படுத்தி வெளியிட்டு வந்தன.

மேலும் இந்த சேனைக்கு இந்தியரே தலைவர் என்றும் அவர்கள் நடவடிக்கையைத் துவக்கிவிட்டார்களென்றும் அவர்கள் இந்தியாவுக்குள் வெற்றிகரமாக நுழைந்துவிடுவார்களென்றும் ஜப்பான் சொல்லி வந்தது. முக்கியமாக மணிப்பூர் போரில் நடவடிக்கை பூராவிலும் இந்தியர்கள்தான் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜப்பானிய பிரசாரர்கள் சொல்லி வந்தார்கள். 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியுள்ள ஒரு செய்தி நமது கைவசமாகியிருக்கிறது. அதில் ஜப்பானிய ஜெனரலான முடாகுசி முன்னேறித் தாக்கும் போரில் இந்திய ராணுவம் கலந்துகொண்டதென்று சொல்லவே இல்லை. ஆகிலும் ஜப்பானிய சாம்ராஜ்ய சேனை இந்தியாவைத் தற்காப்பு செய்துவரும் படைகளை அழித்தபின் இந்தியர்கள் ஒத்தாசை செய்வார்கள் என்று மட்டும் அதில் சொல்லப்பட்டிருந்தது.

எதிர்ப்பு பலமாக இராதென்றும் அது பயன்படாதென்றும் சொல்லி ஜப்பானியர்களைத் தூண்டிவிடுவதற்காக இந்த முயற்சி செய்யப்பட்டது. இதற்கு இம்பால், கொஹிமா, மியிட்கினா, மாண்டலே ரங்கூன் முதலிய இடங்கள் தகுந்த பதிலளிக்கும். உண்மையில் ஜப்பான் இந்தியர்களை முன்னணியில் உபயோகிக்கவே இல்லை. இந்தியர்கள் பின்னணியில் இருந்து முன்னேறும் ஜப்பானியர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். தற்காப்பு ஸ்தானங்



களிருந்துவரும்படி ஜப்பானியர்களால் கட்டுப்படுத்தப்பட்டாலும் அநேக இந்தியர்கள் சந்தர்ப்பம் வாய்த்தபொழுது நமது கட்சிக்கு வந்து உபயோகமுள்ள தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

### பின்றிரை.

சிங்கப்பூர் வீழ்ச்சிபெற்ற 1942-ம் ௵ பிப்ரவரி மாதம் முதல் எதிரி கைதிகளை ஜப்பானுக்கு உதவும்படி தூண்டி வந்தான். மலேயா போருக்குப்பின் ஏற்பட்ட நாசத்திலிருந்தும் தோன்றின தாழ்வையும் குழப்பத்தையும் அவர்கள் முதலில் மதித்து விட்டார்கள். அதற்கு உதவியாக ஜப்பானியர்களின் பொய்யான தகவல்கள்தான் அவர்களுக்குக் கிடைத்து வந்தன. இரண்டாவதாக, காட்டுமிராண்டித்தனமான நடத்தைகளின் பலன்கள், கீழ்ப்படியாதவர்களை தென்மேற்கு பஸிபிக்கிலும் மற்ற இடங்களிலுமுள்ள தொழிலாளர்கள் முகாம்களுக்கு அனுப்புவது, மற்றவர்களுக்கு வெகுமதி அளிப்பதாக வாக்குறுதி செய்வது என்ற விஷயங்களையும் கைதிகள் பொருட்படுத்தினார்கள். இந்நிலைமையில் அநேகர் அடிபணியவில்லையென்பதும், அநேகர்கள் தைரியமாக மறுத்ததும், மற்றவர்கள் எதிரிக்கு உதவுவதுபோல் பாசாங்கு செய்து சமயம் வந்தபொழுது ஏமாற்றியதும் விந்தையாக இருக்கிறது.

ராஜீய பிரசாரம் 1942-ம் ௵ ஜூன் மாதத்தில் பாங்காக்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரம்பமாகிற்று. இதை ஜப்பானிய ஒலிபரப்பு ஆடம்பரத்துடன் பகிரங்கப்படுத்தியது. இதன்பின் ஜப்பானிய முறைப்படி கைதிகளும், ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள பொது மக்களும் படைக்கு திரட்டப்பட்டார்கள். அதுமுதல் கிழக்கு ஆசியாவில் இந்தியர்களின் ரகசிய சேனை இருக்கிறதென்று எதிரி அடிக்கடி சொல்லி வந்தான்.

ஒரு வருஷத்திற்குப்பின் நேசதேசத்தாரின் பதில் தாக்குதலினால் ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பானுக்கு இருந்த பிடிப்பு தளர்ச்சிபெற்று வந்தபொழுது பிரசாரம் அதிகரித்தது. இந்திய சேனையென்றும், ராஜீய சங்கங்கள் என்றும், தாத்காலிக நிர்வாகங்கள் என்றும், மந்திரிகள் என்றும் சேனாதிபதியென்றும் ஜப்பான் சொல்ல ஆரம்பித்தது. இந்திய பாஷைகளில் ஒலிப்பெருக்குச் செய்யப்பட்டது. நாஸிகளுடன் இருந்த சுபாஸ் சந்திரபோஸ் ஜப்பானுக்கு வந்துவிட்டதினால் அதிக லாபம் ஏற்படுமென்று பிரசாரம் செய்யப்பட்டது. "போஸ் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை விட்டுச் சென்று ஓட்டையுள்ள ஒரு கப்பலுக்குச் செல்லுகிறான்" என்று அப்பொழுது நாம் சொன்னோம்.

### இந்தியாவின் மறுமொழி.

இந்தோ பர்மா எல்லைச்சரகத்தில் வெகுகாலமாக ஜப்பானின் பயமுறுத்தல் இருந்து வந்தபோதிலும் சென்ற வருஷத்தில் மணிப்பூருக்குள் ஜப்பானியப் படைகள் தாத்காலிகமாக நுழைந்தபோதிலும் ஜப்பானின் பலமான பிரசார முறைகள் இந்தியாவில பொதுப்படையான பீதியையும் நம்பிக்கையின்மையையும் உண்டுபண்ணிற்றென்பதில்லை. மேலும் ஜப்பானியர்கள் இந்தியாவின் க்ஷேமத்தைக் கோருகிறவர்கள் என்ற எண்ணமும் இந்தியாவின் பெரும்பான்மையோரிடம் காணப்படவில்லை. பண்டமில்லாமல் எதிரி செய்துவந்த பிரசார முறைக்கு இந்தியா யுத்த முயற்சி இடைவிடாது செய்து பர்மாவில் ஜப்பானின் வெற்றிக்கு உதவியதே தகுந்த விடையாகும்.

இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கத்தார் ஜப்பானிய ஏஜெண்டுகளாக உள்ள இந்தியர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென்று அடிக்கடி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் ஒவ்வொரு நேசதேசத்திலும் கையாளப்பட்டிருக்கின்றன. அநேக இந்தியர்கள் ஜப்பானிடமிருந்து தப்பி இந்தியாவுக்கு வந்து தாங்களாகவே அதிகாரிகளின் முன் தோன்றியிருக்கிறார்கள். அநேகர்கள் போர்முனைகளில் ஆயுதங்களைப் போட்டுவிட்டார்கள். எதிரிக்கு ஒத்தாசை செய்வதுபோல் பாசாங்கு செய்து தங்கள் நாட்டிற்கு அநேகர் வந்து அதற்கு உதவி செய்து வந்திருக்கிறார்கள்.

அவைகளைப்பற்றிய விவரங்கள் பத்திரத்தை உத்தேசித்து வெளியிடப்படுவதில்லை. மேலும் அவைகளை வெளியிட்டால் ஜப்பானியர் வசமுள்ளவர்கள் பேரில் எதிரி கடுமையான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளக்கூடும். சென்ற வருஷத்தில் நீர்மூழ்கிகள் மூலம் இந்தியாவிலிறங்கின 12 இந்தியர்கள் உடன்காலத்திலேயே அதிகாரிகளிடம் ரிபோர்ட் செய்து கொண்டார்கள். அவர்களில் ஒருவரான ஜமேதார் முகம்மது யூஸுப் கான் 1944-௵ மே மாதம் 21-ம் தேதியன்று அகில இந்தியா ஒலிப்பெருக்கியில அவனுடைய சொந்த பாஷையில் துயரமும், கதியின்மையுமுள்ள இரண்டு வருஷ ஜப்பானிய ஆக்ஷியைப்பற்றி

சொற்பொழிவாற்றினன். டெக்னிகல் வாரண்டு ஆபீஸரான ஆஸார் நூர்கான் அவனும் அவனுடைய இந்தியக் கைதி நண்பர்களும் ஜப்பானியரிடம் அனுபவித்த கொடுமை, அவமானம், மதசம்பந்தமான அக்கிரமம் முதலியவற்றை எடுத்துரைத்தான். ஹவில்தார் ஸைபத் முகம்மது பின் வருமாறு சொன்னன்:—"ஜப்பானியர்கள் என்னைப் பிரசாரம் செய்யும்படி ஏவினார்கள். அதைத்தான் அப்பொழுது செய்து வருகிறேன். ஆனால் அதில் ஒரு வித்தியாசம் உண்டு. ஜப்பான் சொல்லச் சொன்னதை நான் சொல்லவில்லை. நான் நேரில் கண்டதைச் சொல்லுகிறேன். ஜப்பானியர்கள் இழைத்த அக்கிரமங்களை கண்ணுற்ற எவரும் மனிதன் இவ்வளவு கொடூர ஸ்வபாவமுள்ளவனாக இருப்பானென்று நம்பமாட்டார்கள்".

ஜெர்மானியர்களும் இந்தியக் கைதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார்கள். இதாலியில் அச்சு நாட்டார் தயாரித்த இந்திய சேனை நேசதேசப்படைகளை எதிர்த்து போர் புரிய உத்தரவிடப்பட்டபொழுது கலகம் செய்ததமையால் அது கலைக்கப்பட்டது. பிரான்ஸிலும் கைதி முகாம்களிலிருந்து திரட்டப்பட்டு அமைக்கப்பட்ட இந்தியப்படைகள் பிரெஞ்சு கொரில்லாப்படைகளைத் தாக்கும்படி தூண்டப்பட்டபொழுது, சந்தர்ப்பம் வாய்த்தபொழுது மாக்விகளுடன் சேர்ந்துகொண்டு, அபாயத்தையும், கொடுந்துன்பத்தையும், மரணத்தையும் அனுபவிக்கத் துணிவு கொண்டார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 251 (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 11-6-45 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| 12-6-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 13-6-45 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளுக்கோட்டை | ... ,, | 7.30 |
| 14-6-45 | அரிமளம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 15-6-45 | முதலிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | குருவிக்கொண்டான்பட்டி | ... ,, | 7.30 |
| 16-6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 17-6-45 | குராக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 252 (5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 18-6-45 | மலைக்குடிப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 |
| 19-6-45 | குழிபிறை | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 20-6-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 21-6-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |
| 22-6-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.80 |
| 23-6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 24-6-45 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 12—6—45 | ராமச்சந்திரபுரம். | 19—6—45 | கோனாபட்டு. |
| 13—6—45 | சாம்பக்குடி. | 20—6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 14—6—45 | கீழாநிலை. | 21—6—45 | ஆலங்குடி. |
| 15—6—45 | புதுக்கோட்டை. | 22—6—45 | புதுக்கோட்டை. |
| 16—6—45 | வெட்டன்விடுதி. | 23—6—45 | பொன்னமராவதி. |
| 17—6—45 | விராச்சிலை. | 24—6—45 | தீத்தான்விடுதி. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸூபரின்டென்டெண்ட் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர் அவைகளை சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—11-6-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ஞு ஜூன்மீ 25உ திங்கட்கிழமை [ந. 253

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLIII.

## ஜப்பானுக்குப் போகும் வழி திறக்கப்பட்டுவிட்டது.

### வருங்காலத்திய போரின் இயல்பு.

நியூஸ் கிரானிகள் பத்திரிகையின் ராணுவ வியாக்யானியான

மேஜர் பிலிப் கிரிப்பிள்.

ஜப்பானின் வீழ்ச்சி நிச்சயம். அது எப்பொழுது என்பது குறிப்பிடக்கூடியதில்லை. ஆகிலும் ஒவ்வொரு பிரதேசமாக வீழ்ச்சி பெற்று வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது. தெற்கு ஆசியா கமாண்டும், தென்மேற்கு பஸிபிக் படைகள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களும், பிலிப்பைன்ஸுக்குத் தெற்கிலும், மேற்கிலும் எதிரி வசமுள்ள பிரதேசங்களும் முதல் முதலில் சுத்தி செய்யப்படவேண்டும். ஆகினவாவுக்குச் சற்றுக் குறைவான போர்கள் நடைபெறக்கூடும். ஆனல், முற்போக்கு உறுதியுடன் நடைபெறும். ரெங்கூன் பிடிபட்டபின் 12 மாதங்களுக்குள் அந்த வட்டாரம் பூராவும் வீழ்ச்சி பெற்றுவிடும்.

அடுத்தபடியாக, வடக்கு சைனு, மஞ்சூரியா, கொரியாவிலுள்ள தற்காப்புகளுள்ள ஜப்பான் உள்வரை வட்டாரம் வீழ்ச்சி பெறும். ஜப்பானின் யுத்த தளவாட உற்பத்தி சக்தி வடக்கு சைனுவிலும், மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் இருக்கிறது. போக்குவரத்துகள் ஜப்பானியக் கடலினூல் காபந்து செய்யப்படுகின்றன.

ஆசியா கண்டத்திலுள்ள ஐச்வர்யங்களைத் தவிர ஜப்பான் ஏராளமான பொருள்களைச் சேமித்து வைத்திருப்பதனுல் அவைகள் இரண்டு வருஷம் போரை நடத்த ஜப்பானுக்குப் போதுமானவை. உதாரணமாக, ஜப்பானியரிடம் ஐந்து வருஷங்களுக்குப் போதுமான ரப்பரும், எட்டு வருஷங்களுக்குப் போதுமான தகரமும், எட்டு மாதங்களுக்குப் போதுமான பெட்ரோலும் இருந்து வருகின்றன.

மார்ச்சு 26-ம் தேதியன்று ஆரம்பித்த ஆகினவாப் போர் இப்பொழுதுதான் முடிவை எட்டிப்பார்க்கிறது. சென்ற அக்டோபர் மாதத்தில் பிலிப்பைன்ஸில் ஆரம்பமான நடவடிக்கைகள் முடிந்தபாடில்லை. ஜப்பான் நிபந்தனையற்ற சரணுகதி செய்யுமுன் கடுமையாகப் போரை நடத்தவேண்டுமென்பதற்கு இந்த இரண்டு நடவடிக்கைகளும் உதாரணங்கள் ஆகும்.

மேற்கு முனையிலுள்ள அமெரிக்கப் படைகள் கிழக்குப் போர்முனைக்குப் கொண்டு போகப்படுகின்றன. ஒரு கவசம் பூண்ட படை டிவிஷனின் முஸ்தீப்புகளைக் கொண்டுபோக 15 லிபர்டி கப்பல்கள் தேவைப்படும். ஜெர்மனியை முறியடிக்க ஒரு கப்பல் வேண்டியிருந்த தென்றால், ஜப்பானை முறியடிக்க மூன்று கப்பல்கள் வேண்டும். கப்பல்கள் மூன்று மடங்கு தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஜப்பானைப் படையெடுக்கப் போதுமான படைகளைத் திரட்ட அநேக மாதங்களாகும்.

ஜப்பான் பூமியில் எதிரி வெறிபிடித்தவன்போல் மூர்க்கத்தனமாகப் போர்புரியக் கூடுமாதலால் நடவடிக்கை நீடித்திருக்கும். ராஜீய, மனித உணர்ச்சி சம்பந்தமான அதிர்ச்சிகள் ஏற்பட்டு யுத்த நீடிப்புக் குறைந்தாலொழிய படைகளை இறக்கியபின் 18 மாதங் களுக்குள் ஜப்பானை ஆக்கிரமித்துவிடலாமென்று நாம் மதிக்கலாம்.

இந்த வெற்றிக்குப் பின்னும் தெய்வத்தினிடம் மூடபக்தியுள்ள எதிரி ஆசியாவிலும், கொரியாவிலும், மஞ்சூரியாவிலும், வடக்கு சைனாவிலும் எதிர்த்துப் போராடக்கூடும். ஆசியாவில் 2 மிலியனுக்கு மேலாகவும், ஜப்பானில் சுமாராக 2 மிலியனும் எதிரிப் படைகள் இருக்கின்றன. இந்த வியூகம் ராணுவ அவசியத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டது. தரைப் படைகளுக்கு சர்ப்பரா பிரச்னை முக்கியத்துவமுள்ளது.

ஆகாய ஆதிக்கமிருந்தால் தரை ஆதிக்கம் சித்தித்துவிட்டதென்று அடிக்கடி சொல்லப் படுகிறது. ஆனால் அனுபவத்திலிருந்து ஆகாய ஆதிக்கம் ஏற்பட்டால் தரை ஆதிக்கத்துக்கு வழி திறக்கப்படுமென்று சொல்லலாம். அமெரிக்க விமானப்படைகள் ஜப்பானுக்குப்போகும் மார்க்கத்தைத் திறந்துவிட்டன. ஆகிலும் வெற்றிகளை ஒன்றுபடுத்த தரைப்படைகளும் சர்ப்பராக்களும் செல்லவேண்டும். சாமான்கள் 7,000 மைல்கள் தாண்டிச் செல்லவேண்டும்.

அநேக வட்டாரங்களில் சொல்லிவருவதுபோல் பஸிபிக் போரின் முடிவைப்பற்றி நம்பிக்கைகொள்ள என்ன அநுகூலங்கள் இருக்கின்றன.

படையெடுப்பிலிருந்து ஜப்பானைத் தப்புவிக்க ஜப்பானிலுள்ள முதலாளிகளின் செல்வாக்கை உபயோகிக்கலாமென்று சொல்லப்படுகிறது. ஆனால் 1943-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் கெயிரோ மகாநாட்டில் அமெரிக்காவும், பிரிட்டனும், சைனாவும் பின்வருமாறு முடிவு செய்தார்கள். "ஜப்பான் பிடித்த நாடுகளை எல்லாம் அது கக்கிவிடவேண்டும். மூன்று வல்லரசுகளும் மற்றும் ஜப்பானுடன் போர் தொடுத்திருக்கும் நாடுகளும் ஒன்று பட்டு ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்வரையில் போரை பலமாகவும் நெடு நாளாகவும் நடத்த முயன்றுவரவேண்டும்". இந்த அறிக்கையிலிருந்து பேரம் செய்வதற்கு யாதொரு இடமும் இருப்பதாகத் தெரியவில்லை.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 15—6—45 (வெள்ளிக்கிழமை) | ரெங்கூனில் மௌண்ட் பேடன் வெற்றிக்காக ராணுவ ஒத்திகையை ஏற்பாடு செய்தார். |
| 16—6—45 (சனிக்கிழமை). | சீனர்கள் ஹாங்காங்குக்கு வடகிழக்கிலுள்ள ஹோபினைத் திரும்பிப் பிடித்தார்கள். |
| 17—6—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஜப்பானியர்கள் பர்மாவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக பின்வாங்கி வருகிறார்கள். |
| 18—6—45 (திங்கட்கிழமை). | குவாமிலுள்ள ஜப்பானியர்கள் சரணடைய ஆரம்பிக் கிறார்கள். |
| 20—6—45 (புதன்கிழமை). | ஆகினாவாவுக்கான போர் அநேகமாக முடிவடைந்து விட்டது. |
| 22—6—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்கர்கள் போர்னியோவிலுள்ள சாராவாக்கில் லூடாங்கில் இறங்கிவிட்டார்கள். |



### (B)-செய்திச் சுருக்கம்.

**ஐரோப்பா.—**

(1) அமெரிக்கப் படைகள் ருஷ்யர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து பின் வாங்கிவிட்டன.

(2) மார்ஷல் டிடோவிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பிரிடிஷ் துருப்புகள் போலாவுக்குள் நுழைந்தன.

**பஸிபிக்.—**

(1) ஆகினாவாவில் நடைபெற்ற கடும்போர் முடிந்துவிட்டது. 82 நாட்கள் போருக்குப் பின் ஜூன் 21-ம் தேதியன்று ஜப்பானிய எதிர்ப்பு முற்றிலும் நின்றுவிட்டது.. ஜப்பானுக்கு 90,000 ஜனங்கள் நஷ்டம்.

அதற்குமுன் அமெரிக்கப் படைகள் ஆகாகுவின் தென்மேற்குக் கடற்கரைக்கருகிலுள்ள செனாகுத் தீவில் யாதொரு எதிர்ப்பன்னியிலும் இறங்கிவிட்டன.

(2) **போர்னியோ.**—ஆஸ்திரேலியப்படைகள் புருனே விரிகுடாவில் லாபூவான் தீவைப் பூராவாகப் பிடித்துவிட்டார்கள். போர்னியோவுக்கு வடகிழக்கிலுள்ள தாரகான் தீவு பூராவாக ஆக்கிரமிக்கப்பட்டது. புருனே விரிகுடாவின் தெற்கு புஜமான மெம்பாகூலிலும் போர்னியோவில் சாராவாக்கிலுள்ள லூடாங்கிலும் படைகள் இறங்கின. மிரி, செரியா எண்ணெய் பிரதேசங்களுக்கு லூடாங் எண்ணெய் சுத்திகரிக்கும் மத்திய தேசம்.

(3) மிண்டானோவில் பெயிலோ விழுந்துவிட்டது.

(4) லூசானில் சாண்டியாகோ, எசாகு, நாகுலியான், இலாகான், டூகாரோ பிடி பட்டன. டூகாரோ காகேயான் மாகாணத்திற்குத் தலைநகரம்.

**ஜப்பான்.**—ஜப்பானியத் தொழிற்சாலை பிரதேசங்கள் இடைவிடாது தாக்கப்படுகின்றன. பின்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. டோக்கியோ, கியூஷூத்தீவிலுள்ள ஆமுடா, காகோஷிமா, ஹான்ஷூத் தீவிலுள்ள ஹாமா மாட்ஷூ, யோகேயிசி.

**சைனா.**—சீனப்படைகள் இந்தோ-சைனாவுக்குப் போகும் வழியிலுள்ள ஜப்பானிய தளமான லூசௌவை நோக்கி முன்னேறுகின்றன. பதில் தாக்குதல்செய்து ஜப்பானியர் கள் லூங்கானையும் டிங்கானையும் பிடித்து விட்டார்கள். சீனப்படைகள் சின்பங்க், இஷான், ஹோபின், வென்சௌ, ஸெலினியூ, சான் சியாசீ முதலியவற்றைக் கைப்பற்றினார்கள்.

**பர்மா.**—பாகுயோமாஸினின் அடிவாரங்களில் ஜப்பானியர் செய்த பதில் தாக்குதல் துரத்தியடிக்கப்பட்டது. ஜப்பானியர்கள் பர்மாவிலிருந்து பின்வாங்கி வருகிறார்கள்.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**13—6—45.** (புதன்கிழமை)

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—ஹாங்காங் (Hongkong), செய்கோன் (Saigon).

**பர்மா (Burma).**

ஜப்பானியக் கப்பல்கள்.—ஈதாஹிப் (Eatahib).

சேமிப்புகள், பாதைகள்.—காலுன்பி (Kalunpe).

நீராவி யந்திரங்கள்.—ஈ (Ye) வின் வடக்கு.

**14—6—45.** (வியாழக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி ஆக்கிரமித்திருந்த கிராமங்கள்.—பாக்காங் (Paukkaung) பிரதேசம்.

**15—6—45.** (வெள்ளிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியப் படைகள் ஸப்ளைப் பிரதேசங்கள்.—காகயன் (Cagayan).

**பர்மா (Burma).**

எதிரி நாசகாரிகள்.—ஸியாம் வளைகுடா.

ஜப்பானியரின் பலத்த முனைகள்.—டவுன்கூ (Toungoo), மாச்சி (Mawchi) ரஸ்தா.

**16—6—45** (சனிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

கால நிலையால் தடைசெய்யப்பட்டு கட்டுப் பாடாய் நடந்த விமான நடவடிக்கைகள்.

**17—6—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய பகுதிகள்.—ஆகினாவா (Okinawa).

**பர்மா (Burma).**

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**18—6—45.** (திங்கட்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East.)**

தொழிற்சாலை இதர இலக்குகள்.—க்யூஷூவிலுள்ள ஒமுடா (Omuta), காகோஷிமா (Kagoshima), ஹொன்ஷூவில் உள்ள ஹமாமாட்ஸூ (Hamamatsu), யொக்காய்ச்சி (Yokkaichi).

**பர்மா (Burma).**

ஜப்பானியக் கப்பல்கள்.—ஸியாம் (Siam) வளைகுடா.

நீராவி யந்திர இலாகா ரேமிப்புகள்.—பான் பனுங் (Banphanang).

ரஸ்தாப் பாலம்.—பிலின் (Bilin), பான் (Paan) பிரதேசங்கள்.

**19—6—45.** (செவ்வாய்க்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

துருப்பு முகாம்கள்.—ஆகினுவா (Okinawa).

இலக்குகள்.—க்யூஷூ (Kyushu), ஹொன்ஷூ (Honshu).

**பர்மா (Burma).**

துருப்பு முகாம்கள்.—ஆட்கினி (Otkin) ற்கு மேற்கு.

எதிரி சைனியங்கள்.—டவுங்கூ (Toungoo).

எதிரி ஆக்கிரமித்த கிராமம்.—பெகுவின் (Pegu) வடகிழக்கு.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**14—6—45.** (வியாழக்கிழமை) to **16—6—45.** (சனிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

**17—6—45.** (ஞாயிற்றுக்கிழமை) to **18—6—45.** (திங்கட்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

அமெரிக்கத் தற்காப்புகள்.—ஆகினுவா (Okinawa).

**பர்மா (Burma).**

எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

**19—6—45.** (செவ்வாய்க்கிழமை) to **20—6—45.** (புதன்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

**பர்மா (Burma).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

## யுத்தக் குறிப்புகள்.

**யுத்தமும் ராஜீயமும்.** இந்த வாரத்தில் அநேக ராஜீய நடவடிக்கைகள் காணப்படுகின்றன. பிரிட்டனிலும் இந்தியாவிலும் புதிய நிர்வாகத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதன் காரணமாக பொது ஜனங்களின் கவனம் யுத்தத்திலிருந்து ராஜீயத்தை நெருங்கிவிட்டது. ஆகிலும் யுத்தம் நடைபெற்றுவருகிறது. எதிரிகளில் ஒருவன் இன்னும் முறியடிக்கப்படவில்லை. 14-வது சேனையின் தலைவரான ஜெனரல் ஸ்லிம் பின்வருமாறு சொல்லுகிறார். ஜப்பானிய யுத்தம் எவ்வளவுகாலம் நீடித்திருக்குமென்று என்னைக் கேட்கிறார்கள். இதற்கு பதிலுரைப்பது ஜனங்களைப் பொருத்ததே ஒழிய என்னைப்பொருத்ததல்ல. இன்னும் ஒரு போரை நடத்த வேண்டும் என்று ஜனங்கள் உணர்ந்துவிட்டால் யுத்தம் சீக்கிரம் முடிந்துவிடும். அவர்கள் யுத்த முயற்சி செய்தாலொழிய யுத்தம் நீடித்து நடைபெறும்.

வி வி வி வி வி

**ஜப்பானியக் கறையான்கள்.** ஜப்பானியர்கள் மாபெரும் எதிரிகள் அல்ல. ஆனால் அவர்கள் கடுமையாகப் போர்புரியக் கூடியவர்கள். 14-வது சேனையைச் சேர்ந்த ஜெனரல் ஸ்லிம் சொல்லுகிறபடி அவர்கள் வெட்டுக்கறையான் போன்றவர்கள். அவர்களைச் சுலபாகக் காலால் தேய்த்து நசுக்கிவிடலாம். ஒரு சிறிய காலம் அவர்கள் குழப்பத்துடன் அங்கும் இங்கும் ஓடுவார்கள். மறுபடியும் திரும்பி ஒன்றுசேர்ந்து கொள்ளுவார்கள். அவர்கள் விசித்தரமான எதிரிகள்.

வி வி வி வி வி

**தூரக்கிழக்குப் போர்.** ராஜீய சச்சரவும் நெருக்கடியுமுள்ள இடங்களிலிருந்து வெகுதூரத்தில் தூரக்கிழக்குப் போர்கள் அநேக இடங்களிலும், பசிபிக்கிலும் தூரக்கிழக்கு ஆகாயங்களிலும் நடைபெற்று வருகின்றன.



பர்மாப் போர்முனையில் நேசதேச நடவடிக்கை வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இங்கு உதைபட்டு, சிதைவுற்று, ஜப்பானியர்கள் பர்மாவிலுள்ள நதிகளையும் ஷான் மலைகளையும் தாண்டியும், சில சலயங்களில் உபயோகமற்ற அளவில் பலமாக எதிர்தாக்குதல்கள் செய்துகொண்டும் ஸியாமுக்குள் தப்பிஓட முயற்சி செய்து வருகிறார்கள்.

பிலிப்பைன்ஸில் லூசானின் மலைப்பாங்கான பிரதேசங்களிலும், மிண்டானோத்தீவிலுள்ள சமவெளிகளிலும் ஜப்பானிய எதிர்ப்பு குலைந்து வருகிறது.

ஆகினுவாப் போர் அநேகமாக முடிந்துவிட்டது. இங்கு ஜப்பானியர்கள் மூன்று சிறிய பகுதிகளில்தான் எதிர்த்து நிற்கிறார்கள்.

தென்மேற்கு பஸிபிக்கில் ஆஸ்திரேலியப் படைகள் நியூகினியாவிலும், நியூ பிரிடனிலும், போகன்வில்லியிலும் தனிக்கப்பட்டிருக்கும் எதிரிப் படைகளைத் துடைத்து வருகிறார்கள்.

மத்திய பஸிபிக்கிலும் டிரக்கிலும் மற்ற வளைகுடாக்களிலும் பிரிடிஷ் அமெரிக்கப் படைகள் இருவகைத் தாக்குதலினால் எதிரிப் படைகளை முறியடித்து வருகின்றன.

போர்னியோவிலும், சைனாவிலும் புதிய போர்முனைகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. போர்னியோவுக்கருகிலுள்ள தாரகான், லாபுவான் என்ற தீவுகள் நமது வசமாகிவிட்டன. போர்னியோவில் ஆஸ்திரேலியப்படைகள் போர்னியோவிலுள்ள எண்ணெய் பிரதேசங்களையும் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகளையும் நெருங்கிவருகின்றன. சைனாவில் ஜப்பானியப் படைகள் இட்டப்படி பின்வாங்கி வருகின்றன. இப்பொழுது அமெரிக்கர்கள் பயில்வித்த சீனப்படைகள் தாக்குவதற்கு அதிகத் திறமைபெற்றுவிட்டன. உள்நாட்டிலுள்ள அமெரிக்க 14-வது விமானப்படைக்கு ஸ்டில்வெல் ரஸ்தாமூலமாகவும் இந்தியாவிலிருந்து செல்லும் குழாய்கள் மூலமாகவும் ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன. நேசதேச விமானங்களும் யுத்தக் கப்பல்களும் பர்மாவுக்கும், ஸியாமுக்கும், மலேயாவுக்கும் கிழக்கு இந்தீஸுக்கும் செல்லும் தரை, கடல் மார்க்கங்களைத் துணித்துவருகின்றன. ஜப்பான் கண்ட சாம்ராஜ்யக் கனவு மறைந்துவிட்டது.

ஷாங்கேக்கு சமீப தூரத்தில் சீனக் கடற்கரையில் வெஞ்சௌ என்ற முக்கியமான துறைமுகம் திரும்பிப் பிடிக்கப்பட்டுவிட்டது. சைனாவிலுள்ள சீனப்படைகளுக்கும் ஆகினுவாவிலுள்ள அமெரிக்கப்படைகளுக்கும் மத்தியில் ஒரு சிறிய கடல்தான் இருந்து வருகிறது.

ஜப்பானிய யுத்த தொழிற்சாலைகளை அழிப்பதற்கான நிருதியான நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக ஜப்பான் அடிக்கடி விமானங்களால் தாக்கப்பட்டுவருகிறது. அதன் பயன் யாதெனில் ஜப்பான் ஒருபொழுதும் தாக்கப்பட முடியாதென்ற மனப்பான்மை அழிக்கப்பட்டுவிட்டது. ஜப்பானிய பிரதம மந்திரி ஒவ்வொரு வீட்டையும் ஒரு கோட்டையாக மாற்றவேண்டுமென்று ஜனங்களை வேண்டிக்கொள்ளுகிறார்.

இந்த நடவடிக்கைகள் மூலம் ஜப்பான் முற்றுகைக்குட்பட்டிருந்த போதிலும், ஆகினுவாவின் ஆக்கிரமணத்தின் மூலம் ஜப்பானுக்குப் போகும் மார்க்கம் திறக்கப்பட்டபோதிலும், ஜப்பானில் படையெடுப்பு கூடிய சீக்கிரத்தில் ஏற்படுமென்று எண்ணுவதற்கில்லை. ஆகினுவாவில் அமெரிக்கர்கள் ஒரு டஜன் விமான தளங்களை அமைத்தபோதிலும் ஜப்பானைப் படையெடுக்கத் தயார் செய்திருக்கும் முஸ்தீப்புகளுக்கு அது சிலாக்கியமான தளமாக இருக்கப் போதுமான பரிமாணம் உள்ளதல்ல. பெரியதென்று சொல்லக்கூடிய மணிலாத் துறைமுகம் 1,700 மைல்கள் தாண்டியிருக்கிறது. ஜப்பானியக் கடற்கரையில் இறங்குவது 6,000 கப்பல்களுடன் நார்மண்டி கடற்கரையிலிறங்கியதைவிட மகத்தான வேலையாகும். படைகளிறங்கிய பின் பிரான்ஸைப்போல டாங்கிகள் நடமாடுவதற்கு சமவெளி கிடையாது. கடற்கரையைத் தாண்டி ஸ்விட்ஸர்லாந்துக்கு சமமான மலைப் பிரதேசம் இருந்துவருகிறது.

வி வி வி வி வி

**ஜெர்மன் பிரச்னை.** போர் முனையில் ஜெர்மன் சேனைகள் முறியடிக்கப்பட்டதுடன் ஜெர்மன் ராணுவத் தன்மை மறைந்துவிட்டதென்று நினைப்பீர்கள். பீல்ட் மார்ஷல் மாண்ட் காமரியும் ஜெனரல் ஈசன்ஹவரும் இவ்வாரத்தில் வெளியிட்டுள்ள எச்சரிக்கையைப் படிக்கவேண்டும். பிரிடிஷ் பீல்ட் மார்ஷல் பின்வருமாறு சொல்லுகிறார். "ஜெர்மனி அடிபணிந்துவிட்டாலும் அது இன்னும் நன்றாய் அழிக்கப்படவில்லை. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் சதி செய்யாமல் தடுக்க நாம் முயற்சிகளைச்

செய்யவேண்டும்". அமெரிக்க ஜெனரல் பின்வருமாறு சொல்லுகிறார். "ஜெர்மன் ராணுவ அதிகாரிகளை பலமாக அழித்துவிடவேண்டும். இந்த யுத்தங்கள் எல்லாம் சிறிய போர்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஜெர்மன் ராணுவ காரியாலயங்களை எல்லாம் அழித்துவிட வேண்டும். பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்களையும் வெவ்வேறு இடங்களில் பிரித்து வைக்க வேண்டும். ஜெர்மனியைக் கண்காணிப்புச் செய்துவரவேண்டும். இல்லாவிடில் ஜெர்மனி மறுபடியும் சதி செய்ய ஆரம்பித்துவிடும். ஜெர்மன் யுவர்களுடன் சகோதர பாவம் கொண்டாடக்கூடாது. நாஸி தத்வமும், அதன் பலமும் அழியும் வரையில் இவ்விதம் நடைபெறவேண்டும். ஆனால் இது அநேக வருஷங்கள் வரையில் நீடிக்கக்கூடாது. இதற்குப் பரிகாரம் கல்வி மூலமாகவும், உதாஹரணம் மூலமாகவும் தேடவேண்டும். வெறுப்பைக் கொண்டு நாம் சமாதானத்தை நிலைநாட்டமுடியாது."

வி வி வி வி வி

**ஜெர்மனிக்குப் புதிய கல்வி போதனை.** ஜெர்மானியர்களை நாகரீகத்திற்குக் கொண்டுவரும் கல்வி போதனை ஆரம்பமாகிவிட்டது. ஹிட்லர் தத்வம் தோன்றியதற்குப்பின் இப்பொழுதுதான் முதன் முதலாக ஜெர்மானியர்கள் உண்மையை அறிகிறார்கள். 1,000 அறிக்கை ஆபீஸர்கள் உண்மை யான தகவல்களை வெளியிட்டுவருகிறார்கள். நேசதேசப் பத்திரிகைகள் ஒரு வாரத்தில் 42,50,000 வியாபாரம் ஆகின்றன. ஜெர்மன் அச்சாலைகளும், ரேடியோக்களும், ஸினிமாக்களும் நேசதேச வசமாகிவிட்டன.

வி வி வி வி வி

**ஜெர்மன் தொழிற்சாலைகள்.** அமெரிக்க ராணுவக் கமிட்டியிடம், சில ராணுவ தஸ்தாவேஜிகள் கிடைத்திருக்கின்றன. அவைகளிலிருந்து ஜெர் மனி மூன்றாவது உலக யுத்தத்தை நடத்தும் எண்ணத்தைக் கைவிட்டுவிடவில்லை யென் றும், அதற்காக முக்யமான தொழிற்சாலைகளை மறைமுகமாக வைத்திருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. நடுநிலைமை வகிக்கும் தொழிலாளிகள் என்றும் வேஷம் போட்டுக்கொண் டும் ராஜீய சம்பந்த மற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டும் சில ஜெர்மானியர்கள் ஜெர் மன் தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சி நிபுணர்கள் என்றும் ஆராய்ச்சி நிபுணர்கள் என்றும் சொல்லிக்கொண்டு ஒன்று சேர்ந்து வேலை செய்து வருகிறார்கள்.

நேசதேசத்தார்கள் ஜப்பானைத் தாக்குவதற்காக யுத்த தளவாட உற்பத்திக்காக ஜெர் மன் தொழிற்சாலைகளை உபயோகித்து வருகிறார்கள். உதாரணமாக பெரியதான ஸீயஸ் கண்ணாடி தொழிற்சாலையில் தூரக்கிழக்கிலுள்ள நேசதேசப்படைகளுக்கான வைத்திய, கண்ணாடி சாமான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தூரக்கிழக்கில் ஜெர்மன் ரகசிய ஆயுதங் களை உபயோகிக்க அவைகளை உற்பத்தி செய்யும் முறைகளையும் நேசதேச நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

**யுத்தக் குற்றவாளிகள்.** இந்த வாரத்தில் நாஸிகளின் அயல்நாட்டு மந்திரியான வான் ரிப்பன்டிராப் கைது செய்யப்பட்டான். அவன் ஹாம்பர்க்கில் விஷமுள்ள ஒரு டப்பியுடன் ஒளிந்துகொண்டிருந்தான். ஆகிலும் அவன் உயிரை மாய்த்துக்கொள்ளுமுன் அவன் கைது செய்யப்பட்டான்.

யுத்தக் குற்றவாளிகளின் விசாரணை சீக்கிரம் துவங்கும். ஜெர்மன் ஆக்கிரமிப்பு வட்டா ரத்தில் ஜெர்மனியில் நான்கு ராணுவ கோர்ட்டுகளும், இதாலியில் ஒரு கோர்ட்டும் ஸ்தாபிக் கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஏழு பிரிடிஷ் அதிகாரிகள் இருப்பார்கள்.

வி வி வி வி வி

**ஜெர்மனியில் அமெரிக்க வட்டாரம்.** அமெரிக்கர் ஆக்கிரமித்திருக்கும் மாகாணங்கள் ஒவ்வொன் றிலும் ஒரு மாகாண நிர்வாகம் அமைக்கப்பட்டிருக் கிறது. 496 ராணுவக் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 50 ஜட்ஜிகளும், 250 நியாயவாதிகளும் அந்தக் கோர்ட்டுகளில் வியவகரிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியில் ருஷ்யாவுக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரத்திலிருந்து அமெரிக்கத் துருப்பு கள் வாபஸ் பெறப்பட்டன.



**சான்பிரான்ஸிஸ்கோ** மகாநாட்டின் ஆலோசனைகள் அநேகமாக முடிந்துவிட்டன. உலக சாஸனத்தை ஆமோதித்து அதில் கையெழுத் திடுவதுதான் பாக்கியிருக்கிறது. ஜூன் மாதம் 26-ம் தேதியன்று மகாநாடு முடிவடையும். ஜனாதிபதி ட்ரூமன் அவ்வமயம் ஒரு சொற்பொழிவாற்றுவார். கையெழுத்திடுவது திங்கட் கிழமை ஆரம்பமாகி செவ்வாயன்று முடிவடையும். ஒப்பந்தத்துக்கு இடையூறாக இருந்த பிரச்னைகள் நட்பு முறையில் விவாதத்தின் பேரில் தீர்த்துக் கட்டப்பட்டன. டம்பார்டன் ஓக்ஸிலும், யால்டாவிலும் நிறுவப்பட்ட அடிப்படைகளைக் கொண்டு சான்பிரான்ஸிஸ்கோவில் கூடிய நேசநாடுகள் ஒரு புதிய சர்வதேச சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இது கூட்டுறவு பத்திரத்தின் பொருட்டு பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) ஸிரியாவில் காணப்பட்ட குழப்பம் அடங்கி வருகிறது. ஐந்து வல்லரசு மகாநாட்டை பிரிடனும் அமெரிக்கா வும் நிராகரித்து விட்டதால் டிகால் ஸிரியா பிரச்னையை நேசதேச சபை முன் வைப்பதாக யோசனை செய்து வருகிறான்.

(2) ருஷ்ய சேனைக்கு எதிராக கபட வேலை, நாசவேலை செய்யத் துணிந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு மாஸ்கோவில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட 16 பேர்களில் 12 பேர்கள் அவர்களின் சுதந்திரத்தை பாதிக்கக்கூடிய வகையில் பல் வேறு கால அளவிற்கு தண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

(3) 10-வருடங்களாக வேலை செய்துவந்த பிரிடிஷ் ஜனபிரதிநிதி சபை ஜூன் 15-ம் தேதியன்று கலைக்கப்பட்டது.

(4) லியோபால்ட் மன்னரின் கீழ் பெல்ஜியத்தில் ஒரு புதிய நிர்வாகத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(5) நஷ்ட ஈடு கமிஷன் மாஸ்கோவில் ஜூன் 21-ம் தேதியன்று அலுவல்களை ஆரம் பித்தது.

(6) ஜெனரல் ஈசன்ஹவர் ஐரோப்பாவுக்குத் திரும்பிய உடன் SHAEF கலைக்கப்பட்டு வரும். அமெரிக்கத் தலைவர் இப்பொழுது அமெரிக்காவுக்கு ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றிருக்கிறார். SHAEF கலைக்கப்பட்டவுடன் ஈசன்ஹவரும் மேற்கு ஐரோப்பாவில் உயர்தர நேசதேச கமாண்டர் பதவியைத் துறந்துவிடுவார்.

---

# ஜெர்மனியில் நேசதேச நிர்வாகம்.

## பெர்லின் அறிக்கை.

### W. N. ரூயர்.

பெர்லின் அறிக்கை நேசதேச வல்லரசுகளுக்கும் ஜெர்மனிக்குமுள்ள சட்ட பூர்வமான சம்பந்தத்தைத் துலக்கிக் காட்டுகிறது. இதற்கு சரித்திரத்தில் யாதொரு உபமானமும் கிடையாது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சந்நிவேசத்திற்கு ஒத்ததானவைகள் இதற்கு முன் கிடையாது.

நேசதேச வல்லரசுகள் ஜெர்மனியை ஸ்வாபாகாரம் செய்துகொள்ளவில்லை. ஜெர்மனி என்ற தேசம் இருந்துவரும். ஆகிலும் அதன் எல்லைகள் திருத்தியமைக்கப்படும். ஆகிலும் நேசநாடுகளுக்கும் ஜெர்மனிக்கும் சமாதான ஒப்பந்தம் ஏற்படாது.

நேசதேசத்தார்கள் மதிக்கக்கூடிய ஜெர்மன் நிர்வாகம் இல்லை. நேசதேச மேன்பார்வை சபைதான் நிர்வாகத்தை வகிக்கும். புதிய ஜெர்மனியை நான்கு மிகப்பெரிய வல்லரசுகளும் ஆளுவார்கள்.

இந்த ஏற்பாடு தாத்காலிகமானது, அது நீடித்திருக்கும் காலமும், அதற்குப்பதிலாக தோன்றும் ஆக்ஷியின் தன்மையும் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. ஏனென்றால் எதிர்பார்க்க முடியாத நிகழ்ச்சிகள் அவ்விரண்டையும் பாதித்துவிடும்.

ஜெர்மனியின் நிர்வாக முறையும் கொள்கைகளும் அந்த அறிக்கையுடன் வெளியிடப் பட்டிருக்கின்றன. மிகவும் கடுமையான ஷரத்துகள் புத்திசாலித்தனமுள்ளதாக இருக்க மாட்டா? ஏனென்றால் எதிர்பாரா மாறுதலடையக்கூடிய சந்தர்ப்பங்களுக்கு ஒத்தவாறு அவைகள் அடிக்கடி திருத்தியமைக்கப்படவேண்டும். நாம் பரீக்ஷை பார்த்தும், தவறுதல் களின் படிப்பினையை அறிந்தும் வேலை செய்து வரவேண்டும்.

யுத்தம் நிறுத்தப்பட்ட முதல் வாரத்திலேயே பிரிடிஷ் நிர்வாகம் டோனிட்ஸையும் அவனுடைய சகாக்களையும் ஜெர்மனியின் சட்ட பூர்வமான நிர்வாகம் என்று மதித்துவிடுவார்கள் என்ற ஊகத்தை இந்த அறிக்கையானது பூர்ணமாக நிராகரித்து விடுகிறது. இந்த அறிக்கையானது ஐரோப்பிய வெற்றி தினத்திற்கு வெகு நாட்கள் முன்னதாகவே தயாரிக்கப்பட்டு வந்தது. அது டெகரான் மகாநாட்டிலுள்ள முடிவுகளை அடிப்படையாகக்கொண்டது. இந்த திட்டம் யால்டாவில் அங்கீகரிக்கப்பட்டது. ஜெர்மனி சரணாகதி செய்யுமுன்னரே நாஸிகளுடனாவது அல்லது தோல்வி சமயத்தில் நிறுவப்படும் எந்த ஜெர்மன் நிர்வாகத்துடனாவது பேரம் செய்வதில்லையென்று நேசதேசத்தார்கள் முடிவு செய்தார்கள் என்பது திண்ணம்.

### சுதந்திரம் அல்லது சுய ஆட்சி.

பழையசர்வதேச சங்கத்தைப்போல, சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலும் மேற்கொள்கைகளைப்பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறதென்றுநான் நினைக்கிறேன். உதாரணமாக குடியேற்ற நாடுகளின் தர்மகர்த்தா உரிமை சம்பந்தமான சர்ச்சையில் வியவகாரம் நடந்தது. தர்மகர்த்தா திட்டத்தின்மூலம் சுதந்திரமும் அல்லது சுய ஆட்சியும் ஒரு நாடு பெறும் என்று வைத்துக்கொண்டாலும் சரி, வைத்துக்கொள்ளாவிட்டாலும் சரி, பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் அபிவிருத்தியை அறிந்த எவரும் அது வியர்த்தமான வியவகாரப் பேச்சு என்று சொல்லக் கூடும். இதற்கு முன் பூர்ணமான பிரிடம் ஆதீனமாக இருந்த பிரிடிஷ் குடியேற்ற நாடுகள் இன்று சுதந்திரமும், சுய ஆட்சியும் பெற்றிருக்கின்றனவா? இந்த இரண்டு அவியக்தமான பதங்களுக்கும் உள்ள வித்யாசத்தை குறிப்பாக என்னால் சொல்லமுடியாது.

குடியேற்ற நாடுகளுக்குள் நிலைபெறும் சம்பந்தங்கள் அயல்நாட்டிலுள்ள என்னுடைய ஸ்நேகிதர்களுக்குப் புதிர் போலிருக்கின்றன. தெற்கு ஆபிரிக்காவின் பிரதம மந்திரி தென் மேற்கு ஆபிரிக்காவில் மாண்டேட்டை ரத்து செய்துவிடவேண்டுமென்று சிபார்சு செய்தபொழுது ந்யூஸிலாந்தின் பிரதம மந்திரி இந்த யோசனையை ஒழுங்கீனமுள்ளதென்று தள்ளிவிட்டார். இது ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்குமுள்ள விரோதபாவத்தை வெளிப்படுத்துகிறதில்லையா என்று என்னை அநேகர் கேட்கிறார்கள்.

இந்த வியாக்யானத்தில் இரண்டு தவறான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த இருவர்களுக்குள் ஒரு குறிப்பிட்ட பிரச்னையில் வித்யாசமிருக்கலாமென்றும், ஆகிலும் அடிப்படையாக உள்ள ஒற்றுமையில் அவர்களுக்குள் வித்யாசம் ஏற்படவில்லை என்றும் வியாக்யானிகள் அறியவில்லை.

மற்றொன்று மிகவும் முக்கியமானது. ஜெனரல் ஸ்மட்ஸின் யோசனை ஒழுங்கற்றதென்று மிஸ்டர் பிரேசர் சொன்னதிலிருந்து நியூஸிலாந்து நிர்வாகம் தென்மேற்கு ஆபிரிக்காவிலுள்ள மாண்டேட்டை ரத்து செய்ய ஆக்ஷேபிக்கிறதென்று பொருள்படாது. அதைப்பற்றி நான் நிச்சயமாக ஒன்றும் கூறமுடியாது. மிஸ்டர் பிரேசரின் முடிவான அபிப்பிராயம் அவருடைய நிர்வாகத்தின் தூண்டுதலை ஆதாரமாகக் கொண்டதில்லையென்று எனக்குத் தெரியும். சபையின் தலைவர் என்ற ஹோதாவிலும், தன்னுடைய தேசத்தின் கொள்கை, விருப்பங்களை மதிக்காமல் மகாநாட்டின் சட்டதிட்டங்களின் படிக்கும் ஒரு ஒழுங்கு பிரச்னையைப்பற்றி முடிவு சொல்லவேண்டிய உத்தியோகஸ்தர் என்ற தோரணையிலும் அவர் முடிவான அபிப்பிராயம் கூறினார்.

சாஸனத்தில் குறிப்பான ஒரு ஷரத்தை அமைப்பதைவிட இந்த மனப்பான்மைதான் உலக ஸ்தாபனத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியத்வமுள்ளது.

---

## வெனிசியா குயாலியாவில் நேசதேச ஆக்கிரமணம்.

### பெல்கிரேட்டில் ஒப்பந்தம்.

(டைம்ஸ் பத்திரிகை.)

இதாலி மாகாணமான வெனிசியா குயாலியாவைப்பற்றி அமெரிக்க, பிரிடிஷ், யூகோஸ்லாவிய நிர்வாகங்களுடைய பிரதிநிதிகளுக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டதென்பதிலிருந்து கவலைக்கு இடமாகவும் அபாயம் விளைவிக்கக்கூடியதுமான ஒரு நிலைமையில் உடன் காலத்தில் தெளிவு ஏற்பட்டுவிட்டது.

பெல்கிரேடில் கையெழுத்தான ஒப்பந்தப்படி, இதாலியர்களுக்கும் யூகோஸ்லாவியர்களுக்கும் வெகுகாலமாக விரோதத்துக்குக் காரணமாக இருந்த டிரீஸ்டி என்ற கடற்கரை



நகரம் உள்பட மாகாணத்தின் மேற்கு பாகத்தை பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டரிடமுள்ள நேசதேசப்படைகள் ராணுவ முறையில் ஆக்கிரமித்துவிடும். அதன் கிழக்குபாகம் யூகோஸ்லாவியாவின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும். ஆஸ்திரியாவுடன் ரஸ்தா, இருப்புப் பாதை சம்பந்தமான போக்குவரத்துகளும், ரோலா போன்ற துறைமுகங்களுக்கு நேசதேச யுத்தக்கப்பல்களும் சாமான் கப்பல்களும் செல்லுவதற்கு சாதகங்களும் இதன் மூலம் கிடைத்து விட்டன.

அந்த மாகாணத்திலும் டிரிஸ்டிக்குள்ளும் மார்ஷல் டிடோவின் படைகள் நுழைந்ததிலிருந்து குழப்பம் ஏற்பட்டபொழுது யூகோஸ்லாவியா போலீஸும் பத்திரத்துக்கான துருப்புகளும் அப்புறப்படுத்தின. எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த இதாலியர்களையும் விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பிரிடிஷ், அமெரிக்கா, யூகோஸ்லாவிய வட்டாரங்களுக்குட்பட்ட தனிப்பட்ட பிரதேசங்களை நடத்தும் முறையைப்பற்றி ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்தும் காணப்படவில்லை. ஆனால் அதை நடத்தும் முறையானது இதாலிக்கும் 1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம்வரையும் அதனுடன் போர்புரிந்து வந்த வல்லரசுகளுக்கும் ஏற்படக்கூடிய ஒப்பந்தத்தின் சமாதான விவாதங்களுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். டிரிஸ்டி தீவும் அதைச் சேர்ந்த நாடுகளின் பிரச்னையும் சிக்கலானது. பொருளாதார, ஜனசமூக, ராணுவ, ஜாதிசம்பந்தமாக உள்ள அநேக அம்சங்களை இறுதிமுடிவுக்கு பொறுப்புள்ள ராஜதந்திரிகளின் ஆலோசகர்கள் நன்கு கவனித்து மதித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு காரியத்தை சாதித்துக்கொள்ள பலாத்காரத்தை உபயோகித்து வருவது என்ற காட்டுமிராண்டித்தனமான முறையை இவைபோன்ற பிரச்னைகளைத் தீர்க்கக் கையாளக்கூடாதென்பதற்கு இது உபரியான வாதமாகும். வெனிசியா குயாலியாவின் இறுதி கதி எவ்விதமிருப்பினும் தேசசம்பந்தமான விவகாரங்கள் எதிர்கால சமாதான மகாநாட்டின் முடிவுப்படி தீர்க்கவேண்டுமென்பதை பிரிடிஷ், அமெரிக்க நிர்வாகங்கள் வெற்றிகரமாக வற்புறுத்துகின்றனவென்பதை தற்போதைய ஒப்பந்தம் வெளிப்படுத்துகிறது.

---

## ஜப்பானிய விமானப்படை நொருங்கிவருகிறது.

*E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்.*

நேசதேச விமான சக்தியைப்பற்றி ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் கவலை ஞாயமானதென்று வெளியாகிவருகிறது.

கனமான வெடி விமானங்கள் தாக்கி அழிக்காதபடி நிர்வாக மத்திய நிலயங்களையும் உற்பத்தி நிலயங்களையும் ரக்ஷிக்க ஜப்பானியர்கள் யாதொரு திட்டத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. B-29 என்ற சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் டோக்கியோவையும் பெரிய தொழிற்சாலை பிரதேசங்களையும் 1,000 மைல்களுக்கு அப்பாலுள்ள தளங்களிலிருந்து அழித்துவருகின்றன.

பலமான தாக்குதல் ஏற்படுமென்றும் ஜப்பானிய விமான தற்காப்புக்குப் போதுமான எச்சரிக்கை கிடைத்தது. அதன் சண்டை விமானங்களை ரசனை செய்து போருக்கு அனுப்ப அதற்குப் போதுமான அவகாசமிருந்துவந்தது. இந்தத் தற்காப்பு திட்டம் பயன்படவில்லை.

இரண்டு வகையில் அது பயன்படவில்லை. B-29 விமானங்கள் வெடிகுண்டு வீசுவதை அது தடுக்க முடியவில்லை. இது மன்னிக்கக்கூடிய காரியம் என்று சொல்லலாம். ஆனால் ஜப்பானிய சண்டை விமானங்களும் B-29 விமானங்களை அழிக்கமுடியவில்லை. எந்த கட்டத்திலும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு அதனால் அதிக நஷ்டமேற்பட்டதென்று அறிந்து அந்த நடவடிக்கையை நிறுத்திவிடவில்லை.

மேலும் 1940-ம் வருஷம் பிரிடனுக்காக நடைபெற்ற போரில் பிரிடிஷ் சண்டை விமானங்களுக்குக் கிடைத்த வெற்றிக்கு ஒப்பிடக்கூடிய எந்த வெற்றியையும் ஜப்பானிய சண்டை விமானங்கள் பெறவில்லை. அமெரிக்க விமான நடவடிக்கையைத் தடுக்கவோ அல்லது வேறுபக்கம் திருப்பவோ, ஜப்பானிய சண்டை விமானங்களுக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகளுக்கும் போதுமான சக்தி கிடையாது.

தாய் நாட்டின் தற்காப்பிற்காக ஜப்பானிடமுள்ள எல்லா சண்டை விமானங்களையும் அது ஒன்று திரட்டி அமெரிக்க வெடி விமான நடவடிக்கையை எதிர்த்துப் போராடி

யிருக்கலாம். 1940-ம் வருஷத்தில் பிரிடன் இந்த முறையைக் கையாண்டுவந்தது. 1943, 1944-ம் வருஷங்களில் ஜெர்மனி இம்முறையைப் பின்பற்றியது. ஜப்பானைத் தற்காப்பு செய்வது முக்கியமென்று கருதி ஜப்பான் அவ்விதம் செய்திருந்தால் ஆக்கிரமிப்பு நாடு களிலுள்ள படைகளுக்கும் கடற்படைக்கும் விமான ரக்ஷணையில்லாமல் போயிருக்கும். ஜெர்மானியர்கள் 1942-ம் வருஷத்தில் செய்ததுபோல ஜப்பானும் லாபங்களை இழக்க சம்மதப்படவில்லை.

உள் வட்டாரத்தைத் தற்காப்பு செய்வதற்காக தூரத்திலுள்ள ஆக்கிரமிப்பு ஸ்தானங் களிலிருந்து விமானப்படைகளை ஜப்பான் அப்புறப்படுத்திவருகிறதென்பது உண்மைதான். ஆகிலும் ஜப்பான் கைவசமுள்ள விமானங்களை தற்காப்புக்கு வைத்துக்கொள்ளாமல் முன்னேறித் தாக்க உபயோகித்துவருகிறது.

ஆறு மாதங்களுக்குமுன் ஜப்பான் உறுதியுடன் எதிர்த்துப் போராடியிருந்தால் ஜப்பானுக்கு முன்னேறித் தாக்கும் சக்தி நிலைபெற்றிருந்திருக்கும். ஆனால் இப்பொழுது தற்காப்புக்காக ஏற்பாடற்ற முறையில் முன்னேறித் தாக்குவதில் யாதொரு பிரயோஜனமு மில்லை.

அப்பேர்ப்பட்ட தாக்குதல் யுத்த தந்திர முறையில்தான் இருக்கக்கூடும். விமானங்கள் போரிலீடுபெட்டிருக்கும் விமானங்கள், கப்பல்கள், ராணுவ முஸ்தீப்புகளைத்தான் அழிக்க முயன்றுவருகின்றன. விமானங்கள் சர்ப்பராக்களின் மூலாதாரங்களையும், அல்லது நஷ்ட ஈடு செய்யும் வகையில் வந்துகொண்டிருக்கும் சர்ப்பரா தாரையையும் ஒன்றும் செய்ய முடியாது.

---

## ஜப்பானைத்தாக்க உயர்தரமான முயற்சி.

### தயாரிப்பும், திட்டமும்.

(லெப்டினெண்ட் ஜெனரல் H. G. மார்டின், டெயிலி டெலிகிராப்).

ஜப்பானைத் தாக்கும் யுத்த முயற்சி அதிகரித்து வருகிறதென்று வெளிப்படுத்தக்கூடிய சின்னங்களும், ஊகங்களும் தினசரி காணப்படுகின்றன. பர்மா போர்முனையில் 12-வது சேனை சாம்ராஜ்யப்படைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தென் கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த கிழக்கு ஆசியா கமாண்டு அதிலுள்ள அமெரிக்க அம்சத்தைக்கலைந்து விட்டு பூராவும் பிரிடிஷ் படைகளாக மாறிவிட்டது. இவ்விதமாகக் கூறுபோடும் திட்டம் எல்லா நேசதேசத்தார்களுக்கும் உதவியளிக்கக்கூடும்.

பஸிபிக்கில் அதன் காரணமாக அமெரிக்க விமானப்படையின் பலம் பெருகிவிடும். கிழக்கு விமானப்படை கமாண்டை விட்டு விலகிவந்த அமெரிக்க விமானங்களும், இந்தியாவி லிருந்து புறப்பட்டு வந்த அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்களும் பஸிபிக்குக்கு வந்து விடும். சைனாவிலும் ஜெனரலிஸிமோவுக்கும் ஜெனரல் வெடெமேயருக்கும் அமெரிக்கர்கள் பயில்வித்த அநேக சீன டிவிஷன்களின் உதவி கிடைத்துவிடும். போது மான சாம்ராஜ்ய ஐச்வர்யங்கள் கிடைத்துவிடும் என்று உறுதிபெற்ற அட்மிரல் மௌண்ட் பாடன் தென் கிழக்கு ஆசியா கமாண்டில் முதல் முதலாக ஒன்றுபட்ட கமாண்டின் பல வேறு லாபங்களை அடையக்கூடும்.

விமானப்படைத் தலைவரான மர்ரெ ஹாரிஸ் எழுதியுள்ள "யுத்த தத்வம்" என்ற புத்தகத்தில் கண்டபடி ஐரோப்பாவுக்குக் கடல்தாண்டி ஒருவரை அனுப்ப 17 டன்கள் கப்பலிடம் தேவையென்றும், அவனை பரிபாலிக்க 3, 4 டன்கள் சாமான்கள் தேவையென் றும் இப்பொழுது அட்லாண்டிக்கில் சென்ற ஒரு கப்பலுக்கு பதிலாக பஸிபிக்கில் அமெரிக்கா 3 கப்பல்களை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறதென்றும், மதித்தோமானால், போக்குவரத்து விமானங்கள் எவ்விதம் உதவி செய்தாலும் இந்தியாவுக்கு அனுப்பப்படும் உதவிகளின் தாரை யானது கப்பல்களின் சங்கியைப் பொருத்ததென்று நாம் முடிவு செய்யக்கூடும். ஆகையால் கப்பல்களில் சாமான்களை உத்தம பக்ஷமாக எவ்வளவு, எவ்வகையில் அனுப்பலாமென்பது தான் தற்போதிய பிரச்னையாகும். நஷ்ட ஈடு செய்வதற்காக சில பொருள்களை அனுப்ப வேண்டியது அவசியமென்பதுடன் கீழ்கண்ட வேலைகளையும் கப்பற்படை மேற்கொள்ள வேண்டும். பிரிடிஷ் துருப்புகளின் பூரா டிவிஷன்களையும் கப்பல்களில் ஏற்றிச்செல்ல வேண்டும் அல்லது படைகளை பலப்படுத்துவதற்காக பிரிடிஷ் ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் பட்டாளங்களை ஏற்றிச்செல்லவேண்டும். கிழக்கில் இந்திய சேனையின் வீரமும் இந்தியா வின் மனிதபலமும் அபாரமானவையாதலால் பிரிடிஷ் படைகளைக் குறைத்து விடுவதின்



லாபங்கள் தெளிவானவை. ஆகிலும் இதில் திட்டமான பிரிடிஷ் துருப்புகளே இருக்கக்கூடா தென்ற கொள்கை இருக்கக்கூடாது.

ஆயத்தம், திட்டம் என்ற காலங்களில் தெற்கு பர்மாவிலுள்ள 12-வது சேனை எதிரிப் படைகளைத் துடைப்பதிலும், படைகளைத் திரும்பிப் பயில்விப்பதிலும், புதிய முஸ்தீப்புகளைப் பெறுவதிலும், உதவிப் படைகளை ஒன்று படுத்துவதிலும் கவனம் செலுத்திவரும். இந்தியா போன்ற முன்னணி தளத்திலுள்ள 14-வது சேனை திருத்தியமைக்கப்பட்டு, பயிற்சிபெற்று வேர் ஊன்றிக்கொள்ளும் பிரிடிஷ் மயமாக்கப்பட்ட கிழக்கு விமானப்படை கமாண்டு புதிய படைகளை ஒன்று படுத்தி மறுமுறை பயிற்சி அளிப்பதுடன் ஸியாமிலும், மலேயாவிலு முள்ள ஜப்பானியப்படைகளையும் போக்குவரத்துகளையும் இடைவிடாது தாக்கிவரும்.

இலையுதிர்காலம் வந்து வங்காளவிரிகுடாவில் நிம்மதி ஏற்பட்டு, காடுகளும் உலர்ந்து போகும்பொழுது அடுத்த லக்ஷியத்தை தரை, கடல், ஆகாயம் மூலமாக ஒன்றுபட்டுத் தாக்க ஏராளமான படைகள் தயாராக இருக்கும்.

நமது மூன்று வகைப்பட்ட தாக்குதலில் கடற்படையை நாம் அதிகமாக பொருட் படுத்தவில்லையென்றால் ஒரு பலமான கடற்படை இருந்து வருகிறதென்று நாம் எண்ணி விட்டோம். பஸிபிக்கில் கடற்தளபதி நிமிட்ஸிடம் உள்ள பிரிடிஷ் கடற்படை மூன்று லக்ஷியங்களைப்பெறச் சென்றது. உதவி செய்வது, கடற்படையின் மேன்மையை வெளிப் படுத்துவது, பஸிபிக் போரின் யுத்த தந்திரத்தை ஆராய்ச்சி செய்வது, முக்கியமாக விமானந்தாங்கிகள் மூலம் கப்பல்களைக் கொண்டுபோவது.

இந்த மூன்று காரியங்களையும் சாதித்தபின் பிரிடிஷ் கடற்படை திரும்பிவந்து தென் கிழக்கு ஆசியா கமாண்டுப் படைகளின் நடவடிக்கையிலும் ஆஸ்திரேலியப் படைகளின் நடவடிக்கையிலும் பங்கெடுத்துக்கொள்ளும். மேலும் ஜப்பானிய சமுத்திரங்களில் தோன்றக் கூடிய அவசரமான பிரச்னைகளைத் தீர்க்க அமெரிக்கக் கடற்படை போதுமான பலம் பெற்றி ருக்கிறது. பஸிபிக்கில் அமெரிக்கக் கடற்படை மகத்தான நடவடிக்கையை மேற்கொள்ளு மென்று ஜனாதிபதி ட்ருமென் ஜூன் மாதம் 1-ம் தேதியன்று காங்கிரஸ் சபையில் கூட மாக வெளியிட்டார்

இந்த நேசதேச யுத்த முயற்சியில் பூரணமான பங்கெடுத்துக்கொள்ளுவதற்குத்தான் தென் கிழக்கு ஆசியா கமாண்டு இப்பொழுது தயார் செய்து வருகிறது. எல்லோரும் செய்யவேண்டிய வேலை அபாரமாக இருக்கிறது. இப்பொழுது ஜப்பானிடம் 4 மிலியன் கவசம் பூண்ட படைகளிருக்கின்றன. இன்னும் அநேகம் படைகள் தயாரிக்கப்படும். ஆசியாவில் சமாதானம் நிலவுமுன் 4 மிலியன் துருப்புகளும் பூண்டில்லாமல் அழிக்கப் படவேண்டும்.

ஜப்பானியத் தீவுகளை அமெரிக்கர்கள் தாக்க இரண்டு விரோதமான தந்திரங்கள் நிறுவப் பட்டிருக்கின்றன. ஒன்று தாக்குவது, மற்றொன்று முற்றுகை. இறுதி திட்டம் இவ்விரண் டையும் சமரசப் படுத்தியதாக இருக்கும். படையெடுப்பை பெரும்பாலும் ஒத்திவைக்கும்படி நேரிடும். இதே சமயத்தில் ஜப்பான் படைகளைத் திரட்டி ஒன்றுபடுத்துவதினால் ஏற்படும் தீங்கைக் குறைப்பதற்காக ஜப்பானியத் தொழிற்சாலைகளை அழித்துவிடவும் முற்றுகையை பலப்படுத்தவும் அமெரிக்க பஸிபிக் கமாண்டு சகல விதமான முயற்சிகளையும் செய்துவரும்.

ஜப்பானியத் தொழிற்சாலைகளை விமான பலத்தினால் தற்காப்பு செய்வதென்பது சுலப மானதல்ல. தொழிற்சாலைகளை அமைத்தபொழுது விமானத்தாக்குதல் ஏற்படுமென்று ஜப்பான் எதிர் பார்க்கவில்லை. மேலும் அமைக்கப்பட்ட கனமான தொழிற்சாலைகளை அப் புறப்படுத்தி வேறு இடத்தில் அமைப்பதென்பது சிரமசாத்யமான காரியமாகும். ஜப்பா னில் விமான உற்பத்திபோன்ற லேசான தொழிற்சாலைகளையும் சுலபமாக ரக்ஷிக்க முடியாது. தளவாட உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் கடல் போக்குவரத்தை நம்பியிருக்கின்றன. கடற்கரை பிரதேசங் களில் தொழிற்சாலைகள் சீர்படுத்தப்பட்ட ஸ்தலங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஜலம் தரை மட்டத்திலிருப்பதினால் பூமியின் தாழ்வரைக்குள் வெகுதூரம் செல்ல முடியாது. தொழிற்சாலைகளை உள்நாட்டுக்கும் கொண்டுபோக முடியாது. இருப்புப் பாதை அமைப்பு போதுமானதல்ல, மலை பிராந்தியங்களிலுள்ள ரஸ்தா போக்குவரத்து களும் திருப்திகரமாக அமைக்கப்படவில்லை.

ஜப்பானிய உற்பத்திகளை மஞ்சூரியாவிலுள்ள கனமான தொழிற்சாலைகள் ஈடுசெய்ய முடியாது. பெரும்பாலும், மஞ்சூரியாவிலுள்ள தொழிற்சாலைசாலைகள் இரும்புக்கட்டி

அல்லது எஃகுக்கட்டிபோன்ற அரைகுறை பக்குவமான பொருள்களைத்தான் உற்பத்தி செய்கின்றன. ஆக்கப்பட்ட பொருள்கள் ஜப்பானில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வடக்கு போர்னியோவிலுள்ள எண்ணெய் பிரதேசங்களை ஜப்பான் இழந்து விட்டதி ஞல், ஷெல் எண்ணெயிலிருந்தும் நிலக்கரியிலிருந்தும் எடுக்கப்படும். உள்ள சேர்க்கை எண்ணெய் ஜப்பானின் யுத்த முயற்சிக்கு மிகவும் அத்யாவசியமானது. மஞ்சூரியாவில் அடுத்த படியாக மஞ்சூரியாவிலிருந்து ஸோயாபீன் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் ஜப்பானிடம் 90 சதவிகிதம் போதுமான உணவுப்பொருள்கள் இருக்கின்றன.

ஜப்பானிலிருந்து மஞ்சூரியாவிலிருக்கும் கொரியாவுக்கும் செல்லும் கடல் மார்க்கங் களைத் துணிப்பதுதான் முதல்தரமான அவசியமான வேலையாகும். இதற்காக உள்நாட்டுக் கடல்களில் சுரங்கவெடிகளைப் பாவுவதின் மூலம் அதிக பயன்கிடைத்து வருகிறது. ஹொனில் ஜப்பானியக் கப்பல்கள் இப்பொழுது மேற்குப் பக்கத்தை விட்டு விட்டு கிழக்குப் பக்கத்தி லுள்ள துறைமுகங்களுக்குச் சென்றுவிட்டன. அங்கு இருப்புப் பாதைகளும் சொல்ப மாகத்தானிருக்கின்றன.

## தூரக்கிழக்கில் நேசதேசத்தாரின் மூவகைப்பட்ட தாக்குதல்.

### ஜப்பானின் தற்காப்புகளின் பலஹீனம்.

**லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌனிக்.**

வாலிபம் முதற்கொண்டே பிரிடிஷ் சேனையிலுள்ள ஆபீஸர்கள் ராணுவ திட்டத்தை நிறுவுமுன் எதிரியின் ஸ்தானத்தை மதித்துப் பார்க்கப் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். எதிரியின் முன்னேற்றத்தின் திசையை அறிந்துகொள்ளாமல் எந்தச்சிறிய ஆபீஸரும் அதைத் வெட்டுவதற்கு பிரதேசத்தைத் தேர்ந்தெடுக்கமாட்டார். எதிரி எந்த மார்க்கமாக வந்து பதில் தாக்குதலைச் செய்யக்கூடுமென்று நிர்ணயம் செய்யாமல் எதிரியின் பலமான தற்காப்பு களைத் தாக்கும் திட்டத்தை நிறுவ எந்த ஜெனரலும் துணிவுகொள்ளமாட்டான். ஆகையால் இப்பொழுது நான் கடற்தளபதி குசுகி ஸ்தானத்திலிருந்துகொண்டு, அவரும் ஜப்பானிய ராணுவத் தலைவர்களும் ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் எதிர்கால ஆபத்தைத் தடுக்க என்ன நடவடிக்கையை மேற்கொள்ளுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

பசிபிக்கில் அமெரிக்காவின் இரண்டு தாக்குதல்களையும் ஜப்பானைக் குறித்து காட்டப் படும் இரண்டு பெரிய உறைவாள்கள் என்று சொல்லலாம். ஒன்றின் கைப்பிடி பிலிப் பைன்ஸிலும் கூர்மையான பாகம் ஆகிஞவாவிலுமிருந்து வருகிறது. 1,000 மைல்கள் தாண்டியுள்ள மற்றொரு உறைவாளின் கைபிடி மாரியனாஸ் தீவிலும் நுனிபாகம் ஐவோஜிமா விலுமிருந்து வருகிறது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் இப்பொழுது சுறுசுறுப்பாக நடை பெறுகின்றன. ஆகிலும் ஜப்பானைக் கொல்ல உறைவாளைப் பலமாகக் குத்துமுன் அமெரிக்கர் களின் இருகரங்களும் சமீபத்தில் நெருங்கிவரவேண்டும்.

இதேசமயத்தில் கடற்தளபதி லூயி மௌண்ட் பேடன் பிரபுவிடமுள்ள மூன்றுவது உறைவாள் தென்கிழக்கு ஆசியாவில் எதிரியின் தற்காப்பைப் பிளந்து ரெங்கூனை எட்டிவிட் டது. வெகுசீக்கிரத்தில் அங்கிருந்து அதிக முன்னேற்றம் ஏற்படக்கூடும்.

மேலே சொல்லியவைதான் அபாயங்களும் இயல்புகளும். இதைத் தடுக்க ஜப்பான் என்ன உபாயங்களைக் கையாளக்கூடும்?

நவீன யுத்தத்தில் ஒரு வல்லரசின் யுத்த தளவாட சாலையில் நான்கு முக்கியமான ஆயுதங்களிருக்கின்றன. ஒன்று கடற்படை, இரண்டாவது தரைப்படை, மூன்றுவது விமானப்படை, நான்காவது யுத்த தளவாட உற்பத்திசாலைகள். குசிகி என்ற முறையில் நாம் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்வோம்.

ஜப்பானியக் கடற்படை சரியான முறையில் உபயோகிக்கப்படவில்லை. பவழக்கடல் போரிலிருந்து பிலிப்பைன்ஸைச் சுற்றி நடைபெற்ற கடல் போர்கள் வரையில் ஒவ்வொன்றி லும் ஜப்பானியக் கடற்படை தோல்வியடைந்திருக்கிறது.

தீவாக உள்ள வல்லரசின் கடற்படையானது கடல் மூலமான சர்ப்பரா மார்க்கங்களைக் கடந்து செல்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்பதை ஜப்பானியர்கள் மறந்து விட்டார்கள். அதற்குப் பதிலாக படையெடுக்கும் சேனைகளுக்குத் துணைக்காவலாக ஜப்பான் கடற்படையை உபயோகித்து வந்தது. அந்தத் தவறுதல்களின் பயனை ஜப்பான் அநுபவித்து



விட்டது. ஆகிலும் நவீன யுத்தத்தில் கடல்மார்க்கங்களை கப்பல்கள் மட்டும் இல்லாமல் கடற்படையும் விமானப்படையும் ஒன்று சேர்ந்துதான் கடந்து காபந்து செய்துவர வேண்டும்.

ஜப்பானிய விமானப்படையும் பெருவாரியாக நஷ்டத்துக்குள்ளாகிவிட்டது. ஆகிலும் ஜப்பானியத் தொழிற்சாலைகள் ஒவ்வொரு மாதமும் 1,000 விமானங்களைக் கட்டிமுடிக்க சக்தி யுள்ளவை. பிரிடனும் அமெரிக்காவும் தகுதியான இடங்களில் ஒன்றுபட்ட பலத்தைப் பெருக்கிவிட்டால், ஜப்பானின் உற்பத்தி அளவு நேசதேசத்தாரின் பலத்தை சமாளிக்க முடியாது. ஏதன் மத்தியில் நான் எதிர்பாராத, முக்கியமான ஒரு அபிவிருத்தியைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது.

தரையிலுள்ள ஜப்பானியச் சண்டை விமானங்களை விமானந்தாங்கிகளிலிருந்து செல்லும் அமெரிக்க விமானங்கள் அடிக்கடி முறியடித்து வருகின்றன. சமீபத்திலுள்ள தரை தளங் களிலிருந்து நேசதேச சண்டை விமானங்கள் விமான நடவடிக்கையில் அதிகப் பங்கெடுத்துக் கொள்ளும்பொழுது ஜப்பானிய விமானப்படைக்கு நாசகாலம் வந்துவிடுமென்று சொல்லலாம். சுருங்கச்சொன்னுல், ஜப்பானியக் கடற்படை பலம் குறைந்து வருகிறது.

மூன்றுவது சாதகமான ஜப்பானிய சேனை நல்ல நிலைமையிலிருந்து வருகிறது .4 மிலியன் ஜனங்கள் சேனையிலிருக்கிறார்கள். ஆயுதங்கள் கிடைத்துவிட்டால் ஜப்பானிலுள்ள 100-மிலியன் ஜனத்தொகையிலிருந்து அது எவ்வளவு படைகளை வேண்டுமானுலும் திரட்டக்கூடும். ஆனுல் இந்த சேனை பல்வேறு இடங்களில், ஜப்பானிலும், கொரியாவிலும், மஞ்சூரியாவிலும், சைனுவிலும், சுமத்திராவிலிருந்து ஸாலமன்ஸ்வரையிலுள்ள தீவுக்கூட்டங்கள் ஒவ்வொன்றி லும் இருந்து வருகிறது.

அடுத்தபடியாக ஜப்பானின் உற்பத்தி சக்தியைக் கவனிப்போம். ஜப்பான் படைகளை போஷிக்கமுடியுமா? அதற்கு ஆசியாவிலிருந்து இயற்கைப்பொருள்கள் நிகுதியாக ஜப்பானுக்கு வந்துகொண்டிருக்கவேண்டும். அல்லது தொழிற்சாலைகளை மஞ்சூரியாவிலிருந்தும் கொரியா விலிருந்தும் ஜப்பானுக்குக் கொண்டுபோகவேண்டும். எந்நிலைமையிலும் தாதுப்பொருள் களும் ஆக்கப்பட்டபொருள்களும் குஷிமா ஜலசந்தியையும் கோமாவெயும் சைனுவிலிருந்து நீண்டகடல் மார்க்கமாகச்சென்று தாண்டிச்சென்று கொண்டுபோகவேண்டும். ஆகிலும் அதன் கடற்படை சுருங்கிவிட்டதினுல் ஒரு சிறிது காலம்தான் குஷிமா ஜலசந்தியை அது காபந்து செய்துவர முடியும். சைனுவிலிருந்து செல்லும் கடல்பிரயாணம் மிகவும் அபாயம் பொருந்தியதாக ஆகிவிடும்.

ஆகையால் சோர்வுற்றிருந்திருக்கும் குசுகிக்கு 100 மைல் நீளமுள்ள குஷிமா ஜலசந்தி ஒரு முக்கியமான ஜீவனுடி என்று புலப்படுகிறது. இந்த ரத்தநாடியைத் துணித்துவிட்டால் ஜப்பானுக்கு ரத்தப்பெருக்கு உண்டாகி இறந்துவிடும். எதிர்கால நடவடிக்கையை விமர்சனம் செய்யும்பொழுது நாம் இதை மனதில் இறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். தெற்கில் சீனர்களுக்கு வெற்றி கிடைத்து வரலாம். அவர்களுக்கு நானிங்கிலும் பூசௌவிலும் வெற்றிகள் கிடைத்து வருகின்றன. ஜப்பானின் தொழிற்சாலை நகரங்களை அமெரிக்கர் அழித்து விடலாம். பிரிடன் மலேயா, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், பிரெஞ்சு இந்தோ-சைனுவைத் திரும்பப்பிடிக்கலாம். ஆகிலும் அவைகள் இறுதி லக்ஷியமான குஷிமா ஜலசந்திக்குச் செல்லும் முக்கியமான நடவடிக்கைகள்தான். இந்த ஜலசந்தியில்தான் ஸாரின் கடற்படை 40 வருஷங்களுக்குமுன் கடற்தளபதி டோகோவிடம் படு தோல்வி அடைந்தது.

## சைனுவிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கு அபாயம்.

### எதிரியின் பதில் தாக்குதல்களின் நிகழ்ச்சி.

**யார்க் ஷையர் போஸ்டின் ராணுவ நிருபர்.**

ஆசியா கண்டத்தில் வருங்காலத்திய போருக்காக சீனப் படைகளை பலப்படுத்தும் நட வடிக்கை வெற்றிகரமாக முன்னேறி வருகிறது. ஜெர்மனி போரை நடத்திவந்தபொழுது அனுப்பமுடியாதிருந்த யுத்த தளவாடங்கள் ஏராளமாக இப்பொழுது விமானமூலம் சியாங்க் கேஷேக்கின் துருப்புகளுக்கு அனுப்பப்படுகின்றன. சைனுவுக்கு விமானங்களின் உதவியும் அதிகரித்து வருகிறது.

சமீப காலத்தில் அமெரிக்கப் படைகள் சைனுவுக்கு வந்துவிட்டதினுல் சைனுவின் பீரங்கி சக்தியும் அதிகரித்துவிடும். சைனுவில் பீரங்கிகள் சொற்பமாகத்தானிருக்கின்றன. அவை

களுக்கு வெடிமருந்துகளும் கிடையாது. சீனப்படையின் இந்த அமசத்தில் மாறுதல் ஏற்பட்டுவருகிறது. இந்த மாறுதலை எதிரி ஏற்கனவே உணர்ந்துவிட்டான். அவனுடைய படைகள் தற்காப்புப் போரை நடத்திக்கொண்டு அடிக்கடி பின்வாங்கி ஓடுகின்றன.

சீனர்கள் முன்னேறி பார்மோசாவுக்கு எதிர்த்தாற்போலுள்ள கடற்கரையில் 100 மைல்கள்கொண்ட பிரதேசத்தைப் பிடித்துவிட்டார்கள். தேசப் படத்தைப் பார்த்தால் இந்த மாறுதலின் முக்கியத்வம் புலப்படும். அது நேசதேசத்தார்களுக்கு ஒரு கஷ்ட சாத்யமான வட்டாரத்தில் அடிவைக்க முன்னேறும் வாசலைத் தருவதுடன் இருவகைப்பட்ட நடவடிக்கைக்கும் அது சாதகமளிக்கும். பார்மோசாவுக்கு இப்பொழுது பேராபத்துண்டாகி யிருக்கிறது. இந்தத் தீவும் நமது வசமாகிவிட்டால் ஹாங்காங்கை வெகு சுலபமாகப் பிடித்து விடலாம்.

சைனாவில் நேசதேச நடவடிக்கையை எதிர்த்துப் போராட ஜப்பானுக்கு மூன்று லக்ஷியங்கள் உண்டு. (1) இந்தோ-சைனாவுக்கும் ஹாங்காங்குக்கும் மத்தியிலுள்ள கடற்கரையில் பத்திரமாக வேரூன்றி நிற்பது. (2) முன்னணி தளங்களிலிருந்து எல்லா அமெரிக்கப் படைகளையும் தாக்கிப் பின்புறமாகத் துரத்தியடிப்பது. (3) நேசதேசத்தார்களுக்கும் சீனப்படைகளுக்கும் மத்தியில் பெரும் படைகளை வைத்திருப்பது. இந்த முயற்சியில் எதிரிக்கு வெற்றி கிடைக்கவில்லை. பர்மாவிலிருந்து லாயி மௌண்ட் பேடனின் படைகள் முன்னேறும் வரையிலும், அமெரிக்கப் படைகள் கடற்கரையில் இறங்கும் வரையிலும் இந்த அபாயம் இருந்தே தீரும்.

இப்பொழுது பார்மோசாவிலிருந்து ஜப்பான் வரையிலுள்ள தீவுக்கோர்வையை சுத்தி செய்வதில்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கடற்தளபதி ஸர் ப்ரூஸ் பிரேசர் சங்கிலியின் தெற்குக் கோடியிலுள்ள சாகிஷிமாவைத் தாக்கி வருகிறார். ஜெனரல் மாக் ஆர்தர் மத்தியிலுள்ள ஆகினாவாவையைச் சுத்திசெய்துவருகிறார். கடற்தளபதி நிமிட்ஸ் தீவுக் கோர்வையின் வடக்குக் கோடியில் கவனம் செலுத்திவருகிறார்.

---

# விமான மூலம் சர்ப்பரா அபிவிருத்தி.

## பர்மாவில் படைகளை சலனம் செய்வது.

**விங்க் கமான்டர் L. V. பிரேசர்.**

மிகவும் பரிஷ்காரமாக ஒன்றுசேர்க்கப்பட்ட நேசதேச கிழக்கு விமானப்படை கமாண்டு கலைக்கப்பட்டுவிட்டது. அதன் வேலையும் பூர்த்தியாகிவிட்டது. 18 மாத நடவடிக்கையில் அந்த விமானப்படை சைனாவுக்குப் போகும் ஸப்ளை மார்க்கத்தைத் திறந்த மனிதர்களுக்கு விமானத் தாக்குதலிலிருந்து ரக்ஷணையும் சர்ப்பராக்களையும் அனுப்பிவந்தது. ஆகாயத்தில் ஜப்பானிய விமானப்படை தோன்றுமலும் விரட்டியடித்து வந்தது.

உயர்தர நேசதேச கமாண்டரான கடற்தளபதி லாயி மௌண்ட் பேடன் பிரபுவின் உத்தரவுப்படி இந்த விமானப்படை கமாண்டு 1913-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது, முதலில் ஸர் ரிச்சர்ட் பியர்ஸ், அதன்பின் ஸர் கீத்பார்க் என்ற நேச விமானப்படை உயர்தர அதிகாரியின் கீழும் மேஜர் ஜெனரல் G. E. ஸ்டாடெமேயரின் நேர்முகமான அதிகாரத்துக்கும் உட்பட்டிருந்த கிழக்கு விமானப்படை கமாண்டின் அமெரிக்க விமானப்படை எதிர்பார்த்ததற்கு அதிகமான காரியங்களை சாதித்துவிட்டது.

விமானங்கள்மூலம் சர்ப்பராக்களை வழங்குவதுதான் அதன் மகத்தான சேவையாகும். போரின் மற்ற எந்த பிராந்தியத்திலும் நேசதேசப்படைகளுக்கு இவ்வளவு ஒத்தாசை விமானமூலம் கிடைக்கவில்லை. அமெரிக்க, பிரிடிஷ், கனடியா சர்ப்பரா விமானங்கள் இம்பாலிலிருந்து ரெங்கூனுக்குச் சென்ற 1,000 மைல்கள் பிரயாணத்திலும் பிரிடிஷ் 14-வது சேனைக்கு ஸப்ளைகளை வழங்கிவந்தன. விமானங்கள் அடுத்தபடியாக நடவடிக்கையைத் துவக்கக்கூடிய இடத்துக்கு, சேனைகளை நூற்றுக்கணக்கான மைல்கள் தூக்கிச் சென்று, ஸப்ளைகள் ரஸ்தா மார்க்கமாகக் கிடைக்கக்கூடாத இடத்தில் அவர்களை இறக்கிவிட்டு அவர்களுக்கு பெட்ரோல், தண்ணீர், ஆகாரம், வெடிமருந்து, ஜீப்புகள், பீரங்கிகள், வைத்திய மருந்துகள் முதலிய எல்லாவற்றையும் ஸப்ளை செய்துவந்தன.

கிழக்கு விமானப்படை கமாண்ட் ஸ்தாபிக்கப்பட்டபொழுது பர்மாவுக்கு ஸப்ளைகளைக் கொண்டுபோக ஜப்பானிடம் ரங்கூன் ஒன்றுதான் இருந்தது. நேசதேச தரைப்படைகள் வடமேற்கில் ஹிமாலயத்திலிருந்து ரங்கூன் வரைக்கும் பரவியிருந்த மலைகளைத்தாண்டி பர்மாவுக்குள் செல்லவேண்டியிருந்தது. இந்த மலைகள் கிழக்கு இந்தியாவுக்கு தற்காப்பு



அரண் என்பதுடன் பர்மாவுக்குள் நுழைவதற்கும் தடங்கலாக இருந்தன. பர்மாவைப் படையெடுக்கும் எந்த சேனையும் வடக்கிலிருந்து முன்னேறவில்லை. 14-வது சேனைதான் அவ்விதம் செய்தது. இதற்கு விமானப்படைதான் சாதகமளித்து வந்தது.

கிழக்கு விமானப்படை கமாண்ட் ஸ்தாபிக்கப்பட்டபின் இரண்டு மாதங்களுக்குள்ளாகவே முதல் பரிக்ஷை காலம் வந்தது. ஜப்பானின் கபடமான முன்னேற்ற நடவடிக்கை மூலம் அரகானில் துணிக்கப்பட்ட இரண்டு டிவிஷன்கள் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டன. தரை மார்க்கமான ஸப்ளை மார்க்கமும் துணிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் இதற்குமுன் நடைபெற்ற போர்களில் படைகள் பின்வாங்கியிருக்கும் அல்லது நிர்மூலமாக்கப் பட்டிருக்கும். 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் பிரிடிஷ், இந்தியத் துருப்புகள் தற்காப்புச் செய்துகொண்டு போரை நடத்திவந்தன. நேசதேச விமானிகள் டாகோடா விமானங்கள்மூலம் 1,500 டன்கள் எடையுள்ள சர்ப்பராக்களை குடைகள்மூலம் படைகளுக்குத் தள்ளின.

ஜப்பானியர்கள் இந்த நடவடிக்கையை எதிர்பார்க்கவில்லை. ஜப்பானியர்களின் முன்னேற்றம் தடைபட்டது. போரில் முறியடிக்கப்பட்டார்கள். 7,000 பேர்கள் நஷ்டத்துடன் ஜப்பானியர்கள் பின்வாங்கினார்கள். பர்மாவை விடுவிப்பதற்குப் படைகளை அனுப்பும் சிரமத்தை இது ஒருவாறு தீர்த்துவிட்டது.

அரகானில் ஏற்பட்ட அனுபவம் ஆறு வாரங்களுக்குப்பின் இம்பால் முற்றுகை செய்யப்பட்டபொழுது மறுபடியும் உபயோகப்பட்டது. இம்பாலிலும், கோஹிமாவிலும் வளைக்கப்பட்டிருந்த தரைப்படைகள் சர்ப்பராகளுக்கு கிழக்கு விமானப்படை கமாண்டை நம்பியிருந்தன. அங்கிருந்த 50,000 போர் புரியாத துருப்புகளும்பொதுமக்களும் வெளியே எடுத்துச் செல்லப் பட்டார்கள். நல்ல முஸ்தீப்புகளுள்ள இரண்டு டிவிஷன் படைகள் அங்கு கொண்டுபோய் இறக்கப்பட்டன, வெல்லிங்டன் விமானங்கள் மட்டும் இம்பாலிலுள்ள சண்டை வெடி விமானங்களுக்கு 1 மிலியன் ராத்தல் மொத்த எடையுள்ள வெடிகுண்டுகளைக்கொண்டு போய்ச் சேர்த்தன.

துருப்புகளுக்கு 1,43,17,000 ராத்தல்கள்கொண்ட உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டன. அவற்றில் 423 டன்கள் சர்க்கரையும், 919 டன்கள் தானியங்களும் கொண்டுபோகப் பட்டன. 5,000 உயிருள்ள கோழிக் குஞ்சுகளும், 27,500 முட்டைகளும் ஆஸ்பத்திரிகளின் உபயோகத்திற்காகக் கொண்டுபோகப்பட்டன. அதைபோல 52,50,000 வைடமின் மாத்திரைகளும், 1,303 டன்கள் கால்நடைத்தீவனமும், 8,35,000 காலன்கள் எண்ணெயும் 43 மிலியன் சிகரெட்டுகளும் கொண்டுபோகப்பட்டன.

இம்பாலிலிலும் அரக்கானிலும் தற்காப்பு முறையில் செய்த இந்த பேருதவியைக்கண்ட தென்கிழக்கு ஆசியா கமாண்டின் தலைவர்கள் இதை முன்னேறித்தாக்கவும் உபயோகிக்கலாமென்று முடிவு செய்தார்கள். ஆகையால் ரங்கூன் பேரில் படையெடுப்பு ஆரம்பிக்கப் பட்டது. விமானப்படை சேனையை பரிபாலித்து வந்தது. சேனைக்குத் தேவையான சக்தியை அது கொடுத்துவந்தது. சண்டை விமானங்கள் எதிரியின் முன்னணித் துருப்புகள் அளித்துவந்தன.

1944-ம் வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து 1945-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முடிய கிழக்கு விமானப்படை கமாண்டைச் சேர்ந்த போக்குவரத்து விமானங்கள் 5,94,165 டன்கள் மொத்த எடையுள்ள சர்ப்பராக்களையும் வெடிமருந்துகளையும் கொண்டுபோயின. 3,15,120 மனிதர்களும் போர்முனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். மொத்தத்தில் 6,77,748 டன்கள் எடையுள்ள சாமான்கள் கொண்டுபோகப்பட்டன.

கிழக்கு விமானப்படை கமாண்ட் மற்றும் இரண்டு அறிய சேவைகளைச் செய்திருக்கிறது. முதலாவதாக; 1944-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் விங்கெட்டின் கொரில்லாப் படைகள் விமானமூலம் இறக்கப்பட்டன. எஞ்சினியர்களை ஏற்றிச்சென்ற விமானப்படை கமாண்டைச் சேர்ந்த கிளைடர்கள் மலைகளைத்தாண்டி கொண்டுபோகப்பட்டு எதிரியின் படை வரிசைகளுக்குப்பின் 150 மைல்களில் இறக்கப்பட்டன. 12-மணி நேரங்களுக்குள் இஞ்சினியர்கள் விமானம் இறங்கும் மார்க்கத்தை கற்பித்துவிட்டார்கள். டாகோடா விமானங்கள் விங்கேட்டின் முதல் பிரிகேட்டைச் சேர்ந்த படைகளை இறக்கின. மொத்தமாக ஒரு டிவிஷன் படைகள் இறங்கின. அநேக வாரங்கள் வரையில் எல்லா ஸப்ளைகளுக்கும் அவர்கள் விமானப்படையை நம்பியிருந்தார்கள். விங்கேட் நடவடிக்கையில் ஏற்பட்ட அனுபவம்தான் மூன்று மாதங்களுக்குப்பின் நார்மண்டியில் விமானமூலம் படைகளை இறக்குவதற்கு உபயோகமுள்ளதாக இருந்தது.

1944-ம் வருஷம் வசந்தகாலத்தில் கிழக்கு விமானப்படை கமாண்ட் பர்மாவிலுள்ள
ஜப்பானிய சேனையினுடையவும், ஜப்பானிய விமானப்படையினுடையவும் முதுகெலும்பை
முறித்துவிட்டன. சில மாதங்களுக்குள்ளாக 200-க்கு மேற்பட்ட விமானங்களை மஸ்டங் விமா
னங்களும், லைட்னிங் விமானங்களும் அழித்துவிட்டன. அவைகள் எதிரி வசமுள்ள தேசங்களைத்
தாக்கவும் மத்திய பர்மா தளங்களை அழிக்கவும் வெகுதூரம் சென்றன. எதிரியிடம் நவீன
முறையில் விமானங்களின் வருகையை எச்சரிக்கை செய்யக்கூடிய கருவிகள் இல்லாததால்
அவைகள் தரையிலுள்ள எதிரியின் அநேக விமானங்களைக் கைப்பற்றின.

அக்டோபர் மாதத்தில் பிரிடிஷ், அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த தண்டர்
போல்ட் விமானங்களும், மஸ்டங்குகளும் எதிரி பின்வாங்கியிருந்த ரங்கூனிலுள்ள விமான
தளங்களை நொருக்கின. 1945-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மஸ்டங் விமானங்கள்
மொத்தமாக 1,500 மைல்கள் சென்று டான்மாங் விமான தளத்திலும் பாங்காக்கிலும்
உள்ள விமானங்களை அழித்துவந்தன. பர்மாவிலிருந்த எதிரியின் விமானபலம் இறுதியில்
பூராவாக அழிக்கப்பட்டுவிட்டது.

இதே சமயத்தில் ஹரிகேன் வெடிவிமானங்களும், மிச்சல்களும், ஸ்பிட்பையர்களும்,
தண்டர் போல்ட்டுகளும் ஜப்பானியர்களை, எல்லா இடங்களிலும், போர்முனையிலும்
நொருக்கிவருகின்றன. மலை சிகரங்களிலும், காடுகளிலும், மத்திய பர்மாவிலுள்ள தண்
ணீரில்லாத சமவெளிகளிலும், பள்ளத்தாக்குகளிலும், நதிகளிலும், விமான நடவடிக்கை
நடைபெற்றது. ஜப்பான் தற்காப்புப் பெட்டியில் கொலை செய்யப்படாவிட்டால் அவன்
பசியால் வாடிஇறந்துவிடுவான்.

ரங்கூனுக்குத் தெற்கிலுள்ள கப்பல்களை நொருக்க போபைடர் விமானங்கள் 1,300
மைல்கள் பறந்து சென்றன. லிபரேட்டர் விமானங்கள் பர்மாவுக்குள் செல்லும் தரை
மார்க்கமான ஸப்ளை மார்க்கங்களை நொருக்கின. ஸியாமுக்குள் சென்று இருப்புப்பாதை
மார்க்கங்களைத் தாக்கி கடல்களில் சுரங்க வெடிகளையும் பாவிவந்தன.

கிழக்கு விமானப்படை கமாண்டில் பிரிடிஷ் விமானப்படை, கனடிய விமானப்படை,
அமெரிக்க விமானப்படை, இந்திய விமானப்படை, எல்லாம் கலந்துகொண்டன.
அப்பொழுது அவைகள் இணைபிரியாமல் சேர்ந்திருந்தன. அவைகள் ஒரு கோஷ்டியாகப்
பறந்து சென்றன. பிரிடிஷ் அமெரிக்க விமானப்படை தலைமை காரியாலயத்தில் ஒன்றாகச்
சாப்பிட்டார்கள், ஒன்றாக வசித்தார்கள், ஒன்றாக வேலைசெய்து வந்தார்கள். வேண்டப்
பட்டதற்கு அதிகமாகவே அவர்கள் சேவைசெய்து வந்தார்கள். அவர்களுடையவும், 14-வது
சேனையினுடையவும், பெயர்கள் பர்மாவின் விடுதலை சம்பந்தமாக எக்காலத்திலும்
புகழ்பெற்றிருக்கும்.

## இராக் சேனையின் சீர்திருத்தம்.

### ராணுவ உற்று நோக்காளர்.

உபயோகமுள்ள யுத்த சேவையின் பெரும்பாகம் பதிவு செய்யப்படாமலேயே சென்று
விடும். இராக்கிய சேனையின் யுத்த முயற்சியைப்பற்றி பத்திரிகைகளில் ஒன்றும் எழுதப்பட
வில்லை. ஆகிலும், பாரசீக, இராக் கமாண்டுக்குட்பட்ட பேயி படை பிரிடிஷ் தீவுகளைப்
போல அநேக தடவை பெரியதான ஒரு பரப்பில் இருந்துவருகிறது. அது ருஷ்யாவுக்கு
5 மிலியன் டன்கள் சர்ப்பராக்களை அனுப்பியிருக்கிறது. இராக்கிய சேனையும், போலிஸாரும்
சாமான்கள் பத்திரமாகச் செல்லுவதற்கும்; ருஷ்யாவுக்குப் போய்ச்சேருவதற்கும் உதவி
அளித்திருக்கின்றன.

இராக் சேனை பெரியதல்ல; ஆனால், அடக்கமானது. அதற்கு இரண்டு அல்லது மூன்று
ஸீனியர் பயிற்சிபெற்ற பிரிடிஷ் ஆபீஸர்களும், வாலிபமுள்ள அநேக ஆபீஸர்களும் உள்ள
ராணுவ கோஷ்டி பயிற்சியளித்து வருகிறது. ஆபீஸர்கள் எல்லோரும் பிரகிருத யுத்தத்தில்
ஏதாவது ஒரு போர்முனையில் முன்னணியில் சேவை செய்திருக்கிறார்கள். அதன் சேனாதிபதி
யான மாக்ஷிமை தங்கிய இராக்கின் ரீஜெண்ட் சேனையின் பயிற்சியில் அதிக சிரத்தை எடுத்துக்
கொள்ளக்கூடியவர். இராக் யுத்தத்தில் புகுந்ததிலிருந்து ஸ்தாபனத்தைத் திருத்தி அமைப்ப
திலும், படைகளின் நிலைமையை, சேவையின் ஷரத்துகளையும் அபிவிருத்தி செய்வதிலும்,
சேனையின் திறமையை அதிகரிப்பதாக வாக்குறுதி செய்து நிறைவேற்றிவிட்டார்.

இந்தச் சீர்திருத்தம் மிகவும் உபயோகமுள்ளது என்பதை இராக்கிய சேனையின் ஒரு
டிவிஷனுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சியின் பிற்பகுதியில் கலந்துகொண்ட பிரிடிஷ்,
இந்திய சேனையைச் சேர்ந்தவர்கள் பாராட்டினார்கள். பயிற்சி வடகிழக்கு இராக்கிலுள்ள
மலைப்பாங்கான குர்டிஷ் தேசத்தில் நடைபெற்றது. அங்கு முக்கியமான ரஸ்தாக்கள் வழி



யாகத்தான் சாதாரணமாக மோட்டார் போக்குவரத்து நடைபெறக்கூடும். அங்கு குதிரை
களை உபயோகப்படுத்தவேண்டும். நதிகளுக்குப் பாலங்கள் கட்டப்படவேண்டும். பூராவான
முஸ்தீப்புகளுடன் ராணுவம் நடந்துசெல்லவேண்டும். பயிற்சி நடைபெற்ற ஒரு மாதத்தின்
பிற்பகுதியில் பிரிடிஷ் ஸஸெக்ஸ் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு பட்டாளமும், வழி காட்டிகள்
பட்டாளமும், பிரிடிஷ் பீரங்கிப் படையைச் சேர்ந்த ஒரு பகுதியும் கலந்துகொண்டார்கள்.

இராக் சேனையின் வேலையைக் கவனிப்பதற்கு இப்பொழுதுதான் பிரிடிஷ், இந்தியத்
துருப்புகளுக்கு முதல் முதலாக சந்தர்ப்பம் வாய்த்தது. ஆபீஸர்களும், துருப்புகளும்,
இராக்கிய சேனை மலையும், புதர்களும் நிரம்பிய பிரதேசங்கள் வழியாகத் துரிதமாகவும்,
சாதுர்யமாகவும் முன்னேறுவதையும், அவர்களிடம் காணப்படும் ஊக்கத்தையும், சந்துஷ்டி
யையும், சிரமமான நிலைமையிலும் சர்ப்பராக்களை சரளமாகவும், நிருதியாகவும் அனுப்பிவந்த
படைகளையும் கண்டு நல்லெண்ணம் கொண்டனர்.

இந்தப் பயிற்சியின் முடிவில் இராக்கிய சேனையின் உபயோகத்துக்கு லெப்டினெண்ட்
ஜெனரல் ஸர் ஆர்தர் ஸ்மித் புகழுரையை வெளியிட்டார்.

## பழைய சாமான்களை உத்தாரணம் செய்வதில் தகுந்த வெகுமதிகள்.

### கடலுக்குள்ளிருக்கும் பொக்கிஷம்.

மார்க் பிளாக், (வெஸ்டர்ன் மெயில், தெற்கு வேல்ஸ் கியூஸ்).

ஹிட்லரிஸம் முடிந்தவுடன் உலக சரித்திரத்திலேயே மகத்தான பழைய சாமான்களை
உத்தாரணம் செய்வது என்பதில் அதிகக் கவனம் செலுத்தப்படலாம்.

பிரிடனின் கடற்கரையைச்சுற்றி 30 பாதம் தண்ணீருக்குள் சுமாராக 1,000 கப்பல்கள்
மூழ்கிக் கிடக்கின்றன. கப்பல்களின் இரும்பின் உபயோகத்தைத் தவிர அவைகளிலுள்ள
சாமான்கள் மிலியன்கள்கணக்கான பவுன்கள் பொருமானமுள்ளவை.

யுத்த காலத்திலும் தண்ணீருக்குள்ளிருக்கும் பொக்கிஷத்தை எடுக்க பிரயத்தனம்
செய்யப்பட்டுவந்தது. அது இப்பொழுது பிரிடனைச் சுற்றியுள்ள சமுத்திரங்களிலும் தூரக்
கிழக்கில் யுத்த அவசியத்துக்கான இடங்களைத் தவிர பாக்கி இடங்களிலும் இப்பொழுது
அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

சென்ற மூன்று அல்லது நான்கு வருடங்களாக எஃகு அதிகமாகத் தேவையாக இருந்தது.
உடைபட்ட கப்பல்களிலிருந்து சேமிக்கப்பட்ட துணுக்குகளுக்குத்தான் அதிகத் தேவை
இருக்கிறது. ஒரு டன் எஃகை உற்பத்தி செய்ய சாதாரணமாக இரண்டு டன் இரும்பு
உலோகமும், இரண்டு டன் நிலக்கரியும், மிகுதியான சுண்ணாம்புக்கல்லும் தேவைப்படும்.
கடலிலிருந்து எடுக்கப்பட்ட கப்பல்களின் எஃகு இந்தத் தேவையை பூர்த்தி செய்துவிடும்.
இந்தத் துணுக்குகளைத்தான் டைன் நதிக்கரையிலும், தெற்கு வேல்ஸிலும், மிட்லாந்திலு
முள்ள எஃகு தொழிற்சாலைகள் உபயோகித்து வருகின்றன.

யுத்தத்தின் சிறந்த நோக்கத்தின் வெளிப்படையான அம்சம் யாதெனில் மூழ்கடிக்கப்
பட்ட சாமான்களை உத்தாரணம் செய்து அவைகளை எதிரியைத் தாக்க உபயோகமுள்ளதாகச்
செய்துவரும் சங்கங்கள் செய்துவரும் பெரும் முயற்சிதான். ஜெர்மனியை அடிபணியும்படி
செய்ய உபயோகமுள்ள பீரங்கிகளும், குண்டுகளும், டாங்கிகளும் உத்தாரணம் செய்யப்பட்ட
கப்பல்களின் எஃகு, உலோகங்களைக் கொண்டுதான தயாரிக்கப்பட்டன.

ஒரு ஸ்தாபனம் 1940-ம் வருஷத்திற்குப்பின் தண்ணீருக்குள்ளிருந்து 2,50,000 டன்கள்
எடையுள்ள தள்ளுபடி உலோகத்தை எடுத்திருக்கிறது. இதைத் தவிர 1 மிலியன் பவுன்கள்
பொருமானமுள்ள எஞ்சின்களும், முஸ்தீப்புகளும், சாமான்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

யுத்த ஆரம்பத்திற்குப்பின் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து சாமான்களை உத்தாரணம்
செய்துவரும் யந்திரங்களின் சக்தியும் ரகமும் அதிகரித்துவிட்டன. கால நிலைமையும்,
சமுத்திரத்தின் நிலைமையும் முக்கியமான அம்சங்கள்தான். ஆகிலும் உடைபட்ட அல்லது
மூழ்கடிக்கப்பட்ட கப்பல் இருக்கும் ஸ்தானம் கண்டுபிடிக்கப்பட்டால் அதைச் சுலபமாக
வெளியே எடுத்துவிடலாம்.

எஃகுத் தகடுகளை வெட்ட உபயோகிக்கப்படும் தண்ணீருக்குள் செல்லும் சுளுந்துகள்
அதிக உஷ்ணத்தை உண்டுபண்ணுவதினால் உலோகம் தண்ணீர்போல் உருகிவிடும். தீப்பற்றி
எரியும் கப்பல் மெழுகு திரியைப்போல் தண்ணீருக்குள் மூழ்கும் போது தீ அணைந்துவிடும்.
ஆனால், குளிர்ச்சியான ஆழமான இடங்களில் எரியும் இந்த சுளுந்துகள் 8,000 டிக்ரியுள்ள
உஷ்ணத்தை உண்டுபண்ணுகின்றன. தடிப்பான சேற்றில் வேலை செய்துவரும் நீர்மூழ்கிகளும்
கருப்பான கண்மூடியைப் போட்டுக்கொள்ளவேண்டி நேரிடும்.

3

30 அங்குலம் சுற்றளவுள்ள கயறுகள் கப்பல்களைத் தூக்க உபயோகிக்கப்படுகின்றன. ஒரு அடி நீளமுள்ள இந்தக் கயறு 2 மணு கனமுள்ளவை. 12 அணி நீளம் ஒரு டன் கன முள்ளது. இந்தக் கயிறுகள் 150 டன் கனமுள்ள சாமானைத் தூக்கக்கூடும்.

இந்தக் கயறுகள் மட்டும் இருந்தால் போதாது. கப்பல்களைத் தூக்குவதற்குக் கயறுகளைக் கட்ட முளைகள் கப்பலில் அமைக்கப்படவேண்டும். அம்முளைகள் சாமானைத் தூக்கியவுடன் அகன்றுபோகாதபடிக்கும் இருக்கவேண்டும். தண்ணீருக்குள் உள்ள கப்பலில் ஆச்சரியப் படத்தக்க வேலைகளைச் செய்துமுடிக்கவேண்டும். மேலும் கம்பிகள் மூழ்கடிக்கப்பட்ட கப்பலைத் தூள்தூளாக எடுக்காமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். சில சமயங்களில் கப்பல்கள் தலைகீழாக தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும். அவைகளைச் சரியான நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும்.

தண்ணீருக்குள் 300 அடி ஆழத்திலுள்ள கப்பல்களும் வெளியே எடுக்கப்பட்டிருக் கின்றன. நவீன முறையிலுள்ள நீர்மூழ்கும் முஸ்தீப்புகள் வெகு தூரம் தண்ணீருக்குள் செல்ல சாதகம் அளிக்கின்றன. ஆகிலும் அதில் அபாயமும் மிகுதியானது.

சுமாராக 300 அடி ஆழத்தில் தண்ணீரின் கனசக்தி அதிகமாகயிருப்பதினால் அங்கு அவயவங்களை அசைப்பது வெளியில் சர்க்கரைப்பாகில் அகப்பட்டால் எவ்வளவு சிரமமோ அவ்வளவு சிரமமாக இருக்கும். கையைத் தலைவரையில் தூக்குவது சிரமசாத்யம்.

நீர்மூழ்கிகளுக்கு மீன்களும் அதிகத் தொந்தரவளிக்கும். ஒரு விசித்திரமான சாமானை கடலின் மேல் மட்டத்தில் ஒரு மீன்கூட அணுகாது. கீழே செல்லச்செல்ல அவைகளுக்குத் தைரியம் உண்டாகுகிறது. 60 அடி ஆழத்தில் மீன்கள் நீர்மூழ்கியைத் தாக்குகின்றன.

சமுத்திரங்களில் சுராமீன்களிடமிருந்து அபாயம் ஏற்படும். நீர்மூழ்கிகள் கத்திகளைக் கொண்டு சுராமீன்களைக் குத்திக் கொன்றுவிடுவார்கள். சுராமீனுக்கு தண்ணீருக் குள் அபாயம் உண்டுபண்ணினால் சாவதானமில்லை. ஏனென்றால் அந்த ரத்தம் மற்ற மீன்களை அங்கு வரும்படி செய்துவரும். அதைக் கொன்று துரிதமாகக் கயிற்றில்கட்டி கப்பலுக்கு அனுப்பிவிடவேண்டும்.

சென்ற யுத்தத்துக்குப்பின் ஒரு கப்பலிலிருந்துமட்டும் 5 மிலியன் பவுன்கள் பெருமான முள்ள தங்கக்கட்டிகள் எடுக்கப்பட்டன. சமுத்திர மட்டத்திற்கு 420 அடிகள் கீழே இருந்த ஒரு கப்பலிலிருந்து 1 மிலியன் பவுன்கள் எடுக்கப்பட்டன.

அவ்விதமான மதிப்புள்ள சாமான்கள் இந்த யுத்தத்திலும் சமுத்திரங்களில் மூழ்கிக் கிடக்கின்றன. தங்கக்கட்டிகளும், உலோகமும், வயிரங்களும், பாக்ஸைட்டும், அபூர்வமான விலையுயர்ந்த யந்திரங்களும் உள்ள கப்பல்கள் மூழ்கிக் கிடக்கின்றன.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 253 (6-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25- 6-45 | அரிமளம் | ... மாலை 7.00 | 28- 6-45 | மெய்கோல்பட்டி | ... மாலை 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, 7.30 | ,, | திருவரங்குளம் | ... ,, 7.30 |
| 26- 6-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | 29- 6-45 | உடையாளிப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | ,, | கிள்ளுகோட்டை | ... ,, 7.30 |
| 27- 6-45 | குளவாய்ப்பட்டி | ... ,, 7.00 | 30- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | கீழையூர் | ... ,, 7.30 | 1- 7-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| | | | ,, | வேந்தன்பட்டி | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 254 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2- 7-45 | தென்னதிரையன்பட்டி | ... மாலை 7.00 | 5- 7-45 | வானரமாணிக்கம் | ... மாலை 7.00 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | ,, | வம்பல் | ... ,, 7.30 |
| 3- 7-45 | மழையூர் | ... ,, 7.00 | 6- 7-45 | வீராலிமலை | ... ,, 7.00 |
| ,, | காரம்பக்குடி | ... ,, 7.30 | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| 4- 7-45 | பெருமாநாடு | ... ,, 7.00 | 7- 7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | புல்வயல் | ... ,, 7.30 | 8- 7-45 | சீர்ப்பழனி | ... ,, 7.00 |
| | | | ,, | ஆதூர் | ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 26— 6—45 | வடகாடு. | 3— 7—45 | ராமச்சந்திரபுரம். |
| 27— 6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. | 4— 7—45 | காரம்பக்குடி. |
| 28— 6—45 | கீழாநிலை. | 5— 7—45 | ஆலங்குடி. |
| 29— 6—45 | புதுக்கோட்டை. | 6— 7—45 | புதுக்கோட்டை. |
| 30— 6—45 | திருமயம். | 7— 7—45 | வெட்டன்விடுதி. |
| 1— 7—45 | தீத்தான்விடுதி. | 8— 7—45 | மருதன்கோன்விடுதி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—26-6-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ஸு ஜூலை ௴ 2௨ திங்கட்கிழமை [ந. 254


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்ன தாகவே அனுப்பவேண்டும்.

## கௌரவங்களும் வெகுமதிகளும்.

மேன்மைதங்கிய வைஸ்ராய் அவர்கள், பர்மாவில் தீரச்செய்கைக்காக புதுக்கோட்டை வாசியான கீழ்க்கண்டவருக்கு இந்திய D. S. பதக் கத்தை வழங்கும்படி கனிகூர்ந்து உத்தரவிட்டிருக்கிறார்.

*ந. 1707 ஜாப்பர் முகமது,*
*O. V. O. M. S. & M., குருப் I. E.,*
*(காட்டுபாவா பள்ளிவாசல், புதுக்கோட்டை).*

பிரஸங்கம் CCLIV.

## பசிபிக் யுத்த தந்திரத்தில் புதிய எல்லைக் கல்.

### போர்னியோவில் படை இறக்கம்.

கர்னல் பிரெட்டன்.

போர்னியோவில் ஆஸ்திரேலியப்படைகள் சாதுர்யமாகவும், வெற்றிகரமாகவும் இறங் கின என்பது நேசதேசத்தாரின் பசிபிக் யுத்த தந்திரத்தில் ஒரு புதிய எல்லைக் கல்லாகும். ஆஸ்திரேலியா சம்பந்தப்பட்டமட்டில் அதன் மகத்தான, நீண்டகால, வீரம் பொருந்திய பிரயாஸைக்கு அது தகுந்த உருவான வெகுமதியாகும்.

ஆஸ்திரேலிய 9-வது டிவிஷன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதென்பது பொருத்த மானதுதான். இந்த டிவிஷன் மத்திய கிழக்கில் எகிப்தை ரோமலின் தாக்குதலினின்றும் தற்காப்பு செய்ய உதவி செய்து வந்தது. 1942-ம் வருஷத்தில் ஜப்பானியப் படைகள் நியூ கினியாவை அடைந்து ஆஸ்திரேலியாவைப் படையெடுப்பதாகவும் பயமுறுத்தி வந்தன.

1940-ம் வருஷத்தில் ஜெர்மனியின் படையெடுப்பு அபாயம் தோன்றியபொழுது நைல் நதி பிரதேசத்தைக் காப்பாற்ற பிரிடன் அதனிடமிருந்த ஒரு கவசம் பூண்ட படையை அனுப் பியதுபோல ஆஸ்திரேலியாவும் ஒருபொழுதும் பின்வாங்கவில்லை. மத்திய கிழக்குக்கு அனுப்பப்பட்டிருந்த 7-வது டிவிஷன் திருப்பி அழைக்கப்பட்டது. ஆகிலும், நியூகினியா படையெடுப்புக்குப் பின் ஆறு மாதங்கள் வரையில் 9-வது டிவிஷன் மத்திய கிழக்கிலேயே இருந்து வந்தது. ஜெர்மனியிடமிருந்து எகிப்துக்கு ஏற்பட்ட அபாயத்தைத் தடுக்க அது பெரும் பங்கெடுத்துக்கொண்டதுடன் அலாமீனில் ஜெர்மன் ஆபிரிக்கப் படையையும் முறியடித் தது. பிறகு அது ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பிவந்து, திருத்தியமைத்துக்கொண்டு நியூ கினியாவில் 1943-ம் வருஷத்தில் நடைபெற்ற தாக்குதலில் அது கலந்துகொண்டது. இது தான் தூரக்கிழக்குப் போரில் யுத்தத்தில் மாறுதலை ஏற்படுத்தியது.

நியூகினியாவிலுள்ள நேசதேச தரைப்படைகள், அவற்றில் 6-ல் 5 பாகம் ஆஸ்திரேலியர் கள், பூர்ணமான முஸ்தீப்புகளும் போதுமான விமான ரக்ஷணையும் உள்ள படைகள் போரை நடத்தும் முறையை ஜப்பானியர்களுக்கு முதல் முதலில் அறிமுகப்படுத்தியது.

அப்பொழுது ஒரு நிருபர் பின்வருமாறு எழுதினார்:—"முதன் முதலாக ஜப்பானியர்கள், மத்திய கிழக்கில் கியாதிபெற்ற படைகளுடன் சமவெளிகளில் போரை நடத்தவேண்டியிருந் தது". அதன் விளைவாக ஜப்பானியர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள்.

போர்னியோவில் படைகள் இறங்கியதின் முக்கியத்துவம் அபாரமானது. புரூனே பிரதேசத்தில் யுத்தப் பொருள்கள் மிகுதியாக இருக்கின்றன. முக்கியமானவை எண்ணெய் யும், ரப்பரும்தான். சிங்கப்பூரிலிருந்து 1,300 கிலோமீட்டர்கள் தாண்டியும், இந்தோ-சைனாவி லிருந்து 1,000 கிலோமீட்டர்கள் தாண்டியும் உள்ள மகத்தான புரூனே விரிகுடா செங்கடலில் இருந்து ஆகினவா வரையில், மலேயா, சைனா கடற்கரையை வளைத்து இருக்கும் ஒரு பெரிய அரிவாள் போன்ற நேசதேச தளங்களின், கோர்வையிலுள்ள ஒரு இடைவெளியை நிரப்பு கிறது.

தாரகானிலும், புரூனேயிலுமுள்ள ஆஸ்திரேலியர்கள் எதிரி ஆக்கிரமித்துள்ள செலிபிஸ், பாலி, ஜாவா, சுமத்ரா, மலேயா, இந்தோ-சைனா முதலிய இடங்களின் கேந்திர ஸ்தானத்தில் இருக்கிறார்களென்றும், அந்த தேசங்களிலுள்ள ஜப்பானியப் படைகள் தூக்குத் தூக்காக அழிக்கப்படும் என்றும் மாக் ஆர்தர் சொல்லியிருக்கிறார்.

இதே சமயத்தில் 1943-ம் வருஷத்தில் நியூகினியாவில் ஆஸ்திரேலியர்கள் ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கை போகன்வில்லியில் புதிய நடையை அடைந்துவிட்டது.

தீவின் வடக்குக் கோடியான போனிஸ் தீபகற்பத்திலுள்ள ஜப்பானியர்களைத் துணிப்ப தற்காக ஆஸ்திரேலியப் படைகள் சுற்றி வளைத்துச் செல்லுகின்றன. மாச்சின் விரிகுடாவில் கடல் மூலமாகப் படைகள் இறங்கின. லேயில் நடைபெற்றதுபோல் தீபகற்பத்தில் அடி பாகத்தின் குறுக்கே தரை மூலமாகப் படைகள் முன்னேறின. இவ்விதமாக ஜப்பானிலிருந்து துணிக்கப்பட்ட ஜப்பானியப் படைகளுக்கு அழிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

போர்னியோவில் படையிறக்கமும், போகன்வில்லியில் முன்னேற்றமும் தூக்குத்தூக்காக உள்ள ஜப்பானியப்படைகளை முடமாக்கி, துணித்து இறுதியில் அழித்துவிடுவது என்ற யுத்த தந்திரத்தை வெளிப்படுத்துகின்றன. எல்லா நடவடிக்கைகளும் ஒன்று சேர்ந்து ஜப்பானைத் தாக்கும் நடவடிக்கைகளுக்குச் சாதகம் அளிக்கும்.



# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 21—6—45 (வியாழக்கிழமை). | ஆகினவாப் போர் முடிந்தது. |
| 22—6—45 (வெள்ளிக்கிழமை). | ஆஸ்திரேலியர்கள் போர்னியோவைச் சேர்ந்த லூடாங்கில் இறங்கினார்கள். |
| | போலந்தில் தேசிய ஒற்றுமைக்கான தாத்காலிக நிர்வாகத்தை அமைப்பதில் மாஸ்கோவில் பூர்ணமான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. |
| 23—6—45 (சனிக்கிழமை). | அமெரிக்கர்கள் லூசானிலுள்ள அபாரியைப் பிடித்தார்கள். |
| 24—6—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஆஸ்திரேலியர்கள் போர்னியோவிலுள்ள செரியா எண்ணெய் பிரதேசங்களைப் பிடித்தார்கள். |
| 25—6—45 (திங்கட்கிழமை). | சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு உலக சாஸனத்தை அங்கீகரித்தது. |
| 26—6—45 (செவ்வாய்க்கிழமை). | ஜப்பானியர்கள் சைனாவில் செகியாங்கிலிருந்து ஓடுகிறார்கள். |
| 27—6—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் லூசான் பூராவையும் விடுவித்தார்கள். |
| 28—6—45 (வியாழக்கிழமை). | ஜெர்மனியில் ஆக்கிரமிப்பு வட்டாரங்களின் எல்லையை நிர்த்தாரணம் செய்வதில் நேசதேசத்தார்களுக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. |

## (B)-செய்திச் சுருக்கம்.

ஐரோப்பா.—(1) மார்ஷல் டிட்டோ திக்கா, பூமே, ஸ்லவேனி பிரதேச மாகாணங்களி லிருந்து படைகளை வாபஸ் பெற்றுவிட்டான்.

(2) அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள் கொலோன் நிர்வாகத்தை பிரிடிஷ் படை களிடம் ஒப்படைத்துவிட்டன.

(3) மார்ஷல் பிடேனின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. அதற்கு பதிலாக ஆகஸ்ட் 15-ம் தேதியன்று லவாலின் குற்ற விசாரணை நடைபெறும்.

(4) ஜெர்மன் பொது உடமைக்கக்ஷி பாஸிஸ்டு எதிர்ப்பு ஜனநாயக நிர்வாகத்தை அமைக்க ஏற்பாடு செய்துவருகிறது.

(5) அமெரிக்க ஆக்கிரமிப்புக்குட்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த மத்தியரைன் ஸார் நதி பிரதேசத்தில் பிரதேச நிர்வாகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பஸிபிக்.—(1) ஆகினவாப் போர் முடிந்துவிட்டது.

(2) நேசதேசப்படைகள் தெற்கு ஆகினவாவிலுள்ள நாகாவுக்கு மேற்கில் 50 மைல் களிலுள்ள கூமேயில் இறங்கிவிட்டன.

(3) காமசட்காவுக்கும் சைபீரியாவுக்கும் மத்தியிலுள்ள ஒகோட்ஸ்க் கடலில் குரைல்ஸ் தீவுகளுக்கு மேற்கில் கடற்படைப் போரில் சஞ்சாரிகளும் நாசகாரிகளும் கொண்ட ஒரு ஜப்பானிய துணைக்காவல் கப்பல்கூட்டம் நிர்மூலமாக்கப்பட்டது.

(4) லூசான் விடுவிக்கப்பட்டது. இதற்குமுன் தீவிலுள்ள அபாரி, ஸான்ஜுவான், காபாங்கான், ஸான்பாப்ளோ பிடிபட்டன.

(5) போர்னியோவுக்கு வடகிழக்கில் தாரகானில் எதிர்ப்பு முற்றிலும் நின்றுவிட்டது. சாராவாக்கில் மிரி என்ற எண்ணெய் தளம் ஆக்கிரமிக்கப்பட்டது. போர்னியோவிலுள்ள செரியா விமான தளம் பிடிபட்டது. பாலிக்பாபான் எண்ணெய் பிரதேசம் தாக்கப்பட்டது.

(6) நேசதேசப்படைகள் டச்சுக் கிழக்கிந்தீஸ் தீவுகளைச்சேர்ந்த மொலுக்காஸ் கூட்டத்திலுள்ள டேர்னுடித் தீவில் இறங்கின..

சைனு.—சீனப்படைகள் லியூசௌவுக்கு வடக்கில் 8 மைல்களிலுள்ள டாபு சேனை ஆக்கிரமித்தன.

பர்மா.—மழை நடவடிக்கைகளைக் கெடுத்துவருகிறது. ஸிட்டாங் நதியின் கிழக்குக் கரையிலுள்ள 7,000 ஜப்பானியர்கள் நதியை மறுபடியும் தாண்ட முயன்று வருகிறார்கள். இந்தியத் துருப்புகளின் ஒரு பகுதி தாரவாடிக்கு வடகிழக்கில் 10 மைலிலுள்ள வெலங்கு சாங்கைத் தாண்டிவிட்டது.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—6—45.** (வியாழக்கிழமை).

துரக்கிழக்கு (Far East),

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**22—6—45.** (வெள்ளிக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—சுமத்ரா (Sumatra).

கடற்படைதளம்.—ஹொன்ஸுவிலுள்ள குயூர் (Kure).

பர்மா (Burma).

கடற்கரை கப்பல்கள்.—ஸியாம் (Siam) வளைகுடா.

**23—6—45** (சனிக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—குயூஷுத்தீவிலுள்ள புகுஓகா (Fukuoka).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**24—6—45.** (ஞாயிற்றுக்கிழமை).

துரக்கிழக்கு (Far East),

பர்மா (Burma).

விமான நடவடிக்கைகள் இல்லை.

**25—6—45.** (திங்கட்கிழமை).

துரக்கிழக்கு (Far East.)

எதிரி கடற்கரைக் கப்பல்கள்.—பாலிக் பாபன் (Balik Papan).

எண்ணெய் இலக்குகள்.—பாலிக் பாபன் (Balik Papan).

பர்மா (Burma).

கால நெருக்கடியால் கட்டுப்பாடான விமான நடவடிக்கைகள்.

**26—6—45.** (செவ்வாய்க்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ராணுவ தொழிற்சாலை இலக்குகள்.—நகோயா (Nagoya), ஒஸாகா (Osaka), அகாஷி (Akashi), கைபு (Gifu).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**27—6—45.** (புதன்கிழமை)

துரக்கிழக்கு (Far East)..

தொழிற்சாலை இலக்குகள்.—நாகோயாவிற் கருகிலுள்ள யூகாய்ச்செய் (Yukaichai).

பர்மா (Burma).

ஜப்பானிய பகுதிகள்.—ஸிட்டாங் (Sittang) வழியாய் தப்பிச்செல்ல முயற்சிப்பவை.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—6—45.** (வெள்ளிக்கிழமை) to **28—6—45.** (வியாழக்கிழமை).

துரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.



# யுத்தக் குறிப்புகள்.

**ஓகினவாப் போர்.** நேசதேசத்தாருக்கு பூர்ணமான வெற்றியுடன் முடிந்தது. தீவிலுள்ள ஜப்பானிய கமாண்டர் தோல்விக்காக ஜப்பானிய மன்னரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இரு தரப்பாருக்கும் அபாரமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1 லக்ஷம் ஜப்பானியர்களும், 46,319 அமெரிக்கர்களும் உயிர் துறந்திருக்கிறார்கள். ஏராளமான ஜப்பானியர்கள் சரணடைகிறார்கள். ஒரு தடவையில் 15 மணி நேரத்திற்குள் 800 பேர்கள் சரணாகதி செய்திருக்கிறார்கள். ஒரு அமெரிக்கப்படை 48 மணி நேரத்திற்குள் 1,600 பேர்களைக் கைது செய்தது.

வி வி வி வி வி

**லூசான் நடவடிக்கை.** ஆறு மாதங்களாக நடைபெற்ற லூசான் நடவடிக்கை முடிந்தது. தீவு பூராவும் விடுவிக்கப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**போர்னியோ.** மேரியா, சேரியா, பாலிக்பாபானிலுள்ள எண்ணெய் பிரதேசங்கள் பிடிக்கப்பட்டுவிட்டன. எதிரியின் எண்ணெய் ஸப்ளை அழிந்து வருகிறது. இதை நார்மண்டியில் படைகள் இறங்குவதற்குமுன் ஜெர்மனியில் ஏற்பட்ட நிலைமைக்கு ஒப்பிடலாம்.

வி வி வி வி வி

**நேசதேச நீர்மூழ்கிகள்.** சுஷிமா ஜலசந்திக்குள் நுழைந்துவிட்டன. அதாவது கடற்படை ஜப்பான் உள்வட்டார போக்குவரத்து கடல் மார்க்கங்களைத் தாக்க ஆரம்பித்துவிட்டதென்று தோன்றுகிறது. இதையும் முற்றுகைக்குட்பட்டிருந்த ஜெர்மனிக்கு ஒப்பிடலாம். ஜெர்மன் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கும் யுத்த தளவாட உற்பத்தி நிலயங்களுக்கும் இருப்புப்பாதை மூலம் போக்குவரத்து நடைபெற்றது. இந்தக் கோர்வையை முறிக்க முதலில் ஜெர்மனியில் உள்ள இருப்புப் பாதைகள் நொருக்கப்பட்டன. ஜப்பான் சம்பந்தப்பட்ட மட்டில் கடல் மார்க்கங்கள் துணிக்கப்படுகின்றன.

நீர்மூழ்கிகளின் தாக்குதலுக்கு உட்படாமலிருக்க ஜப்பானியக் கப்பல்கள் ஷாங்கேயிக்கு நேர்முகமாகச் செல்லாமல் சீனக் கடற்கரையோரமாகச் செல்லுகின்றன.

வி வி வி வி வி

**கொரியாக் கடல்.** அமெரிக்க விமானங்கள் கொரியாக் கடலில் சாமான் கப்பல்களையும் பலமாக அழித்து வருகின்றன. ஜப்பானிலிருந்து சைனாவுக்குச் செல்லும் மனிதர்களும் தளவாடங்களும், சைனாவிலிருந்து ஜப்பானுக்குச் செல்லும் உணவுப்பொருளும், நிலக்கரியும் வழி மறிக்கப்படுகின்றன. ஜப்பானுக்கு சமீபத்திலுள்ள துறைமுகமும், மஞ்சூரியா வழியாக சைனாவுக்குச் செல்லும் இரண்டு இருப்புப் பாதையின் முடிவு இடமானதுமான கிழக்கு கொரியாவிலுள்ள பூசான் இப்பொழுது நேசதேச வெடிவிமானங்களின் வட்டாரத்துக்குட்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

**வடக்கு பசிபிக்கில் கடற்போர்.** ருஷ்யா வசமுள்ள காமசட்கா தீபகற்பத்துக்கும் சைபீரியா கடற்கரைக்கும் மத்தியிலுள்ள ஒகோட்ஸ்க் கடலில் சென்ற ஜப்பானிய சஞ்சாரிகளும் நாசகாரிகளும் கொண்ட ஒரு கப்பற் கூட்டம் குரைல்ஸ் தீவுகளுக்கு மேற்கில் கடற் போரில அழிக்கப்பட்டது. இதினின்றும் தெற்கிலிருந்து படையெடுப்பு ஏற்படும் பொழுது வடக்கிலிருந்தும் ஜப்பான் தாக்கப்படுமென்று புலப்படுகிறது.

வி வி வி வி வி

**படையெடுப்பு வதந்திகள்.** பெரிய நேசதேச கடற்படைகள் ஓகினவாவுக் கருகில் குவிக்கப்படுகின்றனவென்றும், 200 கப்பல்கள் கொண்ட கடற்படை ஓகினவாவுக்கும் ஜப்பானுக்கும் மத்தியிலுள்ள அமா, கிகியாவை நோக்கி முன்னேறுகின்றனவென்று டோக்கியோ சொல்லுகிறது. ஜெனரல் ஸ்டில்வெல் ஓகினவாவில் கமாண்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தெற்கு ஓகினவாவிலுள்ள நாகாவுக்கு 50 மைல்களிலுள்ள குமாவில் படைகள் இறங்கிவிடன. ஜப்பானியப் படையெடுப்பு அதிக

காணில்லை என்று தோன்றுகிறது. ஒரு சிறிது தாமதம் ஏற்படலாம். ஆகினவா ஒரு சிறிய படையெடுப்பு தளமான இருக்கலாம். இன்னும் சில தளங்களைப் பிடிக்கவேண்டிய அவசியமும் ஏற்படலாம். படைகளுக்குப் புதிய மூஸ்திப்புகளை வழங்க சிறிது தாமதமும் ஏற்படலாம். போக்குவரத்திலும் சற்று தாமதம் ஏற்படும். சர்ப்பராக்கள் தங்கு தடையன்னியில் வர வேண்டுமானால் 6 மிலியன் டன்கள் எடையுள்ள கப்பல்கள் தேவைப்படும். தூரக்கிழக்கு யுத்தம் தளங்களையும் போக்குவரத்துகளையும் பொறுத்தது.

வி வி வி வி வி

**ஜப்பானில் விமான நடவடிக்கை.** படையெடுப்புக்கு முற்போக்காக ஜப்பான் வெடிகுண்டுகளால் தாக்கப்படுகிறது. சென்ற சில நாட்களாக பெரிய நகரங்களைப் தாக்குவது நிறுத்தப்பட்டு இரண்டாம் தரமான நகரங்கள் தாக்கப்படுகின்றன. இதனால் பெரிய நகரங்களின் பேரில் நடவடிக்கை முற்றிலும் நிறுத்தப்படும் என்று பொருள்படாது. பெரிய நகரங்களில் பழுதுபட்ட தொழிற்சாலைகளை ஜப்பான் திருத்தியமைத்து வருகிறது. அந்த வேலை முடிந்தபின் அவைகளை நேசதேச விமானங்கள் மறுபடியும் தாக்கும். இந்த சமயத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கும் சிறிய நகரங்கள் வெடி விமானங்களால் தாக்கப்படுகின்றன. இந்த திட்டமும் ஜெர்மனியில் வெற்றிகரமாகக் கையாளப்பட்டது போன்றதுதான். ஹாம்பர்க்கும், பெர்லினும், கீலும் அடிக்கடி தாக்கப்பட்டன. இடைவேளையில் சிறிய நகரங்களும் நொருக்கப்பட்டன. முடிவில் ஜெர்மனியில் ஒரு தொழிற்சாலையும் வெடிகுண்டு வீச்சிலிருந்து தப்பித்துக்கொள்ளவில்லை. ஜப்பானிலும் அதேமாதிரி நடைபெறும்.

வி வி வி வி வி

**சைனா.** அமெரிக்கா பயில்வித்த சீனப்படைகள் புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டன. அது வெஞ்சௌவிலிருந்து முன்னேறி ஷாங்கேயிக்கும் ஹாங்காங்கும் அபாயத்தை உண்டுபண்ணி வருகிறது.

வி வி வி வி வி

**படையிறக்கம்.** சைனாக் கடற்கரையிலும் மலேயா தீபகற்பத்திலும் நேசதேசப்படைகள் இறங்கிவிடுமென்று ஜூன் மாதம் 28-ம் தேதியன்று ஜப்பானிய அறிக்கை வெளிவந்திருக்கிறது.

வி வி வி வி வி

**மூட நம்பிக்கை.** நேசதேசப்படைகளிடம் பிளவு ஏற்படுமென்றும் அதனால் பிரயோஜனம் ஏற்படுமென்றும் ஜப்பான் நம்பியிருக்கிறது. இந்த நம்பிக்கை வரவரக் குறைந்துவருகிறது. போலிஷ் பிரச்னை தீர்ந்துவிட்டது. மூன்று பெரிய வல்லரசுகளும் சமீபகாலத்தில் கூடி ஜப்பான் சம்பந்தமான பிரச்னையை முக்கியமாக ஆலோசிப்பார்கள். ஜப்பான் சம்பந்தமாக ருஷ்யாவின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படலாம். அமெரிக்கா குத்தகைக் கடன் திட்டப்படி சைபீரியாவிலுள்ள ருஷ்ய சேனைகளுக்கு தளவாடங்களை அனுப்புவதாக ஒப்புக்கொண்டிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

வி வி வி வி வி

**ஜப்பானின் அந்திய காலம் நெருங்கிவிட்டது.** ஜப்பானின் அந்திய காலம் நெருங்கிவிட்டதென்று அதற்கு தெரியும். ஜூன் 27-ம் தேதியன்று ஆகினவாவின் வீழ்ச்சியைப்பற்றிச் சொல்லிவிட்டு, 700 வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட மங்கோலிய படையெடுப்புக்குப் பின் இப்பொழுதுதான் ஜப்பானுக்கு மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று ஜப்பானிய நிர்வாக சபை வெளியிட்டது. ஜூன் மாதம் 1-ம் தேதியன்று ஆகினவாப் போர்தான் ஜப்பானியப் போரின் முடிவான போர் என்று சொன்ன ஜப்பானிய பிரதம மந்திரி இரண்டு வாரங்களுக்குப்பின் அந்த அபிப்பிராயத்தைத் தான் ஒப்புக்கொள்ளவில்லையென்று சொல்லுகிறார். இது கோயபல்ஸின் பித்தலாட்டத்துக்குச் சமமானது. எதிரிகள் ஜப்பானில் அடி வைத்தால் ஜப்பான் அவர்களை நிர்மூலமாக்கிவிடுமென்றும் இந்த நெருக்கடியை சமாளிக்கத் தானே உயிரை அர்ப்பணம் செய்வதாகவும் பிரதம மந்திரி சொன்னார். இவ்விதமான அழகான பேச்சுக்களை நாம் இதற்குமுன் கேட்டிருக்கிறோம். நார்மண்டியில் படைகள் இறங்கு முன்னும் பெர்லின் தாக்கப்படும் முன்னும் ஹிட்லரும் இவ்விதம்தான் பீத்திக்கொண்டான்.



**சான்பிரான்ஸிஸ்கோ.** இந்த மகாநாடு ஜூன் 26-ந் தேதி முடிந்தது. அதற்கு முன் அங்கு கூடியிருந்த 50 தேச பிரதிநிதிகளும் உலக பத்திர சாஸனத்தில் அவர்களுடைய சொந்த பாஷையில் கையொப்பமிட்டார்கள். அவ்வமயம் ஜனாதிபதி ட்ருமன் ஒரு பிரசங்கம் செய்தார். அதன் உட்கருத்தை நாம் மனனம் செய்து மதித்துப்பார்க்கவேண்டும். 50 வேறுபட்ட ஜாதி, மதம், கொள்கையுள்ள தேசங்கள் ஒன்றுபட்ட முடிவுக்கு வரக்கூடுமாவென்று அநேகர்கள் சந்தேகித்தார்கள். ஒரு ஒப்பந்தம் இறுதியில் ஏற்பட்டதென்பது குறிப்பிடத் தக்கது. ஐரோப்பிய வெற்றிக்கும் ஜப்பானில் கிடைக்கப் போகும் வெற்றிக்கும் மத்தியில் சான்பிரான்ஸிஸ்கோவில் மூன்றாவது வெற்றி கிடைத்துவிட்டது. இந்த உலக பத்திர சாஸனம் ஐந்து வருஷங்களுக்குமுன் ஏற்பட்டிருந்தால் அநேகர்கள் இவ்விதம் மாண்டுபோயிருக்கமாட்டார்கள். இந்த சாஸனம் பலாத்காரத்துடனும், விவேகத்துடனும், சமாதானத்தை நிலைநாட்டக் கூடிய ஒரு சிறந்த முயற்சியாகும். முஸோலினியுடன் பாஸிதத்வமும், ஹிட்லருடன் நாஸிதத்வமும் அழிந்துவிடவில்லை. கொடுங்கோல் மன்னர்களை அழித்துவிடுவது சுலபம். கொடுங்கோன்மையை நிர்மூலமாக்குவது சுலபமானதல்ல. இந்த சாஸனம் ஒரு முயற்சி தான். ஆகிலும் வலுக்கொண்டது. அட்லாண்டிக் நகரத்தில் கஷ்ட நிவாரணங்களுக்கும், ஹாட்ஸ்பிரிங்ஸில் உணவுப்பொருள் ஸப்ளைக்கும், பிரெட்டன் உட்ஸில் செல்வ நிலைக்கும், சிகாகோவில் விமானப் படைக்கும் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப்போல உலக சமாதானத்திற்கும் நேசதேசங்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டால் வழிதேடி விடலாம். யுத்தத்துக்கு விதைகள் பொருளாதார மாத்சர்யத்திலும் ஜனசமூக அநீதியிலும் தான் காணப்படுகின்றன. பெரிய வல்லரசுகள் அவர்களை சர்வதேச நீதி உதாரணத்தினாலும் நடவடிக்கையினாலும் முறைக்கு நடத்திச் செல்லலாம். இந்த அற்புதமான கருத்துகள், நிலைத்திருக்குமா அல்லது அழிந்துவிடுமாவென்பது அது அமுல் நடத்தப்படும் முறையைப் பொருத்தது. நம்முடைய இஷ்டப்படி செய்ய நமக்கு அதிகாரமில்லையென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

வி வி வி வி வி

**உலக பத்திர கௌன்ஸில்.** இந்த கௌன்ஸில் உடன் காலத்திலேயே வேலை செய்ய ஆரம்பிக்கும். அதற்கு சான்பிரான்ஸிஸ்கோவில் தலைவர் பதவியை வகித்தவரும் அமெரிக்க பிரதிநிதியாக இருந்தவருமான மிஸ்டர் எட்வர்ட் ஸ்டெட்டினியஸ் தலைமை வகிப்பார்.

வி வி வி வி வி

**ஸ்டாலினுக்கு கௌரவம்.** ஜூன் 27-ம் தேதியன்று மார்ஷல் ஸ்டாலினுக்கு ருஷ்ய நிர்வாகம் மூன்று கௌரவங்களை வழங்கிற்று. முதலாவதாக, சோவியத் போர் படைகளின் ஜெனராலிஸிமோ, இரண்டாவதாக, ஆர்டர் ஆப் விக்டரி, "ருஷ்யாவின் வீரர்." ஜெனராலிஸிமோ புதிதாக உண்டு பண்ணப்பட்டது. இரண்டாவது ருஷ்யாவின் உயர்தர கௌரவம். மூன்றாவது மேன்மையான தீரத்துக்காக அளிக்கப்படுவது.

வி வி வி வி வி

**ருஷ்ய வெற்றி ஒத்திகை.** ஜூன் 24-ம் தேதியன்று மாஸ்கோவில் செம்படை சதுக்கத்தில் வெற்றி ஒத்திகை நடைபெற்றது. அந்த சதுக்கம் சிவப்பு வர்ணமுள்ள தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மஞ்சள், பழுப்பு வர்ணமுள்ள விளக்குகள் ஜ்வலித்தன. பெரிய அவுட் வாணங்கள் அநேக வர்ணங்களை ஆகாயத்தில் பரவச்செய்தன. ஸ்டாலினின் உருவப்படம் புகைக்கூண்டில் கட்டப்பட்டு ஆகாயத்தில் பறந்தது. தேடு விளக்குகள் அதன் பேரில் வெளிச்சத்தை அடித்து வந்தன. மழை இடைவிடாது பெய்த போதிலும் மாஸ்கோ ஜனங்கள் படைகளின் ஒத்திகையைப் பார்க்கத் திரண்டுவிட்டார்கள். கைப்பற்றப்பட்ட ஜெர்மன் கொடிகளை செம்படையின் எடுத்துச்சென்று மார்ஷல் ஜுகோவின் காலடியில் போட்டு அவருக்கு மரியாதை செய்தார்கள். நூற்றுக்கணக்கான ருஷ்யக் கொடிகள் வெற்றி நாடாக்களுடன் பறக்கவிடப்பட்டன. கோனியேவ், டால்புகின், மாலினோவ்ஸ்கி, ரோகொஸோவ்ஸ்கியிடமுள்ள படைகள் ஒத்திகையில் கலந்துகொண்டன. ஒத்திகையில் கலந்துகொள்ள வெகு தூரத்திலிருந்தும் கூட வீரர்கள் வந்திருந்தார்கள்.

**SHAEF.** அதன்வேலை முடிந்துவிட்டதினால் SHAEF-கலைக்கப்படும்.
பொதுஜன, ராணுவ அலுவல்கள் நேசதேச மேன்
பார்வை கௌன்ஸிலிடம் ஒப்படைக்கப்படும். அது பெர்லினில் அடிக்கடி கூடும்.

வி வி வி வி வி

**ஐரோப்பிய யுத்தக் குற்றவாளிகள்.** கோயரிங், ரிப்பன் டிராப், ஹெஸ் முதலிய குற்றவாளிகள்,
பிரிடிஷ், ருஷ்ய, அமெரிக்க, பிரெஞ்சு, ராணுவக்
கோர்ட்டினால், தனிப்பட்ட முறையிலும் S. S., கெஸ்டாபோ என்ற ஸ்தாபனங்களின்
அங்கத்தினர்கள் என்ற ஹோதாவிலும் விசாரணை செய்யப்படுவார்கள். ஜெர்மனியின் யுத்த
தளவாட உற்பத்திசாலையான கிரப்ஸின் தலைவரான ஆல்பிரட் கிரப்ஸ் கைதுசெய்யப்பட்டிருக்
கிறார். அவரும் விசாரணை செய்யப்படுவார்.

வி வி வி வி வி

**போலந்து.** தேசிய ஒற்றுமைக்கான ஒரு புதிய போலிஷ் நிர்வாகம்
அமைக்கப்பட்டு அது வார்ஸாவில் வேலை செய்யத்
துவங்கிவிட்டது. அந்த நிர்வாகத்தை பிரிடனும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டு லண்டனி
லுள்ள போலிஷ் நிர்வாகத்தை அங்கீகாரம் செய்ததை ரத்து செய்வார்கள். ருஷ்ய சேனைகள்
மத்திய ஐரோப்பாவில் இருந்து வரும்பொழுது போலந்தில் அமைக்கப்பட்ட புதிய நிர்வாகம்
ஒழுங்கை நிலைநாட்டுமென்றும் ருஷ்யாவுக்கு விரோதமான நடவடிக்கைகளை நடத்தாது
என்றும் ருஷ்யா நம்பியிருக்கிறது.

வி வி வி வி வி

**பாரஸீக இருப்புப்பாதை.** பாரஸீகத்தில் தெற்குப் பகுதியில் உள்ள இருப்புப்
பாதையை நேசதேசப்படைகள் பாரஸீக ஜனங்
களிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

**சாராவாக்.** ஆஸ்திரேலியப் படைகள் போர்னியோவில் சாராவாக்கில்
இறங்கிவிட்டன. சாராவாக்கின் வெள்ளை மன்னரான
ஸர்சார்லஸ் வைனர் ப்ரூக் கூடிய சீக்கிரம் நாட்டுக்குத் திரும்பிவிடுவார். சில காலம் வரையில்
சாராவாக்கில் ஜெனரல் மாக் ஆர்தரின் ஆதிக்கத்துக்குட்பட்டு ராணுவ நிர்வாகம் நடைபெறும்.
யுத்தம் நடைபெறும் வரையில் அது ராணுவ தளமாகவும் இருக்கும்.

வி வி வி வி வி

**பிரிடிஷ் பொதுத் தேர்தல்.** பிரிடனில் 637 ஸ்தானங்களுக்கு 1,672 அபேக்ஷகர்கள்
நிற்கிறார்கள். மூன்று அபேக்ஷகர்கள் எதிர்ப்பின்றி
யில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். 88 அபேக்ஷகர்கள் ஸ்திரீகள்.

---

## சர்வதேச வாழ்க்கையில் புதிய பரிமாணங்கள்.

(விக்ஹாம் ஸ்டீட்).

உலகத்தின் எதிர்கால வாழ்க்கைக்குரிய காரியங்களில் லண்டன், பாரிஸ், வாஷிங்டன்
முதலிய இடங்களில் சிலாக்யமான மனோபாவமுள்ள ஜெனரல் ஐசன் ஹவரின் ராஜதந்தி
ரத்தைப் பாராட்டியதுபோல் சர்வதேச முறையில் எந்த சமீப நிகழ்ச்சியும் மீறிவிட
முடியாது. ஒரு வாரத்திற்குள் மேற்கு ஐரோப்பாவின் நேசதேச சேனைகளின் உயர்தர
கமாண்டர் இந்த மூன்று தலை நகரங்களிலும் குதூஹலமாக வரவேற்கப்பட்டார். ஒவ்வொரு
இடத்திலும் அவருக்கு உயர்தர கௌரவப்பட்டங்கள் அளிக்கப்பட்டன. ஒவ்வொரு இடத்
திலும் அவருடைய அவையடக்கத்தையும், ஸ்நேகிதர்களைப் போற்றும் தன்மையையும்,
நிரந்தரமான சமாதானத்தை நிலை நாட்ட நேசதேசங்களுக்குள் அவசியவான பரஸ்பர
நல்லெண்ணம் என்னும் குணத்தை வளர்ச்சிக்க அவருக்குள்ள ஆர்வத்தையும் அவர் வெளிப்
படுத்தினார்.



ஜூன் மாதம் 13-ம் தேதியிலிருந்து 18-ம் தேதிக்குள்ளாக மூன்று நாடுகளில்
ஐசன் ஹவருக்கு கௌரவமளிக்கப்பட்டதென்பதிலிருந்து சர்வதேச வாழ்க்கைமுறை
எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்கிறதென்பது வெளியாகுகிறது. தேசங்களின்
அமைப்புக்கும் பத்திரத்துக்கும் இனி பிரதேசங்களுக்குள்ள தூரம் தடையாக இருக்க
முடியாது. காலவரம்பையும், பரப்பு வரம்பையும், கடந்து இருப்பதினால் தேசஙகளுக்குள்
பரஸ்பர நல்லுணர்ச்சியும், ஒற்றுமையும், ஏற்படுமாவென்ற பிரச்னைக்கு தீர்க்கப்படவேண்டிய
மற்றொரு பிரச்னையின் முடிவைக்கொண்டு விடையளிக்கப்படவேண்டும்.

மனிதர்களும், தேசங்களும், தங்களுடைய ஆத்மீய, பொருளாதார, ராஜீய விஷயங்
களை விஞ்ஞான சாஸ்திர, யந்திர சாஸ்திர முன்னேற்றத்தை புரக்கணிக்கும்படி செய்யக்
கூடுமாவென்பதுதான அந்தப்புதிய பிரச்னை. 25 வருடங்களில் இரண்டு உலக யுத்தங்கள்
மூண்டதிலிருந்து இது சாத்யமில்லையென்று தோன்றுகிறது. நாஸிதத்வமும், பாஸிதத்வ
மும் இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்கின்றன. அமெரிக்கா, பிரிடனுடனும், ருஷ்யாவுடனும்
சேர்ந்து போர்புரிய முன்வந்தபொழுது பிரிடிஷ், அமெரிக்க கமாண்டர்களும் ஸோல்ஜர்
களும் ஒத்துழைத்து போரில் சகோதர பாவத்துடனிருப்பார்களாவென்பது சந்தேகப்
படக்கூடியதாக இருந்தது.

ஐசன் ஹவரின் உத்சாகமான கமாண்டின் கீழ் இது சாத்யமாயிற்று. அவர்கள் ஒரு
கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் போல் ஒன்றுபட்டு விட்டார்கள். லண்டனில கில்ட் ஹாலில்
"சந்தேகிகள் தப்பு அபிப்பிராயங்கொண்டார்கள், என்று நாங்கள் ருஜுச்செய்துவிட்டோம்"
என்று ஐசன் ஹவர் சொன்ன வார்த்தைகள் அர்த்த புஷ்டியுள்ள வ. அவர் வாஷிங்டனில்
பேசிய வாசகங்களும் குறிப்பிடத்தக்கவை. அவர் பின்வருமாறு சொன்னார்:— இந்தப்
போரில் ஈடுபட்ட ஒவ்வொரு ஸோல்ஜரும் நீங்கள் சமாதானத்தைப் பரிபாலிப்பீர்கள் என்று
எதிர்பார்க்கிறான். துக்கிக்கிறவர்களின் துயரம் இம்மாதிரி இனிமேல் சம்பவிக்காது என்ற
நம்பிக்கையைக்கொண்டுதான் ஆறுதலடையவேண்டும். சமாதான காலத்திலும் ஐரோப்பிய
வெற்றிக்கு உதவிய ஒற்றுமைப்பு பலமாக அபிவிருத்தி அடையுமென்று போர் புரியும்
ஸோல்ஜர் நம்பியிருக்கிறான்."

வெற்றி கிடைத்த உடனே அநேக பெரிய ஸோல்ஜர்கள் இவ்விதமாகப் பேசியிருக்க
வில்லை. அவர் ஒரு உயர்வானவர் என்று நாம் அறிவோம். பிரிடிஷ் அமெரிக்கப்படைகளுக்
குள் சகோதர பாவத்தையும், ஒற்றுமையையும், வளர்ச்சித்ததும் யுத்தத்தைத் தவிர்ப்பதில்
உயர்வான லக்ஷியமும் முயற்சியும் வேண்டுமென்று வேண்டுகோள் செய்ததின் மூலம்
கிடைத்த புகழையும் விட ராணுவ வெற்றிகள் ஐசன் ஹவருக்கு சிலாக்கியமான புகழைத்
தரவில்லை.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் சில்லரை வித்தியாசங்களும், ருஷ்யபோலீஷ் பிரச்னை
களும், லெவாண்டில் பிரிடிஷ்-பிரெஞ்சு வித்தியாசங்களும், ஜபபானியப்போரும் இந்த மனோ
நிலைக்கு எவ்வித சம்பந்தமுள்ளவையென்று பார்த்து நிர்ணயிக்கப்படவேண்டும். நாகரீகத்
தின் எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது. விஞ்ஞான சாஸ்திர, யந்திர, சாதன
முறைப்படி கிடைத்த லாபங்களைப் புறக்கணிக்கும் வகையில் மனிதர்களும், தேசங்களும்,
நடந்து கொள்ளாவிடில் அந்த லாபஙகள் காட்டுமிராண்டித்தனத்திற்குச் செல்லத்தான் வழி
காட்டியாக இருக்கும்.

பொதுத்தேர்தலினால் ஏற்படக்கூடிய சச்சரவுகளையும், மீறி பிரிடிஷ் பொதுமக்கள்
இந்த உண்மையை நன்கு அறிகிறார்கள். ஆகையினால்தான் ஐசன் ஹவரின் ராணுவ
மேதாவித் தனத்தை பிரிடன் பாராட்டியதுடன் அது ஐசன் ஹவருக்கு நன்றியறிவு செலுத்தி
யதுடன் லண்டனின் கௌரவமுள்ள நகரவாசிகளில் அவர் ஒருவரென்றும், அது பெருமை
கொண்டது. கான்ஸாஸிலுள்ள அபிலெனில் ஜனத்தலைவரான அவர்கள் லண்டனிலுள்ள
வர்களுடன் அடிப்படையான பாந்தவ்யம் கொண்டாடினார். ஏனெனில் அபிலேனும்,
லண்டனும் ஒரே மாதிரியாக நினைக்கின்றன, ஒரே விசமான அபிப்பிராயம் கொண்டிருக்கின்
றன. அவர் சேனைகளின் கமாண்டர் மட்டுமில்லையென்று வெளிக்காட்டியிருக்கிறார்.
இனிமேல் அவர் நேசதேசத்தார்களின் சமஷ்டியில் ஒரு பெரிய தலைவர் என்று
கருதப்படுவார்.

# புதிய சங்கத்தின் அமைப்பு.

புதிய உலக ஸ்தாபனத்தின் அமைப்புக்கு சான்பிரான்ஸிஸ்கோ ஏற்பாடு செய்துவிட்டதால், மகாநாடு இறுதி கட்டத்தை அடைந்துவிட்டதென்று நேசதேச அறிக்கை வெளியிடுகிறது.

ரத்து பிரச்னை சம்பந்தமான தாத்காலிகமான நெருக்கடி தீர்ந்தது. தர்மகர்த்தா கொள்கையில் ஒப்பந்தம், தேச மக்களின் அபிப்பிராயப்படி சுதந்திரம் அல்லது சுய ஆட்சி, புதிய உலகக்கோர்ட்டை அமைப்பதற்கான சட்டத்தின் அங்கீகாரம், உலக ஸ்தாபனத்தின் பொருளாதார, ஜனசமூக கௌன்ஸிலின் அலுவல்களை விவரிக்கக்கூடிய நகலின் அங்கீகாரம் என்ற நடவடிக்கைகள் நேசதேச மகாநாட்டின் வெற்றிகரமான முடிவு சீக்கிரமேற்படும் என்பதை விளக்குகின்றன.

ஆறு வாரங்களாக சிரமப்பட்டு விவாதம் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கும் டெக்னிகல் கமிட்டிகளின் சிபார்சுகளை மகாநாட்டின் நான்கு கமிஷன்களும் அங்கீகாரம் செய்யவேண்டும். அவைகள் பின்னர் மகாநாட்டில் சட்டமாக்கப்படவேண்டும். ஆகிலும் விரிவான அம்சங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. புதிய உலக ஸ்தாபனத்தின் உருவமும், வடிவமும், வேலை திட்டமும் தெளிவுபட்டுவிட்டன. முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

அதற்கு ஐக்ய நேசதேசங்கள் என்று தலையங்கம். சாஸனத்தில் கண்ட கடமைகளை ஒப்புக்கொள்ளும் சமாதானத்தை விரும்பும் நாடுகள் எல்லாம் அதில் அங்கத்தினர்களாக இருக்கலாம். அவர்கள் கடமைகளை நிறைவேற்ற சக்தியுள்ளவர்களென்று உலக ஸ்தாபனம் ஒப்புக்கொள்ளவேண்டும். உலக ஸ்தாபனத்தின் விரிவான கொள்கைகள் பீடிகையில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு:—

“நேசநாடுகளான நாங்கள் யுத்தக் கொடுமையிலிருந்து நமது சந்ததியார்களைக் காப்பாற்ற முடிவு செய்திருக்கிறோம். நமது வாழ் நாளிலேயே இரண்டு தடவை உலகம் அனுவசியமான கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறது. மனித வர்க்கத்திற்கு முக்கியமான உரிமைகளிலும், மனிதனின் கண்யம், பிரயோஜனம் என்பதிலும், பெரிய, அல்லது சிறிய தேசங்களிலுள்ள ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் சரிசமமான உரிமைகள் உண்டென்பதிலும் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. நீதியும், ஒப்பந்தங்கள், சர்வதேச நீதி முறைப்படி தோன்றக்கூடிய கடமைகளுக்கு மதிப்பும் ஏற்படக்கூடிய நிலைமையை ஸ்தாபிப்போம். ஜனசமூக முன்னேற்றத்தையும், சுதந்திர உலகில் மேன்மையான வாழ்க்கை முறையையும் உண்டுபண்ணுவோம். இவைகளை நிறைவேற்றுவதற்காக நாங்கள் தாக்ஷிண்யம் என்பதைக் கையாண்டு ஒருவரோடு ஒருவர் நல்ல அண்டைவீட்டுக்காரர்களைப் போல் வாழ்ந்துவருவோம். சர்வதேச சமாதானத்தையும்; பத்திரத்தையும், நிலைநாட்ட எங்களுடைய பலத்தை ஒன்றுபடுத்துவோம். பொதுஜன அக்கறைக்கல்லாது பலாத்காரம் உபயோகிக்கப்படாதென்ற கொள்கைகளை நாங்கள் ஒன்றுபட்டு நிலைநாட்டுவோம். சான்பிரான்ஸிஸ்கோவில் கூடியிருக்கும் எங்கள் பிரதிநிதிகள் மூலமாக எல்லா ஜனங்களின் பொருளாதார, ஜனசமூக முன்னேற்றத்துக்காக சர்வதேச ஸ்தாபனத்தை உபயோகிப்போம்.”

“நேசதேசங்கள்” என்ற ஸ்தாபனத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—ஜெனரல் அஸெம்பிளி, உலக பத்திர கௌன்ஸில், பொருளாதார, ஜனசமூக கௌன்ஸில், (மகாநாடு சர்ச்சைமூலம் இதை முக்கியமான அங்கத்தின் அந்தஸ்துக்கு உயர்த்திவிட்டது.) சர்வதேச கோர்ட், காரியாலயம்.

ஜெனரல் அஸெம்பிளியில் ஸ்தாபனத்தைச் சேர்ந்த எல்லா தேசங்களும் அங்கத்தினர்கள். ஒவ்வொரு தேசத்துக்கும் ஐந்துக்கு மேற்படாத பிரதிநிதிகள் இருப்பார்கள். ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு வோட் உண்டு. உலக பத்திர கௌன்ஸிலின் சிபார்சின் பேரில் அஸெம்பிளி உபரி மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளும்.



உலக பத்திர கௌன்ஸிலின் நிரந்தரமில்லாத மெம்பர்களையும், பொருளாதார, ஜனசமூக கௌன்ஸிலின் மெம்பர்களையும், உலக பத்திர சபையுடன் கலந்துகொண்டு உலக கோர்ட்டின் ஜட்ஜுகளையும் அஸெம்பளி தேர்ந்தெடுக்கும். அது வருஷம் ஒரு முறையோ அல்லது அங்கத்தினர்களின் பெரும்பான்மையோர் வேண்டிக்கொண்டாலும் அல்லது உலகப் பத்திர கௌன்ஸில் வேண்டிக்கொண்டாலும் ஸ்பெஷலாகவோ கூடும்.

உலகபத்திர கௌன்ஸிலில் ஐந்து நிரந்தரமான அங்கத்தினர்கள் பிரிடன், அமெரிக்கா, சைனா, பிரான்ஸ், ருஷ்யா; ஆறு நிரந்தரமல்லாத மெம்பர்களும் உண்டு. நிரந்தரமில்லாத அங்கத்தினர்கள் சர்வதேச சமாதானம், பத்திரம், நியாயமான பிரதேச அமைப்புக்குத் தகுந்தவாறு ஒத்தாசை முதலியவற்றிற்குத் தக்கவாறு பொறுக்கியெடுக்கப்படுவார்கள்.

சர்வதேச சமாதானத்தையும், பத்திரத்தையும், பரிபாலித்து வருவதின் பொறுப்பு உலக பத்திர கௌன்ஸிலைச் சேர்ந்தது. நேசதேசத்தைச் சேர்ந்த எல்லா அங்கத்தினர்களும் கௌன்ஸிலின் முடிவை ஒப்புக்கொள்ளுவதாகவும், சாஸனத்தின் விதிகளின்படி நடந்துகொள்ளுவதாகவும் ஒப்புக்கொள்ளவேண்டும். சாச்வதமான மெம்பர்களின் நாடுகளின் காரியாலயத் தலைவர்கள் அடங்கிய ராணுவத் தலைவர்கள் கமிட்டி ஒன்று கௌன்ஸிலுக்கு ஒத்தாசைசெய்யும்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு சர்ச்சைகளின் மூலமாக ராணுவ வட்டாரக் கமிட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேசதேச சபையின் உயர்தர அதிகாரம் எந்த நடவடிக்கையை அமுல் நடத்துவதற்கும் உபயோகப்படுமென்றாலும், வட்டார பத்திர ஏற்பாடுகளின் தன்மை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அக்கிரம தாக்குதல் ஏற்படும் பொழுது தன்னுடைய தற்காப்பு என்ற இயற்கை உரிமையைக்கொண்டு, வட்டார கமிட்டிகள் தனித்தனியாகவோ அல்லது ஒன்றுபட்டோ பலமான நடவடிக்கையை எடுத்துக்கொள்வோம். உலக பத்திர கௌன்ஸிலும் இதில் தலையிட்டுக்கொள்ளும்.

பொருளாதார, ஜனசமூக கௌன்ஸிலில் 18 நாடுகள் அங்கத்தினர்களாக இருக்கும். அவர்கள் மூன்று வருஷ கெடுவிற்கு ஜெனரல் அஸெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதலாவது தேர்தலுக்குப்பின் ஒரு வருஷ முடிவில் ஆறு மெம்பர்கள் ரிடயராவார்கள். இரண்டாவது வருஷ இறுதியில் மற்றும் ஆறு அங்கத்தினர்கள் விலகிக்கொள்ளுவார்கள். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு வோட் உண்டு.

மற்ற அலுவல்களுக்குள் கீழ்கண்ட அலுவல்களையும் பொருளாதார, ஜனசமூக கௌன்ஸில் செய்துவரும் மனித வர்க்கத்துக்குரிய உரிமைகளையும் முக்கியமான சுதந்திரத்தையும் மதிப்பதற்கும் கொண்டாடுவதற்கும் தன்னிஷ்டப்படி சிபார்சுகள் செய்வது. சர்வதேச பொருளாதார, ஜனசமூக, கலைஞான, சுகாதார, மற்ற அனுகுணமான விஷயங்கள் சம்பந்தமாக ஆராய்ச்சிகளைச் செய்து ரிபோர்ட்டுகளை அனுப்புவது, எல்லோருக்கும் வேலை கிடைக்கும்படி ஏற்பாடு செய்வது, வாழ்க்கை முறையை உயர்த்துவது என்ற கடமைகளும் கௌன்ஸிலுக்கு உண்டு.

புதிய உலக நீதிஸ்தலம் ஹேக்கில் அமைக்கப்படும். அதற்கு 15 நீதிபதிகள். அதில் எந்த இரண்டு நீதிபதிகளும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. உலக பத்திர கௌன்ஸிலின் ஆதரவுடன் ஜெனரல் அஸெம்பிளி தேர்ந்தெடுத்த நீதிபதிகள் ஒன்பது வருஷங்கள் உத்தியோகம் வகிப்பார்கள். முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஐந்து பேர்கள் மூன்று வருஷங்களுக்குப்பின் வேலையிலிருந்து விலகிக்கொள்ளுவார்கள். மற்றும் 5 பேர்கள் ஆறு வருஷ முடிவில் விலகிக்கொள்ளுவார்கள்.

ஸெகரெடரி ஜெனரல் என்பவர் நிர்வாக இலாகாத் தலைவர், காரியாலயத்தின் தலைவர். அவர் மூன்று வருஷம் உத்தியோகம் வகிப்பார். ஆனால் அவர் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கலாம். எவ்விதம் அவரைத் தேர்ந்தெடுப்பது, எவ்வளவு டெபுடி செகரெடரி ஜெனரல்களை நியமிப்பது என்ற பிரச்னைகளில் முடிவு ஏற்படவில்லை. காரியாலயத்தின் சிப்பந்திகள் ஜெனரல் அஸெம்பிளி ஏற்பாடு செய்யும் சட்ட திட்டங்களின்படி நியமிக்கப்படுவார்கள். அவர்கள் மிகவும் திறமையுடனும், லாயக்குடனும், நல்லொழுக்கத்துடனும் வேலைசெய்ய வேண்டுமென்ற நிபந்தனைகளுக்குட்பட்டு நியமிக்கப்படுவார்கள். அவர்கள் அநேக நாடுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

# ஜெர்மனியின் தோல்விக்கு ஹிட்லர் ஜவாப்தாரி.

## புதிய விருத்தாந்தத்தை உண்டுபண்ண முயற்சி.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

ஐரோப்பாவில் ஜெர்மனியுடன் போர் நடைபெற்று வந்த பொழுது பிரிடிஷ் சாம்ராஜ்யம் தூரக்கிழக்கில் மற்றொரு கடும் போரை நடத்தி வந்ததென்பதை மறந்துவிடக் கூடிய மனப்பான்மையிருந்து வந்தது. இது சகஜம் தான். இப்பொழுது யுத்தம் வெகு தூரம் தாண்டி தூரக்கிழக்குப் போய்விட்டபடியால் ஐரோப்பியப் போரை ஜனங்கள் மறந்துவிடக் கூடும்.

ஜெர்மனியின் ராணுவ பிரச்னை பழங்கதை என்றும் ஜப்பானியப் போரில் இப்பொழுது பூரா கவனத்தையும் நாம் செலுத்தவேண்டுமென்றும் அநேகர்கள் எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஆகிலும் ஜெர்மனியில் ராணுவ பிரச்னை இன்னும் தீர்ந்த பாடில்லையென்று நான் வற்புறுத்திச் சொல்லவிரும்புகிறேன்.

போர் நின்றுவிட்டது. கொரில்லாப் படைகளினின்றும் ரகசியமான கொலையாளிகளிடமிருந்தும் யாதொரு தொந்திரவும் காணப்படவில்லை. ஆகிலும் ராணுவ ஐதீகம் ஜெர்மனியில சீக்கிரமாக அழிந்துவிடாது. ஆகையால் அது பூராவாக மறைந்துவிட்டதென்று எண்ணிவிடாதீர்கள்.

D-தினத்திற்குப்பின் நூற்றுக்கணக்கான ஜெர்மன் ஜெனரல்களும் கடற் தளபதிகளும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் போர்ப்படைகளைப் பூராவாகக் கலைத்துவிட்ட படியால் ஜெர்மனியின் பழைய பல்லவியான ஜெர்மனியின் வசம் பூண்ட பலம் முறியடிக்க முடியாதது என்ற மனப்பான்மை புத்துயிர் பெறுவது அசாத்யமென்று அநேகர் நினைக்கக்கூடும். ஒரு வகையில் அவ்விதம் நடைபெற்றுவிட்டது. ஆனால் ஜெர்மனி மற்றொரு கதையைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

சென்ற யுத்தத்தில் சேனை போர்முனையில் ஒரு பொழுதும் முறியடிக்கப்படவில்லையென்றும் யூதிகளும் மற்ற பொதுஜன துரோகிகளும் ஜெர்மனியை முதுகில் குத்திவிட்டார்களென்றும் ஜெர்மன் ராணுவத் தலைவர்கள் பாத்தியம் கொண்டாடினார்கள். இந்த யுத்தத்தில் ஜெர்மன் சேனை போர்முனையில் இறுதியாக முறியடிக்கப்பட்டதென்று உலகம் பூராவும் அறிந்துவிட்டதினால் ஜெர்மன் ஜெனரல்களும் கடற்தளபதிகளும் தோல்விக்கு ராணுவ சம்பந்த மற்ற ஒரு காரணத்தை வெளியிட்டு வருகிறார்கள். சேனா கடற்படை விமானப்படையை எழுப்பிப் பயல்வித்த ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தயாரித்த படைகளைக் கொண்டே போரில் வெற்றி பெற்றிருக்கலாமென்றும், ஆனால் அதற்கு ஒரு பயித்தியம் பிடித்த ஒருவன் குந்தகம் செய்து வந்தான் என்றும் இப்பொழுது சொல்லப்படுகிறது.

இந்த வியாக்யானம் சாதுர்யமாகத் தானிருக்கிறது. இதன் மூலம் தோல்விக்கு மாலுமிகளும், ஸோல்ஜர்களும், விமானிகளும், காரணமில்லையென்று ஏற்படுவதுடன் நாஸிகள் செய்த அக்கிரமங்களுக்கும் அவர்கள் உடந்தையாக இல்லையென்றும் அவர்கள் வெளிப்படுத்த முயலுகிறார்கள். மேன்மையான யுத்த யந்திரத்தை அழித்த நாஸிகளின் அதிக்கிரமங்களை அவர்களும் அனுபவித்தார்கள் என்று ஜெர்மன் ராணுவத் தலைவர்களும் சொல்லுவார்கள், சொல்லிக்கொண்டுமிருக்கிறார்கள்.

சுருங்கச் சொன்னால் ஒரு புதிய கற்பனை தோன்றிவிட்டது. அதாவது ஜெர்மன் ராணுவத் தலைவர்கள் பெல்ஸன், பூகன்வால்டு வதைகளுக்கும் உட்பட்டவர்கள் என்று சொல்லி வருகிறார்கள். ஆகிலும் ஈசன்ஹவரும் மாண்ட்காமரியும், ஜுகாவும் இந்தக் கெடுதல் விளைவிக்கும் பிரசார தோரணையின் அபாயங்களை நன்கு அறிவார்கள். ஜெர்மானியர்களுடன் சகோதரபாவம் கொண்டாடக்கூடாதென்று சொல்லுவதற்கான காரணங்களைப் பற்றி பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி ஜெர்மன் மக்களுக்கு ஒலிபெருக்கியதும், ஜூன் மாதம் 11-ம் தேதியன்று லண்டனில் ஜெனரல் ஈசன் ஹவர் சொற்பொழிவு ஆற்றியதும் ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும் வருந்துவது எவ்வளவு யதார்த்தமானதென்று நிலைக்காட்டுகின்றன.



இந்த வருத்தத்துக்குச் சரியான பதில் யாதெனில், ஜெனரல்களும், கடற்தளபதிகளும், தன்னடக்கமின்றி எவ்விதமான கெடுதலான, பயித்தியக்காரத்தனமான உத்தரவுகளையும் கீழ்படிந்து நடந்தார்கள் என்றால், அதிகாரத்தை மறுபடியும் வழங்க அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்பது நிச்சயம். இவ்விதமாக அபத்தமான மார்க்கங்களில் சுலபமாக நடத்தப்படக்கூடிய ஜெர்மன் மக்கள் ஆயுதம் வழங்கப்பட்டால் அபாயம் உண்டுபண்ணக் கூடியவர்கள் என்று ஏற்படுகிறது.

இந்தப் புதிய பிரசாரத்திற்கு இது தான் பதில். கெட்ட புத்தி உள்ளவர்களைத் திருத்துவதென்பது சாத்யமென்று எனக்குத் தோன்றவில்லை. இன்றைய ஜெர்மன் குழந்தைகள் வளர்ச்சி பெற்று, கல்வி கற்று, அவர்களுடைய குழந்தைகளை நல்ல மார்க்கத்தில் போதிக்கும் வரையில நேசதேசத்தார்கள் ஜெர்மனியை ஆக்கிரமித்திருக்கவேண்டாமாயென்பது சர்ச்சை செய்யக்கூடிய பிரச்னையாகும். ஜெர்மன் ஜெனரல்களும், கடற்தளபதிகளும், ஆயுதங்களையும் ரகசிய ஆயுதங்களையும், எதிர்காலத்தில் உபயோகித்து பழைய அவமானங்களைத் துடைத்து விடலாமென்று எண்ணியிருக்கும் வரையில் நேசதேசத்தார்கள் இதைப் பூர்த்தி செய்ய முடியாது. இல்லை, இந்த அவமானங்கள் ஜெர்மன மக்கள் பூராவும் ஜவாப்தாரியான அக்கிரமங்களுக்குச் சரியான பிரதி பிரயோஜனம் என்று அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த அக்கிரமத்தில் ஜெர்மன் ஜெனரல்களும், கடற்தளபதிகளும், தங்களுடைய பங்கைத் தட்டிக் கழிக்கமுடியாது.

---

## லண்டனின் சுதந்திரம்.

### ஈசன் ஹவருக்கு பாராட்டு.

(டைம்ஸ் பத்திரிகை).

ஈசன் ஹவரின் அரிய செய்கைகள் அவருடைய பெயரை இங்கிலாந்தில் சரித்திரத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்ததுபோல, அவருடைய பெயர் ஜூன் மாதம் 12-ம் தேதியன்று லண்டனின் சுதந்திர புருஷர்களின் ஜாபிதாவிலும் சேர்க்கப்பட்டு விட்டது. அவருக்கு பரிசளிக்க உத்தேசித்திருந்த கௌரவ உரைவாள் தயாராக இல்லாததினால் அதற்கு பதிலாக வெல்லிங்டனுடைய உறைவாளை வழங்குவது என்று திடீரென்று யோசனை தோன்றிற்று. வாடர் லூவில் அவர் உபயோகித்த உறைவாள ஐரோப்பாவிலிருந்து கொடுங்கோன்மையை ஒழிக்கும் சரித்திர பூர்வமான ஒரு சேவையை வெகு சிறப்பாகச் செய்து முடித்த ஒரு ஸோல்ஜர் கையில் இருந்து வருகிறதென்று நினைக்க வெல்லிங்டன் பிரபு பெருமை கொள்ளக்கூடும்.

ஈசன் ஹவர் ஒரு பெரிய சேனாதிபதி என்று நினைத்த அநேகர்கள் அவர் ஒரு பெரிய சொற்பொழிவாளர் என்றும் முதன் முதலாக அறிந்தார்கள். சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளும் முறையில் அவர் ஆற்றிய சொற்பொழிவு உருக்கமாக இருந்தது. வாழ்நாளின் லக்ஷியமான சில எண்ணங்களைப்பற்றி மனப்பூர்வமாகப் பேசுவதில் யதார்த்தமும், விநீதியும் உள்ள ஒருவருடைய பேச்சில் உருக்கம் காணப்படுவது சகஜமே. ஜெனரலின் வெற்றிகரமான வாழ்க்கைக்கு யுத்த தந்திரமும், விரிவான உயர்வான திட்டங்களும் அவைகளை வெகு அழகாக நடத்திக்காண்பித்ததும், காரணம் என்பதுபோல, பிறரை வசப்படுத்தும் அவருடைய விநீதியும் வெற்றிக்கு மற்றொரு காரணம். மேலும், பரிவாரங்களிடமிருந்து கூடுமான வரையில் உயர்வான சேவையைப்பெறும் சக்திதான் பெரிய கமாண்டரின் குணாதிசயங்களில் ஒன்றாகும். இத்துறையில் ஈசன் ஹவர் அபாரமான வெற்றியைப் பெற்றிருக்கிறார். படைகளின் பொதுவான லக்ஷியத்தைப்பெற தன்னுடைய சுயநலத்தையும் அவர் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்.

ஒரே ஒரு அம்சத்தில்தான் அவர் தனித்து நிற்கும் உரிமைக்கு பாத்யம் கொண்டாடுவார். உயர்தர கமாண்டர் என்ற முறையில் ஆயிரக்கணக்கானவர்களுடையவும், தேசங்களுடையவும் க்ஷேமத்தை பாதிக்கக்கூடிய முக்கியமான முடிவுகளைச் செய்வதில் அவர் பொறுப்பேற்றுக்கொள்ளுவார். சர்ச்சில் அவருக்கு உபசாரம் சொல்லும்பொழுது, ஜெர்மன யுத்தம் தலைகீழாக மாறும்பொழுது அந்தப் பொறுப்பு எவ்வளவு மிகுதியாக இருந்தது என்று வற்புறுத்திச் சொன்னார்.

மற்ற விஷயங்களில் அவர் வெற்றிப் புகழை அபாயங்களுக்குட்பட்டு சேவைசெய்து வந்த ஒவ்வொருவருடனும், ஸோல்ஜர்களுடனும், மாலுமிகளுடனும், விமானிகளுடனும், தோல்வி கிடைத்து வந்த நாளில் எதிர்த்து நின்று வெற்றிக்கு அஸ்திவாரம் போன்ற லண்டன் ஜனங்களுடனும் பகிர்ந்துகொள்ள ஆசையுள்ளவர்போல் அவர் பேசுகிறார். அவருடைய தலைமையின்கீழ் சரித்திரத்திலேயே காணக்கூடாத ஒரு சகோதர பாவம் பிரிடிஷ், அமெரிக்க போர்ப்படைகளிடையே ஏற்பட்டுவிட்டது. இவ்விரண்டு நாடுகளும் சமாதானத்தை விரும்புகிறவர்கள். அவர்கள் பிழைத்திருப்பதைவிட அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கும் சுதந்திர எண்ணங்கள்தான் சமாதானத்துக்கு அவசியமானவை என்று இரு நாடுகளும் தீர்மானம் கொண்டவை. சுய நலத்தைக் கருதாதவும் தனிப்பட்டதுமில்லாததுமான இந்த இரண்டு பெரிய வல்லரசுகளுக்குள் ஏற்பட்ட சகோதர பாவம் நீடித்து அனேக யுகங்கள் வரையில் அபிவிருத்தியடையும் என்றும் அவர் நம்புகிறார்.

---

## விஞ்ஞான சாஸ்திரத்தின் தூதர்கள்.

### ருஷ்ய அகெடமிக் கொண்டாட்டங்கள்.

(டைம்ஸ் பத்திரிகை.)

ருஷ்யாவின் விஞ்ஞான சாஸ்திர அகெடமி 220-வது வருஷ விழாவை ஜூன் 15-முதல் ஜூன் 28 வரையில் கொண்டாடும். அதன் அழைப்பிற்கு இணங்க பிரிடனைச் சேர்ந்த விஞ்ஞான சாஸ்திரிகளின் ஒரு கோஷ்டி ருஷ்யாவில் தங்கியிருப்பார்கள். அவர்கள் பிரிடனிலுள்ள ராயல் சொஸைடி உள்பட பல விஞ்ஞான சாஸ்திர சங்கங்களின் பிரதிநிதிகள். மற்றவர்கள் சொந்த ஹோதாவில அழைப்புக்கு இணங்கி ருஷ்யாவுக்குச் செல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி சம்பாஷிப்பது, பொதுஜன நன்மைக்கான பிரச்னைகளைத் தீர்ப்பது என்ற எண்ணத்துடன் மகாநாட்டிற்குச் செல்லுகிறார்கள். ருஷ்யர்கள் அவர்களை மரியாதையுடன் ஆராதிப்பார்களென்றும், தனிப்பட்டவர்களின் சகாயத்துடன் நாட்டிலுள்ள சிறந்தவற்றையும் வெளிப்படுத்துவார்களென்றும் அவர்கள் நிச்சயமாக நம்புகிறார்கள். அவர்களும் நண்பர்கள் என்ற முறையில் விஞ்ஞான சாஸ்திரத்தில் ருஷ்யாவில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தையும் பாராட்டுவார்கள்.

ருஷ்யாவில் விஞ்ஞான சாஸ்திரிகள் நட்புடன் ஒத்துழைப்பார்களென்பதற்கு உருவான அடிப்படைகள் இருக்கின்றன. ருஷ்ய விஞ்ஞான சாஸ்திர அகெடமியை ஸ்தாபிக்க ராயல் சொஸைடிதான் முக்கியகாரணமாகயிருந்தது.

ஆரம்பம்முதலே ருஷ்ய அகெடமிக்கும் ராயல் சொஸைடிக்கும் உள்ள சம்பந்தங்கள் சௌஜன்யமாக இருந்தன. இரண்டு ஸ்தாபனங்களும் ஒன்று மற்றொரு ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களைக் கௌரவித்து வெகுமதிகளை வழங்கியிருக்கிறது. 1912-ம் வருஷத்தில் நியூடனின் 300-வது வருஷ விழாவை ருஷ்யா விமர்சையாகக் கொண்டாடிற்று. யுத்த நிலைமையையும் பொருட்படுத்தாமல் நியூடனின் அரிய சேவைகளைப்பற்றிய இரண்டு புஸ்தகங்களை ருஷ்ய அகெடமி பிரசுரம் செய்தது. விஞ்ஞான சாஸ்திர உலகத்தில் நம்பிக்கையும் நியாயமான பாராட்டும் காணப்படுகிறது. மாஸ்கோவிலும், லெனின்கிராட்டிலும் நடைபெறும் கொண்டாட்டங்களிலிருந்து அனேக பிரயோஜனங்கள் ஏற்படலாம்.

---

## பிரிடனின் முதல் விமானப்படை தளபதி.

### கடல்படையைச் சேர்ந்த விமானப்படையின் முக்கியத்துவம்.

வெர்னூன் ப்ரௌன்.

யுத்தத்தில் பிராபல்யம் பெற்ற விமானிகளில் ஒருவரான உதவி தளபதி D. W. பாயிட், வயது 52, பிரிடனின் விமானப்படை தளபதியாக முதல் முதலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப்படி நியமனம் கடற்படை மூலமாக விமானங்களை உபயோகிப்பதில் முக்கியமான மாறுதலை வெளிப்படுத்துகிறது. மேலும் கடற்படையுடன் விமானங்களையும் ஒன்றுபடுத்தி உபயோகிப்பதில் அதிக அபிவிருத்தியையும் குறிப்பிக்கிறது. இந்த மாறுதல் முக்கியத்துவமுள்ளதென்பது, 5-வது கடல் பிரபு ஸ்தானத்தைக் காலி செய்திருக்கும் ஒரு ஆபீஸரை அதன் தலைவராக நியமித்திருப்பதிலிருந்தே வெளியாகும்.



இந்த நியமனத்திலிருந்து கடற் தளபதி பாயிட் பிரிடனிலுள்ள எல்லா கடல் விமானங்கள் உள்ள தளங்களைக் கண்காணிப்பு செய்து வருவாரென்றும், கடற்படையில் விமானப்படை பயிற்சியானது கடற்கரையிலிருக்கும் விமானத்தாங்கிகளிலிருந்து நடத்தப்படுகிறது என்றும் பொருள்படும்.

பிரிடனில் உபயோகமுள்ள வகையில் 50 கடல் விமானப்படை ஸ்டேஷன்களும், பகுதிகளும் இருக்கின்றன. இன்னும் சில நிலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடற்தளபதி பாயிட்டின் தலைமை காரியாலயம் லீ-ஆன் ஸொலண்டிலிருக்கும்.

கடல் விமானங்களில் கடற்படை இலாகாவுக்குள்ள அக்கறையை அறியவேண்டுமானால் கடல்விமானங்கள் என்பதற்கு பதிலாக கடற்படை பறப்பது, கடல்விமானம் ஓட்டுதல் என்ற பதங்கள் உபயோகிக்கப்படுவதை கவனித்தாலே போதும். கடற்படை வேலைக்காரர்களில் மூன்றில் ஒரு பங்கான கடல்விமானப் போக்கு வரத்து கடற்படையின் [illegible] அம்சமென்றும், தனிப்பட்ட படையல்லவென்றும், பொதுஜனங்களிடம் அறியும்படி செய்ய இதன் மூலம் முயர்ச்சி செய்யப்படுகிறது.

கடற்தளபதி பாயிட் இல்லஸ்ட்ரியஸ் என்ற விமானத்தாங்கியின் மாஜி கமாண்டர். அவர் தலைமை வகித்தபொழுது அந்தக் கப்பலை மத்யதரைக்கடலில ஜெர்மன் பருந்துப்பாய்ச்சல் விமானங்கள் குண்டுகளைப்போட்டு தாக்கின. அதற்குப்பின் கடல் விமானங்கள் முஸோலினியின் கடற்படையை டாரன்டோவில் தாக்கியபொழுதும் அது தாக்கப்பட்டது.

உதவி கடற்தளபதி பாயிட்டுக்கு பதிலாக ஐந்தாவது கடல் பிரபுவாக சென்ற மாதத்தில் நியமிக்கப்பட்ட ரியர் அட்மிரல் தாமஸ் ட்ரௌபிரிஜ் கடற்படை, விமானப்படை ஒத்துழைப்புக்கு ஜவாப்தாரியாக இருப்பார். அவருக்கு கடற்படை இலாகாத் தலைமை ஆபீஸரும் ஒத்தாசை செய்வார்.

---

## தொழிற்சாலைகள் தூரக்கிழக்குப் போருக்காக உற்பத்தியைத் துவக்குகின்றன.

### பஸிபிக் போருக்கு முதன்மை அளிக்கப்படுகிறது.

கார்டன் ஷாபர்.

ஜப்பானைத் தாக்கும் இறுதிப் போருக்கு உத்தேசிக்கப்பட்ட விமானங்கள் பிரிடிஷ் யுத்த தொழிற்சாலைகளில அபரிமிதமாகச் செய்யப்படுகின்றன. சாம்ராஜ்ய, அமெரிக்க விமானப்படையுடன் போர் புரிந்துவரும் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியைத் தாக்கியது போல் ஜப்பானின் தொழிற்சாலை நகரங்களின் பேரில் மின்னல் தாக்குதலைத் துவக்கும்.

விமான சாஸ்திர ஆராய்ச்சிகளும், ஐரோப்பியப் போரில் கிடைத்த தொழிற்சாலை, நடவடிக்கை அனுபவமும் தூரகிழக்கில் பிரிடனுடைய யுத்த முயற்சிக்கு அடிப்படையாக இருக்கும்.

அனேக மாதங்களாக ஐரோப்பியப் போர்முனையிலிருந்து ஆசியாப் போர் முனைக்கு யுத்த முயற்சிகளை மாற்றி அமைக்க நிபுணர்கள் திட்டங்கள் போட்டு வருகிறார்கள். ஜெர்மனியுடன் நடைபெற்ற போருக்கு முதன்மை அளிக்கப்பட்டபொழுது யந்திரங்களும் மூஸ்தீப்புகளும் கொஞ்ச தூரம் செல்லக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது வெகுதூரம் செல்லுவதற்காக சூபர் பறக்கும் கோட்டைகளைப் போல வெடிவிமானங்கள் கட்டப்படுகின்றன. இந்த விமானங்கள் ஏராளமான வெடிகுண்டுகளை ஏந்திச் செல்லலாம். மலைகள் பேரில் பறந்து செல்லுவதிலும் பஸிபிக் போரில் காணக்கூடிய பல்வேறுபட்ட சீதோஷ்ண ஸ்திதியிலும் தோன்றக்கூடிய சிரமங்களை நிவர்த்திக்க விசேஷமான ரேடியோ மூஸ்தீப்புகளையும், தூரம் கண்டு பிடிக்கும் கருவிகளையும், பிரிடிஷ் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்துவருகின்றன.

யுத்த சம்பந்தமான விஞ்ஞான சாஸ்திரத்தில் ரேடியோ அதிக முன்னேற்றமடைந்திருக்கிறது. ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியபொழுது பிரிடிஷ் விமானிகளுக்கு இப்பொழுது உதவும் சில கருவிகள் அறியப்படவில்லை, ஜெர்மனியை வெடிகுண்டுகளால் தாக்குவதிலும் ஹிட்லரின் வெடிவிமானங்கள், பறக்கும் வெடிகுண்டுகள், [illegible] வாணங்கள் முதலியவற்றை வெற்றிகரமாக சமாளிப்பதிலும், உபயோகப்படுத்தப்பட்ட பலமான

ஆராய்ச்சி முறைகள் மூலம் இந்தக் கருவிகள் தயாரிக்கப்பட்டன. குறிப்பாக வெடிகுண்டுகளை வீசுவதற்காக அநேக வருஷங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியாலும் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

உஷ்ணந்த ரேகைக்குத் தக்கவாறு விஞ்ஞான சாஸ்திரத்தை அன்வயப்படுத்தவும் அதிக முயற்சி செய்யப்படுகிறது. தூரக்கிழக்கில் காணப்படும் காலநிலை, தொத்து வியாதிகள், மற்ற இடுக்கண்கள் முதலியவற்றை சமாளிக்க திட்டம் போடப்படவேண்டும், சாமான்களும் ஆயுதங்களும் பாக் செய்யப்பட்டு குவிக்கப்படவேண்டும். யுத்தத்தின் அவசியத்துக்குரிய சகலவிதமான பொருள்களும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஜப்பானிய யுத்தம் சம்பந்தப்பட்டமட்டில் பிரிடிஷ் உற்பத்திசாலைகள் அபரிமிதமாக ஆரம்பிக்கின்றன. ஜெர்மன் யுத்தத்தில் உற்பத்திகள் சாவதானமாகவும் அதிக சிரமத்துடனும் ஆரம்பிக்கப்பட்டன. அவசியமான தளவாடங்கள் கிடைக்கும் வரையில் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டன. இன்று தொழிற்சாலைகள் ராணுவத்துக்குரிய சகல பொருள்களையும் உற்பத்தி செய்யக்கூடும்.

ஐரோப்பாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு விட்டதால், பொது ஜனங்களின் கவனம் பொதுஜன உற்பத்தி பிரச்னைகளில் செலுத்தப்படுகிறது. ஆகிலும் எல்லா ராஜீயக் கக்ஷிகளும் ஆதரிக்கும் பிரிடிஷ் நிர்வாகத்தின் திட்டங்களில் ஜப்பானைத் தாக்கும் போருக்கு முக்கியத்துவம் அளிக்கிறதென்று வற்புறுத்திச் சொல்லலாம். அதாவது யுத்தத்துக்கு அவசியமான தொழிற்சாலைகளுக்கெல்லாம் தாதுப்பொருள்களும் தொழிலாளர் சப்ளையும் முக்கியமாக அளிக்கப்படும். தொழிலாளர் சங்கங்களும் கூடுமான வரையில் ஒத்துழைப்பதாக வாக்குறுதி செய்திருக்கிறார்கள். ஹிட்லரை முறியடிக்க பூர்ணமான உற்பத்தியை உத்தரவாதம் செய்வதில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட ஒன்றுபட்ட உற்பத்தி கமிட்டி தொழிலாளிகளிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு முன்போல உற்பத்தியைச் செய்துவரும். பிரதேசங்களிலுள்ள ஐச்வர்யங்களையும் தனிப்பட்டவர்களின் முயற்சியையும் வெற்றிகரமாக ஒன்று திரட்டிய ஸ்தாபன உற்பத்தி சங்கங்களும் முன்போல வேலை செய்துவரும்.

ஜப்பானிய யுத்த தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகளை நொருக்கவும் ஜப்பானிய ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து அவைகளுக்கு யுத்த தளவாடங்கள் வராமல் துணிக்கவும், விமான நடவடிக்கை தூரக்கிழக்கில் நடைபெறும். ஹிட்லரை முறியடிக்க ஒன்றுபட்டது போல் ஜப்பானியரை முறியடிக்கவும் பிரிடிஷ் மக்கள் மற்ற நேசநாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். இதிலிருந்து யுத்தம் முடியும் வரையில், உள்நாட்டு விவகாரங்கள் தோன்றாது என்று சொல்லுவதற்கில்லை. இப்பொழுது சமாதான காலத்திற்கும் யுத்த முயற்சிக்கும் உற்பத்தியை அதிகரிக்க கவனம் செலுத்த இடமிருக்கிறது. தொழிலாளர் சங்கங்களும் தொழிலாளிகளும் சமாதான காலத்தில் தங்களுடைய நிலைமையை பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கவலைப்படுகிறார்கள்.

ஐரோப்பிய யுத்த சமயத்தில் ஒத்திவைக்கப்பட்ட அநேக பிரச்னைகள் மறுபடியும் தோன்றிவிட்டன. ஒன்றுபட்ட நடவடிக்கை என்ற பிரிடிஷ் யந்திரம் யுத்த காலத்தில் பரிபாலிக்கப்பட்டு வலுவடைந்திருக்கிறதென்பது திருப்திகரமான நடவடிக்கை. கூட்டு நடவடிக்கையினால்தான் தேசத்தின் பூரா ஐச்வர்யங்களையும் திரட்ட இயன்றது. இந்த யந்திரம் இன்றும் நிலை பெற்றிருக்கிறது. எல்லோரிடமும் நல்லெண்ணம் காணப்பட்டால் அந்த கூட்டுயந்திரம் சமாதான பிரச்னைகளையும் சிலாக்யமான முறையில் தீர்க்கக்கூடும்.

---

## பசிபிக்கில் விஞ்ஞான சாஸ்திரம் மிதந்து செல்லுகிறது

### பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கடற்படைத் தொடர்.

(வால்டர் ஷூபிக்).

1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 28-ம் தேதி அன்று சொற்பொழிவாற்றியபொழுது, 1944-ம் வருஷ ஆரம்பத்திலேயே கடற்படைத் தொடரைக் கட்டும் வேலை ஆரம்பமாகிவிட்டதென்று மிஸ்டர் சர்ச்சில் வெளிப்படுத்தினார். பெரிய, யுத்தக் கப்பல்கள் சில குறிப்பிட்ட காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு பழுதுபார்க்கும் கப்பல்களாகவும், வெடிமருந்து, சர்ப்பரா, சப்ளைக் கப்பல்களாகவும், ஓய்வு எடுத்துக்கொள்ளும் கப்பல்களாகவும், சலனம் செய்யும் ஆஸ்பத்திரிகளாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மிதக்கும் அணைக்காவல் கடற்



படை சலனம் செய்துவரும். ஒவ்வொரு பிரிடிஷ் கடற்படையின் நடமாட்டத்தையும் அதிகரிக்கும். ஏனெனில் கப்பற்படை இனிமேல் அநேக மாதங்கள் வரையில் தரையிலுள்ள தளங்களை நம்பியிருக்கவேண்டியதில்லை.

கடற்படை யுத்த சரித்திரத்திலேயே ஒப்பற்றதான இந்த நவீன கடற்படைத் தொடர் பசிபிக் கடலில் உதவி கடற்தளபதி ஸர் பெர்னார்ட் ராலிங்க்ஸின் தலைமையில் வேலை செய்து வருகிறது. ரையூகியூஸ் தீவுகளில் ஜப்பானியரைத் தாக்கும் போர்க்கப்பல்களுக்கு அது உதவிசெய்து வருகிறது.

அந்த கப்பற்படைத் தொடரில் மூழ்கிய கப்பல்களை எடுக்கும் கப்பல்களும், கடலில் செல்லும் இழுப்புக் கப்பல்களும், வெடிமருந்துக் கப்பல்களும், குடிதண்ணீர் சப்ளைக் கப்பல்களும், விமானத் தாங்கிகளும், ஒர்க்ஷாப்புகளும், மதுபான சாலைகளும், நாடகம், பொழுதுபோக்குக் கப்பல்களும், சர்ப்பராக் கிடங்குகளும் உள்ள கப்பல்களும் இருந்து வருகின்றன. ஜூல்ஸ்வெர்னேயின் ஆகாசக் கோட்டைகள் இப்பொழுது யதார்த்தமாகி விட்டன.

இந்த விசேஷக் கப்பல்களில் ஒவ்வொன்றும் விசித்திரமான அமைப்புள்ளது. கடற்படை சிற்பிகள், டாக்டர்கள், ரசாயன சாஸ்திரிகள், திரேக சாஸ்திர நிபுணர்கள், உஷ்ணந்த ரேகை பிரதேசத்தில் அனுபவம் பெற்ற தத்வதரிசிகள், முதலியவர்களின் ஒன்றுபட்ட பரிசோதனையின் பேரில் சூரிய வெப்பம் மிகுதியான சமுத்திரங்களில் வெகுதூரம் பிரயாணம் செய்வதில் மாலுமிகளுக்குள்ள வாழ்க்கை சிரமங்களை நிவர்த்திக்க முறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

கடற்படை இஞ்சினியர்கள் முக்கியமாக காற்று சம்பந்தமான பிரச்னையைத்தான் தீர்க்கவேண்டியிருந்தது. அதையும் அவர்கள் வெற்றிகரமாகத் தீர்த்துவிட்டார்கள். அடைபட்டு, துர்நாற்றம் வீசும் காற்றை அப்புறப்படுத்துவதற்கும் நல்ல காற்று வீசும்படி செய்வதற்கும், விசிறிகளும், பலகணிகளும் காற்று வீசும் குழாய்களும், காற்று கம்பிரெஸர்களும், காற்றை இழுக்கும் குழாய்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆஸ்பத்திரி வார்டுகளிலும், தூங்கும் அறைகளிலும் காற்று ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தரம் மாற்றப்படுகிறது. எஞ்சின் அறையில் ஒவ்வொரு நிமிஷமும், படகுகளில் 30 செகண்டுகளுக்கு ஒரு தரமும் மாற்றப்படுகிறது.

போர் வட்டாரங்களுக்குள் செல்லும் கப்பல்களுக்கு இரவு காலங்களில் விளக்கு இருக்கக்கூடாதென்பதினால் கடற்படை சிற்பிகள் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. விமானங்களைப் பழுதுபார்க்கும் கப்பலை எடுத்துக் கொள்ளுவோம். அதில் 18 பெரிய, பூர்ணமான முஸ்தீப்புகளுள்ள ஒர்க்ஷாப்புகள் இருக்கின்றன. கடைசல் பிடிக்கும் யந்திரங்களும் உலைகளும் இருக்கின்றன. 250 பிட்டர்களும் 80 மின்சார வேலைக்காரர்களும், 360 கருமான்களும், டர்னர்களும், மற்ற உலோக வேலைக்காரர்களும் இருக்கிறார்கள். கப்பலில் ஓய்வெடுத்துக்கொள்ளும் அறைகளும், தாராஸ்நான அறைகளும், துணிமணிகளை வெளுக்கும் பண்டகசாலைகளும், சமையல் அறைகளும், ஜோடுகள் பழுதுபார்க்கும் இடமும், தையல் கடையும், சினிமாக் கொட்டகையும் இருக்கின்றன. இந்த கப்பலில் எல்லா சௌகரியங்களும் இருக்கின்றன.

மற்றும் சில கப்பல்களில் மதுபானம் தயாரிக்கப்படுகிறது. ஐஸ் பதார்த்தம் தயாரிக்கப்படுகிறது. மாலுமிகள் உல்லாசமான அங்கணங்களிலும் லாகிரி வஸ்துக்களிலிருக்கும் அறைகளிலும் கூடிப்பேசலாம். சென்ற சில மாதங்களில் பிரிடிஷ் கடற்படை சீதளப்படுத்தும் கருவிகளை ஏராளமாக வாங்கியிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு சராசரி 500 கருவிகள் வாங்கப்பட்டன. நோய்வாய்ப்பட்டவர்களுக்காகத் தனிப்பட்ட கப்பல்களிருக்கின்றன. அவைகளில் மருந்து அறைகளும் இருக்கின்றன. சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு அந்த அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெரிய ரசாயன பரிசோதனைசாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

## ரெங்கூன்—விமானங்களுக்கு பாய்ச்சல் ஸ்தலம்.

### இரண்டு ரகசியமுள்ள விமான தளங்கள்.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

பிரிடனின் விமான தள இஞ்சினீயர்கள் பர்மாவில் காணப்படும் பருவ கால மழையையும் பொருட்படுத்தாமல் ரெங்கூனை வெகு வேகமாகச் சீர்படுத்திவருகிறார்கள்.

இப்பொழுது முடிவடையப்போகும் பர்மாப் போர் எந்தப் போர்முனையையும்விட இங்கு வெற்றிக்கு விமானப்படை உதவி அவசியம் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. தரைப்படைகளின் நடமாட்டத்திற்கு அவசியமான விமான ஸப்ளையும், சண்டை விமானங்களுடையவும், வெடி விமானங்களுடையவும் உதவியும், ஒன்றுபட்டு ஏற்பட்டபின் ரெங்கூன் இரண்டாவது உலக யுத்தத்தில் நமக்குக் கிடைத்துள்ள பெரிய லாபம் என்றே சொல்ல வேண்டும்.

ஆகிலும் தெற்கிலிருந்து முன்னேறிய 14-வது சேனைக்கு அது பழுத்த பழமாகக் கிடைக்கவில்லை.

ரெங்கூனைச்சுற்றி சிட்டாங்க், இராவதி நதிக்கரைகளில் சிலாக்கியமான விமான தளங்களை ஜப்பான் பெற்றிருந்ததென்றும் எல்லோரும் நம்பியிருந்தார்கள். பிரிடிஷ் நிபுணர்களுக்கு இதன் உண்மை நன்கு தெரியவரும். ஓடும் வழிகள் நீண்டதாக இல்லை. பலமாக அமைக்கப்படவில்லை. அதிக மழை பெய்து கனமான போக்குவரத்து விமானங்கள் நடமாடினால் ஓடும் வழிகளில் பள்ளங்கள் ஏற்பட்டுவிடும்.

ஆகையால் இப்பொழுது விமான தளங்கள் துரிதமாகத் திருத்தியமைக்கப்படுகின்றன. ஓடும் வழிகள் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்படுகின்றன. பெரிய போக்குவரத்து விமானங்கள் தங்கியிருக்கக்கூடிய ஸ்தலங்கள் திருத்தியமைக்கப்படுகின்றன. இந்தத் தளங்கள் கனமான மழை பெய்தாலும் உபயோகிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

இந்தத் தளங்கள் இரு வகையில் உபயோகமுள்ளதாக இருக்கும். இவைகளிலிருந்து C. 47, C. 46 விமானங்கள் சேனைக்கு வேண்டிய சர்ப்பராக்களை எடுத்துச்செல்லும். சாமான் குவியல்களையும் அமைக்கும். அவைகளுக்குப் பக்கத்தில் சண்டை விமானங்களும், டைபர் வெடி விமானங்களும், அவுட் வெடி குண்டுகளையும், பீரங்கிகளையும் வைத்துக்கொண்டு படைகளுக்கு உதவி செய்யப்புறப்படும்.

விமான தளங்களை வேகமாகக் கட்டுகிறவர்கள் பர்மாவில் என்ன சாதித்திருக்கிறார்கள் என்பதை விளக்கிக்காட்ட சில புள்ளி விவரங்களை இங்கு கூறுவோம்.

1944 டிஸம்பர் முதல் 1945 மே முடிய ஆறு மாதங்களில் 14-வது சேனை நல்ல காலத்திற்குரிய 75 விமான தளங்களையும், 88 ஓடும் வழிகளையும், 850 மைல்கள் முன்னேறுவதற்குள் அமைத்திருக்கிறார்கள். அதாவது 2½ நாளில் சராசரி ஒரு புதிய விமான தளம் அமைக்கப்பட்டிருக்கிறது.

படைகள் வேகமாக முன்னேறியதினால் அமைக்கப்பட்ட சில தளங்கள் உபயோகிக்கப்படாமல் போய்விட்டன. இரண்டு நாட்களுக்குள் படைகள் வெகு தூரம் முன்னேறிவிட்டதினால் விமான தள இஞ்ஜினியர்கள் முன்னணி ஸ்தலங்களில் புதிய விமான தளத்தை அமைப்பது சௌகரியமென்று நினைத்துவிட்டார்கள்.

காடுகளிலுள்ள பொட்டல்களிலும், வயல்களிலும் 60 மணிகளுக்கு ஒன்று வீதம் விமான தளங்கள் அமைக்கப்பட்டதாலும், தரை மார்க்கமான போக்குவரத்துகள் அந்த நாட்டில் குறைவாக இருப்பதினாலும், போக்குவரத்து விமானப்படை புதிய விமான தளங்களைக் கண்டுபிடிக்க லேசான விமானங்களை அனுப்பி வந்தது. விமானி விமானத்தை ஒரு சிறிய இடத்தில் இறக்கி இஞ்ஜினியர்கள் அதைப் பழுது பார்க்கும்படி செய்வார்கள். அதன்பின் அது ஒரு முக்கிய தளமாக ஆகிவிடும். ஒத்திகையும், ஆடம்பரமும் தேவையில்லை. போக்குவரத்து விமானங்கள் அங்கு சென்று சாமான்களை இறக்கிவிட்டுத் திரும்பிச் சென்றன.

அந்த விமானதளத்தை தேசப்படத்தில் குறித்து விமான ஸப்ளைத் தலைமைக் காரியாலயத்தில் தஸ்தாவேஜிகளில் பதிவு செய்யும் முன் இரண்டு மூன்று நாட்கள் ஆகிவிடும்.

14-வது சேனை தனிப்பட்ட முறையில் சாதித்தது பின்வருமாறு:—விமான தளங்களின் கோர்வையை சம்பாதித்தது. அதன் வழியாகத்தான் விமான மூலம் சர்ப்பராக்களும் எதிரியின் தற்காப்புகளை நொருக்கியதும், சாமான் குவியல்களை தீக்கிரையாக்கியதும், சர்ப்பரா மார்க்கங்களைத் துணித்ததுமான விமானங்கள் சென்றன. சில திட்டங்களுக்கு அமெரிக்க இஞ்ஜினியர்களும் பேருதவி செய்தும் ஆலோசனை கூறியும் இருக்கிறார்கள்.



இந்த வேலையில் 20,000 பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பர்மாவின் சூரிய வெப்பத்தில் புல் டோஜர்கள், சமப்படுத்தும் யந்திரங்கள், கிரேடர்கள், பிக்காஸுகள், மண்வெட்டிகளைக் கொண்டு அவர்கள் வேலை செய்திருக்கிறார்கள். அவர்கள் காடுகளை வெடி மருந்து மூலம் பிளந்தார்கள். மரங்களை அப்புறப்படுத்தினார்கள். புதருகளை வெட்டினார்கள். சில சமயங்களில் அவர்கள் ஜப்பானியர்களுடன் போர் புரிந்தார்கள். ஆனால் பெரும்பாலும் அவர்கள் சீதோஷ்ண ஸ்திதியுடனும், கொசுக்களுடனும், வியாதிகளுடனும்தான் கடுமையான போரை நடத்தவேண்டியிருந்தது.

இந்த வேலைக்காரர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்கள். ஆகிலும் அங்கு பிரிடிஷ் இஞ்ஜினியர்களும் ஆயிரக்கணக்காக இருந்து வந்தார்கள்.

முன்னணியிலுள்ள ஒவ்வொரு கவசம் பூண்ட பிரிகேட்டுடனும், ஒரு முன்னணி இஞ்ஜினியரிங் கோஷ்டியிருந்து வந்தது. டாங்கிகளுடன் புல் டோஜர்களும் சென்றன. விமான தள அமைப்புக்குக் குறைவான குந்தகம் ஏற்பட்டபொழுது இஞ்ஜினியர்கள் வேலையைத் துவக்கினார்கள்.

அடிக்கடி அவர்கள் குண்டுவீச்சுக்குட்பட்டார்கள். யந்திரத்தை ஓட்டிக்கொண்டிருக்கும்பொழுது ஓட்டிகள் கொல்லப்பட்டார்கள். ஆனால் மற்றொருவர் அந்த இடத்திற்கு வந்து யந்திரத்தை ஓட்டிச் சென்றான். கனமான முஸ்தீப்புகளின் பெரும்பாகம் பயங்கரமான ரஸ்தாக்கள் வழியாகக் கொண்டுபோகப்பட்டாலும், தளவாடங்கள் விமான மூலமும் கொண்டு போகப்பட்டன. உதாரணமாக தூசியைத் தவிர்க்க 100 மைல்கள் நீளமுள்ள நெருப்பு அணைக்கும் குழாய்கள் விமான மூலம் கொண்டுவரப்பட்டன. தண்ணீர்க் குழாய்களும், விமான மூலம் சென்றன. ஓடும் வழிகளுக்கு அவசியமான ஹெஸ்ஸியானும் நாலாயிரம் டன்கள் வரை விமான மூலம் கொண்டுபோகப்பட்டன.

பர்மாவில் வரண்டையான மாதங்களில் செய்த வேலைகள் இவ்வளவுதான். ஆகிலும் பருவ கால மழை கடுமையான எதிரி. அதையும் அவர்கள் இப்பொழுது சமாளித்து வருகிறார்கள்.

விமான தள இஞ்ஜினியரின் ரிபோர்ட் பின்வருமாறு:—"நடு ராத்திரிக்கும் விடியற் காலத்திற்கும் மத்தியில் 5¼ அங்குலம் மழை பெய்தது. பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. காற்றுகள் என்னுடைய அறையின் மேல் கூரையை அப்புறப்படுத்திவிட்டன. கிலி பிடித்த ஆபீஸர்களும் இருட்டில் அறுகுறையாக நிர்வாணமாயிருந்து வேலை செய்து வரும் வேலைக்காரர்களும், அடிக்கடி தோன்றும் மின்னல் வெளிச்சத்தின் உதவிகொண்டு நாசத்தைத் தவிர்த்துவிட்டார்கள்".

இவ்விதமான நிலைமைக்குட்பட்டு இஞ்ஜினியர்கள் தெற்கு பர்மா பிரதேசத்தை போரின் அடுத்த கட்டத்துக்காக விமான தளமாக அமைக்க முயன்றுவருகிறார்கள். அவர்கள் சாதிக்கக்கூடியதுதான் 14-வது சேனையைச் சேர்ந்தவர்களின் தீரத்துக்கும், சாதுர்யத்துக்கும், ஆர்வத்துக்கும் புகழுரையாகும். அவைகளை நல்ல முறையில் உபயோகிப்பதென்பது பிரிடிஷ் விமானப்படையின் பொறுப்பாகும்.

நமது விமானிகள் வருங்காலத்தில் இஞ்ஜினியர்களின் பிரயத்தனம் வீணாகாமல் செய்துவிடுவார்கள் என்று அனுபவத்திலிருந்து தெரியவருகிறது.

## ரெங்கூனில் வெற்றிக்கான ஒத்திகை.

### அழகான ராணுவப் போக்கு.

(டெயிலி மெயிலின் ரெங்கூன் நிருபர்).

தங்க மயமான ஷ்வேடாகன் கட்டடத்தின் நிழலிலுள்ள கால்ப் விளையாட்டு ஸ்தலத்தில் மழையில் நனைந்த, கிழிந்துபோன சிகப்பு வர்ணமுள்ள கொடி பறக்கின்றது. உயர்தர நேசதேச கமாண்டரான கடற் தளபதி லூயி மௌண்ட் பேடன் பிரபுவின் ஸமக்ஷத்தில் ஜுன் மாதம் 15-ம் தேதியன்று நேசதேசப் படைகளின் வெற்றி ஒத்திகை நடந்தபொழுது, இருண்ட ஆகாயத்திலிருந்து மழை பெய்துகொண்டிருந்தபொழுது நடைபெற்ற கொடி ஏற்ற விழா எல்லோருடைய மனதையும் கவர்ந்தது.

ஏனெனில் கிழிந்த, சாயம்போன கொடியின் சரித்திரம் அற்புதமானது. மூன்று வருஷங்களுக்குமுன் ஜப்பானியர்கள் ரெங்கூனில் பிரவேசித்தபொழுது இந்தக் கொடி பறந்துகொண்டிருந்தது. அவர்கள் அதைக் கைப்பற்றி ஜப்பானுக்கு அனுப்பிவிட்டார்கள். சில மாதங்களுக்குமுன் அலூஷியன் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த அட்டுத் தீவைத் தாக்கிய அமெரிக்க மாரின் படைகள் அதைத் திரும்பவும் கைப்பற்றின. அமெரிக்கர்கள் அதை மறுபடியும் ரெங்கூனில் பறக்கவிடும்படி அனுப்பினார்கள்.

லூயி பிரபு தோரணங்கள் அமைக்கப்பட்ட மேடையிலிருந்து துருப்புகளுக்குப் பிரசங்கம் செய்துவிட்டு, அந்தக் கொடியை எடுத்துக்கொண்டு, த்வஜஸ்தம்பத்துக்குச் சென்று அதைக் கடற்படை வேலைக்காரர்களிடம் கொடுத்தார். அதன் பின் அந்தக் கிழிந்த கொடி அதன் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டது.

மேடைக்குப்பின் பிரிடிஷ், அமெரிக்க, சீன, பிரெஞ்சு, பர்மா, டச்சுக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. ஆகிலும் ஈரத்தினால் த்வஜஸ்தம்பத்தில் ஒட்டிக்கொண்டிருந்த பழைய கொடி தூரக்கிழக்கின் வெற்றியை சூசிப்பதுடன் புதிய கொடிகளின் சோபையையும் மங்கும்படி செய்துவிட்டது.

பர்மாவை விடுவித்த ஸோல்ஜர்கள் வைபவத்தை வெகு அழகாகக் கொண்டாடினார்கள். பொட்டலில் தாரை தாரையாகப் பெய்துகொண்டிருந்த பருவகால மழையும் ஒத்திகையின் ஆடம்பரத்தையும் சோபையையும் கெடுக்க முடியவில்லை. ரெங்கூன் மாதா கோவிலுக்கு அருகில் உள்ள வந்தனமளிக்கும் த்வஜத்தைத் தாண்டி 5,000 பேர்கொண்ட சேனை சென்றது. அவர்கள் ரெங்கூனிலுள்ள தெருக்கள் வழியாகச் சென்றார்கள். பர்மியர்களும், சீனர்களும், நீல, சிவப்பு, பச்சை வர்ணமுள்ள லுங்கிகளை அணிந்துகொண்டு, பெரிய குடைகளைப் பிடித்துக்கொண்டு ஆரவாரம் செய்தார்கள்.

கெட்ட பருவ காலமும் கனமான மேகங்களும் பிரிடிஷ், அமெரிக்க விமானப்படை ஒத்திகையைக் கெடுத்துவிட்டன. அதற்கு போரில் வெகு காலமாக ஈடுபட்டிருந்த ஒரு ஹரிகேன் சண்டை விமானம் தலைமை வகித்தது. அதை பிரிட்டனுக்கு ஆன போரில் ஈடுபட்டிருந்த விங் கமாண்டர் கோர்டனே ஓட்டிவந்தார்.

மற்ற துருப்புகள் வெடிகுண்டு வீச்சினால் அழிக்கப்பட்ட வீடுகளிலிருந்தும், மேன் கூரைகளிலிருந்தும் வைபவத்தைக் கண்ணுற்றன. சிலர் அப்பொழுதுதான் சில மைல்கள் தாண்டியிருந்த ஜப்பானியப் படைகளைத் துடைத்துவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய சகோதரர்களை பீதியுடனும், ஆச்சரியத்துடனும் கண்ணோக்கினார்கள்.

இந்த வைபவத்தில் ஒன்று குறைவாக இருந்தது. பர்மா வெற்றியில் சேனைக்குத் தலைமை வகித்த லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் வில்லியம் ஸ்லிம் காணப்படவில்லை. அவர் இப்பொழுது லண்டனிலிருக்கிறார்.

---

## விமான பலம் ஜப்பானியர்களை நிலைகுலைக்கிறது.

### பர்மாவில் சாதுர்யத்தின் போர்கள்.

**விங் கமாண்டர் L. V. பிரேசர்.**

சமீபத்தில் கைது செய்யப்பட்ட ஜப்பானியப்படை ஆபீஸர் பர்மாவில் ஜப்பானியர்கள் முறியடிக்கப்பட்டதற்கு 14-வது சேனையின் மேன்மையான சலன சக்திதான் காரணமென்று சொன்னார். எந்தப் போர்முனையிலும் நடைபெறாத போக்குவரத்து விமானப்படையின் உபயோகத்தை அவர் குறிப்பிட்டார் என்று சொல்லப்படுகிறது. அதாவது படைகள் அடர்த்தியான காடுகளில் துணிக்கப்பட்டிருந்தபொழுதும் அவைகளுக்கு விமானப்படை உணவுப்பொருள்களையும் ஆடைகளையும் ஆயுதங்களையும் வழங்கிவந்தது.

நேசதேச விமானப் படைசக்தியின் மற்றொரு அம்சத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. ரஸ்தாக்கள், இருப்புப்பாதைகள், நதிப்போக்குவரத்துகளை விமானங்கள் தாக்கியதினால் பர்மாவிலும், ஸியாமிலுமுள்ள போக்குவரத்து மார்க்கங்கள் அடைபட்டு துணிக்கப்பட்டுவிட்டதால் ஏற்பட்ட குழப்பத்தினாலும் ஜப்பானியரின் தோல்வி ஏற்பட்டதென்று ஜப்பானியக் கைதி சொல்லியிருக்கலாம்.



14-வது சேனை ஒருசிறிதுதான் இந்த மூவகைப்பட்ட போக்குவரத்துகளை உபயோகித்து வந்தது. அது ரஸ்தாக்களும், இருப்புப்பாதைகளும் குறைவானதும், பள்ளத்தாக்குகள் மிகுதியானதுமான பர்மாவின் ஒரு கடினமான பாகத்தில் போரை நடத்திவந்தது. ஜப்பானியர்கள் இவைகளைத் தவிர மற்ற போக்குவரத்து சாதனங்களை உபயோகிக்கவில்லை.

நேசதேச விமான ஆதிக்கம் அவர்களை முறியடித்து வருகிறதென்று ஜப்பானியர்கள் நன்கு அறிவார்கள். ஆனால் அவர்களால் அதற்கு பரிகாரம் ஒன்றும் செய்யக்கூடவில்லை. விமான மூலம் ஸப்ளை அனுப்ப உதவிவந்த பிரிடிஷ், அமெரிக்க விமானப்படை ஆகாயத்தில் ஜப்பானிய விமானங்களை தலைகாட்டாமல் செய்துவந்தன. ஜப்பானிடம் போக்குவரத்து விமானங்கள் இருந்தனவென்று வைத்துக்கொண்டாலும் அவைகள் ஒரு தடவைக்குமேல் தப்பிப் பிழைத்திருக்கமுடியாது.

ஆகையால் எதிரி 19-வது நூற்றாண்டிலிருந்த போக்குவரத்து வசதிகளுடன் 20-வது நூற்றாண்டு யுத்தத்தை நடத்த வேண்டியதாயிற்று. அந்தப் போக்குவரத்துகளும் பிரிடிஷ் அமெரிக்க விமானப்படைகளால் இடைவிடாது தாக்கப்பட்டு வந்தன. ஆகிலும் ஜப்பான் தந்திரமும் சாகசக்யமும் உள்ள எதிரி. நேசதேச விமான பலத்தின் பயன்களைக் குறைவுபடுத்தும் முறையில் அவனுடைய புத்தி செலுத்தப்பட்டது. இந்தப் போரில் அவன் முறியடிக்கப்பட்டான். நாம் பர்மாவை சீர்படுத்தும்பொழுதுதான் இது புலப்படுகிறது. இந்தியாவின் வாசற்படிக்கு வந்த நடவடிக்கையின் ஆரம்பத்தில் ஜப்பானியர்களிடம் எஞ்சின்களும், வண்டித்தொடர்களும், மோட்டார்களும் ஏராளமாக இருந்தன. அவைகள் பெரும்பாலும் பிரிடிஷ், அமெரிக்கப்படைகள் பின் வாங்கியபொழுது கைப்பற்றப்பட்டவை.

இந்த வண்டிகளும், மோட்டார்களும், லாரிகளும் பைடர் வெடிவிமானங்களின் தாக்குதலுக்கு லக்ஷியமாகின. வெடிவிமானங்கள் இருப்புப்பாதை தங்குமிடங்களைத் தாக்கியதன் காரணமாக ரயில் வண்டிகளின் பெரும்பாகம் அழிக்கப்பட்டபொழுது ஜப்பானியர்கள் மோட்டார் லாரிகளை நம்பியிருந்தார்கள். அவைகளும் போதுமான அளவு அழிக்கப்பட்டதால் அந்தப் போக்குவரத்து சாதனமும் போதுமானதாக இல்லை.

அதன்பின் ஜப்பான் படகுகளை நதிகளின் மூலம் அனுப்பிவந்தது. அந்தப் படகுகள் சிறியது முதல் வெகுதூரம் செல்லக்கூடியவையாகவும் இருந்தன.

இங்கும் சண்டை விமானங்கள் குறிக்கிட்டன. வேனிர் காலத்தில் தூக்கணாங்குருவிகள் செல்லுவதுபோல விமானங்கள் நீர்மட்டத்திற்கு அருகில்சென்று வெடிகுண்டுகளையும், பீரங்கிவெடிகளையும், மரக்கலங்கள்பேரில் போட்டு , அவைகளை நூற்றுக்கணக்காக மூழ்கடித்தன.

அடுத்தபடியாக ஜப்பானியர்கள் பிராசீனமான இரட்டைமாட்டு வண்டிகளை உபயோகித்தார்கள். நாட்டுப்புற ரஸ்தாக்களில் செல்ல கெட்டியாக அமைக்கப்பட்ட இந்த வண்டிகளில் ஆறு மனிதர்களும் அல்லது 40 காலன் பெட்ரோல் தகரங்களும் ஏற்றிச் செல்லப்படலாம்.

உடைபட்ட டாங்கிகளை அப்புறப்படுத்த யானைகளும் உபயோகப்படுத்தப்பட்டன. பிரிடன் பின் வாங்கியபொழுது பர்மாவில் 2,000 பயிற்சிபெற்ற யானைகள் இருந்தன.

நேசதேச விமானப்படையிடம் ஜப்பானுக்கு ஏற்பட்ட மரியாதை பீதியும் குழப்பமும் ஆக மாறியபொழுது, விமானிகளின் திருஷ்டியிலிருந்து போக்கு வரத்துகளை மறைத்து வைக்கவும் ரக்ஷிக்கவும் ஜப்பானியர்கள் மிகுந்த பிரயத்தனம் செய்துவந்தார்கள்.

எஞ்சின்களையும் வண்டித்தொடர்களையும் காப்பற்ற ஜப்பான் முக்கியமான ஸ்டேஷன்களில் இரட்டிப்பான இருப்புப்பாதைகளுக்கான ஒளிகளைக் கட்டிற்று. சில சமயங்களில் அவைகளுக்கு மேன் கூறை அமைக்கப்பட்டன. சில சமயங்களில் அவைகள் திறப்பாக இருந்தன. ஆகிலும் கட்டடம் ஒரே மாதிரியாகத்தானிருந்தது. மிகவும் உயரமான எஞ்சினின் புகை எட்டாதவகையில் உயரமான காங்கிரிட் சுவர்கள் கட்டப்பட்டன. சுவர்களுக்குப் பக்கத்தில் காங்கிரட்டும் மறை முகப்படுத்தும் மூங்கில்களும் ஒன்றின் மேல் ஒன்றாகக் குவிக்கப்பட்டிருந்தன.

இது கனமான ரக்ஷணைதான். ஆகிலும் அவைகளும் பிளக்கப்பட்டன. இன்று உடைபட்ட அநேக எஞ்சின்கள் அந்த ஒளிகளில் நின்று கொண்டிருக்கின்றன. அந்த எஞ்சின்கள் பிரிடிஷ் ஜெர்மன், ஜப்பானிய உற்பத்தியாளரின் பெயர்களுடையவை.

அனுபவத்தின் மேல் நேசதேசவிமானிகள் சகல விதமான ரகசியங்களையும் ஊடுருவிச் சென்றன. தண்ணீர் கோபுரங்களுக்கு ஆதாரமானவைகளும், கயறுகளும் அவைகளைச் சுற்றி வளர்ந்திருந்த கொடிகளும் நொருக்கப்பட்டுவிட்டன. ஆற்றங்காலில் பாலங்கள் உடைந்து கிடக்கின்றன. தீவுகள் என்று தோன்றும் படியாக பசும் புல் ஏற்றிச் சென்ற படகுகள் தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கின்றன.

விமான நடவடிக்கை அபாரமானநாசத்தை விளைவித்ததினால் ஜப்பானியர்கள் பகல் காலத்தில் ஒரு சாமானையும் கடத்திச் செல்லுவதில்லை. ஆகிலும் இரவில், நாசம் குறைந்து விடவில்லை. நாசத்தின் தன்மையை 1944 மே மாதம் முதல் 1945 முதல் மே மாதம் முடிய உள்ள சண்டை வெடி விமானத்தின் ரிகார்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| வாகனங்கள். | | அழிக்கப்பட்டவை. | பழுதபட்டவை. |
|---|---|---|---|
| மோட்டார் போக்குவரத்துகள் | ... | 840 | 1806 |
| மாட்டு வண்டிகளும், மற்ற கால் நடை போக்குவரத்துகளும். | ... | 422 | 591 |
| ரயில் வண்டிகள் | ... | 55 | 701 |
| எஞ்சின்கள் | ... | 16 | 115 |
| நதிப்படகுகள் | ... | 433 | 1109 |
| நீராவி ரஸ்தா உருளைகள் | ... | 12 | 4 |

பர்மாவில் மாட்டு வண்டிகள் மறுபடியும் தோன்றிவிட்டன. அவைகள் நவீன யுத்த கஷ்டங்களைக் கண்டு ஓடின அகதிகளை மறுபடியும் அவர்களின் கிராமங்களுக்கு ஏற்றிச் செல்லுகின்றன.

முன்னொரு சமயம் பெருமை கொண்ட ஜப்பானியப்படையின் எஞ்சியபாகம் கால் நடையாக பாதையில்லாத வெளிகள் மூலம் ஸியாமை நோக்கிச் சென்று வருகிறது. இந்தப் பகுதியிலும் பசியும், வியாதியும், பிரிடிஷ் மறைந்து தாக்கும் கோஷ்டிகளும் அப்படைகளை அழித்து வருகின்றன.

---

## தென்கிழக்கு ஆசியா கமாண்டில் வைத்திய வசதி.

### தடுப்பதற்காக முயற்சி.

(டைம்ஸ் பத்திரிகை.)

டாக்டர்களைக் கலைத்துவிடுவது என்ற சர்ச்சைக்குப்பின் தென்கிழக்கு ஆசியா காமாண்டில் மிகுதியான வைத்திய ஆபீஸர்கள் தேவையென்று நிச்சயமாகத் தோன்றிவிட்டது.

லான்ஸெட் என்ற பத்திரிகையின் சமீப கால இதழில் நேசதேசப்படைகளின் வைத்திய ஆலோசகர் இதற்குள்ள முக்கியமான காரணங்களை விளக்கிக்காட்டி தூரக்கிழக்கில் தோன்றும் வியாதிகளை வரவொட்டாமல் தடுப்பதிலும், சொஸ்தப்படுத்துவதிலும், உள்ள கிரமங்கள் எவ்விதம் தவிர்க்கப்படுகின்றனவென்று சொல்லியிருக்கிறார். வியாதிமூலம் மனிதபலம் மிகுதியாக அழிக்கப்படுகிறது என்பதை அவர் சில வருஷங்களின் புள்ளி விபரங்களைக் கொண்டு நிரூபிக்கிறார். 1943-ம் வருஷத்தில் போர்முனையிலிருந்த 1,000 பேர்களுக்கு 1,200 பேர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். 1944-ல் அது 1,000-க்குக் குறைந்தது. எதிரியைவிட வியாதி மனிதபலத்தை மிகுதியாக அழித்திருக்கிறது. 1943-ல் அரகான் போரில் சில படைகளுக்கு ஒவ்வொரு ஆறுமுதல் 8 வாரங்களிலும் உதவிப்படைகள் பர்த்தியாக வந்துகொண்டிருந்தன.

ஆகிலும் இந்த கோரமான தோற்றத்தை நாம் மிகைப்படுத்தக்கூடாது. வைத்திய ஆலோசகர் சொல்லுவதுபோல நமது பிரிடிஷ், இந்தியப்படைகள் முதல்தரமான தேக ஆரோக்கியத்துடனும், மன உறுதியுடனும், இருந்து வருகிறார்கள். இப்பொழுது 351 வைத்திய நிபுணர்கள் இருக்கிறார்கள். மூன்று வருஷங்களுக்கு முன் அப்பேர்ப்பட்டவர்கள் 19-தான் இருந்தார்கள். இந்த நிபுணர்கள் வியாதியஸ்தர்கள் ஆஸ்பத்திரிக்கு வரும்வரையில் காத்திருப்பதில்லை. முன்னணி தளங்களுக்குச்சென்று வியாதியைப் பரவவொட்டாமலே செய்ய அவர்கள் முயன்றுவருகிறார்கள்.



தூரக்கிழக்கில் வியாதியால் பீடிக்கப்படுகிறவர்களில் ஐந்தில் நான்கு பாகத்தாரின் வியாதி தடுக்கக்கூடியதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மெடிகல் டிரக்டெரெட்டில் பிரசார இலாகாவையும் அமைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன. தடுப்பதற்கான எல்லா முறைகளையும் கையாளவேண்டுமென்று போர்ப்படைகள் அறியும்படியாக பிரசுரங்களும் வெளியிடப்படவேண்டும். மேலும் தூரக்கிழக்குப்போரில் தகுந்தபடி சேவை செய்யும்படியாக ரெஜிமெண்டுடன் உள்ள ஆபீஸர்களையும் தரம் வாரியாகப் பிரிக்க வேண்டும்.

டோக்கியோவுக்குச் செல்லும் போரில் வியாதியால் ஏற்படும் கெடுதல் பலமாக இருக்கும் என்று ஆலோசகர் சொல்லுகிறார். ராணுவ முன்னேற்றத்துக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய இந்த அபாயத்தைத் தடுக்கவும், சமாளிக்கவும், சாத்தியமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. பிரிடனில் சிறிது காலம் டாக்டர்கள் குறைவாகப்போகக்கூடியதாக இருந்தாலும் தூரக்கிழக்கில் போர் புரிகிறவனுக்கு மேன்மையான வைத்திய வசதி அளிக்கப்படவேண்டுமென்பதற்கு யாதொருவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள்.

---

## டிரக் தாக்குதலில் இருவகைப்பட்ட திட்டம்.

### மிகவும் உபயோகமுள்ள தளம்.

(பிரியான் டன்ஸ்டால்.)

பிரிடிஷ் பசிபிக் கடற்படை புதிய போர் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறது. டிரக்கிலுள்ள ஜப்பானியக் கடற்படை தளத்தின் பேரில் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்து வருகின்றன. விமானந்தாங்கிகளில் செல்லும் வெடி விமானங்களும், வெடி குண்டுகளையும், யந்திர பீரங்கியின் மூலம் குண்டுகளையும் வர்ஷித்து வருகின்றன. கப்பற்கட்டும் நிலயங்களும், விமான தளங்களும், ஒலிபெருக்கும் ஸ்டேஷன்களும் தற்காப்புக்கான பீரங்கிகளும், துறைமுகங்களிலுள்ள படகுகளும்தான் அவைகளின் லக்ஷியங்கள்.

ஜப்பானியர்கள் அதற்குபதிலாக தரையிலிருந்த பீரங்கிகளிலிருந்து குண்டுகளை சொல்பமாக வீசினார்கள். விமான எதிர்ப்பு பீரங்கிகளின் எதிர்ப்பும் அற்பமாக இருந்தது. எதிர்த்துத் தாக்க ஒரு ஜப்பானிய விமானமும் தலைகாட்டவில்லை. தரையிலிருந்த இரண்டு விமானங்கள் அழிக்கப்பட்டன.

டிரக் என்னும் தீவு காரொலைன் தீவுக்கூட்டத்தின் மத்தியிலிருக்கிறது. அதில் 200 வளைகுடாக்களிருக்கின்றன. அதைச்சுற்றி பவளக்கொடி நிரம்பிய குன்று இருக்கிறது. ஜப்பானிடம் பலமான கடற்படை இருந்திருந்தால் இரண்டாவது உலக யுத்தத்தின் ஆரம்பத்திலேயே ஜப்பானுக்கு மத்திய மேற்கு பசிபிக் ஸ்தானத்தைப் பரிபாலிக்க அது சிறந்த கப்பல் தளமாக இருந்திருக்கும்.

1944-ம் வருஷம் மே மாதத்தில் அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் டிரக்கை பலமாகத் தாக்கின. அதற்குப்பின் ஜப்பானியர்கள் அந்த தளத்தைக் கைவிட்டுச் சென்றார்கள்.

சமீப காலத்தில் நடைபெற்ற தாக்குதல் இரண்டு லக்ஷியங்களைப் பெற்றுள்ளது. முதலாவதாக டிரக்கில் பலமான கடற்படையும், விமானப்படையும் இல்லாதபோதிலும் அது ஜப்பானியருக்கு மிகவும் உபயோகமுள்ள தளமாக இருக்கும். ஏனெனில் அது ஜப்பானியர் வசமிருக்கும் வரையில் நேசதேசத்தார்களுக்கு அதன் உபயோகம் சித்திக்காது. டிரக்கைப் பிடித்து அதை உபயோகிப்பதென்பது நேசதேசத்தாரின் யுத்த லக்ஷியம் என்றாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, பசிபிக் போரில் வெற்றிபெறுமுன் அதிலுள்ள ஜப்பானியப்படைகள் அழிக்கப்படவேண்டும். இரண்டாவதாக, மற்ற இடங்களில் உபயோகமுள்ள வகையில் அநுபவம் பெறுவதற்காக யுத்தக்கப்பல்களும் கடற்படையைச் சேர்ந்த விமானங்களும் தீவிலுள்ள தளங்களை எவ்விதம் தாக்குவது என்ற முறையில் விரிவான பரிக்ஷை செய்யப்படுகிறது.

தென்மேற்கு பசிபிக்கில் ஆஸ்திரேலிய, அமெரிக்கக் கடற்படை உதவிகொண்ட ஆஸ்திரேலியப்படைகள் வடக்கு போர்னியோவிலுள்ள புரூனே கடற்கரையிலும் லாபூவான் என்ற தீவிலும் இறங்கிவிட்டன. ஆஸ்திரேலியப் படைகள் நியூகினியாவிலும், நியூபிரிடனிலும், நியூஅயர்லாந்திலும், போகன்வில்லியிலும், விரிவான போரை நடத்திவருவதினால், ஜப்பானிட படைகள் இருக்காது. ஆகையினால்தான் அவர்கள் லாபூவான் விமான தளங்களையும் புரூனே விரிகுடாவிலுள்ள கப்பற் துறைகளையும் கைப்பற்றும் வேலையுடன் நின்றுவிட்டார்கள். இதன்மூலம் அவர்கள் ஆசியாவுக்கு எதிர்த்தாற்போலுள்ள நேசதேசக் கடல், விமான நிலயங்களை பிலிப்பைன்ஸிலுள்ள பாலாவானிலிருந்து தென்மேற்கு முகமாக சிங்கப்பூருக்கு 750 மைல்களுக்குள் உள்ள ஒரு கோட்டிற்குமுன் தள்ளிவிட்டார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 254 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2- 7-45 | தென்னதிரயன்பட்டி | ... மாலை 7.00 | 5- 7-45 | வாளரமாணிக்கம் | ... மாலை 7.00 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | ,, | எம்பல் | ... ,, 7.30 |
| 3- 7-45 | மழையூர் | ... ,, 7.00 | 6- 7-45 | விராலிமலை | ... ,, 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, 7.30 | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| 4- 7-45 | பெருமாநாடு | ... ,, 7.00 | 7- 7-45 | முனிஸிபல் கிளப் | ... ,, 6.00 |
| ,, | புல்வயல் | ... ,, 7.30 | 8- 7-45 | கீரப்பழனி | ... ,, 7.00 |
| | | | ,, | திரூர் | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 255 (2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9- 7-45 | புத்தாம்பூர் | ... மாலை 7.00 | 12- 7-45 | கல்லூர் | ... மாலை 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, 7.30 | ,, | மாத்தூர் | ... ,, 7.30 |
| 10- 7-45 | நார்த்தாமலை | ... ,, 7.00 | 13- 7-45 | கச்சாரம்பட்டி | ... ,, 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, 7.30 | ,, | விராச்சிலை | ... ,, 7.30 |
| 11- 7-45 | வடவாளம் | ... ,, 7.00 | 14- 7-45 | முனிஸிபல் கிளப் | ... ,, 6.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | 15- 7-45 | ஆலங்குடி | ... ,, 7.00 |
| | | | ,, | ராயமங்கலம் | ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3— 7—45 | ராமச்சந்திரபுரம். | 10— 7—45 | கோனாபட்டு. |
| 4— 7—45 | கரம்பக்குடி. | 11— 7—45 | கீழாநிலை. |
| 5— 7—45 | ஆலங்குடி. | 12— 7—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 6— 7—45 | புதுக்கோட்டை. | 13— 7—45 | புதுக்கோட்டை. |
| 7— 7—45 | வெட்டன்விடுதி. | 14— 7—45 | பொன்னமராவதி. |
| 8— 7—45 | மருதன்கோன்விடுதி. | 15— 7—45 | எம்பல். |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தருப்பயான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—3-7-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜூலை மீ 9உ திங்கட்கிழமை [ந. 255

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLV.

## ஜப்பானியரிடம் "கோட்டை" மனோபாவம்.

### இது ஹிட்லருக்கு உதவவில்லை.

அமெரிக்க 7-வது கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளின் கமாண்டரான ரியர் கடற்தளபதி ஜேம்ஸ் ஃபைப் பசிபிக் பேரில் எதிரியின் நீர்மூழ்கி நடமாட்டம் ஓய்ந்துவிட்டதென்று சொல்லுகிறார். பெர்ல் துறைமுக நடவடிக்கைக்குப் பின் நேசதேச நீர்மூழ்கிகள் 45,00,000 டன்கள் எடையுள்ள 1,119 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றனவென்றும் அவர் வெளியிட்டார். ஜப்பானுக்கும் அதனுடைய ஆக்கிரமிப்பு நாடுகளுக்கும் உள்ள போக்குவரத்துகள் துணிக்கப்பட்டு விட்டனவென்றும் ஜப்பானிய கடற்படை உள்நாட்டு சமுத்திரங்களில் அடைபட்டுக்கிடக்கிறதென்றும் அவர் வெளியிட்டார்.

இந்த சந்தர்ப்பங்களில் ஜப்பானியக் கோட்டையை அமைப்பதென்றும் அதற்குள் படைகளைப் பின்வாங்கிக்கொள்ளுவதென்றும் நினைத்துவரும் ஜப்பானியரின் மனோபாவம் வியக்தமாகி வருகிறது. ஜப்பான், வடக்கு சைனா, கொரியா முதலியவையடங்கிய பிராந்தியத்தில் தான் ஜப்பான் இறுதிப் போரை நடத்தக்கூடும். தெற்கிலுள்ள ஆக்கிரமிப்பு நாடுகளை ஜப்பான் இழந்து வரும்பொழுது டோக்கியோ சிங்கப்பூர் இருப்புப்பாதைகளைவிட உள்நாட்டு பிராந்தியத்தில் படைகளை ஒன்று திரட்டி தற்காப்பு செய்வது என்ற திட்டம் நிறைவேறக்கூடியதென்று சொல்லலாம்.

ஜப்பான் எவ்வளவு காலம் எதிர்த்துப் போராடும்; அதற்காக அதன் சக்தி அளவு என்னவென்பதை நிர்த்தாரணம் செய்வது உள்வளைய தற்காப்பு பிராந்தியத்தின் ஸ்திரத்தைப் பொருத்ததாகும். நேசதேசத் தலைவர்கள் வெளியிட்டுவரும் அறிக்கைகளிலிருந்து புலப்படுவது போல, எதிரி உள் வட்டாரத்தில் பலமாக ஊன்றி நிற்பானென்றும் உருவாக்கப்பட்ட ஐச்வர்யங்களைக் கொண்டு போர் புரிவானென்றும் மதித்து ஜப்பானைத் தாக்க நேசதேசத்தார்கள் பிரயத்னம் செய்து வருகிறார்கள். குறிப்பாக இரண்டு அறிக்கைகளை இங்கு வெளியிடுவோம். பசிபிக் போர் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஜனாதிபதி ட்ருமானும் ஸர் ராபர்ட்கிரேக்கும் வெளியிட்டிருக்கும் அறிக்கைகள் அடிப்படையானவை.

### ஐச்வர்யங்கள் அசோஷ்யம்.

பசிபிக்கில் நேசதேச யுத்த தந்திரத்தைப் பற்றி கீழ் கண்ட அறிக்கை சமீப காலத்தில் வெளியிடப்பட்டது. (1) ஐரோப்பாவில் போர் புரிந்த 35,00,000 ஸோல்ஜர்கள் பசிபிக்குக்கு அனுப்பப்படுவார்கள். தூரக்கிழக்கில் அப்பொழுது 7 மிலியன் படைகள் இருக்கும். (2) எதிரியை ஒப்வெடுத்துக்கொள்ளாமலும், திருத்தி அமைத்துக் கொண்டு முஸ்தீப்புகளைப் பெருமலும் செய்வது நேசதேச யுத்த தந்திரத்தின் ஒரு முக்கிய அம்சம். (3) எதிரியிடம் முஸ்தீப்புகள் கொண்ட 4 மிலியன் படைகள் இருக்கின்றன. (4) வெடிகுண்டு வீச்சு களுக்குப் பின்னும் ஜப்பானிய தொழிற்சாலைகள் மாதம் ஒன்றுக்கு 1,500 விமானங்களைக் கட்ட சக்தி பெற்றிருக்கின்றன.

அலுவலின் பரிமாணத்தையும் அதைச் செய்து முடிக்க வேகம் அவசியம் என்பதையும் கவனித்தால் ஜப்பானியர்களின் எதிர்ப்பு உள்நாட்டு தற்காப்பு பிராந்தியத்தில் பலமாகத் தானிருக்குமென்று சொல்லவேண்டும். ஜப்பானை இறுதியில் முறியடிக்க நேசதேசத்தாரின் எல்லா ஐச்வர்யங்களும் தேவைப்படும்.

டோக்கியோவில் பிரிடிஷ் அயல் நாட்டு தூதராக இருந்த ஸர் ராபர்ட்கிரேக் நேசதேச விமானத் தாக்குதலினால் ஜப்பானிய மன உறுதிக்கு என்ன விளைவு ஏற்படக் கூடுமென்பதைத் தெளிவாக எடுத்து உரைத்திருக்கிறார். ஜப்பானியர்கள் அகதிகளின் நிலைமைக்குத் தக்க வாறு நடந்துகொள்ளுவார்கள். மற்ற ஜனங்களைப்போல் ஜப்பானியர்கள் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்தாலும் புகார் செய்யமாட்டார்கள். மனத்தாழ்வு அடையமாட்டார் கள். சாதாரண மீன், அரிசி போன்ற உணவை உட்கொண்டு திருப்தி அடைவார்கள். அவர் கள் தாத்காலிகமான ஏற்பாட்டின்படி ஜீவித்திருக்கவோ அல்லது வேலை செய்யவோ தயாராக இருக்கிறார்கள்.

### தற்கொலை தந்திரம்.

நேசதேசக் கப்பல்களை மிகுதியான வெடிகுண்டுகள் உள்ள விமானங்கள் தாக்கி பூரா வாக நிர்மூலமாக்கி வருகின்றனவென்று ஜப்பானியர்கள் பிரசார மூலம் அளவு கடந்து பாத்யம் கொண்டாடுகிறார்கள். இதற்குமுன் டாங்கிகளை உடைக்க மனிதச் சுரங்க வெடிகளை உபயோகித்ததாகவும் மற்ற சில உபாயங்களையும் மேற்கொண்டு பர்மாவில் நேசதேச முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றதாகவும் ஜப்பான் சொல்லி வந்தது. இந்த பிரசாரத் திலிருந்து இரண்டு அம்சங்களை அறியலாம். ஒன்று கவசம் பூண்ட படைகளின் தியாக புத்தியை வெளிப்படுத்தி ஜப்பானியரின் மன உறுதியை பலப்படுத்துவது. இரண்டாவது, நேசதேச யுத்த முயற்சியை பலப்படுத்தவோ அல்லது சிதற அடிக்கவோ அயல் நாட்டாரின் அனுதாபத்தையோ அல்லது பாராட்டையோ சம்பாதிப்பது.

ராணுவ முறையில் மனிதர்களை வெடி மருந்து ரூபமாக உபயோகிக்கும் நடவடிக்கை ரகசிய ஆயுதங்களைக் கண்டுபிடிக்க ஜப்பான் செய்த காலம் தப்பிய முயற்சிகள் என்று சொல்லலாம். ஜப்பானின் மனித பலம் அதிகமாகவே இருந்து வருகிறது. பர்மாவில் டாங்கிகளை எதிர்க்க மனித சுரங்க வெடிகளை ஜப்பான் அனுப்பியதற்கு இந்த பிராந்தியத்தில் நேசதேசத்தார் டாங்கிகளின் உதவி கொண்டு இயற்கை சிரமங்களைத் தவிர்த்து ஜப்பானியரின் தற்காப்பு ஏற்பாடுகளை முறியடித்துவிட்டார்கள் என்ற அறிவு தான் காரணமாகும். பிரிடிஷ், அமெரிக்க கடற்படைகளைத் தாக்க காமிகாஸி என்ற விசேஷப் படைகளை அனுப்பியதும் மோசமாகிவிட்ட நிலைமையை சமாளிக்கச் செய்த பரிகாரம் என்று ஜப்பான் சொல்லி வரு கிறது.

நாஸி ஜெர்மனியிலும் ஜப்பானிலும் தோன்றியுள்ள தற்கொலை மனப்பான்மையானது மனவியாதியை குணப்படுத்தும் நிபுணர்களால் புத்தியையிழந்தவர்களின் பல வேறு நடவடிக்கைகள் என்று சொல்லப்படுகிறது. ஆகிலும் தற்கொலை முறையில் மனதைத் தேர்ச்சி செய்துகொள்ளுவதில் ஜப்பானியர்கள் ஒப்பற்றவர்கள். நாஸிகளைவிட அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள்.

இந்த தற்கொலைக்கு வெகுமதி யாசுகி கோவிலில் அவர்கள் தெய்வமாகக் கொண்டாடப் படுவார்கள். எதிரி வசம் அவன் அகப்பட்டுக்கொண்டால் அவன் ஜப்பானில் இறந்து போய் விட்டதாகவும் அடுத்த ஜன்மத்திலும் மறித்தவனாகவும் கருதப்படுவான். மூடபக்தியும் ஆடம் பரமும் உள்ள இந்தக் கருத்துகள் ரத்தத்தில் ஊறியுள்ள ஜப்பானிய ஸோல்ஜரும், மாலுமியும்



விமானியும் சர்வத்தூதுக்கு அனுப்பப்பட்டால் அது விஷயத்தில் அவனுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தைப் பின்பற்றமுடியாது. அவனுக்கு தைரியமிருந்தால் அவன் காரியத்தை முடித்துவிடுவான். அவனுக்கு அதைரியம் ஏற்பட்டாலும் அல்லது பயிற்சியின் மயக்கத் தினால் இன்னது செய்வதென்று அவனுக்கு பிரமை ஏற்பட்டாலும், அவன் எதிரிகையில் அகப்பட்டுக்கொள்ளுவான். அல்லது அகஸ்மாத்தாக ராணுவ முக்கியத்வமன்னியில் உயிரை மாய்த்துக்கொள்ளுவான்.

வெடிகுண்டுகளை வெடிக்கும்படி செய்ய யந்திர சாதன மூலமாக அமைக்கப்பட்டிருக்கும் டெடனேடரைவிட ஜப்பானில் தற்கொலையில் பயிற்சி பெற்ற எந்த மனிதனும் அவ்வளவு உப யோகமுள்ளதாக இருக்கமாட்டானென்று சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். ஆகையால் குறிப் பான காலத்தில் வெடிகளை வெடிக்கும்படி செய்யாதவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பர்மாவில் காணப்பட்ட டாங்கி எதிர்ப்பு மனித சுரங்க வெடிகள் எல்லாம் அற்ப புத்தியுள்ள சாதாரண ஸோல்ஜர்கள். ஒரு கைதி சொல்லுகிறபடி தற்கொலை வேலைக்குப் பொருக்கியெடுப் பதென்பதை ஜப்பானியப் படைகள் விரும்புவதில்லை.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 29—6—45 (வெள்ளிக்கிழமை). | ஜப்பானியர்கள் யுத்த நிலையங்களை மஞ்சூரியாவுக்கு மாற்றினார்கள். |
| 1—7—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஆஸ்திரேலியா நிலப்பரப்பு, போர்னியோவிலுள்ள பாலிக் பாபன். |
| | சீனத்துருப்புகள்—இந்தோ சீனா. |
| 3—7—45 (செவ்வாய்க்கிழமை). | நேசதேசத்தார்கள் பாலிக்பாபனில் இரண்டு விமான நிலையங்களைக் கைப்பற்றினர். |
| 5—7—45 (வியாழக்கிழமை). | பிலிப்பைன் யுத்தம் நின்றுவிட்டது. |
| | பிரிடனில் பொதுத் தேர்தல், பிரிடிஷ் ஜனங்கள் ஓட்டுரிமைக்காகப் போகிறார்கள். |

### (B)-செய்திச் சுருக்கம்.

**பசிபிக்.**—(1) ஆகினாவிற்கு மேற்கிலுள்ள குயும் தீவு ஆக்கிரமிக்கப்பட்டது.

(2) பிலிப்பைன்ஸ் யுத்தம் நின்றுவிட்டது.

(3) நியூகினியிலுள்ள மௌண்ட் ஷிபுராங்குவை ஆஸ்திரேலியர்கள் கைப்பற்றினர்.

(4) தென்கிழக்கு போர்னியோவிலுள்ள பாலிக்பாபனில் ஆஸ்திரேலியத் துருப்புகள் இறங்கியிருக்கின்றன. பாலிக்பாபன் என்ற நகரம் அநேகமாய் பிடிக்கப்பட்டது. லபுவான் தீவிற்குக் கிழக்கேயுள்ள போபர்ட்டும் போர்னியோவிலுள்ள துமாட், செபிங்காங், மாங்கார், இவைகள் பிடிபட்டன.

**சீனா.**—சைனாவிலுள்ள குவெய்பிங், டெங்யின், சின்பெங், பாஷெய்ன், லிஞ்செள, துயிசென் முதலிய இடங்களைச் சீனர்கள் கைப்பற்றினர். பெய்ஷெனில் நுழைந்தனர். இந்தோ-சைனாவில் உள்ள டாங்வான், டிராங்கென்பு, மாலுங்கால் முதலிய இடங்களையும் பிடித்தனர்.

**பர்மா.**—தர்ராவாடியன் கீழ் தென்கிழக்கில் 13 மைல்கள் தூரத்திலுள்ள ஷாடன் நகரில் நேசதேசத் துருப்புகள் நுழைந்தன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**27—6—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**28—6—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

கடற்கரைத் துறைகள்.—ஸாஸேஹா (Sascho), மோஜி (Moji), நோபோக (Nobeoka).

தொழிற்சாலை ஸ்தலங்கள்.—யாமா (Yama).

பர்மா (Burma).

ஜப்பானியப் படகுகள்.—ஸிட்டாங் (Sittang) நதி.

இலக்குகள்.—தாடாய் பிரதேசம், மோல்மின்-பாங்காக் (Moulmein-Bangkok) ரயில்வே.

**29—6—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க் கிணறு ஸ்தலங்கள்.—டொகுயுமா (Tokyuama).

ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள்.— மேற்கு குயுஷு (Western Kyushu).

பர்மா (Burma).

தரைப்படைகளுக்கு உதவி.—ஸ்வீஜியன் (Shwegyin) பிரதேசம்.

எதிரி ஆக்கிரமித்திருந்த கிராமங்கள்.—மோக்காலினின் (Mokqalin) வடமேற்கு.

**30—6—45** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

3 விமான நிலயங்கள்.—சுமத்ரா (Sumatra).

நெடும்பாதைகள்.—மெடான் (Medan), பிஞ்செய் (Binjai).

பர்மா (Burma)

ஸ்டோர்கள்.—போயாகி (Boyagi)யின் வடக்கு.

**1—7—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

தற்காப்புகள்.—பாலிக் பாபனிலும் (Balik Papan) அதைச் சுற்றிலும்.

ஜப்பானிய விமான தளம்.—சிரான் (Chiran).

பர்மா (Burma).

ஜப்பானியத் துருப்புகள்.—ஸிட்டாங் நதியின் குறுக்கில்.

கிராமங்கள்.—மார்ட்டாபனில் (Martaban) ஜப்பானியர் தப்பிச்செல்லும் பாதைகள்.

**2—7—45** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஷிமோனோஸெகி (Shimonoseki), ஊப் (Ube), குரர் (Kure).

ஜப்பானியக் கப்பல்கள்.—ஜப்பானிய கடல்களில் (Japanese), சைனு (Chinese) கடல்களில்.

பர்மா (Burma).

எதிரி ஆக்கிரமித்த கிராமம்.-ஆட்வின் (Otwin).

ஜப்பானிய படகுகள்.—ஸிட்டாங் (Sittang) நதி.

**3—7—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க்கிணறுகள்.—மெய்ஸூரு (Maizuru).

சுரங்கவெடி பாவுதல்.—ஜப்பானிய நீர்நிலைகளில்.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**4—7—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.-டோக்கியோவிற்கருகில்.

பர்மா (Burma).

ஜப்பானிய தலைமைக் காரியாலயம்.—கலாக்யாங்கி (Kalagyaunggyi) பிரதேசம்.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**28—6—45.** (வியாழக்கிழமை) to **5—7—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஜப்பானியத் தோல்விகள்.** இதுவரையில் ஜப்பான் இவ்வளவு பலமாகத் தாக்கப்படவில்லை. ஆகினுவாவின் வீழ்ச்சிக்குப்பின் ஹாசாலும் விழுந்துவிட்டது. இவ்விரண்டும் ஜப்பானுக்கு மகத்தான தோல்விகள். அதற்குப்பின் டிராக் பேரில் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தன. சுமத்ரா வெடி விமானங்களால் தாக்கப்பட்டது. நியூகினியாவில் ஆஸ்திரேலியப் படைகள் முன்னேறின. சாராவாக் ஆக்கிரமிக்கப்பட்டது. பர்மாவை ஆக்கிரமித்தபின் பிரிடிஷ் படைகள் மலேயாவை நோக்கி முன்னேறுகின்றன. கடலில் சிங்கப்பூர் பிராந்தியத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் குவிக்கப்படுவதை ஜப்பான் ஒன்றும் செய்ய சக்தியற்று கண்ணுற பார்த்துக்கொண்டிருக்கிறது.



**முக்கிய சம்பவம்.** இவ்வாரத்தில் ஆஸ்திரேலியப் படைகள் போர்னியோவிலுள்ள பாலிக்பாபானிலிறங்கின. படைகளிறங்குவதற்கு முன் இரண்டு வாரங்களாக அது கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டது. பாலிக்பாபானில் பெரிய பெட்ரோல் தொழிற்சாலை இருக்கிறது. அதை ஆக்கிரமித்துவிட்டால் ஜப்பான் யுத்த தளவாட உற்பத்தியை இழந்துவிடும். மேலும் மாகாசார் ஜலசந்தியை அது துணித்துவிடும். இந்த ஜலசந்தியில் அமெரிக்க 7-வது சேனை நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

வி வி வி வி வி

**மற்றொரு முக்ய சம்பவம்.** பிலிப்பைன்ஸ் நடவடிக்கை முடிந்துவிட்டதென்று மாக் ஆர்தர் சொல்லிவிட்டார். அதாவது லூசான் விடுவிக்கப்பட்டதென்றும் இங்கும் மிண்டானோவிலுமிருந்த 23 டிவிஷன் கொண்ட எதிரிப் படைகள் நிர்மூலமாக்கப்பட்டதென்றும், அங்குள்ள பெரிய அமெரிக்கப் படைகள் வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவார்களென்றும் பொருள்படும். கடற்படை காரியதரிசியான மிஸ்ட்டர் பாரஸ்டாலும், பசிபிக் கடற்படைகளின் சேனாதிபதியான கடற் தளபதி நிமிட்ஸும் அமெரிக்க கடற்படையின் சேனாதிபதியான கடற் தளபதி எர்னஸ்ட் கிங்கும் கூடி பசிபிக் போரை நடத்துவதைப்பற்றி விவாதித்தார்கள்.

வி வி வி வி வி

**ஷிட்ஸூகா.** ஐந்து அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஜப்பானின் வடக்கு கோடிக்கருகில் காராபூடோவுக்கு வடகிழக்கிலுள்ள ஷிட்ஸூகா என்ற நதித் துறைமுகத்தை வெடிகுண்டுகளை வீசித் தாக்கின என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இது சகாலினின் தென்பாதி, வடபாதி ருஷ்யரிடமுள்ளது. 1905-ம் வருஷ ருஷ்ய-ஜப்பானிய யுத்த முடிவில் ஜப்பானுக்கு ருஷ்யா இந்த பாகத்தைக்கொடுக்கும்படி நேரிட்டது. ஷிட்ஸூகாவுக்கும், ஜப்பானுக்கும் மத்தியில் ஸோயா ஜலசந்தியிருந்தது. இதுவரையில் ஜப்பானிய சமுத்திரங்களுக்குள் நேசதேசத்தார்கள் இவ்வளவு தூரம் தாக்கியதில்லை.

வி வி வி வி வி

**ஜப்பானுக்குத் தெற்கில்.** சென்ற வாரத்தில ஆகினுவாவுக்கு அருகில் ஆக்கிரமிக்கப்பட்ட கூமெத் தீவு நேசதேச தளமாகத் தயாரிக்கப்படுகிறது. சிறியதாக இருந்தபோதிலும் ஆகினுவாவும் நல்ல முறையில் உபயோகிக்கப்படுகிறது. அதன் துறைமுகத்தை ஸ்காபாப்ளோவுக்கு ஒப்பிடலாம். அதன் விமான தளங்களில் 1,000 கனமான வெடி விமானங்கள் கட்டியிருக்கலாம். ஒரு பெரிய சேனை அங்கு தாத்காலிகமாகத் தங்கியிருக்கலாம். மேலும் கியூஷூ, பார்மோசா, ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் மத்தியிலுள்ள ஸூஷிமா ஜலசந்தி முதலியவற்றைத்தாக்கும். வெடி விமானங்களுக்குத் துணையாகச் செல்லும் சண்டை விமானங்கள் அங்கு தங்கியிருக்கலாம். கடல்தாண்டிவரும் சர்ப்பராக்களைக் கொண்டு வருவதற்கு ஸூஷிமாதான் ஜப்பானிடமுள்ள கடைசி கடல் மார்க்கம்.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** ஜப்பான் பேரில் விமான நடவடிக்கை அதிகரித்து வருகிறது. யுத்த தொழிற்சாலைகளை மஞ்சூரியாவுக்கு மாற்ற ஜப்பான் பிரயத்தனம் செய்து வருகிறது. ஆகிலும் கடல் மார்க்கம் பத்திரமாக இல்லை. மஞ்சூரியாவும் நேசதேச வெடிவிமான வட்டாரம் தாண்டி இருக்கவில்லை.

வி வி வி வி வி

**சைனு.** லிஞ்சௌவைப் பிடித்தபின் இந்தோ-சைனுவுக்குப்போகும் மார்க்கம் திறக்கப்பட்டு விட்டது. சிறிய படைகள் வேலையைத்தாண்டி இந்தோ-சைனுவில் சில நகரங்களைப் பிடித்து விட்டார்கள். ஆனால் இது ஏற்பாடான படையெடுப்பில்லை. ஆகிலும் தாக்குதல் வெகு தூரத்திலில்லை அமெரிக்கர்களால் பயில்விக்கப் பட்டதும், அமெரிக்க முஸ்தீப்புகள் பெற்றதுமான சீனப்படைகள் எல்லா போர்முனைகளிலும் முன்னேறித் தாக்கக்கூடுமென்று மார்ஷல் சியாங் கே ஷேக் நம்பிக்கையுடனிருக்கிறார்.

வி வி வி வி வி

**பர்மா.** பெகுவுக்கு வடக்கிலும் யோமாசிலும் ஜப்பானியப் படைகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எதிரிப் படைகளைக் குவித்து வருகிறான். கிழக்கு பர்மாவுக்கான போர் தாங்கூவுக்குக் கிழக்கி

துள்ள மாசியில் இறுதியாக நடைபெறுமென்று தோன்றுகிறது. எதிரியை சமாளிக்க தென் கிழக்கு ஆசியா கமாண்ட் தயாராக இருக்கிறது. அந்த சேனையை நாம் இனி மறக்கமுடியாது ஐரோப்பாவில் வெற்றிபெற உபயோகப்பட்ட அளவுள்ள சேனைகளும், சர்ப்பராக்களும் குவிக்கப்படுகின்றன. முன்னேற்றம் மெள்ள நடைபெறுது. ஆகிலும் பருவகால மழை பெய்கிறது. நாட்டில் ரஸ்தாக்களும் பாலங்களும் இல்லை. சர்ப்பராக்கள் பெரும்பாலும் ஆகாயமூலம் வரவேண்டியிருக்கிறது.

வி வி வி வி வி

**இரண்டு புதிய அமெரிக்க கமாண்டுகள்.** ஒன்று மத்திய பசிபிக் கமாண்ட் என்றும் மற்றொன்று மேற்கு பசிபிக் கமாண்ட் என்றும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி

**பிரிடிஷ் ஒலிபெருக்கு நிலயம்.** ஜப்பானுக்கு ஜப்பானிய பாஷையில் உண்மையான தகவல்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிட ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறது.

வி வி வி வி வி

**தாய்நாட்டைக் காப்பாற்றும் சங்கம்.** தேசம் பூராவையும் ராணுவ மயமாக்க ஜப்பான் மற்றொரு ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும் ஜாவாவிலிருந்து ஜப்பானிய பொதுமக்கள் வெளியேற்றப்படுகிறார்கள், காண்டனில் ஒரு தற்காப்புப்படை தயாரிக்கப்படுகிறது. ஜப்பானிய சபையின் அங்கத்தினர்கள் 10 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

**நேசதேச நம்பிக்கை.** அமெரிக்க 7-வது கடற்படையின் தலைவரான கடற் தளபதி தாமஸ் கின்கெயிட் ஜூலை 3-ம் தேதியன்று பின் கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

"இப்பொழுது ஜப்பான் அடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஜப்பான் வீழ்ச்சி பெற்று விட்டதென்று பொருள்படாது. ஆனால் அது நிச்சயமாய் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது நாம் ஜப்பானை நெருங்கித் தாக்கவேண்டும். இதில் நஷ்டம் ஏற்படும். இது சுலபமானதல்ல. நாம் ஜப்பானைத் தாக்கிவருகிறோம். இது பலப்படவேண்டும். இதிலிருந்து ஜப்பான் மீளக்கூடாது. ஜப்பானிய யுத்தம் முடிவடையும் வரையில் ஒரு நிமிஷம்கூட ஓய்வெடுத்துக்கொள்ள முடியாது.

வி வி வி வி வி

**பிரிடன் உறுதி.** யுத்தத்தில் வெற்றிபெற பிரிடன் உறுதி எப்பொழுதும் போல பலமாக இருக்கிறது. கடுமையான தேர்தல் பிரசாரத்தின் பொழுதும் பிரிடிஷ் ராஜீயக் கக்ஷிகளில் எந்தக் கக்ஷியும் ஜப்பானியப் போரில் வெற்றிபெறுவதுதான் முதன்மையான லக்ஷியம் என்பதை மறந்துவிடவில்லை. எந்தக்கக்ஷி வெற்றிபெற்றாலும் ஜப்பானை வெகு சீக்கிரத்தில் முறியடிக்க அமெரிக்காவுடன் பிரிடன் ஒத்துழைக்குமென்று கான்ஸர்வேடிவ், தொழிலாளர் கக்ஷித் தலைவர்கள் அமெரிக்காவுக்கு ஒலிபரப்பு மூலம் பிரகடனம் செய்திருக்கிறார்கள். கல்வி இலாகா மந்திரி மிஸ்டர் ரிச்சர்ட்லா, இதை விளக்கிச் சொல்லுகிறார்.

"தேர்தலின் முக்கிய லக்ஷியம் ஜப்பானிய யுத்தம்தான். ஜப்பானிய யுத்தம்தான் லக்ஷியமென்று சொன்னதிலிருந்து ஒரு கக்ஷி யுத்தத்தை ஆதரிக்கிறதென்றும் மற்றொன்று ஆதரிக்கவில்லையென்றும் பொருள்படாது. ஜப்பானை நசுக்கி, எவ்வளவு காலம் போர் புரிய வேண்டியிருந்தாலும் அதை இறுதியில் முறியடிப்பது என்று நாங்கள் உறுதிகொண்டிருக்கிறோம்.

எந்தக் கக்ஷித் தலைவர் ஜப்பானை சீக்கிரத்தில் முறியடிக்க சக்தியுள்ளவர் என்பதைப் பொருத்துத்தான் பிரிடிஷ் ஜனங்கள் தங்களுடைய வாக்கைக் கொடுப்பார்கள்."

இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி பர்மிங்ஹாமில் பின்வருமாறு பேசினார்:- "ஜப்பானை முறியடித்து சாசுவதமான சமாதானத்தை நிலைநாட்டுவதுதான் தேர்தலின் முக்கியமான லக்ஷியம்".

தொழிலாளர் கக்ஷியின் டிபுடி தலைவரான மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட் பின்வருமாறு சொன்னார்:—"நாங்கள் சில விஷயங்களில் ஏகோபித்த அபிப்பிராயம் உள்ளவர்களாக இருக்



கிறோம். மிஸ்டர் சர்ச்சில் தலைமை வகித்ததில் பிரிடன் மிகவும் பெருமை கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, பொதுத் தேர்தலின் முடிவு எவ்விதமிருப்பினும் ஜப்பான் இறுதியில் முறியடிக்கப்படும் வரையில் நாங்கள் அமெரிக்காவுடன் தோளோடுதோள் நின்று போர் புரிவோம்".

வி வி வி வி வி

**மகத்தான நடவடிக்கைகள்** எதிர் காலத்தில் ஆரம்பமாகும். இப்பொழுது ஏற்பட்டுள்ள அயர்வு தாத்காலிகமானதுதான். ஐரோப்பாவிலிருந்து தூரக்கிழக்குக்குப் படைகளை அனுப்ப இந்த அயர்வு அவசியம்தான். இது புயலுக்கு முந்திய அமைதி. வெகு சீக்கிரத்தில் இந்த நிலைமை மாறிவிடும். பர்மா எல்லைச் சரகத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டியுள்ள ஜப்பான் வரையிலும் ஒரு பெரிய ஒன்றுபட்ட நடவடிக்கை ஆரம்பமாகும். ஜெர்மனியை நொறுக்கிய வெடிவிமானப்படையும், நார்மண்டி, இதாலியப் போர்முனையில் பருந்துப் பாய்ச்சல் செய்து வந்த விமானிகளும், அட்லாண்டிக்கடல் போரில் அனுபவம் பெற்ற பிரிடிஷ் கடற்படையும் இப்பொழுது ஜப்பானைத் தாக்க ஒன்றுபடும்.

வி வி வி வி வி

**ஆனால் ரஸ்தா சுலபமானதல்ல.** சைனாவிலும், ஜப்பானிலும், மலேயாவிலும் நேசதேசப் படைகள் பலமாக இறக்கப்படவேண்டும். இது சுலபமான வேலையில்லை. லூசானிலும், ஆகினாவாவிலும் அமெரிக்கர்களும், பர்மா யுத்தத்தில் பிரிடனும் இது விஷயத்தில் அனுபவம் பெற்றிருக்கின்றன. நேசதேசத்தார்கள் ஒரு முரட்டு ஸ்வபாவமுள்ள எதிரியைத் தாக்கவேண்டும். தூரக்கிழக்குப் போரில் யாதொரு கருணைக்கும் இடம் கிடையாது. இந்த இரண்டு தீவுகளிலும் மட்டும் போரில் வெற்றிபெறு முன் 2,00,000 ஜப்பானியர்களைக் கொல்லவேண்டியிருந்தது. ஜப்பானை நெருங்கும்பொழுது எதிர்காலத்திய போர்கள் இன்னும் கடுமையாகவே நடைபெறும்.

வி வி வி வி வி

**எளிதாக வெற்றிபெற முடியாது.** ஜப்பானிய யுத்தம் வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடுமென்று சொல்லுவது தவறான நம்பிக்கையாகும். ஆகினாவாவும் லூசானும் சிறிய தீவுகள்தான். ஐரோப்பிய போரைப் போலில்லாமல் தூரக்கிழக்கில் எந்த நடவடிக்கையும் இரு வகைப்பட்டது. அதற்காக ஏராளமான முஸ்தீப்புகள் அநேகம் கப்பல்கள் மூலம் வெகுதூரம் கொண்டுபோகப்படவேண்டும்.

வி வி வி வி வி

**ஜப்பானிய தந்திரம்.** ஜப்பானிய யுத்தம் நீடித்து நடக்காது என்று எண்ணுவதற்கு ஜப்பானிய ஒலிபெருக்கு பிரசங்கம்தான் காரணமாகும். "நேசதேசக் கப்பல்கள் வந்துவிட்டனவென்றும் நேசதேசப்படைகள் இறங்கிவிட்டனவென்றும், ஜப்பானுக்கு ஆபத்து வந்துவிட்டதென்றும் ஜப்பான் பிரசாரம் செய்துவருகிறது. ஜனங்கள் மன உறுதியை நிலைநாட்ட ஜெர்மனி கையாண்டுவந்த முறையை ஜப்பானும் அனுஷ்டித்து வருகிறது.

வி வி வி வி வி

**பொய் பிரசாரம்.** ஜப்பானியர்கள் அதிகத் துணிவுடன் பின்வருமாறு பிரசாரம் செய்துவருகிறார்கள்:—"ஜப்பானில் படைகள் இறங்கியவுடன் அவைகளுக்கு சமாதி ஏற்பாடாகிவிடும்" என்று ஜப்பான் ஒலிபெருக்குகளில் அடிக்கடி சொல்லிவருகிறது. ஜெர்மன் முறையை ஒட்டி ஜப்பானும் ஆகினாவாப் போரில் ஜப்பானுக்குத்தான் வெற்றி என்று சொல்லி வருகிறது. ஆகினாவாப் போர் முடிந்து ஜப்பானிய எதிர்ப்பு நின்ற தினமான ஜூன் 21-ம் தேதியன்று ஜப்பானிய தற்கொலைப் படைகள் ஆகினாவாவில் எதிரியின் திட்டங்களைக் கெடுத்துவிட்டன" என்று டோக்கியோ ஒலிபெருக்கிற்று. ஒரு நாளைக்குமுன், அதாவது டிரக்கை பிரிடிஷ் பசிபிக் கடற்படை தாக்கியபின் நான்கு நாட்கள் கழித்து சிங்கப்பூர் ஒலிபெருக்கு பின்வருமாறு வெளியிட்டது:—"பிரிடன் பசிபிக்கிலுள்ள எல்லா அக்கரைகளையும் இழந்துவிட்டது".

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்—**

(1) **ஜெர்மானியர்களின் கல்வி.**—பெர்லின் நகர சபை, ஜன சமூகக்கக்ஷி, பொது உடமைக் கக்ஷி, ஜனநாயகக்கக்ஷி, கதோலியர்கள், பிராடெஸ்டண்டுகள், யகூதிகள் அடங்கிய ஒரு வாலிபக் கமிட்டியை ஸ்தாபித்திருக்கிறது. வாலிபமுள்ள ஜெர்மானியர்களை ஹிட்லர் கெட்ட வழியில் நடத்தியதை வெளிப்படுத்தி, ஸோல்ஜர்களாகப் பயிற்சி பெறுவதற்கு முன்

அவர்கள் சமாதான, புனருத்தாரண வேலையில் ஈடுபடவேண்டுமென்றும் வற்புறுத்துவது தான் இந்த கமிட்டியின் லக்ஷியம்.

(2) **யுத்தக் குற்றவாளிகளின் விசாரணை.**—உலக சமாதானத்தைக் கெடுக்க சதி செய்ததாக எல்லா யுத்தக் குற்றவாளிகள் பேரில் குற்றம் சாட்டி விசாரணை செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. யுத்தத்தை வெறுக்கும் கெல்லாக் ஒப்பந்தத்தின் ஷரத்துகளுக்கு இது ஒத்ததாகும்.

(3) ஜெர்மனியைப்போல ஆஸ்திரியாவும் நான்கு வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு பிரிடன், பிரான்ஸ், அமெரிக்கா, ருஷ்யா வசம் ஒப்புவிக்கப்படும்.

(4) போல்ஸானோ, வெனிசியா, குயிலியாவைத் தவிர பாக்கி இதாலி பூராவும் ஸெப்டம்பர் மாத முடிவுக்குள் இதாலியின் மேன் பார்வைக்கு ஒப்படைக்கப்படும்.

(5) **ருதேனியா.**—ஸெகோஸ்லாவேகியா, ருஷ்ய நிர்வாகத்தினிடம் ருதேனியாவைவிட்டு விடுவதாக ஒப்புக்கொண்டது. ஸெகோஸ்லாவேகியா நகரமான டெஷேனை போலந்துக்கு மாற்றிவிடும் பிரச்னை ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

(6) **டாஞ்ஜியர்.**—டாஞ்சியர் இருக்கும் மொராக்கோவின் சுல்தான் பிரான்ஸுக்கு விஜயம் செய்திருக்கிறார். ஜூலை 3-ம் தேதியன்று டாஞ்சியரின் எதிர் காலத்தை சர்ச்சை செய்ய கூட்டப்பட்டிருந்த பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு பிரதிநிதிகள் கொண்ட மகாநாட்டில் ருஷ்யாவையும், சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற பிரச்னைக்கு முடிவு ஏற்படும் வரையில் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. ஆயினும் பேச்சுகள் நடந்துகொண்டுவருகின்றன.

(7) டார்டனெல்ஸ், மாண்ட்ரு ஒப்பந்தத்தின் ஒரு அம்சமான டார்டனெல்ஸூம் லவாண்ட் தளங்களின் எதிர்கால பிரச்னையும் மூன்று மாபெரும் வல்லரசுகளின் அடுத்த மீட்டிங்கில் சர்ச்சை செய்யப்படும்.

(8) பனமா ஸ்பெயினின் அயல்நாட்டுக் கொள்கை நேசதேசத்தாரின் கொள்கைகளுக்கு விரோதமாகயிருப்பதினால் பனமா ஸ்பெயினுடன் கொண்டிருந்த உறவை ரத்து செய்துவிட்டது.

---

## ஐக்கிய தேச சங்கத்தின் கொள்கைகள்.

### ஸ்திரீகளுக்கு உத்தியோக முறையில் சமத்வம்.

*அலிஸ்டேர் குக்.*

ஜூன்மாதம் 19-ம் தேதியன்று 1-வது கமிஷன் ஒவ்வொருவருடைய குதூஹலமான திருப்திக்கும், ஆஸ்பதமாக ஐக்கிய தேசங்களின் ஸ்தாபனத்தில் கொள்கைகளையும், அதன் அங்கத்தினர்களின் நிபந்தனைகளையும், சாஸனத்தைத் திருத்துவதற்கான விதிகளையும், அதை புனராலோசனை செய்யக்கூடிய ஷரத்துக்களையும் தீர்மானம் செய்தது.

டம்பார்டன் ஓக்ஸ் மகாநாட்டினாலும் தர்மகர்த்தா கௌன்ஸிலினாலும் பொருளாதார, ஜனசமூக கௌன்ஸிலினால் எதிர்பார்க்கப்பட்ட மற்ற சில்லரை ஸ்தாபனங்களினாலும், உண்டு பண்ணப்பட்ட ஸ்தாபனங்களை கமிஷன் முதல் முதலில் ஆமோதித்தது.

சட்ட பூர்வமானவைகள் என்ற கடினமான திட்டங்களுடன் ஸ்திரீகளைப்பற்றி ஒரு சாவதானமான சொற்பொழிவையும் மிஸ்டர் பால்குயரின் சேர்த்துவிட்டார். அந்த சொற்பொழிவின் பூரா விவரத்தையும் மகாநாட்டில் கூடியுள்ள பிரதிநிதிகள் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். புதிய சங்கத்தில் ஸ்திரீகளுக்கு ஒரு கட்டுப்பாடும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவர்கள் ஸ்தாபனத்திற்கும் எந்த முறையிலும் சமத்வம் என்ற நிபந்தனைக் குட்பட்டும் சேவைசெய்யலாமென்றும் கூறிய ஒரு ஏற்பாட்டை அவர் ஆதரித்தார். உலகம் வெகுகாலத்துக்கு முன்பே ஒப்புக்கொண்ட ஒரு கொள்கையை ஆதரிக்கவேண்டிய அவசியமே இல்லையென்றும் அவர் சொன்னார்.

இந்த யுத்தத்தில் நேசதேச ஸ்திரீகளின் தீரத்திற்குப் பாராட்டை அறிவித்தபின் அவர் ஸெயின்ட் ஜோன் முதல் மாடம் குரீ முடிய உள்ள பிரெஞ்சு தேசிய வீர மாதுகளின் சேவையை ஞாபகப்படுத்தினார். ஸ்திரீகளுக்கு சமத்வம் அளிக்கப்படுமென்று உத்தியோக முறையில் வாக்குறுதி செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். அவ்விதம் செய்தால் தான் மாடம் டீஸ்டலுக்கு ஏற்பட்ட சங்கடம் மற்றவர்களுக்கும் ஏற்படாது. ஸ்திரீகளுக்கு ராஜீயத்தில் இடம்கொடுக்கக்கூடாது என்று ஸ்டேலிடம் 1-வது நெப்போலியன் சொன்ன பொழுது அவள் பின்வருமாறு பதிலுரைத்தாள்:—"அவர்களின் தலையை வாங்க அவர்களை அடிக்கடி கொலைக்களத்துக்குக் கொண்டுபோவதினால் அதற்குக்காரணம் என்னவென்று அவர்கள் அறிந்துகொள்ளவேண்டியது நியாயத்துக்கு ஒவ்வக்கூடியது."



## பிரிடிஷ் ஆக்கிரமிப்புக்குட்பட்ட ஜெர்மனியின் தலைநகரம்.

### விசித்திரமான வியாபார ஸ்தலமான ஹூபக்கே.

*பீடர் ஸ்டர்ஸ்பர்க். (டெயிலி ஹெரால்ட்).*

வேசஞ்பர்ஜ் மலை பிராந்தியத்தைச் சேர்ந்த காடுகளில் 5,000 ஜனங்கள் நெருக்கமுள்ள விசித்திரமான பழைய வியாபார ஸ்தலமான ஹூபக்கே நகரம் ஜூலை 1-ம் தேதி முதல் பிரிடன் ஆக்கிரமித்திருக்கும் ஜெர்மனியின் தாத்காலிக தலை நகரமாக இருக்கும்.

வெஸ்ட்பாலியாவின் இந்தப் பகுதியிலுள்ள எல்லா தச்சு வேலைக்காரர்களும் பிரிடிஷ் மேன்பார்வை கமிஷனின் காரியாலயத்திற்கும் வாசஸ்தலத்திற்கும் வசதிகளை ஏற்படுத்த பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

கமிஷனைச் சேர்ந்த மெம்பர்களின் முதல் தகுதி அங்கு வந்துவிட்டது. சாமான் வண்டிகளும் வந்துவிட்டன. அதனால் குறுகலான தெருக்களில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தேசபடத்தில் ஹூபக்கே என்பது குறிக்கப்பட்டிருக்காது. ஆகையால் அது எங்கு இருக்கிறதென்று சொல்லுகிறேன். அது மிண்டனுக்கு சமீபத்திலிருக்கிறது. மிண்டன் ஆஸ்னுபிரக்குக்கும் ஹானோவருக்கும் மத்தியிலிருக்கிறது.

நான் நாட்டுப்புறத்து வழியாகவும் வெஸ்ட்பாலியாவிலுள்ள வயல்கள் வழியாகவும் ஹூபக்குக்குச் சென்றேன். கமிஷனின் முற்போக்கு கோஷ்டியிலிருந்த கர்னல் பின்வருமாறு சொன்னார்:—"பிரிடிஷ் வட்டாரம் பூராவுக்கும் செல்லுவதற்கு இது மத்திய ஸ்தலமானதால் இந்த நகரத்தை நாங்கள் பொருக்கியெடுத்தோம். கமிஷன் ஆக்கிரமிப்புப் படைகளுடன் நெருங்கி ஒத்துழைக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் 21-வது சேனைப்பகுதி இருக்கும் இத்தீவிலிருந்து நேர் குறுக்காக 15 மைல்கள் தூரத்தில் நாங்கள் இருக்கிறோம்.

ஆயினும் ஹூபக்கே தாத்காலிகமான நகரம்தான். கமிஷனைச் சேர்ந்த 8,000 பேர்களும் அந்நகரில் வசிக்க முடியாது.

அங்கிருந்து வெளியேற்றப்பட்ட ஜனங்கள் நாஸிகள் அமைத்திருந்த தொழிலாளர்கள் முகாம்களில் வசிக்கும்படி செய்யப்படுகிறார்கள். நாஸிமுகாம் சுத்திசெய்யப்படுகிறது. இந்த ஏற்பாடு மூன்று மாதங்களுக்குத்தான் என்பதினால் அவர்கள் வீட்டை விட்டு சந்தோஷமாக வெளியேறுகிறார்கள்.

பிரிடிஷ் கமிஷனின் சாச்வதமான தலைமை காரியாலயமும் நமது ஆக்கிரமிப்பு வட்டாரத்தின் தலை நகரமும் ரூருக்கும் ஹாம்பர்க்குக்கும் மத்தியிலுள்ள ரஸ்தாவிலுள்ள பெரிய நகரமான பியலேபெல்டிலிருந்து வரக்கூடும்.

கமிஷன் சாச்வதமான தலைமை காரியாலயத்திற்குச் செல்லும் வரையில் ஹூபக்கின் எல்லையிலுள்ள வரிவசூலிக்கும் ஆபீஸரின் காரியாலயம் ஜெர்மனியின் பெரும்பாகத்தின் ஜீவநாடியின் மத்திய ஸ்தலமாக இருக்கும். அங்குதான் தாத்காலிகமாக பிரிடனின் முக்கிய காரியாலயம் இருந்துவரும்.

சார்லிமேல் சாக்ஸனி பேரில் படையெடுத்து மலைகளிலுள்ள ஒரு சிறிய கோட்டையை ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக மாற்றியபின் இந்த நகரம் யாதொரு முன்னேற்றத்தையும் அடையவில்லை.

---

## ஆகினவா வீழ்ச்சி.

*(டைம்ஸ் பத்திரிகை.)*

82 நாட்கள் நடைபெற்ற கோரமான போருக்குப்பின் ஆகினவா என்ற தீவுக் கொத்தளம் அமெரிக்கர் வசமாகிவிட்டது. அதைப்பிடித்ததிலிருந்து நேசதேசத்தாருக்கு மிகவும் உபயோகமுள்ள விமானதளமும், சூறுவெளிக்காற்றுகளிலிருந்து ரக்ஷணையளிக்கக் கூடியதும் பெரிய கடற்படை தங்கியிருக்கக்கூடியதுமான மாகாருசகு என்ற துறைமுகமும் அடுத்த தாக்குதலுக்காக ஏராளமான தரைப்படைகளைக் குவிப்பதற்கு ஒரு பெரிய தீவும் கிடைத்துவிட்டன. அடுத்த நடவடிக்கை ஜப்பானிலா அல்லது ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் சைனாவிலா என்பது நிச்சயப்படவில்லை.

அதை இழந்தபின் ஜப்பான் கூடியசீக்கிரத்தில் பலமாக வெடி விமானங்களால் தாக்கப் படக்கூடும். ஏற்கனவே வெடிவிமானங்கள் ஜப்பானிய தொழிற்சாலை நகரங்களையும், துறைமுகங்களையும், கப்பற்படையையும், விமானதளங்களையும் பழுதுபடுத்தியிருக்கின்றன. இது

வரையில் இந்த நடவடிக்கைகள் முதலில் தெற்கு சைனாவிலிருந்தும் சமீபகாலத்தில் ஜப்பானிலுள்ள சமீப லக்ஷியங்களிலிருந்து 1,300 மைல்கள் தாண்டியுள்ள மரியனாஸ் தீவு களிலுள்ள தளங்களிலிருந்தும் புறப்படும். வெகுதூரம் செல்லும் விமானப்படையால் மேற் கொள்ளப்பட்டன. ஆகினாவாவிலுள்ள விமான தளங்கள் இந்த தூரத்தில் நாலில் ஒரு பாகத்துக்குக் குறைவான தூரத்தில் இருக்கின்றன. அந்தத்தீவை காப்பாற்ற ஜப்பான் அமைத்ததும், இப்பால் அமெரிக்கா எஞ்சினியர்கள் பழுதுபார்த்துவருவதுமான விமான தளங்களில் மிகவும் சக்தி வாய்ந்த 1,000 விமானங்கள் தங்கியிருக்கலாமென்று ஜப்பானிய நிபுணர்கள் மதிப்புப்போடுகிறார்கள். இந்தப்புள்ளி விபரத்துடன் தூரதளங்களிலிருந்து வரும் வெடிவிமானங்களையும், விமான தாங்கிகளின் மூலம் வரும் சண்டை விமானங்களையும், லேசான, நடுத்தரமான வெடிவிமானங்கள், பைடர் வெடிவிமானங்கள் முதலியவற்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். சமீபகாலத்தில இந்த விமானப்படைதான் ஜப்பானிய கடற் படையின் தோல்விக்கும் முற்றுகைக்குப்பின்னும் ஜப்பானை பலமாகத்தாக்கிவருகிறது.

ஜப்பானிய பிரமுகர்கள் ஆகினாவா இந்தப்போருக்கு மிகவும் முக்கியத்வமுள்ளதென்று சொல்லுவதற்கும் அதை இவ்வளவு பலமாகத் தற்காப்பு செய்யப்போராடியதற்கும் மேலே சொல்லியவைகள்தான் முக்கிய காரணங்கள். அமெரிக்காவை எதிர்த்து நின்ற 1 லக்ஷம் பேர்களில் 90,000-க்கு மேல் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள். 4,000 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்காவுக்கும் பலமான நஷ்டம் ஏற்பட்டது. ஆகிலும் பூர்ணமானவெற்றி கிடைத்துவிட்டது.

---

## டிரக்கை பசிபிக் கடற்படை தாக்குவது.

### இருவகைப்படை ராணுவ முக்கியத்வம்.

கர்னல் பிரெட்டன்.

டிரக்கை பிரிடன் சமீபகாலத்தில் தாக்கியதென்பது ஜப்பானை நோக்கி வடக்கு மூலமாக முன்னேறும் நடவடிக்கையின் ஒரு சம்பவமென்றும் கிழக்கிலிருந்து பிலிப்பைன்ஸுக்குப் போகும் கடல் மார்க்கங்களை மறுபடியும் திறந்துவிடக்கூடிய நடவடிக்கையென்றும், ஆகையால் லூசானில் மாக்ஆர்தர் முன்னேறிவரும் நடவடிக்கையின் ஒரு அம்சமென்றும் சொல்லலாம். \ ஜப்பானின் மனப்பான்மை நிலைகுலைவதற்கும் இது உபயோகமுள்ளது. இந்தப்பயன் இருவகைப்பட்ட ராணுவ முக்கியத்வத்திலிருந்தும், ஸ்வயமாக டிரக் ஒரு பெரிய ஜப்பானிய கடற்படை தளமென்பதிலிருந்தும் ஏற்பட்டிருக்கிறது.

பிரிடனின் இந்தத் துணிவுகரமான நடவடிக்கையில் மற்றொரு முக்கியத்துவமுள்ள அம்சமும் இருக்கிறது. ஜப்பானிய யுத்தம் முடிந்தும் அதைப்பற்றியுள்ள விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படும் வரையில் நான் ஊகமாகத்தான் சொல்லக்கூடும். தேசப்படத்தை நோக்கினால் பிரிடிஷ் கடற்படை தளங்களிலிருந்து எவ்வளவு தூரம் இந்த நடவடிக்கையில் சென்றிருக்கிறதென்று தெரியவரும். சாத்தியமாவதற்கு மகத்தான சப்ளை பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்பதையும் அது வெளிப்படுத்துகிறது.

இதற்கு அவசியமானது கடற்படைத்தொடர்புதான். இந்தத் தொடர் 18 மாதங்களுக்கு முன் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பல ரகக் கப்பல்கள் இருக்கின்றன. மூழ்கிய சாமான்களை உத்தாரணம் செய்யும் கப்பல்கள், கடலில் செல்லும் இழுப்புப்படகுகள் சுரங்க வாரிக் கப்பல்கள், விமானங்களைப் பழுதுபார்க்கும் கப்பல்கள் எண்ணெய்க் கப்பல்கள், தண்ணீர் படகுகள், வெடிமருந்துக் கப்பல்கள், சப்ளைக் கப்பல்கள், விமானங்களை ஏற்றிச் செல்லும் விமானந் தாங்கிகள், பொழுது போக்குக்கு வசதியுள்ள கப்பல்கள், மிதக்கும் முகாம்கள், ஒர்க்ஷாப்புகளுள்ள கப்பல்கள், இன்றும் தரையிலுள்ள தளங்களை நம்பியிருக் காமல் பசிபிக் கடலிலேயே பிரிடிஷ் கடற்படை சஞ்சரிக்க உதவக்கூடிய கப்பல்கள், முதலியவை கப்பற்கூட்டத்தில் சேர்ந்தவை.

விமானந்தாங்கிகளிலுள்ள பழுது பார்க்கும் ஒர்க்ஷாப்புகளுடன் விமானங்களின் உதிரி பாகங்களை ரிபேர் செய்யும் கப்பல்களும் இருக்கின்றன. முஸ்தீப்புகள் இருக்கின்றன. ஒரு கப்பலில் 250-உயர்தர பிட்டர்களும், 80-மின்சார வேலைக் காரர்களும், 360-கருமான், டர்னர், உலோக வேலைக்காரர்கள், மரவேலைக்காரர்களும், இருக் கிறார்கள். அதன் அடிப்பக்கத்தில் 18-விசாலமான ஒர்க்ஸாப்புகள் இருக்கின்றன. அவைகளில் ஏராளமான

டிரக்கைப்போன்ற தீவுகளைத் தாக்குவதற்காக ஐரோப்பாவிலிருந்து புறப்படும் முன்பே பிரிடிஷ் யுத்தக்கப்பல்களும், விமானந்தாங்கிகளும், சஞ்சாரிகளும் திருத்தியமைக்கப்பட்டன.



உஷ்ணந்தரேகை பிரதேசத்திலுள்ள விசேஷப் போர்நிலைமையைக் கவனிப்பதற்காக கடற் படை சிற்பிகளும், தத்துவ சாஸ்திரிகளும், ரசாயன சாஸ்திரிகளும், தேச தத்துவ சாஸ்திரி களும், மனப்பான்மை ஆராய்ச்சிக்காரர்களும், காற்று சம்பந்தமான எஞ்ஜினியர்களும் தூரக் கிழக்கு தளங்களுக்கு அனுப்பட்டார்கள்.

டிரக்கு மத்தியரேகைக்குச் சற்று வடக்கிலிருக்கிறது. கப்பல்களில் தண்ணீர் புகுந்து கொள்ளாமலும், விளக்கவிப்புக்காகவும் எல்லா பலகணிகளையும் மூடும்படி ஏற்படும்பொழுது பிரிடிஷ் மாலுமிகள் சிரமங்கள் எவ்விதமிருக்குமென்று நாம் ஊகித்துப் பார்க்கலாம். இதற்காக உஷ்ணத்தை உண்டுபண்ணும் யந்திரத்தைச் சுற்றி உஷ்ணத்தை கிரகிக்கக் கூடாத ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் அமைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பல கனிகளும் விசிறிகளும் அமைக்கப்பட்டன. காற்றை அப்புறப்படுத்தும் முறைகளும் திருத்தியமைக்கப்பட்டன. கப்பலிலுள்ள மேற்தட்டிலும், சாப்பாட்டு அறையிலுமுள்ள காற்றை மணிக்கு 12-தடவை யும், யந்திரங்களுள்ள அறையில் நிமிஷத்திற்கு ஒரு தரமும் மற்ற இடங்களில் மணிக்கு 120-தடவையும் மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடுகள் ஜெர்மனி முறியடிக்கப்படுவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது.

டிரக்குக்கு சமீபத்தில் பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் ஜப்பானை எதிர்த்த பொழுது அவைகள் ஆறுவருஷ யுத்த அனுபவத்தைப் பயன்படுத்தினார்கள். ஜப்பானிய விமானங்கள் பேரிலும் எண்ணெய் அமைப்புக்கள் பேரிலும் பிரிடிஷ் சஞ்சாரிகள் குண்டுகளைப் போடுமுன் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் வழிகாட்டியாக இருந்தது. நார்மண்டி படையெடுப்பின் பொழுதும் இந்த விமானங்கள் லக்ஷியங்களைக் குறிப்பாக காட்டிவந்தன, அங்கு ஒரு விமானம் ஜெர்மனியின் கவசம் பூண்ட ஒரு மோட்டார் கூட்டத்தைப் பின்பற்றிச் சென்று வழிகாட்டியது. அவைகள்பேரில் பீரங்கிக்குண்டுகள் ஏராளமாக விழுந்தன. கடைசியாக வார்ஸ்பைட் என்ற யுத்தக்கப்பலின் குண்டு வீச்சுக்குட்பட்டு அவைகள் அழிக்கப்பட்டன. டிரக் நடவடிக்கையிலும் இவ்விதம் குறி தவறாமல் குண்டுகள் போடப்பட்டன.

---

## கடமையைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

### 1945-ம் வருஷம் ஜூன் மாதம் 18-ம் தேதியன்று அமெரிக்க காங்கிரஸுக்கு ஜெனரல் ஈசன்ஹவர் யுத்தத்தைப்பற்றி சமர்ப்பித்த ரிபோர்டு.

(மதராஸ் யுத்த சஞ்சிகை).

அமெரிக்கர்களின் வாழ்நாளில் இதைவிடச் சிறந்த தருணம் இருந்திருக்காது என்று எண்ணுகிறேன்.

நமது குடியரசு ஆக்ஷியைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சமஷ்டி சட்ட சபை முன் நான் பேச வந்துள்ளேன். அமெரிக்க பூர்வீக சொத்து என்று சொல்லும் மூலதனத்தின் அடையாளமும், ராஜீய வாழ்க்கையின் மத்திய நிலயமும் இங்குதான் இருக்கிறது. இந்த மூலதனத்தைக் காப்பாற்ற உங்களுடைய வேண்டுகோளின்படி மூன்று மிலியன்கள் கொண்ட அமெரிக்கர்கள் நாஸிகளின் சகலவிதமான கொடுமைகளையும் அனுபவித்திருக்கிறார்கள்.

நான் அந்த 3 மிலியன் அமெரிக்கர்களின் பிரதிநிதியாக இங்கு வந்துள்ளேன். நான் அவர்களின் கமாண்டர். அவர்களுக்குக் கிடைத்த ராணுவ வெற்றிக்கு அமெரிக்கா நன்றி செலுத்த இன்று உத்தேசித்திருக்கிறது. அந்த நன்றி அறிவிப்பை அவர்கள் நேரில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். உங்கள் சார்பாக இந்தச் செய்தியை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் ஏஜெண்டாக என்னை தாங்கள் கௌரவித்ததில் நான் பெருமை கொள்ளுகிறேன்.

ஐரோப்பாவில் வெற்றி கிடைத்ததற்காக அநேகம் போர்களை வர்ணிப்பதற்கு இது தகுந்த தருணமில்லையென்று நினைக்கிறேன். அவைகள் சரித்திரத்தில் விஸ்தாரமாக எழுதப் படும்.

ஆகிலும் நீங்கள் அனுப்பிய ஸோல்ஜர்களின் குணநிசயங்களைப்பற்றி ஒரு சுருக்கமான விருத்தாந்தத்தை நீங்கள் அறிய விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன். சரித்திரத்தில் 2,000 வருஷங்களாக போர்கள் நடைபெற்று வந்த ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அமெரிக்கப் படையின் திறமை ருஜுச் செய்யப்பட்டது. அமெரிக்கரைவிட மேன்மையான ஸோல்ஜர்கள் அங்கு இதுவரையில் போர்புரிந்திருக்கமுடியாது.

மனப்பூர்வமாக அவன் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறான். முறைமுறைப்பன்னியில் அவன் அபாரமான தியாகங்களைச் செய்திருக்கிறான். அவன் அநேக கஷ்டங்களை பொறுமையுடன் அனுபவித்தபோதிலும் ஒரு தடவைகூட அவன் தளர்ச்சியடையவில்லை. அவனுடைய முன்னேறித் தாக்கும் தீரத்தை ஐரோப்பிய போர்முனைகளிலுள்ள எல்லோரும் கொண்டாடுகிறார்கள். தனிப்பட்டவர்களின் தீரச்செய்கைகளைப்பற்றி நீங்கள் அநேகம் படித்திருப்பீர்கள். ஆகிலும் அவைகளில் பத்தில் ஒரு மடங்குகூட வெளிவரவில்லை. அவற்றில் ஒன்றைக்கொண்டு மட்டும் ஒவ்வொரு அமெரிக்கரும் மனம் கசிந்து தன்னுடைய நாட்டைப்பற்றிப் பெருமை கொள்ளலாம். இதுவரையில் எந்த ஸோல்ஜர்களும் அமெரிக்கர்களைப்போல் ஒரு கெட்ட எதிரியின் இவ்வளவு நீண்டகாலம் போரை நடத்தியதில்லை. அல்லது கெட்ட பருவ காலத்திலுடையவும் பிரதேச அமைப்பின், காடின்யத்தையும், கொடுமைகளையும் அனுபவித்ததில்லை. அமெரிக்க ஸோல்ஜர் நெருப்பு, தானாகச்சுடும் ஆயுதங்களினால் தொந்திரவளிக்கப்பட்டான். கைத் துப்பாக்கி, பீரங்கிகளின் குண்டுவீச்சினாலும், அவுட்வாணங்களினாலும் நொருக்கப்பட்டான், டாங்கிகளாலும், விமான குண்டுகளாலும் தாக்கப்பட்டான். ஏராளமான சுரங்க வெடிகள், பொறிகள், மற்ற சகலவிதமான இடையூறுகள் முதலியவற்றினால் ஏற்பட்ட அபாயங்களையும் அவன் சமாளித்திருக்கிறான். அவன் எல்லாவற்றையும தாண்டி வெற்றி பெற்றிருக்கிறான்.

யுத்த காலத்தில் போரின் தன்மையும் அபாரமாக அதிகரித்திருக்கிறது. தரைப் படைகளுக்கு விமானப்படை உதவிகொண்டு ஜெர்மானியர்கள் போலந்து, ஹாலந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் மின்னல் தாக்குதலைத் துவக்கியபொழுது நாசமுண்டாக்கும் சக்தி உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டதென்றும், ஜெர்மன் சேனைகளை ஒரு சக்தியும் எதிர்த்து நிற்கமுடியாதென்றும் பீதியடைந்த உலகம் நினைத்தது.

அமெரிக்கா யுத்த அரங்கத்தில் புகுந்தபொழுது நாஸி யந்திரம் உச்சநிலையை அடைந்திருக்கிறது.

1940-ம் வருஷத்தில் அது மேற்கு ஐரோப்பா பூராவையும் அநேகமாகப் பிடித்து விட்டது. ஒரு வாரத்திற்குள் கிழக்குப் பகுதியில் அது செஞ்சேனையை ருஷ்யாவுக்குள் வெகு தூரம் துரத்தியடித்துவிட்டது. நேசதேசத்தார்கள் இந்த சவாலை தீர்க்காலோசனையுடனும், ஆர்வத்துடனும், வேலையின் மகத்தான தன்மையை உணர்ந்தும் ஏற்றுக்கொண்டார்கள். அமெரிக்கா அதன் பூரா ஐச்வரியங்களையும் ஒன்று திரட்டியது. புதிய யுத்த முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன. முக்கியமாக தரை, கடல், விமானப்படை ஒத்துழைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நாசம் விளைவிக்கக்கூடிய சக்திகளை பரிஷ்காரமாக ஒன்றுபடுத்திவிட்டோம் என்று நினைத்த ஜெர்மனி, அவனுடைய் சாமர்த்தியத்தையும் முறைகளையும் நேசதேசத்தார்கள் மீறிவிட்டார்கள் என்று கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டான்.

### சரித்திரத்திலேயே மகத்தான இருவகைப்பட்ட தாக்குதல்கள்.

படைகளுக்கு ரக்ஷணை என்ற முறையிலும் தொழிற்சாலைகளை அழிப்பது என்ற முறையிலும், உதவியளித்துவந்த விமானப்படை பலத்துடன் நேசதேசத்தார்கள் சரித்திரத்திலேயே மகத்தான இருவகைப்பட்ட தாக்குதலை துணிவுகரமாக நடத்தினார்கள்.

படைகளை இறக்கியவுடன் கடற்கரைகளில் முன்னேறும் வாசல்கள் அமைக்கப்பட்டன. அவற்றை கடற்படை பரிபாலித்து வந்தது. அதற்குப்பின் விமானப்படை ஒத்துழைப்புடன் தரைப்படை முன்னேறி எதிரிக்கு ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ச்சியாக தோல்விகள் அளிக்கப்பட்டன.

சர்ப்பராவை வழங்கும் படையினரும் வேலையில் திடசித்தத்துடன் போர். படைகளுக்கு உதவியளித்து வந்தார்கள்.

இறுதியில் ஐரோப்பாவுக்கு, அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தரை, கடல் ஆகாயம் மூலம் ஏராளமான படைகளை அனுப்பிவந்தார்கள். இவைகள் முன் 1939, 1940-ம் வருஷ நடவடிக்கைகள் அல்பமானவையென்று தோன்றும். அதன் விளைவாக அகம்பாவம் பிடித்த எதிரி நிபந்தனையற்ற சரணாகதி செய்தான். இதுதான் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் சாதித்தது. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில்தான் அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியது. அப்பொழுதுதான் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிரதம மந்திரி சர்ச்சிலை சந்தித்து யுத்தத்தை நடத்தும் திட்டத்தையும் யுத்த தந்திரத்தையும் சிறுவினர். ஐரோப்பாவில் நான் இருந்த மூன்று வருஷங்களின் பெரும்பாகம் பூராவும் இந்த தெய்வப் பிறப்புள்ள இருவர்களும் ஒன்றுபட்ட சேனாதிபத்யம் வகித்துவந்தார்கள்.



வெற்றிக்கு ஒன்றுபட்ட லக்ஷியம்தான் அவசியம் என்று அவர்கள் வற்புறுத்திவந்தது தான் ஐரோப்பியப் போருக்கு வழிகாட்டியாக இருந்தது. நாம் அவ்விருவருக்கும் சிரந்தரமாகக் கடமை செலுத்தவேண்டும். சாகும்வரையில் யுத்தத்தில் அமெரிக்காவுக்கு தாயகம் வகித்த ஒருவரை நீங்கள் பாராட்டியதற்கு நான் என்றும் கூட்டிச் சொல்லமுடியாது. ஆகிலும் அவருடைய வலிமையும், அஞ்சா நெஞ்சமும்தான் அநேக பிரச்னைகளைத் தீர்க்க எனக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஊட்டிவந்தன என்று நான் சொல்லவிரும்புகிறேன். அவருடைய நண்பரான பிரதம மந்திரி சர்ச்சில் 1940-ம் வருஷத்தில் பிரிடனுக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டபொழுது அதை சமாளித்து நின்றார். பிரதம மந்திரியின் பலமான ஊக்கமும், போர் புரியும் ஆர்வமும், ஒன்றுபட்ட லக்ஷியமும் எல்லோருக்கும் ஊக்கமளித்துவந்தன. நமது ராணுவ நடவடிக்கையில் எந்த முயற்சியிலும் அவர் பூர்ணமாக ஒத்துழைத்தார். அவருடைய வசீகரமானதும், செல்வாக்குள்ளதுமான சக்தியினால் பிரிடன் செய்யவேண்டிய தியாகங்களை, பிரிடிஷ் மக்கள் ஒத்துக்கொள்ளும்படியாகவும் அவர் கட்டாயப் படுத்திவந்தார்.

இரண்டு மிலியன் அயல்நாட்டார்களை சறைவான வசதிகள் உள்ள பிரிடன் ஆதரித்து வந்ததென்பது பிரிடிஷ் மக்களின் ஔதார்யத்தையும் நல்லெண்ணத்தையும் நன்கு வெளிப் படுத்துகிறது. ஒரு பெரிய சேனையை பரிபாலிப்பதினால் ஏற்பட்ட பளுவை பிரிடிஷ் மக்கள் சந்தோஷத்துடன் பொறுத்துவந்தார்கள். இது அமெரிக்கர்கள் கவனத்தைக் கவர்ந்தது.

நெருக்கடியான சமயங்களில் பிரிடனின் உணவுப் பங்கீட்டு முறையை, யுத்தத்துக்காக கப்பல்களை மீதப்படுத்தும் காரணத்துக்காக, பின்னும் குறைத்துவிடவும் தயங்குவதில்லை. ஏற்கனவே அதிகப் போக்குவரத்துகள் உள்ள பிரிடிஷ் இருப்புப்பாதை மூலம் அதிக வண்டிகள் சென்றதால் பிரயாணிகள் நடமாட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அவசியமான சாமான்களும் அவசரத்துக்குத் தக்கவாறுதான் இருப்புப்பாதை மூலம் கொண்டுபோகப் பட்டன. பிரிடன் நமக்கு அளித்த ஆதரவுக்கும், நம் சார்பில் பிரிடிஷ் மக்கள் பொறுத்துக் கொண்ட அசௌகரியங்களுக்கும், வெற்றிக்காக அவர்கள் செய்த தியாகத்திற்கும், விஷயம் அறிந்த ஒவ்வொரு அமெரிக்கரும் மனதார நன்றி செலுத்தவேண்டும்.

இந்த இரு தலைவர்களுக்கு உதவியாக பிரிடிஷ் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் துவாராகத்தான் எனக்கு உத்தரவுகள் சாதரா செய்யப்பட்டன. அவர்களின் சலிப்பற்ற ஆதரவும், அவர்களின் அந்தரங்கமான வெளிப்படையான நம்பிக்கையும், அவர்களின் புத்திசாலித்தனமான போதனைகளும், அவர்களின் கட்டும் சிறந்தவை என்பதற்கு நான் அத்தாக்ஷி. மகத்தான நேசதேசப்படைகளை ஒன்றுபடுத்த அவர்கள் திட்டங்களை நிறுவினார்கள். யுத்தத்தினால் ராஜீய லக்ஷியங்களை அடைய அமெரிக்காவும் பிரிடனும் மேற்கொண்ட மகத்தான ராணுவ லக்ஷியங்கள் அவர்கள் மூலம் பலமடைந்தன.

### பொதுவான லக்ஷியத்தில் சிரத்தை.

அவர்கள் ஏற்பாடு செய்த ஒற்றுமை மனப்பான்மையை போர்முனையிலுள்ள படைகள் ஏற்றுக்கொண்டன. எனக்குட்பட்ட கமாண்டர்களிடமும் சிப்பந்திகளிடமும் இது காணப் பட்டதுபோல் வேறு எங்கும் இந்த ஒற்றுமை காணப்படவில்லை. பொதுவான லக்ஷியத்திலுள்ள சிரத்தையினால் பிரிடனும், அமெரிக்காவும், பழக்கவழக்கங்கள், முறைகள், தேசிய இயல்புகள் முதலியவைகளால் ஏற்பட்ட வித்தியாசங்களை மறந்துவிட்டன. உயர்தர கமாண்டர் முதல் புதிய ரிக்ரூட் வரையிலும் உள்ள திடசித்தமுள்ள நண்பர்களைப் பெற்றதற்கும் அவர்கள் கோஷ்டியில் சேர்ந்து வேலை செய்ய முன்வந்ததற்கும் நான் கடவுளின் கருணைக்கு அடிக்கடி வந்தனமளித்திருக்கிறேன்.

இங்கிலாந்தில் பிரிடிஷ் விமானிகளுடன் ஏற்பட்ட சகவாசம், ஆபிரிக்கப் படையெடுப்பில் பிரிடிஷ் கடற்படையுடன் தொடர்பு, வடக்கு ஆபிரிக்காவில் பிரிடிஷ் சேனைகளுடன் நட்பு என்ற அனுபவத்தின் மூலம் நாங்கள் போரின் அநேக மாதங்களில் பிரிடிஷார்களின் குணங்களைக் கண்டுபிடித்திருக்கிறோம். பிரிடிஷ், கனடிய, பிரெஞ்சு ஸோல்ஜர்களுடையவும், அவர்களின் தலைவர்களுடையவும் போர் புரியும் ஆர்வத்தை நாங்கள் மதித்திருக்கிறோம்.

இந்த ஒன்றுபட்ட நடவடிக்கை ஆகாயப்படை, தரைப்படை, கடற்படை, சர்ப்பராப் படை முதலிய எல்லா சேவைப்படைகளிலும் காணப்பட்டது. ஐரோப்பாவில் முன்னேறும் வாசலை ஏற்படுத்த கடற்படை செய்த உதவி அபாரமானது. நுட்பமான எல்லா விவரங்களையும் சொல்லாவிட்டாலும், அமெரிக்க, பிரிடிஷ் கடற்படையின் அற்புதமான நடவடிக்கையில் ஆபிரிக்கா, ஸிஸிலி, இதாலி, பிரான்ஸ் முதலிய இடங்களில் வெற்றிகரமாகச் செய்யப்பட்ட படையெடுப்பையைப்போல எந்த நடவடிக்கையும் மேன்மையாக இருந்திராது என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்.

கடற்படையுடன் சாமான் கப்பற்படையும் இருந்துவந்தது. அங்கும் அமெரிக்கர்கள் கடமையில் பக்தியுடனும், அவசியமான முறையில் அபாயத்தையும் கஷ்டங்களையும் பொருட் படுத்தாமலும் வேலை செய்திருக்கிறார்கள்.

விமானப்படைக்கும் நமது நன்றியறிவு உரித்ததாகும். அது உதவி செய்திராவிடில் மற்ற படைகள் ஒன்றும் பயனளித்திருக்காது. ஒவ்வொரு கப்பலிலும், ஒவ்வொரு விமானத் திலும், ஒவ்வொரு படையிலும், பொதுவான லக்ஷியத்துக்காக ஒவ்வொருவரும் உயிரை அர்ப்பனம் செய்யத் தயாராக இருந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அபிப்பிராயத்தில் போர் தந்திரத்துக்கு ஜவாப்தாரியானவர்களையும் நான் சேர்த்துக் கொள்ளுவேன்.

நேசதேசப் படைத்தலைவர் என்ற ஹோதாவில் லண்டனிலும், பாரிஸிலும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினுடையவும், பிரான்ஸினுடையவும் போர்த் தலைவர்களுக்கு நேசதேசத்தார்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். அமெரிக்கன் என்ற முறையில் நமது தேசத்திற்காக சேவை புரிந்த உயர்வான ஆபீஸர்களில் சிலரை உங்களுக்கு அறிமுகப் படுத்த விரும்புகிறேன்.

## கமாண்டர்களுக்குப் பாராட்டு.

ஆனால் எந்த ஜாபிதாவும் அறுகுறையாகத்தானிருக்கும். ஆகையால் சேனை, கடற்படை, விமானப்படைத் தலைவர்கள் எல்லோரும் விசுவாசத்துடனும், பக்தியுடனும், திறப்புடனும் ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் போர்புரிந்திருக்கிறார்கள் என்று மட்டும் சொல்ல விரும்பு கிறேன். அவர்கள் தங்களுடையவும், உங்களுடையவும், பிள்ளைகள், பந்துக்கள், நண்பர் களின் ஆத்மீக, திரேக க்ஷேமத்தைக் கோரியவர்கள்.

நீங்கள் ஐரோப்பாவுக்கும், ஆபிரிக்காவுக்கும் அனுப்பியுள்ள தலைவர்களிடமும், அவர்கள் சாதுர்யமாகவும் சிரத்தையுடனும் தலைமை வகித்து நடத்திய சேனைகளிடம் பெருமைகொள்ள உரிமை பெற்றிருக்கிறீர்கள்.

நான் பெரும்பாலும் அமெரிக்க, பிரிடிஷ் படைகளைப்பற்றிப் பேசியதற்கு என்னுடைய கமாண்டுக்குள் அப்படைகள் பெரும்பாலும் இருந்ததுதான் காரணம். ஆகிலும் ஜெர்மனியை முறியடித்ததற்கு கிழக்குப் பக்கத்தில் செம்படை எல்லா எதிர்ப்பையும் நிலைகுலைத்ததுதான் காரணமாகும்.

ருஷ்யத் தலைவர்களின் திறமையும் போர்படைகளிலுள்ள ஆடவர்களுடையவும் ஸதிரீ களுடையவும் தீரமும், அஞ்சா நெஞ்சமும் ஸோல்ஜர்களின் குணங்களைப் பாராட்டும் எவருடைய மனதையும் கவர்ந்துவிடும். ருஷ்ய மக்கள் ஜெர்மனியின் காட்டுமிராண்டித் தனத்தினால் அழிக்கப்பட்ட ருஷ்யாவிலேயே அதிக தியாகங்களைச் செய்யவேண்டியிருந்தது. ஸ்டாலின் கிராடுக்குத் துறத்தியடிக்கப்பட்டபொழுதும் அவர்கள் இறுதியில் வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்களென்பது சரித்திரப் புகழ் பெற்றதாகும்.

கடைசியாக, ருஷ்யப் படைகள் ஒரு பக்கமும் நாம் மற்றொரு பக்கமும் முன்னேறி எல்பா நதிக்கரையில் சந்திக்க முயன்றபொழுது யுத்த முடிவு வெகு சீக்கிரம் என்று எதிர் பார்க்கப்பட்டது. கிழக்கிலும் மேற்கிலுமுள்ள நேசதேசத்தார்கள் ஒன்று சேர்ந்தார்கள். ஜெர்மனி வீழ்ச்சிபெற்றது.

## உள்நாட்டு முனை.

ருஷ்ய வெற்றிக்கு உள்நாட்டிலுள்ள நீங்களும் பேருதவி செய்திருக்கிறீர்கள். ருஷ்யா வின் யுத்த முயற்சிக்கு ஆர்க்டிக் வழியாக மர்மான்ஸ்க்கும் பாரஸீக வளைகுடா வழியாக ருஷ்யாவுக்கும் அனுப்பப்பட்ட ஏராளமான அமெரிக்க முஸ்தீப்புகள்தான் பேருதவி செய்தன. நமது உற்பத்தி முறையை ருஷ்யத் தலைவர்களும் மற்ற நேசதேசத் தலைவர்களும் ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். அதன் முக்கியத்துவம் காணப்படாத எந்தப் போர் முனையும் ஐரோப்பாவில் கிடையாது. வெற்றியை சம்பாதிக்க ஐரோப்பாவில் விடுதலை பெற்ற நாடுகளும் உதவி செய்திருக்கின்றன.

நார்மண்டியில் நாம் படையெடுத்த பின், பிரான்ஸின் பெரும்பாகம் சென்ற வேனிற் காலத்தில் விடுவிக்கப்பட்டது. அங்குள்ள ஜனங்கள் சாதாரண வாழ்க்கைக்குரிய காரியங்களை நடத்த ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிரான்ஸின் எதிர்ப்புப் படைகளும், மற்றும் சில பிரெஞ்சுப் படைகளும் எதிரியை அப்புறப்படுத்தும் வேலையில் ஒத்தாசை செய்தன.

ஒவ்வொரு அமெரிக்க ஸோல்ஜரும் பிரான்ஸில் யுத்தத்தினால் எவ்வித நஷ்டம் ஏற்பட்ட தென்று அறிவான். நகரங்கள் நாசமாகிவிட்டன. பாலங்கள் உடைபட்டுவிட்டதினால் ரஸ்தா, நதிப் போக்குவரத்து சிரமசாத்தியமாகிவிட்டது. ரயில் வண்டித் தொடர்கள்



அழிக்கப்பட்டதினாலும், அல்லது ராணுவத் தேவைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதினாலும், உணவுப்பொருள், எண்ணெய் முதலிய பொதுமக்களுக்குரிய சாமான்களை எடுத்துச்செல்ல போக்குவரத்து சாதனங்கள் குறைந்துவிட்டன.

இப்பொழுது யுத்தம் நின்றுவிட்டபோதிலுங்கூட பசிபிக்கில் நாம் போரை நடத்த வேண்டிய அவசியமிருப்பதினால் பிரெஞ்சு மக்களின் கஷ்டங்களை நிவர்த்தித்து வாழ்க்கை முறையை அபிவிருத்தி செய்ய ஒன்றும் செய்யக்கூடவில்லை. நான்கு வருஷங்களாக ஜெர்மன் கொடுங்கோன்மையை அனுபவித்து திறமையுள்ள எதிர்ப்பு இயக்கங்களை ஆதரித்த பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க்குக்கும் இந்த அபிப்பிராயம் பொருந்தும். ஹாலந்தின் போரின் இறுதியான சில மாதங்களில் ஜெர்மன் படைகள் உதவிபுரிய மறுத்த சில பகுதிகளில் வறுமை மிகுதியாக இருந்தது. நமக்கு அனுதாபம் உண்டாகி நாம் குடைகள் மூலம் பொது மக்களுக்கு டன்கள் கணக்கான உணவுப்பொருள்களை வழங்கிவந்தோம். அந்த நாடுகளுக்கு இன்னும் நாம் உதவியளிக்கவேண்டும். இந்தக் கூட்டத்தில் அமெரிக்க உள்நாட்டு முனையும் போர்முனையும் ஒன்றுபட்டிருப்பதினால் இருவர்களுக்குமுள்ள ஒற்றுமையைப்பற்றி நான் ஒரு சிறிது சொல்ல விரும்புகிறேன். அமெரிக்கப் போர்ப்படையைச் சேர்ந்த எவரும் உள்நாட்டி லுள்ளவர்களின் ஆதினத்துக்குட்பட்டவர்கள் என்பதை ஒருபொழுதும் மறந்துவிடவில்லை. இந்த காங்கிரஸின் முன்பாக என்னுடையவும், மற்ற ஒவ்வொரு ஸோல்ஜர், மாலுமி, விமானியினுடையவும் வந்தனத்தை உள்நாட்டில் வேலை செய்துவந்த உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன்.

நீங்கள் ஏராளமான, சிலாக்கியமான பீரங்கிகளையும், வெடிமருந்துகளையும், டாங்கிகளையும், விமானங்களையும் செய்து அனுப்பியிருக்கிறீர்கள். போர்முனையிலிருந்த படைகளின் குடும்பத்தாரும், நண்பர்களும் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில் காணப்பட்ட நம்பிக்கைக்கும், அனுதாப அறிவிப்புக்கும் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறோம்.

## செஞ்சிலுவைக்குப் பாராட்டு.

ஸோல்ஜரின் வாழ்க்கையில் காணப்படக்கூடிய அபாயமும், தனியாக இருப்பதும், கஷ்டங்களும், அன்பும், உற்சாகமும் நிரம்பிய வார்த்தைகளின் மூலம்தான் சிறிது மறைக்கப் படுகிறது. அவர்கள் படைகளுக்குப் புதிய பலத்தையும், தீரத்தையும் ஊட்டி எதிரியை அழிக்கும் கஷ்டமான வேலைக்கு அனுப்பிவிடுகிறார்கள். நீங்கள் ஸோல்ஜர்களுக்காகச் செய்த சேவையை நாங்கள் பாராட்டுகிறோமென்று நீங்கள் தெரிந்துகொள்ளுவீர்களென்று நம்பு கிறேன். உங்களுடைய கண்காணிப்பும் அன்பும் எங்களுக்கு சதாகாலமும் கிடைத்துவந்தது. குறிப்பாக ஒரு ஸ்தாபனத்தைச் சொன்னால் செஞ்சிலுவை சங்கம் எங்களுடைய சிறந்த பாராட்டுக்குப் பாத்திரமானது. செஞ்சிலுவை பொழுதுபோக்கு சங்கங்களையும் முன்னணியி லுள்ள படைகளுக்கு காபியும், பணியாரங்களையும் ஏற்பாடு செய்திருக்கிறது. அது நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், காயம்பட்டவர்களுக்கும், உதவி செய்யத் தயாராக இருக் கிறது. மேலும் செஞ்சிலுவை மாதின் சிரத்தையும் அன்பும் குறிப்பிடத்தக்கவை. செஞ்சிலுவை சங்கம் போர்ப்படைகளுக்கு உதவி செய்ய கடல்தாண்டியும் சென்ற ஒரு ஸ்தாபனம் என்று தோன்றுகிறது.

போர்முனையிலும், உள்நாட்டு முனையிலும் நாம் பத்திரத்தை சம்பாதித்துவிட்டோம். ஆனால் வெற்றி லவபவம் வெற்றி கிடைக்க நாம் செய்த தியாகத்தை மறைத்துவிடமுடியாது. போர்முனைக்குப் படைகளை அனுப்பினால், காரியம் சித்திக்குமுன் அநேகர் உயிர்துறக்க வேண்டுமென்றும், அநேகர் காயம்படவேண்டியிருக்குமென்றும் கமாண்டருக்கு நிச்சயமாகத் தெரியும். இது மிகவும் சங்கடமான வேலை. வாலிபமுள்ள அநேகர்கள் உயிர் துறந்தார்கள் அல்லது முடமாக்கப்பட்டார்கள் என்பதற்காக வருந்துவதுடன் பிரிவாற்றாமையினால் வருந்தும் தாய் தகப்பன்கள், மனைவிகள், நண்பர்களுக்காகவும் நான் வருந்துகிறேன். அவர்கள் அபாரமான நஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் மறுபடி யும் சம்பவிக்காது என்ற நம்பிக்கை ஏற்பட்டால்தான் அவர்களின் துயரத்துக்கு ஆறுதல் ஏற்படும்.

இது விஷயத்தில் எனக்கு அதிக உணர்ச்சியிருப்பதினால் போர்ப்படைகளின் மனதில் காணப்படும் ஒரு அபிப்பிராயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 1941, 1912-ம் வருஷத்தில் நேசதேசத்தார்களுக்கு எவ்விதமான கோரமான நிலைமை இருந்ததென்று ஸோல்ஜர் அறிவார். இந்த அபாயத்தைத் தவிர்க்க நேசதேசத்தார்கள் எவ்வளவு உற்சாகத்துடன் முன்வந்தார்கள் என்றும் அவன் அறிவான். மூன்று வருஷங்களுக்குமுன் தோன்றிய பிரச்னையைத் தீர்த்து வெற்றிகரமாக முடிவு ஏற்பட்டதைவிட சமாதானகால

பிரச்னைகள் கடினமாக இருக்காதென்று அவனுக்குத் தோன்றுகிறது. தனித்திருந்தால் நிர்மூலமாகிவிடுவோம் என்ற பயம்தான் நேசதேசத்தார்களை ஒன்றுபடுத்தியது. அதே ஒற்றுமையை வளர்ச்சிக்க சமாதான காலத்தில் அதைவிட சிலாக்கியமான காரணங்கள் இருக்கக்கூடும்.

### சமாதானப் பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம்.

சரித்திரத்திலேயே மிகப்பெரியதான யுத்த யந்திரத்தை அழிக்கக்கூடிய சக்திகளை ஐரோப்பாவுக்கு அனுப்பக் காரணமாகயிருந்த நேசதேசத்தாரின் தீவிரமான எண்ணமும், நம்பிக்கை கொண்ட ஆர்வமும், பரஸ்பர நல்லுணர்ச்சியும் நிலைபெற்றிருந்தால் சமாதான பிரச்னைகளையும் தீர்த்துவிடலாமென்று அவன் நம்புகிறான். நேசதேசத்தார்கள் வலிமையுடனும், தாக்ஷிண்யமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்று அவன் நினைக்கிறான். உலகத்திலுள்ள அறிவாளிகளான தலைவர்கள், ஸோல்ஜர்கள் சம்பாதித்த சமாதானத்தைக் காப்பாற்றவேண்டுமென்றும் அவன் எண்ணுகிறான்.

அமெரிக்காவின் மேதாவித்தனமும் சக்தியும் மற்ற நேசநாடுகளின் உதவிகொண்டு அமெரிக்காவின் ஸ்வதந்திரத்துக்கு ஏற்பட்ட ஒரு அபாயத்தை அடியோடு அழித்து நிவர்த்தி செய்துவிட்டார்கள். சமாதானம் நிலைபெறுமுன் பசிபிக்கிலுள்ள மற்றொரு அபாயமும் நிவர்த்திக்கப்படவேண்டும்.

என்னுடைய கமாண்டுக்குட்பட்டிருந்த அமெரிக்க ஆடவர்களும், ஸ்திரீகளும் இன்று உங்களுக்கு ஒரு செய்தியை விடுக்கிறார்கள்.

ஐரோப்பாவுக்குச் செல்லும்படியாக நம்மைத் தூண்டிய ஜனங்களின் ஆர்வம் எதிர் காலத்திய போரிலும் நமக்கு உற்சாகமளிக்கும் என்பதைப்பற்றி எங்களுக்கு சந்தேகமே இல்லையாது. நாங்கள் அன்பார்ந்தவர்களைப் பார்க்க அமெரிக்காவுக்குத் திரும்பிவருவோம் என்றாலும் நாங்கள் தேசத்திற்காக எவ்விதமான கடமையையும் செய்யத் தயாராக இருக்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில சேனாதிபதியான ஜனாதிபதி ட்ருமானிடம் உள்ள எங்களுடைய விசுவாசத்தைப் புதுப்பித்துக்கொள்ளுகிறோம். அவருடைய தலைமையின்கீழ் இறுதி வெற்றி நிச்சயம் என்றும் நாங்கள் அறிவோம்.

---

## கடலில் சுரங்கவெடி யுத்தம்.

### அதன் அபிவிருத்தி ஜப்பானுக்கு கெடுதலை ரூபிப்பிக்கிறது.

(பிரியான் டன்ஸ்டால்).

சுரங்கவெடி யுத்தம் சம்பந்தமாக பிரிடிஷ் கடற்படை இலாகா முக்கியமான புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் ஜெர்மன், இதாலியப் போர்களில் பிரிடிஷ் கடற்படை எடுத்துக்கொண்ட பங்கைப்பற்றி இருந்தாலும் அவைகள் ஜப்பானைக் குறித்து நடத்தும் போருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும்.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதியிலிருந்து 1945-ம் வருஷம் மேமாதம் 8-ம் தேதிவரையில் பிரிடிஷ் கடற்படையும் சாம்ராஜ்ய கடற்படையும், மற்ற நேசதேச கடற் படையும் எல்லா போர் பிராந்தியங்களிலும் 206, 969 கடல் சுரங்கவெடிகளைப் பாவி யிருக்கின்றன. இந்த வெடிகளை பெரிய சுரங்க வெடிகளைப்போடும் கப்பல்களும், வேகம் பொருந்திய கப்பல்களும், கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல்களும், நாசகாரிகளும் நீர் மூழ்கிகளும், மோட்டார் மீன் வெடிப்படகுகளும், மோட்டார் லாஞ்சுகளும், கடல் விமானங் களும் பரவியிருக்கின்றன.

இதைத் தவிர பிரிடிஷ் விமானப்படையும் சாம்ராஜ்ய விமானப்படைகளும், நேசதேச விமானப்படைகளும் 53, 552 சுரங்க வெடிகளைப் பரவியிருக்கின்றன. இவ்விதமாக எல்லாப் படைகளும் சேர்ந்து மொத்தத்தில் 2,60,521 சுரங்க வெடிகளைப் பாவியிருக்கின்றன.

இதிலிருந்து அதிக சக்திவாய்ந்த யுத்தக் கப்பல்களும் நீர்மூழ்கிகளும் செல்லக்கூடாத இடங்களில் சுரங்கவெடிகளைப் போடுவதில் விமானப்படை மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தது.

பிரிடிஷ் கடற்படையின் சுரங்வெடி பாவும் நடவடிக்கை அபிவிருத்தியடைந்திருப்பதற்கு முதலாவது உலக யுத்தம் பூராவிலும் பிரிடிஷ் சாம்ராஜ்ய, நேசதேச, அமெரிக்க, ஜெர்மன் படைகள் எல்லாம் சேர்ந்து 236, 834 கடல் சுரங்கவெடிகளைத்தான் போட்டிருக்கின்றன என்பது சான்றாகும். இவ்விதம் ஒப்பிட்டுச் சொல்லுவதில் அமெரிக்க கப்பற்படை, விமானப்



படையின் நடவடிக்கை பிரகிருத யுத்த நடவடிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அவைகள் பெரும்பாலும் ஜப்பானை நோக்கி கவனம் செலுத்தி வந்திருக்கின்றன. பிரிடன் ஐரோப்பியப் போர் முனைகளில் கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இனிமேல் ஜப்பானியப் போரில் பிரிடன் அதிகப் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடும்.

பிரகிருத யுத்தத்தில் சுரங்கவெடி பாவுவது ஒரு பெரிய ஸ்ட்ராடஜிக், டாக்டிகல் நடவடிக்கையாகவும், முன்னேறித் தாக்கும் முறையாகவும் மாறிவிட்டது. ஸ்ட்ராடஜிக் நடவடிக்கை என்ற முறையில் எதிரியை சில கடல் மார்க்கங்களில் செல்லவொட்டாமலும் அல்லது அபாரமான அபாயத்துக்குட்படும்படி செய்வதும் தான் அதன் லக்ஷியம். அதற்கு உதவு ஒரு கப்பலும்தான் அவசியமாகுமென்பதினால் அது ஸ்ட்ராடஜிக் உபயோகமுள்ளது.

இதற்கும் போர் படைகளுக்கு உதவும் முறையில் டாக்டிகல் நடவடிக்கையை மேற்கொள்ளும் பீரங்கிக்கும் மீன் வெடிக்கும் வித்தியாசமுண்டு. இன்று சுரங்கவெடிகளைப் பாவுவது முன்னேறித் தாக்கும் முறையாகவும் இருக்கிறது. ஏனெனில் எதிரியின சர்ப்பாரக் களுக்கு அவசியமான உள்நாட்டைச் சுற்றியுள்ள சமுத்திரங்களிலும், கடற்கரைகளிலும் கடல் மார்க்கங்களிலும் எதிரி நடமாடாமல் முன்கூடியே தடை செய்யப்படுகிறான். இதே சமயத்தில் சுரங்கவெடி பாவுகிறவர்களின நாடுகளைச் சுற்றியுள்ள சமுத்திரங்களையும், துறை முகங்களையும், காப்பாற்றும் முறையில் சுரங்கவெடி தற்காப்புப் போருக்கும் உபயோக முள்ளது.

இதற்கு ஒத்தாசையான சுரங்கவெடிகளை அகற்றும் வேலையிலும் பிரிடிஷ் கடற்படையும், சாம்ராஜ்ய கடற்படைகளும், நேசதேச கப்பற்படைகளும் நேசதேச ஆதிக்கத்துக்குட்பட்ட ஜெர்மன் கடற்படையும் 20,429 சுரங்கவெடிகளை அகற்றியிருக்கின்றன. இந்தக் கணக்கில் அமெரிக்க கடற்படையின் நடவடிக்கை சேர்க்கப்படவில்லை.

20,429 வெடிகளில் 17,480 எதிரியைச் சேர்ந்தவைகள்; 2,919 பிரிடனைச் சேர்ந்தவை. சுரங்கவெடிகளை அகற்ற ஈடுபடுத்தப்பட்ட 1,533 கப்பல்களில 1,228 பிரிடிஷ் கடற் படையைச் சேர்ந்தவை. 236 சாம்ராஜ்ய கடற்படையைச் சேர்ந்தவை. மொத்தத்தில் 263 சுரங்கவாரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. சுரங்கவெடிகளைப்பாவும் நடவடிக்கையைப் போல சுரங்கவெடிகளை அகற்றும் நடவடிக்கையிலும் பிரிடிஷ், சாம்ராஜ்ய கடற்படைகள் இனிமேல் ஜப்பானியப் போரில் அதிகப் பங்கு எடுத்துக்கொள்ளும்.

ஜப்பானியப் போரில் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளும் கனடிய பசிபிக் கடற் படையின கப்பல் ரகங்களைப்பற்றி நமக்கு அதிகமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. கடற்படையில் 60 யுத்தக் கப்பல்களும் 1,35,000 ஆபீஸர்களும் வேலைக்காரர்களும் இருக்கி றார்கள். உகாண்டா என்ற சஞ்சாரியைத் தவிர பெல்பாஸடில் கட்டப்பட்டு ஏப்ரல் 16-ம் தேதியன்று மிதக்கவிடப்பட்ட ஒண்டாரியோ என்ற புதிய சஞ்சாரியும் அந்த கடற்படை யிலிருக்கின்றன.

ஒண்டாரியோ என்ற சஞ்சாரியை பிரிடிஷ் நிர்வாகம் கனடாவுக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்கிறது. அது 8,000 டன்கள் எடையுள்ளது. அதில மூன்று கோபுரங்களில் ஒவ்வொன்றிலும் மூன்று 6" வாயுள்ள பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் இரண்டு மேடைகளில் பத்து 4" விமான எதிர்ப்பு பீரங்கிகளும் இரண்டு மேடைகளில் 6 மீன் வெடிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது 31 நாட் வேகம் உள்ளது. ஸ்விட்ஸர் என்ற மற்றொரு புதிய ரகக் கப்பலும் மிதக்கவிடப்பட்டுவிட்டது.

போர்னியோ கடற்கரையைச்சுற்றி சமீப காலத்தில் நடைபெற்ற நடவடிக்கைகள் மூலம் ஆஸ்திரேலிய கடற்படை புருனே விரிகுடாவைப் பூராவாக ஆக்கிரமித்தது. அந்த விரிகுடா 20 மைல்கள் நீளமும் 15 மைல்கள் அகலமும் உள்ளது. ஒரு பெரிய கப்பற்படை அதில் தங்கியிருக்கக்கூடும். போர்னியோவிலும், லாபுவான், தாரகான் தீவுகளிலும் ஆஸ் திரேலியப் படைகளுக்குக் கிடைத்துவரும் ஏராளமான வெற்றிகளும் தரைப்படை நடவடிக்கைகளுக்கு கடற்படைகளை உபயோகிக்க ஜப்பான் சக்தியற்றிருக்கிறதென்று வெளிப் படுத்துகின்றன.

---

## ஜப்பானைத் தாக்க உணவும், யுத்த முயற்சியும்.

### லண்டனில் பன்னிரண்டு வல்லரசுகளின் மகாநாடு.

(யார்க் ஷையர் போஸ்ட்).

லண்டனில் முடிவுபெற்ற 12 வல்லரசு மகாநாடு ரகசியமாக நடைபெற்றது. இது வரையில் கர்னல் லேவலினின் ஆரம்ப அறிக்கைதான் வெளிவந்திருக்கிறது. இந்த அறிக்கை சமீபகாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட உணவுப்பங்கீடுக் குறைவை அவசியமென்று அறியாத

பிரிடனுக்கும், ஐரோப்பாவில் பசியால் வாடும் நாடுகளுக்கும் மிகவும் முக்கியத்வமுள்ளது. போர் முனையின் முக்கியத்வம் ஒருபுறமிருந்தாலும், ஜப்பானியப்போர் ஸப்ளைகளையும், முக்கியமாக உணவுப்பொருள்களையும் நேராகப் பாதித்திருக்கிறது. தூரக்கிழக்குக்கு போர் வீரர்களையும், தளவாடங்களையும், அனுப்ப ஏராளமான கப்பல்கள் தேவையாகயிருப்பதினால் ஐரோப்பாவுக்கு அனுப்பப்படும் சாமான்களுக்குக் கப்பல் வசதி குறைந்துவிட்டது. மேலும் ஜப்பான் ஆக்ரமித்திருக்கும் நாடுகளிலிருந்தும் உணவுப்பொருள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. லண்டன மகாநாட்டிற்கு வந்திருக்கும் ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் இந்த விஷயங்களையெல்லாம் உணவுப்பொருள் இலாகா மந்திரி வற்புறுத்திச் சொன்னார்.

சர்க்கரையை எடுத்துக்கொள்ளுவோம். 1915-ம் வருஷம் நெருக்கடியான நிலைமை ஏற்படும் என்று தோன்றுகிறது. ஐரோப்பாவிலும், வடக்கு ஆபிரிக்காவிலும் விடுதலை பெற்ற நாடுகளுக்கு, 7,50,000 டன்கள் எடையுள்ள உணவுப்பொருள்கள்தான் உத்தமபக்ஷமாக அனுப்பமுடியும். 1946-ம் வருஷத்தில் ஸப்ளைகள் உலகத்தின் தேவைக்குக் குறைவாக இருக்கக்கூடும். தூரக்கிழக்கிலுள்ள சர்க்கரை உற்பத்திசெய்யும் பிராந்தியங்கள் மறுபடியும் உற்பத்தியை ஆரம்பிக்கும் வரையில், ஐரோப்பாவிலேயே உத்தமபக்ஷமான அளவு உற்பத்திசெய்ய சகலவிதமான முயற்சியும் செய்யப்படவேண்டும். இந்தக் குறைவைப் பூர்த்திசெய்ய அகில பிரிடனும், அமெரிக்காவும், கனடாவும் வருஷாந்திரச் செலவு தலா 70 ராத்தலுக்குக் குறைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த வெட்டுக்கு முன் அமெரிக்கா 89 ராத்தல், கனடா 85 ராத்தல், பிரிடன் 71·5 ராத்தல்கொண்ட சர்க்கரையை உட்கொண்டுவந்தன.

தூரக்கிழக்கிலுள்ள உற்பத்தி செய்யும் நாடுகள் விடுதலைபெறும் வரையிலும், விவசாயம் புனருத்தாரணம் அடையும் வரையிலும், மற்ற உணவு பிரச்னைகளும் இருக்கே தீரும். உலகத்தின் மிகுந்த உணவுப்பொருளும், கிழக்கு நாடுகளின் ஜீவாதாரமான அரிசி பெரும்பாலும் தூரக்கிழக்கில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ள நேசதேசத்தார்கள் அரிசிச் செலவைக் குறைத்துக்கொண்டாலும், அரிசியை உட்கொள்ளும் ஜனங்களின் அதமபக்ஷமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் அதிக சிரமம் ஏற்படும்.

---

## பசிபிக்கில் ஆஸ்திரேலியர்களின் அலுவல்.

### போர்னியோப் போரின் விஸ்தரிப்பு.

லெப்டினென்ட் ஜெனரல் H. G. மார்டின்.

போர்னியோ நடவடிக்கையை சாரவாக்குக்கு விஸ்தரித்ததிலிருந்து தென் மேற்கு பசிபிக்கில் ஆஸ்திரேலியர்கள் மகத்தான அலுவல்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களென்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆஸ்திரேலியர்கள் இப்பொழுது ஸாலமன்ஸ், நியூபிரிடன், நியூகினியா, போர்னியோ என்ற நான்கு பிராந்தியங்களில் போரை நடத்திவருகிறார்கள்.

போர்னியோ புதிய யுத்த அரங்கம். மற்ற மூன்றும் மேலானிஸியாவில் மாக்ஆர்தர் துவக்கிய போரின் தொடர்ச்சிகள் பிலிப்பைன்ஸுக்கு வெகுசீக்கிரத்தில் திரும்பி வரவேண்டு மென்ற திட்டப்படி மாக்ஆர்தர் இந்த நடவடிக்கைகளை அதமபக்ஷமான அவசியத்துக்காக மட்டும் மேற்கொண்டு ஆஸ்திரேலியாவிலிருந்தும் நியூகாலிடோனியாவிலிருந்தும் நியூகினியாவின் வடக்குக் கடற்கரை வழியாக மொலுக்காஸ் தீவுக்கூட்டத்தின் வடக்குக் கோடியிலுள்ள மோரோடாயுக்கும் அதன்பின் பிலிப்பைன்ஸுக்கும் போக்குவரத்து மார்க்கத்தை பத்திரப்படுத்திக் கொண்டான்.

ஆகையால் சென்ற இலையுதிர் காலத்தில் மேலானிஸியாவிலுள்ள அமெரிக்கப் படைகள் ஆஸ்திரேலியர்களிடம் பொறுப்பை ஒப்பித்தபொழுது, எதிரிப்படைகளைத் தடைப்பதைவிட அவர்களுக்கு அதிகமான அலுவல்கள் இருந்தன. பிலிப்பைன்ஸிலும் போர்னியோவிலும் நேசதேச தளங்களை ஏற்படுத்தியதிலிருந்து மேலானீசியன் பிராந்தியம் பெருமபாலும் துணிக்கப்பட்டுவிட்டதென்பது வாஸ்தவம. ஆயினும் ஜப்பானிய கடற்படை சம்பந்தப்பட்டமட்டில் மேலானிஸியா பூராவாகத் துணிக்கப்படவில்லை.

போர்னியோ எண்ணெய் பிரதேசங்கள் நேசதேசத்தார்களுக்கு முக்கியமான லாபங்கள் என்றாலும் ஜப்பானியர்களுக்கு அதிக நஷ்டம் விளைவிக்கக்கூடியதில்லை. ஏனெனில் இந்த பிரதேசங்கள் வெகு நாக்திலிருக்கின்றனவென்று நினைத்து ஜப்பான் அவைகளை உதறித் தள்ளிவிட்டது. தாரகானிலும் சாரவாக்கிலும் உள்ள கிணறுகளின் எண்ணெய் மிகவும் சுத்தமானது. மிரினஸ்ணெய் பிரதேசமும் மறுபடியும் உபயோகத்துக்குக் கொண்டுவரப்



படுகிறது. ஜப்பானியர்கள் நிக்கிரையாக்கியதும் இப்பால் ஆஸ்திரேலியர் வசமாகியிருப்பதுமான செரியா எண்ணெய் பிரதேசம் 75,000 டன்கள் எண்ணெயை உற்பத்தி செய்யக்கூடியது.

லூடாங்கில் ஆஸ்திரேலியர்கள் ஜப்பானியர்களின் உபயோகமுள்ள முஸ்தீப்புகளை ஏராளமாகக் கைப்பற்றினார்கள். ஆனால் வடமேற்கிலுள்ள எண்ணெய் பிரதேசங்கள் நம்பியிருக்கும் லூடாங் எண்ணெய் சுத்திகரிக்கும் சாலை அழிக்கப்பட்டுவிட்டதா இல்லையா என்பது தெரியவரவில்லை.

போர்னியோ எண்ணெயைத் தவிர ஆஸ்திரேலியாவுக்கு விமான தளங்களும் அவசியம். அவைகளிருந்தால்தான் தெற்கு சைனா, ஸெலிபிஸ் கடல்களில் நேசதேசத்தார்கள் கண்காணிப்புச் செய்துவரலாம். புரோனே விரிகுடாவிலும் ஒரு துறைமுகத்தின் பிரயோஜனமும் நமக்கு சித்திக்கும்.

ஆஸ்திரேலியர்கள் படைகளை இறக்கிய பொழுது யாதொரு எதிர்ப்பும் காணப்படவில்லை யென்பது ஆச்சரியப்படத்தக்கதில்லை. போர்னியோ 800 மைல்கள் நீளமும் 600 மைல்கள் அகலமுமுள்ளது. அதன் கடற்கரை 3,000 மைல்கள் நீளமுள்ளது. கடல், ஆகாய ஆதிக்கத்தை ஜப்பான் இழந்து விட்டதினால் அது தற்காப்புப் போரை நடத்தும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. மேலும் இந்த விசாலமான பிரதேசத்தில் 30,000 படைகள் தரையில் மிகவும் சுலபமாகப் புலப்படக்கூடும்.

ஆஸ்திரேலியர்களிடம் முன்னேறித் தாக்கும் சக்தி அபாரமாகயிருக்கிறபடியால் அவர்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் படைகளை இறக்குவார்கள். இந்த சந்தர்ப்பத்தில் படைகளை உள்நாட்டுக்குக் நடத்திச்சென்று பிழைத்திருப்பதைத்தவிர ஜப்பானுக்கு வேறு வழியில்லை. எண்ணெய் பிரதேசங்களை ஆஸ்திரேலியர்கள் பிடித்திருப்பதினால் அவர்களை ஜப்பான் திரும்பித்தாக்கி அழிக்கக்கூடும். ஜாக்கிரதையான விமான நடவடிக்கையினால் ஜப்பான் ஒரு சிறிது ஆதிக்கத்தையும் அங்கு பெறக்கூடும்.

இதுதான் ஜப்பானியரின் கொள்கை என்று தோன்றுகிறது. ஆகையால் போர்னியோவிலுள்ள படைகளை தீர்த்துக்கட்டி எழுதிவிடுவதென்பது தவறாகும். கபடமாக முன்னேற ஜப்பானியப் படைகள் நிலைபெற்றிருக்கும் வரையில் எண்ணெய் பிரதேசங்களின் பத்திரத்தைப்பற்றி ஆஸ்திரேலியர்கள் கவலைப்பட வேண்டியதுதான்.

ஆகையால் ஆஸ்திரேலியர்கள் பின் சொல்லப்படும் முறைகளில் ஏதாவது ஒன்றை கடைப்பிடிக்கவேண்டும். முன்னேறி உள்நாட்டிலுள்ள ஜப்பானியப் படைகளை அழிக்க வேண்டும். இது ஒரு நீண்டகால திட்டம். அல்லது பலஹீனமான ஸ்தானங்களைத் தற்காப்பு செய்ய படைகளை காலவரம்பன்னியில் வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு முக்கியமான போர் முனையிலும் ஜப்பானியர்கள் இந்த நிலைமையைத்தான் உண்டுபண்ணியிருக்கிறார்கள். இது விஷயத்தில் ஆஸ்திரேலியர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

ஆகையால் மேலானீசியாவிலும், போர்னியோவிலும் ஆஸ்திரேலியர்களுக்கு பூர்ணமான அலுவல்கள் இருக்கின்றன. காட்டுப் போரில் ரோந்து செய்து முன்னேறுவதில் ஆஸ்திரேலியர்கள் நிபுணர்கள் ஏழு மாதங்களுக்குமுன் மேலானீசியா நடவடிக்கையை அமெரிக்கர்களிடமிருந்து எடுத்துக்கொண்டபின் அவர்கள் 10,000 ஜப்பானியர்களைக் கொன்றிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் ராணுவத்து லாயக்குள்ள வயது வாய்ந்தவர்களில் பத்தில் ஏழு பேர்கள் போர்ப் படைகளில் சேர்ந்து கொண்டாலும், அப்படைகள் பெரியதாக இருக்க முடியாது. டிமார், மொலுக்காஸ், ஸெலிபீஸ், நியூ அயர்லாந்து, முதலிய இடங்களில் போரில் ஈடுபடாத படைகளைச் சேர்த்துக்கொண்டால் ஜப்பானிடம் 1,00,000 ஸோல்ஜர்கள் இருந்து வருகிறார்கள், ஆஸ்திரேலியாவின் வாசற்படியிலுள்ள அவர்களை அழித்துவிட வேண்டும். ஆகையால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களை எவ்விதம் சுத்திசெய்வது என்பதுதான் தற்போதிய பிரச்னை.

இதைச் செய்து முடிப்பதற்கு இரண்டுவழிகள்உள. ஜப்பானையே பலமாகத் தாக்க ஜப்பானிய சக்ரவர்த்தியை யுத்த நிறுத்தம் செய்யும்படி கட்டாயப்படுத்துவது; அப்பொழுது தென்மேற்கு பசிபிக்கிலும் மற்ற இடங்களிலும் உள்ள ஜப்பானியர்கள் மூட்டைகட்டி விடுவார்கள். அல்லது ஆஸ்திரேலியர்களுக்கு உதவிப்படைகளை அனுப்பி படை பலத்தைப் பெருக்கி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படி செய்வது.

ஜப்பானைத்தாக்குவது அமெரிக்க பசிபிக் கமாண்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நேசதேசங்கள் அனுப்பக்கூடிய படைகளும் ஒத்தாசை செய்யும். தென்மேற்கு பசிபிக்கில் ஆஸ்திரேலிய முயற்சியை பலப்படுத்துவதென்பது தென்கிழக்கு ஆசியா கமாண்டி

னுடையவும் டச்சுக்காரர்களின் அலுவலாகும். சுமத்ராவையும் மலேயாவையும் பிடித்து மலாக்கா ஜலசந்தியைத் திறந்துவிடும்பொழுது அவர்கள் உதவியளிக்கக்கூடும். இந்த சந்தர்ப்பத்தில் சுமாத்ராவை கிழக்கு இந்தீஸ் கடற்படை தாக்கிய சமீப நடவடிக்கை மிகவும் ருசிகரமானது.

மாக் ஆர்தரின் பசிபிக் கமாண்டின் வட்டாரத்திற்குள் ஆஸ்திரேலிய நடவடிக்கை பூராவும் சேர்ந்தது என்பது வாஸ்தவம்தான். ஜப்பானியப் படையெடுப்பில் மாக் ஆர்தர் அதிக கவனம் செலுத்தும்பொழுதும் தென்கிழக்கு ஆசியா கமாண்டின் நடவடிக்கை கிழக்குப் பக்கம் முன்னேறும்பொழுதும் கமாண்டுகளின் எல்லைச்சரகத்தைத் திருத்தியமைத்துக் கொள்ளும் அவசியம் அதிகரிக்கும்.

அமெரிக்க பசிபிக் கமாண்டில் மாக் ஆர்தரும் நிமிட்ஸும் சமமான அந்தஸ்துள்ளவர்கள் ஒவ்வொருவரும் அவருடைய வட்டாரத்தில் உயர்தர அதிகாரம் வகிப்பார்கள். ஆகிலும் இன்னும் திட்டங்கள் உருவாகவில்லை. மாக் ஆர்தரின் தலைமை காரியாலயம் இன்னும் பிலிப்பைன்ஸிலிருக்கிறது. நிமிடஸின் தலைமை காரியாலயம் குவாமிலிருந்து வருகிறது. ஒன்றுபட்ட தலைமை காரியாலயத்தையும சிப்பந்திகளையும் ஏற்பாடு செய்வதாக ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இப்பொழுது ஆகினவா அநேகமாக சுத்திசெய்யப்பட்டு விட்டதால் ஒன்றுபட்ட தலைமை காரியாலயம் ஆகினவாவில் வைக்கப்படலாமென்று சொல்லப்படுகிறது. உயர்தர கமாண்டர் இல்லாமையால் வாஷிங்டனிலுள்ள ஒன்றுபட்ட ராணுவத் தலைவர்கள் சேனைக்கும் கடற்படைக்குமுள்ள பிரச்னைகளை அவருக்கு பதிலாகத் தீர்த்துக்கட்டுவார்கள். மேலும் அவர்களில் ஒருவரான ஜெனரல் ஆர்னால்ட், மாரியனஸிலிருந்தும் ஆகினவாவிலிருந்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும் அமெரிக்க 8-வது, 20-வது படைக்குத் தலைவராகயிருப்பார்.

இந்த அமைப்புக்கும் நேசநாடுகளின் பூர்ணமான அங்கீகாரத்தின்பேரில் அமைக்கப்பட்டு வடக்கு ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நல்ல முறையில் வேலைசெய்த ஒன்றுபட்ட கமாண்டுக்கும் வித்தியாசமுண்டு. இந்த மாறுபாட்டுக்கு ஐரோப்பிய, பசிபிக் போர்முனைகளுக்குள் உள்ள வித்தியாசங்களும் இரண்டிலும் ஈடுபட்ட தலைவர்களும்தான் காரணங்களாகும்.

பசிபிக்கில் இப்பொழுது ஆகினவாப் போர் முடிந்துவிட்டது. விமானப்படை நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் அமெரிக்க கடற்படையைத் தாக்க இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் அமெரிக்காவுக்கு உயிர்ச்சேதமும் கப்பற்சேதமும் மிகுதியாக இருக்கிறது. இந்தப் போர் முனை தொடர்ந்து நடைபெறும்.

போர்முனையில் மற்றொரு அம்சமும் காணப்படுகிறது. சரித்திரத்திலேயே முதல் முதலாக ஜப்பானிய ஸோல்ஜர்கள் தாராளமாகச் சரண்புகுந்துவிட்டார்கள். ஆகினவாவில் கைதுசெய்யப்பட்ட 7,000 பேர்களில் காயம்படாமல் சரண்புகுந்தவர்கள் எவ்வளவு பேர்கள் என்று தெளிவாகப் புலப்படவில்லை. 1 லக்ஷம் பேர்கள் கொல்லப்பட்டபின்தான் 7,000 பேர்கள் சரணாகதி செய்தார்கள்.

ஆகிலும சரணாகதி என்ற முறை இப்பொழுது ஜப்பானியர்களிடம் காணப்படுகிறது. இந்த வேனிர்காலத்தில் பலமான விமான நடவடிக்கை மூலம் இந்தப் பழக்கம் அதிகரிக்கப் படும். வெடிகுண்டு வீச்சினால்மட்டும் நிபந்தனையற்ற சரணாகதியை ஏற்படுத்திவிடலா மென்று நான் நம்பவில்லை. ஜப்பானில் படையெடுப்பு அவசியம் நடைபெறவேண்டும். கடுமையான ஐதிகம் முறிபட்டுவிட்டது. ஒரு சுலபமான வழி உதயமாகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக இது விருத்தியடைந்துவிடும். படையெடுப்பு ஏற்பட்டவுடன் நாம் எதிர் பார்ப்பதற்கு முன்னதாகவே ஜப்பானின் சரணாகதி ஏற்பட்டுவிடும்.

---

# பர்மாவில் வெற்றி.

## 14-வது சேனைக்குப் பாராட்டு.

(டைம்ஸ் பத்திரிகை).

உலகத்திலேயே மிகவும் கடினமான போர்முனைகளில் ஒன்றான பர்மாவில், மிகவும் வெற்றிகரமாகப் போரை நடத்தியதைப்பற்றிச் சொல்லுவதுடன், வெற்றி பெறுவதற்கு அவசியமாக இருந்த தெளிவான, சுருக்கமான அறிவூட்டக்கூடிய முறைகளைப்பற்றியும் சொல்லக்கூடுமென்று ஸர் வில்லியம்ஸ்லிம் செவ்வாயன்று ருஜுச் செய்துவிட்டார்.

அவர் சொன்னமாதிரி பர்மாவின் சதுப்பு நிலங்களிலும், காடுகளிலும் திடீரென்று, கோரமான போர்கள் நடைபெற்றன என்று வரும் விருத்தாந்தங்களிலிருந்து, திடமில்லாத



குழப்பமான, கண்மூடித்தனமான, நிகுதியற்ற போர்கள் நடைபெற்றன என்ற தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. ஆகிலும் உண்மைக்கும், இந்த அபிப்பிராயத்துக்கும் வெகு தூரம். 14-வது சேனை கஷ்டமான நிலைமையில் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொண்டிருக்கிறது. உயர்ந்த ரேகையிலுள்ள வெட்டுக் கறையாள்கள் என்று சொல்லிவரும் ஜப்பானியர்களின அபாரமான ராணுவ குணாதிசயங்களைப் பாராட்டிவந்த 14-வது சேனைத் தலைவர்களும், எதிரியின பலஹீனத்தையும் திட்டங்களை மாற்றிக்கொள்ள அவன் சக்தியற்றவனென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மேலும் பர்மாவிலும், கிழக்கு இந்தியாவிலும் உள்ள நேசதேசத்தார்கள் 1943-ம் வருஷம் முதல் விமானபலம் ஆதிக்கம் பெற்றுவந்திருக்கிறார்கள். இந்த ஆதிக்கத்தை பயன் படுத்தி 14-வது சேனை கமாண்ட் அரகானிலும், மணிப்பூரிலும் ஜப்பானியத் தாக்குதல்களை சமாளித்துவந்தது. விமானமூலமாக உதவிப்படைகளையும், ஸப்ளைகளையும் தாராளமாகப் பெற்றுவந்த ஒரு சேனையைச் சுற்றிவளைத்துக்கொள்ளுவது உபயோகமற்றதென்றும் வெளிப் படுத்திவிட்டன. பர்மாவில் ஜப்பானிய ராணுவ அதிகாரிகளுக்கு வெற்றிகரமான முன்னேற்றம் என்று தோன்றியதை நன்றாகத் தடைசெய்து, பிறகு நாசத்துடன் பின் வாங்கும்படிசெய்த விமானப்படை ஆதிக்கத்தின் மேன்மைக்கு ராணுவ சரித்திரத்திலேயே மணிப்பூர் போர் நடவடிக்கை சிறந்த உதாரணமாகும்.

சின்மலைகளிலுள்ள காடுகளிலும், மலைச்சரிவுகளிலும் போரை நடத்தும்படி எதிரியைத் தூண்டும் யுத்த தந்திரமும், நெருங்கிவந்த பருவகால மழையும் உபயோகமுள்ளதாக இருந்தன. ஜப்பானியர்கள் பின்வாங்கும்பொழுது மணிப்பூரிலிருந்து சின்ட்வின் நதிவரை யிலுள்ள ஒவ்வொரு பாதையிலும், ரஸ்தாவிலும் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் துறந்து விட்டார்கள். இங்கும் 14-வது சேனை பர்மாவைப் படையெடுத்தபொழுதும் நேசதேச சேனாநாயகத்தின் முன் ஜப்பானியத் தலைவர்கள் தோல்விபெற்றார்கள். பர்மாவிலும் விமான ஆதிக்கம்தான் போரின் வெற்றிகரமான முடிவுக்கு சாதகமளித்துவந்தது. மாண்டலேக்கு வடக்கிலும், மேற்கிலுள்ள நமது முன்னேறும் வாசல்களை அழித்துவிடுவது என்று நினைத்த எதிரியின் எண்ணம பூர்த்தியடையவில்லை. 4-வது சேனைப்பகுதியைச் சேர்ந்த கவசம்பூண்ட படைகள் வேகமாக எதிர்பாராத முறையில் ரைன் நதியைப்போல் மூன்று பங்கு அதிக அகலமுள்ள இராவதி நதியை பாகானுக்கருகில் தாண்டியதும், ரெங்கூனுக்கு வழியைத் திறந்துவிட கடும்போர் நடைபெற்ற மெயிக்டிலாவுக்கு டாங்கிகள் முன்னேறியதும் தான் இந்த இகழ்ச்சிக்குக் காரணங்கள்.

கவசம்பூண்ட படைகள் பலமாகத் தாக்கி வெற்றிபெற்றன. ஆகிலும் விமானப்படைத் தாழ்வினால் கண்மூடித்தனமாகப் போர்புரியும்படி நிர்ப்பந்திக்கப்படாத எதிரி நமது சூழ்ச்சியை உசிதகாலத்தில் கண்டுபிடித்து போக்குவரத்துக்களை பலப்படுத்தியிருக்கலாம். விமான ஆதிக்கம் சந்தேகமாகயிருந்திருந்தால், எதிரியின் விலாப்பக்கங்களையும், பின்புறத்தையும் தாக்கவும், அடிபட்ட எதிரியை ஷான் மலைகளுக்குத் துரத்தியடிக்கவும், சென்ற கவசம்பூண்ட படைகளுக்கு வெடி மருந்தையும், எண்ணெயையும் அனுப்ப வசதி ஏற்பட்டிருக்காது. அதேபோல் ரெங்கூனை நோக்கி நடைபெற்ற முன்னேற்றமும், பருவகால மழையினால் தடைபடும்படியான நிலைமையிலிருந்தது. மறுபடியும் விமானப்படை அரைச் சாப்பாட்டுடன் முன்னேறிவந்த படைகளுக்கு உணவுப்பொருள்களையும், கடல் மார்க்கமாக துறைமுகத்தைப் பிடிக்கவந்த அரக்கான் படைகள், ஏறிவந்த யுத்தக் கப்பல்களுக்கும் படைகளை இறக்கும் படகுகளுக்கும், துணைக்காவலையும் செய்துவந்தன. பர்மாவை படை எடுத்ததற்கும், திருப்பிப் பிடித்ததற்கும் விமானப்படைதான் சாதகமாகயிருந்ததென்றாலும் இந்த அபூர்வமான நடவடிக்கையின பிற்பகுதியில் போர் வேகமாகவும், குறிப்பாகவும் நடை பெற்றதின் புகழ் பூராவாகத் தரைப்படைகளுக்கும், முக்கியமாக ஜெனரல் ஸ்லிமுடைய கமாண்டுக்குட்பட்ட பிரிடிஷ், இந்திய எஞ்ஜினீயரிங் படைகளுக்கும் உரித்தாகும். ரைன் நதியைத்தாண்டி நேசதேசப் படைகளைக் கொண்டுபோன பபெலோக்களும் டக்குகளும், மற்ற படகுகளும் எஞ்ஜினீயர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் காடுகளிலிருந்து கிடைத்த காடுமுரடான, மரங்களையும், சகலவிதமான என்ஜின்களின் மோட்டார்களையும் உபயோகப்படுத்தவேண்டியதாக இருந்தது. ஆகிலும் அவர்கள் தாத்காலிகமாக அமைக் கப்பட்ட படகுகள்மூலம் கவசங்களும், முஸ்தீப்புகளும்கொண்ட ஆயிரக்கணக்கான படை களை நதிகளைத் தாண்டிக்கொண்டுபோயின. இந்தப் படகுகளை நோவாவின் படகுக்கு சமானமென்று ஜெனரல் ஸ்லிம் சொல்லிவந்தார்.

**14-வது சேனையைவிட எந்த பிரிடிஷ் சேனையும், அல்லது எட்டாவது சேனையும் அதிக கஷ்டங்களையும் அனுபவித்ததில்லை; அல்லது சிறந்த வெற்றிகளையும் பெற்றிருக்கவில்லை.**

## "வெற்றிப் பாடல்".

*by S. Thiruvenkataswami, Assistant, State Secondary School, Arimalam.*

("அச்சமில்லை அச்சமில்லை" என்ற மெட்டு).

1. வெற்றி வெற்றி வெற்றியென்று
   வாழ்த்துரைகள் கூறுவோம்.
   வெற்றிவைபவம் நடத்தி
   வீறுகொண்டு பாடுவோம்—(வெற்றி).

2. நாஸிகள்சரணடைந்தார்
   நாமடைந்தோம் வெற்றியே.
   நாசவேலை செய்த ஹிட்லர்
   நீக்கினான் தன் ஆவியே—(வெற்றி).

3. ஜாப் படைகள் சிதறியோடி
   ஜெர்மன் மக்கள் போலவே
   செயலிழந்து அடிபணியும்
   சீரிய நாள் காண்பமே—(வெற்றி).

4. அகிலமெல்லாம் அல்லல்தீர்ந்து
   அமைதியாக வாழவே
   அன்புடனே தெய்வபக்தி
   ராஜபக்தி செய்குவோம்—(வெற்றி).

---

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

#### பிரஸங்கம் 255 (2-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 9- 7-45 | புத்தாம்பூர் | ... மாலை | 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 |
| 10- 7-45 | கார்த்தாமலை | ... ,, | 7.00 |
| ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| 11- 7-45 | வடவாளம் | ... ,, | 7.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 |
| 12- 7-45 | கல்லூர் | ... மாலை | 7.00 |
| ,, | மாத்தூர் | ... ,, | 7.30 |
| 13- 7-45 | கச்சாந்தபட்டி | ... ,, | 7.00 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 |
| 14- 7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 15- 7-45 | ஆலங்குடி | ... ,, | 7.00 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 |

#### பிரஸங்கம் 256 (3-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 16- 7-45 | திருமெய்யம் | ... மாலை | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 17- 7-45 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| 18- 7-45 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணனக்குடி | ... ,, | 7.30 |
| 19- 7-45 | அன்னவாசல் | ... மாலை | 7.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 |
| 20- 7-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |
| 21- 7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 22- 7-45 | கீரனூர் | ... ,, | 7.00 |
| ,, | காஞ்சூர் | ... ,, | 7.30 |

#### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 10—7—45 | கோனாபட்டு. |
| 11—7—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 12—7—45 | கீழாநிலை. |
| 13—7—45 | புதுக்கோட்டை. |
| 14—7—45 | பொன்னமராவதி. |
| 15—7—45 | ஏம்பல். |
| 17—7—45 | பேராம்பூர். |
| 18—7—45 | காம்பக்குடி. |
| 19—7—45 | ஆலங்குடி. |
| 20—7—45 | புதுக்கோட்டை. |
| 21—7—45 | வெட்டன்விடுதி. |
| 22—7—45 | விராச்சிலை. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,000—11-7-45.

14442


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜூலை மீ 16௳ திங்கட்கிழமை [நெ: 256


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLVI.

## சைனா போரை நடத்துகிறது.

### எட்டு வருஷ எதிர்ப்பு.

இந்த வாரத்தில் சைனா ஜப்பானுடன் நடத்திவரும் போரில் ஒன்பதாவது வருஷத்தை ஆரம்பித்துவிட்டது. எட்டு வருஷங்களுக்குமுன் 1937-ம் வருஷம் ஜூலை மாதம் 7-ம் தேதி அன்று வடக்கு சைனாவிலுள்ள ஜப்பானியப் படைகள் மார்கோ போலோ பால சம்பவத்தை நடத்தின. அதன்பின் பலமான அக்கிரமப் போரை நடத்தின. கண்டத்திலுள்ள விஸ்தாரம் செய்துகொள்ளும் கக்ஷியைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகளின் அமுலுக்குட்பட்ட ஜப்பானிய நிர்வாகம் ஷாங்கை துறைமுகத்தையும் தாக்கி, அங்கிருந்து யாங்ட்ஸி, ஹுவாங்ஹோ நதிகளின் வடக்கிலும் தெற்கிலும் போவதா, விஸ்தாரம் செய்தார்கள். வடக்கு சைனா சம்பவம் ஒரு வியாஜமென்றும் சைனாவில் அநேக பாகங்களைப் பிடித்து சாம்ராஜ்யத்தை அபிவிருத்தி செய்வது என்று ஜப்பான் உறுதிகொண்டிருந்ததென்றும் தெளிவுபட்டது.

அகாரணமான அக்கிரமப் போருக்குத் தயாராக இல்லாததும், ஜப்பானின் பலமான படைகளை சமாளித்து நிற்கக் குறைவான முஸ்தீப்புகளும் உள்ள சைனா நிர்வாகம் பயந்து அடிபணியவில்லை. மூர்க்கத்தனமாகவும் தீரத்துடனும் சமாளித்துப் போர் புரிந்து வந்தது.

போர் கடுமையாகவும் நீடித்தும் நடந்தது. சில சமயங்களில் சைனாவுக்கு வெற்றிகரமாகவும் இருந்தது. ஷாங்கை, ஹாங்கௌ, டேயர்ச்வாங், முதலிய இடங்களில் ஜப்பானியர்கள் அநேகர்களைக் காவு கொடுக்கும்படி நேர்ந்தது. ஜப்பானின் யுத்த தளவாடங்களும் ஏராளமாக அழிக்கப்பட்டன. சீனர்கள் எவ்வளவு பிரயத்னம் செய்த போதிலும் எவ்வளவு தியாகங்களைச் செய்து கஷ்டங்களை அனுபவித்த போதிலும் அடுத்த சில வருஷங்களுக்குள் ஜப்பானியர்கள் இச்சாங்வரையிலுள்ள யாங்ட்ஸி நதிப் பள்ளத்தாக்கு பூராவையும் அதற்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள மாகாணங்களையும் பிடித்தார்கள். மேலும் கடற்கரையில் உள்ள கேந்திர ஸ்தானங்களிலும் பலமாக ஊன்றிக்கொண்டார்கள்.

சீன நிர்வாகம் முதலில் நான்கிங்கிலிருந்து ஹாங்கௌவுக்கும் அதன் பின் யாங்ட்ஸி கரையிலுள்ள சுங்கிங்குக்கும் கொண்டு போகப்பட்டது. இப்பொழுதும் முக்கியமான துறை

முனைகளில் பெரும்பான்மையும், கடற்கரையில் பெரும் பாகமும், முக்கியமான நதிகளும், போக்குவரத்து மார்க்கங்களும் ஜப்பானியர் வசமிருந்து வருகின்றன.

ஆகினும் இந்தப் போர் பிராந்தியம் சம்பந்தப்பட்ட மட்டில் சைனாவுக்கு நெருக்கடியான காலத்தை அது சமாளித்துவிட்டது. ராணுவ முறையிலும், ராஜிய முறையிலும், ஜப்பானிய வெற்றிகளும், சீன யுத்தச் சோர்வும் பலஹீனமும் சைனாவுக்கு சென்ற வருஷத்தில் மனத் தாழ்வை உண்டுபண்ணின. 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கெய்ரோ மகா நாட்டிற்கும் 1944-ம் வருஷம் டிசம்பர் மாசத்திற்கும் இடையில் சீன ஜப்பானியப் போரில் மிகவும் கேவலமான ஸ்திதி சீனாவுக்கு ஏற்பட்டது.

அந்தக் காலம் ஆண்டுமாறிவிட்டது. சைனாவின் நிலைமையின் அபிவிருத்திக்கு ஜெர்மனியின் தோல்வியும் நிபந்தனையற்ற சரணாகதியும் ஒரு காரணமாகும். அதைவிட முக்கியமானது தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் ஜப்பானுக்குக் கிடைத்த அநேக தோல்விகள் தான். ஜெர்மனி முறியடிக்கப்பட்டதினால் ஜப்பானைத் தாக்க ஏராளமான நேசதேசப் படைகளை அனுப்பவும் சைனாவுக்கு அதிக உதவி அனுப்பவும் சாத்தியமாகிறது.

சைனாவிலுள்ள அமெரிக்க விமான பலம் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நேச தேச நாடுகளில் பயிற்சி பெற்ற சீன விமானிகள் இப்பொழுது சைனாவில் நடவடிக்கையைத் துவக்கியிருக்கிறார்கள். சீனர்களுக்கு எவ்வளவு நம்பிக்கையிருக்கிறதென்பதை மார்ஷல் சியாங் கேஷேக் சுங்கிங்கில் பத்திரிகை நிருபர்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம் "அமெரிக்கர்கள் பயில்வித்து, முஸ்தீப்புகள் பெற்ற சேனைகள் கூடிய சீக்கிரத்தில் போரில் ஈடுபடும்."

தற்காப்புப் போரிலிருந்து சென்ற சில வாரங்களில் முன்னேறித் தாக்கும் முறையை சீனப் படைகள் கையாண்டு வருவதிலிருந்து சைனாவில் நேசதேசத் தாக்குதல் வலுவடைந்து வருகிறதென்று தெரியவரும். ஆசியாவில் யாங்க்டீஸ் நதிக்குத் தெற்கிலும், கடற்கரை ஓரமாகவும், போக்குவரத்து மார்க்கங்களுக்கு சமீபத்திலும், உள்ள பலம் பொருந்திய ஜப்பானிப் படைகள் யுத்த நிலைமையை உத்தேசித்து தற்காப்பு முறையைக் கையாளும்படி கட்டாயப்படுத்தப்பட்டுவிட்டன.

பார்மோசாவுக்கு எதிர்த்தாற்போலும் ஆகினாவாவுக்கு மேற்கிலுமுள்ள கடற்கரை மாகாணங்களான பூகியானிலும் செகியாங்கிலும், ஜப்பானியர்கள் பின்வாங்கிச் சென்றபின் கடற்கரையின் நீண்ட பாகத்தை சீனப் படைகள் திருப்பி ஆக்கிரமித்துவிட்டன. கியாங்க்ஸி, குவாங்க்ஸி, ஹூனான் மாகாணங்களில் உதவி பலம் பெற்ற சீனப் படைகள் காண்டன் ஹாங்கௌ, ஹேங்யாங்க்-ஹூகௌ இருப்புப் பாதைகளைக் காத்துக்கொண்டிருக்கும் ஜப்பானியப் படைகளைத் தாக்கித் துன்புறுத்தி வருகின்றன.

ஆகாயத்திலும், புதிதாகப் பயிற்சி பெற்ற சீன விமானப்படைப் பகுதிகளும் சைனாவில் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த விமானங்களும், ஜப்பானிய படைக்குவியல்களையும், சப்ளை மார்க்கங்களையும் பலமாகத் தாக்கி வருகின்றன. ஆகினும் மகத்தான நடவடிக்கைகளுக்கு இவைகள் அடிகோலிகள்.

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 6—7—45 (வெள்ளிக்கிழமை). | அமெரிக்காவும், பிரிடனும் புதிய 'வார்ஸா' நிர்வாகத்தை அங்கீகரித்தனர். |
| 8—7—45 (ஞாயிற்றுக்கிழமை). | நேசதேசப் படைகள் போர்னியோவில் முன்னேறுகின்றன. |
| 10—7—45 (செவ்வாய்க்கிழமை). | நேசதேச விமானம்தாங்கிகளில் சென்ற விமானங்கள் டோக்கியோவை பலமாகத் தாக்கின. |
| 12—7—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் படைகள் சுமாத்ராவுக்கு அருகில் உள்ள சபாங்கைத் தாக்கின. |



### (B)-செய்திச் சுருக்கம்.

**போர்னியோ.**—ஆஸ்திரேலியர்கள் வடபோர்னியோவில் டிரூபோராவிலும் ஆண்டக்கு அருகிலும் இறங்கிவிட்டார்கள். அவர்கள் மேங்கார் விமான தளத்தைப் பிடித்தார்கள். கிமானிசுக்குள் புகுந்துவிட்டார்கள். பாலிக்பாபான் பிரதேசம் பூராவும் ஆக்கிரமிக்கப்பட்டது என்று மாக் ஆர்தர் சொல்லிவிட்டார்.

**போகன்வில்லி.**—தெற்கு போகன்வில்லியில் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**நியூகினியா.**—வேவாக் பிராந்தியத்தில் புதிய தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன. ஸ்மோக்ரோல் பிடிபட்டது.

**சுமாத்ரா.**—பிரிடிஷ் விமானம் தாங்கிகளில் சென்ற விமானங்கள் சுமாத்ராவின் வடக்குக்கோடிக்கு சமீபத்தில் உள்ள சபாங்கைத் தாக்கின.

**கொரியா.**—அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் கொரியாவை முதல் முதலாகத் தாக்கின.

**ஜப்பான்.**—விமானங்கள் பின்கண்ட இடங்களைத் தாக்கின. ஷிமாட்சு, கோபு, அகாஷி, ஸிகா, ஷிமாஷு, குபு, சாகே, வாகாயாமா, செண்டை, ஹான்ஷியிலுள்ள யோகாசி, டோக்கியோ, கியூஷு.

**ஒகாட்ஸ்க்கடல்.**—அமெரிக்க கடற்படை ஜப்பானுக்கு வடக்கிலுள்ள ஓகாட்ஸ்க் கடலுக்குள் நுழைந்துவிட்டது.

**சைனா**—பாஸியன், லங்மான், டிங்ஹுன், சியங்ஹுன், பிங்சாங் ஹுசை, டாயு முதலியவற்றை சீனர்கள் திருப்பிப் பிடித்தார்கள்.

**பர்மா.**—ஸிட்டாங் நதி வளைவில் நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுகிறது. ஜப்பானியர்கள் நியாங்காஸியையும் மியிட்கியோவையும் ஆக்கிரமித்தனர். நேசதேசப் படைகள் ஹோஹோவைப் பிடித்தனர்.

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**5—7—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo) பிரதேசம்.

கப்பற்கட்டும் துறைகள், களஞ்சியங்கள் இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).

பர்மா (Burma).

துருப்புக் கப்பல்கள்.—ஸிட்டாங் (Sittang) நதி.

பீரங்கி ஸ்தாபனங்கள்.—மோக்பாலின் (Mokpalin).

**6—7—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—பார்மோஸா (Formosa).

கப்பல்கள் ஸ்தாபனங்கள்.—காண்டன் (Canton) பிரதேசம்

ஜப்பானியக் கப்பல்கள்.—கொரியா (Korea சீனக்கடல் (China Sea)

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**7—7—45** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க் கிணறு ஸ்தலங்கள்.—ஓஸாகா (Osaka)-விற்கருகில்.

ஐந்து இடங்கள்.—கொபு (Zkofu), சைபா (Chiba), ஷிமோஷு (Shimozu), ஷிமாட்சு (Shimotsu), அகாஷி (Ahashi).

இலக்குகள்.— பார்மோஸா (Formosa), குயுஷுவின் மேற்கு கரை.

பர்மா (Burma).

ஜப்பானியப் படைகள்.—ஸிட்டாங் (Sittang) நதி.

**8—7—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—குயுஷுவின் (Kyushu) மேல்கரை.

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo).

இலக்குகள்.-மார்க்கஸ் தீவு (Marcus Island).

பர்மா (Burma)

எதிரி சைன்யங்கள்.—மியாங்காஸிப்பிரதேசம்.

குழிகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—ஸிட்டாங் (Sittang).

**9—7—45** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo) விற்கருகில.

இலக்குகள்.—மேற்கு போர்னியோ (West Borneo).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

10—7—45. (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).
விமான நிலயங்கள், தொழிற்சாலை இலக்குகள், பிரதேச ஸ்தாபனங்கள், ரயில்வே தளவாடங்கள்.—பார்மோஸா (Formosa).
இலக்குகள்.—கோலா தீவு (Kola Island).

பர்மா (Burma).
ஒரு தகவலும் இல்லை.

11—7—45. (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
இலக்குகள்.—டோக்கியோ (Tokyo), போர்னியோவிலுள்ள பாலிக்பாப்பனின் (Balik Papan) மேற்குக்கரை.

பர்மா (Burma).
ரயில்வே ஸ்டேஷன்.—பாங்காக் (Bangkok).
மோட்டார் போக்குவரத்துகள், துருப்பு முகாம்கள்.—ஸிட்டாங் (Sittang).
ராணுவ இலக்குகள்.—மார்ட்டபானின் (Martaban) வடகிழக்கு.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

6—7—45. (வெள்ளிக்கிழமை) முதல் 12—7—45. (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).
ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).
எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

# யுத்தக் குறிப்புகள்.

**சைனாவின் 8-வது வருஷ யுத்த ஆண்டுவிழா.** சென்ற சனிக்கிழமையன்று அதாவது ஜூலை மாதம் 7-ம் தேதியன்று சைனா ஜப்பானியப் போரின் 9-வது வருஷ யுத்தத்தை துவக்கிற்று. எட்டு வருஷங்களுக்கு முன் ஜூலை 6-ம் தேதியன்று பீகிங்குக்கு மேற்கில் மார்கோ போலோவில் சைனா சம்பவம் நடந்தது. அதன் பின் ஜப்பான் அக்கிரமப்போரை ஆரம்பித்தது. அதை சைனா பூராவும் எதிர்த்துப் போராடிற்று. எட்டு வருஷ கஷ்டம் துக்கம் அநுபவத்திற்குப் பின்னும் சைனாவின் எதிர்ப்பு குலைவதாகக் காணப்படவில்லை. இந்த வருஷங்களில் ரத்த வெள்ளம் பெருகியிருக்கிறது. ஜப்பான் 2,500,000 ஆட்களை இழந்ததென்றும் கொல்லப்பட்டவர்களும் காணாமற் போனவர்களுமாக சைனா 3,100,000 பேர்களை இழந்ததெனவும் அதைத் தவிர லக்ஷக்கணக்கானவர்களும் காயம் பட்டும் நோய்வாய்ப்பட்டும் வைத்திய வசதிக்குறைவினால் இறந்து விட்டார்களென்றும் மதிப்பிடப்படுகிறது. 47 மிலியன் சீனர்கள் குடியிருக்க வசதியின்றித் தவிக்கிறார்கள். நகரங்களை விட்டு ஓடும்படியாக நேர்ந்தது. செழிப்பான மாகாணங்களிலிருந்து வெளியேற்றப்பட்டும், கடற்கரையிலிருந்து துணிக்கப்பட்டும், தரை மார்க்கங்கள் துணிக்கப்பட்டும், அநேக வருஷங்களாக, வறுமை, தொத்துநோய் மற்ற கஷ்டங்களை அநுபவித்தும் சீனர்கள் ஸ்வதந்திரக் கொடியை நிலை நாட்டி வந்திருக்கிறார்கள். அவர்கள் நெஞ்சுரப்புடன் கஷ்டங்களை அநுபவித்திருக்கிறார்கள். அவர்களின் போர் புரியும் சக்தி சரித்திரப்புகழ் பெறக்கூடியது. காலஹரணம் செய்வதற்காக அவர்கள் இடத்தை விட்டுக்கொடுத்தார்கள். ஆனால் ஒருபொழுதும் மனத்தளர்ச்சியடையவில்லை. லக்ஷியத்தைக் கைவிடவில்லை. சந்தர்ப்பம் வாய்த்தபொழுது அவர்கள் திருப்பித்தாக்கினார்கள். பலவீனமான காலத்திலும் கூட மஞ்சூரியாவிலிருந்து தென்மேற்கு சைனாவரையிலுமுள்ள ஜப்பானியப் போக்குவரத்து மார்க்கங்களை அவர்கள் முற்றுகை செய்தார்கள். ஜப்பானுக்கு ஜீவநாடி போன்ற ஹான்கௌ கான்டன் பீகிங் இருப்புப் பாதையையும் அவர்கள் அடிக்கடி தாக்கி சில ஸ்டேஷன்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள். சமீபகாலத்தில் சீனப்படைகள் நேசதேசப்படைகளுடன் ஹூகாங்கிலும் மோகாங்கிலுமுள்ள காடுகளில் போர்புரிந்து பர்மா ரஸ்தாவைத் திறக்க ஏற்பாடுகள் செய்தார்கள். பர்மாப் போர் முடிந்தபின் சீனப்படைகள் மத்திய சைனாவில் குவிந்து வருகின்றன.

வி வி வி வி வி

**சைனாவின் சேவை.** ஐரோப்பிய நிகழ்ச்சிகளின் மகா வெளிச்சத்தில் சைனாவின் சேவையை மறந்துவிடுவது சகஜம். சைனா சமாளித்து நின்றிருவிடில் உலகத்தின் நிலைமை எவ்வாறு இருந்திருக்குமென்று சொல்லமுடியாது. நேசதேசத்தார்கள் ஐரோப்பாவில் தமேப்போரை நடத்தி வந்தபொழுது சைனா தளர்ச்சி பெற்று வீழ்ச்சி பெற்றிருந்தால தென் கிழக்கு ஆசியாவில் எஞ்சியிருந்த பாகம் எதிரி வசமாகியிருக்



கும். இந்தியாவுக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும். ஒரு சமயத்தில் ஆபிரிக்கா வழியாக ஸூயஸ்கால்வாய், கிழக்கை நோக்கி முன்னேறிவந்த ஜெர்மன் இதாலியப் படைகளை சந்திக்க இந்துமகா சமுத்திரத்தின் வழியாக இரண்டு அச்சுக்கிடுக்கிகள் வந்துவிடும் என்ற அபாயம் இருந்ததையும் நாம் அறிவோம். இவையெல்லாம் ஐரோப்பாவில் நேசதேச வெற்றியை தாமதப்படுத்தியிருக்கும். ஜப்பானின் பேராசையை அதிகரித்திருக்கும். ஆகையால் 8 வருஷ யுத்தப் பூர்த்தி தினமாகிய இன்று நாம் சைனாவின் சகிப்புத் தன்மையையும் தீரத்தையும் பாராட்டி அவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்வருஷக் கொண்டாட்டம்தான் கடைசியாக இருக்குமென்று தோன்றுகிறது. 1943, 1944-ம் வருஷங்களில் அதற்கு ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமை முடிந்துவிட்டது. இப்பொழுது சீனப்படைகள் தற்காப்புப் போரிலிருந்து முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டன. இதற்கு அநேக காரணங்கள் உண்டு.

**முதலாவதாக,** ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணாகதி. அதன் மூலம் நேசதேச பலம் உலகத்தாருக்கு பிரகடனம் செய்யப்பட்டது. ஜப்பானியத் தோல்வி தொடருமென்று சைனாவுக்கு நம்பிக்கை வந்துவிட்டது.

**இரண்டாவதாக,** ஜப்பானை முறியடிக்க பஸிபிக்குக்கு நேசதேச தரை, ஆகாய, கடற்படைகள் துரிதமாக அனுப்பப்படுகின்றன.

**மூன்றாவதாக,** சீனப்படைகளுக்கு நல்ல பயிற்சி கிடைத்திருக்கிறது. நேசதேசப்படைகள் எவ்வளவு உதவியளித்தபோதிலும் சைனா யுத்தத்தை சைனா, சைனாவிலேயே தனிப்பட்ட முறையில் நடத்தவேண்டியதுதான். எவ்வளவு நல்லெண்ணம் இருந்தபோதிலும் தூரம், மற்ற குறைவுபாடுகளினால் நேசதேசத்தார் சீனப் போரின் பளு பூராவையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் கூடுமான அளவு உதவிதான் செய்யக்கூடும.

**நான்காவதாக,** தெற்கு, மேற்கு பஸிபிக்கிலும், போகன்வில்லியிலும், நியூகினியாவிலும், பிலிப்பைனஸிலும், ஆகினாவாவிலும், போர்னியோவிலும், பஸிபிக், ஆஸியா சமுத்திரங்களிலும், அமெரிக்கா, பிரிடன், ஆஸ்திரேலியாவுக்குக் கிடைத்த வெற்றிகள். இந்த வெற்றிகள் ஜப்பானை முடமாக்கியதுமல்லாமல் அதை முற்றுகைக்கும் உட்படுத்திவிட்டன.

**ஐந்தாவதாக,** பர்மாவின் விடுதலையும் அதற்குப்பின் மலேயா, ஸியாம், கிழக்கு இந்தீஸ் முதலிய நாடுகளின் விடுதலைக்கான ஆயத்தமும்.

**ஆறாவதாக,** பர்மா ரஸ்தா திறக்கப்பட்டதும், பர்மா வழியாக எண்ணெய்க் குழாய்கள் அமைக்கப்பட்டதும். சைனாவின் எண்ணெய்க் கஷ்டம் ஒரு வழியாகத் தீர்ந்துவிட்டது.

**ஏழாவதாக,** சைனாவிலுள்ள அமெரிக்க விமானப்படை பலம் அதிகரிக்கப்பட்டதும், மேற்கு விமானிகளைப்போல சீன விமானிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டதும்.

**எட்டாவதாக,** அமெரிக்க உதவிகொண்டு சைனாவின் பொருளாதாரமும் தொழிற் ஸ்தாபனங்களும திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன.

**ஒன்பதாவதாக,** சுங்கிங்கிலும் யேனானிலுமுள்ள ஜனநாயக, பொது உடமைக் கக்ஷிகளுக்கு இடையே சமரசம் ஏற்படுவது.

**பத்தாவதாக,** டாக்டர் சுங் மாஸ்கோவுக்கு விஜயம் செய்ததும் ருஷ்ய உதவி கிடைக்கும் என்ற தோற்றமும்.

இந்தக் காரணங்கள் விளைவாக சைனாவின் யுத்த முறையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

"அமெரிக்கர்கள் பயில்வித்து முஸ்தீப்புகள் பெற்ற சீனப்படைகள் ஜப்பானைத்தாக்க முனைந்துவிடுமென்று மார்ஷல் சியாங்கேஷேக் சமீபகாலத்தில் சொன்னார். சைனாவின் முன்னேறித்தாக்கு நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. சீனப்படைகள் ஷாங்கேயிக்கு 150 மைல்களுக்குள் வந்துவிட்டன. பூசௌவுக்கு வடக்கிலுள்ள சீனக் கடற்கரையில் 300 மைல்கள் போன்ற இடத்தை மீட்டுவிட்டன. வடக்கு சைனாவில் பொது உடமைக் கக்ஷியைச் சேர்ந்த கொரில்லாப்படைகள் நாங்கிங்கை நோக்கி முன்னேறுகின்றன. மத்திய சைனாவில் இச்சாங்குக்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. தெற்கு சைனாவில் ஒரு சீனப்படை ஹொங்கியாவில், ஹானோயை நோக்கியும், மற்றொன்று குவேயிலினை நோக்கியும் முன்னேறுகிறது. ஹாங்கௌ கான்டன் இருப்புப்பாதை தாக்கப்படுகிறது. ஒரு சீனப்படை எல்லைச் சரகத்தைத் தாண்டி இந்தோ-சைனாவுக்குள் முன்னேறிவருகிறது.

நேசதேசத்தார்களும் சும்மா இல்லை. இந்த ஆண்டுவிழாவின் பொழுது மகத்தான ஆயத்தங்கள் செய்யப்பட்டுவிட்டன. படையெடுப்பு நடைபெறும் தருணமும் கிட்டிவிட்டது. இதற்கு இணையாக ஸிஸிலிய, நார்மண்டி படையெடுப்புகளைச் சொல்லமுடியாது. நேசதேசத்தார் எதிரியின் உள்வட்டாரத்தை ஊடுருவிச்சென்று, ஜப்பானுக்கு மிகவும் முக்கியத்துவமுள்ள ஐவோஜிமாவையும் ஒகினாவாவையும் பிடித்துவிட்டார்கள். டோக்கியோ தீக்கிரையாகிவிட்டது, மற்ற நகரங்களும், தீக்கிரையாகி எரிந்துகொண்டிருக்கின்றன. ஜப்பானிய ராணுவ சக்தியை அழிக்கும் போர் இறுதி கட்டத்தை அடைந்துவிட்டதென்று ஜனாதிபதி ட்ருமான் சொல்லுகிறார். "எதிரியை சைனாவிலிருந்து துரத்தியடிக்கும் காலம் வெகு தூரத்திலில்லை. அநேக வருஷங்களாக தியாகம் செய்து கஷ்டங்களை அனுபவித்த சைனாவும் மற்ற சமாதானத்தை விரும்பும் நாடுகளுடன் கலந்துகொண்டு உலக சீர்திருத்த வேலையில் ஈடுபடும்படியான காலமும் சமீபித்துவிட்டது" என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி

**எல்லைப்புற மங்கோலியா.** பொதுஜனக் குடியரசு ஆட்சியுள்ள எல்லைப்புற மங்கோலியாவின் பிரதம மந்திரியான மார்ஷல் சாய்பாலோனும் சைனாவின் பிரதம மந்திரியான டாக்டர் சுங்குடன் மாஸ்கோவுக்கு வந்திருக்கிறார் என்பது அகஸ்மாத்தாக நடைபெற்ற காரியம் என்று தோன்றவில்லை. எல்லைப்புற மங்கோலியாவின் கிழக்கு எல்லைச் சரகம் ஜப்பான் வசமுள்ள மஞ்சூரியாவுக்குள் வெகு தூரம் சென்றிருப்பதினால் ருஷ்யா யுத்தத்தில் கலந்துகொள்ளும்பொழுது அது ராணுவ முக்கியத்வமுள்ளதாக இருக்கும் என்பது தெளிவானது. மங்கோலியா சேனையும் அலக்ஷியம் செய்யக்கூடியதில்லை. மங்கோலியா, சுங்கின் சைனாவின் ஒரு பாகமாக இருந்தபோதிலும், சைனாவின் ஆதிக்கத்திலிருந்து அது போய்விட்டது. அதற்கும் ருஷ்யாவுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டுவிட்டது. டாக்டர் சுங் மாஸ்கோவில் நடத்தும் சம்பாஷணையில் எல்லைப்புற மங்கோலியாவின் சுதந்திரத்தை சைனா அங்கீகரிப்பதும் ஒரு பிரச்னையாக இருக்கும்.

வி வி வி வி வி

**பசிபிக்கில் விமான நடவடிக்கை.** (1) பிலிப்பைனிஸிலுள்ள மாக்ஆர்தரின் விமானப்படை ஜப்பானைத் தாக்கி வரும் நேசதேசப் படைகளுக்கு ஒத்தாசை செய்து வருகின்றது.

(2) ஐரோப்பாவிலிருந்த விமானப்படைகளைக்கொண்டு அமெரிக்க, 8-வது, 20-வது விமானப்படைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

(3) 51,184 வேலைக்காரர்கள் கொண்ட 2,500 விமானப்படைகள் பசிபிக்குச் செல்லுவதற்காக அமெரிக்காவுக்குச் சென்றிருக்கின்றன. அதன் மகத்தான நிகழ்ச்சிகளுக்கு ரக்ஷணை அளிப்பதற்காக கப்பல்கள் அட்லாண்டிக் கடலில் கோர்வையாக நின்று கொண்டிருக்கின்றன.

(4) ஆகினாவாவிலிருந்து 11,000 விமானங்கள் சென்று ஜப்பானைத் தாக்கின.

(5) அமெரிக்க 3-வது விமானப்படையைச்சேர்ந்த விமானந்தாங்கிகளில் சென்ற 1,000 வெடிவிமானங்கள் டோக்கியோவை ஆறு மணி நேரம் தாக்கியபொழுது ஒரு ஜப்பானிய விமானம்கூட எதிர்க்கவில்லை.

(6) 41, தடவை எரிவெடிகள் போடப்பட்டபொழுது, 130 சதுர மைல்கள் கொண்ட பிரதேசத்தில் உள்ள 30 ஜப்பானிய நகரங்கள் சாம்பலாகிவிட்டன. அவற்றில் 17,400,000 ஜனத்தொகை இருந்து வந்தது.

(7) அலூஷியன் தீவுகளிலிருந்து அமெரிக்க விமானப்படை 270 தடவை பறந்துசென்று குறைல்ஸ் தீவுகளைத் தாக்கின. முக்கியமாக ஷும்ஷியிலுள்ள க.கோடா என்ற கடற்படை தளம் தாக்கப்பட்டது.

வி வி வி வி வி

**கடற்படை விஷயங்கள்.** (1) யுத்தத்தில் முதல் ஆறு மாதங்களில் 22,82,000 டன்கள் எடையுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதுபட்டன.



(2) அமெரிக்க கடற்படை ஜப்பானுக்கு வடக்கில் குறைல்ஸ் தீவுகளுக்கும் சைபீரியாவுக்கும் மத்தியிலுள்ள ஓகாட்ஸ்க் கடலுக்குள் புகுந்துவிட்டன. ஒரு ஜப்பான் சாமான் கப்பல் கூட்டம் நாசமாக்கப்பட்டது. வடக்கு பசிபிக் சமுத்திரத்திலிருந்தும் ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் துரத்தியடிக்கப்பட்டன. 87 எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுதாக்கப்பட்டன. அமெரிக்க கடற்படை குறைல்ஸ் தீவுக்கூட்டத்தின் பேரில் 10 தடவை பீரங்கிப் பிரயோகம் செய்திருக்கிறது.

(3) நேசதேச நீர்மூழ்கிகள் ஜப்பானிய, சீன கடற்கரைக்கருகில் வேட்டையாடி வருகின்றன.

வி வி வி வி வி

**பர்மா நடவடிக்கைகள்.** (1) ஜப்பான் ஸிட்டாங் நதியைத் தாண்டிப் படைகளைக் குவித்து வருகிறது. பெகுயோமாஸில் துணிக்கப்பட்ட ஜப்பானியப் படைகளுக்கு உதவி செய்ய ஜப்பான் மூர்க்கமாக பிரயத்னம் செய்து வருகிறது. பருவகால மழை பெய்வதினால் சில்லரைச் சண்டைகள் தான் நடைபெறுகின்றன. எதிரி மியிட்கியோ, நியாக்வி முதலிய இடங்களைப் பிடித்துக் கொண்டு ஸ்தானங்களை பலப்படுத்தி வருகிறான். சிங்கப்பூரிலிருந்தும் பிரெஞ்சு இந்தோ சைனாவிலிருந்தும் சாமான்களும் மோலமீனிலிருந்து உதவிப்படைகளும் கொண்டு வரப்படுகின்றன. ஷான் மலைகளின் சமவெளிகளில் இறுதிப் போரை நடத்துவதென்று எதிரி தயார் செய்து வருகிறான் போலும். யோமாஸில் பையூவுக்குத் தென்கிழக்கிலும், பெகுவுக்கு வடமேற்கிலும், புரோமுக்குத் தென்கிழக்கிலும் படைகள் மூன்று பகுதிகளாக அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதல் இரண்டு பகுதிகளும் நன்றாக அமைப்புள்ளவை. மூன்றாவது பகுதிக்குப் போதுமான சிறந்த முஸ்தீப்புகள் கிடையாது. ஸிட்டாங்கில் 50,000 படைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த பிராந்தியத்திற்கு வடக்கில் 200 மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஷான் மலைகளில் நேசதேசத்தார்கள் பர்மாவின் சிறந்த விமான தளங்களில் ஒன்றும் வியாபார ஸ்தலமும் ஆன ஹெஹோவைப் பிடித்துவிட்டார்கள்.

(2) ஒரு சக்தி வாய்ந்த பிரிடிஷ் கடற்படை மலேயாவுக்கும் சிங்கப்பூருக்கும் போகும் வழியிலுள்ள சுரங்க வெடிகளை அகற்றி வருகிறது. அண்டமான்ஸ் தீவைச் சேர்ந்த கார் நிகோபார் தீவுக்குக் கிழக்கிலுள்ள சுரங்க வெடிகளை சுத்தி செய்துவிட்டதாக டோக்கியோ வெளியிடுகிறது. இது படையெடுப்புக்கு முற்போக்கான நடவடிக்கையாகும்.

(3) பெல்ஜியத் துருப்புகள் பர்மாவில் நடவடிக்கையைத் துவக்கிவிட்டன.

வி வி வி வி வி

**பேர்லின்.** பெர்லினில் கஷ்டம் அதிகரித்துவிட்டது. நகரத்திலுள்ள பங்கீட்டு முறை குழப்பமாக இருக்கிறது. ஹிட்லரின் ஐச்வர்யமான பசியும், நோயும் தாண்டவமாடுகின்றன. எலிகளும், ஈக்களும், பழுதுபட்ட சாக்கடைகளும், உஷ்ணப்படுத்தும் கருவிகளின் இல்லமையும், பாழாகிப்போனதும், ஒழுக்குள்ளதுமான வீடுகளும்தான் பெர்லினில் காணப்படுகின்றன. கொள்ளையடிப்பு நகரங்களிலிருந்து நகரத்துக்குப் பறவிவிட்டது. நாஸி ராஜீய, ஜனசமூக ஸ்தாபனங்கள் கலைக்கப்படுகின்றன. பத்தாயிரக் கணக்கான நாஸிகள் கைது செய்யப்படுகிறார்கள்.

அதிர்ஷ்டவசமாக பெர்லினின் ஆக்கிரமணம் சம்பந்தமாக, நேசதேசத்தார்களுக்கிடையே இருந்த வித்தியாசங்கள் சரிப்படுத்தப்பட்டுவிட்டன. ராணுவ கவர்னர்கள் சந்தித்து தங்களுடைய வட்டாரத்தில் அமுல் நடத்த முற்பட்டுவிட்டார்கள். ருஷ்யத் துருப்புகள் பிரிடிஷ், அமெரிக்க வட்டாரங்களிலிருந்து பின் வாங்கப்பட்டன. உணவுப் பொருள், கரி முதலியவற்றைப் பங்கீடு செய்ய ஒரு நிருதியான கொள்கை கையாளப்படுகிறது. ஜெர்மானியர்களுடன் சேர்ந்து சகவாசம் செய்யக்கூடாதென்ற கொள்கை கைவிடப்பட்டது.

வி வி வி வி வி

**மற்ற ஜெர்மன் விஷயங்கள்.** (1) ஷால்ஸ்விக் ஹோல்ஸ்டீனிலுள்ள 460 சதுர மைல்களுக்குள் 12,50,000 ஜெர்மன் ஆபீஸர்களும், மனிதர்களும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரிடிஷ் 8-வது சேனையின் கமாண்டரின் உத்தரவை எதிர்பார்த்து நிற்கிறார்கள். அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள இடங்களிலிருந்து ஆகாரங்களைத் திரட்டி, தங்களுடைய சொந்த வண்டிகளில் கொண்டுவரவேண்டும்.

(2) பிரெஞ்சுப் படைகள் சாரியிலுள்ள நிலக்கரி பிரதேசம் பூராவையும் எடுத்துக் கொண்டார்கள்.

(3) ராணுவத்துக்கு மாற்றாக 1931-ல் ஹிட்லர் திரட்டிய வாப்பன் S. S. படைகள் கலைக்கப்படுகின்றன.

(4) ருஷ்ய வட்டாரத்துக்குட்பட்ட பிராண்டன்பர்க், மெக்ளன்பர்க், சாக்ஸனி முதலிய மாகாணங்கள் தங்களுடைய சொந்த நிர்வாகங்களை நடத்துகின்றன.

வி வி வி வி வி

**ஐரோப்பிய விஷயங்கள்.** ஜூலை 18-யன்று பெர்லினில் மூன்று மாபெரும் தலைவர்கள் கூடுவதற்காக ஆயத்தம் செய்யப்படுகிறது. ஜனாதிபதி ட்ருமான் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

(2) வியன்னாவில் ஆக்கிரமிப்பு வட்டாரங்களை நேசதேச வல்லரசுகள் ஒப்புக்கொண்டன. பிரிடன் தெற்குப் பகுதியையும் அமெரிக்கா வடமேற்கு பாகத்தையும் பிரான்ஸ் மேற்கு பாகத்தையும் ருஷ்யா கிழக்குப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் நகரத்தின் மத்திய பாகத்தை எல்லா வல்லரசுகளும் ஆக்கிரமிக்கும்.

(3) பிரிடனும், அமெரிக்காவும், சைனாவும் வார்ஸாவிலுள்ள புதிய நிர்வாகத்தை மதித்து விட்டன. லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகம் கலைக்கப்பட்டிருக்கிறது. புதிய போலிஷ் நிர்வாகம் கஷ்டமான நிலைமையில் வேலையைத் துவக்குகிறது. வார்ஸா பாழாகிக்கிடக்கிறது. நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஆபீஸ்களுக்குக் கால்நடையாகச் செல்லவேண்டியிருக்கிறது. ராஜீயத்தைக்காட்டிலும் உணவுதான் இப்பொழுது பெரும் பிரச்னை.

(4) செகோஸ்லாவேகியா, போலந்து, பல்கேரியா, ருஷ்யா என்ற ஸ்லாவ் நாடுகளுக்கிடையே பரஸ்பர உதவியும், நட்பும் உள்ள ஒரு ஒப்பந்தம் ஏற்படும்போலிருக்கிறது. அது வட்டார ஒப்பந்தம். அது மேற்கு, தெற்கு, கிழக்கு என்ற மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கப்படும்.

(5) அமெரிக்க 5-வது 8-வது சேனைகள் அடங்கிய 15-வது சேனை கலைக்கப்படும். அதில் பிரிடிஷ், அமெரிக்க, கனேடிய, தெற்கு ஆபிரிக்க, இந்திய, பிரஸிலிய, போலிஷ், யூகோஸ்லாவிய, கிரேக்க, இதாலியப் படைகள் சேர்ந்திருந்தன. அவர்கள் இதாலியில் ஜெனரல் கிளார்க்கின் தலைமையில் வேலை செய்துவந்தார்கள்.

வி வி வி வி வி

**புகழுரை.** இந்திய ஸோல்ஜர் அடிக்கடிப் பாராட்டப்படுகிறான். கீழ்கண்ட புகழுரையை 14-வது சேனை கமாண்டரான ஜெனரல் ஸ்லிம் வெளியிட்டிருக்கிறார்.

"பர்மா போரில் இந்தியத் துருப்புகள் எடுத்துக்கொண்ட பங்குக்கு என்னுடைய புகழுரை போதுமானதல்ல. 14-வது சேனையிலுள்ளவர்களில் மூன்றில் இரண்டு பாகம் இந்திய சேனையுள்ளது. நிர்வாகப் படையிலும் சுமாராக 80 சத விகிதம் இந்தியர்கள் இருக்கிறார்கள்".

"பர்மாப்போர் பூராவிலும் இந்தியத் துருப்புகள் திறம்படப் போர் புரிந்திருக்கின்றன. அவர்களின் ஒழுக்கமும, மன உறுதியும் அப்பழுக்கற்றவை. அவர்களின் போர் வீரம் உலகத்திலேயே அவர்கள் சிறந்த துருப்புகள் என்ற அந்தஸ்தைத் தந்துவிட்டது. இந்தத் திறமையை அவர்கள் ஜப்பானியப் போரில் காண்பித்திருக்கிறார்கள்".

வி வி வி வி வி

**அலுமினிய சாமான்கள் கட்டுப்பாடு உத்தரவு.** இந்திய தற்காப்பு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அலுமினிய சாமான்கள் விற்கப்படக்கூடாதென்று புதுக்கோட்டை ஸமஸ்தானம் ஈ-தர்பார் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். விலை சாமான்கள்பேரில் முத்திரையிடப்பட்டிருக்கவேண்டும்.

---

## உலக பந்தோபஸ்தும் ஜனப்பிரதிநிதி சபையும்.

விக்ஹாம் ஸ்டீட்.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளின் எதிரொலி அடங்குமுன் சான்பிரான்ஸிஸ்கோவின் வேலையை மதிப்புப்பார்ப்பது அத்யாவசியமாகும்.

மகாநாட்டைக் கலைக்கும் சமயத்தில் ஜனாதிபதி ட்ருமான் ஆற்றிய சொற்பொழிவு உலகம் பூராவிலும் த்வனித்துக்கொண்டிருக்கிறது. 26 வருஷங்களுக்கு முன் 1919-ம்



வருஷம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதியன்று அமெரிக்காவின் ஜனநாயக ஜனாதிபதியான உட்ரோ வில்ஸன் பாரிஸில் நடைபெற்ற சமாதான மகாநாட்டின் முன் சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் எல்லோரும் ஒப்புக்கொண்ட நகலை சமர்ப்பித்தார் என்பது எனக்கு ஞாபகம் வருகிறது. மகாநாடு ஆரம்பத்தின்பொழுது அவர் சொற்பொழிவாற்றினாரே ஒழிய மகாநாட்டைக் கலைக்கும்பொழுது அவர் பேசவில்லை. ஆகிலும் அவர் எழுப்பிய உணர்ச்சிகள் ஜனாதிபதி ட்ருமான் வெளியிட்டு சான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள பிரதிநிதிகள் பகிர்ந்து கொண்ட உணர்ச்சிகளுக்கு சமமானவை என்று சொல்லலாம்.

1919-ம் வருஷத்தில் நடைபெற்ற ஆரம்ப விழாவை நான் கண்ணுற்றேன். அதைப் பற்றி வியாக்யானம் எழுதி மறுநாள் பின்வருமாறு எழுதினேன்:—"ஜனாதிபதி வில்ஸன் படித்த தஸ்தாவேஜியையும் அதைப்பற்றி அவர் வெளியிட்ட வியாக்யானத்தையும் நேசதேச பிரதிநிதிகளின் உறுதிமொழியையும் கேட்ட எவரும் உலக விவகாரங்கள் ஒரு புதிய பரிமாணத்தை அமைத்து வருகின்றனவென்று நினைக்காமல் இருக்கமுடியாது. பழைய பரிமாணங்கள் ஒரு க்ஷணமாவது உயர்தர பரிமாணத்திற்கு உயர்த்தப்பட்டுவிட்டன. இந்த உயர்வு எவ்வளவு காலம் நீடித்திருக்கும் என்று ஒருவரும் சொல்லமுடியாது. புதிதாகவும் உதறித்தள்ளக்கூடாததுமான ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற உணர்ச்சி மகாநாட்டில் காணப்படுகிறது என்று சொல்லலாம். மகாநாட்டில் பேசியவர்களெல்லாம் தங்களுடைய சிறிய சேவையில் பீதியடையாதவர்கள் போலும், நாகரீகமும், அநாகரீகமும் உள்ள மனித வர்க்கத்திற்கு ஒரு புதிய சாஸனத்தைத்தை நிறுவுகிறோம் என்ற துணிவுடனும்தான் பேசிவந்தார்கள்.

அந்த முயற்சி இகழ்ச்சிபெற்றது. புதிய பரிமாணத்தின உயர்தரமான அந்தஸ்திலிருந்து உலகத்தின் விஷயங்கள் பழைய பரிமாணத்தின் அந்தஸ்துக்கும் கீழ் நோக்கிவிட்டன. இது தவிர்க்கமுடியாமலிருந்ததா என்பதை நாம் சர்ச்சை செய்யவேண்டாம். வெகுதூரம் சுடும் பீரங்கியிலிருந்து அனுப்பப்படும் வெடிகுண்டு முதலெடுப்பிலேயே லக்ஷியத்தை நிச்சயமாக அடித்துவிடுமா என்று கேட்பது போலிருக்கும்.

அந்த குண்டு பிரயோகத்தை லக்ஷியத்தை நிர்ணயிக்கும் குண்டு வீச்சென்று பீரங்கிப் படையினர்கள் சொல்லுவார்கள். சர்வதேச ஒப்பந்தம் யுத்தம் என்ற பலமான கோட்டையில் ஸ்தானத்தைக் கண்டு பிடிக்கும் முதல் வெடிகுண்டு. அதைச் சுட்டபின் லக்ஷியம் விருத்தியடைந்திருக்கிறது, திருஷ்டி கோசரமாகியிருக்கிறது. அதிக அபாயம் பொருந்தியதாக இருக்கிறது. டம்பார்டன் ஓக்ஸில் ஒத்திகை செய்த பீரங்கிப் படையினர் சான்பிரான்ஸிஸ்கோவுக்கு பீரங்கிகளை எடுத்துச்சென்று லக்ஷியத்தைக் கண்டுபிடித்து அதன்பேரில் வெடிகுண்டுகளைப் போடாவிடில் அவர்களின் முயற்சி வீணாகிவிடும். சுதந்திரமுள்ள நாகரீகத்தின் எதிர்காலத்தைப்பற்றியும் நம்பிக்கை கொள்ள இடமில்லை.

அநேக முறைகளில் புதிய சாஸனம் பழைய சர்வதேச ஒப்பந்தத்தைவிட சிலாக்கியமானது. சர்வதேச சங்க ஒப்பந்தத்தை நிறுவியவர்களைவிட இந்த உலக சாஸனத்தை வரைந்தவர்கள் உண்மைகளை நன்கு உணர்ந்து நன்கு பரிசீலனை செய்து இந்த சாஸனத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இந்த ஆசிரியர்களில் சர்வதேச ஸ்தாபனத்தின் நடைமுறைகளையும் அதிலுள்ள குறைபாடுகளையும் அறிந்த அனுபவம் அடைந்தவர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். எங்கு முட்டுக்கட்டையிருக்கிறதென்றும் அதை எவ்விதம் நிவர்த்திக்கலாமென்றும் அவர்கள் அறிவார்கள்.

சர்வதேச ஒப்பந்தத்தில் காணப்பட்டதைவிட புதிய உலக சாஸனத்தில் புல்டோஜரின் அநேக அம்சங்கள் காணப்படுகின்றன. அநேக கரடு முரடான ரஸ்தாக்களில் செல்லவும் அது பலமாகக் கட்டப்பட்டிருக்கிறது. அது ஜனங்களிடையே தவறான அபிப்பிராயத்தை உண்டு பண்ணவில்லையென்பது அதன் முக்கியமான அம்சம். அது சக்திக்கும் பொறுப்புக்கும் தொடர்பு ஏற்படுத்துகிறது. அது பிரிடனையும், அமெரிக்காவையும், ருஷ்யாவையும், பிரான்ஸையும், சைனாவையும் உலகத்தின் முக்கியமான போலீஸ்காரர்களாகச் செய்திருக்கிறது. உலக பத்திர சபையில் அந்த நாடுகளுடன் நேசதேசத்தாரின் மற்ற ஆறு பிரதிநிதிகளும் சேர்ந்திருப்பார்கள். நேசதேசங்களின் ஜெனரல் அஸெம்பிளி சாஸனத்தின் வியாபகத்துக்குட்பட்ட எல்லா விஷயங்களையும் சர்ச்சை செய்யக்கூடிய உலக பார்லிமெண்ட் சபையாக இருக்கும். அஸெம்பிளி பொறுக்கியெடுத்த 18 பேர்கள் அடங்கிய பொருளாதார சபை பொருளாதார, ஜன சமூக பிரச்னைகளை ஆராய்ச்சி செய்து அதற்குத் தகுந்த பரிகாரம் தேடும். சர்வதேசங்களின் உயர்தர நீதிசபை சர்வதேசங்களின் நியாய பரிபாலனத்தை நடத்தும்.

2

இந்த ஏற்பாடுகள் சிறந்தவைகள் என்று கருதப்பட்டாலும் அவற்றின் நடைமுறை உபயோகம், உலகத்தின் பந்தோபஸ்துக்கு முக்கியமான நாடுகள் தங்களுக்குள் சமாதானத்துடன் இருப்பார்களா என்ற பிரச்னைக்குக் கிடைக்கும் உபயோகமுள்ள பதிலைப் பொருத்ததாகும். அவர்கள் தங்களுக்குள் சமாதானத்துடன் இல்லாவிடில் சான்பிரான்ஸிஸ்கோ சாஸனமும், சர்வதேச சங்க ஒப்பந்தம் சென்ற வழியே சென்று மனிதவர்க்கத்தினிடத்தில் ஏமாற்றத்தையும் கதியின்மையும் உண்டு பண்ணிவிடும். அவர்களுக்குள் சமாதானம் நிலைபெற்று வந்தால் அவர்களும் மற்ற நேசதேசங்களும் ஒரு பெரிய உலக சக்தியை உண்டு பண்ணிவிடலாம். அந்த உலக சக்தி அறிவாளிகள்கொண்ட பொதுஜன அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். அந்த சக்தியை அதிக சக்தி வாய்ந்த தனிப்பட்ட எந்த நாடும் புறக்கணித்து விடமுடியாது.

நாகரீகத்தின் எதிர் "காலம்" இதைத்தான் நம்பியிருக்கிறது. அது சான்பிரான்ஸிஸ்கோவில் புத்துயிர் பெற்றிருக்கிறது. அதைப் பூர்த்தி செய்ய நேசதேசங்கள் எல்லோரும் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

# ஐரோப்பாவில் புதிய பொருளாதார யந்திரம்.

## மேன்: பார்வையின் சரித்திரம்.

### ராபர்ட் மாக்கே.

ஐரோப்பிய வெற்றி நாட்கள் சென்றுவிட்டன. வெற்றியைக் கொண்டாடியபின் பிரிடிஷ் மக்கள் அமைதியுடன் அவர்களுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கொண்டாட்டத்தில் அதிக மும்மரம் காணப்படவில்லை. நாஸிகளின் அக்கிரமங்களும் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகளும் அமிதமாகயிருந்தால் அநாவசியமாகவும் அமிதமாகவும் வெற்றியில் குதூஹலப்படுவதற்கில்லை. வெற்றி கிடைத்தபோதிலும் சுதந்திரத்தை நம்பியிருந்தவர்கள் அதிகக் கொடுந்துன்பத்தையும், அக்கிரமங்களையும் அனுபவித்திருப்பதினால் வெற்றியை குதூஹலமான முறையில் கொண்டாடுவதற்கில்லை.

வெற்றியில் ஒருபொழுதும் சந்தேகமில்லாததினால் பிரிடிஷ் மக்கள் ஒரு வருஷம் பூராவும் ஏராளமான எதிரிகளைத் தன்னந்தனியே நின்று எதிர்த்துப் போராடினார்கள். ஆனால் வெற்றி கிடைத்தபொழுது, அது எண்ணியிராத அளவிலும், முற்றிலும் எதிர்பாராத வேகத்துடனும் கிட்டிவிட்டது. ஜெர்மனிக்குத் தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டாலும் ஒரு சமயத்தில் அது வலுமிக்க ராணுவ சக்தியாகக் காணப்பட்டது. அடுத்த நிமிஷத்தில் ராணுவ யந்திரம் பூராவும் சீர்கெட்டுப் போய்விட்டது. அத்துடன் ராஜிய ஆக்ஷியின் சின்னங்களும் மறைந்துவிட்டன, ராஜிய முறையில் சொல்லப்போனால் ஜெர்மனியில் ஒன்றுமில்லாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இவ்விதமான நிலைமை பொதுவாக சிக்கலாக உள்ள ஐரோப்பிய நிலைமையில் மேலும் அதிக சங்கடத்தை உண்டுபண்ணக்கூடுமென்று யிருந்த ராஜிய எண்ணங்கள் உள்ள பிரிடிஷ் மக்கள் உடன்காலத்திலேயே அறிந்தார்கள். மேலும் ஐரோப்பிய ராஜியச் சிக்கல் சிரமசாத்யமானதென்றும் நுட்பமான பிரச்னைகள் உள்ளதென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஜெர்மனியில் இவ்விதமான ராஜிய சூன்யம் ஏற்படுமென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை.

ஆகிலும் அதன் காரணமாக அவநம்பிக்கை கொள்ள இடமில்லை. புதிய ஐரோப்பாவில் நேசதேச ஒத்துழைப்பு யந்திரம் வேலைசெய்யத் தொடங்கும்பொழுது ஒரு சிறிது தொந்திரவு ஏற்படுமென்பது தவிர்க்கமுடியாத காரியம். ஆகிலும் யந்திரம் புறப்படும்பொழுது சப்தம் செய்தாலும், இதுதான் புதிய யந்திரத்தின் இயல்பு, அது வேலை செய்து வருகிறது.

பொருளாதாரத் துறையில்தான் சிரமங்கள் உண்மையில் அதிகமாக இருக்கின்றன. இவைகளை பிரிடன் உணர்ந்ததினால்தான், வெடிகுண்டு வீச்சுக்கு உட்பட்ட இடங்களில் தவிர மற்ற இடங்களில் வெற்றியினைக் கொண்டாட்டங்கள் அதிக ஆடம்பரத்துடன் நடைபெறவில்லை. மேலும் பிரிடன் ஜப்பானியப் போரில் பூராவாக ஈடுபட்டு அதன் சேவையையும் அதிகப்படுத்திவருகிறது.

பிரிடனின் தேசிய புனருத்தாரண வேலை ஐரோப்பாவில் யுத்தத்தினால் ஏற்பட்ட பலமான பொருளாதார நாசத்தினால் பாதிக்கப்படுகிறது. ஆறு தேசங்களைத்தவிர பாக்கி ஐரோப்பிய நாடுகள் எல்லாம் பலமான நஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றன. வீடுகளும், போக்குவரத்து மார்க்கங்களும், தொழிற்சாலைகளும், தொழிற்சாலை முஸ்தீப்புகளும், மிகவும் பலமாக



நாசமாக்கப்பட்டிருக்கின்றன. மிலியன்கள் கணக்கான ஜனங்களுக்கு உணவுப்பொருளும், ஆடைகளும், எண்ணெயும் குறைந்துவிட்டன. இல்லாமையைத் தாங்கிநிற்கக்கூடிய தேக வலிமையையும் ஜெர்மானியர்கள் கெட்ட எண்ணத்துடன் முன்கூட்டியே குலைத்துவிட்டார்கள். செல்வ நிலைமையிலும், நாஸிகள் ஆதிக்கத்தினால் செல்வப்பெருக்கும் விலைவாசி உயர்வும் காணப்படுகிறது.

புதிய யுகத்தை ஆரம்பிக்கும்பொழுது உலகத்தில் எந்த நாட்டையும்விட அதிகமாக யுத்த சிரமங்களை அனுபவித்த செல்வ நிலைமையுடன் பிரிடன் இருந்துவருகிறது. ஸ்டெர்லிங் விஷயத்தில் அதற்கு சர்வதேசத்தின் நம்பிக்கை இருந்து வருகிறது. அபாரமான யுத்தச் செலவிற்குப்பின்னும் தேசிய செல்வ நிலைமையின் சமத்வம் பரிபாலிக்கப்பட்டுவருகிறது. யுத்தகால சிக்கனச் செலவினாலும் அவசியமான பொருளை வாங்குவதினாலும் பிரிடன் மீதப்படுத்திய 9,000 மிலியன் பவுன்களும் சமாதான கால முதல் வருஷத்தில் உபயோகிக்கப்படும்.

யுத்தச் செலவை நடத்துவதற்காக பிரிடனுக்கு மற்ற நாடுகளிலிருந்த அதன் ஆஸ்திகளை அழிக்கவேண்டியிருந்ததென்பது உண்மைதான். ஆகிலும் அவர்களின் பாங்கி முறைகள் கெட்டுப்போகவில்லை. சர்வதேச, உள்நாட்டு வியாபாரங்களுக்குப் பொருள் கொடுத்து உதவும் அதன் அனுபவமும் லண்டன் மார்க்கெட்டின் சக்தியும் இணையற்றவை.

அயல்நாட்டு ஆஸ்தி நஷ்டத்தை ஈடுசெய்ய பிரிடன் ஏற்றுமதியை அதிகரிக்கவேண்டும். அதாவது பிரிடன் மற்ற நாடுகளிலிருந்து இயற்கை பொருள்களை வாங்கவேண்டும். பிரிடனின் தொழிற்சாலைகளை பொதுஜன உற்பத்திக்காகத் திருத்தி அமைத்து அவைகளுக்கு முஸ்தீப்புகளை வழங்கவேண்டும். ஆகையால் தேசிய புனருத்தாரணம் மூலம் அவசியமான உற்பத்திப் பொருளுக்கும், அவசியமான இறக்குமதிப்பொருளுக்கும் சமத்வம் ஏற்படவேண்டும்.

இந்த அமைப்புடன் தொழிலாளர் சேவையும் உற்பத்திக்கு ஈடுபடுத்தப்படவேண்டும். அதாவது கட்டுப்பாடுகளும் இருக்கவேண்டும். எவரும், முக்கியமாக வியாபாரிகளும் எவ்விதக் கட்டுப்பாட்டையும் ஆதரிக்கவில்லையாகிலும், பிரிடனிலுள்ள தொழிலாளிகளும் வியாபாரிகளும் அது அவசியமென்று கருதுகிறார்.

வியாபாரத்தில் பிரிடன் தனிப்பட்டவர்களின் முதலாளித்வத்தை ஆதரிக்கிறதென்று உலகமறிந்திருந்தாலும் பிரிடனிலும் கட்டுப்பாட்டுக்குக் குறைவேயில்லை. பிளாண்டாஜனட் முதல் டூடர் மன்னர்கள் ஆக்ஷிமுடிய இங்கிலாந்தின் தேசிய தொழிற்சாலைகள் பூராவும் நிர்வாகத்தின் அமுலுக்குட்பட்டதென்று கருதப்பட்டது. எலிஸபெத் மகாராணியின் ஆக்ஷி முதல் நெப்போலியானிக் யுத்தம் முடிய பிரிடனின் தொழிற்சாலைகளும் வியாபாரமும் தேசியக் கொள்கைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதன்பின் பூர்ணமான அபிப்பிராய மாறுதல் ஏற்பட்டது. 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் தனிப்பட்டவர்களின் பொருளாதார, தொழிற்முறை நடவடிக்கைகளில் நிர்வாகம் கொஞ்சம்கூட குறுக்கிடுவதில்லை.

1846-ம் வருஷத்தில் தானிய சம்பந்தமான விதிகளை ரத்து செய்வதென்பது அந்த யுகத்தின் இறுதி கட்டமாகும். அதன்பின் தேசியப் பொருளாதார வாழ்க்கையில் நிர்வாகம் தலையிட ஆரம்பித்து அதிகரித்துவந்தது. ஆகையால் 1890-ம் வருஷத்தில் எந்த புத்திசாலிகளும் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் போதித்த தலையிடாமை என்ற கொள்கையை ஆமோதிக்கவில்லை.

16-வது முதல் 18-வது நூற்றாண்டு முடிய ராஜிய அவசியத்துக்காக பொருளாதார அடக்குமுறை கையாளப்பட்டது. ஆகிலும் 1846-ம் வருஷம் முதல் 1914-ம் வருஷம் வரையில் தொழிற்சாலைகளிலும், வியாபாரத்திலும் நிர்வாகம் குறுக்கிட்டதற்கு ஜனசமூக அக்கரைதான் முக்கிய காரணமாக இருந்தது. தொழிற்சாலை நிலைமையை அபிவிருத்தி செய்வதும், ஸ்திரீ, சிறு பிள்ளை வேலைக்காரர்களை ரக்ஷிப்பதும், வியாதியஸ்தர்களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும், உபகாரம் செய்ய ஏற்பாடு செய்வதும்தான் நிர்வாகத்தின் லக்ஷியங்கள். 1919 முதல் 1939-ம் வருஷம் வரையில் நிர்வாகம் புதிய முறையில் குறுக்கிடவில்லை. பிரகிருத சட்டதிட்டங்களைத் திருத்தி அமைத்து அபிவிருத்தி செய்வதில்தான் நிர்வாகம் கவனம் செலுத்திவந்தது. அதன் லக்ஷியம் ஜனசமூக அபிவிருத்திதான், பொருளாதாரக் கருத்துகளின் செல்வாக்கும் தெளிவாகக் காணப்பட்டது.

இன்று பொருளாதார லக்ஷியம் ஒங்கி நிற்கிறது. இப்பொழுது ஆரம்பிக்கப்போகும் சர்வதேச வாழ்க்கையில் பிரிட்டனின் புதிய சட்டதிட்டங்கள் புதிய தேவைகளுக்குத் தக்கவாறு தேசிய பொருளாதாரத்தை அமைக்க வசதி ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

---

## சிறந்த பொதுஜன சேவை.

### மிஸ்ட்டர் பிர்ன்ஸின் நியமனம்.

(டைம்ஸ் பத்திரிகை).

மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸுக்கு பதிலாக மிஸ்ட்டர் ஜேம்ஸ் F. பிர்ன்ஸ் நிர்வாக மந்திரி யாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை ஸெனட் இந்த வாரத்தில் அங்கீகாரம் செய்யும். இந்த நியமனத்திலிருந்து புதிய ஜனாதிபதி மிகவும் தேர்ச்சி பெற்ற கௌன்ஸிலர்களையும், திறமை வாய்ந்த நிர்வாகிகளையும், அமெரிக்காவில் தோன்றியிருக்கும் சிரம சாத்யமான பிரச்னைகளைத் தீர்க்க சேர்த்துக்கொள்ள எண்ணம் கொண்டிருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

நிர்வாக இலாகா என்பது சாதாரண காலங்களில் ஒரு முக்கியமான ஸ்தானம். உலகத் தின் எதிர்கால அமைப்பில் அதன் செல்வாக்கு அபாரமானது, முக்கியத்வமுள்ளது. அதன் நாயகம் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும். ஜனாதிபதி தேர்ந்தெடுத்ததென்பது அமெரிக்காவின் உள்நாட்டு நன்மையைப் பொருத்தது மட்டுமல்ல. அது ஸ்வதந்திர மக்க ளுக்கும், உலகம் பூராவிலும் விடுதலைபெற முயன்று வருகிறவர்களுக்கும் முதல்தரமான முக்கியத்வமுள்ளது.

மிஸ்ட்டர் பியர்ன்ஸின் பொதுஜன சேவை பலவகைப்பட்டது, சிறந்தது. அவர் ஸெனட் சபையில் முகாண்மையான மெம்பராக இருந்தார். அவருடைய பொறுப்பு வாய்ந்த அலுவல் களைச்செய்து முடிப்பதில் அவர் ஸெனட்டின் ஆதரவைப்பெறக்கூடும். அவர் இறந்துபோன ஜனாதிபதிக்கு உதவி செய்து வந்தார். அவருடைய நட்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திர மாகயிருந்தார். அநேக வருஷங்கள் வரையில் அவருக்கு ஸ்நேகிதராகவும் மிஸ்ட்டர் சர்ச்சில், மார்ஷல் ஸ்டாலினுடன் ஜனாதிபதி சம்பாஷணை செய்தபொழுது அவருடைய ஆலோசகராகவும் இருந்து வந்தார். கடைசியாக ஜெர்மனியைத்தாக்க அமெரிக்காவின் பூரா ஐச்வர்யங்களையும், ஒன்று படுத்தியதில் மிஸ்ட்டர் பியர்ன்ஸைவிட அதிக சிரத்தை எடுத் துக்கொண்டவர்கள் கிடையாது. முதலில் பொருளாதார ஸ்திரத்தின் டிரக்டராகவும் அதன்பின் யுத்தத்துக்காக படை திரட்டுவதின் டிரக்டராகவும் அவர் உள்நாட்டு ஐச்வர்யங் களையும் தொழிற்சாலைகளையும் யுத்த யந்திரத்தில் ஈடுபடுத்தினார்.

ஜனாதிபதி ட்ரூமான் செய்த இந்த நியமனம் அந்த ஆபீஸின் முக்கியத்வத்தை ஒத்திருக் கிறது. சுறுசுறுப்பானதும், முற்போக்கானதுமான கொள்கைகள் கையாளப்படுமென் றும் இது வெளிப்படுத்துகிறது. பாக்கியுள்ள குரூரமான எதிரியை இறுதியில் முறியடிக்க அமெரிக்க ஜனங்கள் பூராகவனத்தையும் ஐச்வர்யங்களையும் ஈடுபடுத்தி வரும்பொழுதும் நிர்வாகம் மற்ற நேசதேசங்களுடன் சேர்ந்து சாஸ்வதமான சமாதானத்திற்கு திட்டங்களை வகுத்து வருகிறது. புதிய உலக ஸ்தாபனமாகிய உலக பத்திர கௌன்ஸிலில் அமெரிக்க பிரதிநிதியாக மிஸ்ட்டர் ஸ்டெட்டினியஸை ஜனாதிபதி நியமனம் செய்ததிலிருந்து சமா தானத்தை நிலைநாட்டுவதற்காக நெடும்போக்கான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அமெரிக்கா தயாராகயிருக்கிறதென்பதற்கு வாக்குறுதியும் ருசுவும் ஏற்பட்டது போலாகும். சமீப காலத்தில் நிர்வாக இலாகாவின் பொருளாதார அம்சம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முறை தொழிற்சாலைகளின யுத்த முயற்சியில் ஈடுபடுத்தியவரும் அவற்றையே சமாதானத் திற்குத் தயார் செய்ததுமான ஒருவரைத் தலைவராக நியமிக்கப்பட்டதிலிருந்து மேன்மேலும் அபிவிருத்தி அடையும். மிஸ்ட்டர் பியர்ன்ஸ் உத்தியோகம் ஏற்றுக்கொண்டவுடன், ஜெர்மனி யில் நடைபெறப்போகும் மூன்று வல்லரசு மகாநாட்டுக்குச் செல்லும் ஜனாதிபதியுடன் செல்லுவார். அங்கும் அவருடைய யுத்தக்கொள்கை அனுபவமும், அவருடைய தேர்ச்சி பெற்ற ஆலோசனையும், அமெரிக்காவுக்கும், உலகத்திலுள்ள எல்லா தேசங்களின் சமாதானம், க்ஷேமம் என்ற பொதுவான அக்கரைக்கும் உபயோகமுள்ளதாக இருக்கும்.



## பேர்லினில் நேசதேச ஆக்கிரமணம்.

### மேன் பார்வை கௌன்ஸிலின் வேலை.

(டெயிலி டெலிராப்).

நேசதேசத்தார்கள் ஜெர்மன் தலை நகரத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள். அநேக வருஷங்களாக போரின் சிரமங்களை அனுபவித்த படைகள் பிரிடிஷ் தொகுதியிலிருக்கின்றன, முக்கியமாக "ஆபிரிக்க ராட்ஸ்" என்று பெயர் பெற்ற 7-வது கவசம் பூண்ட படையைப் பற்றிச் சொல்லாமலிருக்கமுடியாது. அப்படை ஐந்து வருஷங்களாக அச்சுப்படைகளுடன் போர் நடத்தியிருக்கிறது. எல் அலாமீனிலிருந்து முன்னேறி பெர்லின் வெற்றியுடன் போரை நிறுத்தியிருக்கிறது. இதற்குமுன்னும் பெர்லினுக்குள் வெற்றிபெற்ற சேனைகள் நுழைந்திருக்கின்றன.

பிரெடரிக் மகான் ருஷ்ய, ஆஸ்திரிய ஆக்கிரமிப்பிலிருந்து இரண்டுதடவை பெர்லினைக் காப்பாற்ற முடியவில்லை. பிரஷ்ய சேனையை ஜேனாவில் முறியடித்தபொழுது ஸன்னுகத் துடன் நெப்போலியன் பெர்லினுக்குள் நுழைந்தான். ஆகிலும் இந்த வாரத்தில் பிரிடிஷ் அமெரிக்கப்படைகளும், பெர்லினுள்ள ருஷ்யப்படைகளும் ஒன்றுசேருப் சந்தர்ப்பம் மற்ற சந்தர்ப்பங்களைவிட முற்றிலும் மாறுனது. ஒவ்வொருவருக்கும் ராஜிய ஆலோசகர் உதவி யுள்ள நான்கு சேனாதிபதிகள் கொண்ட மேன்பார்வை கமிஷன் மூலம் பிரிடனும், அமெரிக் காவும், ருஷ்யாவும், பிரான்ஸும் ஜெர்மனியில் உயர்தர அதிகாரம் செலுத்துவதற்கு முற் போக்காக பெர்லின் இப்பொழுது ஆக்கிரமிக்கப்படுகிறது. இந்த கௌன்ஸில் மிகவும் சிரம சாத்தியமான வேலையைச்செய்யவேண்டும். அது எவ்வளவு சீக்கிரமாக வேலையைத் துவக்கிறதோ அவ்வளவு தூரம் நன்மையாக இருக்கும்.

இப்பொழுது அவர் அவர்களுடைய வட்டாரங்களில் கையாளப்படும் கொள்கைகளில் அமெரிக்காவுக்கும், பிரிடனுக்கும், ருஷ்யாவுக்கும் அநேக வித்தியாசங்கள் காணப் படுகின்றன. இதற்கு ஒருவரும் ஜவாப்தாரியல்ல. ஆனால் எல்லோரும் ஒன்றுபட்ட நடவடிக் கையைக் கையாளாவிடில் விபரீதங்கள் நேரிடக்கூடும். சகோதரபாவம் என்ற அவியக்த மான பதமானது உருவான, ஒன்றுபட்ட கொள்கையில் ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்று வற்புறுத்துகிறது. ராஜிய சங்கங்களை எவ்வளவு தூரம் ஜெர்மனி அமைக்கக்கூடும், உள் நாட்டு நிர்வாகத்தின் பொருப்பை எவ்வளவு தூரம் அளிக்கலாம் என்பதை ஓரளவு நிர்த் தாரணம் செய்யவேண்டும். பொருளாதார சீர்கேட்டிலிருந்து அபாயம் நேரிடும் போலிருக் கிறது. ஹோஹன்ஸாலர்னும் நாஸித் திட்டங்களும் ஜெர்மனியை அபிவிருத்திசெய்த முறை யிலிருந்து மேற்கிலுள்ள தொழிற்சாலை பிரதேசங்களிலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் உணவுப் பொருளுக்கு கிழக்கு நாடுகளையே நம்பியிருந்தார்கள். கூடிய சீக்கிரத்தில் ஏதாவது ஒரு வகையில் பரிவர்த்தனை நடைபெறவேண்டும், குழப்பமான நிலைமையிலிருந்து நஷ்ட ஈடும், நேசதேசத்தாருக்கு திருப்திகரமான புனருத்தாரணமும் ஏற்படாது.

---

## மனித வர்க்கத்தின் சேவை.

### செஞ்சிலுவை சங்கத்தின் யுத்தத்துக்குப் பிந்திய கஷ்ட நிவாரண திட்டங்கள்.

காதரைன் காமெரான்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் பிரிடனிலிருந்த செஞ்சிலுவை சங்க மூதாதையர்கள் காயம்பட்ட ஸோல்ஜர்களுக்காகச் செய்த சேவையானது இப்பொழுது நிர்வாககங்கள், தேசங் களின் பொறுப்பாக மாறிவிட்டது. இன்று செஞ்சிலுவையின் வேலை முக்கியமாக உதவி செய்வதுதான். இதற்குமுன் தன்னலம் பாராட்டாத ஆடவர்களும் ஸ்திரீகளும் ஐச்வர்யங் கள் இல்லாமலும் உதவியன்றியும் சேவை புரிந்துவந்தார்கள். அதற்கு பதிலாக இப்பொழுது ஒரு பெரிய ஸ்தாபனம் தேசீய சங்கங்கள் என்ற முறையில் வேலை செய்துவருகிறது.

இந்த இயக்கத்தின் அடிப்படையான உணர்ச்சிகள் எல்லா யுகங்களிலும் காணப்படு கின்றன. காயம்பட்ட எதிரிகளிடமும் கருணை காட்டவேண்டுமென்ற மனப்பான்மை கிறிஸ்துக்கு முன் 559-ம் வருஷத்தில் தோன்றியது. பாரஸீகத்தைச் சேர்ந்த சைரஸ்

எதிரிகளையும் நம்முடைய ஸோல்ஜர்களைப்போல பாவிக்கவேண்டுமென்றும் சொன்னார். அப்படி இருந்தும் போர்முனையில் காயம்பட்ட ஸோல்ஜரின் நிலைமை விக்டோரியா மகாராணியாரின் ஆக்ஷி வரையிலும் பரிதாபகரமாக இருந்துவந்தது.

போதுமான ஏற்பாடுகளும் சர்ப்பராக்களும் இல்லாததினால் கிரைமியா யுத்தத்தில் காயம்பட்ட ஸோல்ஜர்கள் போர்முனையிலேயே மரித்துவிடும்படி நேரிட்டது. இப்பொழுதுதான் பிளாரென்ஸ நைட்டிங்கேல் ஒரு பெரிய வாலண்டரி ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். அதுதான் செஞ்சிலுவை சங்கத்துக்கு அஸ்திவாரமாக இருந்தது. ஒரு பிரிடிஷ் தாதிகள் கோஷ்டியுடன் அவள் போர்முனையில் ஒரு ஆஸ்பத்திரியை அமைத்து குழப்பத்தினின்றும் ஒழுங்கையும் இறக்கும் தருவாயிலுள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு உதவியையும் ஏற்பாடு செய்துவந்தாள்.

ஆஸ்திரியா—இதாலிய யுத்தத்தில் ஜின்டுனண்ட் என்ற வாலிபமுள்ள ஸ்விஸ் ஒருவர், இரு கக்ஷியிலும் காயம் பட்டவர்களுக்குப் பேருதவி செய்துவந்தார். அவருடைய தூண்டுதலின்பேரில் 1863-ம் வருஷத்தில் ஜெனிவாவில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. அப்பொழுதுதான் முதன்முதலாக சர்வதேச செஞ்சிலுவை கமிட்டி அமைக்கப்பட்டது. அதில் பிரசன்னமாகியிருந்த தேசங்கள் தேசிய செஞ்சிலுவைச் சங்கங்களை அதன்பின் ஏற்பாடு செய்தார்கள்.

முதலாவது உலக யுத்த முடிவில் பிரிடிஷ் செஞ்சிலுவை சங்கம் அபிவிருத்தி அடைந்தது. ஆகிலும் அது யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்கும் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உதவி செய்வதைத்தான் பிரதான லக்ஷியமாகக் கொண்டிருந்தது. 1919-ல் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. அதுதான் பிரகிருத யுத்தத்துக்குப்பின் பிரிடிஷ் செஞ்சிலுவை சங்கம் செய்யவேண்டிய வேலைக்கு அடிப்படையாக இருக்கிறது. அச்சங்கத்தின் பதிவு சாஸனத்துக்குப் புதிய ஷரத்துகள் சேர்க்கப்பட்டன. இப்பொழுது அதன் சேவையின் வியாபகம் சமாதானகாலத்திலும் யுத்த காலத்திலும் உலகம் பூராவிலும் கஷ்டத்தைக் குறைக்க நிவாரண வேலையைச் செய்வதற்கும் உபயோகமுள்ளதாக இருக்கிறது.

ஆகையால் இரண்டு உலக யுத்தங்களுக்குமிடையே பிரிடனில் திறமையுள்ள சுறுசுறுப்புள்ள செஞ்சிலுவை சங்கம் இருந்துவந்தது. தான்தோன்றியான ஒரு சங்கம் நிதியைத் திரட்டவேண்டும். வேண்டுகோள்கள் மூலமாகவும் சில வைபவங்கள் மூலமாகவும் ஐச்வர்யங்கள் திரட்டப்பட்டன. அதைக்கொண்டு செஞ்சிலுவை சங்கம் முதலாவது உலக யுத்தத்தில் முடமாக்கப்பட்டவர்களுக்காக ஆஸ்பத்திரிகளை அமைத்தது. ரிச்மாண்டிலுள்ள ஸ்டார், கார்டர் ஆஸ்பத்திரி இதற்கு இணையற்ற சின்னமாகும்.

கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறும் இடங்களில் பயிற்சிபெற்றவர்கள் முஸ்தீபுகளுடன் முதல் உதவி செய்ய தயாராக இருக்கிறார்கள். நெருக்கடியின்பொழுது தேசத்துக்காகப்பாடுபடத் தானாகவே முன்வந்த லக்ஷக்கணக்கானவர்களுக்கு முதல் உதவியிலும் தாதி வேலையிலும் போதனையளிக்கப்பட்டு யோக்கியதா பத்திரங்களும் வழங்கப்பட்டன. 1939-ம் வருஷம் யுத்தம் மூண்டபொழுது சங்கத்தின் வாலண்டரி உதவிப்படைகள் தயாரிக்கப்பட்டு 48-மணிகளுக்குள் எந்த இடத்துக்கும் அனுப்பத் தயாராக இருந்தன.

முதல் உலக யுத்தத்தில் இருந்ததுபோல, பிரிடிஷ் செஞ்சிலுவை சங்கமும் ஸெயின்ட் ஜான் ஆர்டரும் ஒன்றுபட்ட யுத்த ஸ்தாபனமாக சேர்ந்துகொண்டன. ராணுவ வைத்திய சேவைக்கு உதவி செய்வது, எதிரியின் நடவடிக்கையினால் கஷ்டப்படும் பொது ஜனங்களுக்கு கஷ்ட நிவாரண உதவி செய்வதும்தான் யுத்த ஸ்தாபனத்தின் முக்கிய வேலைகள். இந்த வேலை நிர்வாகத்தின் சேவைகளுடன் நெருங்கி ஒத்துழைப்பதினால் சிக்கனமுறையில் உத்தம பக்ஷமான விளைவுகள் கிடைத்துவருகின்றது.

ஆடவர்களும் ஸ்திரிகளும் கொண்ட வாலண்டரி உதவிப்படைகள் பிரிடனிலும் போர்முனைகளிலுமுள்ள வைத்திய சேவைப்படைகளுடனும் சேர்ந்து பல்வேறு அலுவல்களைச் செய்துவருகின்றன. டோலி சுமக்கிறவர்கள், மோட்டார் ஓட்டுகிறவர்கள், தாதிகள், ஆஸ்பத்திரி புத்தகசாலை, ஆசிரியர்கள், வைத்தியர்கள், மற்ற யோக்யதை உள்ள வேலைக்காரர்களும் அந்த சங்கத்தில் இருந்துவருகிறார்கள். அதன் நிதியிலிருந்து யுத்த ஸ்தாபனம் தேசிய சேவைப்படைகள் வைத்திருப்பதற்கு உதவியாகவும் யுத்தத்தினால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடு செய்யவும் விஞ்ஞான சாஸ்திரமுறையில் நூதனமான முஸ்தீப்புகளை வழங்கவும் ஏற்பாடு செய்துவருகிறது.



யுத்தக் கைதிகளுக்கு உதவிசெய்வது மிகவும் சிக்கலான நிர்வாக வேலை. இது விஷயத்தில் பிரிடிஷ் செஞ்சிலுவை சங்கம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் ஒத்துழைத்துவருகிறது. நேசதேச யுத்தக் கைதிகள் ஜெர்மனியின் யுத்த முகாம்களில் கொடுக்கப்படும் உணவுப்பொருள்களைக்கொண்டு ஜீவித்திருக்கமுடியாது. விஞ்ஞான சாஸ்திர முறையில் சமத்வமுள்ள உணவுப்பொருள்கள் கொண்ட உணவுப் பார்ஸல்கள் யுத்தக் கைதிகளுக்கெல்லாம் நிகுதியாக அனுப்பப்பட்டன. சென்ற வருஷம் முடிய 20 மிலியன் பார்ஸல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

குடும்பத்திலிருந்தும், கல்வியிலிருந்தும் துணிக்கப்பட்டு எதிரி நாடுகளில் அடைபட்டு இருக்கும் வாலிபர்களின் துயரத்தை நீக்க உணவுப்பொருள்மட்டும் போதாது. அவர்கள் திரும்பி வரும்பொழுது அவர்களுக்கு வேலை வசதிகள் ஏற்படுத்தவேண்டும். அவர்கள் மற்ற ஜனங்களுடன் சுகமாக வாழ ஏற்பாடு செய்யவேண்டும். ஆகையால் யுத்த ஸ்தாபனம் அவர்களுக்கு புத்தகங்களை அனுப்பிவருகிறது. அநேகர்கள் தபால் மூலம் அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு மறுமொழி எழுதி பரிக்ஷையில் தேறிவிட்டார்கள். சங்கீத ஆயுதங்கள், விளையாட்டு சாமான்கள், பலவிதமான கருவிகளும், அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் கூடுமானவரையில் அவர்களின் சாதாரண அலுவல்களையும் கவனிக்கும்படி வசதி அளிக்கப்படுகிறது. காணாமற்போனவர்களைத் தேடுவது மற்றொரு வேலை. அது விஷயத்தில் காணாமற்போனவர்களின் குடும்பத்தாருக்கும் உலகம் பூராவும் தேடிவரும் ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துக்கும் யுத்த ஸ்தாபனம் தொடர்பு ஏற்படுத்தி வருகிறது.

புதிய தேசிய தேக ஆரோக்கிய சேவை திட்டத்துடன் ஒத்துழைப்பதற்காக, சுகாதார இலாகாவின் ஆதரவுடன் யுத்தத்துக்குப் பிந்திய திட்டத்தையும் செஞ்சிலுவை சங்கம் நிறுவி வருகிறது. கல்வி, தொழிலாளர் இலாகாவுடனும், அதுபோன்ற மற்ற சங்கங்களுடனும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், யுத்தத்துக்குப்பின் பிரிடனில் தோன்றக்கூடிய உலக சீர்திருத்த, புனருத்தாரண வேலையில் இரண்டு சங்கங்கள் வேலை செய்து பிரயத்தனம் வீணாகிவிடாமல் பார்த்துக்கொள்ளுவது அவசியமாகும்.

ஆகிலும் முன்பு இருந்ததைவிட இப்பொழுது சங்கம் வேலைசெய்ய அதிகமான சந்தர்ப்பம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறிது காலம்வரையில் தாதி விடுதிகளும் புனருத்தாரண நிலையங்களும் தனிப்பட்ட முறையில் அமைக்கப்படவேண்டும். பயிற்சி நிலையங்களும் அவசியமாகும். ஸோல்ஜர்களை மறுபடியும் நிலைநாட்டுவதற்கு கஷ்ட நிவாரண வேலையில் தேர்ச்சி பெற்றவர்கள் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் யுத்தத்துக்கு முன் சங்கம் செய்துவந்த ஒவ்வொரு கஷ்ட நிவாரண வேலையும் இனிமேல் மகத்தான முறையில் கையாளப்படவேண்டும்.

மேலும் மாறுதல் அடைந்திருக்கும் நிலைமைக்குத்தக்கவாறு தோன்றக்கூடிய புதிய ரகத் துயரங்களைத் தீர்ப்பதற்கு புதிய பரிகாரங்களும் தேடப்படுகின்றன. இது விஷயத்திலும் செஞ்சிலுவைதான் முகான்மையான பங்கு எடுத்துக்கொள்ளும்.

---

## ஜெர்மனியின் கள்ள நாணய உற்பத்தி தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டது.

### *19-வது பிளாக்கின் மர்மம்.*

**(டெயிலி எக்ஸ்பிரஸ்).**

ஜெர்மனியின் பெரிய கள்ள நாணய உற்பத்தி தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டது. அது வடக்கு ஜெர்மனியில் ஸாஷ்ஸென்ஹாஸன் காவல் முகாமிலுள்ள 19-வது பிளாக்கில் இருந்தது.

அங்கு வேலை செய்த 50 அடிமைகள் 19-வது பிளாக்கின் மர்மத்தை வெளியிட்டார்கள். மிலியன்கள் கணக்கான கள்ள பவுன்களும், டாலர்களும், பிராங்குகளும் அச்சிடப்பட்டன. அவைகளின் போலித்தனத்தை ரசாயனப் பரிக்ஷைபேரில்தான் கண்டுபிடிக்கமுடியும். ஒற்றர்களுக்கு அனுமதிச்சீட்டும், பங்கீடுச்சீட்டும் அடையாளச்சீட்டும், லக்ஷக்கணக்கான பிரிடிஷ் போஸ்டேஜ் லேபிள்களும் அச்சிடப்பட்டன. மிலியன்கள் கணக்கான பிராங்குகளும் அச்சிடப்பட்டு ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

வடக்கு ஆபிரிக்க பிராங்குக்காக 5,00,000 பவுன்கள் தேவையென்று அவசரமாக ஒரு தேவை ஏற்பட்டது. ஹிம்லரின் சார்பில் தொழிற்சாலையை நடத்திவந்த ஸ்டர் மாடான் பூரர்குருகர் இது டார்லானைக் கொலை செய்தவருக்குக் கொடுக்க தேவையென்று சொன்னார்.

அங்கு 18-மாதங்கள் வேலை செய்த ஒரு டேனிஷ் வியாபாரி பின்வருமாறு சொன்னான்:— யுத்த முடிவில் எங்களிடம் 50-மிலியன் பவுன்களுக்கு அதிகம் இருந்தது. அவைகளை நீக்கிறையாக்கி அதன் உருவேயில்லாமல் அழித்ததுதான் எங்களுடைய கடைசி வேலை. நாங்கள் 45-மிலியன் பவுன்களைக் கொளுத்திவிட்டோம்.

## என்னுடைய நாட்டு ஜனங்கள் அனுபவிக்கட்டும்.

எமில் லட்விக்.

நாட்டைவிட்டு வெளியேறும் ஒருவன் தன்னுடைய பழைய நாட்டின் பேரில் குற்றம் சாட்டுவதற்கு அவனிடம் காணப்படும் பழிவாங்கும் தன்மைதான் காரணமென்று உலகம் நினைக்கக்கூடும். நான் இங்கு பொதுஜன மத்தியில் ஒப்புக்கொள்ளுவது பழிவாங்கும் மனோபாவமில்லை. தனிப்பட்ட முறையில் என்னை நாஸிகள் துன்புறுத்தவில்லை அல்லது அவதூறுகப்பேசவில்லை. அவர்கள் என்னைத் தாக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பே நான் ஸ்விட்ஸர்லாந்து வாசியாகிவிட்டேன். அவர்கள் என்னுடைய புத்தகங்களை பொதுஜன மத்தியில் கொளுத்தினார்கள் என்பது எனக்கு கௌரவம்தான்.

என்னுடைய வாழ்க்கை ஜெர்மன் கலைகளுக்கும், கல்விக்கும் மத்தியில் நடைபெற்றதினால் நான் அவற்றை மறந்துவிடமுடியாது. எந்த நாட்டிலும் கேதே, பீதொவன் போன்றவர்கள் இருக்கமுடியாது. என்னுடைய சொந்த ஊர் பேரில் வெடி குண்டுகள் வீசப்பட்டதென்றாலும், என்னுடைய மூதாதையர்கள் ஜெர்மானியர்களாக வேலை செய்த ஸைலீஷியா போலந்து வசமாகி விட்டதென்றாலும், எனக்கு லக்ஷியமில்லை. அதற்குப் பழிவாங்குவதைவிட மற்ற பலமான காரணந்தானிருக்கவேண்டும்.

1918-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் என்னுடைய ஸ்நேகிதர்கள் வேமர் சிர் வாகத்தை ஸ்தாபித்தபொழுது ஜெனரல்களின் தோல்வியிலிருந்து மற்றொரு ஜெர்மனி தோன்றுமென்று நாம் நம்பினோம். 1919-ம் வருஷ ஆரம்பத்திலேயே பழிவாங்குதல், மறு படியும் ஆயுதங்களைப் பெறுவது என்ற பதங்கள் தாராளக் கக்ஷிகளிடையேயும் ஜனசமூகக் கக்ஷியிடையேயும் காணப்பட்டன. இவ்விதமான பொதுஜன அபிப்பிராயத்திற்கு ஜெர்மானி யர்களின் போர் மனப்பான்மை காரணமல்ல. தேசம் பூராவும் இரண்டு பொய்களை நம்பி விட்டது. முதலாவது, அவர்கள் போரில் முறியடிக்கப்படவில்லை. உள் நாட்டிலுள்ள யகூதிகளும், பொதுவுடைமைக் கக்ஷிக்காரர்களும் முதுகில் குத்திவிட்டார்கள். இரண்டாவதாக, வில்ஸன் 14 ஷரத்துகளை வெளியிட்டு அவர்களை ஏமாற்றிவிட்டான். இவ்விதமாக யுத்தத்தில் வெற்றி பெற்றோம் என்றும் வெர்ஸெல்ஸ் ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்ளும்படி ஏமாற்றப் பட்டோம் என்றும் தேசம் நம்பிற்று.

ஜனநாயகத்தில் ஜெர்மனி செய்த முதல் பிரயத்தனமான வேமார் குடியரசு பிரயோஜனப் படவில்லை. ஆகையால் நேசதேசத்தார்கள் ஜெர்மனிக்கு மற்றொரு முறை சுய ஆக்ஷியைத் தரக்கூடாது என்று நான் எச்சரிக்கை செய்கிறேன். எல்லா ஜாதிகளையும் கக்ஷிகளையும் தழுவியதும், சமாதானத்துக்கு பதிலாக பழிவாங்கும் முறையையும் ஸ்வதந்திரத்துக்கு பதிலாக கீழ்ப்படிவதையும் விரும்பிய ஜனங்கள் நாஸிகளின் 12 வருஷ ஆக்ஷியில் ஜன நாயகத்தை ஏற்றுக்கொண்டிருக்குமென்று ஒருவரும் நம்பமுடியாது. சரித்திரத்திலேயே முதல் முதலாக, ஜெர்மனியில் கெட்ட தலைவர்கள் இருந்தார்களென்றும் அவர்கள் பிரயோஜன மற்ற கருத்துகளைப் பின்பற்றினார்களென்றும், அவமானமடைந்துவிட்டோமென்றும், ஆத்ம விசாரணை செய்தபின் பச்சாத்தாபம் கொள்ளவேண்டுமென்றும், ஜெர்மானியர்கள் அறிந்தால் தான் அவர்கள் உண்மையாக மனப்பான்மையை மாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பார்கள்.

அதற்காகத்தான் நான் ராணுவத் தோல்வியை வரவேற்கிறேன். இது வரையில் இவ்விதமான வீழ்ச்சி ஏற்பட்டதில்லை. இதுதான் ஜெர்மன் தேசத்தார்களுக்கு புத்தியைப் புகட்டும். இப்பொழுது ஜெர்மனியில் காணப்படும் நாசம் அவர்களுக்கு புத்திபுகட்டப் போதாது. அவர்கள் 1918-ம் ஏற்பட்டிய பல்லவியைப்பாட ஆரம்பிப்பார்கள். காட்டிக் கொடுத்ததினாலும் மாத்சர்யத்தினாலும் இது ஏற்பட்டதென்ற புராணம் ஆரம்பிக்கப்படலாம்.



தேசங்களுக்குள் ஜெர்மானியர்கள் பறையர்களாக பாவிக்கப்படுகிறார்கள் என்ற போதம் அவர்களுக்கு ஏற்பட்டால்தான் ஜெர்மன் தேசம் பூராவும் செய்த அவர்கள் குற்றங்களை அறிவார்கள்.

வருங்காலத்தில் ஜெர்மனி பூராவும் அயல்நாட்டு ஆபீஸர்கள் நிரம்பியிருந்தாலும், போலீஸாரும், ஸெக்யூரிட்டி நடை பாதைகளில் நின்றுகொண்டு ஜெர்மன் மக்களை அதிகாரம் செய்தாலும்தான் ஜெர்மானியர்களுக்கு அவமானம் ஏற்படும். மேலும் ஆக்கிரமிப்பு சேனையில் ஒரு சில கிரேக்க, டச்சு, யூகோஸ்லாவிய பட்டாளங்கள் இருந்தால்தான் சிறிய தேசங்களும் ஜெர்மனியின் மேன்பார்வையில் சேர்ந்திருக்கின்றனவென்று ஜெர்மனிக்கு புத்திவரும். ஒவ்வொரு சிறிய தேசமும் ஆயிரக்கணக்கானவர்களை ஜெர்மனிக்கு அனுப்பினால் தான் ஜெர்மனி அவமதித்து துன்புறுத்திய நாடுகளும் போர் புரிந்து வெற்றிபெறக்கூடுமென்று ஜெர்மனி அறியக்கூடும்.

மிலியன்கள் கணக்கான ஜெர்மானியர்களை ருஷ்யாவுக்குக் கட்டாய சேவைக்கு அனுப்பினால்தான் ஜெர்மானியர்களைத் திருத்தி அமைப்பதற்கும் ஜெர்மன் மனப்பான்மையை மாற்றுவதற்கும் தகுந்த தருணம் ஏற்படும். நேசதேசத்தார்கள் எஜமானர்களாக இருந்து ஜெர்மானியர்களை கண்டிப்பாகவும் ஞாயமான முறையிலும் நடத்தினால்தான் விரும்பத்தக்க மாறுதல் ஏற்படக்கூடும். அப்பொழுதுதான் சவக்குழியின் அமைதி அங்கு காணப்படும். கைவிடப்பட்டு, அவமதிக்கப்பட்ட ஜனங்களைப்போல் ஜெர்மானியர்கள் நகரங்களில் வசிப் பார்கள். இதற்கு முன் பரபரப்பும் நம்பிக்கையும் இருந்த நகரங்களில் நிம்மதி காணப்படும். ஜீவகாட்டுப்பாடுகளும் ஜெர்மன் மனப்பான்மையை பாதிக்கக்கூடும். ஐந்து வருஷங் களாக பிரிட்டன் ஏற்றுக்கொண்ட வாழ்க்கை முறை ஜெர்மனியில் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டால் அவர்கள் வறுமைக்குள்ளாகாமல் அடிபணிய ஆரம்பிப்பார்கள். தங்களுடைய தகப்பனார்கள் ருஷ்யாவில் ஏன் கட்டாய வேலைக்கு அனுப்பப்படுகிறார்களென்று மிலியன்கள் கணக்கான குழந்தைகள் அறிந்துகொள்ளுவார்கள். அவர்களின் தொழிற்சாலைகள் வேலை செய்யாது, அவர்களின் யந்திரங்கள் துருப்பிடித்துவிடும். வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைத்தான் அவர்கள் உற்பத்தி செய்வார்கள். அவர்கள் ஏழ்மையாக இருந்த காலத்தில் நடத்திய வாழ்க்கை முறைக்குத் திரும்புவார்கள். ஆனால் கல்வி அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

70 மிலியன் ஜனங்கள் ஆமோதித்தாலும் அல்லது மௌனமாக இருந்தாலும்தான் இப்பொழுது உலகம் காணும் அக்கிரமங்கள் நடைபெறும். ஆகையினால்தான் என்னுடைய நாட்டிற்கு ஏற்பட்ட கஷ்டம் தேச சுத்தி என்றும் கிரேக்க துக்க நாடகத்தின் முடிவென்றும் நான் நினைக்கிறேன்.

## ருஷ்யா துருக்கி சம்பந்தங்கள்.

(டைம்ஸ் ஆப் இந்தியா).

டார்டனெல்லின் எதிர் காலத்தைப் பற்றியும் வடகிழக்கு துருக்கியிலுள்ள கார்ஸ் மாகாணத் தின் எதிர் காலத்தைப் பற்றியும் ருஷ்யாவுக்கும் துருக்கிக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டுள்ள னவென்று அங்காராவிலிருந்து தகவல்கள் கிடைத்து வருவதிலிருந்து இந்த பிரச்னை ஸார் காலம் முதல் இருந்து வருகிறதென்று விளங்கும். ஜலசந்தியிலுள்ள பாஸ்பரஸ், டார்டனெ லிஸ் முதலிய இடங்களில் ஆதிக்கம் பெற ருஷ்யா ஆசைகொண்டிருக்கிறது. இந்த இடங்களும் அவைகளுக்கு இடையிலுள்ள மார்மோராக் கடலும் கருங்கடலையும் மத்திய தரை கடலையும் ஒன்றுபடுத்துகின்றன. 1936-ம் வருஷத்தில் ஒன்பது பெரிய வல்லரசுகள்— அதில் பிரிட்டன், ருஷ்யா, பிரான்ஸ், ருமேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ், பல்கேரியா, ஜப்பான், துருக்கி—மான்ட்ரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஜலசந்தியை துருக்கியின் மேன்பார்வை யில் வைப்பதென்று ஒப்புக்கொண்டன. ருஷ்யாவின் சர்வதேச கீர்த்தி பிரபலமாக இல்லாமலிருந்தபொழுது மான்ட்ரு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட ருஷ்யா தடங்கலாக உள்ள ஷரத்துக்களை ரத்து செய்யவேண்டுமென்று விரும்புகிறது. தெற்கு ருஷ்யாவுக்குப் போகும் மார்க்கத்தில் ஜலசந்தி கேந்திரஸ்தானம் பெற்றிருப்பதுதான் இந்த வேண்டு கோளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ருஷ்யாவுக்கு மத்தியதரைக் கடலுக்குச் செல்லும் ஒரே ஒரு மார்க்கத்தின் மேன்பார்வையில் அதற்கும் ஒரு பங்கு கொடுக்காமல் மறுப்பது நியாயமற்றதாகும். மேலும் ஜலசந்தியின் ஆக்கத்தில் ஒரு பங்கு வேண்டு மென்று ருஷ்யா சொல்லுவதினால் துருக்கியின் அரசாக்ஷிக்கு யாதொரு டங்கமும் ஏற்படாது. எந்நிலையிலும் சென்ற பத்து வருஷ சம்பவங்களை கவனிக்கும்பொழுது, துருக்கியின் எதிர் கால பத்திரத்தை உத்தேசித்து அது ருஷ்யாவுடன் நட்புக் கொள்ளவேண்டுமென்பதற்குத் தகுந்த ஆதாரமிருந்து வருகிறது.

கார்ஸ் மாகாணத்தின் பிரச்னை முன் இரண்டு நூற்றாண்டுகளிலிருந்து ஆரம்பித்ததாகும். 1870-ம் வருஷ முடிவில் ருஷ்யாவைச் சேர்ந்த ஸார் 1856-ம் வருஷத்தில் பாரிஸ் ஒப்பந்தத்துக்கும் கட்டுப்பட்டவரல்லவென்று சொல்லிவிட்டார். கருங்கடலில் யுத்தக்கப்பல்களை வைத்திருக்கும் உரிமையை அந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தியது. அதன்பின் பாரிஸ் ஒப்பந்தத்தில் வாக்குறுதி செய்தபிரகாரம் கிருஸ்தவ ஜாதியாருக்குத் துருக்கி சுதந்திரம் அளிக்கவில்லை என்று துருக்கி பேரில் ருஷ்யா குற்றம் சாட்டி போர் தொடுத்தது. ருஷ்ய சேனைகள் துருக்கி எல்லையைக் கடந்து கார்ஸ் மாகாணத்தைப் பிடித்துவிட்டன. ருஷ்யாவின் நடவடிக்கையைக் கண்டு பீதியடைந்த பிரிடன் ஸைப்ரஸ் தீவைப் பிடித்துக்கொண்டது. ருஷ்யா கைப்பற்றியுள்ள கார்ஸையும் மற்ற மாகாணங்களையும் அது திருப்பித் தந்துவிடும் பொழுது ஸைப்ரஸைத் திருப்பித் தந்துவிடுவதாகவும் பிரிடன் ஒப்புக்கொண்டது. அதன்பின் பெர்லின் பாக்டாட் ரெயில்பாதையை அமைப்பது என்ற கெய்ஸரின் திட்டத்தில் மதிமயங்கிய ஜெர்மனி துருக்கிய விஷயங்களில் குறுக்கிட்டது. வாலிபருள்ள துருக்கியர்களின் செல்வாக்கின் பிரகாரம் சென்ற யுத்தத்தில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டது. யுத்த நிறுத்தத்திற்குப் பின் ருஷ்யா நிர்வாகம் முஸ்தாபா கமாலின் துருக்கிய நிர்வாகத்துடன் கட்டுக்கொண்டு 1914-ம் வருஷத்தில் துருக்கிக்கு சொந்தமாகயிருந்த ஆர்மீனிய நாடுகளையும் கார்ஸ மாகாணத்தையும் திருப்பித்தந்தது. ருஷ்யாதான் அடாடர்க்கின் புதிய நிர்வாகத்தை முதன்முதலில் அங்கீகாரம் செய்தது. முதலில் ராணுவ ஒப்பந்தமும் பிற்பாடு அநாக்ரமண ஒப்பந்தமும் ஏற்பட்டது. 1941-ம் வருஷ ஆரம்பத்தில் அது மறுபடியும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ருஷ்யா கார்ஸ மாகாணத்தைத் திரும்பவும் தனது விருப்படி கோருகிறதென்று தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த மாகாணம் தெற்கிலுள்ள ருஷ்யாவின் எண்ணெய் பிரதேசங்களின் தற்காப்புக்கு முக்கியமானதென்று மார்ஷல் ஸ்டாலின் நினைக்கிறார் போலும்.

ஜலசந்தி, கார்ஸ் மாகாணம் சம்பந்தமான பிரச்னைகளை சமாதான முறையில் தீர்த்துக்கட்டவேண்டும். பிராபல்ய சமத்துவம் மாறிவிட்டது. மாண்ட்ரூ ஒப்பந்தத்தில மாறுதல்கள் ஏற்படுத்துவது அவசியமாகும். ஆனால் அந்த மாறுதல்கள் துருக்கியின் மேன்மையான அக்கறைகளை பாதிக்கக்கூடாது. மேலும் சர்வதேச கேந்திர ஸ்தானமான இந்த ஜலசந்தியில் அக்கறையுள்ள எல்லா வல்லரசுகளும் ஒன்றுபட்டு இந்த மாறுதல்களைச் செய்யவேண்டும். கார்ஸ் பிரச்னையானது, இறுதி சமாதான மகாநாட்டில் மற்ற பிரதேச சரிசமப்படுத்தும் பிரச்னைகளுடனும் ஆலோசிக்கப்படவேண்டும். விவகார ஆஸ்பதமாக இருந்த டிரியஸ்டி பிரச்னை ஒத்திவைக்கப்பட்டது போல் ருஷ்யா துருக்கி எல்லைச்சரக பிரச்னையும் ஒத்திவைக்கப்படவேண்டும்.

## செரி பிக்கர்ஸ் ஆக்கிரமிப்புப் படைகளுக்குத் தலைமை வகிக்கிறது.

### பெர்லினிலுள்ளவர்கள் மௌனமாக நோக்குகிறார்கள்.

பெர்லினுக்குள் பிரிடிஷ் துருப்புகள் நுழைந்ததை கண்ணாரக் கண்ட ஒரு விருத்தாந்தத்தை நியூஸ் க்ரானிகிளின் யுத்த நிருபர் பிரசுரம் செய்திருக்கிறார்; அது பின் வருமாறு :—

பிரிடிஷ் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு மேடையின் பேரில் நின்று கொண்டு 7-வது கவசம் பூண்ட படையின் கமாண்டரான மேஜர் ஜெனரல் L. O. லின், ஜூலை 4-ம் தேதியன்று காலை ஆறு மணிக்கு பிரிடிஷ் ஆக்கிரமிப்புப் படைகள் பெர்லினுக்குள் நுழையும் பொழுது துருப்புகளின் மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஜெனரலின் தலைக்கு மேல் எல் அலாமீனிலிருந்து இதுவரையில் அந்த டிவிஷனை வகித்து வந்த ஆபிரிக்கா ராட் என்ற கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. அவருக்கு முன் 2,000 பெர்லினர்கள் நின்று மௌனமாக துருப்புகள் ஒத்திகை செய்வதைக் கண்ணுற்றார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் அவர்கள் கோபத்துடன் மௌனம் சாதித்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது அவ்விதம் நடைபெறவில்லை. அவருக்குப் பின் வெடி குண்டுகள் நொருக்கிய டிராம் வண்டி டெபோ காணப்பட்டது. அதில் பெர்லினிலுள்ள டிராம் வண்டிக்காரர்களின் பாஸிஸ்டு விரோத மனப்பான்மையை வெளிப்படுத்தும் ஒரு அடையாள விளம்பரம் காணப்பட்டது.

லிபியாவில் ஆரம்பித்த நடவடிக்கை முதற்கொண்டு ஒவ்வொரு இடத்திலும் முதன் முதலாக நுழைந்துவரும் கியாதிபெற்ற செரி பிக்கர்ஸ் என்ற பதினொன்றாவது ஹஸ்ஸார்ஸை சேர்ந்த படை அணிவகுப்புக்குத் தலைமை வகித்தது. அவர்களுக்குப்பின் கிரெனேடியர்கள் கார்ட்ஸ் படையின் முதல் பட்டாளமும், அதற்குப்பின் முதலாவது, ஐந்தாவது, க்வீன்ஸ்



படைகளும் இரண்டாவது டெவான்களும் கடைசியாக கனடிய பட்டாளமும் வந்தன. அவர்களிடம் தான் பாண்டு இருந்தது. பெர்லின் வாசிகள் ஆக்கிரமிப்பு சமயத்தில் அதை மட்டும் தான் கேட்கக்கூடும். ஆனால் பாண்டு வாசிக்கப்படவில்லை. ஏனெனில் இது ராணுவ ஒத்திகை இல்லை. இப்பொழுது தான் முதல் முதலாக பெர்லினுக்குள் பிரிடிஷ் படைகள் நுழைந்தன.

இதற்குமுன் ஜெர்மன் படைகளின் ஆடம்பரமான காக்ஷியை ஜனங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளக்கூடும். பிரிடிஷ் துருப்புகளைக் கண்டு அவர்கள் களிப்புற்றார்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இந்தக் காக்ஷிக்காக அவர்கள் மூன்று மணி நேரங்கள் காத்திருந்தார்கள். இரண்டு பிரிடிஷ் ராணுவ போலீஸ்காரர்களும், இரண்டு அல்லது மூன்று ஜெர்மன் போலீஸ்காரர்களும் பந்தோபஸ்து செய்துவந்தார்கள். அவர்களுக்குப் பின் ஒரு வரிசைக் கட்டடங்கள் வெடி குண்டுகளால் தகர்க்கப்பட்டு பாழாகியிருந்தன. அதன் உச்சிகளில் துணிவுள்ள வாலிபர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

இதற்குமுன் சௌஜன்யமுள்ள ருஷ்ய—அமெரிக்க வைபவம் நடைபெற்றது. பெர்லினிலுள்ள செம்படைத் தலைவரான ஜெனரல் பாருஸவ் அமெரிக்க வட்டாரத்தை ஜெனரல் பிராட்லியிடம் ஒப்படைத்தார். அமெரிக்க, ருஷ்யப் படைகள் அணிவகுத்து நின்றன. ருஷ்யக் கொடி தாழ்த்தப்பட்ட பொழுது ருஷ்ய தேசியகீதம் பாடப்பட்டது. அமெரிக்கக் கொடி ஏற்றப்பட்டபொழுது அமெரிக்க கீதம் பாடப்பட்டது.

இதே மாதிரி நிகழ்ச்சி பிரிடிஷ் படைகள் தங்களுடைய வட்டாரத்தில் நுழையும் பொழுதும் டியர்கார்டனில் நடைபெறும்.

## ஜப்பானியப் போரில் புதிய கட்டம்.

### உள்வட்டாரத்தின் தற்காப்பு.

லெப்டினென்ட் ஜெனரல் H. G. மார்டின்.

(டெயிலி டெலிகிராப்).

அறைகளில் உட்கார்ந்து நிறுவப்பட்ட திட்டங்களின்படி ராணுவ ஒத்திகை செய்தால் மட்டும் ஜப்பானிய யுத்தத்தை முடித்துவிடலாமென்று நாமும் அமெரிக்கர்களும் நம்பி இருக்கவில்லை.

வெற்றிபெறுமுன் இந்த யுத்தத்தை நாம் கடுமையுடன் நடத்தவேண்டும். மேலும் யுத்தத்தின் முடிவு காணக்கூடவில்லை.

ஒரு புதிய கட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. ஜப்பான் அனாவசியமான இடங்களைக் கைவிட்டுவருகிறது. உள்நாட்டுக்குச்செல்ல சுலபமான வசதியளிக்காத சீனக் கடற்கரையையும், முக்கியமற்ற சீனத் துறைமுகங்களையும், தெற்கு சைனாவிலிருந்து டாங்கிங் வரையிலுள்ள நடைபாதையையும், ஹெயினான் தீவையும், மலேயாவையும், ஜப்பான் உதறித்தள்ளிவிடும். ஆகிலும் முக்கியமான இடங்களை தற்காப்பு செய்வதற்கும் எங்கும் முக்கியமான துறைமுகங்களும், போக்குவரத்து நிலயங்களும் நமக்குக் கிட்டாதபடி தடுக்கவும் உள்வட்டாரத்தைத் தற்காப்பு செய்யவும் ஜப்பான் தீவிரமான முயற்சி செய்துவருகிறது.

வடக்கு சைனா, கொரியா, மஞ்சூரியா, மற்றதீவுகள் அடங்கிய உள்வட்டாரத்தைத் தற்காப்புசெய்ய ஜப்பான் முயற்சி செய்துவருவதால், அதன் படைகளின் கனமும் அதிகரித்துவிட்டது. எண்ணெய், கப்பல்கள், என்ற இரண்டு குறைபாடுகளும் ஓரளவு குறைந்துவிட்டன. இவைதான ஜப்பானுக்குப் பெரும் சங்கடத்தை உண்டுபண்ணி வந்தன.

ஜப்பானிய கடற்படைக்குப் பலமான உதை கிடைத்திருக்கிறது. அதன் நீர்மூழ்கிகளும் இதுவரையில் யாதொரு உபயோகமுமுள்ளதாகக் காணப்படவில்லை. ஆகிலும் ஜப்பானிய விமானப்படை இன்னும் மிகவும் அதிகமாகவும் உயர்தரமாகவும் இருந்துவருகிறது. விமான உற்பத்தி சாலைகள் மாதம் ஒன்றுக்கு 1,200, 1,500 விமானங்களைக் கட்டிமுடித்துவிடுகின்றன. அமெரிக்காமட்டும் மாதம் ஒன்றுக்கு 6,500 விமானங்களைக் கட்டிமுடித்துவிடுகிறதென்பது வாஸ்தவம். ஆனால் ஒரு விமானத்தைக் கட்டிமுடிக்க அமெரிக்கா ஜப்பானைப்போல் 64 மடங்கு செலவு செய்கிறதென்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

கடைசியாக ஜப்பானிய சேனை அழிக்கப்படவில்லை. ஜப்பானிடம் கடல்தாண்டி 30 லக்ஷமும் ஜப்பானில் 20 லக்ஷமும், கஷ்ட ஈடு செய்ய ராணுவ வயது வாய்ந்தவர்கள் 20 லக்ஷமும் இருக்கிறார்கள்.

ஜப்பானின் சாமான் கப்பல்படை 20 லக்ஷம் டன்களுக்குக் குறைந்துவிட்டது. வருஷம் ஒன்றுக்கு ஜப்பான் 10 லக்ஷம் டன்கள் உள்ள கப்பல்களைக் கட்டிவருகிறது. இது பிரமாதமானதல்லவென்றாலும் ஜப்பானின் தற்போதைய தேவைகள் குறைவாகவிருப்பதினால் போக்குவரத்துகளை மரக் கப்பல்கள் மூலமாகவும் படகுகள் மூலமாகவும் குறுகலான தீவுகள் நிறைந்த கொரியா ஜலசந்தி வழியாக மஞ்சூரியாவுக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

கடற்படைக்கு அடுத்தபடியாக, ஜப்பானுக்கு எண்ணெய் ஒரு சங்கடமான பிரச்னை. உள் வட்டாரத்தில் ஜப்பானுக்கு 21 மிலியன் பீப்பாய்கள் எண்ணெய் கிடைக்கும். சேர்க்கை எண்ணெய் ஒரு வருஷத்தில் 3 மிலியன் டன்கள் என்று சொல்லலாம். அதாவது பிரமாதமானதல்ல. ஆகிலும் உள் வட்டாரத்தில் தற்காப்புப் போரை நடத்த அதற்கு அதிக எண்ணெய் தேவைப்படாது. ஒன்று, இரண்டு வாரங்களுக்குப் போதுமான விமான எண்ணெய் ஜப்பானிடம் இருக்கிறது. ஜப்பானின் சேர்க்கை எண்ணெய் சாலைகள் கொரியாவிலும், மஞ்சூரியாவிலும், ஹொக்கேய்டோவிலும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஜப்பானில் பலமான தாக்குதல் ஏற்பட்டால்தான் ஜப்பானுக்கு எண்ணெய் நெருக்கடி ஏற்படும். மற்ற எந்த நடவடிக்கையும் இந்த பலனைத்தரமுடியாது.

ஜப்பானின் தொழிற்சாலைகள் பரவலாக அநேக இடங்களில் எதிர்பார்த்ததற்கு மாறாகவே பலமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வருஷத்திற்கு 140-லக்ஷம் டன்கள் எஃகை உற்பத்தி செய்யும் சக்தியை ஜப்பான் பெற்றிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இது ஜப்பானின் யுத்த யந்திரத்திற்குப் போதுமானது. ஜப்பானுக்குத் தேவையான இரும்புக்கட்டியும் எஃகும் மஞ்சூரியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்வட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படாத பொருள்களை ஜப்பான் ஏராளமாகக் குவித்துவைத்திருக்கிறது. ஐந்துவருடங்களுக்குத் தேவையான ரப்பரும், 8 வருஷங்களுக்குத் தேவையான தகரமும், ஒரு வருஷத்திற்குப் போதுமான பாக்ஸைட்டும் அலுமினியமும் இன்னும் மற்ற சாமான்களும் ஜப்பானில் குவிக்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக நேசதேசத்தார்கள் கொரியாவைப் பிடிக்கும் வரையில ஜப்பானுக்கு உணவுப்பஞ்சம் ஏற்படாது.

ஆகையால் இந்த மகத்தான நிலைமையை சமாளிக்க இடைவிடாத கண்காணிப்பும், திட்டமும், புத்திசாலித்தனமான முடிவுகளும் அவசியமாகும்.

---

## போர்னியோவில் ஆஸ்திரேலியர்கள்.

### தென்கிழக்கு ஆசியா கமாண்டுடன் சம்பந்தங்கள்.

லெப்டினெண்டு ஜெனரல் ஸர். டக்ளஸ்ப்ளெரன்ரிக்.

போர்னியோவிலுள்ள ஆஸ்திரேலியர்கள் ஜெனரல் மாக் ஆர்தரின் கமாண்டை விட்டு விலகி கடற் தளபதி மௌண்ட்பாட்டனின் அதிகாரத்துக்குட்படவேண்டுமென்று சிலர் யோசனை கூறிவருகிறார்கள். அவர்களின் வாதம் பினவருமாறு :—" அமெரிக்கப் படைகள் ஜப்பானைப் படையெடுக்க அதிக முயற்சி செய்து வருகின்றன. ஆஸ்திரேலியர்களும் தென்கிழக்கு ஆசியாப்படைகளும் பர்மாவிலிருந்து ஸாலமன்ஸ் தீவுகள் வரையிலுள்ள தீவுகளிலும் தீபகற்பங்களிலும் உள்ள ஜப்பானியர்களைத் துலைக்கும் பிரச்னையில் கவனம் செலுத்தி வருகின்றன.

இது வாஸ்தவம்தான். ஆகிலும் தற்பொழுது பர்மாவிலுள்ள கடற் தளபதி மௌண்ட்பாட்டனின் படைகளுக்கும் போர்னியோவிலும் மற்ற பசிபிக் தீவுகளிலுமுள்ள ஆஸ்திரேலியர்களுக்கும் நேர்முகமான மார்க்கம் ஆஸ்திரேலியா வழியாகத்தான். மலேயாவுக்கும் சுமத்ராவுக்கும் மத்தியிலுள்ள மலாக்கா ஜல சந்தியை நேசதேசக்கப்பல்கள் நடமாடுவதற்கு பத்திரப்படுத்தாவிடில் நேர்முகமான போக்குவரத்து வசதிகள் அமைக்கப்படமுடியாது. இப்பொழுது கடற் தளபதி மௌண்ட்பாட்டனிடமுள்ள தென்கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த படைகளின் போக்குவரத்து மார்க்கம் மேற்கு முகமாக இந்தியாவை நோக்கிச் செல்லுகின்றன. போர்னியோவிலுள்ள ஆஸ்திரேலியர்களுக்கு அனுப்பப்படும் சாமான்களுக்கான மார்க்கம் தெற்கு முகமாக ஆஸ்திரேலியாவுக்கும் கிழக்கு முகமாக அமெரிக்காவுக்கும் செல்லுகின்றன.

ஜப்பானைப் படையெடுக்க குவிமா ரத்த நாடியைத் துளைப்பது அவசியமென்பதுபோல அயோக்கியத்தனமாக சம்பாதித்த ஐஸ்வர்யங்களைத் தற்காப்பு செய்துவரும் ஜப்பானியப் படைகளை நிர்மூலமாக்குவதும் நேசதேசப் படைகள் வசம் மலாக்கா ஜலசந்தியின் மேன்பார்வை ஏற்பட வேண்டுவதும் அவசியமாகும்.



தூரக்கிழக்குப் போரை உண்மையான வகையில் மதித்துப் பார்க்க வேண்டுமானால் நாம் இந்த இரண்டு கடல் மார்க்கங்களின் முக்யத்வத்தையும் கவனிக்கவேண்டும். இந்த முக்யத்வத்தை ஜப்பானும் அறியக்கூடும். ஆகையால், இவ்விரண்டு இடங்களிலும் ஜப்பானின் பலமான எதிர்ப்பு காணப்படும்.

நான் அநேகம் தடவைகளில் சொல்லியிருப்பதுபோல ஜப்பான் பேரில் கடுமையாக வெடிகுண்டுகளை வீசி யுத்தத்தை முடித்துவிடலாம். இது சாத்யமில்லாவிடில், ஆங்ஹுவாவில் ஏற்பட்ட படிப்பினையை நாம் மனதில் வைத்துக்கொண்டு நேசதேசத்தாரின் தற்போதைய ஸ்தானங்களுக்கும் டோக்கியோவுக்கும் மத்தியிலுள்ள ஒவ்வொரு லக்ஷியத்தையும் பிடிப்பதற்கு அதிக பிரயத்னம் செய்யவேண்டுமென்று நாம் அறியவேண்டும். ஜெர்மனியை முறியடிக்க அவசியமானது போல சகலவிதமான முயற்சிகளும் அவசியமாகும்.

---

## இந்திய ஸோல்ஜரின் எதிர் காலம்.

### (டைம்ஸ் ஆப் இந்தியா).

அநேகமாக எல்லாத் துறைகளிலும் அநேக பிரச்னைகள் தோன்றக்கூடுமென்று இந்நாடு அறிந்து வந்தபோதிலும் படையிலிருந்து கலைக்கப்பட்ட இந்திய ஸோல்ஜரின் எதிர் காலத்திற்கு திட்டம் போடுவது அவசியம் என்று எல்லோரும் அறிந்துகொள்ளவில்லை. அநேகமாக அடுத்த வருஷம் இரண்டாவது உலக யுத்தம் முடிந்துவிடுமாகையால் இந்த பிரச்னை முக்கியத்வமுள்ளது. கவர்ன்மெண்டின் திட்டங்கள் விரிவானவையா, ஸோல்ஜர் அந்த திட்டத்தில் நம்பிக்கைப்படுகிறானா? ஸோல்ஜர்களின் க்ஷேமத்தை ஆராய்ச்சி செய்ய மத்திய கிழக்குக்கும் இத்தாலிக்கும் விஜயம் செய்யும்படி கோரிய சேனாபதியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட ஸர்ஹோமிமோடா, இந்திய ஸோல்ஜர் அவனுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றித்தான் கவலைப்படுகிறான் என்று சொன்னார். அவன் சமாதானத்தை நிலைநாட்ட திறமையுடன் போர் புரிந்திருக்கிறான். அவனை பொது வாழ்க்கையில் அமர்த்துவதற்கு ஒரு உறுதியான திட்டம் இல்லாவிடில் சமாதான காலத்தில் வேலையில்லாத்திண்டாட்டமும் ஏமாற்றமும் தான் ஏற்படும்.

நாட்டுப்புறத்தின் உத்தாரணத்துக்காகப் பாடுபடுகிறவர்களில் பிரிகேடியர் F. L. பிரேயன் ஒருவர். இன்று கலைக்கப்பட்ட ஸோல்ஜரின் க்ஷேமத்தை ஆதரிப்பவர்களில் அவர் முதன்மையானவர். கிழக்கு இந்தியா சங்கத்தில் வாசித்த "இந்திய ஸோல்ஜரும் யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தியும்" என்ற தலையங்கமுள்ள கட்டுரையில் பிரிகேடியர் பிரேயன் அநேக முக்கியமான யோசனைகளைக் கூறியுள்ளார். இந்திய ஸோல்ஜர்களின் மேன்மையான குணங்களை மதித்து, அந்தக் குணங்களை தேசத்தின் சேவைக்காக திரட்டவேண்டுமென்று நினைக்கும் எல்லோரும் அந்த யோசனைகளை நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டும். சாதாரண ஸோல்ஜரும் கிராம வாசியும் நான்கு ஸ்வதந்திரங்கள் தேவையென்று சொல்லுகிறான் என்று பிரேயன் நினைக்கிறார். முதலாவதாக, பசி, தேவை, கடன், பொதுவாக பத்திரமின்மை, முதலியது இல்லாமல் இருப்பது. இரண்டாவது, நோய், கஷ்டமில்லாமலிருப்பது. மூன்றாவது, அஞ்ஞானமும் சிரமமும் இல்லாமலிருப்பது, நான்காவது, அற்பபுத்தியுள்ள உத்தியோகஸ்தர்களிடமிருந்து கொடுமையும், துன்பமும் ஏற்படாமல் இருப்பது. நாட்டுப்புற நிலைமையை அறிந்த எவரும் விஞ்ஞான சாஸ்திர முறையில் நிறுவப்பட்ட ஜனசமூகத்துக்கு இவைதான் அடிப்படையான கொள்கைகள் என்று அறிவார். மகத்தான பொருளாதார திட்டங்கள் உருவாகு முன் இந்த நான்கு ஸ்வதந்திரங்களும் கைகூடவேண்டும். இது விஷயத்தில் இந்திய ஸோல்ஜர்கள் மிகவும் உபயோகமுள்ள பங்கெடுத்துக்கொள்ளலாம். அவர்கள் இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்திருக்கிறார்கள். அவர்கள் அநேக தேசங்களுக்குச்சென்று அநேக ஜாதியார்களுடன் கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் மனோபாவம் விசாலமடைந்திருக்கிறது. அபிமானத்தினாலும் ஐதீகத்தினாலும் குறுகிய நோக்கமுள்ள பழமையான, ருசியற்ற வாழ்க்கை அவர்களுக்குப் பிடித்தமானதல்ல. மேலும் யுத்தம் காரணமாக தனிப்பட்டவர்கள் மேன்மையான திருப்திகரமான வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று அவனுக்கு படிப்பினை ஏற்பட்டிருக்கிறது.

புதிதாக அமைக்கப்பட்ட கிராம சமுதாயத்தில் இந்திய ஸோல்ஜர்கள் கலந்து கொள்ளும்படியாக என்ன வேண்டும்? இது விஷயத்தில் பிரிகேடியர் பிரேயன் அநேக யோசனைகளைக் கூறுகிறார். பிரசாரம் நடைபெறவேண்டும். கல்வி நடைமுறையில் உபயோகமுள்ளதாயிருக்கவேண்டும். இந்தியாவிலுள்ள மிலியன் கணக்கானவர்களை சீர் திருத்தி உத்தாரணம் செய்யக்கூடிய கூட்டுறவு சங்கம் உத்தமபக்ஷத்துக்கு அபிவிருத்தி செய்யப்பட

வேண்டும். வீண் செலவையும் அளவுகடந்த செலவையும் குறைக்க கிராம சேமிப்பு திட்டம் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஸ்திரீகளின் உரிமையைப்பெறவேண்டும். கடைசியாகச் சொல்லப்பட்ட அம்சம் அத்தியாவசியமானது. ஸ்திரீகளின் ஒத்தாசை இல்லாமல் எந்த ஜனசமூக சீர்திருத்தமும் நடைபெறாது. அவர்களின் கல்வியின்மையும் அலக்ஷிய புத்தியும் மேன்மையான வாழ்க்கையான எல்லா முயற்சிகளையும் கெடுத்துவிடும். ஸோல்ஜர்களும் அவர்களின் மனைவிகளும் தேசத்தின் சேவைக்காக உறுதிக்கொண்டு ஒத்துழைக்கவேண்டும்.

கலைக்கப்பட்ட இந்திய ஸோல்ஜர்களுக்குள் சகோதரபாவம் நிலைத்திருப்பதற்காக, இந்திய சமூகம் ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்று பிரிகேடியர் பிரேயன் சொல்லுகிறார். இவ்விதம் செய்தால்தான் அவர்களிடம் காணப்படும் புதிய உணர்ச்சி அவர்கள் இந்தியாவின் கிராமங்களிலும் நகரங்களிலும் சிதறியிருக்கும்பொழுது நிலைபெற்றிருக்கும். யுத்த ஆயுதங்களைக் கையாளுவதில் நிபுண்யமடைந்த இந்திய ஸோல்ஜர் சமாதான கால யந்திரங்களையும் திறமையுடன் கையாளுவான். வருங்காலத்தில் அநேக பெரிய பொருளாதார, ஜனசமூக ஆராய்ச்சிக்கு இந்தியா ஒரு பெரிய தளமாக இருக்கும். இங்குதான் மானிட வர்க்கத்தின் ஐந்தில் ஒரு பங்கின் விதியை நிர்ணயிக்கும் சமாதான நடவடிக்கைகள் நடைபெறும். இந்த அலுவலில் இந்திய ஸோல்ஜர் ஒரு முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளக்கூடும். யுத்தத்தில் ஈடுபட்டவர்களை சமாதான காலத்துக்கு மாற்றியமைக்க இது வரையில் நிறுவப்பட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர எவ்வித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்று புரியவில்லை.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 256 (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16-7-45 | திருமெய்யம் | ... மாலை 7.00 | 19-7-45 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | ,, | கீழக்குறிச்சி | ... ,, 7.30 |
| 17-7-45 | பள்ளிவாசல் | ... ,, 7.00 | 20-7-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 | ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| 18-7-45 | புலியூர் | ... ,, 7.00 | 21-7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 | 22-7-45 | கீரனூர் | ... ,, 7.00 |
| | | | ,, | காஞ்சூர் | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 257. (4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23-7-45 | குடுமியாமலை | ... மாலை 7.00 | 26-7-45 | அரிமளம் | ... மாலை 7.00 |
| ,, | பாம்பூர் | ... ,, 7.30 | ,, | ராயவரம் | ... ,, 7.30 |
| 24-7-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | 27-7-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| 25-7-45 | மலையடிப்பட்டி | ... ,, 7.00 | 28-7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | வென்னுகோட்டை | ... ,, 7.30 | 29-7-45 | குரக்காடு | ... ,, 7.00 |
| | | | ,, | கோட்டைக்காடு | ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 17—7—45 | பேராம்பூர். | 24—7—45 | வடகாடு. |
| 18—7—45 | காரம்பக்குடி. | 25—7—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 19—7—45 | ஆலங்குடி. | 26—7—45 | குழிபிறை. |
| 20—7—45 | புதுக்கோட்டை. | 27—7—45 | புதுக்கோட்டை. |
| 21—7—45 | வெட்டன்விடுதி. | 28—7—45 | பொன்னமராவதி. |
| 22—7—45 | விராச்சிலை. | 29—7—45 | தீத்தான்விடுதி. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—18-7-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜூலை மீ 23உ திங்கட்கிழமை [ந. 257

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLVII.

## தூரக்கிழக்குப் போர்.

### மூன்று முக்கியமான லக்ஷியங்கள்.

ஸ்க்ரூடேடர். (ஸண்டே டைம்ஸ்).

ஜப்பானியப் போரின் யுத்த தந்திரத்தில் முதலாவதாக போர் பிராந்தியத்தின் பரப்பு கவனிக்கப்படவேண்டும். இது விஷயத்தில் ஜெர்மன் யுத்தம் மிகவும் சுலபமானது. தேசப் படத்தில் பலமான ஸ்தானத்தைப் பெற்றும், பார்மோசா, ஹெயினன், ஸெயிகான், சிங்கப்பூர் போன்ற கேந்திர ஸ்தானங்களினால் பலப்பட்டும் உள்ள ஜப்பானியர்கள் தூரத்தைக் கண்டு அதிகமாகக் கலங்கி நிற்கவில்லை. போர் பிராந்தியம் விசாலமாக இருப்பதினால் இங்கு ஜெர்மனியைவிட அதிகமான உயர்தர கமாண்டுகளை ஏற்பாடு செய்யவேண்டியதாயிற்று. ஜெர்மன் போரில் ருஷ்ய, மேற்கு, மத்தியதரைக் கமாண்டுகள்தான் இருந்தன, ஜப்பானியப் போரில் லூயிமௌண்ட் பேடன் பிரபு, ஜெனரல் மாக் ஆர்தர், கடற்தளபதி நிமிட்ஸ், சுங்கிங், என்ற நான்கு கமாண்டுகள் இருந்து வருகின்றன.

லூயி பிரவுவின் கமாண்டுக் குட்பட்ட படைகள் பர்மாவையும், ஜெனரல் மாக்ஆர்தரின் படைகள் நியூகினியாவையும், பிலிப்பைன்ஸையும் திரும்பிப் பிடித்தன. கடற் தளபதி நிமிட்ஸின் படைகள் வடக்கிலுள்ள தீவுக் கூட்டங்கள் வழியாக முன்னேறி ஜப்பானுக்குப் போகும் மார்க்கத்தைத் தயார் செய்து வருகின்றன. மேலும் சமீப காலத்தில் ஜப்பானின் தொழிற்சாலைகளையும் பெரிய நகரங்களையும் வெடி குண்டுகளால் தாக்கவும் அவர் ஏற்பாடு செய்து வருகிறார்.

ஜெனரல் மாக் ஆர்தரின் கமாண்டுக்கும் கடற் தளபதி நிமிட்ஸின் கமாண்டுக்கும் பூகோள அமைப்பினால் யாதொரு பிரிவினையும் கிடையாது. கடற்படை நடவடிக்கை யென்றும், ராணுவ நடவடிக்கை யென்றும் பாகுபாடு செய்யவும் முடியாது. ஏனெனில் கடற்தளபதி நிமிட்ஸிடம், அமெரிக்க மாரின் படைகளும், சாதாரண காலாட் படைகளும் இருக்கிறார்கள். அவரும் அடிக்கடி ஜெனரல் மாக் ஆர்தரிடமிருந்து உதவிப் படைகளைப் பெற்றிருக்கிறார். அதேபோல ஜெனரல் மாக் ஆர்தரும் படைகளை இறக்குவதற்காக கடற் தளபதியிடமிருந்து கப்பல்களையும் படகுகளையும் பெற்றிருக்கிறார்.

மூன்று முக்கியமான யுத்த லக்ஷியங்கள் உள. ஒன்று ஜப்பானைத் தாக்குவது, இரண்டாவது, சைனாவிலும் மஞ்சூரியாவிலுமுள்ள ஜப்பானியப் படைகளைத் தீர்த்துக்

கட்டுவது. இவைகள் தனிப்பட்ட சர்ப்பார ஆதாரங்களைப் பெற்றிருக்கின்றன.' ஜப்பான் முறியடிக்கப்பட்டபின்னும் அவைகள் போரைத் தொடர்ந்து நடத்தும். மூன்றாவதாக, ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் பிரிடிஷ், டச்சு, பிரெஞ்சு குடியரசு நாடுகளை விடுவிப்பது.

முதலாவது, கடற் தளபதி நிமிட்ஸின் ஹவாலுக்குட்பட்டாது. அமெரிக்கப் படைகள் ஜப்பானில் இறங்கும் வரையில் இது அவருடைய பொறுப்பில்தான் இருந்துவரும். இது வரையில் கடற் தளபதி ஐவோஜிமா, ஆகினுவா என்ற தரைப் போர்களையும் நடத்திய போதிலும் அவைகள் விமானப்படை கடற்படை நடவடிக்கைகளின் அம்சங்கள்தான். விமானப்படை, கடற்படை மூலம் ஜப்பானியத் தீவுகள் தாக்கப்படுகின்றன. முற்றுகை செய்யப்படுகின்றன. ஜப்பானியத் தீவுகளை படையெடுக்கும் உத்தேசம் அவைகளுக்கு இல்லை.

சைனாவிலுள்ள ஜப்பானியப் படைகளை முறியடிக்கும் லக்ஷியம் ஜெனரல் மாக்ஆர்தரின் நடவடிக்கைக்குட்பட்டது. போர்னியோவில் படையெடுத்திருக்கும், ஆஸ்திரேலிய, டச்சுப் படைகள் ஜெனரல் மாக் ஆர்தரில் கமாண்டுக்குட்பட்டவையானாலும், இந்தக் காரியத்திற்காக அவைகள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

" குடியேற்ற நாடுகளை விடுவிக்கும் அலுவல் லார்ட்மௌண்ட்பேடன் பிரபுவினிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நியமனத்தின்பொழுதே ஒரு பெரிய கமாண்டர் என்று அவர் கியாதி பெற்றிருந்தார். அவரின் கமாண்டின் கீழ் இருவகைப்பட்ட நடவடிக்கைகள் தொடருமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அவ்விதம் நடைபெறவில்லை. பர்மாவை திரும்பிப்பிடித்த நடவடிக்கை அநேகமாக பூராவாக தரை மார்க்கமாக நடைபெற்றது. இதில் எவ்வளவு குறைவாக கடல் நடவடிக்கை உபயோகிக்கப்பட்டது என்பதுதான் குறிப்பிடத்தக்க விஷயம்.

இந்தக் குறைவுக்கு படைகளை இறக்கும் படகுகளின் குறைவு ஒரு காரணமாக இருக்கலாம். ஜெர்மன் யுத்தம் முடிந்துவிட்டதினால் அந்தக் குறைவை சரிக்கட்டி விடலாம். எனினும், அடுத்தபடியாக அவர் தாக்கும் நேரமும், இடமும் ரகசியமாக இருக்கும். மலேயாவையோ, சியாமையோ, சுமத்ராவையோ அல்லது ஜாவாவையோ அவர் தாக்கலாம். இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் போர்னியோவில் ஆஸ்திரேலியர்களுக்குக் கிடைத்த வெற்றி உபயோகமுள்ளதாக இருக்கும். ஏனெனில், அதினின்றும் மாகசார் ஜலசந்தியில் விமான, கடற்படை ஆதிக்கம் கிடைத்துவிடும். மேலும் தெற்கு சைனாக்கடலிலும், ஜவாக்கடலிலும் நேசதேச சஞ்சாரமேற்பட சௌகரியமேற்படும். 1942-ம் வருஷத்தில் சிங்கப்பூரையும், ஜாவாவையும் தாக்குமுன் ஜப்பான் போர்னியோவைப் பிடித்து இந்த லாபங்களைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 14—7—45 (சனிக்கிழமை). | நேசதேசக் கப்பல்களும் வெடி விமானங்களும் ஜப்பான் பேரில் வெடிகுண்டுகளைப் பொழிந்தன. |
| 15—7—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஜப்பான் பேரில் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தன. |
| 16—7—45 (திங்கட்கிழமை). | பெல்ஜிய நெருக்கடி—லெபால்ட் மன்னர் முடிதுறக்க மறுத்தார். |
| | 1,500 வெடி விமானங்கள் டோகியோ பேரில் வெடிகுண்டுகளை வீசின. |
| | மூன்று பெரிய வல்லரசுகளின் மகாநாடு ஜெர்மனியில் பாட்ஸ்டாமில் ஆரம்பமாகிற்று. |
| 17—7—45 (செவ்வாய்க்கிழமை). | சீனப்படைகள் சைனாவில் குவாங்ஸி மாகாணத்தில் முன்னேறின. |
| 19—7—45 (வியாழக்கிழமை). | ராணுவ சம்பாஷணைக்காக மௌண்ட்பேடன் மாக்ஆர்தரை சந்தித்தார். |



### (B)-செய்திச் சுருக்கம்.

**ஆகினுவா.**—ஆகினுவாத் தீவுக்கூட்டத்திலுள்ள இதேயே, அகுனி என்ற தீவுகள் யாதொரு எதிர்ப்புமின்றியிலும் ஆக்கிரமிக்கப்பட்டன.

**பிலிப்பைன்ஸ்.**—சாரங்கானி விரிகுடாவில் படைகள் இறங்கின. கியாங்கான், பான்டோ, மெய்காயன் பிடிபட்டன.

**போர்னியோ.**—கிமானிஸுக்கு வடகிழக்கிலுள்ள பாபாரும், சாராவாக்கிலுள்ள மாருதியும் பிடிபட்டன.

**ஜப்பான்.**—பிரிடிஷ், அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் ஹான்ஷுவிலுள்ள காமெய்ஷி பேரிலும் தெற்கு ஹோக்டோவிலுள்ள மூரோரான் பேரிலும் வெடிகுண்டுகளை வீசின.

**சைனா.**—சீனப்படைகள் தென்மேற்கு சைனாவிலுள்ள லூகியாங் ஹீனையும் சைனா கடற்கரையிலுள்ள டான்ப்ராக்கையும் பிடித்தன. குவேலியனைப் படைகள் நெருங்கி வருகின்றன.

**பர்மா.**—பிரிடிஷ் கிழக்கு இந்திய கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் வி(க்)டோபாரையும், வடக்கு சுமத்ரா பிராந்தியங்களிலுள்ள ஜப்பானியக் கப்பல்களையும் விமான தளங்களையும் தாக்கின.

ஜப்பானியர்கள் ஸிட்டாங்-பெகு கால்வாயின் கோடியான லெயிதாங்கை ஆக்கிரமித்தார்கள்.

ஸிட்டாங் நதி வளைவுக்கான போர் நடைபெறுகிறது.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**12—7—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—பார்மோஸா (Formosa), ஸெலபஸ் (Celebes), கிழக்கு ஜாவா (Eastern Java).

தளவாட ஸ்தலங்கள், எண்ணெய் சேமிப்புகள்.—ஹொன்ஷு (Honshu), ஷிகொகு (Shikoku).

பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.—ஸிட்டாங் நதி (Sittang) ப்படுகை.

**13—7—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—குயுஷு (Kyushu), ஹொன்ஷு (Honshu).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—கார்னிகோபர் (Carnikobar), அந்தமான் தீவுக்கூட்டங்கள்.

பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.—ஸிட்டாங் (Sittang) நதிப்படுகை.

**14—7—45** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விவசாயப் பிரதேசங்கள், சுரங்கப் பிரதேசங்கள்.—ஹொன்ஷு (Honshu), ஹொக்கய்டு (Hokkaido).

பர்மா (Burma).

துருப்புப் பிரதேசங்கள்.—மொக்பாலின் (Mokpalin), நாங்லானிற்கருகில் (Naung lon). படகுகள்.—மோல்மீன் (Moulmein),

**15—7—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—நாகோயா (Nagoya).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**16—7—45** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

டோக்கியோ.—(Tokyo) பிரதேசம்.

விமான நிலயங்கள்.—நாகோயா ஒஸாகா (Nagoya Osaka) பிரதேசங்கள்.

பர்மா (Burma).

படகுகள்.—மோல்மீன் (Moulmein).

**17—7—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo) பிரதேசம்.

விமான நிலயங்கள்.—ஹொன்ஷு (Honshu), குயுஷு (Kyushu).

பர்மா (Burma).

துருப்புகள்.—ஸிட்டாங் நதிப்படுகை.

ரயில்வே ஸ்டேஷன்.—பர்மா (Burma), ஸியாம் (Siam) ரயில்வே:

**18—7—45.** (புதன்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

தொழிற்சாலை ஸ்தலங்கள்.—ஷாங்கை (Shanghai).

இலக்குகள்.—மிடோ (Mito), டுஸ்சியூரா (Tuschiura).

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo) பிரதேசம்.

**பர்மா (Burma).**

ஜப்பானியத் துருப்புகள்.—ஸிட்டாங் (Sittang) நதிப்படுகை.

சைனியங்கள்.—டவுன்கூவின் (Toungoo). கிழக்கிலும், மேற்கிலும்.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**13—7—45.** (வெள்ளிக்கிழமை) முதல் **19—7—45.** (வியாழக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நடவடிக்கைப்பற்றி ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரிவிமான நடவடிக்கைகள் இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**படையெடுப்புக்கு முன் தாக்குதல்கள்.** ஜப்பானை நொருக்கும் நடவடிக்கை கப்பல்கள் மூலமாகவும் விமானப்படை மூலமாகவும் ஆரம்பமாகிவிட்டது. ஜூலை 14-ம் தேதி முதல் நான்கு நாட்கள் வரையில் கப்பல்கள் பீரங்கி பிரயோகம் செய்தன. டோக்கியோவுக்கு வட கிழக்கில் 275 மைல்களிலுள்ள ஹான்ஷூ த்தீவின் கிழக்குக் கடற்கரையிலுள்ள காமெயிஷித் துறைமுகம் முதல் முதலில் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் பிரிடிஷ் யுத்தக் கப்பலான கிங் ஜார்ஜ் V-ம், பிரிடிஷ் விமானந் தாங்கியான பார்மிடபிளும், அமெரிக்க யுத்தக் கப்பல்களான அயோவா, மிஸௌரி, வைஸியான்ஸியும் பங்கெடுத்துக்கொண்டன. கடற்கரைக்கு 10 மைல்கள் தூரத்தில் நின்று கொண்டு அவைகள் மணிக்கு 1,500 குண்டுகளைப் போட்டன. டோக்கியோவில் பீரங்கி சப்தம் கேட்டது. காமெயிஷி தீப்பற்றி எறிகிறது. அது இரும்பு உற்பத்தி நிலையம்.

அதற்குப்பின் முரோரானும் ஹோக்கேடோவும் தாக்கப்பட்டன. முரோரான் பெரிய எஃகு நிலையம்.

அதன்பின் 18-வது பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படை டோகியோவுக்குத் தெற்கில் 38 மைல்களிலுள்ள யோகோசூகா என்ற பெரிய கடற்தளத்தையும் டோகியோவிலிருந்து 55 மைல்களிலுள்ள நோஜிமாவையும் தாக்கின. இவ்விரண்டு இடங்களிலும் ஒளிந்து கொண்டிருந்த ஜப்பானியக் கப்பல்கள் தாக்கப்பட்டன.

வி வி வி வி வி

**பூகோள அமைப்பினால்** ஜப்பான் ஒரு சிறந்த கடற்படை, விமானப்படை இலக்கு. அதில் பலமான தற்காப்புகள் இல்லை. எந்த பாகமும் கடலிலிருந்து 70 மைல்கள் தாண்டியிருக்கவில்லை. அதன் முக்கியமான நகரங்கள் கடற்கரையிலும் அதற்கு சமீபத்திலும் கடற்படை பீரங்கிகளின் வட்டாரத்துக்குட்பட்டிருக்கின்றன. கப்பல்களிலிருந்து புறப்படும் விமானங்கள் எந்தப் பிரதேசத்தையும் தாக்கக்கூடும்.

பிரகிருத தாக்குதல்கள் படையெடுப்புக்கு முற்போக்கான நடவடிக்கை. ஜப்பானியப் போரில் இது மூன்றுவது கட்டமாகும். முதலாவது, ஜப்பானை முற்றுகை செய்ய வளையம் போடப்பட்டது. இரண்டாவது, ஜப்பானியத் தொழிற்சாலைகள் நொருக்கப்பட்டன. ஜப்பானுக்கு கடல் தான் ஜீவநாடி என்று சொல்லப்பட்டு வந்தது. இப்பொழுது ஜப்பான் ஆதிக்கத்திலில்லை. ஜப்பானியக் கடற்படை ஒளிந்துகொண்டிருக்கிறது.



**அமெரிக்க ஸ்ட்ராடஜிக் விமானப் படை.** இது பசிபிக்கில் பலமான விமான நடவடிக்கையைத் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் விமானப்படை உதவியுடன் 3,000 விமானங்கள் தினசரி தாக்கிவரும். அதன் பலத்தை அதிகரிக்க இந்தியாவிலிருந்தும் சைனாவிலிருந்தும் சூபர் பறக்கும் கோட்டைகள் அனுப்பப்படுகின்றன. இந்தப் படையின் தலைவரான ஜெனரல் கார்ல்ஸ்பாட்ஸ் ஸ்ட்ராடஜிக் விமான நடவடிக்கையில் நம்பிக்கையுள்ளவர். ஐரோப்பாவில் அமெரிக்க ஸ்ட்ராடஜிக் விமானப்படைத் தலைவர் என்ற முறையில் அவர் ஜெர்மன் யுத்த யந்திரத்தை அழித்திருக்கிறார். அதற்குமுன் அவர் பாண்டலேரியாவைத் தாக்குவதில் தலைமை வகித்தார். பசிபிக்கில் ஏராளமான விமானங்கள் குவிக்கப்பட்டிருப்பதினால் ஐரோப்பாவைவிட ஜப்பான் பேரில் அவர் ஏராளமான வெடிகுண்டுகளை வீசக்கூடும். ஆகினாவாவில் 25 மைல்கள் நீளமுள்ள ஓடும் வழிகள் இருக்கின்றன. நியூ யார்க்கிலுள்ள விமான தளத்தைவிட இங்கு இரண்டு மடங்குள்ள விமானங்கள் தங்கக்கூடும். இது தான் ஜெனரல் ஸ்பாட்ஸின் முக்கிய விமான தளமாக இருக்கும்.

ஐரோப்பியக் கோட்டையென்று பீத்திக்கொண்ட ஹிட்லரைப் போல ஜப்பானியக் கோட்டை என்று நம்பியிருந்த ஜப்பானியர்களும் இந்தக் கோட்டைக்கு மேன் கூரையில்லை என்று வெகு சீக்கிரம் கண்டுபிடிப்பார்கள்.

வி வி வி வி வி

**ஜப்பானியக் கடற்படை.** உள்நாட்டு சமுத்திரங்களிலும் ஒகாட்ஸ்க் கடலிலும் உள்ள ஜப்பானியக் கடற்படை நேசதேச விமானங்கள், நீர் மூழ்கிகள், சுரங்க வெடிகள் முதலியன மூலம் படுசேதப்படுகின்றன. கொரியா ஜலசந்தி வழியாக மஞ்சூரியாவிலிருந்து வரும் சப்ளைகளும், சீனக் கடல் வழியாக சைனாவிலிருந்து வரும் சப்ளைகளும் தடைபட்டுவிட்டன. பிலிப்பைன்ஸை மாக் ஆர்தர் ஆக்கிரமித்தபின் தெற்கிலுள்ள ஸப்ளை மார்க்கத்தின் மத்திய பிரதேசமும் ஊடுருவிச் செல்லப்பட்டுவிட்டது,

வி வி வி வி வி

**தற்கொலைப் படைகள்.** ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் தென்கிழக்கு ஆசியா பிராந்தியத்தில் நேசதேசப் படையெடுப்பைத் தடுக்க 1,50,000 தற்கொலைப் படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் முன்னேற்றத்தை ஒரு சிறிது தாமதப்படுத்தலாம். இறுதியில் அவர்கள் எல்லோரும் மாண்டுபோவார்கள். இந்த விஷயம் போர்னியோ, பர்மாப் போர்களில் வெளி வந்திருக்கிறது.

வி வி வி வி வி

**போர்னியோவில்** 7-வது ஆஸ்திரேலியப்படை தென்கிழக்கிலுள்ள எண்ணெய்ப் பிரதேசமான பாலிக்பாபானைப் பிடித்து பலப்படுத்திக்கொண்டு, வடகிழக்கையும் நோக்கி முன்னேறி வருகிறது. ஆண்டலிலும் படைகள் திடீரென்று இறங்கிவிட்டன.

வி வி வி வி வி

**சுமத்ராவுக்கருகில்** ஒரு பிரிடிஷ் விமானப்படை சாபாங்கைத் தாக்கிற்று. பிரிடிஷ் கடற்படையும், விமானப்படையும் கார் நிகோபர் தீவைத் தாக்கின. இந்தத் தாக்குதல் ஒரு ஜப்பானிய கப்பல்கூட நமது படைகளை எதிர்க்க முன் வரவில்லை.

வி வி வி வி வி

**நெல் பிரதேசத்துக்கான போர்.** சியாங் நதி வளைவில் நெல் பிரதேசத்துக்கான போர் நடந்து வருகிறது. பெகு யோமாவில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் 6,000 துருப்புகளை விடுவிக்கத்தான் இந்தப் போர் நடைபெறுகிறது. பர்மாவில் இந்த பிரதேசங்களை மீட்க போர் நடைபெறவில்லை. தாத்காலிகமாக ஜப்பானியர்களுக்கு சில வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. சில படைகள் சியாங் நதியைத் தாண்டி தப்பி ஓடிவிட்டன. ஆகிலும் நேசதேசப்படைகள் பிடிப்பை பலப்படுத்தி வருகின்றன. பெரிய போர் மூளும் போல் தோன்றுகிறது. ஸியாங் நதிக் கரையிலுள்ள ரஸ்தாக்கள் இல்லாத, வெள்ளப்பெருக்குள்ள நெல் வயல்கள் தான் ஜப்பானியரின் புதை குழியாக இருக்கும். தண்ணீர் நிறம்பிய அகிழ்களில் அநேக ஜப்பானிய ஸோல்ஜர்கள் மடிந்து கிடக்கிறார்களென்றும் கழுத்தைச்சுற்றி அடையாளங்களும் கை விரல்களில் குவீனைன்

மருந்துகளும் அடக்கி வைக்கப்பட்டும் அவர்கள் காணப்படுகிருர்களென்றும் ஒரு நிருபர் எழுதுகிருர்.

வி வி வி வி வி

**எதிரி பிரசாரம்.** ஜப்பானுக்கு சமீப காலத்தில் ஏற்பட்ட தோல்விக்கு சமாதானம் சொல்ல ஜப்பான் பிரசாரம் செய்து வருகிறது. ஆகினுவாவிலும் பர்மாவிலும் ஏற்பட்ட தோல்விகளுக்கு நேசதேசத்தாரின் மிகுதியான படை பலம் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகிலும் இந்த வலிமை ஜப்பானின் ஆத்மீக உணர்ச்சிக்கு இழிவானது. 'இறந்த பின்னும் ஆத்மா ரூபமாக ஜப்பானிய ஸோல்ஜர்கள் நாட்டை தற்காப்பு செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

வி வி வி வி வி

**விசேஷத் தாக்குதல் படை.** ஜப்பான் விசேஷ விமானப்படையின் நடவடிக்கையை நம்பியிருக்கிறது. நேசதேசத்தார்கள் படைகளை இறக்கும்பொழுது அவைகளை அழிக்கத்தான் இந்தப் படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இந்தப்படை ஆகினுவாவிலும், பிலிப்பைன்ஸிலும் ஈடுபட்ட போதிலும் யாதொரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. ஆகினுவாவுக்கருகில் நேசதேச கடற்படை பூராவையும் இந்தப்படை மூழ்கடித்துவிடும் என்று ஜோஸ்யம் சொன்ன காலம் போய்விட்டது.

வி வி வி வி வி

**பாட்ஸ்டாம் மகாநாடு** ஆரம்பமாகிவிட்டது. 16-ம் தேதியன்று முதல் கூட்டம் நடைபெற்றது. ஸ்டாலின் பிறகுதான் கலந்து கொண்டார். எல்லோருடைய சம்மதத்தின் பேரிலும் ஜனாதிபதி ட்ரூமன் அக்கிராசனம் வகிக்கிருர். மகாநாடு தினசரி நடைபெறும்.

டெகரான், யால்டா மகாநாடுகளின் விளைவுதான் பாட்ஸ்டாம் மகாநாடு. டெகரானில் ஐரோப்பியப் போருக்குத் திட்டம் வகுக்கப்பட்டது. யால்டாவில் வெற்றிக்கான திட்டங் கள் நிறுவப்பட்டன. பாட்ஸ்டாமில் சாச்வதமான சமாதானத்திற்குரிய யோசனைகள் சர்ச்சை செய்யப்படும்.

நீதிகளை உறைக்க பாட்ஸ்டாம் ஒரு நல்ல விஷயம்தான். பிரெடிரிக் மகான் ஸ்தாபித்த ஜெர்மனியை வர்ண வேலைக்காரரான ஹிட்லர் முட்டாள்தனமாக அழித்துவிட்டான். பாட்ஸ்டாமில் பிரெடரிக் கட்டிய அரண்மனைகளிலும், அமைத்த தோட்டங்களிலும் ஜெர் மனியை முறியடித்தவர்கள் ஜெர்மனியின் விதியை நிர்ணயிக்கக்கூடியிருக்கிருர்கள்.

பெர்லினுக்கு மிஸ்டர் சர்ச்சில் வந்ததும், அதை அவர் சுற்றிப்பார்த்ததும் வியக்கத் தக்கவை. பிரினிஸிலுள்ள ஹென்டேபியில் சில நாட்கள் ஓய்வெடுத்துக்கொண்டு வர்ண வேலை செய்துவிட்டு, அவர் பெர்லினுக்கு விமான மூலம் சென்ருர். ஆடம்பரமன்னியிலும் ஒரு சிறிய பரிவாரத்துடனும் அவர் நகரத்தை சுற்றிப்பார்த்து, கூட்டத்துடன் கலந்து கொண்டார். ரீஸ்டாகையும், சான்ஸலரியையும், ஹிட்லரின் கல்வி அறையையும் அவனுடைய பாதாள விடுதியையும் பார்வையிட்டார். கூட்டத்திலிருந்த ஒரு ஜெர்மானியர் பின்வருமாறு கேட்டார். "கொடுங்கோன்மையுள்ளவர் என்று சொன்னவர் இவர்தானு!". மற்ருெருவர் சொன்னுர். "ஆறு அங்குல நீளமுள்ள சுருட்டுப் பிடிக்கும் இவர் நல்லவர் என்று தோன்று கிருர்."

மீட்டிங் நடைபெறும் இடம் காபந்து செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் ரகசிய மாக வைக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகை நிருபர்களுக்கு எத்தனை மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கிறது, மகாநாடு பிரதிநிதிகள் எப்பொழுது உண்டி சாப்பிடுகிருர்கள் என்று தான் தெரியவருகிறது. ஆகிலும் மகாநாடு சரித்திரத்திலேயே சிறந்ததாகும். இதில்தான் தேசங்களின் விதி நிர்ணயிக்கப்படும். பாட்ஸ்டாம் முடிவுகள் உலகத்தின் வருங்காலத்தை உருவாக்கக் கூடியவை. முக்கியமாக கீழ்க்கண்ட விஷயங்கள் அங்கு சர்ச்சை செய்யப்படும். ஐரோப்பிய எல்லைச்சரக நிர்த்தாரணம், மத்திய தரைக்கடல், பாரஸீக வளைகுடாவின் மேன் பார்வை, துருக்கி, கிரீஸ், ஸ்பெயின், இதாலி, மத்திய கிழக்கு, வடக்கு ஆபிரிக்கா போன்ற நாடுகளின் எதிர்காலம். மற்ற விஷயங்களும் ஆலோசிக்கப்படும். சீனுவின் மந்திரியான டாக்டர் சூங் சில நாட்களுக்கு முன் மாஸ்கோவுக்கு வந்து ஸ்டாலினைக்கண்டு ஆறுதடவை



பேசியபின் சுங்கிங்குக்குச்சென்று ஆலோசனை செய்கிருர். ருஷ்யாவுக்கு 1,500 மிலியன் பவுன்கள் தேவை என்று சொல்லப்படுகிறது. மகாநாடு ஆகஸ்டு மாதத்திற்கும் நீடிக்கு மென்று எதிர் பார்க்கப்படுகிறது.

வி வி வி வி வி

**ஜெர்மனியின் எதிர்காலம்.** காரிய நிகழ்ச்சி ஜாபிதா நீளமாகத்தான் இருக்கக்கூடும். முக்கியமாக ஜெர்மனியின் எதிர் காலம் விவாதிக்கப் படும். அதை ஒத்திவைக்க முடியாது. வீழ்ச்சி பெற்ற ஜெர்மனி குழப்பமான நிலைமையில் இருந்து வருகிறது. நான்கு வட்டாரங்களில் நான்கு நிர்வாகங்கள் நான்கு விதமாக அமுல் நடத்துகிருர்கள். சில வாரங்களுக்குமுன் அமைக்கப்பட்ட நேசதேச மேன்பார்வை கமிஷன் இன்னும் திறம்பட வேலைசெய்யவில்லை. இப்பொழுது உணவுப்பொருள்களும் கரியும் அபூர்வ மாகி விட்டன. வரும் மாரிகாலத்தில் நிலைமை கேவலமாகிவிடும். குழப்பத்தை அதிகரிக்கும் நிலைமையில், பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்யத்துருப்புகள் பெர்லினுக்குள் நுழைந்து விட்டன. கொஞ்ச காலத்துக்குமுன் செம்படை பெர்லினின் மற்ற எல்லா வட்டாரங்களையும் ஆக்கிர மித்து விட்டதென்றும், அதனினின்றும் குழப்பம் ஏற்பட்டதென்றும் அது இப்பொழுது நிவர்த்தியாகி விட்டதென்றும் தெரியவருகிறது. இன்னும் சில இடுக்கண்களும் அபிப்ராய பேதங்களும் இருக்கின்றன. அவைகள் அகற்றப்படவேண்டும் ஐரோப்பாவில் பத்திரம் வேண்டுமானல் ஜெர்மனியின் வியவகாரம் தீர்க்கப்படவேண்டும். அதைத்தீர்க்க ஜெர்மனி யின் நிர்வாகம் நிர்த்தாரணம் செய்யப்படவேண்டும். எக்காலமும் ஜெர்மனியை நான்கு வட்டாரங்களாகப் பிரித்து பலாத்காரத்தினல் அதை ஆளுவதா அல்லது நாஸிதத்வம் போன்றல்லாத ராஜீய ஸ்தாபனங்களை ஏற்பாடு செய்து ஜனநாயக முறையில் ஜெர்மனியில் நிர்வாகத்தை அமைப்பதா, மேலும் ஜெர்மனி மறுபடியும் ஆயுதங்களை சம்பாதித்துக்கொள்ளா மல் அதன் பொருளாதார புனருத்தாரணத்தை எவ்விதம் ஏற்பாடு செய்வது, நாஸிகளைக் களைப்பது, ஜெர்மானியர்களுக்குக் கல்வி போதிப்பது, என்ற பிரச்னைகளும் இருக்கின்றன. மகாநாட்டில் எவ்வித முடிவுகள் ஏற்பட்டாலும், ஜெர்மனியின் க்ஷேமத்திற்காகவும் உலகத் தின் க்ஷேமத்திற்காகவும் நேசதேசத்தார்கள் நான்கு கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல் ஒன்றுபட்ட திட்டத்தை மேற்கொண்டால் நலமாக இருக்கும்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) பெல்ஜிய மன்னர் முடிதுறக்கமுடியாதென்று முடிவு செய்துவிட்டார். தற்பொழுது அவர் பெல்ஜியத் துக்கும் செல்லமாட்டார். பார்லிமெண்டின் சம்மதத்தின் பேரில்தான் லெபால்ட் மன்னர் தன்னுடைய ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளலாமென்று பெல்ஜிய ஸெனட் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது.

(2) பாலாங்கிஸ்டு கக்ஷிக்கு பாதகமன்னியில் மன்னர் ஆக்ஷிக்கு ஸ்பெயின் தயார் செய்து கொள்ளுமென்று ஜெனரல் பிராங்கோ சொல்லிவிட்டார். ஸ்பெயினில் அதிகாரத்தைப் பெற ஆசைப்படும் டான்ஜுவான் பிராங்கோ கையிலிருந்து மன்னர் ஆக்ஷியைப் பெறத் தயாராக இல்லையென்று சொல்லிவிட்டார்.

(3) போர் பிராந்தியங்களில் வியாதியைத் தடுக்க நேசதேசத்தார்கள் செய்த முயற்சிகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன என்று ஜூலை மாதம் 15-ம் தேதியன்று ரெங்கூனில் அட்மிரல் மௌண்ட்பேடன் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிருர். அதன் குறிப்பு பின்வருமாறு:—

"நாம் வியாதிகளைக் கண்டித்துவிட்டோம். 1943-ம் வருஷத்தில் ஒருவர் போரில் இறந்தால் 120 பேர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். 1944-ம் வருஷத்தில் இது 20-க்கு வந்தது. இவ்வருஷம் முதல் ஆறு மாதங்களில் போரில் இறந்தவர் ஒருவர் என்ருல் ஆறு பேர்கள்தான் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். நாம் வியாதியை வென்றுவிட்டோம். ஜப்பானியர்களால் இதை சாதிக்கமுடியவில்லை. அவர்கள் நூற்றுக்கணக்காக இறந்து போகிருர்கள். அவர்கள் இனிமேல் ஆயிரக்கணக்காக மாண்டுபோவார்கள்".

(4) இந்தியாவின் பொதுஜன சர்ப்பரா கண்ட்ரோலர் ஜெனரல் ஜப்பானிய யுத்த முடிவுக்குப்பின் மூன்று வருஷங்கள் வரையில் இறக்குமதி வியாபார கட்டுப்பாடு இருக்கு மென்று சொல்லிவிட்டார்.

# ஐரோப்பிய உடன்படிக்கையின் கொள்கைகள்.

## முப்பெரிய வல்லரசு மகாநாட்டின் முன் உள்ள பிரச்னைகள்.

(W. N. ஈயர்).

எப்பொழுதும்போல முப்பெரும் தலைவர்கள் கூடும் சமயம் கிட்டிவரும் பொழுது ராஜ தந்திர சுறு சுறுப்பில் அயர்வு காணப்படுகிறது. ஏனெனில் மீட்டிங்கில் எல்லா பெரிய பிரச்னைகளும் விவாதிக்கப்படும். சிறிய விஷயங்களின் முக்கியத்வம் தாத்காலிகமாக மறைந்துவிடும்.

பெர்லினின் எல்லைப்புறத்தில் கூடப்போகும் இந்தக் கூட்டம் அநேக முக்கியமான மீட்டிங்குகளுக்கு ஆரம்பமாகயிருக்கும். காரிய நிகழ்ச்சியில் எந்த விஷயங்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் முக்கியமாக ஐரோப்பிய நிலைமையை ஒழுங்குப்படுத்தும் விஷயம் அவசியமாக கவனிக்கப்படவேண்டும்.

ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் ஏற்படாது. ஏனெனில் ஜெர்மன் நிர்வாகமே மறைந்துவிட்டது. இந்த மீட்டிங்குக்குப் பின் நடைபெறப்போகும் சமாதான மகாநாடு ஜெர்மனியின் எதிர்கால எல்லைச் சரகத்தையும், நேசதேச மேன் பார்வைக்குட்பட்ட ஜெர்மனிக்கும் உலகத்தின் மற்ற பாகங்களுக்கும் எவ்வித சம்பந்தம் இருக்கவேண்டுமென்பதையும் நிர்த்தாரணம் செய்யவேண்டும்.

இதாலி, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து முதலிய நாடுகளுடன் சமாதான ஒப்பந்தங்கள் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஏனெனில் இப்பொழுது அந்நாடுகளுக்கும் நேசதேசத்தார்களுக்குமிடையே யுத்த நிறுத்தம்தான் செய்யப்பட்டிருக்கிறது. இந்த பிரச்னையையும் பிரதேச சம்பந்தமான பாத்தியங்களை நிர்ணயிப்பதன் மூலம்தான் தீர்க்கப்படவேண்டும்.

மூன்றுவதாக, நேசதேச நாடுகளுக்குள் எல்லைப்புறங்களில் மாறுதல் செய்வதோ அல்லது அது சம்பந்தமான பிரச்னைகளை ஆலோசிப்பதோ நடந்தேறவேண்டும். ருஷ்யாவுக்கு போலிஷ், ஸெக் பிரதேசங்களைக் கொடுத்துவிடுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கை சர்வதேச ஒப்பந்த மூலம் ஊர்ஜிதப்படவேண்டும். டைஷன் நடவடிக்கை ஒரு எச்சரிக்கையாகும். இதுபோன்ற அநேக சிக்கலான பிரச்னைகள் தோன்றக்கூடும்.

இவைகளும் மற்ற பிரச்னைகளும் மகாநாட்டில் ஆலோசிக்கப்படவேண்டும். கருத்துகளைத் தெளிவுபடுத்துவதும் முற்போக்காக பெரிய வல்லரசுகள் தங்களுடைய அபிப்பிராயங்களை பரிமாறிக்கொள்ளுவதும் அவசியமாகும். முக்கியமான விஷயங்களில் முன் கூடியே முக்கியமான வல்லரசுகளுக்குள் விவாதங்கள் நடைபெற்றிருந்தால் 1919-ம் வருஷத்தில் நடைபெற்ற பாரீஸ் மகாநாடு வெகு அழகாக நடைபெற்றிருக்கும்.

ஆகிலும் சமாதான மகாநாட்டிற்காக ஆயத்தம் செய்யப்பட்டாலும், விவாதிக்கப்படவேண்டிய எல்லா பிரச்னைகளும் தீர்ந்துவிடாது. புதிய போலிஷ் நிர்வாகத்தை அமைத்ததும் அதை பிரிடனும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டதும் ஒரு கடினமான பிரச்னையை அகற்றிவிட்டன. ஐரோப்பிய அமைதியைப்பற்றிய கொள்கைகளில் யால்டாவில் ஏற்பட்ட முடிவுகள் போலிஷ் பிரச்னையையும் தாண்டிச்சென்றன. அந்தக் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான வழிகளைப்பற்றியும், சாதனங்களைப்பற்றியும், சர்ச்சை ஏற்பட்டு முடிவுகள் செய்யப்படவேண்டும்.

இது மிகவும் முக்கியமான கஷ்ட சாத்தியமான கூட்டமாக இருக்கும். ஆனால் சில வாரங்களுக்குமுன் எதிர்பார்த்ததுபோல இந்தக் கூட்டம் பெரிய வல்லரசுகளுக்குள் இருக்கும் சச்சரவுகளைத் தீர்ப்பதில்தான் கவனம் செலுத்துமென்று நினைப்பதற்கில்லை. சுவபாவமாக அந்த சச்சரவுகள் மறுபடியும் தோன்றக்கூடும். சில வித்தியாசங்கள் இந்த சர்ச்சையின் பொழுதும் தோன்றும்.

இப்பொழுது முக்கியத்வமுள்ள ஒரு பிரச்னையும் இல்லை. உண்மையாக சீர்திருத்த வேலை துவக்கப்படுமுன் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் ஒன்றுமில்லை. இதுவும் நல்லது தான்.



# ஐரோப்பிய புனருத்தாரணத்துக்காக.

## பாட்ஸ்டாமில் கூடும் மகாநாடு.

விக்ஹாம் ஸ்டீட்.

பாட்ஸ்டாமில் மார்ஷல் ஸ்டாலினும், ஜனாதிபதி ட்ருமானும், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலும் கூடிப்பேசுவதின் முக்கியத்வத்தை எல்லோரும் அறிவார்கள். ருஷ்யா, அமெரிக்கா, பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையைப் பரிபாலிப்பதும் வளர்ச்சி செய்வதும், ஐரோப்பாவை நாசத்திலிருந்து புனருத்தாரணம் செய்யவும் நேசதேசங்களில் சமரசமான ஒத்துழைப்புக்கும் அத்யாவசியமாகும்.

நேசதேசங்களின் சாஸனத்தை நன்கு வரவேற்றதுடன் ருஷ்யா போலந்து பிரச்னை திருப்திகரமாகத் தீர்ந்து வருகிறதென்பதிலும் அதிக திருப்தி ஏற்பட்டிருக்கிறது. போலிஷ் விவசாயிகள் தலைவரும், லண்டனிலுள்ள போலிஷ் நிர்வாகத்தின் மாஜி பிரதம மந்திரியுமான M. மிகாலோஜ்ஸிக் வார்ஸாவில் தேசீய ஒற்றுமைக்கான புதிய நிர்வாகத்தை அமைத்ததென்பது போலந்துக்கு மறுபடியும் பூர்ணமான சுதந்திரமும் சுயேச்சையும் கிடைத்துவிடக்கூடுமென்பதற்கு சூசகமாகும்.

M. மிகாலோஜ்ஸிக் லண்டனிலிருந்த வருஷங்களில் அநேக பிரிடிஷ் பொதுஜன சேவகர்களின் மதிப்பையும் நட்பையும் சம்பாதித்தார். ருஷ்ய—போலிஷ் ஒப்பந்தம், பிரான்ஸுடனும், அகில பிரிடனுடனும், நட்பு மூலமாகவும், அமெரிக்காவுடன் போலந்து உறவாடுவதினாலும் பலப்படவேண்டுமென்று மார்ஷல் ஸ்டாலின் அபிப்பிராயப்படுகிறார் என்று அவர் சமீபத்தில் வெளியிட்டது புதிய வார்ஸா நிர்வாகமும் பூராவாகத் தெளிவுபடுத்தாத சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துவிட்டது.

ஆகையால் பாட்ஸ்டாமில் நடைபெறப்போகும் மகாநாடு சௌகரியமான சன்னிவேசத்தில் ஆரம்பிக்கக்கூடும். ஏனெனில் கிரைமியா மகாநாட்டின் முடிவுகள் கருத்திலும் காரியாம்சையிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை ருஷ்யா, பிரிடன், பிரான்ஸ், அமெரிக்காவுக்கிடையே ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு வட்டார சம்பந்தமாக ஏற்பட்ட வரையறுப்பு சம்பந்தமான ஒப்பந்தத்தினால் பலப்பட்டிருக்கிறது.

நாஸி ஜெர்மனி முறியடிக்கப்பட்டாலும், பெரிய வல்லரசுகளுக்கிடையே விரோதத்தை உண்டுபண்ண முயற்சி செய்யப்படுகிறது என்று ஜனாதிபதி ட்ருமான் எச்சரிக்கை செய்திருக்கிறார். இது சம்பவங்களினால் ஊர்ஜிதம் அடைகிறது. தேருதல் நடவடிக்கை முடிந்துவிட்டதால் அகில பிரிடன் இவ்விஷயத்தில் இனிமேல் அதிக கவனம் செலுத்தக்கூடும். நாஸி தத்வத்தின் கருத்துகள் ஜெர்மனியிலுள்ள ஜெர்மானியர்களிடமாவது அல்லது ஜெர்மன் யுத்தக் கைதிகளிடமாவது அற்றுப்போகவில்லை.

நாஸி இல்லையென்று சொன்னதற்காக ஒரு ஜெர்மன் யுத்தக் கைதியை ஸ்காட்லாந்து முகாமிலிருந்த நாஸி கைதிகள் அடித்துத் தூக்கிலிட்டார்கள் என்னும் செய்தி பிரிடிஷாரின் உணர்ச்சிகளுக்கு அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. ஜெர்மன் சாக்ஷிகளின் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஏனெனில் ஜெர்மனியிலுள்ள அவர்களின் குடும்பங்களையும் நாஸிகள் வஞ்சத்துடன் அழித்துவிடுவார்கள். ஆகையால் ஜெர்மனியை நேசதேசத்தார்கள் அவசியம் அடக்கியாளவேண்டுமென்பது ஊர்ஜிதப்படுகிறது.

ஐரோப்பிய சிக்கல்களைத் தீர்த்துவிடுவது முக்கியமானதென்றாலும், அமெரிக்காவினுடையவும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தினுடையவும் பூரா பலத்தையும் ஈடுபடுத்தி ஜப்பானிய யுத்தத்தை நடத்துவதுதான் மிகவும் அவசரமான வேலை. அமெரிக்க, பிரிடிஷ், ஆஸ்திரேலியப் படைகள் சமீபகாலத்தில் பெற்ற வெற்றிகள் தூரக்கிழக்கு எதிரியை சுலபமாகவோ அல்லது துரிதமாகவோ முறியடித்துவிடலாமென்ற நம்பிக்கையை பலப்படுத்தவில்லை.

இந்த அலுவலையும் பிரிடன் தீவிரமான உறுதியுடன் கவனித்துவரும். இந்தக் கடமை தீரும் வரையில் பிரிடிஷ் மக்கள் சர்வதேச சமாதானத்தையும் உள்நாட்டு சீர்திருத்தங்களையும் ஏற்பாடு செய்ய கவனம் செலுத்தமாட்டார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் க்ஷேமமும் பத்திரமும் இந்த தூரக்கிழக்குப் போரைப்பொறுத்தது. அமெரிக்காவுடன் ஒன்றுபட்டு பிரிடிஷ் மக்கள் இந்தப் போரை வெற்றி பெறும் வரை நடத்த தீவிரமான எண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

# கட்டாய வேலை செய்துவந்த அயல்நாட்டுத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

## 30 லக்ஷம் பேர்கள் தாயகம் திரும்பினார்கள்.

### டைம்ஸ் பத்திரிகை.

யுத்தக் கைதிகளையும் ஜெர்மனியிலுள்ள அயல் நாட்டு வேலைக்காரர்களையும் தாயகம் திரும்பச் செய்யும் ஜனசமூக சேவையில் விசேஷ முற்போக்கு ஏற்பட்டு வருகிறதென்று மேற்குப் போர்முனையின் நேசதேச ராணுவ கமாண்டு வெளியிட்டிருக்கிறது.

கைதி முகாம்களிலும், காவல் கூடங்களிலும், தொழிற்சாலைப் பிரதேசங்களிலும், மற்ற பிரதேசங்களிலும் அவ்விதமான 58,00,000 பேர்களை பிரிடிஷ் அமெரிக்கப் படைகள் கண்டு பிடித்தன. அவர்களில் 30 லக்ஷம் தாயகம் திரும்பிவிட்டார்கள். மற்ற 25 லக்ஷம் பேர்கள் முகாம்களில் கவனிக்கப்படுகிறார்கள். செப்டம்பர் மாத ஆரம்பத்தில் அநேகமாக எல்லோரும் சொந்த நாடுகளுக்குத் திரும்பி விடுவார்கள். இன்ன தேசமென்று தெளிவு படாதவர்கள்தான் அங்கேயே தங்கியிருக்கும்படி நேரிடும். அடையாளம் கண்டுபிடிப்பது, வீடுகளை அமைப்பது, போக்குவரத்துகள், நாசவேலை முதலிய சிரமங்களுடன் இவ்வளவு தூரம் செய்து வருகிறோமென்பது பொதுஜன சேவாசங்கத்தின் சேவைக்கு கௌரவமளிக்கக் கூடியது. கிழக்கு, மேற்குப் போர்முனைகளை ஒன்றுபடுத்தி, பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா கமாண்டுகளுக்கிடையே திரும்பி அனுப்புவது சம்பந்தமாக ஏற்பட்ட லீப்ஸிக் ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்தது ஐரோப்பாவின் குறுக்கே ஒரு மார்க்கத்தைத் திறந்து விட்டுவிட்டது. முகாமில் உள்ள 25 லக்ஷம் பேர்களில் பெரும்பாகமான ருஷ்யக் கைதிகளும், தொழிலாளர்களும் துரிதமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

இப்பொழுதுதான் ஜெர்மன் மனித சக்திக்குப் பதிலாக அயல்நாட்டுத் தொழிலாளர்களை உபயோகிப்பது என்ற ஜெர்மனியின் மகத்தான திட்டம் பூராவும் வெளிப்படுகிறது. ஏற்கனவே, சர்வதேச தொழிலாளர் சங்கம் இதை ஆராய்ச்சி செய்து அதன் குரூரமான எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறது. யுத்த காலத்தில நாம் ஜெர்மன் முறைகளை அறிய அறிய அவைகளின் கோரம் நமக்கு அதிகமாக புலப்படுகிறது. கிழக்கிலிருந்து வந்த யூதர்களும், போலர்களும், ருஷ்யர்களுமான தொழிலாளர்கள் கட்டாய சேவைக்குட்படுத்தப்பட்டனர். ஊதியம், உணவுப்பொருள் சம்பந்தமாக விசேஷமான கஷ்டங்களுக்குட்படுத்தப்பட்டார்கள். சில சமயங்களில் அதிக முயற்சிக்காக அவர்களுக்கு வெகுமான முறையில் சில சலுகைகளும் காட்டப்பட்டன. மேற்கிலுள்ள தொழிலாளர்கள் தன்னிச்சையாகவே சேவைக்கு வரவேண்டுமென்று அழைக்கப்பட்டார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளில் ரெக்ரூட் செய்யக்கூடிய ஏஜண்டுகளும் நியமிக்கப்பட்டார்கள். அந்த ஏஜென்ஸிகளில் கட்டாய முறையை உபயோகிக்கும் சிப்பந்திகளும் இருந்தார்கள். அவர்கள் செய்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுவதில்லை.

யுத்தம் நடைபெற்று வந்தபொழுது, அயல்நாட்டு வேலைக்காரர்களுக்குத் தேவை அதிகரித்தது. அவர்களை நடத்தும் முறைகள் கடுமைப்பட்டன. கடைசியில் அதைத் தடுக்க முயன்ற முறைகளே அந்த பிரச்னையில் அதிக நெருக்கடியை உண்டு பண்ணிவிட்டன. ஜெர்மனியில் அமர்த்தப்பட்டவர்களின் சங்கியை அதிகரித்தபின் அவர்கள் நாச வேலையை மேற்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுவதற்கு ஜெர்மன் மனித பலத்தை மிகுதியாக உபயோகிக்கவேண்டியிருந்தது. இதே சமயத்தில் அதிக நேரம் வேலை செய்யவேண்டும், என்று உபரியாக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளினால் உற்பத்தி அளவு குறைந்தது. இதிலிருந்து தொழிலாளர்களுக்கு அதிகத் தேவையும பலமான கண்காணிப்பும் அவசியமாகிற்று. ஆக்கிரமிப்பு நாடுகளில் கட்டாய சேவைக்குட்படுத்தப்படுவோம் என்ற பீதியினால் அநேகர்கள் ஜெர்மன் எதிர்ப்பு இயக்கங்களில் சேர்ந்துகொண்டார்கள். அவர்களை அடக்கி யாள ஜெர்மனி அதிகத் துருப்புகளை உபயோகிக்க வேண்டியதாகிற்று. ஜெர்மன் தொழிலாளர் கொள்கையானது தொழிலாளர் குறைவை சரிப்படுத்துவதும் துருப்புகளை மீளுக்கு வதும் என்ற முடிவுகளை ஒன்றுபடுத்தியது என்று சர்வதேசத் தொழிலாளர் சங்கம் கண்டு பிடித்தது.



# லெவாண்டில் பிரெஞ்சு நடவடிக்கை.

லெவாண்டில் பிரெஞ்சு பிரதிநிதி ஜெனரலான ஜெனரல் பேனட் ஜூலை மாதம் 7-ம் தேதியன்று பிரெஞ்சு நிர்வாகம் ஸிரிய, லெபானீஸ் நிர்வாகங்களிடம் லெவாண்டில் திரட்டப்பட்ட துருப்புகளின் கமாண்டை ஒப்படைத்து விடுவதென்று முடிவு செய்துவிட்டார்கள் என்று வெளியிட்டார். இது சென்ற மேமாதம் துவங்கிய பிரெஞ்சு-லெவாண்ட் நெருக்கடியைத் தீர்க்க முக்கியமான சமாதான நடவடிக்கையாகும். 25,000 முதல் 30,000 கொண்ட இந்தப் படைகளின் கமாண்டு பிரெஞ்சு அதிகாரிகளிடம் இருந்ததுதான் லெவாண்ட் நாடுகளுக்கு ஏற்பட்ட வருத்தத்துக்கு ஒருகாரணம். தங்களுடைய தேசீயப்படைகளின் கமாண்டு தங்களிடமே இருக்கவேண்டுமென்று லெவாண்ட் நாடுகள் வேண்டிக்கொள்ளுகின்றன. ஸிரியாவுக்கும் லெபானுக்கும் தேசீய சேனைக்கு மூலாதாரமான இந்தத் துருப்புகளின் கண்ட்ரோலை மாற்ற பிரெஞ்சுக்காரர்கள் தாமதம் செய்ததுதான் மனக்கசப்பை உண்டுபண்ணிவிட்டதுடன் இவ்வருஷம் பிப்ரவரி மாத ஆரம்பத்தில் பிரான்ஸுக்கும் லெவாண்டுக்கும் உள்ள விரோதங்களுக்குக் காரணமாக இருந்தது.

தற்போதிய நெருக்கடிக்கு லெவாண்டிலுள்ள பிரெஞ்சு உள்நாட்டுப் படைகளை அதிகரித்ததுதான் காரணமென்றாலும் துருப்புகளின் கமாண்டை லெவாண்ட் நாடுகளிடம் ஒப்படைக்க ஒத்துக்கொண்டது இரண்டு கக்ஷிகளுக்குமிடையே உள்ள விரோதத்தைத் குறைப்பதுடன் சமரசத்துக்கும் வழி தேடும். ஆயினும் இந்த நடவடிக்கை லெவாண்ட் நெருக்கடிக்குக் காரணமான எல்லா வித்தியாசங்களையும் ஒழித்துவிட முடியாது. ஆகிலும் இது நல்ல முறையில் சிறந்த நடவடிக்கை. பிரெஞ்சு லெவாண்ட் தகராறைத் தீர்க்க உதவி செய்யும்.

ஒரு வாரத்துக்குமுன் பிரெஞ்சு விசேஷ தூதரான ஆஸ்ட்ரோராக் பிரபு லெவாண்டுக்கு வந்து பிரெஞ்சு லெவாண்ட் தகராறைத் தீர்க்க புதிய திட்டங்களைக் கொண்டுவந்தார். திட்டங்களின் விவரங்கள் தெரிய வரவில்லை. பத்திரிகைகளில் வரும் தகவல்களிலிருந்து, கலைஞான ஒப்பந்தமும், தூதர்கள் சம்பந்தமான ஒப்பந்தமும், தேசங்களின் ராஜ தந்திர முறையை பாதிக்கக்கூடாத வகையில் பொருளாதார பிரச்னைகளைத் தீர்த்துவிடுவதும்தான் அதன் முக்கிய அம்சங்கள் என்று தெரியவருகிறது. பிரெஞ்சு-லெவாண்ட் பேச்சுகளிலிருந்து என்ன விளைவுகள் ஏற்படுமென்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் இந்த சம்பாஷணைகள் தற்பொழுது உள்ள வருத்தத்தை ஒருவாறு தீர்த்துவிட்டு பிற்காலத்திய ராஜ தந்திர விவாதத்திற்கு அஸ்திவாரமாக இருக்குமென்றும் தோன்றுகிறது.

பிரெஞ்சுக்காரர்களின் சமீப நடவடிக்கை வருங்காலத்திய பேச்சுகளுக்கு நல்ல மனப்பான்மையை உண்டுபண்ணும் என்பது நிச்சயம். அயல்நாட்டு காரியாலய பிரமுகர் பின்வருமாறு சொல்லுகிறார், "இது சமரசம், சமாதானம் இரண்டுக்கும் உதவக்கூடியது. ஸிரியாவுடனும், லெபானனுடனும் சிநேக பாவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும், அராபிய உலகம் பூராவுடனும் சமரசம் செய்துகொள்ளவும் பிரான்ஸ் பிரியப்படுகிறது என்று இதைச் சொல்லவேண்டும்."

---

# பஸிபிக் கடற்படையின் அடிக்கும் சக்தி.

## கிழக்கு சமுத்திரங்களில் பிரிடிஷ் கடற்படை பகுதி.

### பிரியான் டன்ஸ்டால்.

போர்னியோவில் கிழக்குக்கரையிலுள்ள பாலிக்பாபானில் ஆஸ்திரேலியப் படைகள் சமீபகாலத்தில் வெற்றிகரமாக இறக்கப்பட்டதற்கு அமெரிக்க, ஆஸ்திரேலிய, டச்சு யுத்தக் கப்பல்கள்தான் உதவிசெய்தன. முற்போக்காக 15 நாட்கள் வரையில் கடற்படை அதன் பேரில் பீரங்கி பிரயோகம் செய்துவந்தது. தாரகான் தீவையும் புருனே விரிகுடா பிராந்தியத்தில் தளங்களையும், ஜப்பான் இழந்தபின் நேசதேச கடற்படையும் விமானங்களும் நீர்மூழ்கிகளும், மாகாசார் ஜலசந்தியை மேன்பார்வை செய்து வருகின்றனவென்று சொல்லப்படுகிறது.

பிரிடிஷ் கடற்படை நடவடிக்கை அதிகரித்துவரும்பொழுதும் அயர்வு காணுவதுபோல் தோன்றுவதால் பிரிடிஷ் கடற்படையின் தற்போதிய நிலைமையை ஆராய்ச்சி செய்வோம். நெப்போலிய யுத்தத்துக்குப்பின் இதுவரையில் இம்மாதிரியாக உலகம் பூராவிலும் பிரிடிஷ் கடற்படை அநேக இடங்களில் வைக்கப்பட்டிருந்ததில்லை. முக்கியமான பலம் பொருந்திய கடற்படை பிரிடிஷ் பஸிபிக் கடற்படைதான். அது கடற்தளபதி நிமிட்ஸின் உயர்தர கமாண்டுக்குட்பட்ட அமெரிக்க பஸிபிக் கடற்படையுடன் சேர்ந்து வேலைசெய்து வருகிறது.

பத்து வருஷங்களுக்குமுன் சிங்கப்பூர் போன்ற சமீப கடற்படை தளமன்னியில் மத்திய பசிபிக்கிலும் மேற்கு பசிபிக்கிலும் ஒரு பெரிய பிரிடிஷ் கடற்படை குறிப்பிட்டகாலம் நடவடிக்கையை நடத்தக்கூடுமென்பது சாத்யமற்றதென்று நினைத்திருக்கலாம். ஆனால் இன்று பிரிடிஷ் பசிபிக் கடற்படை ஆஸ்திரேலிய கடற்கரையிலுள்ள தளங்களைத் தவிர வேறு உதவியன்னியில் நடமாடிக்கொண்டிருக்கிறது.

பிரிடிஷ் பசிபிக் கடற்படைக்கு கடற்தளபதி ப்ரூஸ் பிரேசர் தலைமை வகிக்கிறார். இது வரையில் போரில் ஈடுபட்ட கடற்படைக்கு மட்டும் வைஸ் அட்மிரல் ஸர் பெர்னார்ட் ராலிங்ஸ் தலைமை வகிக்கிறார். இந்த கமாண்டுக்குட்பட்டு வைஸ் அட்மிரல் ஸர் பிலிப் விபானின் கீழ் ஒரு விமானந்தாங்கிப் படை இருக்கிறது. இந்தக் கடற்படையைப் பெருக்க ஆஸ்திரேலிய கடற்படையைச் சேர்ந்த 24 கப்பல்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றில் பெரும்பாகம் நாசகாரிகள். ஆஸ்திரேலிய கடற்படையின் எஞ்சியபாகம் பெரும்பாலும் போர்னியோவின் வடமேற்குக் கரையிலும், கிழக்குக் கடற்கரையிலுள்ள பாலிக்பாபானிலும், படைகளை வெற்றிகரமாக இறக்குவதில் ஈடுபட்டிருக்கிறது.

இந்துமகா சமுத்திரத்தில் வைஸ் அட்மிரல் ஸர் ஆர்தர் பவரிமுள்ள பிரிடிஷ் கிழக்கு இந்தீஸ் கடற்படை தென்கிழக்கு ஆசியா கமாண்டின் உயர்தர நேசதேச கமாண்டரான லூயி மௌண்ட் பேடன் பிரபுவின் உத்தரவை எதிர்பார்த்து நிற்கின்றது. அநேகமாக லூயி மௌண்ட் பேடன் அடுத்தபடியாக சிங்கப்பூரையும், பிரிடிஷ் மலேயாவையும் பிடிக்க முயலுவார். ஆகிலும் இதற்காக டச்சு சுமாத்ராவிலும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமா வென்பது தெரியவில்லை. முன்னேற்றவேகம் ரெங்கூன் துறைமுகத்தை புனருத்தாரணம் செய்யும் வேகத்தைப் பொருத்தது.

தூரக்கிழக்கிலுள்ள இரண்டு முக்கியமான பிரிடிஷ் கடற்படைகளைத் தவிர பிரிடிஷ் நீர்மூழ்கிப்படையும் இந்துமகா சமுத்திரத்திலும் தெற்கு சீனக்கடலிலும் வேலைசெய்து வருகிறது. தென்மேற்கு பசிபிக் பிராந்தியத்தில் நடமாடிவந்த பிரிடிஷ் நீர்மூழ்கியான டிரென் சாண்ட், ஹாகுரா வகுப்பைச்சேர்ந்த 10,000 டன் உள்ள ஜப்பானிய சஞ்சாரியை மூழ்கடித்திருக்கிறது. ஏற்கனவே ஜப்பானிய சஞ்சாரிப் படைக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருப்பதினால் இந்த நஷ்டம் அதிகக் கெடுதலாக இருக்கும். லண்டனில் கடற்படை இலாகா எல்லாப் போர் முனைகளிலும் நடைபெற்ற பிரிடிஷ் நீர்மூழ்கிகளின் நடவடிக்கை என்ற ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது.

ஜப்பானியர்கள் எங்கு பார்த்தாலும் இப்பொழுது தற்காப்புப் போரை நடத்தி வந்தாலும் இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும், கிழக்கு ஆபிரிக்காவுக்கும், பாரஸீக வளைகுடாவுக்கும், மத்தியிலுள்ள இந்து மகாசமுத்திரத்தைத் தாண்டிச்செல்லும் பிரிடிஷ், நேசதேசக் கப்பல்களை ஜப்பானிய நீர்மூழ்கிகள் தாக்கக்கூடும். இதைத் தடுக்க நீர்மூழ்கிகளைத் தாக்கும் கப்பல்கள் அவசியமாகும். இந்தத் தேவையை இந்திய கடற்படை பூர்த்திசெய்து வருகிறது.

பிரிட்டனைச் சுற்றியுள்ள சமுத்திரங்களிலும் கடற்படையும், சுரங்கவாரிக் கப்பல்களும், ஜெர்மன் கடற்படை சரணாகதியை அமுல் நடத்தும் கப்பல்களும், ஜெர்மன் கடற்கரைகளையும், துறைமுகங்களையும் மேன்பார்க்கும் நேசதேசக் கப்பல்களும் இருக்கின்றன.

---

## ஆகினாவாத் தோல்வி ஜப்பானுக்கு பெருத்த நஷ்டம்.

### போரில் 1,00,000 ஜப்பானியர் மாண்டனர்.

(ஐக்கிய நாடுகளின் சஞ்சிகை).

பென்ஸிலை வைத்துக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து 3,360 மைல்கள் தாண்டியுள்ள ஸிங்கப்பூருக்கும், ஷாங்கேயிலிருந்து 3,550 மைல்களிலுள்ள ஸாலமன்னைச் சேர்ந்த போகன்வில்லிக்கும் இரண்டு கோடுகளை வரையுங்கள். இவ்விரண்டும் ஷாங்கேயிலிருந்து சுமார் 500 மைல்களிலும் டோக்கியோவிலிருந்து 1,000 மைல்களுக்குக் குறைவானதுமான ஒரு இடத்தில் சந்திக்கும். அநேகமாக இந்த இடத்தில்தான் ஆகினாவா என்ற ஒரு இடமிருக்கிறது.

உலகத்தின், பரப்பில் கால்பாகத்துக்கு மேலுள்ள இந்த தேசபடத்தில் இது ஒரு மிகவும் சிறிய இடம்தான். ஆகிலும் அதன் பரிமாணத்துக்கு அதிகமாகவே அதன் முக்கியத்வம் உலக சரித்திரத்தில் காணப்படுகிறது.

பசிபிக் யுத்தத்தில் ஆகினாவா ஒரு கேந்திரஸ்தானம் என்று திரும்பத்திரும்பச் சொல்ல வேண்டியதில்லை.



ஆகினாவா 450 சதுர மைல்கள் கொண்டது. மூன்றில் இரண்டு பாகத்தை ராணுவ காரியங்களுக்கு உபயோகிக்கலாம். அது 700 மைல்கள் நீளமுள்ள கரடுமுரடான நீண்ட பூ பிரதேசமுள்ளது. அதில் 5 லக்ஷம் ஜனங்கள் வசித்துவருகிறார்கள். அவர்களிடம் சீன, ஜப்பானிய ஜாதியாரின் குணங்கள் கலந்திருக்கின்றன. அவர்கள் சாதாரணமானவர்கள், மரியாதையுள்ளவர்கள் குள்ளமானவர்கள், கருப்புநிறமுள்ளவர்கள், மயிர் அடர்த்தியுள்ளவர்கள்.

ஆகினாவாப் போர் பசிபிக் போரில் காணக்கூடிய அபாயங்களையும், சிரமங்களையும் நன்கு எடுத்துக் காட்டிவிட்டது. எதிர்காலத்திய போரின் தன்மையையும் அது விளக்குகிறது. ஜப்பானியரின் தற்காப்பு முறைகள் மூர்க்கத்தனமாகவும் உறுதியுடனும் இருக்குமென்றும் வெளிப்படுத்துகிறது. இந்தப் போரில் எல்லா பிரச்னைகளும் காணப்பட்டன. மற்ற போர் முனைகளில் காணப்பட்ட யுத்த பிரச்னைகளும் யுத்த முறைகளும் இங்கு காணப்பட்டன. பிலிப்பைன்ஸிலும் பர்மாவிலும் ஏராளமான பொதுஜனங்கள் இருந்தார்கள். ஐவோஜிமாவில் தரை, கடல், விமானத்தாக்குதல் ஒன்றுபட்டு நடந்தது. பசிபிக் போரில் காணப்படாத பீரங்கிச் சண்டைகள் இவையெல்லாம் ஆகினாவாப் போரில் மகத்தான முறையில் காணப்பட்டன.

தீவில் படையெடுக்க நேசதேசத்தார்கள் படைகளையும் முஸ்தீப்புகளையும், சர்ப்பராக்களையும் 1,000 மைல்களுக்கு அப்பாலிலுள்ள தளங்களிலிருந்து கொண்டு போகவேண்டியிருந்தது. இதற்கு பலரகக் கப்பல்கள் உள்ள ஒரு பெரிய கடற்படை தேவையாக இருந்தது.

சென்ற வருஷம் நார்மண்டியில் படைகளை இறக்கச் சென்றதைவிட இங்கு பெரிய கப்பற் படை உபயோகிக்கப்பட்டது.

ஏப்ரல் மாதம் 1-ம் தேதி, ஈஸ்டர் ஞாயிறன்று இரண்டு அமெரிக்க மரீன் டிவிஷன்கள் கொண்ட ஒரு படையும் நான்கு அமெரிக்க சேனை டிவிஷன்கள் கொண்ட ஒரு படையும் ஆகினாவாவைப் படையெடுத்தன. படைகள் இறங்கியபொழுது யாதொரு எதிர்ப்பும் காணப்படவில்லை. எதிரியின் படைகளை முறியடிக்க 12 வாரங்கள் கடும்போர் நடைபெறுமென்று ஒரு சூசகமும் காணப்படவில்லை. கடற்கரையில் இறங்கிய மரீன் படைகள் பலமான தற்காப்பற்ற நாட்டுக்குள் வடக்கு முகமாக முன்னேறி 50 மைல்கள் தாண்டியுள்ள தீவின் வடக்குக் கோடியை யாதொரு தொந்திரவன்னியிலும் அடைந்தன. அதற்குப்பின் அங்குமிங்கும் சில இடங்களில் அவர்கள் ஜப்பானியப் படைகளை எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் இவ்விதமான எதிர்ப்புக்குத் தயாராக வரவில்லை. ஒரு அமெரிக்க உற்று நோக்காளர் பின்வருமாறு எழுதுகிறார். "மரீன்படைகள் சம்பந்தப்பட்டமட்டில் ஆகினாவாப் படையெடுப்பு ஒரு கோரமான துணிவுள்ள போலீஸ் நடவடிக்கை போன்றது. வீட்டுக்குள் அவசரமாக நுழைந்தவர்கள் அங்கு பிசாசுகள் இருப்பதைக் கண்டதுபோல இருந்தது."

கடற்கரையில் இறங்கி, தெற்குமுகமாகத் திரும்பிய சேனைகள்தான் ஆகினாவாவில் ஜப்பானியப் படைகளையும், ஏற்பாடான தற்காப்புகளையும் பிரயாசைப்பட்டு சமாளிக்க வேண்டியிருந்தது. பசிபிக்கில் இங்குதான் ஜப்பானியர்கள் மிகவும் பலமான தற்காப்புகளை அமைத்திருந்தார்கள். ஐவோஜிமாவிலும் தற்காப்புகள் பலமாக இருந்தது. மற்ற இடங்களில் இவ்வளவு பலமான தற்காப்புகள் கிடையாது. மற்றபோர் முனைகளில் கையாளப்பட்ட யுத்த தந்திரங்கள் இங்கும் அனுஷ்டிக்கப்பட்டன பதில் தாக்குதல்களுக்கு, அலைகளுக்கு பீரங்கிகளும், யந்திர பீரங்கிகளும், கிரெனேடுகளும், சுரங்கவெடிகளும், டாங்கிப்பொறிகளும், தற்காப்பு ஸ்தாபனங்களிலும், குகைகளிலும் உள்ள பீரங்கி நிலயங்களும் உதவிசெய்து வந்தன. இதனால்தான் ஆகினாவாவை சுத்திசெய்வது தாமதமாகவும் அபாயம் பொருந்தியதாகவும் இருந்தது.

ஆகினாவாப் போரில் 1,01,000 ஜப்பானியர்கள் இறந்தார்கள். 10,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த நஷ்டம் ஜப்பானின் தரைப்படையில் ஒரு பொருட்டாக இருக்காது. ஆகிலும் ஈக்களைப்போல் அழிக்கப்பட்ட விமானங்களும், தீவுக்கு அப்பாலில் அழிக்கப்பட்ட கடற்படையும் ஜப்பானின் கடைசி தற்காப்புகளின் ஒரு அம்சமாகும்.

---

## நியூ கினியாவில் ஆஸ்திரேலிய முன்னேற்றம்.

### குன்றுகளுக்கும் காடுகளுக்கும் போர்.

மிகவும் கோரமாகப் போர் செய்த ஆஸ்திரேலிய ஆறாவது, மூன்றாவது டிவிஷன்களைச் சேர்ந்த படைகள் நியூ கினியாவில் வேவாக்குக்குப் பின்னால் உள்ள கரடுமுரடான

மலைகளிலும் போகன்வில்லிக்குத் தெற்கிலுள்ள அடர்ந்த காடுகள் உள்ள பிரதேசத்திலும் மிகவும் முக்கியமான லாபங்களைச் சம்பாதித்திருக்கின்றன.

ஜப்பானியர்கள் கடுமையாக எதிர்த்துப் போராடுகிறார்கள். ஏனெனில் உன்னதமான ஸ்தானங்களைப் பிடித்துவிட்டால் பிரின்ஸ் அலெக்ஸாண்டர் மலைகளுக்கு முன்னேற ஆஸ்திரேலியர்களுக்கு வழி திறக்கப்படும். பிரிடிஷ் கயாகுவிலுள்ள மற்ற கேந்திர ஸ்தானங்களும் தாக்கப்படும். மேலும் நமது வசமும் காலாட்படையும் ஊடுருவிச் செல்லும் ஒவ்வொரு நதி மார்க்கமும் போகன்வில்லிக்குத் தெற்கிலுள்ள தற்காப்புப் பிராந்தியத்தை பலவீனப்படுத்துமென்றும் ஜப்பான் அறிகிறது.

நியூ கினியாவில் 6-வது டிவிஷன் அதன் லக்ஷியங்களை அடைந்துவிட்டது. முதலாவதாக, வேவாக்குப் பின்னுள்ள குன்றுகளில் மிகவும் உன்னதமாக உள்ள மௌண்ட் டாசாகியில் உள்ள எதிரியின் ஏராளமான படைகளை அவைகள் முறியடித்திருக்கின்றன.

நமது படைகள் தாக்குமுன் குன்றிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்கள் வெடி விமானங்களால் கடுமையாகத் தாக்கப்பட்டன. பீரங்கி பிரயோகமும் நடைபெற்றது. மொத்தமாக 3,000 வெடி குண்டுகள் வீசப்பட்டன. ஆகிலும் ஜப்பானியர்கள் ஸ்தானங்களை விட்டு ஓடவில்லை. நமது முன்னணிப் படைகளை அவர்கள் யந்திர பீரங்கி மூலம் தாக்கினார்கள். எதிரியின் குண்டுவீச்சுக்குட்பட்ட நமது படைகள் குன்றிலிருந்து 75 அடிக்குள் வந்தவுடன் சுற்றிச் செல்லும் தந்திரத்தை மேற்கொண்டார்கள். 800 கெஜங்களுக்குள் 300 அடி உயர்ந்துள்ள மலைச் சரிவுகளில் நான்கு மணி நேரம் கஷ்டப்பட்டுச் சென்றபின் எதிரியின் தற்காப்பு ஸ்தானங்களை நாம் பிடித்தோம். மௌண்ட் டாசாகி நமது வசமாகிறது.

இதே சமயத்தில் ரோந்துப் படைகள் ஆராய்ச்சி செய்திருந்த மௌண்ட் ஷிபாஸ்குலை மற்ற ஆஸ்திரேலியப் படைகள் சுத்தி செய்துவந்தன. வேவாக் பிராந்தியத்திலுள்ள பிரின்ஸ் அலெக்ஸாண்டர்ஸிலுள்ள முக்கிய குன்றான ஷிபாஸ்கு மிகவும் கஷ்டமான ஸ்தானம். அங்கு ஜப்பானிய எதிர்ப்பு பலமாக இருந்தது.

சாவதானமாகவும் உறுதியுடனும் குன்றுக்குப் போகும் மார்க்கங்கள் பிடிக்கப்படுகின்றன. இந்தச் சரிவுகளில் ஜப்பானியர்கள் அநேக தற்காப்புகளைத் தயார் செய்திருக்கிறார்கள். அந்த ஸ்தானங்கள் வெடிகுண்டுகளாலும், பீரங்கி குண்டுகளாலும் நொருக்கப்படுகின்றன.

டாசாகியில் போல ஜப்பானியர்கள் இங்கும் ஆஸ்திரேலியர்களை வெறிகொண்டவர்கள் போல் தாக்கி வருகிறார்கள். ஷிபாஸ்கு இன்னும் நமது வசமாகவில்லை. இன்னும் பலமாக அமைக்கப்பட்ட அநேக தற்காப்பு அமைப்புகளை நொருக்கி அதிலுள்ளவர்களைக் கொன்று அல்லது பொசுக்கினால்தான் ஆஸ்திரேலியர்கள் மலைகளில் ஊன்றிக்கொண்டு அங்கிருந்து உள்நாட்டில் முன்னேறமுடியும்.

தெற்கு போகன்வில்லியில் பூயின் ரஸ்தா நெடுக ஆறு மைல்கள் தூரம், ஹாரி நதியிலிருந்து போபியாயி நதி வரையிலும் அநேக தோல்விகளைப் பெற்ற ஜப்பானியர்கள் இப்பொழுது சமாளித்துக்கொண்டு மூன்றாவது டிவிஷனைச் சேர்ந்த முன்னணித் துருப்புகளை பலமாகத் தாக்கிவருகிறார்கள். அவைகள் எல்லாம் துரத்தியடிக்கப்பட்டன. ஆகிலும் தீவின் தெற்குப் பகுதியில் கடைசி நதியான மிபோ நதிக்கு நாம் முன்னேறுவதை ஜப்பான் தாத்காலிகமாக நிறுத்திவைத்துவிட்டது.

பூயின் ரஸ்தா வழியாகவும் வடக்கிலும் சென்ற டாங்கிப் படைகள் மோபியாயி, மிபோ நதிகளுக்கிடையே எதிரியின் பலமான எதிர்ப்புக்குட்பட்டன. அவர்களுக்கு 37 மிலி மீட்டர் 75 மிலி மீட்டர், 150 மிலி மீட்டர் உள்ள பீரங்கிகளிடமிருந்து உதவி கிடைத்துவருகிறது. சமீபப் போரில் பிரிடிஷ் வேவு பார்க்கும் விமானிகளுடையவும் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த வெடி விமானங்களின் நடவடிக்கையினால் ஜபபான் அநேக பீரங்கிகளை இழந்து விட்டது.

மோபியாயி நதி வழியில் ஜப்பான் பலமான தற்காப்புப் பெற்றிருக்கிறது. ஆகிலும் நமது படைகள் நதிக்கு அடிபாகத்திலும் நுனிபாகத்திலும் நதியைத் தாண்டி ஜப்பானியப் படைகளை வளைத்துக்கொண்டன. மற்ற படைகளும் நதியைத் தாண்டிவிட்டன இரண்டு நதிகளுக்கும் இடையே அநேக பகுதிகளாக இருக்கும் எதிரிப் படைகள் நமது படைகளை பலமாகத் தாக்கிவருகின்றன. அநேக இடங்களில் ஜப்பான் பதில் தாக்குதலைச் செய்து வருகிறது.

இதே சமயத்தில் நமது இஞ்சினியர்கள் பூயின் ரஸ்தாவில் டாங்கிகளின் போக்கைத் தடுக்க அமைக்கப்பட்ட சுரங்க வெடிகளையும் பொறிகளையும் அகற்றிவருகிறார்கள். இந்த



உபாயங்களிலிருந்து ஜப்பானுக்கு யாதொரு பிரயோஜனமும் கிட்டவில்லை. வெகு தூரம் சுடும் டாம் பீரங்கிகளிலிருந்தும் 25 ராத்தல் குண்டுகளை வீசும் பீரங்கிகளிலிருந்தும் போடப்படும் வெடிகுண்டுகளும் கார்சேர் வெடிகுண்டுகளும் ஜப்பானியர்களை அழித்துவருகின்றன. அதற்கு சமீபத்திலுள்ள காடும் அழிக்கப்பட்டுவிட்டது.

## ஜப்பானைச்சுற்றி முற்றுகை வலுப்படுகிறது.

### சுரங்கவெடிகளைப் பாவும் சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் சுறுசுறுப்பாக வேலைசெய்கின்றன.

சுரங்க வெடிகளைப் பாவும் சூபர் பறக்கும் கோட்டைகளும், நேசதேச நீர்மூழ்கிகளும், விமானப்படை ரோந்துகளும், ஜப்பானை முற்றுகைசெய்து வருவதினால் ஜப்பான் உணவுப் பொருள் பங்கீட்டில் 10 சதவிகிதம் குறைத்துவிட்டது. குறைவுபட்ட அரிசிச் சாப்பாட்டுக்கு பதிலாக மல்பெரி இலைகளையும், மீன் எலும்புகளையும், உட்கொள்ளவேண்டும் என்று ஜப்பானிய நிர்வாகம் ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.

சூபர் பறக்கும் கோட்டைகள் ஏராளமாகச் சென்று ஜப்பானின் தொழிற்சாலை நகரங்களையும், உணவுப்பொருள் சேமிப்புகளையும், அழித்து வரும்பொழுது, முற்றுகை ஜப்பானுக்கு கடல்தாண்டியுள்ள வியாபாரத்தைக் கெடுத்து வருகிறது. மேலும் தேசத்தில் வறுமை ஏற்படும்போல் தோன்றுகிறது. ஜப்பானுக்கு உணவுப்பொருள்களும், தொழிற்சாலைகளுக்குரிய இயற்கைப் பொருள்களும், சைனாவிலிருந்தும், கொரியாவிலிருந்தும், அவசியமாக வரவேண்டியிருப்பதினால் சுரங்கவெடிகளை அகற்றுவது அரிதமாகவும் உபயோகமற்ற முறையிலும் நடைபெற்றுவருகிறது.

மார்ச்சு மாதத்திற்குப்பின் சுரங்கவெடிகளால் 200 கப்பல்கள் நாசமாகியிருக்கும் அல்லது பழுதுபடுத்தப்பட்டிருக்கும். ஜப்பானியர்கள் வடமேற்கு ஹான்ஷூவிலுள்ள துறைமுகங்களைநோக்கி கப்பல்களை அனுப்பினார்கள். அதுவும் பயன்படவில்லை. சூபர் பறக்கும் கோட்டைகள் ஜப்பானின் முக்கிய தீவுகளான ஹான்ஷூவுக்கும் கியூஷூக்கும் மத்தியிலுள்ள ஷிமோனோசெகி ஜலசந்தியிலும் நடவடிக்கையை ஆரம்பித்தன. எதிரிக்கப்பல்கள் அடையக்கூடிய துறைமுகங்களிலும் அவைகள் சுரங்கவெடிகளைப் பாவிவிட்டன. ஜனங்களின் ஆகாரத்திற்கும் யுத்த தொழிற்சாலைகளை நடத்தவும் ஜப்பானுக்கு மாதம் ஒன்றுக்கு கொரியாவிலிருந்தும், சைனாவிலிருந்தும், 20 லக்ஷம் டன்கள் சாமான்கள் வந்துசேர வேண்டும். முற்றுகைமூலம் இது மிகவும் குறைந்துவிட்டது. கப்பல்கள் ஹான்ஷூவிலுள்ள வடமேற்குத் துறைமுகங்களுக்குத் திருப்பிவிட்டதினால் தீவுக்குக் குறுக்கே செல்லும் இருப்புப்பாதைகளுக்கு அதிக சிரமம் ஏற்பட்டுவிட்டது.

## குறிப்பான திட்டம் கிடையாது. சரித்திரத்தில் காணப்படவில்லை.

### பர்மாப் போரின் நூதனமான நடவடிக்கைகள்.

(படைத் தலைவர் H. E. பேட்ஸ்).

இது ஒரு ருசியில்லாத கட்டுரையாகயிருக்கும் என்று நினைக்கிறேன். ஒருக்கால் அந்த அபிப்பிராயம் தவறாக இருக்கலாம். அது ருசியில்லாத கட்டுரையாக இருப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவது, அது ருசியில்லாததாக இருக்கவேண்டுமென்று நான் பிரியப்படுகிறேன், இரண்டாவதாக, இந்த விஷயம் ருசியற்றது. மூன்றாவதாக ருசியற்ற கட்டுரைகளுக்கு ருசியற்ற குணபாகமும் உண்டு. அவைகள் ஆன்மாவுக்கு உபயோகமுள்ளவைகள்.

விஷயம்.—26,000 சதுர மைல்கள் கொண்ட உயரமான மலைப்பிரதேசம், தாழ்மையான காடுகள், கஷ்டசாத்யமான நதிகள், மலேரியா மிகுதியான சதுப்பு நிலங்கள், கோரைகள், பரம விரோதியான சீதோஷ்ணம், அதிவர்ஷம், கோவில்களும், தூசியும், மனதைப் புண்படுத்தும் ரஸ்தாக்களும், தூசி மிகுந்த வண்டிப்பாதைகளும், மீட்டர் கேஜ் இருப்புப்பாதைகளும், கானல் போன்ற ஏமாற்றக்கூடிய தேசங்களும், பலமான புயல்காற்றுகளும், மினனல்களும், தூசி மண்டலங்களும், அபாரமான தூசியும், இதற்குமுன் பெரிய அரிசி ஏற்றுமதி செய்யும் பிரதேசம், அங்கு ஜாதியும் கோஷாவும் கிடையாது. சிறுமிகள் பளபளப்பாயும் புன்சிரிப்புடனும் அழகாகவும் இருக்கிறார்கள். ஆடவர்கள் சிறிய அங்கிகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த தேசம ஜப்பானியர்களுக்கு இதற்குமுன் ஐசுவர்யங்களைப் பெற பாய்ச்சல் ஸ்தலமாக இருந்தது. ஜெர்மனிக்குக்கூட பிரான்ஸ் இவ்வளவு

சௌகரியம் அளிக்கவில்லை. அந்த நாட்டில் இப்பொழுது எல்லாம் பாழாகிவிட்டது. இதுதான் பர்மா.

போலந்தின் எல்லையை ருஷ்யப்படைகள் கடந்த பின்னும் மேற்கிலுள்ள நேசதேச சேனைகள் பிரான்ஸில் படையெடுத்த பின்னும், பர்மாப் போர் கொஞ்சம் கொஞ்சமாக நமது கவனத்திலிருந்து மறைந்துவிட்டது. ஜப்பானுடன் எவரும் எக்காலத்தில் நடத்திய தரைப்போர்களில் பர்மாப் போர்தான் மிகவும் பெரியதான போராகும்.

பர்மா இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வெகு தூரத்திலுள்ளது. அதன் பூமியமைப்பு குழப்பமானது, விவரிக்கக்கூடாதது. ரெங்கூன் மாண்டலேயைத் தவிர அந்த போர் பிராந்தியம் பூராவிலும் சர்வதேச முக்கியத்துவமுள்ள இடங்கள் கிடையாது. அது பசிபிக்கிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் வெகு தூரத்திலிருந்து வருகிறது. அங்கிருந்து டோக்கியோ 3,000 மைல்களிலிருக்கிறது. அதன் முன்னேற்றம் அதை மறைமுகப்படுத்துகிறதேயல்லாது பகிரங்கப்படுத்தவில்லை. அதன் ராஜிய விஷயங்கள் பிரிடிஷ், அமெரிக்கர்களின் மனதைக் கவருவதில்லை. ஏனெனில் பர்மாவின் புனருத்தாரணத்தில் அவர்கள் பிரான்ஸிலும், ஹாலந்திலும், போலந்திலும் காணக்கூடிய அபிவிருத்தியைக் காணக்கூடவில்லை. இவைகளும் இன்னும் அநேக விஷயங்களும் உஷ்ணரேகை பிரதேசத்தில் நடைபெறும் ஒரு கோரமான போரை வெகுதூரத்தில் தள்ளிவிட்டன.

பர்மாப் போரில் விசித்திரமானது யாதெனில் இந்தப் போர் முனையைப்பற்றி இது வரையில் யாதொரு சரித்திரமும் எழுதப்படவில்லை. ஐரோப்பியப் போர்முனைகள் ஐதீகப் புகழ்பெற்றவை. 1,000 வருஷங்களுக்காக அவைகளில் குறைந்த பக்ஷம் 12 தடவைகளாவது போர் நடைபெற்றிருக்கின்றன. அவைகள் மதிக்கக்கூடியவை, மதிக்கப்படுகின்றன. அவைகள் சரித்திரத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

ஆனால் பர்மாப் போர்முனை புதிய போர் பிராந்தியம். அது புதிய தினுசான போர்முனை. அது சரித்திரத்திலில்லை. அது வக்ரமான போக்குள்ளது. அது மிகவும் சிக்கலானது. அதற்கு உபமானம் வேண்டுமென்றால் லண்டனில் போர் நடக்கிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அதற்குக் கிழக்கில் 10,000 அடி உயரமுள்ள மின்சாரமுள்ள மலையிருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அது 1,000 மைல்கள் நீளமுள்ளது. உங்களுடைய லக்ஷியம் இஸ்தான்பூலென்றும் நடுவில் வியன்னாவைப் பிடிக்கவேண்டுமென்று வைத்துக் கொள்ளுவோம். வியன்னாவுக்குச் செல்லுவதற்குமுன் அதற்கு நேர் எதிரியான திசையில் வடக்கிலுள்ள அபெர்டீனுக்குச் சென்று, அங்கிருந்து கிழக்கு நோக்கி நார்வேக்குச் சென்று, அதன்பின் தெற்குநோக்கி ஐரோப்பாவுக்குச் செல்லவேண்டும்.

எதிரியின் தலைநகர் 3,000 மைல்கள் தாண்டி வடக்கு ஸைபீரியாவிலிருக்கிறது. நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து எட்டிச் செல்லுகிறீர்கள்.

இந்தப் போர்முனையின் போக்குவரத்துகள் ஒருவருடைய மனதைக் கலைத்துவிடும். வெற்றி கிடைக்குமென்ற உறுதியில்லாவிடில் அது நிச்சயமாக மன உறுதியைக் கெடுத்துவிடும். இந்த வெற்றி விமான ஆதிக்கத்தைப் பொருத்தது. ஆகாயமன்றியில் பர்மாவில் போரைத் துவக்க முடியாது. ஆகாயமன்றியில் உணவுப் பொருள்கள், தண்ணீர், வெடி மருந்துகள், உதவி, தொடர்பு முதலியவற்றை ஏற்பாடு செய்யமுடியாது.

குள்ளமாக உள்ளவர்கள் சைனாவில் பெரிய மதில்களைத் தாண்ட முயற்சி செய்து அது வீணாகியபொழுது, அதைப் பக்கவாட்டில் கடந்துசென்று உணவுப் பொருள்களை தலையில் தூக்கிக்கொண்டு சென்றதுபோல் பர்மாப்போரும் முடிந்துவிடும். பர்மாவிலுள்ள 10,000 அடி உயரமுள்ள மலைகளைத்தாண்டி பர்மாவுக்குள் மேற்கிலிருந்து நுழைய ஒரு ரஸ்தாக்கூட கிடையாது. கடக்க முடியாதத் தடையை வடக்குக் கோடியில் இம்பால் வழியாகவும் ஆகாய மார்க்கமாகவும்தான் தாண்டலாம். இந்த முறைகள் யுத்த தந்திர திட்டத்தில் இதுவரையில் காணப்படவில்லை.

ஆனால் வழக்கங்களை ஒருவர்தான் உண்டுபண்ணவேண்டும். இதை யுத்தத்தில் மரித்துப் போகிறவர்கள்தான் ஏற்பாடு செய்ய முடியும். அவர்கள் செய்தது சரியா, தவறு என்றும் அதற்குக் காரணம் என்னவென்றும் ஒருவரும் சொல்லுவதற்கில்லை. பர்மாப் போர் பூராவிலும் தவறுதல்கள் மூலம் பரீக்ஷை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரீக்ஷைகள் கோரமானவை அங்கு அழகான நூதன முறைகள் கையாளப்பட்டன என்று நிச்சயமாகச் சொல்லலாம். முதல் முதலான அற்புதச் செய்கைகள், விங்கேட்டின் காட்டுப் போர் தந்திரம், அவர்களுக்கு ஆகாயத்திலிருந்து குடைகள் மூலம் சகலவிதமான சாமான்களும் வெயின்-



ரெயிட் முதலியவர்களின் துணிவுச் செய்கைகளால் வழங்கப்பட்டன. அந்த நடவடிக்கைகள் வருங்காலத்துக்கு முன் நடவடிக்கைகளாகும். அவைகள் வருங்காலத்தில் சரித்திரத்தில் வரையப்படும். சரித்திரம் வரையப்படும்பொழுது விமானப்படை சகல முஸ்தீப்புகளும் சர்ப்பராக்களும் உள்ள ஒரு சேனையை போர்முனைக்கு எடுத்துச் சென்றதென்று எழுதப்படக் கூடும்.

விங்கேட்டின் பூராப் படைகளும், விமானமூலம் இறக்கப்பட்டன. விமானமூலம் போஷிக்கப்பட்டன, விமான மூலம் திருப்பிக் கொண்டுவரப்பட்டன. முதல் வாரத்தில் 121 உயிர்ச் சேதத்துடன் 12,000 மனிதர்களும் 1,200 போக்குவரத்து கால்நடைகளும் ஆகாய மூலம் கொண்டுபோகப்பட்டன. 1944-ம் வருஷத்தில் 90,000 மனிதர்களும் $2\frac{1}{2}$ லக்ஷம் டன்கள் கொண்ட சாமான்களும் மலைகளைத் தாண்டிச் சென்றன. 1945-ம் [illegible] மார்ச்சு மாதத்தின் முதல் நான்கு வாரங்களில் இந்தப் புள்ளி விபரங்கள் தினசரி 2,000 டன்கள் ஸப்ளையாக அதிகரித்தது. முன்னணி தளங்களிலிருந்து 1,600 காயம்பட்டவர்களும் திரும்பிக் கொண்டுவரப்பட்டார்கள்.

இந்த விமான மூலம் அனுப்பப்படும் ஸப்ளை வேனிர்காலத்திலும் பருவகால மழையிலும் மிகுதியாக அனுப்பப்பட்டு வந்தது. இதற்கும் இதற்கு முன் ஒரு மாதிரி நடவடிக்கையும் கிடையாது. கடும் மழையில் 10,000 அடி உயரமுள்ள மலைகளைத்தாண்டி ஏராளமான சாமான்கள் இதுவரையில் விமான மூலம் சென்றதில்லை. இதுவும் சரித்திரத்தில் எழுதப்படவில்லை. ஆகையால் இதையும் சரித்திரத்தில் எழுதவேண்டும். மத்திய பர்மாவில் புயல் காற்றுகளில் அகப்பட்டுக்கொண்டு வெளியேறாமல் மரித்துப்போன அநேக வாலிபர்களும் அதில் இருந்துவந்தார்கள்.

பர்மா நடவடிக்கை பூராவிலும் இவ்வித கௌரவமான சம்பவங்கள் காணப்படுகின்றன. மழையும், புயல்காற்றுமில்லாவிட்டால் தூசியும் சூர்ய வெப்பமும் மிகுதியாக இருக்கும். புலியைப்போல் சீதோஷ்ணம் பாயத் தயாராக இருக்கிறது. பர்மாவுக்குள் ஒரு மைல் முன்னேறுமுன் நிலைமை மோசமாகிவிடும்.

சூர்ய வெளிச்சம் கடுமையாக இருக்கும். தூசி எல்லா இடங்களிலும் அபாரமாகப்படிந்து விடும். காடுகளில் விஷ ஜந்துக்களும் அட்டைகளும் பக்ஷிகளின் சப்தமும் எங்குபார்த்தாலும் காணப்படும். இந்த நாடகத்திற்கு அவைகளும் ஒருவாறு சோபையைத்தரும். இவைகளுடன் பருவகால மழையும் புயலும் பர்மாபோரில் புதிய முறைகளைக் கையாளும்படி செய்துவிட்டன. இவைகளுக்கும் யாதொரு திட்டமும் கிடையாது.

மற்ற இரண்டு விஷயங்களும் இதுவரையில் கண்டதில்லை. அவைகளுக்கு சீதோஷ்ணஸ்திதி காரணமாகும். நோயும், தாயகம், திரும்பவேண்டுமென்ற ஆசையும். சூர்ய வெளிச்சமும், உஷ்ணமும் மனப்பான்மையை பாதிக்கின்றன. அவைகள் மன கிலேசத்தை அதிகரிக்கின்றன. தாயகம் திரும்பிச் செல்லவேண்டுமென்ற தாபம் வியாதியாகவே மாறிவிடும்.

படைகள் வெகுதூரம் சென்றுவிட்டபடியால், மெய்க்டிலாவிலுள்ள ஒரு பையன் சொன்னமாதிரி, இந்த தாபம் சதாகாலமும் இருந்துவருகிறது. அது நாளடைவில் அதிகரித்து வருகிறது, எவ்வளவு காலம் கழித்து உற்றார் உறவினருடன் குலாவுவது, நல்ல ஜலத்தில் ஸ்நானம் செய்வது, மருந்துபோடாத தீர்த்தத்தை அருந்துவது, தூசியில்லாத காற்றை உட்கொள்ளுவது, டைபஸ் ஜுரத்தை உண்டாக்கக்கூடிய பூச்சிகள் இல்லாத இடத்திலும், மலேரியாவைக் கொண்டுவரக்கூடிய கொசுக்கள் இல்லாத இடத்திலும், வெகுதூரத்திலிருக்கிறோம் என்ற ஸ்மரணை ஒருவனை பிடிக்காமலும் உள்ள இடத்திலும் தூங்குவது என்று அறியக் கூடாததுதான் தொந்திரவளிக்கிறது என்று அப்பையன் சொன்னான்.

மற்றவைகள் வியாதி. யுத்தம் முடிந்தபின் இறந்தவர்களின் பேரில் புல் அடர்த்தியாக வளர்ந்தபின் புள்ளிவிவரங்களைத் திரட்டும் சரித்திரம் எழுதுகிறவர்களுக்கும் இது ஆச்சரியமாக இருக்கும். எனக்குப் புள்ளிவிவரங்கள் தெரியாது. பர்மாப் போரின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் மலேரியாத் தொந்திரவு மிகுதியாக இருந்தது. மலேரியா மூலமாகவும், மற்ற வியாதிகள் மூலமாகவும் அநேகர்கள் பீடிக்கப்பட்டார்கள் என்று எனக்குத் தெரியும். குறிப்பான புள்ளிவிவரங்களை சரித்திரக்காரர்கள்தான் வெளியிடமுடியும்.

சரித்திரக்காரர் கீழ்கண்டவற்றைப் பற்றியும் எழுதுவாரென்று நினைக்கிறேன். வயிற்றுப்போக்கு, பாம்புக்கடி, சூரியனால் பீடை, ஸோல்ஜர்களின் ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், அதற்காக ஸ்பெஷலாக அணிந்துகொள்ளவேண்டிய ஜோடுகள், மேலும் போர்முனைகளில் காயம்பட்டு, ஒரே தூசிமயமாக உள்ள ரஸ்தாக்கள் வழியாகச் செல்லமுடியாமல் கஷ்டப்படுவது.

இந்த ருசியற்ற போரில் காயம்பட்டவர்களைப்பற்றி பின்வருமாறு சொல்லலாம்:— முன்னணியிலுள்ள டாக்டர்களும் தாதிகளும் தீரத்துடனும், பொருமையுடனும், சாதுர்யத்

ட்டும், கடந்துகொண்டிராவிட்டாலும், டாகோடா விமானங்களும், (L.) 5 விமானங்களும், விமான மூலம் உதவி செய்திராவிட்டாலும், காயம்பட்டவர்களில் பெரும்பாகம் அங்கேயே இறந்து போயிருப்பார்கள். போர் முன்னணியில் ஸ்திரீகளும் இருக்கிறார்கள். பிரிடிஷ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அநேக சிறுமிகள் இங்கு இருக்கிறார்கள். அவர்களைத்தான் Q. A. I. M. N. S. என்று அழைத்து ஜெனரல்கள் மரியாதை செய்வதுண்டு. அவர்களின் மகத்தான தீரமும் விமான மூலம் உதவியும் கிடைத்திராவிடில் அது வீண் பிரயத்தனமாக முடிந்திருக்கும்.

ஒரு நாளைக்கு ஒரு பைண்ட் தண்ணீர் பங்கிட்டு செய்துகொடுக்கப்படும். பர்மாவின் பொட்டல்களில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், போரில் பீதியுற்றவர்களுக்கும், படுகாயம் பட்டவர்களுக்கும் தங்கியிருக்க வசதி கிடையாது. அவர்கள் போர் முனைக்கு ஒரு நடைகல் தான். கூடாரங்களில் வசிக்கும் டாக்டர்கள் அங்கச் சேதம் செய்துவிடலாம். அப்பொழுது 100 அல்லது அதற்கு மேற்பட்ட டிக்ரி உள்ள உஷ்ணம் கூடாரத்துக்குள் தாக்கிக்கொண்டிருக்கும். அதற்குப்பின் சிகிச்சை செய்வதற்கு அங்கு வசதியில்லை. அவ்விதமாக ஆபத்திலிருப்பவர்களை பிரிடிஷ், சாம்ராஜ்ய, அமெரிக்க விமானிகள் ஓட்டிய அமெரிக்க விமானப் படைமூலம் அப்புறப்படுத்தப்பட்டது என்பது பர்மா போரிலேயே மிகவும் அற்புதமான நடவடிக்கையாகும்.

பர்மாப்போரின் புதிய நடவடிக்கைகளில் இதுதான் ஆரம்பமாகும். இவைகள் சரித்திரத்தில் காணக்கூடியவையல்ல. இங்கு காணப்படும் விமாப்படையின் அபார சக்தி மற்ற எந்தப் போர்முனையிலும் காணக்கூடாதது. தண்டர் போல்ட் விமானங்கள் மலேயாவிலும் கூட, அதாவது 500 மைல்கள் தாண்டி தெற்கில் சஞ்சாரம் செய்கின்றன. மேலும் வெடி விமானங்களும், சண்டை விமானங்களும் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன. போர்ப்படைகளுக்கு சண்டை விமானங்களும், வெடி விமானங்களும் ஒத்தாசை செய்கின்றன. இந்த ஒன்றுபட்ட நடவடிக்கை ஐரோப்பாவில் காணக்கூடியதில்லை என்பதுடன் ஒரே ஒரு வேலையைச் செய்யப்பட்ட ஐரோப்பிய விமானியை இது பிரமிக்கச் செய்யும்.

கிழக்கு விமானப்படையைச் சேர்ந்த பிரிடிஷ், அமெரிக்க விமானப் படைகள் வெகு தூரம் பறந்து சென்றிருக்கின்றன. அமெரிக்க B-24 விமானங்கள் மார்ச்சு மாதத்தில் சூபானுக்குத் தெற்கில் 100 மைல்களிலும், சியாம் வளைகுடாவிலும் உள்ள லக்ஷியங்களைத் தாக்க 2,500 மைல்கள் சென்றிருக்கின்றன. அதே மாதத்தில் பிரிடிஷ் லிபரெடர் விமானங்கள் அந்த இடத்திற்கு 8 மைல்கள் மேற்கில் சென்று அங்குள்ள நாகியான் இருப்புப் பாதையைச் சேர்ந்த வண்டிகள் நிற்குமிடங்களை வெடி குண்டுகளால் நொருக்கியிருக்கின்றன.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், லண்டனிலிருந்து லெனின்கிராட்டுக்கும், போஸ்டனிலிருந்து கான்சாசுக்குப்போய்த் திரும்புவதும், அல்லது லண்டனிலிருந்து பெர்லினுக்குச் சென்று திரும்பிவருவதைப்போல் இரண்டு மடங்குள்ள தூரமென்று இதை ஒப்பிட்டுச் சொல்லலாம். கிழக்கு விமானப்படையைச் சேர்ந்த ஒரு மஸ்கிடோ விமானம் ஒளிப்படம் பிடிப்பதற்காக 8 மணிகள், 50 நிமிஷங்களில் 2,400 மைல்கள் பறந்து சென்றது.

மார்ச்சு மாதத்திலும் பிரிடிஷ் காடாலினா விமானங்களும் ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் மலேயா கடற்கரைக்கருகில் அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டையைச் சேர்ந்த 20 வேலைக்காரர்களை சுறா மீனுள்ள சமுத்திரங்களிலிருந்து காப்பாற்ற நாள் பூராவும் பறந்து சென்றன.

ஜப்பானியர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே இங்கு நேசதேச விமானங்கள் வெகு தூரம் பறந்து செல்லுகின்றன. சூபர் பறக்கும் கோட்டைகளுக்கும், L-5-க்கும் இடையே அநேக ரக விமானங்கள் இருக்கின்றன. ஹாரி வெடி விமானங்கள், ஸ்பிட்பயர்கள், தண்டர் போல்ட்கள், லிபரெட்டர்கள், டாகோடாக்கள், மஸ்கிடோக்கள், B-29 விமானங்கள், வார்விக்குகள், போ பைடர்கள், ஸெட்லிங்குகள், கடற்கரையில் உள்ள காடாலினாக்கள், ஸண்டர்லாந்துகள்—கமாண்டோக்கள் முதலியவை.

இந்த விமானங்கள் ஜப்பானை பலமாகத் தாக்கிவருவதினால், ஜப்பானியர்கள் வடக்கு, மத்திய பர்மாவிலிருந்தும், ரெங்கூனிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டுவிட்டார்கள். பெரும்பாலும் இந்தியாவைக் கைப்பற்ற ஜப்பானின் நீட்டப்பட்ட விரல்கள், இப்பொழுது சிங்கப்பூருக்கும், சியாமுக்கும் மடக்கப்பட்டுவிட்டன.

கிப்ளிங் வர்ணித்திருப்பதுபோல் கிலாக்கிய உள்ள மாண்டலே வெற்றி மற்றொரு முக்கியத்வமுள்ள பெரிய வெற்றியை மறை முகப்படுத்துகிறது. ஜெர்மனியைப்போல் இரண்டு மடங்குள்ள தரை பிரதேசத்திலிருந்தும் மலேயா கடற்கரையிலிருந்து பிரம்மபுத்ரா நதி முகத்வாரம் வரையிலுமுள்ள கடற்பிரதேசத்திலிருந்தும் ஜப்பானிய விமான பலம் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது.



இந்த நடவடிக்கையும், பிரிடிஷ், அமெரிக்க, ஆபிரிக்க, சீன, இந்திய ஸோல்ஜர்களின் பூரா சேவையும் ஐரோப்பிய நடவடிக்கையினால் மறை முகப்படுத்தப்பட்டுவிட்டன. பர்மா நடவடிக்கை ருசியற்றதாக இருந்தபோதிலும் அது ஒரு அழகான உபரி சம்பவமாகும். அது உருவாக இல்லாதது போல் தோன்றுகிறது.

ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதால் இந்தத் தோற்றம் முற்றிலும் மாறிவிடும். உலகத்திலுள்ள மற்ற எவர்களையும்விட முன்னணியிலிருப்பதும் அதனால் தூரக்கிழக்கு விவகாரங்களில் கவனம் செலுத்தாதுமான பிரிடிஷ் மக்களும், ஓட்டியில்லாத வெடி குண்டு வீச்சின் விளைவுகளை அறியாத அமெரிக்கர்களும், உலக விஷயங்களில் பர்மா ஒரு பங்கெடுத்துக் கொள்ளும் நிலைமையிலிருந்துவருகிறது என்றறிவார்கள். அது இனிமேல் ஜப்பானின் எல்லைப்புற ஸ்தானம் என்று கருதப்படமாட்டாது.

ஏனெனில் பர்மா டோக்கியோவிலிருந்து 3,000 மைல்கள் தாண்டியிருக்கிறது. ஒரு புஜம் லாப்ரடாருக்கும் மற்றொன்று தெற்கு அட்லாண்டிக்கும் பரவியுள்ள போரை ஜெர்மனி நடத்தியது போலவும், அல்லது ஒரு புஜம் ஸ்பிட்ஸ்பர்கனிலும் மற்றொன்று அஸோர்ஸ் தீவிலும் பரவியுள்ள போரை அமெரிக்கா நடத்துவது போலும் ஜப்பான் போரை நடத்த வேண்டும்.

பர்மாவின் அமைப்பையும், ஆங்கிலேயர்களின் துணிவுள்ள நடவடிக்கையையும் விமான மூலம் ஸப்ளை செய்வதின் உபயோகத்தையும் இம்பாலிலிருந்த ஜப்பானியர் அறியாத பின் பர்மாவில் ஏற்பட்ட மாறுதல்களையும் நாம் யதார்த்தமாகவும் தெளிவாகவும் காண்கிறோம். சீதோஷ்ண அமிதமும், நிலைமையுள்ள அசௌகரியமும், நோயும், உள்ள பர்மாவில் படைகளின் குயுக்திக்கும் தீரத்துக்கும் தகுந்த பலன் கிடைத்துவிட்டது.

காட்டுப் போருக்குரிய உயர்வான முஸ்தீப்புகளும் வெறிபிடித்த தீரமும் உள்ள ஜப்பானியர் கோரமான எதிரி என்று நினைத்து பர்மா போரின் தோற்றம் ருசியற்றதென்று எச்சரிக்கை செய்தது அனாவசியம் என்று நினைக்கிறீர்களா? இதற்குக் காரணம் இந்தப் போரைப்பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாதென்பதுதான். இந்தப் போரில் ஈடுபட்ட ஸோல்ஜர்களும் விமானிகளும்கூட அவ்விதம்தான் நினைக்கிறார்கள்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நமது ஸோல்ஜர் அதிக உஷ்ணமும், மலேரியாவும், மனதைக் கலங்கும்படி செய்யும் ஒரு கோரமான பிராந்தியத்தில் போர் புரிந்தான் என்று சொல்லுகிறேன்.

பர்மாவில் நமது படைகளின் சேவையை நாம் மறந்துவிடக்கூடும். அவ்விதம் நாம் மறந்துவிடக்கூடாதென்று அவர்கள் வேண்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களின் செய்கைகளை இனிமேல் மறை முகமாக வைத்துக்கொள்ளக்கூடாது.

ஏனெனில் அவர்களின் யுத்தம் இன்னும் ஒரு பருவ காலமாவது மலேரியா நிரம்பிய பிரதேசத்தில் நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் வெற்றி கிடைக்கும்.

## பிரிடிஷ் போர் விமானங்கள் தூரக்கிழக்குக்கு அனுப்பப்படுகின்றன.

### போக்குவரத்து விமானப்படையின் ஏற்பாடுகள்.

(டெயிலி மெயில்).

பிரிடிஷ் போக்குவரத்து விமானப்படையானது ஜப்பானிய யுத்தத்துக்காக ஸ்பிட்பயர்களையும் மற்ற ஒருவர் செல்லக்கூடிய சண்டை விமானங்களையும், தூரக்கிழக்குக்கு அனுப்பி வருகிறதென்று நேற்று இரவு தெரியவந்தது.

மணிக்கு 400 மைல்கள் செல்லும் 12 விமானங்களுக்கு இருவர் செல்லும் மஸ்கிடோ அல்லது போபைடர் விமானங்கள் துணைக்காவல் புரிகின்றன. அவைகளுக்கும் சண்டை விமானங்களுக்கும் ரேடியோ மூலம் அடிக்கடி தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. அவன் விமானம் ஓட்டுவதைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. முன்னே செல்லும் விமானம் திசையைக் கண்டுபிடித்துச் செல்லும். மற்ற விமானங்கள் அவற்றைப் பின்பற்றிச் செல்ல வேண்டும்.

போர்ட்ரீத்திலிருந்தும், கார்ன்வாலிலிருந்தும் புறப்படும் விமானக்கூட்டம் பிரான்ஸிலும், வடக்கு ஆபிரிக்காவிலும் இறங்கி எண்ணெய்யை நிரப்பிக்கொண்டு பிரயாணத்தைச் சுலபமாகச் செய்து முடிக்கக்கூடும். உத்தமபக்ஷமாக விமானங்கள் 500 மைல்கள்தான் ஒரே மூச்சில் செல்லும். ஆகையால் சண்டை விமானங்களுக்கு உதவி எண்ணெய் டாங்கிகள் அமைக்கவேண்டிய அவசியமில்லை.

தூரக்கிழக்குக்கு அனுப்புவதற்குமுன் இந்த விமானங்கள் உஷ்ணரேகை பிரதேசத்துக்குச் செல்ல யுக்தமாகத் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. போர் வட்டாரத்துக்கு

வந்த உடனேயே அவைகள் போருக்குத் தயாராக இருக்கின்றன. ஹரிகேன்களும், மஸ்டாங்களும், ஹெல்காட்டுகளும், ஸ்பிட்பையர்களும் துணைக்காவல் புரிகின்றன.

## யுத்தக் கப்பல்களும் தூரக்கிழக்குப் போருக்குத் தயாராகுகின்றன.

### புதிய முஸ்தீப்புகள் அமைக்கப்படுகின்றன.

(அப்ஸர்வர் பத்திரிகை).

ஜப்பானியப் போருக்குக் கப்பல்களை அனுப்புவதற்கு அவைகளை ஒன்று திரட்டி அனுப்பினால் மட்டும் போதாது. போர் வீரர்களுக்கு தேக ஆரோக்கியமும், சந்தோஷமும், வீரமும் உண்டாகக்கூடிய வகையில் புதிய விரிவான முஸ்தீப்புகள் அமைக்கப்படவேண்டும். இந்துமகாசமுத்திரத்திற்கும் பசிபிக் மகா சமுத்திரத்திற்கும் கப்பல்களை அனுப்ப அவைகள் பிரிடிஷ் கப்பற் துறைகளில் திருத்தியமைக்கப்படுகின்றன.

அட்லாண்டிக்கில் செல்லுவதற்காக கப்பல்களில் அமைக்கப்பட்ட வசதிகள் ஜப்பானுக்கருகிலுள்ள சமுத்திரங்களில் வேனிற்காலத்திரங்களில் தைப் பொருத்துக்கொள்ளப் போதுமானதல்ல. சிங்கப்பூரைச் சுற்றிலும் நியூகினியாவைச் சுற்றியுமுள்ள சமுத்திரங்களிலும் இந்த நிலைமைதான். பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் எந்தக் கடலிலும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றன.

யுத்தத்தினால் அநேக பிரச்னைகளும் தோன்றிவிட்டன—விளக்கவிப்பு—காற்றுவரும் துவாரம் உள்பட எல்லா திறப்பு வழிகளும் மூடப்படவேண்டும். புதிய அமைப்புகளுக்காக புதிய வேலைக்காரர்கள் தேவைப்படும். ஆஸ்டிக் என்னும் அமைப்புக்கு விசேஷ வேலைக்காரர்கள் வேண்டும். மேலும் துறைமுகத்திலிருந்து 1,000 மைல்கள் தாண்டி யாதொரு சம்பவம் அன்னியிலும் ரோந்து நடவடிக்கை இடைவிடாது நடைபெறவேண்டும்.

தூரக்கிழக்கிலுள்ள பலரகக் கப்பல்களின் நிலைமையைக் கண்டுபிடிக்க நிபுணர்களின் கோஷ்டி சமீப காலத்தில் அனுப்பப்பட்டது. சண்டைக் கப்பல், நாசகாரியின் பிரச்னைகள் வெவ்வேறு என்று சொல்லுவதற்கில்லை. அவர்கள் விஞ்ஞான சாஸ்திர முறையில் நல்ல காற்றுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஒரு பெரிய கப்பலில் இதற்காக 1,000 கெஜமுள்ள குழாய்கள் அமைக்கப்படவேண்டும்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 257. (4-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23- 7-45 | குடுமியாமலை | ... மாலை 7.00 | 26- 7-45 | அரிமளம் | ... மாலை 7.00 |
| ,, | பாம்பூர் | ... ,, 7.30 | ,, | ராயவரம் | ... ,, 7.30 |
| 24- 7-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | 27- 7-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| 25- 7-45 | மலையடிப்பட்டி | ... ,, 7.00 | 28- 7-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | கிள்ளுகோட்டை | ... ,, 7.30 | 29- 7-45 | ஆராக்காடு | ... ,, 7.00 |
| | | | ,, | கோட்டைக்காடு | ... ,, 7.80 |

### பிரஸங்கம் 258 (5-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30- 7-45 | மலைக்குடிப்பட்டி | ... மாலை 7.00 | 2- 8-45 | அண்டக்குளம் | ... மாலை 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, 7.30 | ,, | கிள்ளனூர் | ... ,, 7.30 |
| 31- 7-45 | குழிபிறை | ... ,, 7.00 | 3- 8-45 | கொடும்பாளூர் | ... ,, 7.00 |
| ,, | செவலூர் | ... ,, 7.30 | ,, | விராலூர் | ... ,, 7.30 |
| 1- 8-45 | பனையப்பட்டி | ... ,, 7.00 | 4- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | ராங்கியம் | ... ,, 7.30 | 5- 8-45 | பூவரசகுடி | ... ,, 7.00 |
| | | | ,, | வேங்கடக்குளம் | ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 24—7—45 | வடகாடு. | 31—7—45 | பேராம்பூர். |
| 25—7—45 | கோவிலூர்-புதுப்பட்டி. | 1—8—45 | காரம்பக்குடி. |
| 26—7—45 | குழிபிறை. | 2—8—45 | ஆலங்குடி. |
| 27—7—45 | புதுக்கோட்டை. | 3—8—45 | புதுக்கோட்டை. |
| 28—7—45 | பொன்னமராவதி. | 4—8—45 | வெட்டன்விடுதி. |
| 29—7—45 | தீத்தான்விடுதி. | 5—8—45 | மருதன்கோன்விடுதி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,550—24-7-45.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஜூலை மீ 30உ திங்கட்கிழமை [நெ. 258

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLVIII.

## ஜப்பானுக்கு இறுதிக் கடிதம்.

### சரணாகதி செய்யவேண்டும் இல்லாவிடில் நிர்மூலமாக்கப்படுவீர்கள்.

அமெரிக்க ஜனாதிபதியும், சீன குடியரசு தேசீய நிர்வாகத்தின் ஜனாதிபதியும், அகில பிரிடனின் பிரதம மந்திரியுமான நாங்கள், மிலியன்கள்கணக்கான ஜனங்களின் பிரதிநிதிகள் என்ற ஹோதாவில் கூடிப்பேசி யுத்தத்தை நிறுத்த ஜப்பானுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதென்று முடிவு செய்திருக்கிறோம்.

மேற்கிலிருந்து வந்த உதவிச் சேனைகள், விமானப்படைகள் உதவிகொண்ட அமெரிக்க, பிரிடிஷ் சாம்ராஜ்ய, சீன, தரைப்படைகளும், கடற்படைகளும், விமானப்படைகளும் ஜப்பானை இறுதியில் தாக்கத் தயாராக இருக்கின்றன. ஜப்பானின் எதிர்ப்பு நிற்கும் வரையில் யுத்தத்தை நடத்துவது என்ற நேசதேசத்தாரின் உறுதி ராணுவ சக்தியை வளர்ச்சிசெய்து வருகிறது. அதற்கு அதிக உற்சாகம் ஊட்டுகிறது.

உத்வேகத்துடன் எழுந்த சர்வதேசங்களின் சக்தியை ஜெர்மனி நிஷ்ப்பிரயோஜனமாக எதிர்த்து நின்று இறுதியில் இகழ்ச்சி பெற்றதென்ற கோரமான நிகழ்ச்சி ஜப்பானுக்கு வழிகாட்டியாக இருக்கும். நாஸிகளைத் தாக்கி, பிரதேசங்களைப் பாழாக்கி, தொழிற்சாலைகளை அழித்து, ஜெர்மன் மக்களின் வாழ்க்கை முறையையும் கெடுத்துவிட்ட சக்தியைவிட பலமான சக்தி ஜப்பானைத் தாக்கக் குவிந்துவிட்டது.

உறுதியை உபபலமாகக் கொண்ட எங்களுடைய பூராச்சக்தியையும் நாங்கள் உபயோகித்தால் ஜப்பானிய கவசம் பூண்ட படைகளின் பூர்ணமான நாசம் நிச்சயமாக ஏற்படும். மேலும் ஜப்பானும் நிர்மூலமாக்கப்படும் என்பது திண்ணம்.

ஜப்பானிய சாம்ராஜ்யத்தை அபத்தமான திட்டங்கள் மூலம் அழிக்கப்படும் கதிக்குக் கொண்டுவந்த அகம்பாவம் பிடித்த ராணுவ ஆலோசகர்களின் ஆக்ஞைக்குட்பட்டிருப்பதா அல்லது புத்திசாலித்தனமான மார்க்கத்தைப் பின்பற்றுவதா என்று ஜப்பான் முடிவு செய்யும் காலம் வந்துவிட்டது.

நாங்கள் கீழேகண்ட நிபந்தனைகளை விதிக்கிறோம். அவற்றிலிருந்து நாங்கள் பிறழ மாட்டோம். இதற்கு மாறுதலானவைகள் கிடையாது. தாமதத்தையும் நாங்கள் பொறுக்க மாட்டோம்.

உலக வெற்றிக்காகப் போர் புரியவேண்டுமென்று ஜப்பானிய மக்களை ஏமாற்றி தவறான வழியில் நடத்தியவர்களின் அதிகாரமும் செல்வாக்கும் இனிமேல் தலைகாட்டாமல் அழிக்கப்படவேண்டும். ஏனெனில் உலகத்திலிருந்து பொறுப்பற்ற ராணுவமுறை அப்புறப்படுத்தப்பட்டாலொழிய புதிய உலக சமாதானமும், பத்திரமும், நீதியும் அசாத்தியமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

இவ்விதமான புதிய உலக ஒழுங்குமுறை ஏற்படும் வரையிலும், ஜப்பானின் யுத்த சக்தி அழிக்கப்பட்டுவிட்டதென்று திருப்திகரமான ருஜுக் கிடைக்கும் வரையிலும் நேசதேசத்தார் குறிப்பிடும் ஜப்பானிய கேந்திரஸ்தானங்கள், நாங்கள் விவரித்திருக்கும் லக்ஷியங்களைப் பெறுவதற்காக, எங்களால் ஆக்கிரமிக்கப்படும்.

### ராணுவ வருப்பு ஒழிக்கப்படவேண்டும்.

கெய்ரோ மகாநாட்டின் முடிவுகள்* நிறைவேற்றப்படவேண்டும். ஜப்பானியரின் ஆக்ஷி, ஹான்ஷூ, ஹோக்கேடோ, கியூஷூ, ஷிகாகு, மற்றும் நாம் குறிப்பிடும் சிறிய தீவுகளில் நடைபெறவேண்டும்.

பூர்ணமாக நிராயுதபாணிகளாக்கப்பட்டபின் ஜப்பானிய ராணுவப்படைகள் சொந்த ஊர்களுக்குச் சென்று அங்கு சமாதான முறையில், தொழில் முறைகளைக் கையாளலாம்.

---

### *கெய்ரோ அறிக்கை.

ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்று கோரியுள்ள பாட்ஸ்டாம் அறிக்கை ஜப்பான் சம்பந்தமான கொள்கையைப்பற்றி அகில பிரிடனும், அமெரிக்காவும், சைனாவும் வெளியிட்டுள்ள இரண்டாவது அறிக்கையாகும். கெய்ரோ மகாநாட்டுக்குப்பின் 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதியன்று முதல் அறிக்கை வெளியிடப்பட்டது. அப்பொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சிலும், ஜெனரலிஸிமோ சியாங் கேஷேக்கும் கோபுரங்களின் நிழலில் கூடிப்பேசி பின்கண்ட கோரிக்கையை வெளியிட்டார்கள்:—

அநேக ராணுவ தூது கோஷ்டிகளும், ஜப்பானைக் குறித்து எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி முடிவுக்கு வந்துவிட்டார்கள். காட்டுமிராண்டிகளான எதிரிகளைத் தங்குதடையன்றியில் கடல் மூலமாகவும், தரை மூலமாகவும், ஆகாயத்திலிருந்தும் பலமாகத் தாக்குவதென்று மூன்று பெரிய வல்லரசுகளும் உறுதிகொண்டுவிட்டார்கள். அவர்களின் தாக்குதல் வலுவடைந்துவருகிறது. முப்பெரு வல்லரசுகளும் ஜப்பானின் அக்கிரமப்போரைத் தடுத்து அதை சிக்ஷைக்குட்படுத்த இந்தப்போரை நடத்திவருகிறார்கள். அவர்கள் லாபம் சம்பாதிக்க உத்தேசிக்கவில்லை. தேசங்களைப் பிடிக்கவேண்டுமென்ற ஆசை அவர்களுக்குக் கிடையாது.

1914-ம் வருஷத்தில் துவங்கிய முதல் உலக யுத்தத்துக்குப்பின் ஜப்பான் கைப்பற்றிய, அல்லது ஆக்கிரமித்த பசிபிக் தீவுகள் எல்லாவற்றையும் ஜப்பானிடமிருந்து பிடுங்கிவிடவேண்டுமென்றும், சைனாவிடமிருந்து ஜப்பான் அக்கிரமமாக கைப்பற்றிய மஞ்சூரியா, பார்மோஸா, பார்மோஸாவிற்கு மேற்கில் 48 தீவுகள் உள்ள பாஸியாடோர்ஸ் முதலியவைகளும் சீனக்குடியரசுக்குத் திருப்பிக்கொடுக்கப்படவேண்டுமென்றும் நேசதேசத்தார்கள் உத்தேசித்திருக்கிறார்கள்.

பலாத்காரத்தினாலும், பேராசைகொண்டும் ஜப்பான் பிடித்துக்கொண்ட எல்லா நாடுகளிலிருந்தும் ஜப்பான் துரத்தியடிக்கப்படும். கொரியா மக்களின் அடிமைத்தனத்தைக் கவனித்துவரும் மூன்று பெரிய வல்லரசுகளும் காலக்கிரமத்தில் கொரியாவுக்கு சுதந்திரமும், சுயேச்சையும் வழங்குவதென்று உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்த நோக்கங்களுடன் மூன்று வல்லரசுகளும் ஜப்பானுடன் போரில் ஈடுபட்ட மற்ற நேசதேசங்களுடனும், ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்வரையில் கடுமையான நீண்டகால நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவார்கள்.



### நேசதேச நிபந்தனைகள்.

ஜப்பானிய ஜாதியையோ அல்லது ஜப்பானிய தேசத்தையோ அழித்துவிட வேண்டுமென்று நாங்கள் உத்தேசிக்கவில்லை. எல்லா யுத்தக் குற்றவாளிகளும், நமது கைதிகளுக்குக் கொடுமைகளை விளைவித்தவர்களும் கடுமையான சிக்ஷைக்குட்படுத்தப்படுவார்கள்.

ஜப்பானிய மக்களிடையே ஜனநாயக எண்ணங்களை உண்டுபண்ணுவதற்கும் பலப்படுத்துவதற்கும் ஏற்படக்கூடிய இடைஞ்சல்களை எல்லாம் ஜப்பானிய நிர்வாகம் அகற்றவேண்டும்.

பேச்சுரிமை, மதவுரிமை, அபிப்பிராயவுரிமை, மானிட வர்க்கத்தின் அடிப்படையான உரிமைகளுக்கு மதிப்பு முதலியவைகள் வழங்கப்படும்.

### ஜப்பானிய தொழிற்சாலைகள்.

ஜப்பானின் பொருளாதாரத்துக்கு அவசியமானதும் சாமானக நஷ்ட ஈடு கொடுக்க அவசியமானதுமான தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படும். யுத்தத்தில் மறுபடியும் ஆயுதங்களை வழங்கக்கூடிய தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படமாட்டா.

இயற்கைப் பொருள்கள் கட்டுப்பாடு செய்யப்பட்டு வந்தாலும் இந்தத் தேவைகளுக்கு அவைகள் ஸப்ளை செய்யப்படும். இறுதியில் உலக வியாபாரத்தில் கலந்துகொள்ளுவதற்கும் ஜப்பான் அனுமதிக்கப்படும்.

இந்த லக்ஷியங்கள் பூர்த்தியானவுடனும் ஜப்பானிய சுதந்திர மக்களின் அபிப்பிராயப்படி சமாதான நோக்கமுள்ள பொறுப்புள்ள நிர்வாகம் அமைக்கப்பட்ட பின்னும் ஜப்பானிலிருந்து ஆக்கிரமிப்பு நேசதேசப்படைகள் வாபஸ் பெறப்படும்.

ஜப்பானின் கவசம் பூண்டபடைகள் நிபந்தனையின்றி சரணாகதி செய்து விட்டோமென்றும் இது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கிறதென்ற போதுமான வாக்குறுதியையும் தருகிறோமென்றும் வெளியிடும்படியாக நாங்கள் ஜப்பானிய நிர்வாகத்துக்கு உத்தரவிடுகிறோம்.

அவ்விதம் ஜப்பான செய்யாவிடில் அது வெகு சீக்கிரமாகவும், பூராவாகவும் நாசமாக்கப்படும்.

1945-ம் வருஷம் ஜூலை மாதம் 26-ம் தேதியாகிற இன்று அமெரிக்க, சீன, பிரிடிஷ் நிர்வாகிகள் கையெழுத்திட்டோம்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 20—7—45. (வெள்ளிக்கிழமை). | ஜப்பானிய நகரங்கள் பலமாக வெடி குண்டுகளால் தாக்கப்படுகின்றன. |
| 21—7—45 (சனிக்கிழமை). | ஜப்பானியர்கள் சைனாவிலிருந்து பின்வாங்குகிறார்கள். |
| 23—7—45 (திங்கட்கிழமை). | பிடேயனின் குற்ற விசாரணை பாரிஸில் ஆரம்பமாகிவிட்டது. |
| 26—7—45 (வியாழக்கிழமை). | பிரிடிஷ் தேர்தல் முடிவுகள்—தொழிற்கட்சி மற்ற எல்லா கக்ஷிகளையும்விட மிகவும் அதிகமான ஸ்தானங்களைப் பெற்றது. |
| 27—7—45 (வெள்ளிக்கிழமை). | Mr. சர்ச்சில் ராஜினாமச் செய்தார்—Mr. அட்லி தொழிற்கட்சி நிர்வாகத்தை அமைக்கிறார். |
| | நேச தேசத்தார்கள் ஜப்பானுக்கு இறுதிக் கடிதம் அனுப்பி சரணாகதி நிபந்தனைகளை விளக்கியிருக்கிறார்கள். |

## (B)-செய்திச் சுருக்கம்.

**ஜப்பான்.** ஜப்பான் கடலிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் தாக்கப்படுகிறது. ஹொன்ஷூவிலுள்ள ஹிடாசி, சோஷி, பூஜி, ஒகாசாக், ஆமாகாஸாகி, குஷிமோடோ, குரா, கியூஷிக்குத் தெற்கிலுள்ள காகோஷிமா, கியூஷூக்கும் ஆகினுவாவுக்கும் இடையிலுள்ள அமாமி, டோக்கியோவுக்கு சமீபத்தில் யோகோசுகா, கடற்படை தளத்தில் வைக்கப்பட்டிருந்த நாகாடோ என்ற ஜப்பானிய யுத்தக்கப்பல், நாகோயா, ஒசாகா, கோப் முதலியவைகள் இந்த வாரத்தில் தாக்கப்பட்டன.

**போர்னியோ.** பாலிக்பாபானுக்கு வடகிழக்கிலுள்ள சாம்போட்ஜா என்ற எண்ணெய்ப் பிரதேசமும், டெம்பாடியாங் என்ற நகரமும் பிடிபட்டன. பாலிக்பாபானுக்கு வடமேற்கில் 14 மைல்களில் மற்றொரு இடத்தில் படைகள் இறங்கிவிட்டன.

**சைனு.** 1,000 வெடி விமானங்கள் ஷாங்கே பிராந்தியத்தில் ஒரு மணி நேரம் குண்டு மாரி பொழிந்தன. சீனர்கள் குவேலியனுக்கு மேற்கில் 25 மைல்களிலுள்ள பீசௌவை ஆக்கிரமித்தார்கள். ஜப்பானியர்கள் வானனைப் பிடித்தார்கள். காண்டன்—ஹாங்கொங் இருப்புப்பாதைக்குக் கிழக்கில் ஜப்பானியத் தாக்குதல் தடுக்கப்பட்டது.

**பர்மா.** பெகுயோமாஸ் போர் ஜப்பானுக்கு பலமான தோல்வியுடன் முடிந்தது. ஜூலை 21-ம் தேதியன்று ரெங்கூனுக்கு வடக்கில் 140 மைல்களிலுள்ள லாகி ரயில்வே ஸ்டேஷனைச்சுற்றி ஜப்பானியர்கள் போர் தொடுத்தார்கள். தப்பியோட முயன்ற ஜப்பானியப் படைகளின் பெரும்பாகம் கொல்லப்பட்டது.

நேசதேசப் படைகள் ரெங்கூனுக்கும் சிங்கப்பூருக்கும் பாதி வழியில் மலேயா தீபகற்பத்திற்கருகிலுள்ள பூகெட் தீவில் இறங்கிவிட்டன.

---

### சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**19—7—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள், போக்குவரத்துகள் தொழிற்சாலை இலக்குகள்.—குயுஷூ (Kyushu).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**20—7—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

5 தொழிற்சாலைகள்.—ஹொன்ஷூ (Honshu). விமான நிலயங்கள்,—ஷாங்அய் (Shanghai) பிரதேசம். தொழிற்சாலைகள் இதர இலக்குகள்.—குயுஷூ (Kyushu).

பர்மா (Burma).

அதிக மழையால் நேசதேச விமான நடவடிக்கை இல்லை.

**21—7—45** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—மத்திய குரைல்ஸ் (Centrl Kuriles).

பர்மா (Burma).

களஞ்சியங்கள்.—லிங்கோரா (Lingora). ஜப்பானிய துருப்புகள்.-ரங்கூன் (Rangoon), மாண்டலேயிர (Mandalay) தேசத்தின் கிழக்கிலும் மேற்கிலும்.

**22—7—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

நிலக்கரிப் பிரதேசங்கள்.—ஹொன்ஷூவிலுள்ள யூப் (Ube).

பர்மா (Burma).

எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள்.—(Pazuayaung) பாஜௌன்யாங்கின் வடமேற்கு.

**23—7—45** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள், மோட்டார் போக்கு வரத்துகள் இதர இலக்குகள்.—போர்னியோவின் கிழக்கிலும், வடமேற்கிலும் ரயில்வே ஸ்தாபனங்கள்.—இந்தோ-சைனு (Indo-Chine).

பர்மா (Burma).

கிராமங்கள் ஜப்பானிய தற்காப்பு ஸ்தாபனங்கள்.—ஸிட்டாங் (Sittang) முகத்துவாரம்.

**24—7—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

மாலுமா இலக்குகள்.—குரைல்ஸ் (Kuriles). இலக்குகள்.—ஹொன்ஷூவின் Honshu) தென் பகுதி.

பர்மா (Burma).

ஜப்பானியத் துருப்புகள்.—டவுன் கூவிற்கும் (Toungoo) நியாங்லெப்பினிற்கும் (Nyaunglebin) இடையில் தப்பமுயன்றவை.



**25—7—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஹொன்ஷூ (Honshu) தீவு, போர்னியோ (Borneo).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

### எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**20—7—45.** (வெள்ளிக்கிழமை) முதல் **26—7—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**கண்ணாமூச்சி விளையாட்டு.** சென்ற வாரத்தில் ஜப்பானை பலமாகத் தாக்கிய பிரிடிஷ் அமெரிக்க கடற்படைகள் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் மறைந்திருந்து, மறுபடியும் தோன்றி குஷிமோடோவிற் கருகிலுள்ள கடல் விமான தளத்தையும் விமான தளத்தையும் தாக்கின. கடற்தளபதி நிமிட்ஸிடமுள்ள விமானந் தாங்கிகளில் சென்ற விமானங்கள் டோக்கியோ விரிகுடாவிலுள்ளதும் குரீ, கோப்புக்கு சமீபத்திலுள்ள ஜப்பானிய யுத்தக் கப்பல்களைத் தாக்கின. ஜப்பானியக் கடற்படையை இறுதியாக வேட்டையாட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று நம்பப்படுகிறது. ஜப்பானிடம் பின்கண்ட கப்பல்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான்கு யுத்தக் கப்பல்கள், (இரண்டு பழையரகம், இரண்டு புதிய ரகம்). ஒரு பெரிய விமானந்தாங்கி, சில சிறிய விமானந்தாங்கிகள், சில சஞ்சாரிகள், 30 நாசகாரிகள். கண்ணாமூச்சி விளையாட்டு நடைபெறுகிறது. ஜப்பானியக் கப்பல்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. நேசதேசக் கப்பல்கள் அவைகளைக் கண்டுபிடிக்க முயலுகின்றன.

வி வி வி வி வி

**பசிபிக்கில் பிரிடிஷ் கடற்படை.** வெகுகாலமாக உள்ள வழக்கத்தை ஒட்டி பிரிடிஷ் கடற்படை இலாகா போரிலீடுபட்டிருக்கும் படைகளைப் பற்றி தகவல்களை வெளியிடுவதில்லை என்ற காரணத்தினால் அவதூறு பேசுகிறவர்கள் பிரிடன் பசிபிக்குக்குப் போதுமான கப்பல்களை அனுப்பவில்லையென்றும் அனுப்பப்பட்டவைகளும் பழைய ரகத்தைச் சேர்ந்தவைகள் என்றும் குறைசொல்லி வருகிறார்கள். இந்த அபவாதம் தவறு என்று ருஜூச்செய்ய கடற்படை இலாகா கப்பல்களின் பெயரை வெளியிட்டிருக்கிறது. பத்திரத்தை உத்தேசித்து அனுஷ்டித்து வந்த விதியையும் அது மீறிவிட்டது. உண்மையில் அநேக பிரிடிஷ் கடற்படைகள் ஜப்பானைத் தாக்கி வருகின்றன. அவைகளில் மிகவும் சக்திவாய்ந்த கப்பல்களும் இருக்கின்றன. அவையெல்லாம் நவீன முறையில் கட்டப்பட்டு முஸ்தீப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் போர் கப்பற்படை பூராவும் பசிபிக்கிலிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. சக்தி வாய்ந்த ஒரு பிரிடிஷ் கடற்படை சைபீரியாவிலிருந்து ஜப்பானிய கடற்கரை வரையிலுள்ள 2,300 மைல்கள் வட்டாரத்தில் சஞ்சாரம் செய்து, அங்கிருந்து தென்கிழக்கு பசுபிக் வரையிலும் நடமாடி வருகிறது.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை.** இடைவிடாது நடைபெறுகிறது. இந்த வாரத்தில் முக்யமாக ஹொன்ஷூ தாக்கப்பட்டது. ஜூலை 25-ம் தேதி பிரிடனுக்கு சிறந்த விமான நடவடிக்கை நாளாகும். விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் புறப்பட்டு குரெக்கு அருகிலுள்ள கப்பல்களையும், தளங்களையும் தாக்கி ஆயுத சாலையின் 56 சதவிகிதத்தை அழித்து விட்டன.

வி வி வி வி வி

**விமான நடவடிக்கை புள்ளி விவரம்.** ஜூலை 9-ம் தேதி முடிய ஜப்பானின் 33 மிகப் பெரிய நகரங்களில் 18 தாக்கப்பட்டன. மூன்று நகரங்களின் மூன்றில் இரண்டு பாகம் நாசமாகி விட்டது. டோக்கியோ, கோப், யோகஹாமா, கொகொஷிமா உள்பட்ட ஆறு நகரங்களின் பாதிபாகம் அழிக்கப்பட்டது. மார்ச்சு 23-ம் தேதி முதல் ஜூன் 26-ம் தேதி வரையில் மூன்று மாதங்களில் ஜப்பான் 8,500 விமான எஞ்சின்களையும் 5,025 விமானங்களையும் இழந்தது.

**இன்றும் வந்துகொண்டிருக்கின்றன.** அமெரிக்க விமானப்படையின் டெபுடி கமாண்டிங் ஜெனரலான லெப்டினென்ட் ஜெனரல் டியேகர் இப்பொழுது உபயோகிக்கப்படுவதைவிட பெரியதாக
வும் கனமுள்ளதுமான சூபர் பறக்கும் கோட்டைகள் விமான நடவடிக்கைக்கு அனுப்பப்படு
மென்றும் ஜெர்மனியைவிட ஜப்பான் அதிகபலமாகத் தாக்கப்படுமென்றும் வெளியிட்டிருக்
கிருர். ஐரோப்பாவில் தனிப்பட்ட தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன. ஜப்பானில் யுத்த
தளவாட உற்பத்தி குடித்தொழிலாகவும் சிறுபான்மையாகவும் நடைபெறுவதினால், நகரங்கள்
பூராவாகவும், வாசஸ்தலங்களும் அழிக்கப்படும்.

பசிபிக்கில் நேசதேச விமானப்படையின் கமாண்டரான ஜார்ஜ் C. கென்னி, பிடிவ்
விமானப்படையுள்பட 10,000 விமானங்கள் ஜப்பானைத்தாக்குமென்றும் உலகத்தில் இது
வரையில் காணப்படாத மிகப்பெரிய நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென்றும் ஜப்பானுக்கு
எச்சரிக்கை செய்திருக்கிருர்.

ஜப்பானிய சாம்ராஜ்யத்தின் பாகங்களான, கொரியா, மஞ்சூரியா, சிங்கப்பூர் முதலியவை
கள் தாக்கப்படும். ஜப்பானில் தற்காப்புகள் நொருக்கப்படும். போக்குவரத்து மார்க்கங்
கள் அழிக்கப்படும். காலநிலை சௌகரிய மேற்பட்டால் ஒவ்வொரு மணியும் 5,000 டன்கள்
எடையுள்ள வெடிகுண்டுகள் வீசப்படும்.

வி வி வி வி வி

**நேசதேச விமான ஆதிக்கம்.** ஆகையால் நேசதேசத்தார்கள் விமான ஆதிக்கம் பெற்று
விட்டார்கள். அதாவது தூரம் என்ற ஒரு இடஞ்சலைத்
தாண்டி விட்டார்கள். முதலாவதாக, ஜப்பானுக்கருகில் தளங்கள் சம்பாதிக்கப்பட்டன.
இரண்டாவதாக, வெகுதூரம் செல்லும் விமானந்தாங்கிகள் கட்டப்பட்டன. மூன்ருவதாக,
விமானந்தாங்கிகள் மூலம் விமானங்கள் அடிக்கும் தூரத்திற்குக் கொண்டுபோகப்பட்டன.
விமான ஆதிக்கம் ஏற்பட்டதென்று கடற்தளபதி நிமிட்ஸ் வெளியிட்ட அறிக்கை வீண்
பீத்தலல்ல. விமான ஆதிக்கம் என்பது இஷ்டப்படி நடமாடுவது, அதே சமயத்தில்
எதிரியை நடமாடவொட்டாமல் தடுப்பதும்தான். இதுதான் இன்று ஜப்பானில் நடைபெறு
கிறது. நேசதேச விமானங்கள் ஜப்பானை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தாக்கி
வருகின்றன. ஜப்பானிய விமானங்கள் வேவு பார்ப்பதைத்தவிர மற்றபடி வெளியே
வருவதில்லை.

வி வி வி வி வி

**ஜப்பானிய விமானப்படை எங்கே?** ஜப்பானியக் கடற்படை வெளி வராததற்குக் காரணம்
தெளிவானது. நேசதேசத்தாருடைய சக்திவாய்ந்த
கடற்படை நடமாடும் பொழுது ஜப்பானியக் கப்பல்கள் வெளி வந்தால் நாசத்தை நிச்சய
மாக விலைக்கு வாங்கியது போலாகும். ஆகையால்தான் அவைகள் ஒளிந்துகொண்டிருக்
கின்றன. அல்லது கடற்கரை ஓரமாகச் செல்லுகின்றன. ஆகிலும் படைபலம் மிகுந்த
ஜப்பானிய விமானப்படை, நகரங்களும் தொழிற்சாலைகளும் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்
கும் பொழுதும், தளங்கள் அழிக்கப்படும் பொழுதும் என்னசெய்துகொண்டிருக்கிறது.
ஜப்பானுக்கு எண்ணெயும், வேலைக்காரர்களும் குறைவாக இருக்கலாம். ஆகிலும் இது
நிலைமையை விளக்கி விடாது.

வி வி வி வி வி

**எதிரியின் தந்திரம்** ஜப்பான் பின்வருமாறு ஒலிபெருக்கியிருக்கிறது. "இறுதிப்
போர் மூளும் பொழுது, ஜப்பானிய புதிய ரகசிய
ஆயுதங்கள் புறப்பட்டு ஜப்பான் வெகு காலமாக அடக்கி வைத்திருந்த அடிக்கும் சக்தியை
வெளிப்படுத்தும். உயிரை வெறுத்துத் தாக்கும் படைகளுடன் ஒத்துழைத்து அவைகள்
படையெடுப்பவரை நிர்மூலமாக்கிவிடும்." அதாவது நேசதேசப் படையெடுப்பை மூலபலமாக
இருக்கும் விமானப்படைகளும் V. ஆயுதங்களும் தூரத்தியடித்துவிடும். இந்தத் தந்திரம்
ஜப்பானுக்கு விமான இளப்பம் ஏற்பட்டிருக்கிறதென்பதை வெளிப்படுத்துகிறது. இந்த
தந்திரத்தைதான் ஜெர்மானியர்கள் போரின் இறுதி கட்டத்தில் கையாண்டு வெகு சீக்கிரத்தில்
தோல்வியுற்ருர்கள். காமிகாசி அல்லது தற்கொலைப் படைகளின் தாக்குதல் பேரில்
முட்டாள்தனமாக நம்பிக்கை கொண்டு, ஜப்பானியர்கள் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்
சாலைகள் தீப்பற்றி எரிவதையும் தரையிலுள்ள விமானப்படை அழிக்கப்படுவதையும்,
ஆகாயப் போருக்கு இடமில்லாமலும், கண்ணூரப்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.



**இந்த V. ஆயுதங்களும்** ஜெர்மன்கூட்டாளியிடமிருந்து ஜப்பான் கற்றுக்கொண்ட
மற்றெரு முறை. ஜெர்மனி பிரிட்டனைத் தாக்கியது
போல அமெரிக்காவையும், பிரிட்டனையும் பழிவாங்கும் முறையில் தாக்குவதற்கு ஜப்பானின்
பிரதேச அமைப்பும், தூரமும் இடங்கொடுக்கவில்லை. ஆகிலும் ஜெர்மன் V. ஆயுத நட
வடிக்கை மூலம் போதுமான தொந்தரவு ஏற்பட்டதென்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது
தான். D தின நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டிருந்தால் V. ஆயுதங்களினால் நேசதேசத்
தாருக்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகரித்திருக்கும்.

காலதாமதம் ஏற்பட்டால் எக்காலத்திலும் நேசதேசத்தாருக்கு அனுகூலம் ஏற்படு
மென்று நினைப்பது தவருகும். ரகசிய ஆயுதங்களை அபிவிருத்திசெய்யவும், அவைகளை
உபயோகிக்கவும், ஜப்பானுக்கு அவகாசம் அளிக்கப்பட்டால், ஜப்பானின் கஷ்ட அனுபவத்தை
நீடித்ததாகும். காலஹரணம் செய்வதில் பிரயோஜனமில்லை, படைகள் இறங்கியபின்
முன்னேற்றம் சாவதானமாகத்தான் நடைபெறும். ஜப்பானியர்கள் கடற் கரையிலுள்ள
மலை பிராந்தியத்திலுள்ள தற்காப்புகளை பலப்படுத்திவிட்டார்கள். ஐரோப்பாவில் நார்
மண்டியில் முன்னேறும் வாசல் சம்பாதிக்கப்பட்டபின் முன்னேற்றம் அற்புதமாகவும், துரித
மாகவும் நடைபெற்றது. சில வாரங்களுக்குள் பிரான்ஸ் விடுவிக்கப்பட்டது. 20 லக்ஷம்
துருப்புகளும் மிலியன்கள் கணக்கான உள்நாட்டு ரக்ஷகப்படைகளும் உள்ள ஜப்பானில் நட
வடிக்கை வேறுவிதமாக இருக்கும், கேயனில் நடைபெற்றதுபோல் நேசதேசத்தார்கள்
எதிரியைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடவேண்டும்.

வி வி வி வி வி

**அதிகப்படுத்துவரு.** இவையெல்லாவற்றையும் அறிந்து நேசதேசத்தார்கள்
தாக்குதல்களை அதிகரித்து வருகிருர்கள். அதன்
ராணுவ அதிகாரிகள் கூடிப்பேசுகிருர்கள். தென்கிழக்கு ஆசியாவின் உயர்தர நேசதேச
கமாண்டரான கடற்தளபதி லூயிமௌண்ட்பேடன் மணிலாவில் மாக்ஆர்தருடன் கூடிப்
பேசிவிட்டு உயர்தர அதிகாரிகளான ட்ருமான், ஸ்டாலின், சர்ச்சிலை பாட்ஸ்டாமில் சந்தித்துப்
பேசியபின் லண்டனுக்குச் சென்றிருக்கிருர். மூன்று வல்லரசுகளின் ஆலோசனையின்
முடிவாக, நேசதேச விமானங்கள் டோக்கியோவை விளாடிவாஸ்டாக் போன்ற ருஷ்ய தளங்
களிலிருந்து தாக்கக்கூடும். ஆகிலும் அடுத்த வருஷம் ஏப்ரல் மாதம் வரையில் அமுலி
லிருக்கக்கூடிய நடுநிலைமை ஒப்பந்தப்படி ருஷ்யா ஜப்பானை நேர்முகமாகத் தாக்காது.

டாக்டர் சூங் மாஸ்கோவுக்குச் சென்றதும் அவர் மறுபடியும் மாஸ்கோவுக்குத் திரும்பி
வருவாரென்பதும், பாட்ஸ்டாமில் ஜப்பானிய பிரச்னைதான் முக்கியமாக விவாதிக்கப்பட்ட
தென்ற வதந்தியும் நேசதேச சரணகதி நிபந்தனையில் ருஷ்யாவும் கலந்துகொள்ளும் என்று
எதிர்பார்க்கலாமென்று அறிவிக்கின்றன. ஜப்பான் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்
அல்லது ருஷ்யா யுத்தத்தில் ஈடுபடுமென்பதை அது எதிர்பார்க்கவேண்டும்.

வி வி வி வி வி

**சமாதானப் பேச்சு.** எல்லாவற்றிற்கும் மேலாக, நேசதேசத்தார்கள் கடுமை
யான ஷரத்துகளை வற்புறுத்தாமலிருந்து அட்
லாண்டிக் சாஸனத்தை ஜப்பானுக்கு அன்வயப்படுத்தினுல் ஜப்பான் சமாதானம் செய்து
கொள்ளுமென்று டோக்கியோ ஒலிபெருக்கியிருக்கிறது. இப்பொழுது தோல்வி நிச்சயமென்று
ஜப்பான் அறிந்துவிட்டது. சைனு, மலேயா, மஞ்சூரியா, கொரியாவிலுள்ள லாபங்களைக்
கக்கிவிட அது தயாராக இருக்கிறது. சமாதான முறையில் யுத்தநிறுத்தம் செய்துகொள்ள
லாமென்று அது நம்பியிருக்கிறது, அதன் அபாயத்தை நேசதேசத்தார்கள் உணருவார்கள்.
டைம்ஸ் பத்திரிகை சொல்லுகிறபடி "தற்பொழுதுள்ள ஜப்பானிய நிலைமையை நிலைநாட்டக்
கூடிய ஒரு 'சமாதானம் உலக ஆதிக்கத்துக்கு மற்றெரு முயற்சிசெய்ய முற்போக்கான நட
வடிக்கையாகுமென்று" சொல்லவேண்டும்.

வி வி வி வி வி

**பெகு யோமாஸ் போர்.** எதற்கு பர்மாவில் இந்தப் போர் ஜூலை 21-ம் தேதியன்று
ரெங்கூனுக்கு வடக்கில் 140 மைல்களிலுள்ள ஸாகா
ரயில்வே ஸ்டேஷனைச்சுற்றி ஒரு சிறிய போராக ஆரம்பித்தது. மூன்று வருஷத்துக்குமுன்
கைப்பற்றிய பர்மாவில் இது ஜப்பானின் கடைசிப் போராகும். இது மரண ஒப்பாரி என்று
ஒரு நிருபர் சொல்லுகிருர். இராவதி, சிட்டாங் நதிகளுக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்ட
எதிரி சியாங் நதியின் கிளை நதிகளான பையூசாங், கன்சாங் நதிகளுக்கு இடையில் தப்பி

ஓடமுயன்றுன். வெள்ளப்பெருக்குள்ள நதிகளை மூங்கில் படகுகள் மூலம் தாண்ட முயன்றுன். தப்பி ஓடும் வழி நெல்வயல்கள் வழியாகச் சென்றதால் அவர்கள் நேசதேசத்தாரின் தாக்குதல்களுக்கு சுலபமான லக்ஷியங்களாகி விட்டனர். அவர்கள் தப்பி ஓடிய பின்னும் அவர்களின் கஷ்டங்கள் தீர்ந்துவிடவில்லை. சிட்டாங்க் நதிக்கரையை அவர்கள் அடைந்த பொழுது அங்கு பர்மிய தேசாபிமானிகளும் காரன்களும் அவர்களைக் கொன்றுவிட்டார்கள்.

அந்தப்போர் நேசதேசத்தாருக்கு வரமளித்தது போலாகும். பெகு யோமாஸ் காடுகளிலிருந்த ஜப்பானியப் படைகளைத் தடைப்பதற்கு முன்னதாகவே அப்படைகள் இப்பொழுது வெளிவந்து திறண்டுவிட்டன. தப்பி ஓடின படைகளில் பாதிக்குமேல் அழிக்கப்பட்டுவிட்டன. 600 சதுரமைல்களுக்கு மேற்பட்ட பாகம் விடுவிக்கப்பட்டது. பர்மாவின் விடுதலையைப் பூர்த்திசெய்ய நேசதேசத்தார்கள் இப்பொழுது கிழக்கு நோக்கிச் செல்லக்கூடும். பெகு ரெங்கூன் இருப்புப்பாதைகள் திறக்கப்பட்டுவிட்டன, பிரிடிஷ் சேனைகளுக்கு ரெங்கூனிலிருந்து இருப்புப்பதைகள் மூலம் ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன.

வி வி வி வி வி

**பூகெட் தீவு.** ரெங்கூனுக்கும் சிங்கப்பூருக்கும் மத்தியில் மலேயா தீபகற்பத்திற்கு அப்பாலில் உள்ள பூகெட் தீவில் நேசதேசத்தார்கள் இறங்கி விட்டார்கள்.

வி வி வி வி வி

**பாட்ஸ்டாம்.** ஜூலை 20-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஜனாதிபதி ட்ருமான் பெர்லின் பேரில் அமெரிக்கக் கொடியைப் பறக்கவிட்டார். அப்பொழுது அவர் பின்வருமாறு கூறினார்:—"இந்தக்கொடிதான் ஜப்பானியர்கள் பெர்ல் துறைமுகத்தை வஞ்சகமாகத் தாக்கியபொழுது வாஷிங்டன் காபிடலில் பறந்தது. காஸாபிளாங்கா, ஆல்ஜியர்ஸ், ரோமில் பறந்தது. அது இப்பொழுது மத்திய ரெக்கின் விமானப்படை கமாண்டின் மாஜித்தலைமை காரியாலயத்தில் உயரப் பறக்கிறது. நாம் சமாதானத்திற்கும் மானிடவர்க்கத்தின் க்ஷேமத்துக்கும் போர் புரிகிறோம். நாங்கள் தேசங்களைக் கவரப் போர் புரியவில்லை. உன்னத பதவியிலுள்ள ஒரு சிலர் மட்டுமில்லாமல் எல்லாமக்களும் வாழ்க்கையின் எல்லா சுகங்களையும் அனுபவிக்கக்கூடிய ஒரு உலகத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தாத்காலிகமாக முப்பெரிய வல்லரசுகளின் மகாநாடு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) ஸ்பெயினிலுள்ள பிராங்கோ மந்திரி சபையைத் திருத்தியமைத்துவிட்டார். பிரான்ஸுடன் சம்பந்தங்களை அபிவிருத்தி செய்ய கதோலியச் செயலாளர் கக்ஷியின் தலைவரையும் அதில் சேர்த்துக் கொண்டிருக்கிறார். ஆகிலும் இன்னமும் பிராங்கோவின் நிர்வாகம் அவனுடைய சொந்த விஷயம்தான். நேசதேசத்தார்கள் அதை அங்கிகாரம் செய்து பிராங்கோ ஸ்பெயினின் நிலைமையை அந்தரங்க சுத்தியுடன் சீர்திருத்தம் செய்துவிட்டானென்று திருப்திப்படுவார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது.

(2) பிடேயனின் விசாரணை திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. குடியரசுத் தலைவர்களும் பிரெஞ்சு பிரதம மந்திரிகளும் சாக்ஷியம் கொடுக்கிறார்கள். பிரான்ஸின் உள் நாட்டு பத்திரத்துக்கு விரோதமாக அவன் சதி செய்தானென்றும் எதிரியுடன் தொடர்பு வைத்திருந்தானென்றும் அவன் பேரில் குற்றம் சாற்றப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் ஒரு வாக்கு மூலம் கொடுத்த பின் குற்ற விசாரணையில் கலந்து கொள்ள பிடேயன் மறுத்து விட்டான்.

(3) உயர்தர நாஸிகளையும் யுத்த குற்றவாளிகளையும் கண்டுபிடிக்கும் நடவடிக்கை அநேகமாக முடிந்து விட்டது. சுமாராக 60,000 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பெரிய யுத்த குற்றவாளிகள் நூரம்பர்க்கில் விசாரிக்கப்படுவார்கள்.

(4) இறந்துபோன எகிப்திய பிரதம மந்திரியான ஆமத் மெகர் பாஷாவைக் கொலை செய்த மகமது இஸாவேக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.



(5) யுத்தம் துவங்கிய செப்டம்பர் 3ம் தேதி முதல் 1945ம் வருஷம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி முடிய இந்திய சேனைக்கு ஏற்பட்ட நஷ்டம் 1,49,225. அதன் விவரம் பின் வருமாறு :—

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் ... | ... 15,291 |
| காயம்பட்டவர்கள் ... | ... 50,705 |
| காணுமற்போனவர்கள் ... | ... 10,371 |
| யுத்தக்கைதிகள் ... | ... 51,802 |
| கைதிகள் என்று நம்பப்பட்டவர்கள் | ... 21,056 |

(6) சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்குச் சென்ற இந்திய பிரதிநிதிகளின் தலைவரான ஸர் A. ராமஸ்வாமி முதலியாருக்கு, அன்னாரின் யுத்த சேவையை முன்னிட்டு ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலை சிவில் லா டாக்டர் என்ற கௌரவ பட்டத்தை வழங்கியிருக்கிறது.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டின் பொருளாதார ஜன சமூக சபை கமிட்டியின் நடவடிக்கைகளை அவர் தீவ்ரமாகவும், பொருமையுடனும், சாதுர்யத்துடனும், நடத்தியதைப் பாராட்டி அந்த பிரேமயத்தில் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. மெக்ஸிகோ, சைனா, பாரஸீகம், பிரேஸீல், பிரான்ஸ், முதலிய தேசங்களின் பிரதிநிதிகளும் இந்தப் பாராட்டில் கலந்து கொண்டார்கள்.

(7) பிரிடிஷ் தொழிற் கக்ஷிக்கு காமன்ஸ் சபையிலுள்ள 640 ஸ்தானங்களில் 390 ஸ்தானங்கள் கிடைத்து விட்டன. மிஸ்டர் சர்ச்சில் ராஜினாமாச் செய்து விட்டார். தொழிற் கக்ஷி நிர்வாகம் அமைக்கப்பட்டுவிட்டது. அதில் கீழ் கண்டவர்கள் உத்தியோகம் வகிப்பார்கள்.

| | |
|---|---|
| மிஸ்டர் கிளெமெண்ட் ஆட்லி ... | பிரதம மந்திரி, திரவ்ய முதல் பிரபு, தற்காப்பு மந்திரி. |
| மிஸ்டர் எர்னஸ்ட் பெவின் ... | அயல் நாட்டு மந்திரி. |
| மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் ... | கவுன்ஸிலின் தலைவர். |
| மிஸ்டர் ஆர்தர் க்ரீன் வுட் ... | லார்டு பிரிவி ஸீல். |
| டாக்டர் ஹூ டால்டன் ... | எக்ஸ்சகரின் சான்ஸலர். |
| ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் ... | வியாபாரச் சங்கத்தின் பிரஸிடெண்டு. |
| ஸர் வில்லியம் ஜோவிட் ... | லார்டு சான்ஸலர். |

---

# ஐரோப்பிய புனருத்தாரணத்துக்கு உதவுவது.

## பாட்ஸ்டாம் மகாநாட்டின் பிரச்னைகள்.

### விக்ஹாம் ஸ்டீட்.

மிஸ்டர் ஸ்டெட்டினியஸ் ஜனாதிபதி ட்ருமானுக்கு சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டைப் பற்றி எழுதியபொழுது அதில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—மற்றொரு யுத்தம் மூண்டால் பூமண்டலத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் செல்லக்கூடிய ஆயுதங்களைக்கொண்டுதான் அது நடத்தப்படும் என்ற அறிவுடன்தான் மகாநாடு கூடிற்று. இந்த அறிவுதான் மகாநாட்டின் நடவடிக்கைக்கும் நேசதேசத்தார் நிறுவிய சாஸனத்துக்கும் தூண்டு கோலாக இருந்தது. யுத்தத்தில் கஷ்டப்பட்ட பிரதிநிதிகள் சமாதானத்தை விரும்புகிறோம் என்று சொல்ல வெட்கப்படவும் இல்லை அல்லது யுத்த மூலம் அனுபவம் பெற்று வல்லரசுகளின் சக்தியை அறிகிறோம் என்று ஒப்புக்கொள்ளவும் தயங்கவில்லை.

ட்ருமானும் அவருடைய ஆலோசகர்களும் பாட்ஸ்டாமில் நடைபெறப்போகும் முப்பெரியாரின் மீட்டிங்குக்குச் செல்லும் தருவாயில் இந்த ரிபோர்ட் வெளி வந்ததிலிருந்து பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய பிரதிநிதிகள் அவர்கள் காணும் பிரச்னைகளை எவ்விதம்

கவனிக்கக்கூடுமென்பதற்கு அறிகுறியாக இருக்கிறது. அவர்கள் தத்வதரிசிகளாகவும் கருத்துகளை மனதில் வைத்துக்கொண்டும் விஷயங்களை ஆராய்ச்சி செய்வார்கள்.

தத்வதரிசிகள் என்ற முறையில் மறுபடியும் அக்கிரமப்போரை நடத்தும் நிலைமைக்கு ஜெர்மனி சக்திபெறக்கூடாதென்று மீட்டிங் முடிவுசெய்யும், கருத்துகள் உள்ளவர்கள் என்ற முறையில் அத்துடன் நாசத்திலிருந்து ஐரோப்பிய புனருத்தாரணத்துக்கும் புதிய ராஜிய முறைப்படி சமாதானமுள்ள ஐரோப்பிய சமாஜத்தில் ஜெர்மன் மக்கள் இறுதியில் கலந்து கொள்ளுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் அளிப்பதற்கும் திட்டங்கள் நிறுவப்படும்.

பவேரியாவிலுள்ள அமெரிக்க கமாண்டர்கள் நாஸி யுத்த யந்திரத்தை அமைப்பதில் ஈடுபட்ட 100 ஜெர்மன் வியாபாரிகளையும், தனவந்தர்களையும், கைது செய்ய முடிவு செய்து விட்டார்கள் என்பதிலிருந்து ஜெர்மனியை நிராயுதபாணியாக வைப்பதென்பது ஆயுதங்களைப் பறிமுதல் செய்தாலும் ராணுவ ஆயுதசாலைகளை அழித்தாலும் போதாதென்று தெரிய வருகிறது. ஜெர்மனியின் பொருளாதார தொழிற் ஸ்தாபனங்களை அநேக வருஷங்கள் வரையில் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிடில் முதல் உலக யுத்தத்தைவிட இரண்டாவது உலக யுத்தத்துக்குப்பின் சுலபமாக ஜெர்மனி ஆயுதங்களைப்பெறக்கூடுமென்று அமெரிக்காவில் யோக்கியதையுள்ளவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பாட்ஸ்டாம் மீட்டிங்கில் இவ்விதமான கட்டுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்வதும் விவாதிக்கப்படும்.

கருங்கடலிலிருந்து பாஸ்பரஸ் ஜலசந்தி வழியாகவும் டார்டனலீஸ் வழியாகவும் மத்திய தரைக்குச் செல்லுவதற்கு ருஷ்யாவுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நிவர்த்திக்க வேண்டுமென்ற ருஷ்ய அவாவிலிருந்து பிரிடனுக்கு யாதொரு சங்கடமும் ஏற்படவில்லை. 1907-ம் வருஷத்தில் பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் ஒப்பந்தம் ஏற்படுவதற்காகப் பேச்சுகள் நடைபெற்றபொழுது ஜலசந்தியைத் திறந்துவிட பிரிடன் யாதொரு ஆக்ஷேபனையும் செய்யாது என்று ருஷ்யாவுக்கு பிரிடன் வாக்குறுதி செய்தது. 1915-ல் பிரிடனும் பிரான்ஸும் ருஷ்யாவின் கோரிக்கையை அங்கிகாரம் செய்தன.

கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அங்காராவுக்குத் தலைநகரை துருக்கி மாற்றிக் கொண்டபின், துருக்கிக்கு ஜலசந்தியின் முக்கியத்வம் போய்விட்டது. ருஷ்யாவின் பத்திரத்தைக் கோருவதுதான் ஜலசந்தியில் இப்பொழுது பிரிடனுக்குள்ள அக்கறை. மேலும் வியாபாரம் துருக்கியின் சுயேச்சைக்கு ஆபத்து விளைவிக்காது. மத்தியதரைக் கடலிலிருந்து வெளியேறவும் அதற்குள் நுழையவும் சௌகரியமுள்ள ஸ்தானங்கள் சர்வதேச மேன்பார்வைக்கு உட்படுத்தப்படுமா அல்லது அவைகள் கேந்திர ஸ்தானங்கள் என்று மதிக்கப்படுமா என்ற பிரச்னையும் தோன்றும்.

வார்சாவில் அமைக்கப்பட்ட தேசிய ஒத்துமைக்கான புதிய போலிஷ் நிர்வாகத்தை பிரிடனும் அமெரிக்காவும் தாமதமன்னியில் அங்கீகாரம் செய்தனதென்பது பாட்ஸ்டாம் மீட்டிங்கில் வெற்றிக்கு உதவக்கூடும். இந்த நிர்வாகம் அமைக்கப்பட்டபின்தான் சான் பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் காணப்பட்ட இருள் மறைந்தது.

பிரான்ஸ், பிரிடன், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஏகோபித்த அக்கறையுள்ள ஸிரியா, லெபானன் சம்பந்தமாகவும் பிரெஞ்சுக் கொள்கையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

இதாலிக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் உள்ள வித்தியாசங்களும், மூன்று வல்லரசுகளும் ஐரோப்பாவின் பொது க்ஷேமம் என்ற விரிவான நோக்கத்துடன் அவைகளை நோக்கினால், சுலபமாக சமரச முறையில் தீர்க்கப்படலாம்.

இதுவும் மற்ற ஐரோப்பிய பிரச்னைகளும், ஜப்பானிய யுத்தம் முடியும் வரையில் ஒத்தி வைக்கமுடியாதவை. ஐரோப்பாவின் புனருத்தாரணத்துக்கு, இறுதியாக இல்லாவிட்டாலும் தாத்காலிகமாகவாவது பிரச்னைகளுக்கு முடிவுகள் ஏற்படவேண்டும்.

ஆகிலும் ஜப்பான் முறியடிக்கப்படும்வரையில் அமெரிக்காவும் பிரிடனும் சமாதானத்தை நிலைநாட்ட அவர்களின் பூரா கவனத்தையும் செலுத்தமுடியாது. ஜப்பானைச் சுற்றியுள்ள தீவுகள் பலமாகத் தாக்கப்படுவதிலிருந்து தூரக்கிழக்கு சமுத்திரங்களில் அமெரிக்க, பிரிடிஷ் நடவடிக்கைகள் அதிகரித்துகொண்டேவருகின்றன என்று புலப்படுகிறது. ஒரு காலத்தில்



வல்லமை பெற்றிருந்த மூன்று அச்சுநாடுகளில் எஞ்சியுள்ள ஒருவர் சரணகதி செய்யும் வரையிலோ அல்லது நிர்மூலமாகும் வரையிலோ, ஜப்பானின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட ஒவ்வொரு பிரதேசத்தின் பேரிலும் வரப்போகும் வாரங்களிலும் மாதங்களிலும் நடவடிக்கைகள் வலுப்படும். அதன்பின்தான் நேசதேச சாஸனத்தில் உத்தேசிக்கப்பட்ட மேன்மையான அச்சை அமைக்கக்கூடிய உலக விஷயங்களை கவனிக்க அவகாசம் ஏற்படும்.

---

## வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள துறைமுகங்களை சுத்திசெய்வது.

### நேசநேச, நாஸி சுரங்கவாரிக் கப்பல்கள் ஒன்றுபட்டு வேலை செய்கின்றன.

ஐரோப்பாவில் யுத்தம் முடிந்துவிட்டதென்றாலும், பிரிடிஷ் சுரங்கவெடி வாரிக் கப்பல்களின் வேலை நின்றுவிடவில்லை. அது எப்பொழுதும்போல நடைபெற்று வருகிறதென்று கடற்படை இலாகா விளம்பரம் செய்திருக்கிறது.

வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள பிரெஸ்டிலிருந்து காட்டிகாட் வரையிலுமுள்ள ஒவ்வொரு துறைமுகத்திலுமுள்ள சுரங்கவெடிகளை 12 மாதங்களுக்குள் அகற்றிவிடுவது என்ற வேலையை பூர்த்திசெய்வதில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் ஸெப்டம்பர் மாதம் முதல் மே மாதம் வரையில் சேனைக்கு ஸப்ளை மார்க்கமாகவும், பிரிடிஷ் கடற்படை சரித்திரத்திலேயே மிகவும் அபாயத்துக்குட்பட்ட விஸ்தாரமுள்ளதுமான வடக்கு போர்லாந்து-ஆண்ட்வெர்ப் கடல் மார்க்கத்தை சுரங்கவாரிக் கப்பல்கள் காபந்து செய்து வந்தன. நெல்ஸனின் கடற்படை பிரெஞ்சு துறைமுகங்களின் ஓரமாக பிஸ்கே வரிகுடாவுக்குச் சென்றபொழுது ஏற்பட்ட அபாயத்தைவிட இந்த மார்க்கத்தில் பிரிடிஷ் கப்பல்களுக்கு அதிக அபாயம் ஏற்பட்டிருந்தது.

காட்டிகாட்டில் சரித்திரத்திலேயே மகத்தான நடவடிக்கை துவக்கப்பட்டுவிட்டது. பிரிடிஷ், ஜெர்மன் சுரங்கவாரிக் கப்பல்கள் உலகத்திலேயே மிகவும் அதிகமாக சுரங்கவெடிகள் பாவப்பட்ட இடத்திலிருந்து இரண்டு நாடுகளும் பாவியிருந்த சுரங்கவெடிகளை ஒன்றுபட்டு அகற்றிவருகின்றன.

வடமேற்கு ஐரோப்பாவின் துறைமுகங்களிலுள்ள சுரங்கவெடிகளை அகற்றும் வேலையை பிரிடிஷ் சுரங்கவாரிக் கப்பல்கள் 1944-ம் வருஷத்தில் ஜூன் மாத முதலில் செர்பர்க்கில் ஆரம்பித்தன. அங்குதான் ஜெர்மனி பலவிதமான சுரங்கவெடிகளைக் குவித்துவைத்திருந்தது. படையெடுப்புக் கால்வாய்களில் 559 சுரங்கவெடிகள் அகற்றப்பட்டன. கப்பற்தளங்களிலிருந்தும் துறைமுகங்களிலிருந்தும் 137 வெடிகள் அகற்றப்பட்டன.

ஸெப்டம்பர் மாதத்தில் ஸெயின் நதிக்குப் போகும் மார்க்கம், லாஹாவர், கலே, டிப்பி, போலோன் முதலிய இடங்களிலிருந்து எதிரியின் கனமான கடற்கரை பீரங்கிகளின் குண்டு வீச்சையும் லக்ஷியம் செய்யாமல் சுரங்கவெடிகள் அகற்றப்பட்டன. சுரங்கவாரிக் கப்பல்களும் பிடிபட்ட துறைமுகங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி வந்தன. துறைமுகங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வெகு சீக்கிரத்தில் விழுந்துவிட்டபடியால் சுரங்கவெடிகள் வெகு சீக்கிரத்தில் அகற்றப்படவேண்டியிருந்தன. பிரெஸ்ட் துறைமுகத்தை சுத்திசெய்ய 900 மைல்கள் கப்பல்கள் சென்று, 26 சுரங்கவெடிகளை அகற்றின.

ஸெப்டம்பர் 2-ம் தேதியன்று ஆண்ட்வெர்ப் பிடிபட்டபின், நோர் கமாண்ட் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது. அப்பொழுது சுரங்கவாரிக் கப்பல்கள் இங்கிலீஷ் கால்வாய் வழியாகவும் வடக்குக் கடலில் தெற்குப் பக்கமாகவும் நடமாடத்தொடங்கின. ஆண்ட்வெர்ப்பிலுள்ள கப்பற் துறையையும் கப்பற் பழுதுபார்க்கும் நிலயத்தையும் சுத்திசெய்யும் வேலை அக்டோபர் 16-ம் தேதிமுதல் டிசம்பர் 4-ம் தேதி வரையில் நடைபெற்றது. துறைமுகத்தை V—1, V—2 வெடிகுண்டுகள் பலமாகத் தாக்கிவந்தன.

துறைமுகம் பிடிபட்ட பின்னும் நதி எதிரி கைவசமிருந்த பொழுதும் எதிரியின் ஈ படகுகளும், கடற்கரை பீரங்கிகளும் ஷெல்ட் நதி முகத்வாரத்தை சுத்திசெய்யும் நடவடிக்கையை பலமாக எதிர்த்தன. பிரிடிஷ் சுரங்கவாரிக் கப்பல்கள் நவம்பர் 2, 3-ம் தேதிகளில் எதிரிகளின் கடற்கரை பீரங்கிகளையும் லக்ஷியம் செய்யாமல் நதியின் முகத்துவாரத்திற்குள்

ஊடுருவிச் சென்றன. நவம்பர் 26-ம் தேதியன்று குறுகலான சுரங்கவெடி யற்ற நதி போக்குவரத்துக்கு லாயக்குள்ளதாக ஆகிவிட்டது. சுமாரான பரிமாணமுள்ள 19 சாமான் கப்பல்கள் ஆண்ட்வெர்ப்புக்கு ஒன்பது நாள்களுக்குப்பின் வந்து சேர்ந்தன. நதியில் சுரங்க வெடியால் ஒரே ஒரு பெல்ஜிய இழுப்புப் படகுதான் மூழ்கடிக்கப்பட்டது.

டிஸம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில், ஈ படகுகளுடையவும் சிறிய நீர்மூழ்கி களுடையவும் தாக்குதலுக்குட்பட்டுச் சென்று கொண்டிருந்த கப்பல்கள் மத்தியில் வடக்கு போர்லாந்து—ஆண்ட் வெர்ப் கடல் மார்க்கத்தை தற்காப்பு செய்யும் வேலையில் சுரங்கவாரிக் கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. பிரெமர் ஹாவனுக்குப்போகும் மார்க்கத்தை சுத்தி செய்ய 30, முதல் 40 கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. கமாண்டிங் ஆபீஸரான காப்டன் பார்ட்வெல் D. S. O., R. N. கடும் குளிரில் கடலில் பலமாகக் காயம் அடைந்தார்.

டென்மார்க்குக்கும் ஸ்வீடனுக்கும் மத்தியில் பால்டிக்குக்குச்செல்லும் வழியிலுள்ள காட்டிகாட் ஒரு சிரமமான பிரதேசம். அங்கு நேசதேசத்தார்களும் ஜெர்மானியர்களும் சுரங்கவெடிகளைப் போட்டிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் 1,300 மைல்கள் நீளமுள்ள மார்க்கம் சுத்தி செய்யப்படும். கொஞ்சம் கொஞ்சமாக அவைகள மூன்று மைல் அகலத்துக்கு அதிகரிக்கப்படும். ஒவ்வொரு கால் வாயையும் 10, 20 தடவை சுத்தி செய்யவேண்டியிருப்பதினால், சுரங்கவாரிக் கப்பல்கள் சுமாராக 2,50,000 மைல்கள் செல்லவேண்டியிருக்கும். அதன்பின் பூரா பிரதேசத்திலும் மேன்பார்வை செய்யும் சுரங்கவாரிக் கப்பல்கள் நடமாடும்.

இந்த வேலையில் பிரிடிஷ் சுரங்கவாரிக் கப்பல்களுடன் 160 ஜெர்மன் சுரங்கவாரிக் கப்பல்களும் ஒத்துழைக்கின்றன. அக்கப்பல்களில் ஒரு கொடியும் கிடையாது. அவைகள் தங்களிடம் உள்ள சேமிப்பிலிருந்தே தங்களை போஷித்துக்கொள்ளுகின்றன.

ஜெர்மானியர்கள் கடற்தளபதி வர்பாக்குடையவும் காப்டனுடையவும் தலைமையில் வேலை செய்து வருகிறார்கள். கோபன்ஹேகனிலுள்ள பிரிடிஷ் கடற்படை மிஷன் அவர் களுக்குத் உத்தரவுகளை அனுப்பிவருகிறது. 5,000 ஜெர்மானியர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜெர்மன் கப்பல்கள் பிரிடிஷ் சுரங்கவெடிகளை அகற்றவேண்டுமென்றும் பிரிடிஷ் கப்பல்கள் ஜெர்மன் வெடிகளை அகற்றவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறபடியால் சிறிது சஙகடம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் ஜெர்மன், பிரிடிஷ் சுரங்கவெடிகள் பாவப்பட்டிருக்கும் பிராந்தியங்களுக்குச் செல்லு முன் நமது சுரங்கவாரிக் கப்பல்களை திருத்தியமைக்கவேண்டி யிருக்கிறது.

---

## 47,000-க்கு அதிகமானவர்கள் அமெரிக்காவுக்கு விமானங்களில் சென்றனர்.

### ஐரோப்பாவிலிருந்து வேலைக்காரர்கள் மாற்றம்.

ஐரோபபாவிலிருந்து அமெரிக்காவுக்கு அமெரிக்க வேலைக்காரர்களை அனுப்புவதென்பது யுத்த சரித்திரத்திலேயே மிகவும் துரிதமான மகத்தான நடவடிக்கையாகும். ஆயுதங்களும், வெடி விமானங்களும், அதன் கவசங்களும எடுத்துச் செல்லப்படுகின்றன என்று விமானப் படை போக்குவரத்து கமாண்டைச் சேர்ந்த வடக்கு அட்லாண்டிக் டிவிஷனைச் சேர்ந்த அதிகாரியுடன் பேட்டி செய்ததைப்பற்றி டெயிலி டெலகிராபின் நியூயார்க் நிருபர் எழுதுகிறார்.

அந்த அதிகாரி பின்வருமாறு சொன்னார்:—"நாங்கள் அற்புதமான நடவடிக்கைகளைச் செய்து முடித்துவிட்டோம், மே மாதத்தில் முதல் விமானம் வந்தபின் வடக்கு அட்லாண்டிக் டிவிஷன் 47,000 மனிதர்களையும், 2,500 விமானங்களையும் கொண்டுவந்திருக் கிறது.

"தரை வேலைக்காரர்களும் விமான வேலைக்காரர்களும் ஒன்றுக்கு 18-வீதம் விமானங் களில் வருகிறார்கள். இவைகளை யுத்தத்தில் சோர்வுற்றவைகள் என்று சொல்லுகிறோம்,



அவைகள் 6 முதல் 130 தடவை வெடி குண்டு வீசும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. ஆகிலும் நாங்கள் இரண்டு விமானங்களைத்தான் இழந்திருக்கிறோம்.

சராசரி அவைகள் 3,400 மைல்கள் பறந்து சென்றன. அதாவது 16,24,00,000 பிரயாண மைல்கள் மொத்தமாகச் சென்றிருக்கின்றன. ஒவ்வொரு 11,000 மைல்களுக்கும் ஒரு பிரயாணி நஷ்டமாகிற்று.

இந்த விரிவான திட்டம் வெண்மை, பச்சை என்ற இரண்டு திட்டங்களாக வகுக்கப் பட்டிருக்கிறது. வெண்மை திட்டமென்பது டாக்டிகல் விமானங்களையும் அதன் வேலைக் காரர்களையும் அடங்கியுள்ளது. பச்சை திட்டத்தில் மற்ற படைகள் அடங்கியுள்ளது. அவர்கள் கடல் மூலமில்லாமல் விமான மூலம் கொண்டுவரப்படுகிறார்கள்.

பச்சை திட்டம்தான் மிகவும் முக்கியமானது. இதில் ஐரோப்பாவில் தேவைப்படாத ஏராளமான அமெரிக்க ராணுவப் போக்குவரத்து விமானங்கள் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல உபயோகப்படுத்தப்படுகின்றன. அவைகளில் அனுபவம் பெற்ற அமெரிக்கக் கடற்படை, ராணுவப்படை, விமானப் படையின் வேலைக்காரர்கள் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப் படுகிறார்கள். இவர்களில் அநேகர் மறுபடியும் தூரக்கிழக்குப் போருக்கு அனுப்பப்படுவார்கள் என்று நிருபர் எழுதுகிறார்.

பச்சை திட்டத்தைச் சேர்ந்த விமானங்களின் பாதி பாகம் நியூயார்க்கிலுள்ள லா கார்டியா விமான தளத்தில் நின்றுகொண்டிருக்கின்றன. ஜூன் மாதம் 15-ம் தேதிக்குப்பின் ஐரோப்பாவிலுள்ள அமெரிக்க தரைப்படையைச் சேர்ந்தவர்களில் 32,000 பேர்கள் நியூயார்க்குக்கு விமான மூலம் கொண்டுபோகப்பட்டார்கள். இந்த விமானங்களில் சாதாரண மாக 36 பிரயாணிகள் செல்லுவார்கள். இடமிருந்தால் சத்தம் கொடுக்கும் பிரயாணிகளும் அவைகளில் ஏற்றிக்கொள்ளப்படுகிறார்கள். மொத்தத்தில் 2 சதவிகிதம் வருமானம் கிடைக் கிறது.

---

## ஜெர்மன் சான்ஸலரியில் சர்ச்சில்.

### ஹிட்லரின் கல்வி அறைக்கு விஜயம்.

(டெயிலி டெலகிராப்).

செம்படையின் ஆக்கிரமிப்பு வட்டாரத்திற்குட்பட்ட சான்ஸலரிக்கு சமீபத்திற்கு மிஸ்டர் சர்ச்சில் சென்றபொழுது அவருடைய மோட்டாரிலிருந்து இறங்க ஒரு ருஷ்ய ஸோல்ஜர் உதவி செய்தான்.

நாஸி தத்வத்துக்கு பரம விரோதியான இவர் ஏராளமான கூட்டமுள்ள பெர்லின் தெருக்கள் வழியாக இரண்டு சாரர்களுடையவும் ஒரு சிறிய ராணுவப் போலிஸின் ரக்ஷனை யுடனும் செல்லுவதைக் காண்பது மிகவும் விந்தையாக இருந்தது. பாண்ட் தெரு வழியாகச் செல்லுவதுபோல் அவர் உல்லாசமாகச் சென்றார்.

சான்ஸலரியின் வாசற்படியில் நின்று எவ்வளவு நாசம் ஏற்பட்டிருக்கிறதென்று சற்று சிந்தனையில் ஆழ்ந்தார். அவருக்கு முன் பெரிய ஹால் பூராவும் கட்டடத்தூள்கள் நிறம்பி யிருந்தது. வட்ட வடிவமான ஹாலின் மேன் கூரை ஒரு அமெரிக்க வெடி குண்டினால் துளைக்கப்பட்டிருந்தது. அந்த குண்டு தரையையும் துளைத்திருந்தது. ஹிட்லர் உட்கார்ந் திருந்து கெட்ட திட்டங்களை நிறுவிய படிப்பு அறைக்குச் சென்றபொழுதுதான் மே 2-ம் தேதியன்று சான்ஸலரிலயக் கைப்பற்றியபொழுது எவர்கள் சண்டை போட்டார்கள் என்று அவர் ருஷ்ய ஸோல்ஜரான கிராசோவைக் கேட்டார். பிரதம மந்திரிக்கு வழிகாட்ட கிராசோ தான் குறிப்பாக அனுப்பப்பட்டிருந்தார்.

சான்ஸலரி எவ்விதம் பிடிக்கப்பட்டதென்று அறிவதிலும் அவர் அதிக ஆவல்கொண்டு எந்த திசையிலிருந்து சான்ஸலரி இறுதியில் தாக்கப்பட்டதென்றும், ஜெர்மானியர்கள் இறுதி வரையில் போராடினார்களாவென்றும் அவர் கேட்டார். அந்தக் கட்டடத்தைக் கைப்பற்றிய துருப்புகளின் கமாண்டரான மேஜர் ஜெனரல் ஸிட்மேவ் பின்வருமாறு பதிலுரைத்தார்:—

"இல்லை. நாங்கள் அநேகர்களைக் கைது செய்தோம்."

ஹிட்லருடையவும் அவருடைய மனைவி என்று சொல்லப்படுவதுமான இவாபிரானின் சவங்களைக் கொளுத்துவதற்காக உபயோகிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் பெட்ரோல் தகரங்கள் சான்ஸலரி தோட்டத்தில் தாழ்வாரை அறைக்குச் செல்லும் வாசற்படிக்கருகில் கிடந்தன. அங்கு சர்ச்சில் நின்றபொழுது ஒளிப்படம் பிடிக்க அவர் அனுமதிக்கவில்லை. ஹிட்லரின் கல்வி அறையில் நொருக்கப்பட்ட மேஜைக்கருகில் அவர் நின்றபொழுதும் ஒளிப்படம் பிடிக்க அனுமதிக்கவில்லை.

---

## ஸ்பெயினில் ரெல்ம் கவுன்ஸில் ஸ்தாபிக்கப்படும்.

### பிராங்கோவின் முயற்சி.

(டெயிலி டெலிராப்).

ஸ்பெயினில் முக்கியமான மாறுதல்கள் நடக்கும்போல் தோன்றுகிறது. அடுத்த வாரம் புதனன்று கூடும் பாலாங்கிஸ்டு தேசிய கவுன்ஸிலின் வருஷாந்திரக் கூட்டத்தில் ரெல்ம் கவுன்ஸிலை ஸ்தாபிக்கும் ஒரு திட்டத்தை ஜெனரல் பிராங்கோ சமர்ப்பிப்பார் என்று சொல்லப்படுகிறது.

அதாவது மன்னர் அன்னியிலேயே தாத்காலிகமாக மன்னர் ஆட்சி ஸ்பெயினில் மறுபடியும் அமைக்கப்படும். இதே சமயத்தில் கார்டிஸின் தலைவரான ஸினர் எஸ்டெபென் பீல்பாவோ ஜெனரல் பிராங்கோவை சந்திக்க அனுமதி கோரியுள்ளார். வெள்ளி, சனிக்கிழமையன்று கூட்டப்போகும் கார்டிஸின் பிளெனரி கூட்டத்தைப்பற்றி அவர் விவாதிக்கலாம். அப்பொழுதுதான் புதிய உரிமை மசோதாவும் நகரபரிபாலன சட்டமும் அங்கீகரிக்கப்படும்.

இரண்டாவது மசோதா திருத்தப்படலாம். இப்பொழுது இருக்கும் நிலைமையில் 10,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள நகரங்களில் ஒரு மேயரை நியமிக்கும்படி உள்நாட்டு மந்திரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. 10,000-க்குக் குறைவாக உள்ள இடங்களில் உள்நாட்டு ஸிவில் கவர்னரே மேயரை நியமித்துக்கொள்ளலாம். ஸிவில் கவர்னரே கவுன்ஸிலர்களின் மூன்றில் ஒரு பாகத்தை நியமிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்.

சென்ற வருஷம் ஸிண்டிகேட்டுக்குத் தேர்தல் நடந்த முறையில் வோட்டுகள் பதிவு செய்யப்படும். அதில் ஜனநாயக முறை ஒன்றுமில்லை.

நிர்வாக சபையை இப்பொழுது மாற்றியமைப்பதா அல்லது முனிஸிபல் தேர்தலுக்குப் பின் அவ்விதம் செய்வதாவென்று நிர்வாகம் ஆலோசனை செய்துவருகிறது. புதிய நிர்வாக சபைதான் தேர்தலை நடத்தவேண்டுமென்று பொதுஜன அபிப்பிராயம் இருந்துவருகிறது.

தேக அசௌக்யம் காரணமாக பொக்கிஷ மந்திரியான ஸினர் ஜோயாக்வின் பெஞ்சுமியா ராஜிநாமாச் செய்வார். அவருக்கு பதிலியை நியமிக்கும்பொழுது வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்ட மாறுதல்களை அமுலுக்குக் கொண்டுவர சந்தர்ப்பம் எடுத்துக்கொள்ளப்படும். பிரகிருத நிர்வாகத்தில் பலாங்கிஸ்டு கக்ஷியைச் சேர்ந்த 5 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

---

## தோல்விக்கு ஹிட்லர் ஜவாப்தாரியென்று கோயரிங் சொல்லுகிறான்.

### நாஸி ஜெர்மனியின் அந்தியகாலம்.

S. L. சோலன்.

(நியூஸ் கிரானிகள்).

அநேக நாட்கள் விசாரிக்கப்பட்ட பின் ஹிட்லரின் சட்ட பூர்வமான வாரிசு என்று சொல்லிக்கொள்ளும் ஹெர்மான் கோயரிங், நாஸி ஜெர்மனியின் அந்திய காலத்தில் ரகசியமாக நடைபெற்ற சம்பவங்களைப் பற்றிய பூரா விவரங்களையும் வெளியிட்டிருக்கிறான்.



ஜெர்மன் விமானப்படையின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் சொல்லிவிட்டு அது ஹிட்லரின் வெறிபிடித்த குறுக்கீடுவதினால் இகழ்ச்சி பெற்றதென்றும் அவன் சொன்னான். 1940-ம் வருஷத்தில் பிரிட்டனைப் படையெடுக்காததற்கு நாஸிகள் உத்தியோக முறையில் சொல்லும் காரணத்தையும், அவ்வருஷம் இலையுதிர்காலத்தில் பிரிட்டனுக்கான விமானப்போரை நிறுத்தியதற்கான காரணங்களையும் அவன் முதன் முதலாக எடுத்துரைத்தான்.

M. E. 262 என்ற குழல் சண்டை விமானங்கள் எதிரியின் வெடி விமானங்களை அழித்து ஜெர்மனிக்கு வெற்றியளித்து விடுமென்று கோயரிங் நம்பியிருந்தான். இந்தச் சண்டை விமானத்தை ஹிட்லர் பார்வையிட்டபொழுது தனக்கு சண்டை விமானங்களில் நம்பிக்கை இல்லையென்றும் 262 விமானத்தின் கவசத்தை எடுத்துவிட்டு அதை வெடிவிமானமாக மாற்றியமைக்கவேண்டுமென்றும் ஹிட்லர் சொன்னான். இது கோயரிங்குக்கு ஆச்சரியமாக இருந்தது. அதை சண்டை விமானமென்று சொல்லக்கூடாதென்றும் மின்னல் வெடி விமானம் என்று அழைக்கவேண்டுமென்றும் ஹிட்லர் கடுமையான உத்தரவு போட்டான். 1944-ம் வருஷம் முடிவில்தான் ஹிட்லர் சற்று இணங்கி 16 M. E. 262 சண்டை விமானங்களை நேசதேச வெடிவிமானங்களைத் தாக்கும்படி ஏவினான்.

ஹிட்லர் குறுக்கிட்டதுதான் ஜெர்மன் விமானப்படையின் வீழ்ச்சிக்குக் காரணம் என்பது கோயரிங்கின் அபிப்பிராயம். பிரிட்டனுக்கான போரில் ஏற்பட்ட நஷ்டங்கள் பிரமாதமானவையல்ல என்று கோயரிங் சொல்லுகிறான். போரின் முடிவில் ஜெர்மன் விமானப்படை பலம் ஒரு சிறிது அதிகமாக இருந்தது. ஆகிலும் விமான நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

பிரிட்டனைப் படையெடுப்பதில் ஜெர்மன் விமானப்படை ஆதிக்கம் ஏற்பட்டிருக்கும். ஆனால் ஜெர்மன் கடற்படை அதற்குத் தயாராக இல்லை. கப்பல்கள் குறைவாக இருந்ததினால்தான் பிரிட்டனைப் படையெடுக்கும் எண்ணம் கைவிடப்பட்டது. படைகளை இறக்கும் படகுகளும் அதிகமாக இல்லை. பரிசைக்ஷ பார்த்ததும் வெற்றிகரமாக இல்லை.

ஒருவருடைய யோசனையையும் கேட்காமல் ஹிட்லர் ருஷ்யாபேரில் போர் தொடுத்தான். கிழக்கில் போரைத் துவக்கியது என்னை நம்பிக்கையை இழக்கும்படி செய்தது என்று கோயரிங் சொன்னான்.

ஸ்டாலின் கிராட்டிலும் மற்ற பகுதிகளிலும் தனிக்கப்பட்ட படைகளுக்கு சாப்பாடுகளை ஜெர்மன் வெடிவிமானங்கள் மூலம் அனுப்பவேண்டுமென்று ஹிட்லர் முடிவு செய்தான். இந்த முயற்சியில் ஜெர்மனியின் சிறந்த வெடி விமானப்படை அழிந்தது என்று கோயரிங் சொன்னான்.

---

## போர்னியோவில் ஆஸ்திரேலிய வெற்றிகள்.

### பழிவாங்கும் நடவடிக்கை போன்றது.

(டெயிலி மெயில்).

வடக்கில் தாரகான், புருனே விரிகுடாவும் தெற்கில் பாலிக் பாபானுமுள்ள முக்கோணமான கேந்திரஸ்தானங்களுடன் ஆஸ்திரேலியர்களுக்கு போர்னியோவில் பூர்ணமான ஆதிக்கம் இருந்துவருகிறது. இந்த நடவடிக்கைகள் பழிவாங்குவது போலிருக்கின்றன. மலேயாவில் கைது செய்யப்பட்ட பிரிடிஷ், இந்திய, ஆஸ்திரேலியக் கைதிகளுக்குப் பழிக்குப் பழிவாங்கி விட்டோமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

11 வாரங்களுக்குள் ஆஸ்திரேலியர்கள், புருனே விரிகுடா, பாலிக்பாபான் என்ற இரண்டு கடற்படை, விமானப் படை தளங்களை ஜப்பானிடமிருந்து கவர்ந்து விட்டார்கள். மலேயா, ஜாவா, சுமாத்ரா, இந்தோ-சைனாவை விமான மூலம் தாக்க சௌகரியமளிக்கக்கூடிய ஏழு விமான தளங்களை ஆஸ்திரேலியா கைப்பற்றிவிட்டது. புருனேக்குத் தெற்கில் 60 மைல்களிலுள்ளதும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கு முக்கியமான பெரிய எண்ணெய் ஆதாரமுமான சேரியா, மிரி எண்ணெய் பிரதேசங்களிலிருந்து ஆஸ்திரேலியர்கள் ஜப்பானியர்களை அப்புறப்படுத்திவிட்டார்கள்.

சேரியாவுக்கு சமீபத்திலுள்ள பிரிடிஷ் எண்ணெய் சுத்தி செய்யும் சாலைகளையும் அவர்கள் திரும்பிப் பிடித்தார்கள். தாரகானிலும் பாலிக்பாபானிலும் உள்ள ஆயிரக்கணக்கான பவுன்கள் பொருமானமுள்ள ஜப்பானிய எண்ணெயையும், முஸ்திப்புகளையும் விசாலமான டச்சு எண்ணெய் சுத்தி செய்யும் சாலைகளையும் அவர்கள் கைப்பற்றினார்கள். வடமேற்கு கடற்கரையிலுள்ள ரப்பர் தோட்டங்களையும் விலையுயர்ந்த உலோக பிரதேசங்களையும் திரும்பிப் பிடித்தார்கள். எல்லாவற்றையும் மேலாக ஒரு பெரிய ஜப்பானியப் படையை துர்பலப்படுத்திவிட்டார்கள். ராணுவ முக்கியத்வமில்லாத ஒரு பிராந்தியத்தில் அப்படைகள் உணவில்லாமல் சாகவேண்டியதுதான்.

ஆஸ்திரேலியர்களுக்கு ராணுவ ஆதிக்கம் ஏற்பட்டிருப்பதினால் அவர்கள் போர்னியோவில் எந்த இடத்திலும் இறங்கக்கூடுமென்று ஏற்பட்டுவிட்டது.

ஆகிலும் தற்பொழுது நேசதேசத்தார்கள் கிடைத்த லாபங்களை பயன்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு போரிலும் ஜப்பானியர்கள் நன்றாய் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

## பிரிடிஷ் விமானப்படை பசிபிக்குக்குச் செல்லத் தயார்.

### ஆகினவா தளமாக இருக்கும்.

ஜப்பானிய விமான நடவடிக்கை சம்பந்தமாக குவாமில் அநேகக் கூட்டங்களைக் கூட்டிய விமானப்படை மார்ஷல் ஸர் ஹூ லாயிட் எந்த எந்த பிரிடிஷ் வெடிவிமானங்கள் உபயோகிக்கப்படுமென்று சொல்லவில்லை. முக்கியமாக லங்காஸ்டர்களும், லிங்கன்ஸுகளும்தான் உபயோகிக்கப்படுமென்று தோன்றுகிறது. எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே அவைகள் நடவடிக்கைகளைத் துவக்கும் என்று N. C. பிரெயிட்வுட் டெயிலி டெலகிராப்பில் எழுதுகிறார்.

"நம்மிடம் கனமான வெடி விமானங்களிருக்கின்றன. அவைகளை உபயோகிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்" என்று ஸர் ஹூ சொல்லுகிறார். ஜப்பான் பேரில் பிரிடிஷ் விமானங்கள் நடமாடுவது விமானதளங்களின் வசதியைப் பொருத்ததென்று அவர் தெளிவுபடுத்தினார். அநேகமாக விமானப்படை இஞ்சினியர்கள் பசிபிக்கில் வேலைக்கு அனுப்பப்படுவார்கள்.

அமெரிக்க ஸ்ட்ராடஜிக் விமானப்படைகளின் டெபுடி தலைவரான லெப்டினெண்ட் ஜெனரல் பார்னிகைல்ஸுடன் விமானப்படை மார்ஷல் லாயிட் கலந்து ஆலோசித்தார் என்பதிலிருந்து பிரிடிஷ் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையுடன் ஒன்று சேரலாமென்பது தெளிவுபடும். இந்த ஏற்பாடு பூர்ணமான ஒத்துழைப்பை உத்தரவாதம் செய்யும் என்று விமானப்படை மார்ஷல் சொன்னார். இதற்கு சமமாக கடற்தளபதி ஸிமிட்ஸின் ஒன்றுபட்ட தலைமையில் உள்ள பிரிடிஷ் பசிபிக் கடற்படையின் வெற்றிகரமான நடவடிக்கையைச் சொல்லலாம்.

பிரிடிஷ் விமானப்படையின் ஒரு பெரும்பகுதி பசிபிக்குக்கு அனுப்பப்படும் என்று ஸர் ஹூ சொன்னார். அதற்கு யார் தலைமை வகிப்பார் என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை. ஆனால் ஸர் ஹூ லாயிடுக்கு சமமான அந்தஸ்து உள்ளவர்தான் அதற்குத் தலைமை வகிக்கக்கூடுமென்று ஊகிக்கலாம்.

பிரிடிஷ் வெடி விமானங்கள் தங்கியிருக்கக்கூடிய இடம் ஆகினவாதான். அதை விமானப்படை மார்ஷல் லாயிட் பார்வையிட்டிருக்கிறார்.

---

## நேசதேசத்தார்கள் ஜெர்மன் யுத்தக் கப்பல்களை உபயோகிக்கிறார்கள்.

### ஜப்பானியப் போருக்கு உதவி.

(பிரியான் டன்ஸ்டால்).

சரணாகதி செய்த ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த கப்பல்களை எவ்விதம் எதிர்காலத்தில் பயன்படுத்துவது என்ற விஷயத்தில் அநேக ஹேஷ்யங்கள் தோன்றுகின்றன. நேச



தேசத்தார்களின் சார்பாக பிரிடிஷ் கடற்படையிடம் அநேக ஜெர்மன் கப்பல்கள் சரணாகதி அடைந்திருக்கின்றன.

இயற்கையாக யூ படகுகள் தான் நேசதேசத்தாரின் கவனத்தைக் கவர்ந்து வந்தன. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த யந்திர நிபுணர்கள் எவ்விதமான நூதன முறைகள் உபயோகிக்கப்பட்டன என்பதை சர்ச்சை செய்து வருகிறார்கள். இந்த ரிபோர்ட்டுகளைப் பரிசீலனை செய்து அவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு சிறிது காலதாமதமாகும்.

உபயோகப்படக்கூடிய வகையில் சில ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் நாசகாரிகளும் தான் இருக்கின்றன. மற்ற சில்லரைக் கப்பல்களில் ஜெர்மானியர்கள் ஓட்டிவரும் சுரங்க வாரிக் கப்பல்கள் ஜெர்மன் சமுத்திரங்களில் உபயோகமுள்ள வேலையைச் செய்துவருகின்றன. இதனால் பிரிடிஷ் கப்பல்கள் சுரங்க வெடிகளை அகற்றும் வேலைக்காக மற்ற பாகங்களுக்கும் தூரக்கிழக்குக்கும் செல்லுகின்றன. சிறிய துணைக்காவல், ரோந்துக் கப்பல்களும், மீன் வெடிக் கப்பல்களும், மூழ்கிய சாமானை எடுக்கும் கப்பல்களும், இழுப்புக் கப்பல்களும், டெண்டர்களும், துறைமுகத்தில் உதவி புரியும் கப்பல்களும் மற்ற சில்லரை உதவிக் கப்பல்களும் நேச்தேச மேன்பார்வைக் குட்பட்ட சமுத்திரங்களிலும், கடற்கரை, துறைமுக, நதித் தேவைகளிலும் உபயோகமுள்ள வேலை செய்துவருகின்றன. இவ்விதமாக சரணாகதியடைந்த ஜெர்மன் கடற்படை ஜப்பானிய யுத்தத்தில் நேசதேசத்தாருக்கு வாலண்டரியான, நேர்முகமான ஒத்தாசையைச் செய்துவருகிறது.

---

## தூரக்கிழக்கில் இரண்டு தனிப்பட்ட போர்கள்.

### தூரத்துக்கான போர்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

ஜப்பானியப் போரை நடத்த வெகுதூரம் கடந்துசெல்ல வேண்டியிருக்கிறதென்பதை சாதாரணமான அறிவாளிகளும் மதித்துப் பார்க்கவில்லையென்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

விமான் மூலம் காலவரம்பு கடக்கப்பட்டுவிட்டதென்று சொல்லுவது உண்மையே. ஆகிலும் எல்லா பிரயாணமும் விமான மூலம் நடக்கும் காலம் இன்னும் வரவில்லை. துருப்புகளும் சர்ப்பராக்களும் கடல் மூலமாகவும், ரஸ்தா மூலமாகவும் செல்லவேண்டியிருக்கிறது. பர்மாவில் மட்டும்தான் தரைப்படைகளுக்கு விமான மூலம் சர்ப்பராக்கள் அனுப்பப்பட்டு வந்தன.

தூரக்கிழக்கில் நேசதேசத்தார்களுக்கு உள்ள சிரமங்களை அறிய வேண்டுமானால் இரண்டு அடிப்படையான தூரங்கள் என்ற பிரச்னையை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று மறுபடியும் வற்புறுத்துகிறேன்.

ஆசியா படத்தை எடுத்துக்கொண்டு, கோடளக்கும் கருவியின் ஒரு முனையை டோக்கியோவில் வைத்து அங்கிருந்து ரெங்கூனுக்கும் டோக்கியோவுக்கும் உள்ள தூரத்தை அளவிடுங்கள். இரண்டு இடங்களும் 3,000 மைல்கள்மேல் தூரத்திலிருக்கும். அதன்பின் ரெங்கூனிலிருந்து டச்சு கிழக்கு இந்திஸ் வழியாக ஸாலமன்ஸுக்குச் செல்லும் பிறையை அளந்து பாருங்கள். அது ஏறக்குறைய 5,000 மைல்கள் இருக்கும். இந்த இரு புஜம் சமமுள்ள ஒரு முக்கோணத்தில்தான் ஜப்பானியப்போர் நடைபெறுகிறது. அங்குதான் போரை நடத்த ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் சர்ப்பராக்களும் உதவிப் படைகளும் அனுப்பப்பட வேண்டும்.

நேசதேசத்தார்கள் தூரத்தையும், பருவகாலத்தையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. தென்கிழக்கிலுள்ள பருவகாலமும், வடக்கிலுள்ள சூறாவளிக் காற்றும் ராணுவ நடவடிக்கைக்குக் குந்தகங்கள் எந்த திட்டமும் இதைத் தவிர்க்கமுடியாது.

ஆசியா தேசப்படத்தில் இவற்றைக் குறித்தபின் ஜெர்மன் போர் ஜப்பானியப் போரின் பரிமாணத்தை எட்டாது என்று நிச்சயமாய் அறியலாம்.

ஆகையினால் ஜப்பானியப்படைகளின் அமைப்பை நாம் சற்று ஆராய்ச்சி செய்வோம். அவைகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது ஜப்பானைச் சுற்றியுள்ள தீவுகளிலுள்ள படைகள், இரண்டாவது, ஆசியா கண்டத்தில் சைனா, கொரியா, மஞ்சூரியாவிலுள்ள படைகள் மூன்றாவதாக, நான் சொன்ன 5,000 மைல்கள் பிறையில் இன்னும் போர் புரிவதும், தாய் நாட்டிலிருந்து துணிக்கப்பட்டதுமானதும், மலேயே, சியாம், போர்னியோ முதலிய இடங்களில் இருப்பதுமான படைகள்.

தெற்கிலுள்ள படைகளை முதலில் கவனிப்போம். ஆஸ்திரேலியர்கள் மேற்கில் போர்னியோவுக்கு வந்துவிட்டார்கள். தென்கிழக்கு ஆசியாப்படைகள் கிழக்கில் ரெங்கூன் வரையில் வந்துவிட்டார்கள். அவ்விரு படைகளும் மலாக்கா ஜலசந்தியில் கைகுலுக்குவார்கள். ஆகிலும் அவைகளின் நடவடிக்கைகள் பிலிப்பைன்ஸ், ஐவோஜிமா, ஆகினாவாவிலுள்ள தளங்களிலிருந்து அமெரிக்கர்கள் ஆரம்பிக்கும் நடவடிக்கைக்கு முற்றிலும் வேறானதாக இருக்கும்.

ஆகிலும் ஜப்பானைத் தாக்கும் நடவடிக்கைதான் மிகவும் முக்கியமானது. வடக்கில் என்ன நேர்ந்தாலும் தெற்கிலுள்ள தீவுக்கூட்டங்களின் கோர்வையை சுத்திசெய்வது அட்லாண்டிக் கடலிலும் கால்வாயிலும் உள்ள ஜெர்மன் தற்காப்பு முகாம்களை சுத்தி செய்வதைவிட பெரிய பிரச்னையாகும். பின்பக்கத்தில் சாதகமில்லாத கடல்களையுடைய ஜெர்மன் படைகள் தரைமார்க்கத்தில் எதிரிகளால் வளைக்கப்பட்டார்கள். ஜப்பானியர்களின் பெரும்பாகம் அடர்த்தியான காடுகளின் விசாலமான பாகங்களில் திரிகிறார்கள்.

சுத்திசெய்யும் நடவடிக்கைகள் வெகுகாலம் அதிகச் செலவுடன் நடைபெறலாம். அந்த வேலை பூர்த்தியாகுமுன் தெற்கிலுள்ள பிரிடிஷ், சாம்ராஜ்ஜியப்படைகள் ஜப்பானைத் தாக்க இரண்டாவது படை வரிசையை அமைக்கமுடியாது.

மற்ற இரண்டு ஜப்பானிய எதிர்ப்புப் படைகளை கவனிப்போம். சூஷிமா ஜல சந்தி ஜப்பானுடைய வசத்திலும் உபயோகத்திலும் இருந்துவரும் பொழுது தேவைக்குத் தகுந்தபடி ஜப்பான் தாய் நாட்டிலிருந்து அதைச் சுற்றியுள்ள தீவுகளுக்கும் அங்கிருந்து தாய் நாட்டிற்கும் படைகளை அனுப்ப முடியும். வடக்கில் தற்காப்பு செய்துவரும் ஜப்பானியர்கள் உள் வட்டாரத்திலிருந்து வருகிறார்கள். ஜப்பானிலேயே படையெடுப்பு ஏற்படுமானால் ஜப்பானிய பலம் அங்கு வைக்கப்படலாம். தீவு தளங்களிலிருந்து ஜப்பானைச் சுற்றியுள்ள தீவுகள் தாக்கப்படுமானால், ஜப்பானிலிருந்து துருப்புகளை அவ்விடங்களுக்குக் கொண்டு போகலாம். இந்த இரண்டு படைகளும் உண்மையில் ஒன்று பட்டவை. கடல் மார்க்கம் தான் அவைகளை வேறுபடுத்தியிருக்கிறது.

நான் முக்கியமாக ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. மலேயா, சியாம், டச்சுக்கிழக்கிந்தீஸ் முதலிய நாடுகள் விடுவிக்கப்படும்வரையில் தூரக்கிழக்கில் இரண்டு தெளிவான தனிப்பட்ட போர்கள் நடைபெறும். இவ்விரண்டையும் ஒன்றுபடுத்த காலதாமதமாகும்.

---

## ஜப்பான் பேரில் விமான நடவடிக்கை.

### விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களின் செய்கை.

**விமான நடவடிக்கை பிரியர்.**

(மாஞ்செஸ்டர் கார்டியன்).

அட்மிரல் ஹால்ஸியிடமுள்ள மூன்றாவது அமெரிக்கக் கடற்படை ஜப்பானைப் பலமாகத் தாக்குவதிலிருந்து விமானந்தாங்கிகளில் செல்லும் விமானப்படையின் சக்தியைப்பற்றியும் லக்ஷியத்தைப்பற்றியும் புதிய தகவல்களைத் தொகுக்கலாம். விமானந்தாங்கிகளில் செல்லும் விமானப்படையின் உபயோகத்தைப்பற்றி உலகத்திலுள்ள கடற்படை அபிப்பிராயம் இருவகைப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க புதிய உண்மைகள் தொகுக்கப்படுகின்றன.

ஜப்பானை 1,000 விமானங்கள் தாக்கியதென்பதே ஒரு அற்புதமான நடவடிக்கையாகும். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் கமாண்டு கோலோனை முதல் முதலில் 1,000 வெடி விமானங்களைக் கொண்டு தாக்கியபொழுது அது ஒரு பெரிய அற்புதச் செய்கை என்று



கருதப்பட்டது. 1,000 விமானங்களை ஒரு கப்பலின் தட்டில் வைத்துச் செல்லுவது என்பது அதைவிட அற்புதமான நடவடிக்கையாகும். லெக்ஸிங்டன், எஸ்ஸக்ஸ், இண்டிபெண்டன்ஸ், ஸான்ஜாஸிண்டோ என்ற நான்கு விமானந்தாங்கிகளின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகிலும் அவை போன்ற அநேகம் கப்பல்கள் போரில் ஈடுபட்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

ஜப்பானில் இதற்கு எவ்விதமான அதிர்ச்சி ஏற்பட்டதென்றும் விமானந்தாங்கிகள் பின்வாங்கும்பொழுது ஜப்பான் பலமாக எதிர்த்துத் தாக்கியதாவென்றும் விவரங்கள் கிடைக்கவில்லை. ஆகிலும் ஜப்பானிடம் இன்னும் முதல்தரமான 4,000 விமானங்கள் இருந்து வருகின்றன.

விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களின் முக்கியமான அம்சம் யாதெனில் அவைகள் போர்முனைக்கு சமீபத்திலிருக்கும் தளங்களிலிருந்து நடமாடுகின்றன. அதாவது அவைகள் தூரதேசத்திலிருந்து நடமாடுவதைவிடக் குறைவான எண்ணெயை ஏற்றிச் செல்லும். அதினின்றும் அவைகள் லகுவாக இருக்கக்கூடுமாதலால் அவைகள் அதிக திறமையுடன் போர்புரியக்கூடும்.

சமீப கால நடவடிக்கைகள் ஜப்பானில் படையெடுப்புக்குமுன் நடவடிக்கைகள் என்று சொல்லப்படுகிறது. விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்கள் ஜெனரல் ஸ்பாட்ஸிடமுள்ள ஸ்ட்ராடஜிகல் வெடி விமானங்களின் வேலைக்கு ஒத்தாசை செய்துவருகின்றன.

ஒரு வருஷத்துக்கு முன்தான் முதல் முதலாக B-29 சூபர் பறக்கும் கோட்டைகள் கொண்ட படை ஜப்பானுக்குக் குறுக்கே சென்றது.

---

## ஜப்பான் பேரில் பீரங்கிப் பிரயோகம்.

### அமெரிக்கத் தாக்குதல் முறை.

ஜூலை 15-ம் தேதியன்று மூன்று அமெரிக்கக் கப்பல்கள் 48 மணிகளுக்குள் இரண்டாவது தடவையாக ஜப்பான் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்ததை வர்ணித்து டெயிலி டெலிகிராப்பில் N. C. பிரெயிட் வுட் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:--

ஜப்பானியத் தற்காப்புகளின் பலஹீனத்துக்கு என்ன காரணமிருந்த போதிலும் விமானத் தாங்கிகளினாலும் யுத்தக் கப்பல்களாலும் நடத்தப்படும் தாக்குதல்கள் படைகளின் ஒத்திகையைப் போல சாவதானமாக நடைபெற்று வந்திருக்கின்றன.

லாகவத்துடன் தாக்குதல் நடைபெற்றதினால் ஜப்பான் சம்புடம்போல் இருப்பதிலிருந்து அதை சுலபமாகத் தாக்கிவிடலாமென்று வெளிப்படுகிறது. அதற்குமுன் எல்லா ஸ்தானங்களும் ஜப்பானிலிருந்து சுலபமாகக் கையாளக் கூடிய நிலைமையிலிருந்தன என்று ஜப்பான் திருப்தி அடைந்திருந்தது. கடற்தளபதி ஹால்ஸியும் சூபர் பறக்கும் கோட்டைகளும் ஜப்பானின் ஆஸ்தியைக் கடனாகச் செய்துவிட்டன. நமது நடவடிக்கைகளை வழிமறிக்க ஜப்பானுக்கு அதிக சக்தியிருக்கிறதென்றும் நேசதேச கமாண்டர்கள் மதிக்கவில்லை.

கடற் தளபதி ஹால்ஸியின் தந்திரம் அமெரிக்க முன்னேறித் தாக்கும் முறையை வெளிப்படுத்துகிறது. விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்கள் எதிரியின் விமானங்களையும், யந்திரங்களையும், ஒர்க்ஷாப்புகளையும் அழிக்கவேண்டும். யுத்தக் கப்பல்கள் தொழிற்சாலைகளையும் எதிரியின் முக்கியமான போக்குவரத்து மார்க்கங்களையும் நொருக்க வேண்டும். விமானதள அமைப்புகளை அழித்துவிட்டால் ஜப்பானிய விமானப் படையின் சலன சக்தி குறைந்துவிடும்.

ஜப்பான் இரண்டு சாதகங்களையும் பெறமுடியாது. விமானங்களை அனுப்பி, தொழிற்சாலைகளையும், விமான தளங்களையும், போக்குவரத்து மார்க்கங்களையும் அது தற்காப்பு செய்யமுடியாது. ஆகையால் இப்பொழுது ஒன்றும் செய்யாமல் படைகளிறங்கும் பொழுது தாக்கலாமென்று ஜப்பான் உத்தேசித்திருக்கிறது.

## பலமாக நொருக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டிருக்கின்றன.

### ஜப்பானியத் தற்காப்புகளின் ஆராய்ச்சி.

(மேஜர் E. W. ஷெப்பர்ட்).

ஜப்பானியப் போரின் அநேக முனைகளைப் பார்வையிட்டபின் எல்லா யுத்தங்களிலும் மிகப் பெரியதான இந்தப் போரின் பல்வேறு அம்சத்தைக் கண்டு வியப்புறாமல் இருக்க முடியாது. யுத்தம் நமக்கு சாதகமாக இருந்துவருகிறதென்றாலும் நாம் எவ்வளவு தூரமும் எவ்வளவு திசைகளிலும் செல்லவேண்டியிருக்கிறது.

பர்மாவில் தொடங்கி, மலேயா, டச்சுக்கிழக்கு இந்தீஸ், டிமார், நியூகினியா வழியாகச் சென்று ஸாலமன்ஸில் முடியும் ஜப்பானின் எல்லை வட்டார தற்காப்பு சிதள் சிதளாகி விட்டது. ஜப்பான் பர்மாவை இழந்துவிட்டது. நியூகினியாவும் ஸாலமன்ஸும் அநேகமாய்ப் போய்விட்டன. மற்ற எல்லாத் தீவுகளும் ஜப்பானிலிருந்து ஸப்ளைகளையும் உதவிப் படைகளையும் பெறக்கூடிய நம்பிக்கையை இழந்தன.

ஜப்பானிய உள் வட்டாரமும் பலமாக நொருக்கப்பட்டுவிட்டது. போர்னியோ தாக்கப்படுகிறது. பிலிப்பைன்ஸ் பூராவும் ஜப்பான் அநேகமாக இழந்துவிட்டது. காரொலைன்ஸும், பாலாத் தீவுகளும் போய்விட்டன. ஐவோஜிமா, ஓகினுவாவைப் பிடித்தபின் அமெரிக்கர்கள் வால்கேனு, ரையுகியூஸ் தீவுக்கூட்டங்களில் இறங்கிவிட்டார்கள்.

ஜப்பான், பார்மோஸா, சீனக் கடற்கரையில் படைகள் இறங்கக்கூடும். நேசதேச விமானப் படைகள் ஜப்பானிய யுத்த தொழிற்சாலைகளை நாசமாக்கி பலமான உயிர்ச் சேதமும் உண்டுபண்ணியிருக்கின்றன. இதுதான் ஜப்பானின் நிலைமை.

ஜப்பானிய கடற்படை முடமாக்கப்பட்டுவிட்டது. விமானப்படையும், பலமான நஷ்டமடைந்துவிட்டது. ஆனால் ஜப்பானின் முக்கிய பலமான சேனை இன்னும் அழிக்கப்படவில்லை. மூன்று வருஷ யுத்தத்தில் ஜப்பான் 10 லக்ஷம் ஜனங்களுக்குமேல் இழந்துவிடவில்லை. ரிக்ரூட்டுகளைத் திரட்டி அந்த நஷ்டமும் ஈடு செய்யப்பட்டுவிட்டது.

ஜப்பானிடம் 40 லக்ஷம் துருப்புகள் இருக்கின்றன. அதைப்போல இரட்டிப்பு மடங்கு மூல பலம் இருக்கிறது. அநேக சமீபகால தோல்விகளுக்குப் பின்னும் அதன் மன உறுதி குலைந்துவிடவில்லை. நாம் ஜெர்மன் சேனையை முறியடித்துவிட்டோம். நாம் ஜப்பானையும் முறியடித்துவிடலாம். ஆனால் அது துரிதமாகவும் சுலபமாகவும் நடைபெறாது.

---

## படையெடுப்பை சமாளிக்க ஐச்வர்யங்களை மீதப்படுத்துவது.

### கடல், ஆகாய தற்காப்புகளில் ஜப்பானின் ஆலஸ்யம்.

(லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக்).

ஜப்பான் பேரில் விமான நடவடிக்கை குறைவற்ற பலத்துடன் நடைபெற்று வருகிறது. ஹோக்கெய்டோவிலிருந்து கியூஷூ வரையிலுள்ள ஜப்பானியக் கடற்கரைகளைச் சுற்றி நேசக் கடற்படைகள் இஷ்டப்படி சஞ்சாரம் செய்துவருகின்றன. இவற்றை குறுக்கிட்டுத் தடுக்காமல் ஜப்பான் அவைகளை திருப்தியுடன் கவனித்து வருகிறது

இதேமாதிரி சென்ற வருஷ முடிவில் ஜெர்மன் தற்காப்பாளரும் அமைதியுடன் இருந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகிலும் டிசம்பர் மாத மத்தியில் ருண்ட்ஸ்டெட் ஆர்டெனிஸில் பதில் தாக்குதலை ஆரம்பித்தான். ஜெர்மனியின் அமைதிக்கு, பலமான பதில் தாக்குதலைச் செய்ய பெட்ரோலும் எண்ணெயும் கையிருப்பு வேண்டுமென்பதற்காக ஆகாயத்திலும் தரையிலும் படைகளின் சலனம் கட்டுப்பாடு செய்யப்பட்டதுதான் காரணம். பதில்தாக்குதல் மூலம் வெற்றிபெற்று எதிரியின் சமான்களைக் கைப்பற்றினால் பின்னும் அநேக வெற்றிகளைப் பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.



கடலிலும் ஆகாயத்திலும் ஜப்பானியரின் ஆலஸியத்திற்கும் அதே காரணங்கள்தானிருக்குமென்று நான் நினைக்கிறேன். அபாயம் ஏற்படக்கூடிய வழியைத்தாண்டி மஞ்சூரியாவுக்கு ஜப்பான் விமானப்படைகளின் பெரும்பாகத்தைப் பின்வாங்கிவிட்டது. மிட்வே, பவளக் கடல், மற்ற கடற்போர்களில் ஏற்பட்ட காயங்களுக்குப்பின் ஜப்பானியக் கடற்படை போரை நடத்த சக்தி பெற்றிருக்கவில்லை.

இன்று மற்ற இரண்டு படைகளையும்விட சேனையைப்பற்றித்தான் எழுத விரும்புகிறேன். போரை முடிப்பதற்காக நேசதேசத்தார்கள் படைகளை இறக்கி இறுதித்தாக்குதல் செய்யும்பொழுது அந்த பளுவை சேனைதான் சமாளிக்கவேண்டும். இதுவரையில் ஜப்பானிய சேனை பலமான போரில் ஈடுபடவில்லை. புள்ளிவிவரங்களும் சுலபமாகக் கிடைக்கவில்லை. ஆனால் மிகவும் குறிப்பான புள்ளிவிவரங்களும் மனிதர்களின் உணர்ச்சியைவிட குறைவான முக்கியத்வமுள்ளவை என்று நாம் ஆறுதல் அடைவோம். போர்ப்படைகளின் தீரத்தை அச்சிடுவதினால் மதிக்கமுடியாது. ஆகையால் புள்ளி விவரங்களை மட்டும் இங்கு கூறுவோம்.

முதலில் ஜப்பானியக் கடற்படையையும், விமானப்- டையையும் பற்றி சிலவார்த்தைகளைக் கூறுவோம். கடற்படையில் 5,00,000 பேர்கள் இருக்கிறார்கள். விமானப்படையில் 7,50,000 பேர்கள் இருக்கிறார்கள். இவ்விரண்டு படைகளும் பலமாக அழிக்கப்பட்டிருக்கின்றன.

சேனை பிரமாதகரமாக இருக்கிறது. அதில் 40 லக்ஷம் பேர்கள் இருக்கிறார்கள். அது பின்வருமாறு வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| (a) மஞ்சூரியாவில் ... ... ... | 7,50,000 |
| (b) சைனாவில் ... ... ... | 6,50,000 |
| (c) ஜப்பானில் ... ... ... | 17,00,000 |
| (d) மலேயா, பசிபிக் தீவுகள் வகையரா ... ... | 6,00,000 |
| மொத்தம் ... | 37,00,000 |

அவர்களிடம் உள்ள கவசம் அவர்கள் இருக்கும் போர்பிராந்தியத்தைப் பொறுத்தது. பர்மாவில் அவர்களிடம் சிறிய ஆயுதங்களும் சட்டி பீரங்கிகளும்தானிருக்கின்றன. தரைப் படைகளுக்கு லேசான பீரங்கிகளின் உதவிதானுண்டு. ஆனால் ஜப்பானின் சில பாகங்களில் கவசம் பூண்டபடைகளும், கனமான, லேசான பீரங்கிகளும் நேசதேசப்படைகளை எதிர்க்கும்.

புள்ளி விபரங்கள் மதிப்பானவை என்று வைத்துக்கொண்டால், ஜப்பானின் போர் உணர்ச்சியைப்பற்றி நமக்கு சரியான அபிப்பிராயம் கிடைத்துவிடும். ஜப்பானிய படைக்குப் பின் பொதுஜனங்கள் இருக்கிறார்கள். ஜெர்மன் உள்நாட்டு ரக்ஷகப்படையைக்காட்டிலும் அவர்கள் சிறந்த முறையில் நடந்துகொள்ளுவார்கள்.

சேனைகளின் வெற்றிக்குக் காரணமான போக்குவரத்து மார்க்கங்களைப்பற்றி ஒரு வார்த்தை எழுதுகிறேன். ஜப்பானின் கடற்கரை 17,000 மைல்கள் நீளமுள்ளது. 80 மிலியன் ஜப்பானியர்களும்கூட அதை ஒவ்வொரு கஜத்திலும் கண்காணிப்பு செய்யமுடியாது. படையெடுப்பைத் தடுக்க படைகளிறங்கக்கூடிய இடங்களுக்குப்பின் மூலபலம் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் படைகள் வேறு ஒரு இடத்திலிறங்கினால் அங்கும் துரிதமாக அனுப்பப்படும்.

இவ்விதம் படைகளைச் சலனம் செய்ய ஜப்பானில் இருப்புப்பாதைகள் மிகுதியாக இருக்கின்றன. உள்நாட்டுக் கடல்களும் மற்றொரு போக்குவரத்து சாதனமாகும். ஆகையினால்தான் உள்நாட்டுக்கடல்களும் இருப்பதைகளும் விமானமூலம் அடிக்கடித் தாக்கப்படுகின்றன. வருஷ ஆரம்பத்தில் ஜெர்மன் போக்கு வரத்து மார்க்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாக பிரயோஜனமற்றதாகச் செய்யப்பட்டதுபோல ஜப்பானியப் போக்குவரத்து மார்க்கங்களும் உபயோகமற்றதாகச் செய்யப்படுகின்றன.

# ஜப்பானியப் படையெடுப்புக்கு முற்போக்கான நடவடிக்கை.

## நேசநேச நடவடிக்கைகளில் அபிவிருத்திகள்.

(விக்ஹாம் ஸ்டீட்).

உலகமளாவிய இரண்டு பெரிய விஷயங்கள் பிரிடிஷ் மக்களின் மனதை இப்பொழுது கவருகின்றன. ஒன்று பாட்ஸ்டாமில் நடைபெறப்போகும் முப்பெரியாரின் கூட்டம். மற்றொன்று ஜப்பானியப் போரின் நடவடிக்கை அதிகரிப்பு.

பாட்ஸ்டாமில் செய்யப்படும் முடிவுகள் தூரக்கிழக்குப் போரின் நடைமுறையையும் நீடிப்பையும் நேர்முகமாக பாதிக்கும் என்று வதந்திகள் உலாவுகின்றன. ஆகிலும் அது ஊர்ஜிதமாகவில்லை. அந்தப் போருக்காக பிரிடிஷ் சாம்ராஜ்ய அமெரிக்கக் கப்பல்களும், தொழிற்சாலை ஐச்வர்யங்களும் மிகுதியாக அனுப்பப்படவேண்டுமாகையால், ஐரோப்பாவின் கஷ்ட நிவாரணத்துக்கும் புனருத்தாரணத்துக்கும் மேற்கு வல்லரசுகள் அவர்களின் பூரா பொருளாதார பலத்தையும் பிரயோகிக்க முடியாது.

குறிப்பான முடிவுகளுக்கு வரும் வரையில் பாட்ஸ்டாம் நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்கள் ரகசியமாக இருக்கும். இதே சமயத்தில் ஜப்பானைக் குறித்து பிரிடனும் அமெரிக்காவும் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளில் துரிதமான அபிவிருத்திகள் காணப்படுகின்றன. ஆக்கிரமிப்பு ஜெர்மனியிலிருந்த நேசதேசப்படைகள் பிரிடிஷ் அமெரிக்க விமான நடவடிக்கை மூலம் ஜெர்மன் ராணுவ எண்ணங்கள் குலைக்கப்பட்டன வென்பதற்கு பலமான அத்தாக்ஷியைக் கண்டு விட்டார்கள். ஜப்பானியத் தீவுகள் இப்பொழுது நேசதேசத்தாரின் இடைவிடாத பலமான வெடிகுண்டு வீச்சின் பலனை அனுபவித்து வருகின்றன.

ஜப்பானைவிட ஜெர்மன் தொழிற்சாலை பிரதேசங்கள் பலமாகக் காபந்து செய்யப்பட்டிருந்தன. ஆகினாவா பிடிபடும் வரையில் ஜப்பானிய நகரங்களும், தொழிற்சாலை ஸ்தாபனங்களும் வெகுதூரத்திலிருந்துவரும் விமானங்களாலும் அல்லது ஜப்பானிய விமான தளங்கள், தரை நிலயங்களிலிருந்து குறிப்பிட்ட தூரத்திலிருக்கும் விமானந்தாங்கிகளிலிருந்து புறப்படும் விமானங்களிலிருந்தும்தான் தாக்கப்படும் என்று ஜப்பானிய ஸோல்ஜர்கள் நம்பியிருந்தார்கள். அவர்களின் நம்பிக்கை அழிக்கப்பட்டு விட்டது. ஆகினாவாவிலிருந்தும் ஜப்பானியக் கடற்கரைக்கு கொஞ்ச தூரத்தில் வரும் விமானந்தாங்கிகளிலிருந்தும் புறப்படும் பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் யாதொரு எதிர்ப்பன்னியிலும் ஜப்பானியத் துறைமுகங்களையும், விமான தளங்களையும், ஆயுத சாலைகளையும், அழித்து வருகின்றன.

இந்த நடவடிக்கை படையெடுப்புக்கு முற்போக்கானது என்று கடற்தளபதி நிமிட்ஸ் சொல்லுகிறார். இது சம்பாவிதம் என்று ஜப்பானும் உத்தியோக முறையில் ஒப்புக்கொள்ளுகிறது. நேசதேச யுத்த தந்திரிகள் முன் கூடியே ஒருபொழுதும் அவர்களின் அபிப்பிராயங்களை வெளியிடுவதில்லையாகையால் அவர்கள் அடுத்தபடியாக எதிரி எதிர்பாராத முறையிலும் இடங்களிலும் அடிக்கக்கூடும்.

சக்திவாய்ந்த பிரிடிஷ் கடற்படை உதவிபெற்று நடவடிக்கைகளை நடத்திவரும் அமெரிக்க கமாண்டர்கள் அநேக லக்ஷியங்களைப் பெற்றிருக்கலாம். ஒன்று ஜப்பானியத் தீவுகளை ஆகாயத்திலிருந்தும் கடல் மார்க்கமாகவும் முற்றுகை செய்வது. மற்றொன்று, ஆசியா கண்டத்தில் முக்கியமாக சைனாவிலுள்ள ஜப்பானிய சேனைகளைத் துணிப்பது. மூன்றாவதாக, தரைமார்க்கமாக ஜப்பானில் படையெடுப்பது. வடக்கு ஆபிரிக்கா, இதாலி, வடமேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட படையெடுப்பு அனுபவத்திலிருந்து சக்திவாய்ந்த படைகளை எந்த சௌகரியமானதும் கனமான கடற்படை பீரங்கிகளின் குண்டு வீச்சு வட்டாரத்துக்குட்பட்டதுமான இடங்களில் சாவதானமாக இறக்கலாமென்று ருஜுவாகிறது.

பிரிடிஷ், அமெரிக்க யுத்தக் கப்பல்களிலுள்ள கனமான பீரங்கிகள் ஜப்பானிய கடற்படையின் தொந்திரவன்னியில் ஜப்பானிய கடற்கரை ஸ்தானங்கள்பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன. இதிலிருந்து சென்ற வருஷம் அக்டோபர் மாதத்தில் பிலிப்பைன்ஸுக்கருகில் ஜப்பானியக் கடற்படை பலமாகப் பழுது பட்டதினால் ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்ரங்களிலும் ஜப்பானியக் கடற்படை நேசதேசக் கப்பற்படையை எதிர்த்துத்தாக்க சக்தியற்றிருக்கிறதென்று தெரியவருகிறது. ஜப்பானிய விமான தற்காப்பும் வலுப்பெற்றிருக்கவில்லை. ஏற்கனவே 17,000 ஜப்பானிய விமானங்கள் அழிக்கப்பட்டு விட்டன. முக்கியமான விமான உற்பத்தி தொழிற்சாலைகளும் விமான தளங்களும் நொருக்கப்பட்டு விட்டன அல்லது பிடிக்கப்பட்டு விட்டன. ஆகையால் கடற்படை, விமானப்படை வலிமை நிச்சயமாக ஜப்பானுக்கு பாதகமாக இருக்கிறதென்று முடிவு செய்யலாம்.



தரைப்படை நிலமையும் நிச்சயமாக நம்பக்கூடியதாக இல்லை. நேசதேச படையெடுப்பைத் தடுக்க ஜப்பானியரிடம் எவ்வளவு, எப்பேர்ப்பட்ட படைகள் இருக்கின்றனவென்று குறிப்பாக அறியப்படவில்லை. அதேபோல ஜப்பானிய மக்களின் மனஉறுதியும் மனப்பான்மையும் எவ்விதமிருக்கிறதென்றும் புரியவில்லை.

கியாதிபெருமல் இருந்து சென்ற நூற்றாண்டின் பிற்பாதியில் ஜப்பான் முன்னேற்றமடைய ஆரம்பித்தது முதல் ஜப்பானியர்களுக்கு இவ்விதமான தோல்வித் தோற்றம் ஏற்பட்டதில்லை. 1895-ம் வருஷத்தில் சைனாபோரில் கிடைத்த வெற்றியும், 1905-ம் வருஷத்தில் ருஷ்யா போரில் கிடைத்த வெற்றியும், 1914–1918-ம் வருஷ மகா யுத்தத்தில் ஜெர்மனி பேரில் கிடைத்த வெற்றியும் ஜப்பான் முறியடிக்க முடியாதது என்ற மனப்பான்மையை உண்டுபண்ணி விட்டது. இந்த எண்ணத்தை பசிபிக்கிலும், பர்மாவிலும் ஜப்பானுக்கு ஏற்பட்ட தோல்விகளும் ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்ரங்களில் ஏற்பட்டுவரும் நாசமும் குலைத்திருக்கும். அது இறுதியில் அழிக்கப்பட்டவுடன், ஜப்பான் அடிபணிந்து விடுமா அல்லது ஜப்பானிய ஸோல்ஜர்கள் போர் முனையில் இறுதிவரையில் போர் புரிவதுபோல ஜப்பானிய பொது மக்கள் எதிர்த்துப் போராடுவார்களாவென்றும் ஒருவரும் அறியமுடியாது.

நேசதேசத்தார்கள் நிச்சயமில்லாத இந்த அம்சங்களை மதிக்கக்கூடாது. நேசதேசத்தார்கள் ஜெர்மனியைப்போல ஜப்பானையும் நிச்சந்தேகமாக முறியடிக்கவேண்டும்.

---

# விவசாயமும் தொழிற்முறைகளும்.

ஸர் ஷாண்டி ஸ்வரூப் பாட்னுகர்.

இந்தியாவின் ஜனத்தொகையின் 85 சதவிகிதம் விவசாயத்தையே நம்பியிருக்க வேண்டுமானால், மற்ற கைத்தொழில்களின் உதவியன்னியில் விவசாயம் மட்டும் இந்தியாவின் பிரச்னைகளையும் இந்தியாவின் ஏழ்மைத்தனத்தையும் தீர்த்து விடமுடியாதென்பதை மறந்து விடக்கூடாது. இந்தியாவில் தொழிற் முறைகள் அதிகரித்து அதில் விவசாயத்திலிருந்து வரும் ஜனங்களில் 25 முதல் 30 சதவிகிதம் வரையில் சேர்த்து கொள்ள வேண்டும். விவசாய சம்பந்தமாக நாம் முன்னேற்கும் பிரச்னைகளில் கீழ்கண்டவை முக்கியமானவை.

1. பொது ஜனங்களை போஷிக்கத் தேவையான அளவுக்கு பயிர் மிகச் செய்வது.
2. யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் சர்வதேச வியாபாரத்துக்கு ஒத்தவகையில் நிலங்களில் பருத்தி, எண்ணெய்வித்துகள், சணல், டீ, காபி, முதலியவைகளை சாகுபடி செய்வது.
3. நில ஸ்வாதீனத்தின் அளவை அதிகரிப்பது.
4. விவசாயிகளின் கடன்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், நாட்டுப்புற பாங்குகள் மூலமாகவும் ஒழித்துவிடுவது.
5. மண்ணெரிப்புனால் ஏற்படும் கெடுதியைத் தடுப்பது.
6. நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்வது.
7. வெவ்வேறு பயிர்களை சாகுபடி செய்வது.
8. நல்ல ரக வித்துக்களை உபயோகிப்பது.
9. நவீன விவசாயக் கருவிகளையும் உரத்தையும் உபயோகிப்பது.
10. அனாவிருஷ்டியும் அதிவிருஷ்டியும் ஏற்பட்டு அதன் மூலம் கெடுதல் சம்பவிக்காமல் பார்த்துக் கொள்வது.
11. வெட்டுக்கிளிகள் பயிரை அழிக்காமல் காபந்து செய்வது.
12. விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயிர்ச்சி அளிப்பது.

### தொழில்கள் சம்பந்தமான சீர்திருத்தங்கள்.

இந்தப் பிரச்னைகளை தீர்க்க வேண்டுமானால் இந்தியா கீழே சொல்லப்பட்ட அநேக தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(1) குறுகிய கால பருத்திப் பயிரை விட்டுவிட்டு நீண்ட கால பருத்தி சாகுபடியை மேற்கொண்டு, நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(2) எண்ணெய் வித்துக்களையும் அவைகளினின்றும் ஆக்கப்படும் சாமான்களையும் உபயோகிக்க அநேக தொழில்களை ஏற்பாடு செய்வது. அவைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன.

(3) பண்ணை உரம், அம்மோனியம் ஸல்பேட், சூபர்பாஸ்பேட்ஸ், அம்போனியம் பாஸ் பேட், அம்போனியம் நைட் ரேட் போன்ற உரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும்.

(4) கட்டட, ரஸ்தா தளவாடங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

(5) இருப்புப்பாதைகள், மோட்டார் வாஹனங்கள், கரி வாய்வு அமைப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் விவசாய அபிவிருத்தியுடன் தொழிலபிவிருத்தியும் ஏற்படவேண்டுமென்பது நிதர்சனமானது. அதன் உத்தம பக்ஷமான அபிவிருத்தி, அதன் தாவரப் பொருள்களையும், அங்கு கிடைக்கக்கூடிய கைத்தொழில் நிபுணர்கள் சக்தியையும், புத்தி சாதுர்யத்தையும், உலக அல்லது சாம்ராஜ்ய பொருளாதாரத்தில் இந்தியா தன்னிச்சையாக் ஏற்றுக் கொள்ளும் சர்வதேச கடமைகளையும் பொருத்திருக்கிறது. ஆகையால் பலமான மாத்சர்யமும் அனுவசியமான போட்டியும் தலை காட்டாமலிருப்பதற்காக சாம்ராஜ்ய நாடுகள் பூராவிலும் தொழிலபிவிருத்திக்கான திட்டம் நிறுவப்பட வேண்டும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 258 (5-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 30- 7-45 | மலைக்குடிப்பட்டி | ... மாலை | 7.00 | 2- 8-45 | அண்டக்குளம் | ... மாலை | 7.00 |
| ,, | கோனுபட்டு | ... ,, | 7.30 | ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| 31- 7-45 | குழிபிறை | ... ,, | 7.00 | 3- 8-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 | ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| 1- 8-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 | 4- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 | 5- 8-45 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| | | | | ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 259. (6-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6- 8-45 | தென்னதிரயன்பட்டி | ... மாலை | 7.00 | 9- 8-45 | வாளரமாணிக்கம் | ... மாலை | 7.00 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 | ,, | ஏம்பல் | ... ,, | 7.30 |
| 7- 8-45 | மழையூர் | ... ,, | 7.00 | 10- 8-45 | விராலிமலை | ... ,, | 7.00 |
| ,, | காம்பக்குடி | ... ,, | 7.30 | ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| 8- 8-45 | பெருமாநாடு | ... ,, | 7.00 | 11- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 | 12- 8-45 | கீரப்பழனி | ... ,, | 7.00 |
| | | | | ,, | ஆதூர் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 31— 7—45 | பேராம்பூர். | 7— 8—45 | ராமச்சந்திரபுரம். |
| 1— 8—45 | காம்பக்குடி. | 8— 8—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 2— 8—45 | ஆலங்குடி. | 9— 8—45 | கீழாநிலை. |
| 3— 8—45 | புதுக்கோட்டை. | 10— 8—45 | புதுக்கோட்டை. |
| 4— 8—45 | வெட்டன்விடுதி. | 11— 8—45 | பொன்னமராவதி. |
| 5— 8—45 | மருதன்கோன்விடுதி. | 12— 8—45 | ஏம்பல். |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—31-7-45.


புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வருஷம் ஆகஸ்டு மீ 6உ திங்கட்கிழமை [ந. 259


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLIX.

## பாட்ஸ்டாம் முடிவுகள்.

தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் ஜெர்மனிடமுள்ள எவ்வகைப்பட்ட சானுவப்படைகளும் கலைக்கப்படவேண்டும். எல்லா ஆயுதங்களும், வெடிமருந்துகளும், யுத்த முஸ்தீப்புகளும் நேசதேச வசமாகவேண்டும் அல்லது அழிக்கப்படவேண்டும். எல்லா நாஸி ஸ்தாபனங்களும் சட்ட திட்டங்களும் ரத்து செய்யப்படவேண்டும். தாத்காலிகமாக யாதொரு மத்திய ஜெர்மன் நிர்வாகமும் அனுமதிக்கப்படமாட்டாது.

2. எவ்விதமான ஆயுதங்களும், விமானப்படையும், கப்பல்களும், உற்பத்தி செய்யப்படக்கூடாது. சக்தி வாய்ந்த ஜெர்மன் ஸ்தாபனங்களும், ஆலோசனை சபையும் கலைக்கப்படவேண்டும். ஜெர்மன் பொருளாதார அமைப்பும் கலைக்கப்படும். விவசாயம், சமாதான காலத்துக்குறிய பொது ஜன சாமான்களுக்குறிய பொருள்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

3. ஜெர்மனி இழைத்த நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் அது சாமான்களைத் தருவதின் மூலம் நஷ்ட ஈடு செய்யவேண்டும். ஆனால் அயல்நாட்டு உதவி அன்னியில் ஜீவித்துவர அதற்குப் போதுமான ஐஸ்வர்யங்கள் கொடுக்கப்படும்.

4. யுத்தக் குற்றவாளிகள் கூடிய சீக்கிரம் பரிசீலனை செய்யப்பட்டு சிக்ஷைக்குட்படுத்தப்படுவார்கள். விசாரணை செய்யப்பட வேண்டியவர்களின் முதல் ஜாபிதா இந்த மாத முடிவுக்குள் வெளியிடப்படும்.

5. நேசதேசத்தார்களுக்கு ஜெர்மன் மக்களை அழித்துவிடவும் அடிமைகளாக்கவும், உத்தேசமில்லை என்றும், காலக்கிரமத்தில் உலகத்திலுள்ள சுதந்திர மக்களுடன் ஜெர்மனி ஒரு ஸ்தானம் வகிக்கும் நோக்கத்துடன் ஜனநாயக முறையில் சமாதானத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கையை சீர்திருத்திக்கொள்ள ஜெர்மனிக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்றும், முப்பெரிய வல்லரசுகளும் சொல்லுகிறார்கள்.

6. இந்த உத்தேசத்துடன் ஜெர்மனியின் கல்வி ஜனநாயக முறையில் திருத்தி அமைக்கப்படும். ஜனநாயக சுய ஆக்ஷி ஸ்தாபிக்கப்படும்.

7. ராணுவ பத்திரத்துக்குட்பட்டு பேச்சுரிமையும், பிரசுர உரிமையும், மத உரிமையும் அனுமதிக்கப்படும்.

8. ஆக்கிரமிப்பு காலத்தில் நேசதேச பொருளாதார மேன் பார்வைக்குட்பட்டு ஜெர்மனி ஒரு பொருளாதார யூனிட்டாகக் கருதப்படும்.

9. பிரிடிஷ், ருஷ்ய, சீன, பிரெஞ்சு, அமெரிக்க அயல் நாட்டு மந்திரிகள் கொண்ட சபையும், லண்டனில் அதற்கு காரியாலயமும், இதாலியுடனும் மற்ற அச்சு நாடுகளின் அமுலுக்குட்பட்டிருந்த நாடுகளுடனும் சமாதான உடன்படிக்கைகளைத் தயாரிக்கவும், ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தங்களை ஏற்படுத்தவும் அமைக்கப்படும். முதல் கூட்டம் ஸெப்டம்பர் 1-ம் தேதிக்குமுன் நடைபெறும்.

10. போலந்தின் எதிர்கால எல்லைச்சரகம் சமாதான மகாநாட்டில் நிர்ணயிக்கப் படும். அதற்கு மத்தியில், ஓடர், நியஸி நதிகளுக்குக் கிழக்கிலுள்ள பாகத்தை போலந்து ஆக்ஷி செய்துவரும்.

11. நிலைமை மேலும் ஆராய்ச்சி செய்யப்படும் வரையில் போலந்தும், செகோஸ்லாவேகியாவும், ஹங்கேரியும், ஜனங்களை அப்புறப்படுத்துவதை நிறுத்திவைக்க வேண்டும். ஜனங்களை வெளியேற்றும் கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது.

12. நேசதேச சங்கத்தின் அங்கத்தினர்களாக யோக்யதைபெற்ற நடுநிலைமை வகிக்கும் நாடுகள் சேர்ந்து கொள்ளலாம். ஆக்கிரமப்போரை நடத்திய நாடுகளுடன் சம்பந்தப்பட்டிருந்ததினால் ஸ்பெயின் மெம்பராகச்சேர யோக்கியதை பெற்றிருக்க வில்லை.

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 27—7—45. (வெள்ளிக்கிழமை). | நேசதேச இறுதிக்கடிதத்திற்கு ஜப்பானின் பதில். இறுதிவரையில் போரை நடத்துவோமென்று ஜப்பான் சொல்லிவிட்டது. |
| 30—7—45 (திங்கட்கிழமை). | சிங்கப்பூருக்கு அருகில் பிரிடிஷ் கடற்படை நடவடிக்கை. |
| 31—7—45 செவ்வாய்க்கிழமை. | லவால் ஆஸ்திரியாவுக்கு வந்தார். கைது செய்யப் பட்டார். |
| 2—8—45 (வியாழக்கிழமை). | நேசதேசக் கடற்படை ஜப்பானை தாக்குகிறது. பாட்ஸ்டாம் மகாநாடுபற்றி அறிக்கை வெளியிடப்பட்டது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

ஜப்பான்.—ஜூலை 25ந்தேதியன்று டோக்கியோவைச் சுற்றியுள்ள எண்ணெய், கடற்படை நிலையங்களும், குரி, கோப், கவாஸாகி, நாகோயாவிலுள்ள எண்ணெய், கடற்படை தளங்களும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன, ஹோக்கேடோவுக்கும், ஹான்ஷுவுக்கும் மத்தியிலுள்ள போக்குவரத்துகள் அணிக்கப்பட்டுவிட்டன.

ஜூலை 26ந்தேதியன்று கீழ்கண்ட இடங்கள் பேரில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ரையுகியூஸிலுள்ள அமாமித்தீவு, டோக்கியோ விரிகுடாவுக்குத் தெற்கிலுள்ள சாகாமி விரிகுடா, ஸுஷிமா ஜலசந்தி, ஷான்கே, கியூஷுவிலுள்ள ஓமுடா, ஷிகாகுவிலுள்ள மாட்சு வாயாமோ, ஹான்ஷுவிலுள்ள டோகுயாமா.

ஜூலை 28ந்தேதியன்று 30,000 டன்கள் எடையுள்ள ஜப்பானியப் போர்க்கப்பலான ஹியூகா மூழ்கடிக்கப்பட்டது. ஹாருவா, இஸி என்ற யுத்தக் கப்பல்களும், அயோபா, ஓயோடா என்ற



சஞ்சாரிகளும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன. காளியோ என்ற சஞ்சாரி பழுதுபட்டது. இவைகளைத்தவிர மூன்று நீர்மூழ்கிகளும், நான்கு நாசகாரிகளும், எட்டு மற்ற கப்பல்களும் பழுதுபட்டன.

ஜூலை 30ந்தேதியன்று கிங் ஜார்ஜ் V உள்பட்ட பிரிடிஷ் போர் கப்பல்களும் மாஸா சூஸெட்ஸ் உள்பட்ட போர் கப்பல்களுள்ள அமெரிக்க யுத்தக்கப்பல்களும் டோக்கியோவுக்குத் தெற்கில் உள்ள தொழிற்சாலை நகரமான ஹாமாமாட்சு பேரில் 1,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை பீரங்கிப் பிரயோகம் செய்தன.

ஜூலை 31ந்தேதியன்று அமெரிக்க வெடிவிமானங்கள் டோக்கியோவுக்கு வாசற்படிபோன்ற சுருகா வளைகுடாவுக்குள் நுழைந்து டோக்கியோ—நாகோயா இருப்புப்பாதையிலுள்ள துறைமுகமுள்ள நகரமான ஷிமிஸு பேரில் வெடிகுண்டுகளைப்போட்டன. இஸி விரிகுடாவிலுள்ள யோகோஸுகா கடற்படை தளமும் தாக்கப்பட்டது.

ஜூலை 31ந்தேதியன்று அமெரிக்க 3-வது கடற்படை சுருகா வளைகுடாவிற்குள் மறுபடியும் சென்று ஷிமுசுபேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன.

பர்மா.—ஸியாங் நதி போரின் இறுதி கட்டம் வந்துவிட்டது. துடைப்பு வேலை நடை பெறுகிறது. மாண்டலே ரெங்கூன் ரஸ்தாவுக்கும் ஸிட்டாங் நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தில் எதிரிக்கு பலமான நஷ்டம் ஏற்பட்டுவருகிறது.

மூன்று நாட்கள் நடவடிக்கையில் பிரிடிஷ் கிழக்கிந்திய கடற்படை சிங்கப்பூருக்கு அப்பாலிலுள்ள ஜப்பானிய சுரங்கவெடிகளை அகற்றிற்று. நடவடிக்கைகள் பிரிடன் சமீபத்தில் ஆக்கிரமித்த பூகெட் தீவுக்கருகில் நடைபெற்றன.

சைனா—சீனர்கள் காண்டன் ஹாங்கௌ இருப்புப்பாதைக்குக் கிழக்கிலுள்ள நாமியூங்கைத் திரும்பிப் பிடித்தார்கள். ஜப்பானியர்கள் கிஷுயியை ஆக்கிரமித்தார்கள்.

போகன்வில்லி (சாலமன்ஸ்).—சாமிஸுல் தீவு சுத்தி செய்யப்பட்டது. பூரிக்குன்று பிடிக்கப்பட்டது.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**26—7—45** (வியாழக்கிழமை)

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—குயுஷு தீவிலுள்ள ஓமுடா (Omuta), ஷிகோகுவிலுள்ள மாட்சுயாமா (Matsuyama), ஹொன்ஷுவிலுள்ள டோகுயாமா (Tokuyama).

பர்மா (Burma).

துருப்புகள்.—நியாங்லெபின் (Nyaunglebin), கியாக்கியி (Kyakkyi), பிவ் (Pyv).

**27—7—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—குயுஷு (Kyushu).

ஜப்பானிய சைனியங்கள்.—போர்னியோ (Borneo).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**28—7—45** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

கடற்படை தளம்.—குயூர் (Kure).

இலக்குகள்.—ஹொன்ஷுவிலுள்ள ஒகாகி [(Ogaki).

பர்மா (Burma).

ஜப்பானியத் துருப்புகள், எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள் நியாங்காஷி (Nyaungkashe),

எதிரித் துருப்புகள்.—மோல்மீனுக்கு (Moulmein) அருகில்.

**29—7—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

கடற்படை தளம்.—குயூர் (Kure).

பர்மா (Burma).

ரேமிப்புகள், இதர ரயில்வே இலக்குகள்.—பாங்காக் (Bangkok).

பீரங்கி ஸ்தாபனங்கள், இதர இலக்குகள்.—ஸிட்டாங் கரைகள்.

**30—7—45** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**31—7—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—டோக்கியோ (Tokyo) விற்கருகில்.

பர்மா (Burma).

ஜப்பானிய சைனியங்கள்.—ஸிட்டாங் நதிக் கரை.

துருப்புகள்.—யெபு (Yebu), கியாக்டோ (Kyaikto).

**1—8—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—குயுஷுவின் கடற்கரைப் பிரதேசங்கள்.

பர்மா (Burma).

கட்டடங்கள்.—மோல்மீனின் தென்கிழக்கு.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

27—7—45. (வெள்ளிக்கிழமை) முதல் 2—8—45. (வியாழக்கிழமை).

| தூரக்கிழக்கு (Far East). | பர்மா (Burma). |
|---|---|
| ஒரு தகவலும் இல்லை. | எதிரி விமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை. |

# யுத்தக் குறிப்புகள்.

**சரணாகதி அல்லது நிர்மூலம்.** ஜப்பானுக்கு அனுப்பிய இறுதிக் கடிதத்தில் சரணாகதி செய்யவேண்டும் அல்லது நிர்மூலமாக்கப்படுவீர் என்று எழுதியிருந்தது. ஜுலை மாதம் 26-ம் தேதியன்று பிரிடனும், அமெரிக்காவும், சைனாவும் இதை பாட்ஸ்டாமில் வெளியிட்டார்கள். ருஷ்யா இதில் கலந்து கொள்ளவில்லை. ஜப்பானுடன் அதற்குள்ள நடுநிலைமை ஒப்பந்தம் ரத்தாக இன்னும் ஒருவருஷம் இருக்கிறது. ஜப்பானிடத்தில் கணக்குத் தீர்க்க ருஷ்யாவுக்கும் சில இனங்கள் இருக்கின்றன.

இந்த இறுதிக்கடிதம் ஒரு துக்ககரமான சமாசாரத்தை வெளியிடுகிறது. ஏனெனில் மிஸ்டர் சர்ச்சில் பிரதம மந்திரி என்ற ஹோதாவில் உத்தியோக முறையில் தஸ்தாவேஜிகளில் கையெழுத்திட்டது இதுதான் கடைசியாகும். இந்த இறுதிக்கடிதத்தை அனுப்ப ஜனாதிபதி ட்ருமென் பிரேரேபித்தார். இது ஜப்பானைக் குறித்து நேசதேசத்தார்கள் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையாகும். முதல்தடவை கெயிரோவிலிருந்து இதே மூன்று வல்லரசுகளாலும் அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆஸ்திரேலிய டாக்டர் எவாட் போன்ற புரோபாகிகள், ஜப்பானுக்கு அனுப்பியுள்ள நிபந்தனைகள் ஜெர்மனிக்கு அனுப்பியவற்றைவிட தாராளமானவைகள் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஒரு வித்யாசமுமில்லை. ஜெர்மனிக்கு ஏற்பட்ட கதியை ஜப்பான் மதித்துப் பார்க்கவேண்டுமென்று உபரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றபடி இரண்டிலும் நிபந்தனையற்ற சரணாகதி வற்புறுத்தப்படுகிறது. ஜப்பானின் ராணுவத் தன்மையையும் யுத்தம் தொடுக்கும் சக்தியும் அழியவேண்டும். நேசதேசத்தார் குறிப்பிடும் தேசங்களை ஜப்பான் விட்டுவிடவேண்டும். முக்கியமாக மஞ்சூரியா, கொரியா, வடக்கு சைனா, பார்மோஸா, பெஸ்காடோர்ஸ், பசிபிக்தீவுகள் கைவிடப்படவேண்டும். ஜப்பானுக்கு ஹான்ஷூ, ஹோக்கேடோ, கியூஷூ, ஷிகாகு, ரையுக்யூஸ் தீவுகள்தான் கொடுக்கப்படும்.

ஜப்பான் இறுதிக்கடிதத்தை உல்லங்கனம் செய்து இறுதிவரையில் போராடுவதாகச் சொல்லிவிட்டது.

வி வி வி வி வி

**கடற்படை, விமானப்படை நடவடிக்கை அதிகரிப்பு.** நேசதேசத்தார்கள் அதற்குச் சரியானபடி பதிலுரைத்து விட்டார்கள். வெடிகுண்டு வீச்சும் பீரங்கிப்பிரயோகமும் அதிகரித்து விட்டது. இந்த வாரத்திலும் கடல் மூலமாகவும் ஆகாயத்திலிருந்தும் கோரமான தாக்குதல்கள் செய்யப்பட்டன. ஐரோப்பிய நடவடிக்கையைப்போல ஜப்பானும் அழிக்கப்படுகிறது. படையெடுப்புக்கு அனுகூலமாக போக்குவரத்து மார்க்கங்களும், தொழிற்சாலைகளும் அழிக்கப்படுகின்றன. ஏற்கனவே, ஹான்ஷூவுக்கும் ஹோக்கேடாவுக்கும் மத்தியிலுள்ள போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு விட்டன.

வி வி வி வி வி

**இந்த வாரத்திய நடவடிக்கை.** பத்து, பதினொன்று புதிய நகரங்கள் குறிக்கப்பட்டு, அவைகளுக்கு முன் எச்சரிக்கை செய்யப்பட்டுவிட்டது. இந்தத் தகவலை பயன்படுத்தி எதிரி அந்த பிராந்தியங்களுக்கு நேசதேசக் கைதிகளைக் கொண்டுவருகிறான்.

ஜுலை 25-ம் தேதியன்று டோக்கியோ, குரி, கோப், கேவாசாகி, நாகோயா என்ற இடங்களிலுள்ள எண்ணெய், கடற்படை நிலையங்கள் தாக்கப்படுகின்றன. ஜுலை 28-ம் தேதியன்று விமானந்தாங்கிகளில் சென்ற விமான நடவடிக்கையில் 30,000 டன்கள் உள்ள ஹியூகா என்ற ஜப்பானிய யுத்தக் கப்பல் குரியிலுள்ள கடற்படை ஒளியில் மூழ்கடிக்கப்பட்டது. எண்ணெயை நிரப்பிக்கொண்டு இரண்டு நாட்களுக்குப் பின் கடற்படை மறுபடியும்



நடவடிக்கையைத் துவக்கிற்று. ஜப்பானின் உள்நாட்டுக் கடலை கிழக்குப் பக்கத்தில் பிரிடிஷ் கடற்படையும் மேற்குப் பக்கத்தில் அமெரிக்கக் கடற்படையும் தாக்கின. ஜுலை 31-ம் தேதியன்று அமெரிக்க வெடி விமானங்கள் டோக்கியோவுக்கு வாசற்படி போன்ற சுருகாவளைகுடாவிற்குள் நுழைந்துவிட்டன. ஷிமிசு என்ற உள்நாட்டு துறைமுகமும் இஸாவிரிகுடாவிலுள்ள யோகோசூகாவும் வெடிகுண்டுகளால் நொருக்கப்பட்டன. ஆகஸ்டு 2-ம் தேதியன்று டோக்கியோவுக்குத் தெற்கில் 65 மைல்களிலுள்ள ஓத்தீவின்பேரில் கப்பற்படை பீரங்கிப் பிரயோகம் செய்தது. நீர்மூழ்கிகள் எரிமோ முனை பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன.

வி வி வி வி வி

**இறுதித் தாக்குதலுக்கு ஆயத்தம்.** இந்த நடவடிக்கைகள் எதிர் காலத்திய நடவடிக்கைகளுக்கு மாதிரித் தாக்குதல். பிரிடிஷ் கடற்படையின் முதல்தரமான கப்பல்கள் பசிபிக்குக்குச் சென்றுவிட்டன. இரண்டாம் பக்ஷமான கப்பல்கள்தான் பர்மாவிலிருக்கின்றன. அமெரிக்கப் படைகள், ஜெர்மனியை ஆக்கிரமிக்க நாலின் ஒன்றைமட்டும் வைத்துவிட்டு, மார்ஸேயில்ஸில் தூரக்கிழக்குக்குச் செல்ல கப்பலேறுகின்றன. ஆகினாவா முக்கிய தளமாகத் திருத்தியமைக்கப்படுகிறது. ஐரோப்பிய யுத்தத்துக்கு பிரிடன் தளமாக இருந்ததுபோல ஆகினாவா பசிபிக்குக்கு முக்கிய தளமாக இருக்கும். ஆஸ்திரேலியப் படைகளும் படையெடுப்பில் கலந்துகொள்ளும்.

"மகத்தான விமானப்படை தயாரிக்கப்படுகிறது" என்று மாக் ஆர்தர் சொல்லிவிட்டார். இதற்குப் பின் 800 சூபர் பறக்கும் கோட்டைகள் ஆறு நகரங்கள்பேரில் 6,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை வீசின. அமெரிக்க ஸ்ட்ராடஜிக் விமானப் படையின் டிபுடி கமாண்டிங் ஜெனரல் லெப்டினெண்ட், ஜெனரல் கிப்ஸ் பின்வருமாறு சொல்லுகிறார்:—"இந்த நடவடிக்கையையும் குறைவுபடுத்தும் வகையில் 1,200 சூபர் பறக்கும் கோட்டைகள் 8,000 வெடி குண்டுகளை வீசும்".

வி வி வி வி வி

**ஒத்துழைப்பு.** பசிபிக்கிலும், தென்கிழக்கு ஆசியாவிலும், பிரிடிஷ், அமெரிக்க, சீனப் படைகளின் ஒத்துழைப்பு பூர்த்தியாகி வருகிறது. ஹோக்கேடோவிலிருந்தும் ஹான்ஷூவிலிருந்தும் சிட்டாங் நதிக்கரை வரையிலும், விலாப்பக்கத்திலும் நேர்முகமாகவும், ஆகாயத்திலிருந்தும், கடலிலிருந்தும், தரை மார்க்கமாகவும் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் நடந்துவருகின்றன. பிரதேச லாபங்கள் பொதுப்படையான படையெடுப்பு திட்டத்துக்கு சாதகமளிக்கக்கூடியவை. இந்தப் பூர்ணமான திட்டத்தில் தென்கிழக்கு ஆசியா கமாண்ட் எதிரியின் வலது பார்ச்வத்தைத் தாக்கி வருகிறது. மாக் ஆர்தரும், ஆஸ்திரேலியர்களும் மத்தியில் போகன்வில்லி வரையில் தாக்கி வருகிறார்கள். கடற் தளபதி நிமிட்ஸும், ஸர் ப்ரூஸ் பிரேசரும் ஜப்பான் உள்பட்ட இடது பக்கத்தைத் தாக்கி வருகிறார்கள். இதே சமயத்தில் திருத்தியமைக்கப்பட்ட சேனைகளுள்ள சைனா ஜப்பானின் பின் பக்கத்தைத் தாக்கி வருகிறது. இந்த நடவடிக்கைகள் தனிப்பட்டவையல்ல. ஒன்றுபட்ட திட்டத்தைச் சேர்ந்தவை. இதற்கு மற்ற ருஜூவும் கிடைத்திருக்கிறது. சுங்கிங்கில் மௌண்ட்பேடன் சியாங் சம்பாஷணைகள், தென்கிழக்கு ஆசியா கமாண்டினுடையவும் தென்கிழக்கு பசிபிக் கமாண்டினுடையவும் தலைமை காரியாலங்களில் மௌண்ட்பேடன் வெண்டெமேயர் சம்பாஷணைகள், மணிலாவில் மௌண்ட்பேடன் மாக் ஆர்தர் மகாநாடு, பாட்ஸ்டாமிலும், பிரிடனிலும் மௌண்ட் பேடன் மற்றவர்களுடன் சம்பாஷணை, முதலியவைகள் நடைபெற்றன.

வி வி வி வி வி

**படையெடுப்புக்குப் பக்குவம்.** ஜப்பானும் படையெடுப்புக்கு பக்குவமாக இருக்கிறது. மிஸ்டர் கிப்ஸ் சொல்லுகிறபடி ஜப்பானிய கடற்படை அழிக்கப்பட்டுவிட்டது. சமீப நடவடிக்கைகளில் கிட்டத்தட்ட 200 யுத்தக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுது படுத்தப்பட்டன. ஜப்பானிடம் ஒரு சண்டைக் கப்பல் கூட பாக்கியில்லை. அதனிடம் எஞ்சியுள்ள மூன்று சஞ்சாரிகளும் வெளியே வரமுடியாது. ஜப்பானிடம் உள்ள இரண்டு அல்லது மூன்று சஞ்சாரிகள் பொருட்படுத்தக்கூடியவையல்ல. ஜப்பானிடமுள்ள 15 அல்லது 25 நாசகாரிகளும் ஒரு சில நீர்மூழ்கிகளும் அற்பமானவை.

ஆகையால் படைகளை இறக்குவதற்கு யாதொரு தடங்கலும் கிடையாது. நேசதேசத்தார்கள் தாமதிப்பதற்கு ஜப்பான் நன்றாய் அழிக்கப்படாததுதான் காரணமாகும். முற்றுகையும் வெடிகுண்டு வீச்சும் எதிரியின் யுத்த தளவாட சக்தியைக் குறைத்து விட்டாலும்

எதிரியிடம் கையிருப்பு ஏராளமாகயிருக்கிறது. மேலும் எதிரியின் எதிர்ப்பை சமாளிக்க ஏராளமான படைகள் இறக்கப்படவேண்டும். ஜுலை 17-ம் தேதியன்று டோக்கியோ பின்வருமாறு ஒலிபெருக்கிற்று:—"எதிரிகள் நமது தாய்நாட்டை வெடிகுண்டுமூலம் அழிப்பதை நாம் தடுக்கவில்லையென்று அநேகர்கள் ஜப்பானிய நிர்வாகத்தின்பேரில் குறை கூறுகிறார்கள். ருஷ்யா ஜப்பானிய யுத்தத்தின்பொழுதும் இந்தமாதிரி நிகழ்ச்சி ஏற்பட்டது. 1904-ம் வருஷம் ஜுலை 31-ம் தேதியன்று ருஷ்ய கடற்படை டோக்கியோவுக்கு சமீபத்தில் ஜப்பானிய கடற் கரை பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தது. இது ஜப்பானை உறுத்தியது. உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி உதவி கடற்தளபதி காமிமர்ராவுக்கு உத்தரவிட்டோம். ஒரு மாதத்திற்குள் ருஷ்ய கடற்படை அழிக்கப்பட்டுவிட்டது. ஜப்பானுக்கு குதூகலம் ஏற்பட்டது."

வி வி வி வி வி

ஆனால் 1945-ம் வருஷம் 1904-ம் வருஷமில்லை. 1904-ல் இருந்த ருஷ்யப்படைக்கும் 1945-ல் உள்ள பிரிடிஷ், அமெரிக்க கடற்படைக்கும் வித்யாசமுண்டு. மேலும் இப்பொழுது ஜப்பானிடம் கடற்படை இல்லை. 1904-ல் ருஷ்ய சேனை மட்டும் இருந்தது. இப்பொழுது, அகில பிரிடன், அமெரிக்கா, சைனா, ஆஸ்திரேலியப் படைகளை ஜப்பான் சமாளிக்க வேண்டும்.

ஜப்பானியர் பகுத்தறிவையும் நல்ல புத்தியையும் உபயோகிக்கும் நிலைமையிலில்லை. அவர்கள் வெடிகுண்டு வீச்சினால் கலங்கியிருக்கிறார்கள்.

பிரிடனைப்போல நாமும் படையெடுப்பை சமாளித்து விடுவோம் என்று ஜப்பான் சொல்லிவருகிறது. தீவாகவும், பிரிடனைப்போல் 1½ மடங்கு அதிகப் பெரிதாகவும், மூர்க்கத்தனமாகப் போர் புரியும் சேனையுமுள்ள ஜப்பான் சமாளித்து நிற்குமென்று சொல்லப்படுகிறது. ஆகிலும் ஜப்பானிய வெறி நேசதேச மூலகைப்பட்ட படைகளை சமாளிக்க முடியாது. மேலும் ஜப்பானில் 90 மிலியன் ஜனங்கள் நெருக்கமாக வசித்து வருகிறார்கள். விமானப்படை, கடற்படை தாக்குதலை சமாளிக்க போதுமான பூ பிரதேசம் கிடையாது. ஜப்பானியப் படைகள் எதிர்த்து நின்றால் தற்கொலை செய்துகொள்ளவேண்டும். அல்லது நிர்மூலமாக்கப்படும்.

வி வி வி வி வி

**பர்மாப் போர்.** பெகுயோமாவில் ஜப்பானியரின் தப்பி ஓடும் போர் முடிந்தது. அடுத்த நடவடிக்கைக்காக நேசதேசத்தார்கள் ஷான் நாடுகளிலும் ஸிட்டாங் நதியைச் சுற்றியுமுள்ள தளங்களை பலப்படுத்தி வருகிறார்கள். புதிய தளங்களை அமைத்து வருகிறார்கள்.

தப்பி ஓடக்கூடாத ஜப்பானியர்கள் மலைகளுக்குச் சென்று விட்டார்கள், அல்லது சதுப்பு நிலங்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்கொலைப் படைகள் தப்பிஓடும் படைகளுக்கு ஒத்தாசை செய்து வருகின்றன. பின்அணி ரக்ஷணைப்படைகளையும், தப்பி ஓடுகிறவர்களையும், அழித்துவிட்டதினால் இறுதி கட்டத்தை நாம் அடைந்துவிட்டோம்.

ஒரு வருஷத்திற்குமுன் டில்லிக்குச் செல்ல உத்தேசித்த ஜப்பானிய 28-வது சேனையின் கதி இவ்விதம் முடிந்துவிட்டது. கோஹிமாவில் உதைபட்டு, இம்பாலில் அழிக்கப்பட்டு, விட்ட சேனை ஸிட்டாங் நதிக்கரையில் கணக்கில் தீர்த்து எழுதப்பட்டுவிட்டது.

இந்த நடவடிக்கையில் இந்தியத் துருப்புகள் கியாதி பெற்றிருக்கின்றன. மூன்று நாள் போரில் ஒரு இந்திய டிவிஷன் 2,000 ஜப்பானியர்களைக் கொன்றது. 200 பேர்களைக் கைது செய்தது. அதற்கு 29 பேர்கள் நஷ்டமாகின.

இந்த நடவடிக்கைகளில் ஒரு புதிய அம்சமும் காணப்படுகிறது. 6,000 பேர் கொல்லப்பட்டபொழுது 600 பேர்கள் சரண் புகுந்தார்கள். அதாவது 10-க்கு ஒருவர். இதற்குமுன் 40-க்கு ஒருவர் சரண் புகுந்தார். ஜப்பானிய காமிகாஸிப் படையின் வெறி குறைந்து வருகிறது.

வி வி வி வி வி

**சீன வெற்றிகள்.** குவாங்ஸி, குவாங்டுங் மாகாணத்தில் கிடைத்த வெற்றிகள் சீனப் படையின் கீர்த்தியை அதிகரித்துவிட்டன. தெற்கிலுள்ள ஜப்பானியரின் மார்க்கம் துண்டிக்கப்பட்டபின் சுங்கிங்கைச் சேர்ந்த படைகள் தற்காப்பிலிருந்து முன்னேறித் தாக்கும் நிலைமையை அடைந்தன. நேசதேசப் படையெடுப்புக்கு ஒத்தாசை செய்ய 36 சீன டிவிஷன்கள் தெற்கு சைனாவில் தயாராகி வருகின்றன.



போன வருஷத்தில் இழந்த காண்டன்ஹாங்கௌ இருப்புப் பாதையைத் திரும்பிப் பிடிப்பதும், காண்டனிலுள்ள ஜப்பானியப் படைகளை வளைத்துக்கொள்ளுவதும், படையெடுப்பவர்களுக்கு முன்னேறும் வாசலை ஏற்படுத்துவதும், கூடுமானால் இந்தோ-சைனாவை படையெடுப்பதும்தான் அப்படைகளின் லக்ஷியம். படையெடுப்புக்கு லாயக்கான ஹாங்காங் பிரதேசத்தில் சீனர்கள் ஹாங்காங்குக்கு மேற்கில் 150 மைல்களிலுள்ள வியூங்காங்குக்கு வந்துவிட்டார்கள். வடக்குப் பகுதியில் காண்டன்ஹாங்கௌ இருப்புப்பாதையில் கேந்திர ஸ்தானமான சாங்க்ஷாவுக்கு ஒரு சீனப்படை முன்னேறி வருகிறது. தெற்குப் பகுதியில் மற்றொரு சீனப்படை இந்தோ-சைனா எல்லைச் சரகத்தைத் தாண்டி மாங்கேயைப் பிடித்துவிட்டது.

பிரதம மந்திரியாகிவிட்ட மிஸ்டர் T. V. சூங்குக்குப் பதிலாக மிஸ்டர் வாங்க்ஷிங்சீப் சைனாவின் அயல்நாட்டு மந்திரியாக உத்தியோகம் ஏற்றுவிட்டார். மிஸ்டர் வாங் நியமிக்கப்பட்டதிலிருந்து நிர்வாகம் ஜனநாயக முறையில் திருத்தியமைக்கப்படுமென்று டைம்ஸ் பத்திரிகை ஜோஸ்யம் சொல்லுகிறது. சேனை நிர்வாகத்திலிருந்து ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பின்வாங்கவேண்டும் என்ற சமீப காலத் தீர்மானம், பொதுஜன அதிகாரிகளின் அபாரமான அமுலைக் குறைக்கும் நடவடிக்கையாகும்.

வி வி வி வி வி

**மூன்று வல்லரசு மகாநாடு.** பாட்ஸ்டாம் மகாநாடு, ஜுலை 28-ம் தேதியன்று பிரிடிஷ் பிரதம மந்திரி ஆட்லி வந்தபின் சிறிது காலம் கூடியபின் கலைந்தது. ஜனாதிபதி ட்ரூமென் ஆகஸ்டு 2-ம் தேதியன்று வாஷிங்டனுக்கு பிரயாணமானார். வழியில் பிரிடிஷ் துறைமுகத்தில் அவரை யாக்ஷிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்தி சந்தித்துப் பேசினார்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள் :—**

(1) யுத்த சேவைக்காக மன்னர்பிரான் மிஸ்டர் சர்ச்சிலுக்கு பிரிடனின் உயர்தர கௌரவமான ஆர்டர் ஆப்கார்டரை வழங்குவதாகக் கூறினார். அதை ஒப்புக்கொள்ள மிஸ்டர் சர்ச்சில் மறுத்துவிட்டார்.

(2) பீல்ட் மார்ஷல் ஸர் ஹாரோல்ட் அலெக்ஸாண்டரை கனடாவின் கவர்னர் ஜெனரலாக மன்னர்பிரான் நியமித்திருக்கிறார். ஸர் அலெக்ஸாண்டர் 1940-ம் வருஷம் முதல் மத்தியதரைக்கடல் பிராந்தியத்தில் நேசதேச உயர்தர கமாண்டராக இருந்தார். அவர் எல் அலாமீனிலிருந்து ஆல்ப்ஸ் வரையில் போரை நடத்தினார். அதற்கு முன் டங்கர்க்கிலிருந்தும் பர்மாவிலிருந்தும் அவர் படைகளை வெற்றிகரமாகப் பின்வாங்கினார்.

(3) எல் அலாமீனிலிருந்து ஆல்ப்ஸ் வரையில் போரை நடத்திய 8-வது சேனை ஜுலை 29-ம் தேதியன்று ஆஸ்திரியாவிலுள்ள ஓர்தர் ஏறிக்கரையில் கலைக்கப்பட்டது. 1941-ம் வருஷம் ஆரம்பித்து, சூறாவளிக் காற்றிலும் மூடு பனியிலும் நான்கு வருஷங்களாக நடைபெற்ற நடவடிக்கைகள் அதற்கு அழியாப்புகழைத்தந்துவிட்டன. இந்த சேனையில் பிரிடிஷ், இந்திய, கனடிய, ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து, போலந்து, இதாலிய, கிரேக்க, பிரேஸிலியப் படைகள் இருந்தன. ஸித்தி ரெஸெகில் ஜெனரல் ஆகின்லெக் போரைத் துவக்குமுன் "மேற்குப் பாலவனப்படை" என்ற பெயருடன் 8-வது சேனைத் திரட்டப்பட்டது. "பாலவன எலிகள்" என்று சொல்லப்பட்ட ஒரு பாகம் ரோமலின் ஆபிரிக்கப் படையை முறியடித்தது, பிரான்ஸின் படையெடுப்பில் பங்கெடுத்துக்கொண்டது, இறுதியில் ஜெர்மனி வழியாகச் சென்று பெர்லினுக்குள் நுழைந்தது. இதாலி வழியாகச் சென்ற இதாலியப்படைப் பகுதி, மே மாதம் 7-ம் தேதியன்று ஆஸ்திரியாவுக்குள் நுழைந்தது. பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொல்லுகிறார்!—"எதிர் காலத்தில் 'நான் எட்டாவது சேனையில் இருந்து போர் புரிந்தேன்' என்று சொல்ல எந்த ஸோல்ஜரும் பெருமைப்படுவான்." பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி அதற்குப் பின்கண்ட புகழுரையை அனுப்பியிருக்கிறார்.

"8-வது சேனையின் கியாதிபெற்ற நடவடிக்கைகளில் நான் அதற்குத் தலைமை வகித்தேன் என்பதில் பெருமை கொள்ளுகிறேன். அந்த நாளில் காணப்பட்ட சகோதர பாவத்தையும் 8-வது சேனை என்ற பெரிய குடும்பத்தில் காணப்பட்ட சிலாக்கியமான மனப்பான்மையையும் நான் ஒரு பொழுதும் மறக்கமாட்டேன்.

"இந்தக் குடும்பத்தார்கள் இப்பொழுது உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகிறார்கள். ஆகிலும் அதன் மனோபாவம் எக்காலத்திலும் நிலைத்திருக்கும். சாம்ராஜ்யத்தின் எதிர்கால ஸோல்ஜர் பரம்பரைகளுக்கு அது சிறந்த படிப்பினையாக இருக்கும்."

(4) அமெரிக்க ஸெனட் சபை நேசதேச சங்கத்தின் சமாதான சாஸனத்தை அங்கீகாரம் செய்துவிட்டது.

(5) ஸ்பானிஷ் நிர்வாகம் பிரஷ்டம் செய்த பியரி லவால், ஆஸ்திரியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளால் கைது செய்யப்பட்டார். இப்பொழுது அவர் பிரான்ஸில் கைதியாக இருக்கிறார். அவர் ஆஜரில்லாத சமயத்தில் பிரெஞ்சு மாகாண கோர்ட்டு அவருக்கு மரண தண்டனை விதித்து விட்டது. இப்பொழுது பிரெஞ்சு ஹைகோர்ட்டு அவருடைய குற்றங்களைப் பரிசீலனை செய்யும்.

---

# ஜப்பானின் உள்நாட்டுக் கடல்.

## ஜப்பானியக் கடற்படையின் கடைசி ஒளி.

### E. R. யார்ஹாம்.

ஜப்பானியக் கடற்படையின் கடைசி ஒளி ஜப்பானின் கியாதிபெற்ற உள்நாட்டுக் கடல்தான். அது ஜப்பானிய சரித்திரத்தில் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டிருக்கிறது.

பூமியினால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் விசித்திரமான பூகோள அமைப்புகளுள்ள இந்த சிறந்த கடல் ஜப்பானிய மிகப்பெரிய தீவான ஹொன்ஷுவுக்கும் கியூஷு, ஷிகாகு என்ற பக்கத்திலுள்ள தீவுகளுக்கும் மத்தியில் இருக்கிறது. இந்தக் கடலை ஜப்பானின் மத்திய தரைக் கடல் என்று அடிக்கடி சொல்லுவதுண்டு. இது அதைவிட சிறந்தது. அது ஜப்பானிய கடற்படை சக்திக்கு மூலாதாரமானது, ஜப்பானிய தற்காப்புக்கு அது முக்கியத்வமுள்ளது என்பதை மிகைப்படுத்திச் சொல்ல அவசியமில்லை.

ஒதுக்குப்புறமாகவுள்ள இந்த ஒளியில் ஜப்பானிய கடற்படை பத்திரமாக இருக்கிறதென்று ஜப்பான் நினைத்தது. இந்த உள்நாட்டுக் கடற்கரைகளில் ஆயுதசாலைகளும், கப்பற் தளங்களும், கப்பல் பழுது பார்க்கும் தளங்களும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அது அமெரிக்க விமானப் படை சக்தியை மதித்துப் பார்க்கவில்லை. மார்ச்சு மாதத்தில் விமானந் தாங்கிகளிலிருந்து புறப்பட்ட விமானங்கள் எதிரியின் கடற் படையை மிகவும் பலமாகத் தாக்கியிருக்கின்றன.

உள்நாட்டுக் கடலில் ஒளிகளில் இருந்த ஜப்பானிய கடற்படையைக் கண்டுபிடித்து அமெரிக்க விமானங்கள் 16 கப்பல்களை பலமாகப் பழுதுபடுத்தின. அவற்றுள் யுத்தக் கப்பல்களும், விமானந்தாங்கிகளும், நாசகரிகளும், நீர்மூழ்கி ஒன்றும் சேர்ந்தவை. இவை தவிர பன்னிரண்டு சாமான் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன அல்லது பழுது படுத்தப்பட்டன. ஏப்ரல் மாத ஆரம்பத்தில் அதைவிட பலமான நாசம் விளைவிக்கக்கூடிய தோல்வி ஜப்பானுக்கு ஏற்பட்டது. இந்த ஒளிகளிலிருந்து பெரிய கடற்படை ஒன்று வெளிவந்து நாசத்திற்கு உட்பட்டது. ஜப்பானிய கப்பற்படை முடமாக்கப்பட்டது. யாமாடோ என்ற 45,000 டன்கள் உள்ள ஜப்பானிய பெரிய கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

உள்நாட்டுக் கடலிலுள்ள தளங்களிலுள்ள கப்பல்கள் பத்திரமாக உள்ளவையென்று ஜப்பான் நம்பியிருந்ததென்று சொல்லப்படுகிறது. விமானப்படை தோன்றுவதற்கு முன் இவ்விதம் ஜப்பான் நம்பிக்கை கொள்ளத்தகுந்த காரணங்கள் இருந்திருக்கலாம். ஏனெனில் சேடோ நாகே என்று ஜப்பானியர் சொல்லும் இந்தக் கடலிலிருந்து சமுத்திரத்துக்குச் செல்ல நான்கு குறுகலான கால்வாய்கள்தானிருக்கின்றன. இந்த வழிகளெல்லாம் சுரங்வெடிகளாலும் கடற்கரை பீரங்கிகளாலும் பலமாக தற்காப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தாண்டிச் செல்ல கனமான கப்பல்கள் முயலுவது தற்கொலை நடவடிக்கைக்கு ஒப்பாகும்.

உள்நாட்டுக் கடலில் ஐந்து பிரத்தியேகமான பாகங்கள் இருக்கின்றன அவைகளை ஒன்று படுத்தக்கூடிய வகையில் குறுகலான, தீவுகள் நிரம்பிய கால்வாய்கள் இருக்கின்றன. சமுத்திரத்தில் காணப்படும் சூறாவளிக் காற்றுகள் இங்கு கிடையாது. இந்தக் கடலுக்குள் மேற்கிலுள்ள ஜப்பானியக் கடலிலிருந்து ஷிமோனோசேகி ஜலசந்தி வழியாக நுழையலாம். முக்கியமான கப்பல் மார்க்கம் கிழக்கில் ஒஸாகா விரிகுடாவில் முடிவடைகிறது. உள்நாட்டுக் கடல் 300 மைல்களுக்குக் குறைவான நீளமுள்ளதாகவும் தெற்கு வடக்காக உள்ள அகலம் மிகவும் அகலமாக உள்ள இடத்தில் 40 மைல்கள் உள்ளதாகவும் இருக்கிறது.



தென்மேற்கில் கியூஷுக்கும் ஷிகாகுக்கும் மத்தியிலுள்ள பங்கோ ஜலசந்தி அதை பசிபிக்குடன் சேர்க்கிறது. தென்கிழக்கில் ஷிகாகூவுக்கும் ஹான்டோவுக்கும் மத்தியிலுள்ள யூரா, நாருடோ ஜலசந்திகள் உள்நாட்டுக் கடலிலிருந்து பசிபிக் கடலுக்குச் செல்லும் மார்க்கங்களாக இருக்கின்றன. கோப், ஒஸாகாவிலிருந்து யோகஹாமாவுக்குச் செல்லும் கப்பல்கள் முதலாவது மார்க்கமாகச் செல்லுகின்றன. கோபிலிருந்து, கியூஷுவின் முக்கிய துறைமுகமான நாகஸாகிக்கும் ஷாங்ஹேக்கும் செல்லும் நேர்முகமான வழி அதிக ஆழமில்லாதது. அதன் ஆழம் 50 முதல் 540 அடி வரையுள்ளது. ஜலசந்தியிலுள்ள நீரோட்டங்களும் அதிக வேகமுள்ளவை.

ஜப்பானிய சரித்திரம் பூராவும் மாலுமிகளும், மீன்பிடிப்பவர்களும், கொள்ளைக்காரர்களும் உள்நாட்டுக் கடற்கரைகளில் வசித்து வந்திருக்கிறார்கள். மேற்கு நாட்டாரின் பழக்கவழக்கங்களை ஜப்பான் ஏற்றுக்கொண்ட சென்ற நூற்றாண்டிலும் 1880-ம் வருஷத்திற்குப் பின்னும் ஒரு சக்திவாய்ந்த கடற்படை சட்டப்பட்டது. அதற்கு மாலுமிகள் உள்நாட்டுக் கடலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த பிராந்தியத்திலுள்ள இயற்கைத் தோற்றம் மிகவும் அழகானது. முக்கியமாக நீண்ட தீவுகள் உள்ள வடக்குக் கரையில் தோற்றம் மிகவும் அழகாக இருக்கிறது. மீன் அபரிமிதமாக இருக்கிறது. அங்கு முக்கியமான மீன்பிடிக்கும் தொழிலும் இருந்துவருகிறது.

### மூன்று கடற்படை மாகாணங்கள்.

ஜப்பானிய கடற்கரை மூன்று கடற்படை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் ஒருதளமுண்டு. இவைகள் யோகொசுகா, சாசெபோ, கூரி என்பவை. ஒவ்வொன்றிலும் ஆயுதசாலைகளும், கப்பற் படையைச் சேர்ந்த படையும், விமானப்படைகளும், உணவுப் பொருள் இலாகாக்களும் இருக்கின்றன. உள்நாட்டுக் கடலுக்கான தளம் கூரிதான். இது வடக்குக் கடற்கரையில் நடுமத்தியிலிருக்கிறது. அதிலிருந்து எல்லா கால்வாய்களுக்கும் செல்லலாம்.

கூரியில் 2½ லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். அது துறைமுகமும் கடற்படை ஸ்டேஷனும். அதில் கப்பல் பழுது பார்க்கும் தளமும், ஆயுதசாலையும், கடற்படைத் தேவைக்குறிய மற்ற ஒர்க்ஷாப்புகளும் இருக்கின்றன. அதில் உள்ள கப்பற் கட்டும் தளம் மிகப் பெரியது. அங்கு கப்பலுக்குத் தேவையான தகடுகளும் மற்ற கப்பற் சாமான்களும் தயாரிக்கப்படுகின்றன.

அங்கிருந்து வடமேற்கில் 16 மைல்கள் தூரத்தில் மற்றொரு பெரிய நகரம் இருக்கிறது. இதுதான் ஹிரோஷிமா, மற்ற முக்கியமான ஜப்பானிய நகரங்களைப் போல இங்கும் ஜனத்தொகை வெகு சீக்கிரத்தில் அதிகரித்திருக்கிறது.. இப்பொழுது உள்ள 3,50,000 ஜனங்கள் நூற்றாண்டின் ஆரம்பத்திலுள்ளதைவிட இரண்டுமடங்குள்ளது. ஹிரோஷிமா உள்நாட்டுக் கடலிலுள்ள மிகவும் முக்கியமான வியாபார ஸ்தலங்களில் ஒன்றாகும். அது குன்றுகளுக்கு மத்தியிலுள்ள சமவெளியில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. விரிகுடாவில் அநேகம் தீவுகள் காணப்படுகின்றன. சைனாபேரிலும், ருஷ்யாபேரிலும் ஜப்பான் போர்களை நடத்தியபொழுது அதுதான் முக்கியமான தளமாக இருந்தது.

ஹிரோஷிமாவுக்கும் அதன் பக்கத்திலுள்ள "ஜோதித் தீவு" என்று சொல்லப்படும் இடாகுஷிமாவுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இந்தப் புனிதமான தீவு பெண்டின் தேவதையின் அமுலுக்குட்பட்டது. ஜப்பானின் மூன்று அற்புதங்களில் இது ஒன்று என்று கருதப்படுகிறது. அதிலுள்ள பழமையான கோவில் கிருஸ்துக்குப் பின் 587-ம் வருஷத்தில் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது.

ஜப்பானிய யுத்த முயற்சிக்கு மிகவும் முக்கியமானது. ஒஸாகா—கோப் பிராந்தியம்தான். அங்கு அநேக முக்கியமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆகையினால்தான் அந்த பிராந்தியத்தை சூபர் பறக்கும் கோட்டைகள் பலமாகத் தாக்கிவருகின்றன.

இரண்டு நகரங்களுக்குமிடையே 22 மைல்கள்தானிருக்கிறது. கோப்தான் ஒஸாகாவுக்குத் துறைமுகம். இந்த வட்டாரத்தில் ராணுவ வெடிமருந்துகளை உற்பத்திசெய்யும் ஜப்பானிய டைஸ்டப் உற்பத்தி கம்பெனியின் தொழிற்சாலையும், எஃகுத் தகடுகளை உற்பத்தி செய்யும், காவாஸாகி கப்பற் கட்டும் தளமும், குழாய்களையும், ட்யூபுகளையும் ஏராளமாக உற்பத்தி செய்யும் ஜப்பானிய எஃகு ட்யூப் கம்பெனியும், கோப் எஃகு தொழிற்சாலையும், ஒஸாகா இரும்பு தொழிற்சாலையும், பெரிய மிட்சுபிஷி, சுமிடோமோ கம்பெனிகளைச் சேர்ந்த உலோக,

எஞ்சினியரிங் வார்ப்படைகளும் இருக்கின்றன. இவ்வளவு குறுகிய பிரதேசத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் குவிக்கப்பட்டிருப்பதினால் அவைகள் மிகவும் சிறந்த தாக்குதல் லக்ஷியங்களாகிவிடுகின்றன.

சாதாரண காலங்களில் யோகோஹோமாவுடன் கோப்தான் இறுதியாக கப்பல்கள் தங்கும் துறைமுகம். சென்ற யுத்தத்துக்குப்பின் அதன் ஜனத்தொகை 6 லக்ஷத்திலிருந்து 10 லக்ஷத்துக்கு அதிகரித்திருக்கிறது. 1923-ம் வருஷம் செப்டம்பர் மாதத்திய பெரிய பூகம்பத்துக்கு முன் அதன் அயல்நாட்டு வியாபாரமும் யோகஹாமாவைவிட அதிக தூரம் சென்றிருந்தது. கோபில் இருப்புப்பாதைகளும் கடல் போக்குவரத்தும் ஆரம்பமாகுகின்றன. உள்நாட்டுக் கடலில் ஒஸாகா விரிகுடாவின் மேல்உள்ள கோப் மத்திய ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளின் பெரும்பாகத்தின் வியாபாரத்தைக் கண்காணித்து வருகிறது. கடற்கரை ஓரமாகச் செல்லும் கப்பல் போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. அங்கு சிலாக்யமான இருப்புப் பாதைகள் இருப்பதினால் ஜப்பானியத் துருப்புகளும், சர்ப்பராக்களும் முஸ்தீப்புகளும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதற்கு அது கேந்திரஸ்தானமாக இருக்கிறது.

துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்வதிலும் அதை சீர்படுத்துவதிலும் சமீப காலங்களில் ஏராளமான பொருள் செலவிடப்பட்டிருக்கிறது. குறைந்தபக்ஷம் அங்கு நான்கு கப்பல் கட்டும் நிலையங்களிருக்கின்றன. சென்ற சில வருஷங்களில் இன்னும் அநேக நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கப்பற் கட்டும் நிலையங்களுக்கு அவசியமான பிரதேசத்தை ஒதுக்கிவிட ஜப்பான் நதியின் படுகையை ஒழுங்குபடுத்தியிருக்கிறது. நிலத்தின் சில பாகம் உத்யானவனமாக அமைக்கப்பட்டு, ஒரு நகர சபை ஹாலும் பெரிய வியாபாரஸ்தலமும் அங்கு அமைக்கப்பட்டுவிட்டன.

நகரம் வெகு துரிதமாக அபிவிருத்தியடைந்திருக்கிறது. சுற்றுப்புற வீடுகளும் தொழிற்சாலை பிராந்தியங்களும் ஒஸாகாவுக்குப் பின்னும் ஒஸாகாவை நோக்கியும் உள்ள குன்றுகளுக்கும் பரவிவிட்டன. காலக்கிரமத்தில் இரண்டு நகரங்களுக்கும் மத்தியிலுள்ள பிரதேசம் பூராவிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுவிடும். கோபுக்கு மேற்கில் 10 மைல்கள் தூரத்தில் ஆகாஷியில் ஜப்பானிய விமானங்களைக் கட்டும் தொழிற்சாலை இருக்கிறது. சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் அதை அழித்துவிட்டன. அதன் உற்பத்தி சக்தி மாதம் ஒன்றுக்கு 900 எஞ்சின்கள் வரையில் குறைக்கப்பட்டுவிட்டதென்று சொல்லப்படுகிறது.

கோபில் ஜப்பானின் தீக்குச்சி உற்பத்தி சாலைகள் இருக்கின்றன. இரும்பு சாமான்கள், பேபர், கண்ணாடி, பேர்ஸிலேன், மின்சார முஸ்தீப்புகள், நெசவு முதலிய தொழிற்சாலைகள் அங்கு ஏராளமாக இருக்கின்றன. ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய நகரமான ஒஸாகாவின் உலைக்களங்களுக்குப் போதுமான தாவரப் பொருள்கள் இந்தத் துறைமுகம் வழியாகச் செல்லுகின்றன.

யுத்தத்துக்கு முன் அதில் 12½ லக்ஷம் ஜனத்தொகை இருந்தது. ஜனனம் அதிகரித்தும் எல்லைச் சரக விஸ்தாரத்தினால், அநேக மாகாணங்கள் சேர்க்கப்பட்டதினாலும் ஒஸாகாவின் ஜனத்தொகை 32 லக்ஷத்துக்கு அதிகரித்துவிட்டது. இப்பொழுது அது உலகத்திலுள்ள எட்டாவது மிகப் பெரிய நகரம். அதையும் அமெரிக்க வெடிவிமானங்கள் பலமாகத் தாக்கி அதிலுள்ள ஆயுதசாலையை அழித்திருக்கின்றன.

ஒஸாகாதான் ஜப்பானின் பெரிய தொழிற்சாலை நிலையம். ஆகிலும் அதிலுள்ள தொழிற்சாலைகள் டோக்கியோவிலுள்ளவற்றைப்போல நவீன முறையில் அமைக்கப்பட்டவையல்ல. ஐரோப்பிய, அமெரிக்க நகரங்களுடனும் அவற்றை ஒப்பிட முடியாது. இந்த நகரம் அநேக விஷயங்களுக்குப் பேர்போனது. அதில் ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகளின் புகைப் போக்கிகளிலிருந்து புகைப்படலம் காணப்படுகிறது. அதில் வியாபாரம் மிகுதியாக உள்ளது. அதில் மிகவும் பழமையான ஒரு அரண்மனை உண்டு. அதின் பாலங்களும் உற்சவங்களும் நேர்த்தியானவை.

இவ்விதமாக ஒஸாகாவும், கோபும், குரீயும், ஹிரோஷிமாவும்தான் உள்நாட்டுக் கடலிலுள்ள கேந்திரஸ்தானங்கள். அவைகளைத் தாக்கும் எந்த நடவடிக்கையும் ஜப்பானின் யுத்த சக்தியை பலஹீனப்படுத்தும். ஜப்பானைச் சுற்றிவரும் வலை நெருங்கிவரும்பொழுது இந்த நகரங்களின் பெயர்கள் அடிக்கடி விமான நடவடிக்கை அறிக்கையில் வெளிவரும்.



# மத்தியதரைக்கடல் பிரச்னைகள்.

(டைம்ஸ் ஆப் இந்தியா).

பாட்ஸ்டாமில் முப்பெரிய வல்லரசுகளின் சர்ச்சைக்குட்பட்ட விஷயங்களில் மத்திய தரைக்கடல் பிரச்னையும் ஒன்றாகும். அது தூக்குத் தூக்கான ஆனால் நெருங்கிய முறையில் ஒன்றுபட்ட பிரச்னைகள் அடங்கியுள்ளது. மத்தியதரைக்கடல் இதாலிய ஏரி என்று ஆடம்பரத்துடன் பீத்திக்கொண்ட டூசெ இருந்த இதாலி தோற்றுவிட்டதும், தென் கிழக்கு ஐரோப்பாவுக்கு ருஷ்ய ஆதிக்கம் பரவியதும், ஐரோப்பிய விஷயங்களிலிருந்து இனிமேல் ஒதுங்கி நிற்கக்கூடாது என்ற அமெரிக்க மனோபாவமும் உலகத்திலேயே மிகவும் முக்கியத்வமுள்ள கடல் மார்க்கத்தின் எதிர் காலத்தை பாதிக்கக்கூடும். பிரகிருதம் மத்தியதரைக் கடல் பிரச்னையில் முக்கியத்வமுள்ளது கருங்கடலையும், கிழக்கு மத்தியதரைக் கடலையும் ஒன்றுபடுத்தும் டார்டனல்ஸ்தான். 1936-ம் வருஷம் முதல் இந்த ஜலசந்தி துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து வந்திருக்கிறது. ஏனெனில் மாண்ட்ரு ஒப்பந்தம், 1923-ம் வருஷத்திய லாஸென் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட சர்வதேச வாக்குறுதிகளை ரத்துசெய்து ஜலசந்தியில் ராணுவத்தை அமைக்க துருக்கிக்கு அதிகாரம் வழங்கிற்று.

தற்பொழுது நீர்மூழ்கிகளும், 10,000 டன்கள் எடைக்கு அதிகமான விமானந்தாங்கிகளும், கப்பல்களும் சமாதான காலத்தில் ஜலசந்தி வழியாகச் செல்லக்கூடாது. யுத்த சமயத்தில் துருக்கியும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தால் அதன் வழியாக யுத்தக் கப்பல்கள் செல்லுவது துருக்கியின் இஷ்டத்தைப்பொருத்தது. அது போரில் ஈடுபடாமல், யுத்த அபாயம் ஏற்படுமென்று அதற்குத் தோன்றினால், எந்தக் கப்பல்கள் ஜலசந்தி வழியாகச் செல்லலாம், எவை அவ்வழியாகச் செல்லக்கூடாது என்று முடிவு செய்வது துருக்கியின் கையிலிருக்கிறது. இந்த ஏற்பாடு ருஷ்யாவுக்கு திருப்திகரமாக இருக்குமென்று தோன்றவில்லை, ஏனெனில் மான்ட்ரூ ஒப்பந்தப்படி உள்ள கட்டுப்பாடுகளை ருஷ்யாவுக்கு தென் கிழக்கு ஐரோப்பாவில் செல்வாக்கு இல்லாதபொழுதும் அல்லது குறிப்பிடத்தக்கதாக இல்லாதபொழுதும் அது ஒப்புக்கொள்ளும்படி ஏற்பட்டதென்று ருஷ்யா எண்ணுகிறது. டார்டனல்ஸ் பிரச்னையுடன் தென் மேற்கு துருக்கியின் விலாப்பக்கத்திலுள்ள டொடிகானீஸ் தீவுகளின் பிரச்னையையும் முக்கியமானது. அந்தத் தீவுகளில் பலமான தற்காப்பு அமைக்கப்பட்டால் அவைகள் ஜலசந்தியை மேன்பார்வை செய்வதுடன் அந்தக் காபந்தும் செய்துவரும். சென்ற யுத்தத்துக்குப்பின் இதாலியர் வசமிருந்த இந்தத் தீவுகளின் கதியைப்பொறுத்து அநேக நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும்.

மத்தியதரைக்கடலின் மற்றொரு கோடியில் ஜிப்ரால்டர் ஜலசந்திக்கு விலாப்பக்கத்திலுள்ள டாஞ்சியர் பிரச்னையிருந்துவருகிறது. இதுவும் அதிக முக்கியத்வமுள்ளது. அதை பலப்படுத்திக்கொள்ளும் எந்த வல்லரசும் மத்தியதரைக்கடலுக்குள்வரும் மேற்கு மார்க்கத்தை மூடிவிடுவதுடன் ஜிப்ரால்டரையும் பிரயோஜனம் இல்லாமல் செய்துவிடும். 1923-ம் வருஷத்தில் அது நடுநிலைமை வட்டாரமாக இருக்கவேண்டுமென்று பிரிடனும், பிரான்ஸும், ஸ்பெயினும் ஒப்புக்கொண்டது. அபாரமான மனஸ்தாபங்களுக்குப்பின் அங்கு சர்வதேச நிர்வாகம் அமைக்கப்பட்டது. ஸ்பெயினிலுள்ள சில தேசீய ஸ்தாபனங்கள் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன. ஏனெனில் டாஞ்சியர் ஸ்பெயினுக்கு உரிமையுள்ள வாசஸ்தலம் என்று அவைகள் கருதிவந்தன. அநேகம் தடவைகளில் ஸ்பெயினுக்கு சௌகரியமான முறையில் ஒப்பந்தம் திருத்தியமைக்கப்பட்டது. சர்வதேச நிர்வாகம் அங்கு திறமையுடன் வேலை செய்யாவிட்டாலும் டாஞ்சியர் எந்த வல்லரசின் கைக்குள்ளும் சிக்கிவிடாமல் அது பார்த்து வந்தது. அதற்குப்பின் பிரிடனின் பலஹீனம் ஆரம்பித்தது. அபிஸீனிய யுத்தம் மூண்டது. அதன் தொடர்ச்சியாக ஸ்பானிஷ் உள்நாட்டுக்கலகம் ஆரம்பித்தது. அந்த சமயத்தில் டாஞ்சியரில் பாஸிஸ்டு ஆதிக்கம் தலைகாட்டியது. பிரகிருத யுத்தத்தில் இதாலி புகுந்தபொழுது பிராங்கோவும் சும்மாவிருக்கவில்லை. அவன் டாஞ்சியருக்குள் புகுந்து அங்கு ஸ்பானிஷ் நிர்வாகத்தை அமைப்பதாக வெளியிட்டான். சில வாரங்களுக்குள் அங்கிருந்த சர்வதேச நிர்வாகம் முடிவுபெற்றதென்று ஸ்பானிஷ் சேனாதிபதி சொல்லிவிட்டான். இவ்வருஷம் ஜூன் மாதத்திலிருந்து டாஞ்சியரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க பிரிடன், அமெரிக்கா, பிரான்ஸ ஆகிய மூன்று நாடுகளும் மகாநாடு கூடும் என்று சொல்லப்படுகிறது. இந்த மகாநாட்டில் அதற்கும் ஒரு ஸ்தானம் அளிக்கப்படவேண்டுமென்று ருஷ்யா சொல்லி வருகிறது. அதற்கும் நியாயமான காரணங்கள் இருக்கின்றன. 1923-ம் வருஷ ஒப்பந்

தத்தில் கையெழுத்திடாத அமெரிக்கா மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கும்பொழுது மாஸ்கோவை விலக்கிவிடுவதற்குத் தகுந்த காரணம் இல்லையென்று ருஷ்யா நினைக்கிறது.

மத்தியதரைக் கடலில் டிரிஸ்டி இருக்கிறது. இது மத்திய ஐரோப்பாவுக்கும், உள் நாட்டுக் கடலுக்கும் தொடர்பு ஏற்படுத்திவந்தது. அது இப்பொழுது ருஷ்யாவுக்குச் செல் வாக்குள்ள பாகத்தின் தென்மேற்குக் கோடியில் இருக்கிறது. டிரிஸ்டியை விடமாட்டே னென்று பிடிவாதமாக இருந்த மார்ஷல் டிடோ, டிரிஸ்டிக்குள்ள பாத்தியதையை பலாத்காரம் மூலம் அடையமுடியாதென்றும், அந்தப் பிரச்னை சமாதான மகாநாட்டில்தான் முடிவுசெய்யப் படவேண்டுமென்று சொல்லும் நேசதேச வாதங்களுக்கு இணங்கிவிட்டாரென்பது சந்தோஷ கரமானது. மேலும் ஸிரியாவுக்கும், பிரான்ஸுக்கும் பிரத்யேகமான ஸிரிய பிரச்னையையும் நேசதேசத்தார்கள் புறக்கணிப்பதற்கில்லை. ஏனெனில் அது பிரிடனையும் பாதிக்கிறது. ஸிரியாவின் சுதந்திரத்திற்கு அது உறுதி கூறியிருக்கிறது. மேலும் லெவாண்டில் மனக் கசப்பு அதிகரித்தால், மத்தியக்கிழக்கு பூராவிலும் கிளர்ச்சி ஏற்பட்டுவிடுமென்று பிரிடன் கண்டுபிடித்துவிட்டது. முப்பெரிய வல்லரசுகளின் சர்ச்சைகள் என்ன முடிவு செய்திருக் கின்றனவென்று ஒருவரும் சொல்லமுடியாது. ஆகிலும் மேலே சொல்லிய பிரச்னைகளும், இதர பிரச்னைகளும் நன்ருய் பரிசீலனை செய்யப்படவில்லையென்று சொல்லுவது தவருகும். விவாதம் எவ்விதம் நடைபெற்றபோதிலும் சமாதான மகாநாடு கூடும் வரையில் தேசங்கள் சம்பந்தமாக மூன்று வல்லரசுகளும் யாதொருவிதமான முடிவுக்கும் வரமாட்டார்கள்.

---

## அஸோர்ஸ் தீவை நேசதேசத்தார்கள் காலிசெய்வது.

### போர்ச்சுகலுக்குச் செய்த வாக்குறுதியைப் பூர்த்தி செய்வது.

(டெயிலி டெலிராப்).

போர்ச்சுகீஸ் நிர்வாகத்துக்கு மிஸ்டர் சர்ச்சில் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் பிரிடிஷ் படைகள் அஸோர்ஸிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்கப்படுகின்றன.

இந்த ராணுவ முக்கியத்வமுள்ள தீவுகள் போர்ச்சுகலின் சம்மதத்தின்பேரில் 1943-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் ஆக்கிரமிக்கப்பட்டன. அட்லாண்டிக்கில் எதிரியை முறியடிப்பதில் இந்த தளங்கள் நடவடிக்கைக்கு மிகவும் உபயோகமுள்ளதாக இருந்தன. யுத்தத்தில் சௌகரியத்தை உத்தேசித்து அல்லாது தன்னிஷ்டப்படி போர்ச்சுகல் நடுநிலைமை வகிக்கவில்லை. 1373-ம் வருஷத்தில் ஆரம்பமான அநேக ஒப்பந்தங்களின் ஷரத்துகளின் பிரகாரம் அகில பிரிடனின் நண்பனுக போர்ச்சுகல் சந்தேகமற இருந்து வந்தது. போர்ச்சுகல் போரில் கலந்துகொள்ளாமல் இருப்பதும் படைபல சமத்வம் நேசதேசத்தின் சார்பாக ஓங்கும்பொழுது நடுநிலைமையிலிருந்து அது பிறண்டுவிடலாமென்பதும் நேசதேச யுத்த தந்திரத்துக்கு அனுகூலமானதாக உள்ளது.

ஜப்பான் டிமோரை ஆக்கிரமித்தபொழுது, ஜப்பானிய வெற்றி என்ருல் இந்தத் தீவை போர்ச்சுகல் இழக்க நேரிடும் என்று போர்ச்சுகல் நன்கு அறியும். இதற்கு மாருக டோக்கியோ எவ்வளவு வாக்குறுதி செய்தாலும் அது பயன்படாது. நேசதேசத்தார்கள் அஸோர்ஸை ஆக்கிரமித்தபொழுது, யுத்தம் முடிந்தபின் அதைக் காலிசெய்து விடுவதாக நேசதேசத்தார் அளித்த வாக்குறுதியும் நிச்சயமாய் நிறைவேற்றப்படுமென்று போர்ச்சுகல் நம்பிக்கை கொண்டிருந்தது. அந்தத் தீவுகளிலிருந்து படைகள் வெகு சீக்கிரமாகப் பின் வாங்கிவிட்டதிஞல் இரு நாடுகளுக்குமுள்ள புராதனமான, இருவருக்கும் சௌகரியமான நட்பு பலப்பட ஹேதுவாகும்.

---

## ஜெர்மன் வாலிபர்களை உத்தாரணம் செய்வது.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

டோரன்டோவில் வெளிவரும் மாக்லின்ஸ் சஞ்சிகையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.

யுத்தம் முடிந்தபின் ஜெர்மன் ஜனத்தொகையின் பெரும்பாகம் நாஸிக் கொள்கைகளை உதாசீனம் செய்துவிடுமென்று நினைக்கிறேன். 1933-ம் வருஷத்துக்குமுன் கல்வியை முடித்துக் கொண்டவர்களின் பெரும்பாகம் இவ்விதம்தான் நினைக்கக்கூடும். ஹிட்லரின் நிர்வாகத்தை ஏற்றபொழுது ஜெர்மனியின் பாதிபாகம் ஹிட்லரை எதிர்த்தது. அவனுக்கு செல்வாக்கு மிகுதியாக இருந்தபொழுது அவன் அநேக எதிரிகளை அவனுடைய அபிப்பிராயத்தை ஏற்கும் படி செய்திருந்தாலும் இப்பொழுது அவன் ஜெர்மனியின் நாசத்தை சம்பாதித்து விட்டதி ஞல், அவனிடம் அவநம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இடைகாலத்தில் அவனிடம் அவர் களுக்கு இருந்த மதிப்பை இழந்திருப்பார்கள்.



ஜெர்மானியர்களின் கல்வியைக் கண்காணிப்பு செய்வதில் நமது புத்தி சக்தியைக் காண்பிக்கவேண்டுமென்ருல் எதிர்காலத்திய ஜெர்மன் குழந்தைகளையும் நாஸிகளின் யந்திரத்தில் அகப்பட்டுக் கெட்டுப் போய்விடாத வாலிபர்களையும் சமீப வருஷங்களில் ஜெர்மனியில் ஊறியிருக்கிற கெட்ட நடவடிக்கைகளுக்குட்படாமல் நாம் காப்பாற்ற வேண்டும். இவைகளுக்கு மத்தியில் பிடிவாதமுள்ள ஒரு சந்ததியார்கள் இருக்கிருர்கள். அவர்கள் 1933-ம் வருஷத்தில் 20 வயதுள்ளவர்கள், மற்றவர்கள் யுத்தம் முடியும்பொழுது ஆறு வயதுள்ளவர்கள். அதாவது 1914-ம் வருஷம் முதல் 1939-ம் வருஷம் வரையில் பிறந்த வர்கள். இந்தக் காலம் 25 வருஷங்கள் அடங்கியுள்ளது. இந்தத் தலைமுறையிலுள்ள விருத்தர் களும், யுவர்களும் பொதுவாக முரட்டு சுவபாவமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். நாஸி கள் முறைப்படி கல்வி கற்று கல்வியை முடித்துக் கொண்டவர்கள்தான் மிகவும் சங்கடத்தை விளைவிப்பார்கள். ஒரு க்ஷணம் இந்த கோஷ்டியை நாம் புறக்கணித்துவிட்டு குழந்தைகளை யும் நாஸிகளின் வலையில் சிக்கக்கூடாத இளம் பிள்ளைகளையும் எவ்விதம் நடத்துவதென்று சொல்லுகிறேன். 100 சதவிகிதம் நமது முயற்சிக்கு வெற்றி கிடைக்குமென்று எதிர் பார்க்கக்கூடாது. அதுவும் அவ்வளவு அவசியம் இல்லை. பெரும்பான்மையான வெற்றி கிடைத்தால், உசிதகாலத்தில் அது ஜெர்மனியை ராஜ்ய முறையில் நம்பிக்கைக் குறியதாகச் செய்துவிடும்.

குழந்தைகளுக்கு எவ்விதம் கல்வி பயில்விப்பதென்று ஆராய்ச்சி செய்யுமுன் ஆசிரியர் களை எவ்விதம் தேர்ந்தெடுப்பதென்று நாம் முடிவு செய்யவேண்டும். நிச்சயமாக பெரும் பான்மையோர் ஜெர்மானியர்களாக இருக்கவேண்டும். சொந்தப் பள்ளிக்கூடங்களைத் தவிர மற்ற பள்ளிக்கூடங்களில் தாயகம் திரும்பிய அகதிகளை நியமிக்கக்கூடாது. ஏனெனில் யுத்தம் பூராவிலும் ஜெர்மானியிலிருந்திராத ஜெர்மானியர்கள் மாணவர்களின் மதிப்பைப் பெறமுடியாது.

உண்மையான வெறிபிடித்த நாஸிகளாக இருந்தவர்கள் ஆசிரியர்களாக இருக்கக்கூடாது. நாஸிகளின் கொள்கையை மிதமாக ஆதரிக்கிறவர்கள் அல்லது எதிர்க்கிறவர்கள் என்று சொல்லி நாஸிகள் விலக்கு செய்திருந்தவர்களாகவும் கல்வி பயில்விக்க யோக்கியதை உள்ளவர்களையும் நாம் அவர்களுக்கு பதிலாக நியமிக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் நாஸிகளுக்குமுன் இருந்த சந்ததியைச் சேர்ந்த அநேக உயர்வான ஆசிரியர்களைக் கண்டு பிடிக்கலாம். வெகு சீக்கிரத்திலேயே புதிய முறைகளில் பயிற்சி பெற்ற வாலிபமுள்ள ஆசிரியர்களும் கிடைத்துவிடுவார்கள். திரும்பி வந்த அகதிகளை ஆசிரியர்களாக நியமிக்கக் கூடாதென்ருலும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களின் ஒத்தாசையைப் பெறலாம்.

நாஸி கக்ஷியின் வேலையில் தீவிரமாக உழைத்து வந்த, அல்லது நாஸிகளின் அக்கிரமச் செய்கைகளை நிறைவேற்றுவதில் கலந்து கொண்ட பெற்ருேர்களிடமிருந்து குழந்தைகள் அப்புறப்படுத்தப்படவேண்டும். ஏனெனில் பள்ளிக்கூட நேரத்தில் போதிக்கப்படும் நல்ல முறைகளை பெற்ருேர்களின் செல்வாக்கு கெடுத்துவிடும்.

பள்ளிக்கூடங்களில் வெறிகொண்ட தேசீயக் கொள்கைகள் சொல்லுவது போலில்லாமல் உலகத்தின் நன்மையையும் உலக சரித்திரத்தையும் பற்றிய நல்லஅபிப்பிராயங்கள் போதிக்கப் படவேண்டும். சங்கீதத்திலும், கலைஞானத்திலும், விஞ்ஞான சாஸ்திரத்திலும், வேதாந்தத் திலும் ஜெர்மனியின் அற்புதமான முன்னேற்றத்தைக் குறைவுபடுத்தக்கூடாது. இது விஷயத்தில் நாஸிகளின் கையில் அகப்பட்டு அவமானத்துக் குள்ளாகியிருக்கும் மாபெரும் ஜெர்மானியர்களை நாம் விடுவிக்கவேண்டும்.

ஆகிலும் ஜெர்மன் பள்ளிக்கூடங்களில் சமீபகாலத்திலும், 1871-ம் வருஷம் ஜெர்மன் ஒற்றுமை ஏற்பட்ட பின்னும் கியாதி பெற்றதும், வாலிபர்களின் மதிப்புக்கு யோக்கியதை

யற்றவர்களாகவும் உள்ள அநேக ஜெர்மானியர்களும் அங்கு இருக்கிறார்கள். சார்லிமெனும், பார்பரோஸா சக்ரவர்த்தியும், பிரெடரிக் மகானும், பிஸ்மார்க்கும் போக்கிரிகள். ஜெர்மனியில் போதிக்கப்பட்ட சரித்திரப் பிரகாரம் அவர்கள் மேன்மையான வீரர்கள். ஜெர்மன் பிரமுகர்கள் குடிவெறியுள்ள, நடத்தை ஒழுங்கற்ற, மதாம்பிக்கையற்றவர்கள் என்பது குழந்தைகளுக்கு அறிவிக்கப்படுவதில்லை. பிரெடரிக் மகான் அவருக்கு முன்னிருந்தவரையும் அவருடைய பரிவாரங்களையும் வஞ்சகமாக த்வம்சம் செய்து சிங்காதனம் ஏறினான் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்படுவதில்லை. அவர்களின் சரித்திரம் போதிக்கப்படும் பொழுது இந்த அம்சங்களையும் வாலிபர்களிடமிருந்து மறைத்து விடக்கூடாது.

ராணுவச் செய்கைகளை மட்டும் மதிக்கவேண்டுமென்று போதனை செய்வதற்கு ஜெர்மன் சரித்திரக்காரர்கள்தான் ஜவாப்தாரிகள். ரோமாபுரியின் சரித்திரம் என்ற புத்தகத்தில் மோம்ஸன் அலெக்ஸாண்டரையும் ஜூலியஸ் ஸீஸரையும் அபரிமிதமாகப் பாராட்டியிருக்கிறான். ஒரு நூற்றாண்டாக ஜெர்மன் மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்கிவந்த ஹேகல் அலெக்ஸாண்டர், ஸீஸர், நெப்போலியன் முதலியவர்கள்தான் உயர்ந்த மனிதர்கள் என்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறான். ஜெர்மனியைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால் வாலிபர்கள் முன் புதிய அபிப்பிராயங்களை வெளியிடுவதும், வெற்றிகரமாகவதை செய்வதைவிட மானிடவர்க்கத்துக்கு சேவை செய்வதுதான் மேன்மையானதென்று போதிப்பதும் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

உலகத்தை ஜெயித்துவிட செய்யப்படும் முயற்சிகள் பயன்படாதவை என்பதை ஸ்பெயினும், பிரான்ஸும் செய்த முயற்சியை எடுத்துச் சொல்லுவதன் மூலம் வற்புறுத்த வேண்டும். வாலிபர்களுக்கு அமெரிக்காவினுடையவும் ருஷ்யாவினுடையவும் ஜனத்தொகையும் ஐச்வர்யங்களும் அறிவிக்கப்படவேண்டும். வடக்கு அமெரிக்காவை வெறுத்ததினால் ஜெர்மனி இரண்டு தடவைகள் நாசத்துக்குள்ளாகிற்று என்பது எடுத்துக் காட்டப்படவேண்டும். அகம்பாவம் பிடித்த பிசாசுகள் வசிக்கும் கற்பிதமான உலகத்திலில்லாமல் உண்மையான உலகில் வாழ்ந்துவர அவர்கள் போதிக்கப்படவேண்டும்.

ராணுவ ஆக்கிரமிப்பு காலத்தில் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்படவேண்டிய சரித்திர புஸ்தகங்கள் ஆக்கிரமிப்பு வல்லரசுகளின் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும். அந்தப் புஸ்தகங்கள் பொய்யான அபிப்பிராயத்தை ஊட்டும் பிரசார நூல்களாக இருக்கக்கூடாது. மேலும் அவைகள் இயற்கையான, உரிமையான தேசாபிமானத்தை அழிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. வெற்றிகரமான யுத்தத்தைப் பாராட்டுவதற்கு பதிலாக அவைகள் புத்திசாலித்தனமான நாகரீக வாழ்க்கையை மதிக்கும்படி போதிக்கவேண்டும். அவசியமான சீர்திருத்தங்களை ஜெர்மானியர்கள் மூலமாகவே செய்து முடிக்கவேண்டும். நேசதேசத்தார்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் கல்வி போதிக்கப்பட்டிருந்தால்தான் ராணுவ ஆக்கிரமிப்பு நின்றுவிடும் என்பதை ஜெர்மானியர்கள் அறியவேண்டும். ஆகையால் திருப்திகரமானதென்று ருஜுச் செய்யும் பொறுப்பு ஜெர்மானியர்களுடையது. அயல்நாட்டுப்படைகளை அப்புறப்படுத்தும்படி செய்யவேண்டுமென்றால், பள்ளிக்கூடங்களுக்கு இன்ஸ்பெக்டர்கள் வருவதை ஜெர்மனி ஆதரிக்கவேண்டும்.

இதுவரையில் நான் கல்வியின் பகுத்தறிவு அம்சத்தைப் பற்றிச் சொன்னேன். இப்பொழுது ஆத்மிய குணத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சிறு குழந்தைகளுக்கு இந்த போதனையும் அத்தியாவசியமானது. ஏழு வயது முதல் 14-வயதுள்ள ஜெர்மன் பையன்கள் நமது படைகளை மறைந்து இருந்து சுடும்பொழுது கைது செய்யப்பட்டார்கள் என்று ஜெர்மன் பத்திரிகைகளில் படங்கள் வந்திருக்கின்றன. இந்தப் படங்கள் மிகவும் கோரமாக இருக்கின்றன. பையன்களின் முகங்களில் கொலையாளிகளின் முக விந்நியாசம் காணப்படுகிறது. இந்தக் குழந்தைகளை பிசாசுகளாகத் தயாரித்த நாஸிகளின் குற்றம் மற்ற எந்த குற்றத்தையும்விட இழிவானது. தன்னிடம் அகப்பட்டவர்களைக் கொலை செய்த ஹெராட்டின் குற்றத்தைவிட இது இழிவானது. இந்தக் குழந்தைகளை இனிமேல் சீர்திருத்த இயலாதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நான் அவ்வித அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. உண்மையான கிறிஸ்தவர் எவரும் இதை அங்கீகரிக்கமாட்டார்.

---



# எஞ்சின்ஓட்டி வேலையிலிருந்து பிரதம மந்திரி பதவி.

## பென் சிப்ளியின் ஜீவ்ய சரித்திரம்.

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதம மந்திரியின் ஜீவ்ய சரித்திரத்தைப்பற்றி ஒரு ஆஸ்திரேலியர் டெயிலி ஹெரால்ட் பத்திரிகைக்குப்பின்கண்ட கட்டுரையை அனுப்பியிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவின் புதிய தொழிலாளர் கக்ஷியைச் சேர்ந்த பிரதம மந்திரியான மிஸ்டர் ஜோஸப் பெனடிக்ட் சிப்ளி, கர்டினின் நெருங்கிய பழமையான நண்பர்களில் ஒருவர். அவருக்கு அடுத்த செப்டம்பரில் 60 வயதாகும். இருவரும் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டு கக்ஷியின் அடிப்படையான கொள்கையை ஒப்புக்கொண்டவர்கள்.

ஆறு அடி உயரமுள்ள பென் சிப்ளி ஆரம்பத்தில் எஞ்சின் ஓட்டி வேலையிலமர்ந்தார் அதுமுதல் தொழிற்கக்ஷி ராஜ்யத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் ஸிட்னிக்கருகில் நீல மலைகளுக்குமேல் 145 மைல்களிலுள்ள பாதர்ஸ்ட்டில் அயர்லாந்தைச் சேர்ந்த குடும்பத்தில் ஜனித்தார். அவர் அவருடைய மனைவியுடன் அதே வீட்டில் 30 வருஷ காலமாக வசித்து வருகிறார்.

அவர் பாதர்ஸ்ட் அட்வகேட் என்ற பத்திரிகையின் கூட்டு முதலாளியாக இருந்தார். 1920-ம் வருஷவாக்கில் ராஜ்யத்தை விட்டுச்சென்று சிறிது காலம் பத்திரிகையை நடத்தி வந்தார். 1928-ம் வருஷத்தில் அவர் நியூசவுத் வேல்ஸ் தொகுதிக்கு பார்லிமெண்டுக்கு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் தாடஸ்த்தமான, சாதாரணமான, நற்குணமுள்ளவர். எளிதில் நெருங்கிப்பழகக் கூடியவர். பெரிய பதவி கிடைத்தாலும் அவர் பழமையான நண்பர்களைப் பேட்டிகாண மறுப்பதில்லை. அவர் இன்றும் சாதாரணமான வாழ்க்கையை நடத்தி வருகிறார். ஆகிலும் அவர் சதா காலமும் சுருட்டுப் பிடிப்பார்.

அவருடைய பார்லிமெண்ட் நண்பர்கள் அவரை ஹாம்லட் என்று சொல்லுவதுண்டு ஏனெனில் அவர் கான்பராவிலுள்ள பார்லிமெண்ட் கட்டடத்தின் சுற்றுப்புறங்களில் துக்கப்படுகிறவன்போல் நடமாடிக் கொண்டிருப்பார்.

1940-ம் வருஷ தேருதலில் அவருக்கு கபவாத சுரம் மிகுதியாக இருந்ததினால் அவர் அதில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆகிலும் தேருதலின் முடிவை அது பாதிக்கவில்லை. தேருதலில் அவருக்கு ஏராளமான ஓட்டுகள் கிடைத்தன. புதிய பார்லிமெண்ட் ஆரம்பமான பொழுது ராஜவிசுவாச பிரமாணம் செய்ய கான்பராவுக்கு அவர் உசிதகாலத்தில் எவ்விதம் வந்து சேர்ந்தார் என்று அவருடைய ராஜீய நண்பர்கள் இன்றும் ஆச்சரியப்படுகிறார்கள். அவர் அன்று கோரமாகவும் வெளுத்த தோலுமாக இருந்தார். ஆறடி உயரம் இருந்த போதிலும் 9 ஸ்டோன்தான் கனமுள்ளவராக இருந்தார். ஆகிலும் அவர் பூர்ணமாக சொஸ்தமடைந்தார்.

சிப்ளி சரளமாகவும், தெளிவாகவும், உருக்கமன்னியிலும் பேசக்கூடியவர். அவருடைய அபிப்பிராயத்தை கடைபிடிப்பார். ஒருபொழுதும் எதிரியேரில் அவதூறு சொல்ல மாட்டார். நன்றாகப் பரிசீலனை செய்தபின் ராஜீய, அபிப்பிராயங்களைக் கொள்ளுவார். தொழிற்சாலை சட்டங்களை அறிவார். ஆரம்பகாலத்தில் நியூசவுத்வேல்ஸிலுள்ள கோர்ட்டிலும் சமஷ்டி கோர்ட்டிலும், தொழிற்சாலை, பஞ்சாயத்து கோர்ட்டுகளிலும் நியாயவாதியாக இருந்தார்.

அவர் ஜனநாயக, கன்ஸர்வேடிவ் நிர்வாகங்களிலும் முக்கியமான ஸ்தானங்களை வகித்திருக்கிறார். 1935-ம் வருஷத்தில் பாங்கிங் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட பிரிடிஷ் கமிஷனின் அங்கத்தினராக அவர் இருந்தார். யுத்தம் துவங்கியபொழுது வெடிமருந்து இலாகாவில் தொழிலாளர் டிரெக்டராக அவர் மென்ஸிஸ் நிர்வாகத்தில் நியமிக்கப்பட்டார். கர்டினின் கீழும் ஆஸ்திரேலியாவிக்கு ஜப்பானிடமிருந்து அபாயம் ஏற்பட்டிருந்த காலத்திலும் அவர் சமஷ்டி கோசாதிபதி என்ற முறையில் ஆஸ்திரேலியாவின் மிகுதியான யுத்தச் செலவை நடத்திவந்தார்.

அவர் உத்தியோகத்திலிருந்து விலகியபொழுது சிப்ளி அதிக கியாதி பெற்றிருக்கவில்லை. ஆகிலும் ஆஸ்திரேலிய ராஜ்யத்தில் அவர் செய்த வேலை உருவானது, நிச்சயமானது. ஜனங்கள் அவரிடம் பிரியம் கொண்டாலும் அவர் பிறர் தயவை எதிர் பார்ப்பதில்லை. வெளியில் சென்று பிறருடன் கலந்து கொள்ளுவதைவிட அவர் வாசிக்கவும், ஆலோசனை செய்யவும் சர்ச்சை செய்யவும் பிரியப்படுவார்.

# தொழிற்சாலை உற்பத்தியில் மாறுதல்.

## சமாதான கால உற்பத்திக்குத் திரும்புவது.

(டைம்ஸ் பத்திரிகை).

பொது ஜனங்களுக்கான உற்பத்திக்கும் உலக வியாபாரத்திற்கும் பிரிடிஷ் மனித சக்தியைத் திருத்தியமைப்பதென்பது, யுத்தத்துக்காக அதை அமைத்ததைப்போல சிக்கலான பிரச்னைதான்.

நிர்வாகம் தேசிய உற்பத்தியின் பரந்த அளவு சம்பந்தமாக நேர்முகமான கண்காணிப்பையும் பாக்கியின் பேரில் மறைமுகமான கண்காணிப்பையும் வாபஸ் பெறும்பொழுது தொழிற்சாலை பொருளாதாரத்தில் முக்கியமான மாறுதல் ஏற்படும். இவ்விதமாக தேவையானது ஏராளமான சிறிய வாங்கிச் சாப்பிடுவோர்களின் சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. பெரும்பாலும், தொழிற்சாலைகள் முன்போல பலவகைப்பட்ட வாடிக்கைக்காரர்களின் தேவைக்குத் தக்கவாறு உற்பத்தி செய்து வரவேண்டும். தனிப்பட்ட முறையில் ஒவ்வொன்றுக்கும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டிய அநேகத் துறைகளில் தொழிற்சாலை உற்பத்திகளைத் திருப்புவதற்கு உயர்வான நிர்வாக சக்தியும் அமுல் நடத்தும் சாதுர்யமும் பொதுவான கொள்கைகளுள்ளதினால் சாதாரணமான முறைகளும் அவசியமாகும்.

இது ஒரு இடைகாலம். ஐரோப்பியப் போர் முடிந்துவிட்டது. ஜப்பானியப் போர் பாக்கியிருக்கிறது. தூரக்கிழக்குப் போருக்கு எவ்வளவு ராணுவ, தொழிற்சாலை முயற்சி ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதென்றும் கடல்தாண்டி எவ்வளவு சாமான்கள் செல்லவேண்டுமென்றும் ஒருவரும் சரியானபடி மதித்துப் பார்க்கவில்லை. உலக வியாபாரம் பூராவும் சீர்கெட்டுப்போய்விட்டது. சாதாரணமாக தளவாடங்களும், உணவுப் பொருள்களும், ஆக்கப்பட்ட பொருள்களும் ஸப்ளை செய்யப்பட சர்வதேச போக்குவரத்தை திரும்பவும் அமைப்பது பிரிட்டனின் தொழிற்சாலை வாழ்க்கையை திருத்தி அமைப்பதாகும். மனித பலத்தை மறுபடியும் திரட்டுவதும் தொழிற்சாலைகளைத் திருத்தியமைப்பதும் நிர்வாகத்திலுள்ள ஒரு இலாகாவின் வேலையல்ல. கட்டுப்பாடு செய்துவரும் எல்லா இலாகாக்களும் இதில் ஈடுபடவேண்டும். ஒவ்வொன்றும் கூடுமான வரையில் முற்போக்குக்கு உதவி செய்ய வேண்டும். ஸப்ளை, சேவை இலாகாக்கள் இந்த மாறுதலுக்காக ஆடவர்கள், ஸ்திரீகள், யந்திரங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றை ஒழுங்கு முறையிலும் உசித காலத்திலும் அனுப்பிவரவேண்டும். இதுவரையில் யுத்த அவசியத்தைவிட எந்த காரியத்துக்கும் முகான்மை அளிக்கப்படக்கூடாது. ஆகிலும் சில தொழிற்சாலைகளில் உற்பத்தி முறைகள் யுத்த அவசியத்துக்கு முகான்மையளிக்காது.

தொழிற்சாலைகளை பொதுஜன அவசியத்துக்கு மாற்றியமைக்கும் நிர்வாக திட்டத்தின் ஒரு அம்சம் தொழிலாளர் இலாகா சமீபத்தில் வெளியிட்டதுபோல பொதுஜன உற்பத்திக்காக தொழிலாளர்களை உபயோகிக்க முகான்மையான ஏற்பாடுகள் செய்யப்படுவதுதான். வீடுகள், கட்டட சாமான்கள், உணவுப் பொருள், ஆடைகள், உஷ்ணம், வெளிச்சமும் சக்தியும், அவசியமான சேவைகள், அச்சு, முதலியவற்றை ஸப்ளை செய்யும் ஆறு விதமான தொழிற்சாலைகள் மூலம் மந்திரி இலாகா வெடிமருந்து சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு அவர்கள் முன்பு வேலை செய்துவந்த தொழிற்சாலைகளுக்குச் செல்ல வசதியளித்து வருகிறது. இது தன்னிச்சையாக நடைபெறும் திட்டம். சேவைப்படையினரையும் ஸ்திரீகளையும் அவர்கள் முன்னிருந்த தொழில்களுக்குச் செல்ல சட்ட பூர்வமாக உள்ள திட்டத்துக்கு இதை ஒப்பிடலாம். ஆகிலும் யுத்த அவசியமிருப்பதால் போதுமான வேலைக்காரர்களை, ஒழுங்காக, சரியான இடத்தில், சரியான காலத்தில் அமர்த்த முடியுமென்று தோன்றவில்லை. ஆகையால் மந்திரி இலாகா "நியமன வேலைக்காரர்கள்" என்ற திட்டத்தை நிறுவியிருக்கிறது. அதன் பிரகாரம் ஆறு தொழிற்சாலைப் பகுதியிலுள்ள முதலாளிகளும் அவசியமான வியாபாரங்களைத் திருத்தியமைக்க அத்தியாவசியமான தொழிலாளர்களைப் பொறுக்கியெடுக்கவேண்டும். அவர்கள் திரும்பிவர இஷ்டப்பட்டால் மந்திரி இலாகா அவர்களை அனுப்பிவிட ஏற்பாடு செய்யும். பிரகிருத வேலைக்கு அவர்கள் அத்தியாவசியம் என்று நினைத்தாலொழிய அவர்களுக்கு ஒரு தடையும் இருக்காது. இவ்விதமாக, யந்திர வேலைக்காரர்கள், தொழிற்சாலைகளுக்கு முக்கியமான வேலைக்காரர்கள் முதலிய முக்கியமான தொழிலாளர்கள் மறுபடியும் முக்கியத்வமடைந்துள்ள தொழில்களுக்குத் திரும்பி விடுவார்கள். அந்தத் தொழில்களின் முக்கியத்வம் யுத்த அவசியத்தினால்தான் போய்விட்டது.



# நவீன கனமான கப்பல்கள்.

(யார்க் ஷையர் போஸ்ட்).

பசிபிக், கிழக்கிந்தீஸ் கடற்படையிலுள்ள கப்பல்களில் பெரும்பாகம் நவீன முறையில் கட்டப்பட்ட கனமான கப்பல்களாக இருக்கின்றன.

கிங் ஜார்ஜ் V ரக போர்க் கப்பல்களில் ஆன்ஸனைத் தவிர பாக்கி கப்பல்கள் கடற்தளபதி பிரேசரின் பசிபிக் கடற்படையிலிருக்கின்றன. நான்கு கப்பல்களில் ஒரு கப்பல் அநேகமாக திருத்தியமைக்கப்படுவது சகஜம் என்று அறியவேண்டும்.

நம்மிடம் ஆறு பெரிய விமானந்தாங்கிகள் இருக்கின்றன. பசிபிக்கிலுள்ள விமானந்தாங்கிகளின் ஜாபிதாவில் இம்பிளகபிள் ஒன்றுதான் சேர்க்கப்படவில்லை. ஆகிலும் சமீப காலத்தில் டிரக், சாகிஷிமாத் தீவுகள் தாக்கப்பட்டபொழுது இம்பிளகபிள் என்ற விமானந்தாங்கிகளிலிருந்து விமானங்கள் சென்றன என்று லண்டனில் யுத்தச் செய்தி ஸினிமாப் படம் காட்டப்பட்டது.

கிங் ஜார்ஜ் V ரகக் கப்பல்கள், எடையிலும், பீரங்கி அமைப்பிலும், வேகத்திலும் இண்டியானா, வாஷிங்டன் வகுப்பைச் சேர்ந்த ஆறு புதிய அமெரிக்கக் கப்பல்களுக்கு சமானமானவை. அயோவா வகுப்பைச் சேர்ந்த நான்கு கப்பல்களுடன் இந்தக் கப்பல்கள் கடற்தளபதி நிமிட்ஸின் போர் படைக்கு உப பலமாக இருக்கின்றன.

நடமாடிக்கொண்டிருக்கும் 45,000 டன்கள் எடையுள்ள அயோவாவைப்போல் நம்மிடம் கப்பல்கள் இல்லாவிட்டாலும், அவ்விதக் கப்பல்கள் வந்துகொண்டிருக்கின்றன. வாங்கார்ட் என்ற கப்பல் சென்ற நவம்பர் மாதத்தில் எலிஸபெத் இளவரசியால் மிதக்கவிடப்பட்டது. அத்யாவசியமான நாசகாரிகளையும், நீர்மூழ்கிகளை அழிக்கும் கப்பல்களையும் கட்டவேண்டிய அவசியத்தை முன்னிட்டு பெரிய கப்பல்களைக் கட்டும் முயற்சிகள் ஒத்தி வைக்கப்பட்டன.

கிழக்கு இந்தீஸ் படையிலுள்ள க்வீன் எலிஸபெத்தும், வாலியண்டும், 1914—1918 யுத்தத்தில் தேர்ச்சி பெற்று நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்ட கப்பல்கள். அவைகள் மத்தியதரைக்கடலில் அதிக கியாதி பெற்றன. வார்ஸ்பைட், மலேயா என்ற இரண்டு கப்பல்களும் இங்கு வரவில்லை. அவைகள் ஏதோ ஒரு கப்பல் பழுதுபார்க்கும் தளத்தில் திருத்தி அமைக்கப்படுகின்றன.

இரு கடற்படையிலும் ஸப்பக்கைத் தவிர மற்றுள்ள சஞ்சாரிகள் சமீபகால ரகத்தைச் சேர்ந்தவை. ஆனால் அந்த ரகத்தைச் சேர்ந்த மற்ற கப்பல்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

அவற்றில் பிரெஞ்சு நவீன யுத்தக் கப்பலான ரிசிலியூவும் டச்சு சஞ்சாரியான வான்டிராம்பும் சேர்ந்திருக்கின்றன. டச்சு நாசகாரி கிழக்கிந்தீஸ் விடுதலைக்கு பங்கெடுத்துக் கொள்ளப் போகும் டச்சுக் கப்பல்களுக்கு முற்போக்கி என்று சொல்லலாம்.

---

# தூரக்கிழக்குக்கான D தினத்திற்கு திட்டம்.

## ஜப்பான்—முதலாவது முகான்மை.

(நியூஸ் க்ரானிகளின் ராணுவ நிருபர் மேஜர் லிவிப் கிரிப்பின்).

ஜப்பானை நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்படி கட்டாயப்படுத்துவதென்றால் போரை நீண்ட காலமும், கடுமையாகவும் நடத்தவேண்டியிருக்கும்.

மத்திய பசிபிக்கிலும் ஜப்பானைச் சுற்றிலும், கடற்தளபதி நிமிட்ஸ் சொல்லுகிறபடி நடவடிக்கைகள் படையெடுப்புக்கு முற்போக்கான கட்டத்தை அடைந்துவிட்டன. "படையெடுப்பு" என்ற பதத்தை அன்வயப்படுத்துவதில் உற்று நோக்காளர்கள் அவரவர்களுக்குத் தோன்றிய முடிவுக்கு வரலாம். படைகள் முதல் முதலில் கொரியாவிலும், மஞ்சூரியாவிலும் இறங்கக்கூடுமென்று தோன்றுகிறது. ஜப்பான் கடைசியாகத்தான் தாக்கப்படும்.

இந்த வரிசைப்படி படையெடுப்பு ஏற்படும் என்றால், அது என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிவிடும். அமெரிக்க விமானப்படையும், தரைப்படைகளும் மறுபடியும் பூர்ணமாக தூரக்கிழக்கில் உபயோகப்படும்பொழுது, ஜப்பான்தான் முதன்மையாகத் தாக்கப்படும்

என்று நான் எதிர்பார்க்கிறேன். இது எப்பொழுது, எங்கு, எவ்விதம் ஆரம்பிக்கப்படும்? ஆகஸ்டு, ஸெப்டம்பர் மாதங்களில் சூறுவளிக்காற்று பலமாக அடிக்கும். ஆகிலும் சூறுவளிக் காற்று எந்த சமயத்திலும் அடிக்கலாம். இந்த நாசகாரியான சூறுவளிக் காற்றுகள் ஜப்பானியக் கடற்படையைவிட நமது கடற்படைக்கு அதிக நஷ்டம் விளைவித்துவிட்டன.

ஸெப்டம்பர், அக்டோபர் மாதத்தில் அதிக மழை பெய்யும். அதன் பின் மூன்று அல்லது நான்கு மாதங்கள் வரையில் வரகூடியான காலமாகயிருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

பசிபிக்கில் நீரோட்டம் விசித்திரமாகயிருக்கும். சீனக் கடலிலும், ஜப்பானியக் கடலிலும், ஜப்பானிய கடற்கரை பூராவிலும் சந்திரனின் வளர்பிறை, தேய்பிறைக்குத் தக்கவாறு தினசரி இரண்டு அல்லது நான்கு தடவை அலைகள் அதிகமாக இருக்கும். சில இடங்களில் 30 மணிகளில் இரண்டு தடவை அலைகள் அதிகமாக இருக்கலாம். அலைகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் 8 அங்குலம் முதல் 8 அடி வரைக்கும் இருக்கும்.

உத்தியோக முறையில் வெளியிடப்பட்ட பின்கண்ட அறிக்கைக் குறிப்பு இந்த அசாதாரணங்களை விளக்கிக் காட்டுகிறது.

"காராபூடோவின் தெற்குக் கரையில் தினசரி அலைகளின் வேற்றுமை மிகவும் அதிகமானது. தினசரி சமுத்திரக் கொந்தளிப்பும் இருந்துவரும்".

பிரான்ஸின் படையெடுப்புக்காகத் தயாரிக்கப்பட்ட அலைகளின் எழுச்சி விவரங்கள் பசிபிக்கில் திட்டம்போடுகிறவர்களுக்கு யாதொரு உதவியும் செய்யாது. அலைகளைப்பற்றி நிச்சயமான புத்தி ஏற்படாததால் உள் நாட்டிலுள்ள சமுத்திரங்களுக்குச் செல்லுவது யுத்தமென்று தோன்றும்.

இங்கிலாந்தில் படையெடுப்புக்காக ஜெர்மனி திட்டம்போட்டபொழுது, தேசத்தை இரண்டாக்குவதற்காக செவர்னிலிருந்து வாஷுக்கு முன்னேறுவதென்றும், அதன்மூலம் தெற்கு இங்கிலாந்தை தொழிற்சாலைகளிலுள்ள வடக்கிலிருந்து துண்டித்துவிடுவதென்றும் ஜெர்மனி உத்தேசித்ததென்று நம்பப்படுகிறது. அதே திட்டம் ஜப்பானுக்குப் பொருந்தும். இவ்விதமான இடைபோன்ற கோடு, டோக்கியோவுக்கு மேற்கில் 160 மைல்களில் ஹான்ஷூ தீவிலிருக்கிறது. இது ஹுகுயி—நாகோயா—ஓஸாகா முக்கோணத்திற்குள் அடங்கியுள்ளது. நாகோயாவிலுள்ள பசிபிக் வளைகுடாவுக்கும் ஹுகுயிலிருந்து தெற்கில் 16 மைல்களில் துருகாவிலுள்ள ஜப்பானியக் கடலுக்கும் மத்தியில் 60 மைல்கள்கொண்ட கரடுமுரடான பிரதேசமிருக்கிறது.

இந்த நடவடிக்கை வெற்றிகரமாக நடைபெற்றால் அது மத்திய ஜப்பானிலிருந்து கீழ்க்கண்ட பிரதேசங்களைத் துணித்துவிடும். ஜப்பானியத் தீவுகளில, அதிக விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியதும், 90 லக்ஷம் ஜனத்தொகை உள்ளதுமான க்யூஷூ, அதிகமாக அபிவிருத்தியடையாததும் 30 லக்ஷம் ஜனங்களுள்ளதுமான ஷிகாகு, யுத்தத்துக்கு முக்கியமானதும், தொழிற்சாலை முக்கியத்வமுள்ளதுமான தென்மேற்கு ஹான்ஷூவும் நாகோயா நகரமும், 10 லக்ஷம் ஜனங்களுள்ள ஓஸாகா, கியோடோவும். இந்த நகரங்களின் ஜனத்தொகையைத்தவிர, ஹுகுயி—நாகோயா கோட்டுக்கு மேற்கில் ஹான்ஷூவின் ஜனத்தொகை 100 லக்ஷத்துக்கு மேற்பட்டதென்று மதிப்பிடப்படுகிறது. இவ்விதமாக ஜப்பானின் மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பாகம் மத்திய ஜப்பானிலிருந்தும், வடக்கிலிருந்தும் துணிக்கப்படும். ஜப்பானின் இடுப்புபோன்ற இந்த பாகத்தில் எதிரியின் நாட்டில் முன்னேறும் வாசலை ஏற்படுத்துவதற்கு அவசியமான துறைமுகங்களும், விமானத் தளங்களும் ஏராளமாக இருக்கின்றன.

அதற்கு அடுத்த திட்டம் க்யூஷூவை ஆக்கிரமிப்பதுதான். ஆகினவா, ஐவோஜிமாவிலிருந்து கிழக்கில் 400 மைல்கள் தாண்டியுள்ள நாகோயா தளத்தைவிட க்யூஷூ அமெரிக்க விமானப்படைக்கு சமீப தூரத்திலிருக்கும் சௌகரியம் ஏற்படும்.

சமீபகாலத்தில் உள்நாட்டுக் கடல்களிலுள்ள கப்பல்களைத் தாக்குவதினின்றும் கடற்கரையிலுள்ள லக்ஷியங்கள்பேரில் கடர்படை பீரங்கிப் பிரயோகம் செய்ததிலிருந்தும் பசிபிக்கில் நேசதேசத்தாருக்கு ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும். அதாவது கடற்தளபதி நிமிட்ஸிடமுள்ள 100 விமானந்தாங்கிக் கப்பல்களில் செல்லும் விமானங்கள் தரையிலிருந்து விமானங்கள் வரக்கூடாத எந்த இடங்களிலும் நடவடிக்கையைத் துவக்கமுடியும்.



# ஜப்பானைத் தாக்க பூரா கடற்படை பலமும்.

## பசிபிக்கிலும் கிழக்கு இந்தீஸிலுமுள்ள கப்பல்கள்.

(டெயிலி டெலிகிராப்).

ஜப்பானுடன் போர் செய்ய அநேகமாக பிரிடிஷ் போர்க் கப்பல்கள் எல்லாம் அனுப்பப்பட்டுவிட்டன.. வாஷிங்டனிலுள்ள ஒரு பிரிடிஷ் கடற்படை பிரமுகர் இதை வெளியிட்டார்.

பசிபிக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படை பழைய ரகத்தைச் சேர்ந்தது என்று அமெரிக்காவில் குறை கூறுகிறவர்களுக்கு அவர் பதில் சொல்லியிருக்கிறார்.

அவர் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டார்,

பசிபிக்கிலுள்ள ஒவ்வொரு கப்பலும் யுத்தம் ஆரம்பமானபின் கட்டப்பட்டது.

பிரிடிஷ் துறைமுகங்களில் திருத்தியமைப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்காக நிற்கும் கப்பல்களைத் தவிர மற்ற பெரிய நவீன ரகக் கப்பல்கள் தூரக்கிழக்குக்குச் சென்றுவிட்டன.

பசிபிக் கடற்படையில் பின்கண்ட கப்பல்கள் இருக்கின்றன. கிங்க் ஜார்ஜ் V வகுப்பைச் சேர்ந்த 35,000 டன்கள் எடையுள்ள நான்கு போர்க் கப்பல்களில் ஹௌ, கிங்க் ஜார்ஜ் V, ட்யூக் ஆப் யார்க்; இல்லஸ்டிரியஸ் வகுப்பைச் சேர்ந்த 23,000 டன்கள் எடையுள்ள விமானந்தாங்கிகளில் பார்மிடபிள், இல்லஸ்டிரியஸ், விக்டோரியஸ்; இண்டாமிடபிள் வகுப்பைச் சேர்ந்த 23,000 டன்கள் எடையுள்ள விமானந்தாங்கிகளில் இண்டிபாடிகபிள், இண்டாமிடபிள்; பிளாக் பிரின்ஸ், ஸ்விப்ட்ஷ்யூர், காம்பியா, ஊகாண்டா உள்பட நான்கு சஞ்சாரிகள், ட்ரௌபிரிஜ், டெனேஷியஸ், டெர்மாகெண்ட், நேபியர், நேபால், கைஸாம், நார்மான், க்விபொரான், க்விக்மாச்சு, அண்டைன், பார்புளோர், கிரென்வில் என்ற பன்னிரெண்டு நாசகாரிகள்.

கிழக்கிந்தீஸ் கடற்படையில் பின்கண்ட கப்பல்களிருக்கிறன. க்வீன் எலிஸபெத் ரகத்தைச் சேர்ந்த 31,100 டன்கள் எடையுள்ள மூன்று போர்க் கப்பல்களில் க்வீன் எலிஸபெத், வாலியண்ட், 35,000 டன்கள் எடையுள்ள பிரெஞ்சு யுத்தக் கப்பலான ரிசிலியூ, சண்டை சஞ்சாரியான ரினௌன், ஆர்கோனுட், கிலோன், யூரியாலஸ், நைஜீரியா, ஸயக், வான்டிராம்ப் என்ற கப்பல்கள் உள்பட ஏழு சஞ்சாரிகள், கெம்பன்பெல்ட், பென், பாலாடின், ரோபக், ரெடௌட், எஸ்கிமோ, ரேஸ்ஹார்ஸ், ராதர்ஹாம், சாமாரெஸ், வீனஸ், விராகோ, விஜிலண்ட், வெருலாம், உர்ஸா என்ற 14 நாசகாரிகள்.

தூரக்கிழக்கில் துணைக்காவல் விமானந்தாங்கிகளான அமீர், பீகம், எம்பரர், ஷா என்ற கப்பல்களும் நடமாடிக்கொண்டிருக்கின்றன.

அவர் ஜப்பானிய கடற்படையைப்பற்றி பின்கண்ட வியாக்யானத்தையும் அறிவித்தார். "ஜப்பானிய கடற்படை அழுகிப்போன ஆப்பிள்களைப்போலிருக்கிறது."

---

# கிழக்கு, பசிபிக் கடற்படைகள் போருக்கு ஆசைப்படுகின்றன

## துணிவு நடவடிக்கை லக்ஷியமுள்ள கப்பற்படைகள்

ரியர் கடற் தளபதி H. C. தர்ஸ் பீல்ட்

தூரக்கிழக்குப் போரில் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும் பிரிடிஷ் கடற் படையின் வேலையின் பிரிவுகளில் பல்வேறு அம்சங்கள், உலகத்தின் மற்றொரு பாகத்தில் மகத்தான நடவடிக்கையை மேற்கொள்ளும் ஒரு கடற்படையின் மேன்மையான நடவடிக்கையை வெளிப்படுத்துகின்றன. பிரிடிஷ் சரித்திரத்திலும், மற்றெந்த நாட்டின் சரித்திரத்திலும் இது தான் முதல் முதலாக இவ்விதம் செய்யப்படும் காரியம்.

இதற்குமுன் பிரிடனுக்கும், பிரான்ஸுக்கும், ஸ்பெயினுக்கும், ஜெர்மனிக்கும் நடைபெற்ற அநேக போர்களில் போர் அட்லாண்டிக் கடல் தாண்டியுள்ள தேசத்திற்கும், கிழக்கு

இந்தோசைனாவுக்கும், சீனக்கடலுக்கும், பசிபிக் கடலுக்கும் பரவியிருந்தது. அந்தப்போர்களில் ஈடுபட்டு இந்த படைகள் அவைகளுடன் போர் புரிந்த பிரிடிஷ் கடற் படையைப்போல தாய் நாட்டிலிருந்து வெகு தூரத்தில் சண்டை போட்டன. இருதரப்பாரின் எல்லைப்புற தற்காப்புப்படைகளுக்குள் போர் மூண்டதேயல்லாது போரில் ஈடுபட்டவர்களின் முக்கிய மான படைகள் போரில் ஈடுபடவில்லை.

இருதரப்பாரின் முக்கியமான கடற்படைகள் இருதிப்போரை நடத்திய இடங்கள் தாய் நாட்டிலிருந்து கப்பல்கள் நடமாடும் தூரத்திலேயே ஐரோப்பிய சமுத்திரங்களில் நடைபெற்றன. 1794-ம் வரு ஜூன் மீ 1-ம் தேதி நடைபெற்ற போர் இங்கிலீஷ் கால்வாயிலும், நைல் நதிப்போர் மத்திய தரைக்கடலிலும், 1805-ம் வருஷம் நடைபெற்ற டிராபால்கர் போர் மத்திய தரைக்கடலுக்குச் செல்லும் வாசற்படிக்கு வெளியிலும், ஸ்பானிஷ் கடற் படையின் முக்கியமானதையும் தாண்டியும் அதற்குமுன் எட்டு வருஷங்களுக்குமுன் செயின்ட் வின்ஸெண்ட் முனைக்கருகிலும், 1797-ம் வருஷம் நடைபெற்ற காம்பர்டௌன் போரும் 1916-ம் வருஷம் நடைபெற்ற ஜட்லாந்து போரும் வடக்குக் கடலிலும் நடைபெற்றன.

இதற்குமுன் பிரிடிஷ் கடற்படை கடல் தாண்டி மற்றொரு கோடிக்குச் சென்று அங்கு தாய் நாட்டிற்கு சமீபத்தில் பலமாகவுள்ள ஒரு எதிரியுடன் கடற் போரை நடத்தியதில்லை. ஸந்நிவேசம் சர்ப்பரா, ஐச்வர்யங்களின் சாமிப்யத்தை உத்தேசித்து ஜப்பான் பலமுள்ள தென்றும் பிரிடிஷ் கடற்படை பலஹீனமுள்ளதென்றும் தோன்றலாம்.

இப்பொழுது நடைபெறும் ஜப்பானியப்போரில் இது ஒரு புதிய அம்சம். அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் இது நூதனமான போராகும். ஆகையினால்தான் இதுவரையில் இல்லாதபடி பிரிடிஷ் பசிபிக் கடற் படைக்கும் கிழக்கு இந்திய படைக்கும் அநேக புதிய வசதிகளும் உதவிகளும் அமைக்கப்பட வேண்டியதாக இருந்தது. இந்த முறையினால்தான் தாய் நாட்டிற்கு சமீபத்தில் போர்புரியும் ஒரு தேசத்திற்குக்கிடைத்துள்ள சௌகர்யத்துக்கு பரிகாரம் தேடி விடலாம். இதன் மூலம்தான் தூரக்கிழக்கில் போருக்குச் சென்றிருக்கும் பிரிடிஷ் கடற் படைக்கு சௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் வாசற்படிக்கு ஜப்பான் முன்னேறியதைத்தடுக்க அவசியமான படைகளை ஐரோப்பிய போர் முனையிலிருந்து அனுப்புவதற்கு சாத்யமாகுமுன் தூரக்கிழக்குப்போர் ஆரம்பத்தில், இருவகைப்பட்ட நடவடிக்கைகளுக்காக கடற்கரை ஓரமாகவுள்ள ஸ்தானங்களை தேச படத்தில் வரைவதில் அதிக சிரமம் ஏற்படுமென்று பிரிடிஷ் கடற்படை இலாகா மதித்து விட்டது. சமாதான காலத்தில் அடிக்கடி உபயோகிக்கப்படும் சமுத்திரங்கள் தான் பூராவாக சர்வே செய்யப்பட்டு தேச படத்தில் குறிக்கப்பட்டிருக்கும். ஜப்பான் ஆக்கிரமித்து வந்த பர்மா கடற்கரையில் வியாபாரம் சில முக்கியமான துறைமுகங்களில் நடைபெற்று வந்தது.

ஆகையால் தூரக்கிழக்கு கடற்படையுடன் சர்வே செய்யும் கப்பலும் செல்லவேண்டும். அதில் தேர்ச்சி பெற்ற சர்வேயர்கள் செல்ல வேண்டும். பிரிடிஷ் கடற் படை சர்வேயர்களை விட உயர்வானவர்கள் உலகத்திலில்லை. மேலும் சர்வேயர்களுக்கு அவசியமான நவீன அமைப்புகளும் கப்பலிலிருக்க வேண்டும், ஆனால் அதுவும் போதவில்லை.

கடலில் சர்வே செய்து படம் வரைவது பின்வருமாறு:—முதலில் ஆராய்ச்சி செய்து அளவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளை ஒன்றுபடுத்தி குறிப்பாக ஒரு படம் வரையப்படவேண்டும். அதன்பின் அதை கடற்கரையிலுள்ள இலாகா அச்சிட்டு ஏராளமான பிரதிகளை வழங்க வேண்டும். இருவகைப்பட்ட நடவடிக்கைக்கு இந்த முறை மிகவும் மெதுவானது, சாவகாசமானது, ஆகையினால் சர்வேக் கப்பலில் படம் அச்சிடும் யந்திரங்களும், அமைக்கப்படவேண்டியிருந்தது. அதன் மூலம் சர்வேயரின் ஆராய்ச்சிகளின் முடிவுகள் மாலுமிகளுக்குத் தேவையான முறையில் அச்சிடப்படுகின்றன. புதிய படங்களும் மாலுமிகளுக்கு வழங்கப்படுகின்றன.

சில சர்வே நடவடிக்கைகள் கபடமாகவும், போர் படைகள் செல்லுவதற்குமுன்னதாகவும் ஜப்பானியப்படைகளின் தாக்குதல் அபாயத்துக்குட்பட்டும் நடைபெற வேண்டி இருந்தது. ஆஸ்திரேலிய கடற்படையும், நியூகினியா, ஸாலமன்ஸ் சமுத்திரங்களில் இந்த வேலையைச் செய்திருக்கிறது. அதன் பயனாகத்தான் ஆகியாப், ராம்ரி, செங்டன் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவேறின.



# ஜப்பானின் மிகுந்த அயர்வு.

## நேசநேச வெடிகுண்டு வீச்சுக்குப் பணிவு.

**(மான்செஸ்டர் கார்டியன்)**

உலகத்திலேயே மூன்றாவது கடற்படை வல்லரசு, அதன் உள்நாட்டு துறைமுகங்களை எதிரி வெடிகுண்டுகளை வீசி அழிப்பதையும், நாசத்தைத் தடுக்கவும் சிறிதும் முயற்சி செய்யாமல், பொறுத்துக்கொண்டிருப்பதை இப்பொழுது காண்கிறோம். அமெரிக்க கமாண்டர்களும் ஜப்பானிய எதிர்ப்பே இல்லையென்று அவர்களுடைய அறிக்கையில் வெளியிடுகிறார்கள். ஜப்பான் சும்மாயிருப்பதற்கு ஜப்பானின் பிற்கால நடவடிக்கை இதற்கு சமாதானம் சொல்லும் என்று ஜப்பான் ரேடியோ மூலம் பிரசாரம் செய்து வருகிறது. இது சுலபமாக நம்பக்கூடியதில்லை. எதிரியின் கடற்படைகள் இன்னும் இருந்து வருகின்றன. ஏனெனில் அமெரிக்க வெடி விமானங்கள் சென்ற ஐந்து மாதங்களாக ஜப்பானியக்கப்பல்களை உள்வட்டாரத்தில் அடைத்து விடுவதற்காக நிருதியாக் சுரங்கவெடிகளைப் பாவிவருகின்றன. ஜப்பானிடம் விமானப் படையும் இருக்கிறது. ஆனால் அவைகள் பறக்க ஆரம்பித்தவுடன் சுட்டுவீழ்த்தப்படுகின்றன. அல்லது தரையிலிருக்கும் பொழுதே ஏராளமாக அழிக்கப்படுகின்றன. 1941-ம் வருஷத்தில் வெகுதுரிதமாக ஜப்பான் முன்னேறியதைப் பார்த்தால் இப்பொழுது ஜப்பான் மிகவும் அயர்ந்து இருக்கிறதென்று காணலாம்.

விமானந்தாங்கிகளில் சென்ற நூற்றுக்கணக்கான விமான ஒத்தாசையுடன் கடற்படை பீரங்கிப் பிரயோகம் செய்ததை படையெடுப்புக்கு முற்போக்கான கட்டம் என்று கடற் தளபதி நிமிட்ஸ் வர்ணித்திருக்கிறார். படையெடுப்பு ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்குள் நடைபெறுமென்று மற்றொரு அமெரிக்க கடற் தளபதி சொல்லியிருக்கிறார். நமக்குத் தோன்றுகிறபடி ஜப்பான் பலஹீனமடைந்திருந்தாலொழிய, இந்த அறிக்கைகள் ஜப்பானியரின் மனஉறுதியைக் குலைக்கக்கூடியவைகள் என்றும் 5,000 மைல்களுக்கு அப்பாலிருந்து போதுமான கவசம்பூண்ட படைகளைத் தயாரிக்க ஒருவருஷ காலமாகும் என்றும் நாம் எண்ணவேண்டும்.

நேசநேசத்தார்கள் முக்கியமாக ஹான்ஷூ த்தீவின் கிழக்கு, தெற்குக்கடற்கரை ஓரமாக உள்ள லக்ஷியங்களைத்தான் தாக்கிவருகிறார்கள். தெற்கிலுள்ள கியூஷூ த்தீவு சமீபகால பலமான தாக்குதலிலிருந்து தப்பி விட்டது. ஆகினுவா பூராவாக உபயோகிக்கப்படும் பொழுது அது மறுபடியும் பலமாகத்தாக்கப்படும். வடக்கிலுள்ள ஹொக்கோடோவிலுள்ள மூரோரான் இரும்பு தொழிற்சாலைகள் பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டன. டோக்கியோவின் விமான தளங்களைத் தவிர மற்றெந்த லக்ஷியத்துக்கும் சலிகை காட்டப்படவில்லை. பொதுவாக யுத்த தொழிற்சாலைகளை அழிப்பதுதான் நமது லக்ஷியம். கப்பல் கட்டும் நிலையங்கள், எஃகு தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள், விமானங்களைக் கட்டும் சாலைகள் எல்லாம் தாக்கப்படுகின்றன. ஆகிலும் படையெடுப்புக்கு முற்போக்காக போக்குவரத்துகளை சின்னாபின்னப்படுத்தும் நடவடிக்கையைப்பற்றி நாம்இன்னும் கேள்விப்படவில்லை. இப்பொழுதுதான் ஆரம்பகட்டத்திலிருக்கிறோம்.

பிரிடிஷ் கடற்படை ஜப்பானியக் கடற்கரைக்கு வந்து விட்டதுபோல, பிரிடிஷ் லங்காஸ்டர் விமானங்களும் லிங்கன்களும் ஆகினுவாவிலுள்ள தளங்களிலிருந்து புறப்பட்டு இரவில் வெடிகுண்டுகளை வீசக்கூடும். இதுவரையில் ஜப்பான் பகலில்தான் தாக்கப்பட்டு வருகிறது. ஏனெனில் அமெரிக்கர்கள் பகல் காலத்தைத்தான் சிலாக்யமாக நினைக்கிறார்கள். ஜெர்மானியர்களைப்போல ஜப்பானிய மக்கள் ஒரே சமயத்தில் 24-மணி நேரங்களும் சேர்ந்தாற்போல சௌகரியங்களைப் பெற்றிருக்கவில்லை. அது நீண்டு, அகலமில்லாமலிருப்பதால் வெடிகுண்டு வீச்சுக்கு சுலபமாக உட்பட்டு விடுகிறது. தேசப்படத்தில் அதன் பரிமாணத்திற்கு அதிகமாகவே ஜப்பானில் தொழிற்சாலைகள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன. தேசம் பூராவிலும் மலைகளும் பள்ளத்தாக்குகளும் மாறி மாறி காணப்படுகின்றன. எட்டில் ஒருபாகம்தான் சாகுபடிக்கு லாயக்குள்ளது. காலியான பிரதேசம் கிடையாது. தொழிற்சாலைகள் கிடைக்கக்கூடிய இடங்களில் குவிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் வெடிகுண்டு வீச்சின் மூலம் ஜப்பானை அழித்துவிடலாமே யல்லாது அதை முறியடித்து விடலாமென்று நாம் நினைக்கக்கூடாது. ஜப்பான் நிலைபெற்று போர் புரிவ

தென்று உத்தேசித்தால் ஆகினுவாவைவிட பலமான எதிர்ப்புகளை நாம் காணக்கூடும். ஆகினுவாவில் நாம் 1 லக்ஷம் பேர்களைக்கொன்ரும். ஜப்பானில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று புரியவில்லை. ஜப்பானின் வெறியை விட்டுவிடும்படி ஜப்பானுக்கு நல்லபுத்தி தோன்றிவிடுமென்று நாம் நம்புவோம்.

---

# ஜப்பான் இறுதி வரையில் போராடுமா?

## தூரக்கிழக்கில் D தினம் சமீபித்துவிட்டது.

*பிரிகேடியர் J. C. ஸ்மித்.*

(டெயிலி ஸ்கெச்).

மூன்றரை வருஷங்களுக்கு முன் யுத்தம் மூண்ட பின் சென்ற சில வாரங்களில் ஜப்பானியப் போரின் முடிவைப் பற்றி பல விதமான அபிப்பிராயங்கள் தலைகாட்டி வருகின்றன.

நியாயமான முறையில் ஆருடம் சொல்லுவதற்கு நமக்கு முன் நடவடிக்கை ஒன்றுமில்லை. வனெனில் ஜப்பானில் இதுவரையில் படையெடுப்பு ஏற்பட்டு அது தோற்கடிக்கப்படவில்லை.

ஜெர்மானியர்களைவிட ஜப்பானியர்கள் போரில் வெறிபிடித்தவர்கள் என்றாலும், யுத்தத்தின் இறுதி கட்டத்தில் கக்ஷியின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்துப்போராடிய ஜெர்மன் மனப்பான்மைக்கு மாருக ஜப்பானியர்கள் பெரிய தத்வதரிசிகள், தேசீய மனப்பான்மையுள்ளவர்கள். அதாவது நாஸிகளின் தத்வம் பிழைத்திருப்பதற்காக ஜெர்மானியர்கள் போரை நடத்தினார்கள்; இந்த மாயம் நிலைபெற்றிருப்பதற்காக ஜெர்மனி அழிக்கப்படுவதையும் சகிக்க அவர்கள் தயாராக இருந்தார்கள் என்று நான் சொல்லுகிறேன். ஜப்பானியர்கள் ஜப்பானுக்காகப் போர் புரிந்து வருகிறார்கள். ஒரு கருத்துக்காகப் போரை நடத்தவில்லை.

போரை நடத்துவதென்று ஜப்பான் முடிவு செய்தால் அவர்கள் ஜெர்மனியைப் போல அவ்வளவு காலம் நீடித்து நிற்பார்களா? சந்தேகமன்னியில் ஜப்பான் ஜெர்மனியைவிட அதிககாலம் போரை நீடித்து நடத்தும். ஆனால் பிரசார மூலமாகவும் போரில் நேசதேசப் படையின் உயர்வினாலும், ஜப்பானியர்கள் முறியடிக்கப்படக் கூடியவர்கள் என்ற மனப்பான்மையும், வாழ்க்கை, இருப்பு முதலியவற்றைப் பற்றிய ஜப்பானிய வேதாந்தமும் மாறுதலடைந்தால் யுத்தம் நின்றுவிடலாம். சரணாகதி செய்வதைவிட ஜப்பானிய சாம்ராஜ்யம் பாழாகினாலும் பாதகமில்லை என்று ஜப்பான் முடிவு செய்தால் ஜப்பானில் வெற்றிகரமாக படையெடுப்பு ஏற்பட்டாலும் யுத்தம் முடிந்துவிடாது.

D தினத்தன்று ஜெர்மன் சேனை வடக்கு ஆபிரிக்காவில் ஒரு முக்கியமான தோல்வியைப் பெற்றிருக்கிறது. ஆகிலும் அதே போல் இப்பொழுது ஜப்பானுக்கு பர்மாவில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. ஆகிலும் அநேக ஜெர்மானியர்கள் ருஷ்ய சேனைகளை எதிர்த்துவந்தார்கள். தூரக்கிழக்கில் D தினம் நெருங்கிவரும் சமயத்தில் ஜப்பானியப் படையின் பெரும் பாகம் போரில் ஈடுபடவில்லை. இந்த சேனையில் ஏராளமான மூலபலமுள்ள 40 லக்ஷம் துருப்புகளிருக்கின்றன.

ஜப்பானிய சேனை இடையூறுகள் அதிகரித்தாலும் விமானப்படை குறைந்தாலும், ஆயுதங்களின் மேன்மை குன்றினாலும் போரை நடத்தும். போரில் சாகத்துணியத் தயாராக உள்ள ஜப்பானிய ஸோல்ஜர் எப்பொழுதும் பயங்கரமான எதிரி தான்.

யுத்தத்தின் முடிவைப் பற்றிய ஆருடங்களிலிருந்து தெளிவாக வெளிப்படுவது யாதெனில் விஷயம் பூராவும் திராசு முனையில் இருந்து வருகிறது. ஜப்பானிய எதிர்ப்பு பரீக்ஷை பார்க்கப்பட்டு முடிவாக ஜெர்மனியைப் போல் ஜப்பான் இறுதி வரையில் போரை நடத்துமா அல்லது ஜப்பானைக் காப்பாற்றுவதென்று முடிவு செய்யுமா என்று கண்டுபிடிக்கும் வரையில் முடிவான அபிப்பிராயம் கூறமுடியாது.



# ஜப்பானியர்கள் நேசதேச விமான நடவடிக்கையை எதிர்பார்க்கிருர்கள்.

## பிரிடிஷ் விமானப்படையின் நடவடிக்கை அதிகாரிப்பு.

(விங் கமாண்டர் L. V. பிரேசர்).

கடல் ரோந்து செய்யும் விமானங்களைத் தவிர மற்ற தென் கிழக்கு ஆசியாவிலுள்ள ஜப்பானிய விமானப்படை ஸால்வின்நதி முகத்துவாரத்துக்கும் சிங்கப்பூருக்கும் மத்தியில் எந்த இடத்திலும் இறங்கக்கூடிய நேசதேசப் படைகளைத் தாக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகிலும் பரிக்ஷா காலம் வரும்பொழுது எதிரிக்கு அது சுலபமான வேலையாக இருக்காது.

மலேயா, ஸியாம், தெற்கு இந்தோ-சைனுவிலுள்ள ஜப்பானியக் கடற்படை, விமானப் படையின் ஒன்றுபட்ட வலிமையின் மதிப்பு எதிரியின் முதல்தர விமானப் படையின் கூடுதல் தொகைக்கு மிகவும் சொல்பமானதுதான். இந்தப் பிராந்தியத்தில் ஜப்பான் உபயோகிக்கும் விமானப் படை சிறந்தவையல்ல அல்லது நவீன முறையில் கட்டப்பட்டதல்ல. அவைகள் ஜப்பானிலிருந்துவரும் ஸப்ளை மார்க்கத்தின் கோடியிலிருக்கின்றன. இந்த பிராந்தியத்தில் முக்கிய பிரதேசமான பர்மாவிலுள்ள விமானப் படையை நேசதேச விமானப் படை சென்ற 18 மாதங்களில் நொருக்கியதை எதிரி கண்ணுறக் கண்டிருக்கிருன்.

சென்ற வருஷத்தில் விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் சபாங், ஸிக்ளி, சுமாத்ரா, அந்தமான் தீவுகள், மற்ற கேந்திர ஸ்தானங்கள், முதலியவற்றைத் தாக்கிய பொழுது எதிரியின் விமானப்படை நடவடிக்கை அற்பமாக இருந்தது. 1944-ம் வருஷம் நவம்பர் மாதத்திற்கும் சென்ற மார்ச்சு மாதத்திற்குமிடையே சிங்கப்பூரை நான்கு தடவைகள் தாக்கிய 20-வது பாம்பர் கமாண்டைச் சேர்ந்த சூபர் பறக்கும் கோட்டைகள் எதிரி அனுப்பிய எல்லா சண்டை விமானங்களையும் சமாளித்து விட்டன.

தெற்கு பர்மா பிராந்தியத்தில் பாங்காக்—சிங்கப்பூர்—மெர்குயீ கடல்மார்க்க சப்ளை வழியுடன் தொடர்பு ஏற்படுத்திவரும் பாங்காக்—சிங்கப்பூர் இருப்புப் பாதையையும் துறைமுகங்களையும் வங்காளத்திலுள்ள துறைமுகங்களிலிருந்து வெகு தூரம் தெற்கே சென்று தாக்கிய பிரிடிஷ் விமானப் படையைச்சேர்ந்த லிபரேடர் விமானங்களுக்கு யாதொரு எதிர்ப்பும் இல்லை. ரெங்கூன் தளத்திலிருந்து ஸியாம் வளைகுடாவிலுள்ள கப்பல்களைத் தாக்கிய ஸண்டர்லாந்து விமானங்கள் யாதொரு ஜப்பானியச் சண்டை விமானத்தையும் காணவில்லை. பர்மாவில் யாதொரு ஜப்பானிய விமானமும் கிடையாது.

ஜப்பான் காலத்தை எதிர் பார்த்து நிற்கவில்லை. கைவசமுள்ள குறைவான வலிமையை அது சிறந்த முறையில் உபயோகித்து வருகிறது. பலஹீன மேற்பட்டதற்கு பல காரணங்கள் உண்டு. ஜப்பானை B-29 விமானங்கள் தினசரி தாக்கி நொருக்கி வருகின்றன. சிறந்த விமான தளமாக இருந்த லூசானும், ஆகினுவாவும், ஐவோஜிமாவும் போய்விட்டன. அந்தப் பிராந்தியங்களிலிருந்து யாதொரு விதமான உதவியும் கிடைக்காது. 1942-ம் வருஷத்தில் மூன்று மாதங்களில் கபளீகரித்த ஸியாம், மலேயா, சுமாத்ராவில் ஜப்பான் வேறு வழியின்றி போர் புரியவேண்டியதுதான். தென் கிழக்கு ஆசியாவிலுள்ள எதிரியின் விமானப் படைகள் துணிக்கப்படுகின்றன. சென்ற வருஷத்திலும் 1945-ம் வருஷ ஆரம்பத்திலும் அமெரிக்கப் படைகள் பஸிபிக்கிலுள்ள எதிரியின் விமான தற்காப்புகளை அழித்தார்கள் அல்லது கைப்பற்றி விட்டார்கள். ஜப்பான் அதன் பின் உள்நாட்டு தற்காப்பு வட்டாரத்திற்குள் பின் வாங்கிற்று. சைனுவில் எதிரி விமானங்கள் முக்கியமாக விமான தளங்களைத் தாக்கின. ஆகிலும் வருஷ முடிவில் சைனுவில் சேனையையும் விமான பலத்தையும் சேமித்து வைப்பதுதான் எதிரியின் தந்திரம் என்று புலப்பட்டது. தென் கிழக்கு ஆசியா சமுத்திரங்களில் கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் மலாக்கா ஜலசந்தி, மலேயாவின் மேற்குக் கரை, ஸியாம், இந்தோ சைனுவுக்கு அப்பாலிலுள்ள கப்பற்படைகளை ரோந்து செய்து வந்தன.

கடற்படையைச் சேர்ந்த விமானங்கள் பஸிபிக்கில் அநேக விமான தளங்களை அமைத்தது. விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களைவிட கடல் விமானங்கள் தரை தளங்களை ஆதரித்துவந்தனவென்பது குறிப்பிடத்தக்கது. விமானந்தாங்கிகள் விமானம் ஏற்றிச் செல்லத்தான் பிரயோஜனமுள்ளவையென்றும் தாக்குவதற்கு உபயோகமற்றவையென்றும் கடல் விமானங்கள் கருதின. ஜப்பானின் வாசற்படிக்கு அமெரிக்கா துரிதமாக முன்னேறி விட்டதினால் விமானங்களை எடுத்துச் செல்லுவதற்கு தளங்கள் குறைவுபட்டு விட்டன. மேலும் சப்ளைகளை அனுப்புவதற்கு விமானந்தாங்கிகளும் குறைவாக இருக்கின்றன.

தென் கிழக்கு ஆசியாவில் மூன்று வருஷ காலமாக பிரிடிஷ், ருஷ்ய விமானப் படைக்குப் பெரிய விரோதியாக இருந்த ஜப்பானிய விமானப் படை எப்பொழுதும் மிகுந்த சலன சக்தி பெற்றிருந்தது. தாக்குதலுக்கு ஸ்தானங்களை அமைக்கும் அதன் திட்டமும், சலனமற்ற தரைப் படைகளின் உதவி பெற்ற, சுலபமாகத் திருத்தியமைக்கப்படக்கூடிய போர் விமானப் படையும் மிகவும் திறமையுள்ளதாக இருந்தது. ஆகையால் அந்த விமானப் படை இன்னும் சக்தி பெற்றிருக்கிறது. ஆகிலும் அதன் சக்தியை மூன்று அம்சங்கள் குலைத்துவருகின்றன. முதலாவதாக, பர்மாவிலுள்ள முன்னேறித் தாக்கும் தளங்களையும் மற்ற கேந்திர ஸ்தானங்களையும் எதிரி இழந்துவிட்டான். இரண்டாவதாக, நெடுந்தூரம் செல்லும் நேசதேச சண்டை விமானங்கள் பாங்காக் போன்ற பத்திரமான உள்நாட்டு பிரதேசங்களிலுள்ள தளங்களையும் அதற்கு அப்பாலிலுள்ள ஸ்தானங்களையும் தாத்காலிகமாக நொருக்கிவிடும். மூன்றாவதாக, எதிரி வசம் பாக்கியுள்ள தரை, கடல் மார்க்கங்களும் இப்பொழுது விமானங்களால் பலமாகத் தாக்கப்படுகின்றன.

மூன்றாவது அம்சம்தான் மிகவும் முக்கியத்வமுள்ளது. இந்த பிராந்தியத்தில் எதிரியின் விமான பலம் நன்றாய் பரவலாக வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் குறைவாகவுள்ள விமானப் படை ஒரு விசாலமான பிரதேசத்தைத் தற்காப்பு செய்யவேண்டியிருந்தது. விமானப் படை அநேக இடங்களில் வைக்கப்பட்டிருப்பதினால் அந்தந்த இடங்களுக்கு சப்ளைகள் கிருதியாகப் போகவேண்டும். சப்ளை மார்க்கங்களைத் துண்டித்துவிட்டால் விமானப் படை ஆகாரங்கு துணிக்கப்பட்டுவிடும்.

இந்த திட்டத்தை இப்பொழுது மாற்ற முடியாதென்பதுதான் ஜப்பானியர்களுக்கு சங்கடத்தை விளைவிக்கிறது. பூகோள அமைப்பு படைகளை பல இடங்களில் வைத்து இருக்கும்படியான நிர்ப்பந்தத்தை உண்டுபண்ணியிருக்கிறது. பசிபிக்கில் ஏற்பட்ட போரின் முன்னேற்றம் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள எதிரியின் விமானப் படை தந்திரத்தை பாதித்துவிட்டது. எதிரியின் பிரகிருத அசௌகரியமான நிலைமைக்கு தென் கிழக்கு ஆசியா விமானப்படை கமாண்டைச் சேர்ந்த நேசதேச விமானப் படையும் மிகவும் முக்கியமான பங்கெடுத்துக்கொண்டது.

சென்ற வருஷம் மார்ச்சு மாதத்தில் இம்பால் கோஹிமா பிராந்தியத்தில் போர் துவங்கியபொழுது ஜப்பானியர்கள் அவர்களுடைய விமானப் படையைத் திருத்தியமைத்துக் கொண்டார்கள். அவர்கள் மத்திய பர்மாவிலுள்ள உதவி போர் விமான தளங்கள் வரையில் வெடி விமானங்களையும் சண்டை விமானங்களையும் அனுப்பியிருந்தார்கள். இது அசாதாரணமாகயிருந்தாலும் இது நேசதேச கிழக்கு விமானப் படைக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. மார்ச்சு மாதத்தில் 2 நாட்களுக்குள் இந்தப் போரில் இதுவரையில் தோன்றாத நெடுந்தூரம் செல்லும் சண்டை விமானங்களான P. 51 மஸ்டாங்குகளும் B. 25 மிச்சல்களும் ஷ்வீபோ, ஆன்பாக், அனிஸாகான் முதலிய இடங்களில் 46 எதிரி விமானங்களை அழித்துவிட்டன.

ஜப்பானியர்கள் படைகளை தூக்குத் தூக்காக அமைத்தார்கள். ஒரு வாரத்துக்குப் பின் ஷ்வீபோவில் பின்னும் 15 விமானங்கள் அழிக்கப்பட்டன. மார்ச்சு 27-ம் தேதியன்று சண்டை விமானங்களின் துணைக்காவல் கொண்ட நடுத்தர வெடி விமானங்கள் டிக்பாயைத் தாக்கமுயன்று துரத்தியடிக்கப்பட்டன. 21 வெடி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. மார்ச்சு மாதத்தில் மட்டும் 119 எதிரி விமானங்கள் அழிக்கப்பட்டன. இருப்பை கவனிக்கும் பொழுது எந்த விமானப் படையும் இந்த நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது.

பருவ காலம் துவங்கியவுடன் எதிரியின் விமானப் படைகள் பின் அணி பிராந்தியங்களுக்குப் பின் வாங்கின. நேசதேசத்தார்கள் முன்னேறி வந்ததினால் கைவசமிருந்த எஞ்சிய சண்டை விமானங்களின் பெரும்பாகம் பர்மாவிலேயே வைக்கப்பட்டன. அக்டோபர் மாதத்தில் நெடுந்தூரம் செல்லும் சண்டை விமானங்கள் ரெங்கூனுக்குச் சென்று இரண்டு நாட்களில் 16 விமானங்களை அழித்தன. பர்மாவில் சிறந்ததாக உள்ள ரெங்கூன் விமான தளமும் நிலைத்து நிற்காது என்று அவைகள் ருஜுச்செய்தன. ஐந்து மாதங்களுக்குப் பின் பாங்காக் தாக்கப்பட்டது.

பர்மாவிலுள்ள ஜப்பானிய விமானப் படையின் முதுகெலும்பு முறிபட்டுவிட்டது. ஜூன் மாதம் 1-ம் தேதியன்று அமெரிக்க விமானப் படை கிழக்கு விமானப் படை கமாண்டிலிருந்து பிரிக்கப்பட்டு கலைக்கப்பட்டது. அதன் விமானிகளும் அந்த ஸ்தாபனமும் வரப்போகும் சில மாதங்களில் ஜப்பானை மற்ற இடங்களில் தாக்கும் நேசதேச விமானப் படை சக்தியை அதிகரித்து விடுவார்கள். தென் கிழக்கு ஆசியா விமான நடவடிக்கையை இப்பொழுது பிரிடிஷ் விமானப் படை ஏகதேசத்தில் நடத்திவருகிறது. ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதால் இறுதி நடவடிக்கைக்காக அந்தப் படை பலப்படுத்தப்படுகிறது.



# விமானமூலம் ஜப்பான் சுலமாகத் தாக்கப்படலாம்.

## நேசதேச விமான நடவடிக்கை முறை.

ஸ்க்ருடேடர்.

(ஸன்டே டைம்ஸ் பத்திரிகை).

ஜப்பானியத் தீவுகளை தாக்கும் விமான நடவடிக்கை உச்ச நிலைமையை அடைந்துவிட்டது.

இந்த நான்கு தீவுகளின் பரப்பு பிரிடிஷ் தீவுகளைவிட அதிகமென்றாலும் அதில் சாகுபடி செய்யக்கூடிய இடம் குறைவானதுதான். விரிவாகச் சொன்னால், உள்நாட்டுப் பிரதேசம் மலைப்பாங்கானது, மனித சஞ்சாரமற்றது. கடற்கரையோரமான பிரதேசங்கள்தான் சாகுபடிக்கு லாயக்குள்ளவைகள்.

ஐரோப்பிய முறைப்படி தொழிற்சாலை அபிவிருத்திகள் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டன. ஏனெனில் நிலக்கரி போன்ற ஜப்பானுக்குத் தேவையான தாவரப் பொருள்கள் கடல் மார்க்கமாக வரவேண்டும். ஆகையால் தெற்கிலுள்ள மூன்று தீவுகளில் உள்ள கடற்கரையோரமாக உள்ள துறைமுகங்களைச் சுற்றி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இதன் விளைவு யாதெனில் இப்பொழுது கையாளப்படும் நடவடிக்கை மூலம் ஜப்பான் சுலமாகத் தாக்கப்படலாம். இவ்விதம் தாக்கப்படுவதற்கு இன்னும் சில அம்சங்களும் இருக்கின்றன. கடல் மூலமாக ஜப்பானுக்கு சாமான்கள் இறக்குமதி செய்யப்படவேண்டும். உள்நாட்டில் சாமான்களை விநியோகம் செய்வதற்கும் அது கடற்கரையோரமாகச் செல்லும் கப்பலை நம்பியிருக்கிறது. கிழக்குக் கடற்கரையோரமாக உள்ள பெரிய நகரங்களும் ஒன்றோடொன்று கடல் மூலமாக வியாபாரம் நடத்திவருகின்றன.

அரிசிக்கு அடுத்தபடியாக தேசிய உணவுப் பொருளில் மீன் மிகவும் முக்கியத்வமுள்ளது. மீனை சம்பாதிக்க பெரிய மீன் பிடிக்கும் கப்பல்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆகிலும் நேசதேசத்தாரின் மகத்தான விமான நடிவடிக்கை கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்களையும், மீன் பிடிக்கும் கப்பல்களையும் முற்றுகை செய்து அழித்துவிடும்.

நமது பலமான நடவடிக்கைக்கு ஜப்பான் எவ்விதமான எதிர்ப்புப் போரை நடத்திவருகிறது? விமான எதிர்ப்பு பீரங்கிகளை உபயோகிப்பதைத்தவிர ஜப்பான் ஒன்றும் செய்யவில்லை. இதற்கு என்ன காரணம்? ஜப்பானிடம் சண்டை விமானங்கள் குறைவு என்றும் அவைகள் புறப்படுவதற்கு விமானங்கள் இல்லையென்றும் சொல்லுவதற்கில்லை. ஆனால் நேசதேசத்தார்கள் அவ்விரண்டையும் பலஹீனப்படுத்திவருகிறார்கள். ஜப்பானியர்களின் எதிர்ப்பு குறைவாக இருந்துவந்தால் அவர்கள் சமாளித்து நிற்கும் சக்தியை மேன்மேலும் இழந்து விடுவார்கள்.

எண்ணெய் குறைவுதான் சகஜமான காரணமாக இருக்கலாமென்று தோன்றுகிறது. ஜப்பானிலேயே சிறிது எண்ணெய் எடுக்கப்படுகிறது. பெரும்பாகம் போர்னியோவிலிருந்தும் சுமாத்ராவிலிருந்தும் கொண்டுவரப்படவேண்டும். தெற்குக் கடல் மார்க்கங்கள் இப்பொழுது ஜப்பானியக் கப்பல்களுக்கு மூடப்பட்டுவிட்டன. ஜப்பானிடம் எண்ணெய் கையிருப்பு அதிகமிருந்தாலும் படையெடுப்பு ஏற்படும்பொழுது சேனைகளுக்காக அதன் பெரும்பாகம் கையிருப்பில் வைக்கப்படவேண்டும்.

நேசதேச விமான நடவடிக்கையின் மாதிரி ஸ்பஷ்டமானது. இதாலியும், பிரான்ஸும், ஜெர்மனியும் ஒன்றன்பின் ஒன்றாக அதை வெளிப்படுத்தியிருக்கின்றன. இது படையெடுப்புக்கு முற்போக்கான நடவடிக்கை.

உண்மையை மறைக்கவேண்டிய அவசியம் நின்றுவிட்டதால் கடற்தளபதி நிமிட்ஸ் இந்த விஷயத்தைப் பகிரங்கப்படுத்திவிட்டார். ஆனால் அவர் தேதி விவரங்களைக் குறிப்பிடவில்லை. விமான நடவடிக்கை எவ்வளவுகாலம் நடக்கும் என்றும் எதிரிகள் ஊகிக்கவேண்டியிருக்கிறது. இந்த நடவடிக்கை பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் D தினத்துக்குமுன் மூன்று மாதங்கள் நிலைத்திருந்தது. ஜப்பான் சம்பந்தப்பட்ட போரில் கால அளவு சீதோஷ்ண ஸ்திதியைப் பொறுத்தது. இந்து மகாசமுத்திரத்தில் காணப்படும் பருவகாலத்துக்கும் ஜப்பானுக்கும் வெகுதூரம் என்றாலும் பூகோள சாஸ்திரிகள் ஜப்பான் பருவகாலமுள்ள நாடென்று சொல்லி இருக்கிறார்கள். ஏனெனில் இந்தியா, தெற்கு பர்மா, சைனாவின் சில பாகங்களைப்போல ஜப்பானும் பருவகால மழையைக் கொண்டு சாகுபடிசெய்து ஜனங்களைப் போஷித்து

வருகிறது. பருவகால மழையும் வருஷத்தின் குறிப்பான காலங்களில் மிகுதியாக வர்ஷிக்கிறது.

ஜப்பானில் பிரிடனைப் போல வருஷாவருஷம் சராசரி இரண்டு மடங்கு மழை பெய்கிறது. ஆனால் அது 3 தருதிகளில் மிகுதியாகப் பெய்கின்றது. ஒன்று ஜூலை மாத ஆரம்பத்தில் முடிந்துவிடும். அதற்குப்பின் ஜூலை மத்தியிலிருந்து ஆகஸ்டு மத்திவரைக்கும் உஷ்ணந்தரேகைக்குரிய கடும்வெய்யில் அடிக்கும். அதன்பின் அதிவர்ஷமுள்ள மூன்றாவது வருஷாகாலம் துவங்கும். அது அக்டோபர் மாதம் ஆரம்பம் வரையில் நிலைத்திருக்கும். அதன் பின் நான்கு மாதங்கள் வரையில் அதிக வரகூடி ஏற்படும்.

இந்த விஷயங்கள் யுத்த தந்திரத்துக்கு அநுகூலமானவை என்பது ஸ்பஷ்டமானது.

இந்த மதிப்புகள் ஜப்பானுக்கு அன்வயித்தாலும் இவைபோன்ற மதிப்புகள் மற்ற யுத்த பிராந்தியங்களையும் பாதிக்கும். போர்னியோ, ஜாவா, சுமத்ரா, மலேயா, என்ற இடங்களில் தான் மழை வருஷம் பூராவும் பெய்கிறது. ஆகையால் காலத்தை நிர்ணயிப்பது அதிக முக்கியத்வம் பொருந்தியதல்ல.

---

## பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த ராபின்ஸன் குருஸோக்கள்.

### உஷ்ணந்தரேகைக்குட்பட்ட தீவுகளில் வாழ்க்கை.

*விங் கமாண்டர் L. V. பிரேசர்.*

தூரக்கிழக்கியப்போரின் மூன்று வருஷ ரகசியம் இப்பொழுது வெளியாகிவிட்டது. அதாவது, பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த கடல் விமானங்கள் மடகாஸ்கருக்கும் சிலோனுக்கும் மத்தியிலுள்ள தீவுகளிலிருந்து நடமாடி வருகின்றனவாம். பெரிய சமுத்திரத்தில் ஒரு புள்ளிபோல் தோன்றக்கூடிய அநேக தீவுகள் உள்ள இந்த உஷ்ணந்தரேகை தளங்களிலிருந்து கடாலினுக்களும் ஸண்டர்லாந்துகளும் வடக்கு அட்லாண்டிக்கைப்போல இரண்டரை மடங்குள்ள இந்து மகா சமுத்திரத்தில் ரோந்து வேலை செய்து வருகின்றன.

ஜப்பானியப் போரில் இந்தக் கடல் மார்க்கம் முக்கியமான போக்குவரத்து மார்க்கமாக இருந்தது. இந்த சமுத்திரத்தில் நீர்மூழ்கி நடவடிக்கைகள் 1913-ம் வருஷத்திய அட்லாண்டிக் கடல் போரின் உன்னத ஸ்திதியை அடையவில்லை. ஆகிலும் நன்னம்பிக்கை முனைக்கும் இந்தியாவுக்கும் மத்தியில் ஜப்பானிய, ஜெர்மன் யூ படகு கமாண்டர்களுக்கு சிறந்த வேட்டைகள் இருந்தன. ஏனெனில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் அதிக ஒற்றுமை இல்லாத போதிலும், இரு தேசங்களும் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிப்போகும் கப்பல்களை அழிக்கக் கவலை கொண்டிருந்தன.

நேசதேசக் கப்பல்கள் நடமாடுவதற்கு மத்தியதரைக் கடலும் பத்திரமாக இல்லை. வடக்கு ஆப்பிரிக்கப் போருக்கும், தென் கிழக்கு ஆசியா போருக்குமான சாமான்களும், படைகளும், தெற்கு ஆப்பிரிக்கா மார்க்கமாகச் சென்றன. இந்து மகா சமுத்திரத்தின் மேற்கு வழிகளில் ஏற்பட்ட அபாயத்தை சமாளிக்க 1,000 மைல்கள் தாண்டியும் ஆப்பிரிக்காவுக்கும், தென்கிழக்கு ஆசியாவுக்கும், மத்தியிலுள்ள ஸெசெலிஸ் தீவுகள் 1912-ம் வருஷ ஆரம்பத்திலிருந்து முன்னணி கடல் விமான தளமாக உபயோகிக்கப்பட்டது.

கடலின் மற்றொரு பக்கத்தில் அபாயம் ஜப்பானிடமிருந்துதான் முக்கியமாக ஏற்பட்டது. சிங்கப்பூர் வீழ்ச்சி பெற்றது. எதிரி மேற்குப் பக்கம் குவிந்துவிட்டான். சிலோனுக்கு வெளியே உள்ள தளங்கள் முகான்மையை அடைந்துவிட்டன. அப்பொழுதும் உஷ்ணந்தரேகைக்குட்பட்ட தீவுகள்தான் ஜப்பானை சமாளித்தன. சிலோனுக்கு தென் மேற்கில் 300, 400 மைல்களுக்கு இடையே மால்டைவ் தீவுகளிருக்கின்றன. அதற்குத் தெற்கில் 500 மைல்களில் டிகோ கார்சியாத் தீவுகள் இருக்கின்றன. இயற்கையான தளமான இந்தத் தீவுகள் இந்து மகா சமுத்திரத்தில் ஏற்பட்ட நீர்மூழ்கி அபாயத்தை நீக்க முக்கிய ஸ்தானங்களாகின.

மூன்று வருஷங்களாக இந்திய கடல் விமானப் படையைச் சேர்ந்த கடல் விமானங்கள் மிலியன்கள் கணக்கான சமுத்திரங்களில் மூவகைப்பட்ட வேலையில் ரோந்து செய்துவந்தன. எதிரி நீர்மூழ்கிகளைக் கண்டுபிடித்து அவற்றைத் தாக்குவது, எதிரி கப்பல்களைக் கண்டுபிடித்து அழிப்பது, தூரக்கிழக்குப் போருக்கு உதவிப் படைகளைக் கொண்டுபோகும் நேச



தேசக் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரிவது. அவைகள் மிகவும் உபயோகமுள்ளவைகள். ஏனெனில் ஐரோப்பிய, ஆப்பிரிக்காப் போர்முனையிலிருந்து படைகளைக் கொஞ்சம்கூட அனுப்ப முடியாது.

இது ருசியற்ற, பகட்டில்லாத போர் என்று கடல் விமானப்படையினர்களில் அநேகர் நினைத்தார்கள். எதிரிக் கப்பல்கள் அதிகமாகக் காணப்படவில்லை. இதற்கு இந்து மகா சமுத்திரத்தில் கடல் விமானங்கள் இரவு பகலாக வெற்றிகரமாக ரோந்து செய்ததுதான் காரணமாகும். அவைகளின் ஜாக்கிரதையும் பிரிடிஷ் கடற்படையின் ஜாக்கிரதையும்தான் இந்த சமுத்திரங்களை எதிரியின் கொள்ளைக் கப்பல்களுக்கு சாவுப் பொறிபோல் செய்து விட்டன.

ரோந்து நடவடிக்கைகள் பகட்டான நடவடிக்கையாக இல்லாத போதிலும் அவைகளில் கடல் விமானங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். பளபளப்பான கடலிலிருந்து பிரதிபிம்பப்படுத்தப்படும் கடுமையான சூரிய வெளிச்சம் சிறிய லக்ஷியங்களைப் பார்ப்பதையும்கூட சிரம சாத்யமாகச் செய்துவிட்டது. ரோந்து நடவடிக்கை கடலில் வெகு தூரம் செல்ல வேண்டியிருந்ததால் படகுகளை ஓட்டுவதற்கு அதிக சாமர்த்தியம் தேவைப்படும்.

மேலும் கடல் விமானங்கள் விசாலமான சமுத்திரத்தில் குண்டூசி முனைபோன்ற தீவு தளங்களுக்குச் செல்லும்பொழுது அதிக சிரமம் ஏற்பட்டது. மால்டைவிலுள்ள ஒரு ஸ்டேஷன், ஒன்று 2 மைல்கள் நீளமும் கால் மைல் அகலமும், மற்றொன்று அரை மைல் நீளமும், கால் மைல் அகலமும் உள்ள இரண்டு தீவுகளிலிருக்கிறது. டிகோ கார்சியா குதிரை லாடம் போன்றது, 14 மைல்கள் நீளமுள்ளது. சராசரி கால் மைல் அகலமுள்ளது.

அநேக மணி நேரம் பறந்து சென்றபின் இந்த இடங்களில் இறங்குவதென்றால் அதற்கு விமானத்தை நடத்தும் சாமர்த்தியம் மிகுதியாக இருக்கவேண்டும். தீவு தளங்களை அடைந்தவுடன் பொறுப்பு விமானிக்கு ஏற்பட்டுவிடும். வளைகுடாக்களிலுள்ள ஜலத்தில் தெளிவும் அமைதியும் விமானிகளுக்கு மிகுதியான கஷ்டங்களை உண்டுபண்ணும். ஜலம் தெளிவாக இருப்பதினால் 30 அடி ஆழத்திலுள்ள பவழக்கொடிகளும், ஆகாயத்திலிருந்து பார்க்கும் பொழுது மேல் மட்டத்திலிருப்பதாகத் தோன்றும். அனுபவம் வாய்ந்த விமானிகளும் அநேகம் தடவை சுற்றிவந்து, போதுமான ஆழம் இருக்கிறதென்று கண்டுபிடித்தபின்தான் தளத்திலிறங்குவார்கள்.

இந்தத் தீவுகளிலுள்ள தரை வேலைக்காரர்கள் ராபின்ஸன் குருஸோவைப்போல் விசித்திரமாக வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். தனித்திருப்பவர்கள் போலும் சிலோனிலும் இந்தியாவிலுள்ள ஏற்பாடான வசதிகளுடனும் அவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஒரு சிறிய கோஷ்டியாக இருந்தபோதிலும் எல்லா விஷயங்களிலும் பிறர் தயவை எதிர்பார்க்கிறவர்களில்லை.

ஸெசலீஸில் இரண்டு W. A. A. F. ஸைபர் ஆபீஸர்கள் இருக்கிறார்கள். அங்கு இருப்பவர்கள் நிம்மதியாக வசித்து வருவதினால், சிலர் குறிப்பிட்ட ஆறு மாத வேலைக்குப்பின்னும் அங்கேயே தங்கியிருக்கத் தானாகவே பிரியப்படுகிறார்கள். சில சமயங்களில் சுறுசுறுப்பாக வேலை செய்தும் மற்ற சமயங்களில், சூரியன், கடல், காற்று முதலிய சிரமங்களுக்குட்பட்டு பவழக்கொடிகளுள்ள சமுத்திரங்களில் நடமாடுவதுமாக அவர்கள் வாழ்நாளைக் கழிக்கிறார்கள்.

கடாலினுக்களும், ஸண்டர்லாந்துகளும் குறிப்பிட்ட கால அட்டவணைப்படி வருவதில்லை. அவ்விதம் கடல் விமானங்கள் வரும்பொழுது தரை வேலைக்காரர்கள் அவைகளில் எண்ணெய், வெடி குண்டுகள், வெடி மருந்து, நீர்மூழ்கிகளைத் தாக்கும் வெடி குண்டுகள் முதலியவற்றை அமைப்பார்கள். அடி முதல் நுனி வரையில் அதைப் பரிசோதித்துப் பார்ப்பார்கள். ஏனெனில் அவைகளும் சண்டை விமானங்கள்தான். விமானங்கள் தபால்களையும், ஆரஞ்சுகளையும், புதிய காய்கறிகளையும் கொண்டுவரும். கடல் விமானம் மறுபடியும் சென்றவுடன் தீவிலுள்ளவர்கள் கடிதங்களைப் படிப்பார்கள், அல்லது பொழுது போக்குக்காக, கடலில் நீந்துவதும், மீன் பிடிப்பதும், வளை குடாவில் தெளிவான ஜலத்தில் காணப்படும் பிரம்மாண்டமான கடல் ஓடுகளுக்காக தண்ணீருக்குள் மூழ்குவதும், கால் பந்து விளையாடுவதும், தோட்டப் பயிர் சாகுபடி செய்வதுமாக ஈடுபட்டிருப்பார்கள்.

தீவு தளங்களில் நல்லதும் கெட்டதும் இருக்கின்றன. அசௌகரியங்கள் மிகுதியாக இருந்தாலும் அவற்றை சமாளிக்க நேச தேச விமானிகள் தயாராக இருக்கிறார்கள். இந்தத் தீவுகள்தான் தூரக்கிழக்குப் போரின் வெற்றிக்கு பாய்ச்சல் ஸ்தலங்கள் என்று அவர்கள் அறிவார்கள்.

## அற்புதமான, ஆனால் கோரமான நிகழ்ச்சி.

### பிரிடிஷ் சாமான் கப்பல் நஷ்டங்கள்.

(டெயிலி மிரர்).

யுத்த காலத்தில் சாமான் கப்பற்படை மூன்றில் ஒரு பங்கு வேலைக்காரர்களை இழந்தது. 30,000-க்கு மேற்பட்ட மாலுமிகள் கடலில் மூழ்கிக்கிடக்கிறார்கள். மற்ற எந்த போர்ப் படையையும்விட இங்கு நஷ்டம் அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது. இது அற்புதமான ஆனால் கோரமான நிகழ்ச்சியாகும். 1940-ம் வருஷத்தில் அகில பிரிட்டனுக்கும் உலகத்துக்கும் அபாயம் ஏற்பட்டபொழுது, கடற்படை வேலைக்காரர்கள் வீரர்களின் கண்யத்துடன் தங்களுடைய வேலையைச்செய்ய முன் வந்தார்கள். புதுபடகு அபாயங்களை அவர்கள் அறிவார்கள். ஆகிலும் இவ்வளவு கடுமையான நடவடிக்கையையும், அதை குறைவான ரக்ஷணையுடன் சமாளிக்கவேண்டுமென்பதையும் அவர்கள் அறிந்திலர். அவர்கள் கலக்கமடையாமல் வேலை செய்து வந்தார்கள். விஞ்ஞான சாஸ்திரிகள் காந்தக்கண்ணி அபாயங்களை நிவர்த்திசெய்து வந்தார்கள். கடலிலும் துறைமுகங்களிலும் அவர்கள் வெடி விமானங்களின் வஞ்சத்தை அனுபவித்தார்கள். சதாகாலமும் பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்கும் சாம்ராஜ்ய நாடுகளுக்கும் சென்ற போக்குவரத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அவர்கள் நம்முடைய ஜனங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் பேருதவி செய்து வந்தார்கள். நம்முடைய வலிமையையும் அவர்கள் அதிகரித்து வந்தார்கள்.

நாம் கடலின் உதவிகொண்டு ஜீவித்திருக்கிறோம். அதன் அபாயங்களை வெற்றிகரமாக நீக்கி நாம் வசித்து வருகிறோம். கடற்படை ஆதிக்கம்தான் நமது நாட்டையும் நமது சாம்ராஜ்யத்தையும் பரிபாலித்து வருகிறது. நமது கப்பல்களும் அவர்கள் நடமாடும் நிலைமையும் மாலுமிகளின் குணநிசயத்துக்குப் பொருத்தமாகயிருக்கும். இதுதான் மூழ்கிக்கிடக்கும் மாலுமிகள் நமக்கு விடுத்துள்ள செய்தி.

---

### புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 259. (6-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6- 8-45 | தென்னதிரயன்பட்டி | ... மாலை 7.00 | 9- 8-45 | வாளரமாணிக்கம் | ... மாலை 7.00 |
| ,, | விசலூர் | ... ,, 7.30 | ,, | ஏம்பல் | ... ,, 7.30 |
| 7- 8-45 | மழையூர் | ... ,, 7.00 | 10- 8-45 | விராலிமலை | ... ,, 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, 7.30 | ,, | பொருவாய் | ... ,, 7.30 |
| 8- 8-45 | பெருமாநாடு | ... ,, 7.00 | 11- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | புல்வயல் | ... ,, 7.30 | 12- 8-45 | கீரப்பழனி | ... ,, 7.00 |
| | | | ,, | ஆதூர் | ... ,, 7.30 |

பிரஸங்கம் 260 (1-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13- 8-45 | புத்தாம்பூர் | ... மாலை 7.00 | 16- 8-45 | கல்லூர் | ... மாலை 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, 7.30 | ,, | மாத்தூர் | ... ,, 7.30 |
| 14- 8-45 | கொன்னையூர் | ... ,, 7.00 | 17- 8-45 | பள்ளிவாசல் | ... ,, 7.00 |
| ,, | மேலவேகுப்பட்டி | ... ,, 7.30 | ,, | பில்லமங்கலம் | ... ,, 7.30 |
| 15- 8-45 | கச்சாத்தபட்டி | ... ,, 7.00 | 18- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | விராச்சிலை | ... ,, 7.30 | 19- 8-45 | கீரனூர் | ... ,, 7.00 |
| | | | ,, | காஞ்சூர் | ... ,, 7.30 |

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 7— 8—45 | ராமச்சந்திரபுரம். | 14— 8—45 | வடகாடு. |
| 8— 8—45 | கீழாநிலை-புதுப்பட்டி. | 15— 8—45 | கரம்பக்குடி. |
| 9— 8—45 | கீழாநிலை. | 16— 8—45 | குழிபிறை. |
| 10— 8—45 | புதுக்கோட்டை. | 17— 8—45 | புதுக்கோட்டை. |
| 11— 8—45 | பொன்னமராவதி. | 18— 8—45 | வெட்டம்வீதி. |
| 12— 8—45 | ஏம்பல். | 19— 8—45 | நித்தான்வீதி. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—8-8-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம்ஸு ஆகஸ்டுமீ 13உ திங்கட்கிழமை [ந. 260


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLX.

## ஜப்பானின் சரணாகதி கோரிக்கை.

### நேசநேச உயர்தர கமாண்டரின் அமுலுக்கு ஜப்பானிய மன்னர் உட்பட்டால் கோரிக்கையை அங்கீகாரம் செய்வதாக நேசநேச அறிக்கை.

"உலக அமைதியை நிலைநாட்டுவதில் எப்போதும் நாட்டம் கொண்டு யுத்தத்தைச் சீக்கிரத்தில் நிறுத்தி மானிட கோஷ்டியின் நாசத்தைத்தடுக்க ஆவலாக இருக்கும் சக்ரவர்த்தியின் ஆக்ஞைப் பிரகாரம் சில வாரங்களுக்குமுன் ஜப்பானிய ஸர்க்கார் எதிரி நாடுகளுடன் மத்தியஸ்தம் செய்து அமைதி நிலைபெறுவதற்கு உதவவேண்டும் என்று அப்பொழுது நடுநிலைமையிலிருந்து வந்த ருஷ்ய ஸர்க்காரைக் கேட்டுக் கொண்டது.

இந்த சமாதான முயற்சிகள் துரதிருஷ்ட வசமாகப் பயன்படவில்லை யாதலால் உலக அமைதியை மறுபடியும் நிலைநாட்டவும் யுத்தத்தினால் ஏற்படும் அளவற்ற சிரமங்களை சீக்கிரத்தில் அறவே ஒழிக்கவும் ஆவலாக இருக்கும் சக்ரவர்த்தின் ஆக்ஞைப் பிரகாரம் ஜப்பானிய ஸர்க்கார் பின்கண்ட முடிவுகளைச் செய்திருக்கிறது.

ஜூலை மாதம் 26-ம் தேதியன்று பாட்ஸ்டாமில் அமெரிக்க, பிரிடிஷ், சீனத் தலைவர்களும், பின்பு ருஷ்ய நிர்வாகமும் ஆமோதித்து, வெளியிட்ட பிரகடனத்துக்கு இணங்க ஜப்பானிய ஸர்க்கார் சம்மதிக்கிறது. ஆனால் அது சக்ரவர்த்தியின் அதிகார உரிமைகளுக்குக் குந்தகம் இல்லாமல் இருக்கவேண்டும்.

இது அவசியமானது என்பதை ஜப்பானிய ஸர்க்கார் சுட்டிக்காட்டுவதுடன் இது விஷயமாக சீக்கிரத்தில் விளக்கம் வெளியாகும் எனவும் எதிர்பார்க்கிறது."

# வார யுத்தச் செய்திகள்.

## (A)-முக்கியமான சம்பவங்கள்.

3—8—45. (வெள்ளிக்கிழமை). மிஸ்டர் பெதிக் லாரன்ஸ் இந்தியா மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

6—8—45 (திங்கட்கிழமை). நேசதேசத்தார்கள் அணு குண்டுகளை பிரயோகிக்கிறார்கள்.

8—8—45 (புதன்கிழமை). ருஷ்யா 9—8—45 முதல் ஜப்பானுடன் போரை நடத்துவதாகச் சொல்லிவிட்டது.

9—8—45 (வியாழக்கிழமை). நேசதேசத்தார்கள் நாகாசாகி பேரில் இரண்டாவது அணு குண்டை வீசினார்கள்.

## (B)-செய்திச் சுருக்கம்.

ஆகஸ்டு 9-ம் தேதி முதல் ஜப்பானுடன் ருஷ்யா போரைத் துவக்கம் செய்துவிட்டது. செம்படை கிழக்கு ருஷ்யா மஞ்சூரிய எல்லையில் ஜப்பானியப்படையைத் தாக்கிற்று. ருஷ்ய விமானங்கள் வடக்கு மஞ்சூரியா, கொரியாவிலுள்ள சில இடங்கள் பேரில் வெடிகுண்டுகளை வீசின. ஜப்பானியர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள பதில் தாக்குதலைச் செய்து வருகிறார்கள்.

ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகாசாகி பேரில் அணு குண்டுகள் வீசப்பட்டது தான் இவ்வாரத்திய முக்கிய சம்பவம்.

விமான நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. நாகாசாகி, சாகாமி வளைகுடாவில் கப்பல்கள், உபி லிக்விபாக்ஷன் யந்திரசாலை, டோயோகாவாவிலுள்ள கடற்படை ஆயுதசாலை, கியூஷுவிலுள்ள யாவாடா.

சைனா.—ஹுனான்-குவாங்ஸி இருப்புப்பாதை வழியாக முன்னேறிவரும் சீனர்கள் ஹுனான் மாகாணத்திலுள்ள சின்ங்கையும், கியாங்ஸி மாகாணத்தின் தலைநகரமான நாஞ்சாங்குக்குத் தென்மேற்கில் 75 மைல்களிலுள்ள ஷாங்கோவையும், ஸன்ஷான், கிஷுயியையும் திரும்பி ஆக்கிரமித்தனர். ஷாங்கேயில் நேசதேச விமான நடவடிக்கை நடைபெறுகிறது.

பர்மா.—ரெங்கூன் மாண்டலே ரஸ்தாவுக்கும் ஸிட்டாங் நதிக்கும் மத்தியிலுள்ள ஜப்பானியர்கள் நேசதேசப் படைகளால் அழிக்கப்படுகிறார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**2—8—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—ஹாசிஓஜி (Hachioji,) டோயாமா (Toyama), நாகாகாமியோ (Nagaokamio). பெட்ரோலியம் ஸ்தலங்கள்.—காவாஸகி (Kawaski).

பர்மா (Burma).

எதிரித் துருப்புகள்.—பியூவின் கிழக்கு (Pyu).

**3—8—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள்.—நாகாஸாகி (Nagasaki).
இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).



பர்மா (Burma).

ஜப்பானியத்துருப்புகள் சேமிப்புகள்.—குன்ஷியக் (Kunzeikk).
ரயில்வேப் பாலம்.—அப்யா (Abya).

**4—8—45.** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

கூரங்கவெடி பாவுதல்.—ஜப்பானிய நீர்நிலைகள்.

பர்மா (Burma).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—நியாங்காஷி (Nyaungkashe).
இரண்டு எதிரி கடற்கரை ஸ்தலங்கள்.—ஸியாம் (Siam) வளைகுடா.
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ஸிட்டாங் (Sittang) நதிக்கரை.
ஜப்பானியக் கப்பல்கள்.—ஜிலாட் ஜாப் (Tjilat Jap) துறைமுகம்.

**5—8—45.** (ஞாயிற்றுக்கிழமை).

விமான நிலயம்.—டோக்கியோவிற்கருகில் (Tokyo).
இலக்குகள்.—தென்கிழக்கு கியுஷு (Kyushu).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—பிரான்பரி (Pranburi).

**6—8—45.** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான தளம்.—ஹிரோஷிமா (Hiroshima) (அடோமிக் குண்டு முதன் முதல் வீழ்த்தப்பட்டது).
தொடர்ச்சியான எண்ணெய்க்கிணறுகள் இதர ஸ்தலங்கள்.—ஹொன்ஷு (Honshu).

பர்மா (Burma).

தளவாடக் குவியல்களும்.—மோல்மீன் கிழக்கிலும் தென்மேற்கிலும்.
துருப்பு பிரதேசங்களும்.—ஸிட்டாங் (Sittang).
படகுகள்.—கிரா இஸ்த்மஸ் (Kra Isthmus).

**7—8—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

கடற்கரை தளம்.—டோயாகாவா (Toyakawa).

பர்மா (Burma).

விமான நிலயம்.—பென்கூலன் (Benkeelen).

**8—8—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**3—8—45.** (வெள்ளிக்கிழமை முதல் **9—8—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் ஏதும் இல்லை.

---

## யுத்தக் குறிப்புகள்.

**ருஷ்யா ஜப்பானுடன் போர் தொடுத்தது.** ஆகஸ்டு 9-ம் தேதியன்று ருஷ்யா ஜப்பானுடன் போர் தொடுத்தது. இதுவும் அணுகுண்டும் யுத்தப்போக்கில் புதிய கட்டத்தைத் துவக்கிவிட்டன.

ருஷ்யாவின் நடவடிக்கை எதிர்பார்க்கப்பட்டதுதான். முதல் முதலாக அது நடுநிலைமை ஒப்பந்தத்தை ரத்து செய்தது. இரண்டாவதாக ஜப்பான் ருஷ்யாவை மத்தியஸ்தம் செய்யும்படி வேண்டிக்கொண்டது என்ற வதந்தி பலமாகயிருந்தது. இந்த வேண்டுகோள் ஜப்பானிய சக்கரவர்த்தியிடமிருந்து வந்ததென்று ருஷ்யாவின் அயல் நாட்டு மந்திரியான மாலடோவ் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்.

ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் நல்லுறவு இல்லாத போதிலும், ருஷ்யா விஷயங்களை பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் ரிபர் செய்தது. நேசதேசத்தார்கள் பாட்ஸ்டாம் மகாநாட்டில் அவற்றை பரிசீலனைசெய்து, ஜுலை 26-ம் தேதியுள்ள இறுதி பிரகடனத்தை வெளியிட்டார்கள். அதில் ஜப்பானின் நிபந்தனையற்ற சரணாகதி ஷரத்துகள் வெளியிடப்பட்டிருந்தன.

ஜப்பான் இணங்கவில்லை. இந்நிலைமையில் மத்தியஸ்தம் செய்வது பிரயோஜனமில்லையென்று தெரிந்து, நேசதேசத்தாரின் அழைப்புக்கு இணங்க ருஷ்யா கீழ்த்திசை யுத்தத்தில் புகுந்தது. யுத்த நீடிப்பைக் குறைக்கவும், யுத்தத்தினால் சோர்வுற்று, நாசம் பெற்றிருக்கும்

உலகத்திற்கு சமாதானம் திரும்பிவரவும் ஜப்பானியர்கள் பூராவும் நிர்மூலமாகாதபடி காப்பாற்றப்படவும் இது தான் வழி. கடைசி எச்சரிக்கையாக நாலு வல்லரசுகளும் சேர்ந்து மற்றொரு இறுதி பிரகடனத்தை வெளியிடலாம்.

யுத்தம் தொடுப்பதாகச் சொன்ன உடன்காலத்தில் ருஷ்யா துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டது. ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி நடுராத்திரியில் ஐரோப்பாவில் ஜெர்மன் சேனையை அழித்த செம்படை எல்லையைத்தாண்டி வடக்கு மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் போரை நடத்திவருகின்றன. 200 மைல்கள் அவர்கள் முன்னேறிவிட்டார்கள். ஜப்பான் தற்காப்பு முறையில் பதில் தாக்குதல் செய்து வருகிறது. ஆகிலும் அவர்களை 50 சிறந்த ருஷ்ய டிவிஷன்கள் தாக்கி வருகின்றன. அவர்களுக்கு யூரல்மலைகளில் உற்பத்தியான யுத்த முஸ்தீப்புகள் உதவிசெய்து வருகின்றன. ருஷ்ய விமானப்படையும் ருஷ்ய கடற்படையும் போருக்குவந்துவிட்டன. பிரிடிஷ், அமெரிக்க கடற்படை, விமானப்படைகள் அவர்களுக்கு ஒத்தாசை செய்து வருகின்றன. மனகுடைத்துருப்புகள் ஜப்பானைப்பின் புறத்தில் தாக்குகின்றன. பசிபிக்போரின் பூராதிட்டமும் ருஷ்யாவின் ஒத்துழைப்பை எதிர்பார்த்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ருஷ்யா நல்ல சமயத்தில் யுத்தத்தில் புகுந்தது. இப்பொழுதுதான் மேற்கிலிருந்த பிரிடிஷ் அமெரிக்க சேனைகள், கடற்படைகள், விமானப்படைகள் கிழக்குக்கு அனுப்பப்படுகின்றன. ஜப்பானைச் சுற்றிவரும் வளையம் நெருங்கிவருகிறது. ஜப்பான் கடலிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் பலமாகத் தாக்கப்படுகிறது. அணுகுண்டுகள் வீசஆரம்பமாகிவிட்டது. ருஷ்யா போரில் இறங்கியதினால் வளையம் பூர்த்தியாகிவிட்டது. வடக்கிலுள்ள இடைவெளி மூடப்பட்டுவிட்டது. அங்குதான் ருஷ்யாவின் மிகவும் சக்திவாய்ந்ததும், டோக்கியோவிலிருந்து 600 மைல்கள் தூரத்திலும், ஆகினுவாவைவிட ஜப்பானுக்கு சமீபத்திலுமுள்ள விளாடிவாஸ்டாக் என்ற கடற்படை தளம் இருக்கிறது. ஜப்பானிலிருந்து துரத்தியடிக்கப்பட்டால் ஆசியா கண்டத்துக்குப்பின் வாங்கி அங்கு போரை நடத்துவதென்று ஜப்பான் நம்பியிருந்தது. இப்பொழுது அந்த சௌகரியமும் போய்விட்டது. பிரிடிஷ், அமெரிக்க, சீனப்படைகள் தெற்கிலிருந்தும் ருஷ்யர்கள் வடக்கிலிருந்தும் நெருக்கித் தாக்குதல் செய்யும்பொழுது ஆசியா கண்டத்திலுள்ள மஞ்சூரியாவும் கொரியாவும் ஜப்பானிடமிருந்து நழுவிவிடும்.

ஜப்பானின் அதோகதி சீக்கிரம் ஏற்பட்டுவிடும். ருஷ்யா போரில் ஈடுபட்டதும் அணு குண்டுகள் வீசப்பட்டதும் ஜப்பானின் வீழ்ச்சியை துரிதப்படுத்தும். வெகு சீக்கிரத்தில் ஜப்பான் ஒருவிதமான முடிவுக்கு வரவேண்டும் என்று ஒரு வாஷிங்டன் செய்திவெளிவந்திருக்கிறது. நேசதேசத்தாருக்கு இது அதிக நம்பிக்கையை ஊட்டக்கூடிய தருணம். பெருமூச்சு விட்டுக்கொண்டு, அமெரிக்க ஸெனட்டின் அயல் நாட்டு விவகார கமிட்டியின் சேர்மனான மிஸ்டர் டாம் கானலி "கடவுளுக்கு வணங்குவோம், யுத்தம் அநேகமாக முடிந்துவிட்டது" என்று சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி

**அணுகுண்டுகள்.** ஜப்பான் இறுதிக் கடிதத்தை நிராகரித்தபின் பிரிடனும், அமெரிக்காவும், ஜப்பான்பேரில் அணுகுண்டுகளை வீசிவிட்டன. ஹிட்லரின் 'V' ஆயுதங்களைப்போல இது கொஞ்சகால வாழ்வுடையதல்ல. உலகத்தில் நாசத்திற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களில் இது மிகவும் கெடுதலானது. இது நவீன யுத்த முறைகளைத் தலைகீழாக மாற்றி, ஆயுதங்களையும் பிரயோஜனமற்றதாகச் செய்துவிட்டது.

மிஸ்டர் H. G. வெல்ஸ்போன்ற பிரிடிஷ் கட்டுக்கதை எழுத்தாளர்கள் கனவுகண்ட அணுகுண்டை கியாதிபெற்ற விஞ்ஞான சாஸ்திரியான ஜார்ஜ் தாம்ஸன் அபிவிருத்தி செய்தார். அதை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் 1941-ம் வருஷத்தில் அமெரிக்காவில் கட்டப்பட்டன. ஏனெனில் அப்பொழுது பிரிடன், ஜெர்மன் விமானத் தாக்குதலுக்குட்பட்டிருந்தது. 65,000-க்கு மேற்பட்டவர்கள் அமெரிக்க மாகாணங்களான, டென்னஸி, மெக்ஸிகோ, வாஷிங்டன் முதலிய இடங்களில் அதை உற்பத்தி செய்துவருகிறார்கள்.

ஜெர்மனியும் இந்த குண்டுகளை உற்பத்திசெய்ய பெர்லினிலுள்ள ஜோலியான்பங் தொழிற்சாலையில் முயற்சி செய்துவந்தது. அந்த தொழிற்சாலையை ஒரு நேசதேச வெடி



குண்டு அழித்ததின்மூலம் அது வீணாகிவிட்டது. ஜெர்மனியின் முயற்சி பலித்திருந்தால் ஐரோப்பியப் போரின் நடவடிக்கை வேறுவிதமாக இருந்திருக்கும் என்று மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறார். ஆனால் அதிர்ஷ்டவசமாக பிரிடிஷ், அமெரிக்க விஞ்ஞான சாஸ்திரம் ஜெர்மன் முயற்சியைத் தோற்கடித்துவிட்டது.

வெடி குண்டில் வெடிக்கும் சக்தியானது அணுக்களால் அமைக்கப்பட்டிருப்பதினால் அதற்கு அணு குண்டு என்று பெயர். அதில் யூரானியம் அணுக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது மின்சார சக்தியால் வெடிக்கிறது.

முதலாவது அணுகுண்டு டோக்கியோ இருக்கும் ஹான்ஷு தீவிலுள்ள ஹிரோஷிமா பேரில் வீசப்பட்டது. இந்த குண்டு 20,000 டன்கள் T. N. T-யைவிட அதிக சக்தி வாய்ந்தது. நான்கு சதுர மைல்களுக்கு மேல் அதாவது நகரத்தின் 60 சதவிகிதம் அழிக்கப்பட்டது. ஐந்து தொழிற்சாலை பிரதேசங்கள் இருந்த இடம் தெரியவில்லை. அங்கு இருந்த ஜீவராசிகள் எல்லாம் உருத்தெரியாதபடி தீக்கிரையாகிவிட்டன என்று டோக்கியோ ஒப்புக்கொள்ளுகிறது. வெளியிலிருந்தவர்கள் பொசுங்கிவிட்டார்கள். வீட்டுக்குள் இருந்தவர்கள் உஷ்ணத்தினாலும், அதிர்ச்சியினாலும் இறந்துவிட்டார்கள்.

இரண்டாவது அணுகுண்டு நாகாசாகிபேரில் போடப்பட்டது. சிலாக்கியமான விளைவுகள் ஏற்பட்டனவென்று சொல்லப்படுகிறது. ஆகிலும், விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை. எதிர் காலத்தில் ஜப்பானை அணுகுண்டுகள்மூலம் பலமாகத் தாக்கவும் திட்டங்கள் தயாராகிவிட்டன. ஆகிலும் அதன் விளைவுகளை ஆராய்ச்சி செய்யவும் முடிவுக்குவர ஜப்பானுக்கு அவகாசம் அளிக்கவும் அந்த குண்டுவீச்சு சற்று நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையைக் கண்டு அமெரிக்கர்கள் ஆனந்தப்படாவிட்டாலும், அவசியத்தை முன்னிட்டுத்தான் அவர்கள் இதைக் கையாண்டார்கள். அமெரிக்க ராணுவ அதிகாரி பின்வருமாறு சொன்னார்:—"ஜப்பான் நம்மைக் கட்டாயப்படுத்தினாலொழிய நாங்கள் அதைக் கையாளப்போவதில்லை, இந்த வெடிகுண்டின் விளைவுகளை மதித்துப்பார்க்க ஜப்பானுக்கு நாம் அவகாசம் கொடுப்போம்."

இந்த அணு குண்டு வீச்சினால் யுத்தத்துக்கு அபார உதவி ஏற்பட்டிருக்கிறது. டைம்ஸ் பத்திரிகை சொல்லுவது போல் "நேசதேசத்தாரின் கைக்குள் அகப்பட்டுவிட்டோம் என்று சரணாகதி மூலம் ஜப்பானிய நிர்வாகிகள் ஒப்புக்கொள்ளுவதையும் அல்லது புதிய வெடி குண்டு வீச்சுக்கு நாட்டை உட்படுத்தி அதை அவர்கள் அழிப்பதையும், பொருத்து ஜப்பானிய யுத்தம் நடைபெறும்."

வி வி வி வி வி

**படையெடுப்புக்கான திட்டங்கள்.** அணு குண்டு இருந்தாலும், இல்லாவிட்டாலும், நேசதேசத்தாரின் படையெடுப்பு திட்டம் பூர்த்தியாகிவருகிறது. ஐரோப்பாவிலிருந்து படைகள் தூரக்கிழக்குக்கு அனுப்பப்படுகின்றன. D-தினத்தை எதிர்பார்த்து 30,000 கனடியப் படைகள் பசிபிக்கிலுள்ள முன்னணி தளத்துக்கு வந்துவிட்டன. அடுத்தபடியாக 60 கனடியக் கப்பல்களும், அநேக கனடிய விமானப்படையும் பசிபிக்குக்கு வந்துவிடும். பிரிடனில் 1 லக்ஷம் டச்சுக்காரர்கள் தயாரிக்கப்படுவார்கள். மேலும் ஆஸ்திரேலியாவில் 27,000 டச்சுக்காரர்கள் பயில்விக்கப்படுவார்கள்.

ஜெனரல் மாக் ஆர்தரின் ஆதிக்கத்துக்குள் ரையூகிஸ் தீவுகள் பூராவும் ஆகினுவாவும் வந்துவிட்டன. கடற்தளபதி மௌண்ட்பேடன் தென்கிழக்கு பசிபிக் பூராவிலும் கமாண்டை வகிப்பார். ஆகினுவாவிலும், ஐவோஜிமாவிலும், மாரியனாஸ்ஸிலும் 5,000 வெடி விமானங்கள் குவிக்கப்பட்டு அவைகளில் வெடிகுண்டுகளும், எறிவெடிகளும் ஏற்றப்படுகின்றன. வெடிவிமானங்கள் நாள் பூராவும் நடவடிக்கையை மேற்கொள்ளும். படையெடுப்பு ஏற்படும்பொழுது ஜப்பானில் உணவுப் பொருளும், போக்குவரத்து சாதனங்களும், மார்க்கங்களும் ஒன்றும் இருக்காது.

வி வி வி வி வி

**கடற் சுரங்கவெடிகள்.** கடற் சுரங்கவெடிகள் மூலம் ஜப்பானுக்கு கடற் தாண்டி வரும் சர்ப்பராக்கள் துணிக்கப்பட்டுவிட்டன. ஜப்பானின் உள்நாட்டுக் கடலும் இப்பொழுது பத்திரமாக இல்லை. ஜப்பானுக்கு எதிராக உள்ள ஆசியா கண்டத்தின் துறைமுகங்களிலும் சுரங்கவெடிகள் பாவப்பட்டுவிட்டன. இவ்விதமாக ஒரு சாவு வளையம் ஜப்பானைச் சுற்றி அமைக்கப்பட்டுவிட்டது.

வெடி விமானங்களை, துறைமுகங்களையும், நகரங்களையும், தொழிற்சாலைகளையும் நிர்மூலமாக்கிவருகின்றன. சென்ற ஏழு மாதங்களில் 2,846,932 டன்கள் எடையுள்ள எதிரியின் கப்பல்கள் அழிக்கப்பட்டன, அல்லது பழுதுபடுத்தப்பட்டன. ஜப்பானிடம் எஞ்சியுள்ள கடற்படை செயலற்றிருக்கிறது. வெடி விமானங்கள் அவைகளையும் தாக்கிவருகின்றன.

வி வி வி வி வி

**ஜப்பாவின் தற்காப்பு ஏற்பாடு.** ஜப்பானுக்கு நம்பிக்கைக்கு இடமுண்டா? டோக்கியோவிலுள்ள டெக்னிகல் போர்டின் டிரைக்டர் ஜெனரல் பின்வருமாறு எழுதுகிறார்:—"நமது விஞ்ஞான சாஸ்திரிகள் ஒரு புதிய ரகசிய ஆயுதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் நுட்பத்தை எதிரி அறியமுடியாது. ஜப்பானுக்கான போரில் இந்த சக்தி வாய்ந்த ஆயுதம் உபயோகிக்கப்படும். இந்த ஆயுதத்தைக் கொண்டு எதிரியை முறியடிக்க நாம் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கிறோம்." ஹிட்லர் ரகசிய ஆயுதங்களைப்பற்றி சிந்தித்துக்கொண்டே இறந்தான். ஜப்பானும் அவ்விதம் செய்துவருகிறது. ரகசிய ஆயுதமிருந்தால் படையெடுப்பு ஏற்படும் வரையில் காத்திருப்பானேன்? படைகளை இறக்க அவர்கள் தயார் செய்துவரும்பொழுதும் நகரங்களை அவர்கள் சாம்பலாக்கி வரும் பொழுதும் அவர்களை ரகசிய ஆயுதங்களைக் கொண்டு ஏன் துரத்தியடிக்கக்கூடாது. ரகசிய ஆயுதப் பேச்செல்லாம் விண்பீத்தல், ஆடம்பரம்.

வி வி வி வி வி

**மனித அவுட்வாணம்.** இது மற்றொரு போலி ஆயுதம். தற்கொலை அல்லது விசேஷ மனித வெடி குண்டுப் படையைச் சேர்ந்த ஒருவர் ஒரு பெரிய வெடி குண்டுடன் சேர்த்துக்கட்டப்படுகிறார். கப்பலை நோக்கி அந்த வெடி குண்டு அனுப்பப்படுகிறது. அந்தக் குண்டு கப்பலைத் தாக்கும் பொழுது அவன் இறந்து விடுவான்.

இந்தக் குண்டுகளை சமாளிக்க நேசதேசத்தார்கள் தயாராக இருக்கிறார்கள். சண்டை விமானங்கள் அவைகளை வழிமறித்துவிடும். அல்லது விமான எதிர்ப்பு பீரங்கிகள் அவைகளை சுட்டு வீழ்த்திவிடும். மேலும் எதிரியின் ரகசிய ஆயுத தளங்களும் அழிக்கப்படும்.

வி வி வி வி வி

**ஜப்பானின் மாகிநோ அரண்.** கடற்கரைகளைத் தற்காப்பு செய்வதற்காக பூமியின் தாழ்வரைகளில் ஜப்பான் பலமான தற்காப்புகளை அமைத்திருக்கிறது. குகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முற்றுகை ஏற்பட்டால் அதை சமாளித்து நிற்க அவைகளில் உணவுப் பொருள் வைக்கப்பட்டிருக்கிறது. இது மாகிநோ அரண் சென்ற வழியே சென்றுவிடும்.

வி வி வி வி வி

**பாட்ஸ்டாம் மகாநாடு.** பாட்ஸ்டாம் மகாநாடு இதற்கு முன் நடைபெற்ற மூன்று வல்லரசுகளின் மகாநாடுகளுக்கு முற்றிலும் விரோதமானதென்று எண்ணியவர்கள், ருஷ்யா யுத்தத்தில் புகுந்துவிட்டதினால் அவர்களுடைய அபிப்பிராயம் தவறானதென்று கண்டுவிட்டார்கள். ஆகிலும் பாட்ஸ்டாம் மகாநாட்டின் முடிவுகளும் முக்கியத்வமுள்ளவை தான். ஐரோப்பிய சமாதானத்தை நிலைநாட்ட நேசதேசத்தார்கள் நாஸி தத்வத்தையும் ராணுவத்தையும் அழித்துவிடுவார்கள். யுத்த தளவாட உற்பத்தியை நிறுத்தி, விவசாயத்துக்கும் மற்ற சமாதானத் தொழில்களுக்குரிய ஆயுதங்களை ஜெர்மன் தொழிற்சாலைகள் செய்யவேண்டுமென்று வற்புறுத்துவார்கள். சாமானைக் கொடுத்து நஷ்ட ஈடு செய்யவேண்டுமென்று சொல்லுவார்கள். யுத்தக் குற்றவாளிகளை கூடிய சீக்கிரத்தில் விசாரணைக்குட்படுத்துவார்கள்.

பிரிடிஷ், ருஷ்ய, அமெரிக்க, பிரெஞ்சு, சைனா அயல் நாட்டு மந்திரிகள் கொண்ட கவுன்ஸில் அமைக்கப்பட்டும். அதற்கு நிரந்தரமான தலைமை காரியாலயம் லண்டனிலிருக்கும். இந்த சபை இதாலியுடனும் மற்ற அச்சு ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளுடனும், தனிப்பட்ட சமாதான உடன்படிக்கைகளை ஏற்பாடு செய்யும். ஐரோப்பாவின் எல்லைப்புற பிரச்னைகள் சமாதான மகாநாடு கூடும் வரையில் ஒத்திவைக்கப்படும். யோக்யதையுள்ள நடுநிலைமை வகிக்கும் நாடுகள் சர்வதேச சங்கத்தில் அங்கத்தினர்களாக சேர்த்துக்கொள்ளப்படும். அச்சு நாடுகளுடன் இதற்கு முன் ஸ்பெயின் தொடர்பு வைத்துக்கொண்டிருந்ததினால் அது விலக்கிவைக்கப்படும்.



ஐரோப்பிய ஆலோசனை கமிஷன் கலைக்கப்பட்டுவிட்டது. அதன் அலுவல்களை பெர்லினிலும் வியன்னாவிலுமுள்ள மேன்பார்வை கமிஷன்கள் நடத்திவரும்.

வி வி வி வி வி

**நேசதேச கமிஷன்.** தாத்காலிகமாக ஆஸ்திரியாவை ஆளுவதற்கும் ஜெர்மனியிலிருந்து அதைப் பிரித்துவருவதற்கும், ஜனநாயக நிர்வாகத்துக்கு அதைத் தயார் செய்வதற்கும் முப்பெரிய வல்லரசுகளும் பிரான்ஸும் கொண்ட ஒரு நேசதேச கமிஷன் அமைக்கப்படும்.

வி வி வி வி வி

**சர்வதேச ராணுவ கோர்ட்டு.** நான்கு வல்லரசுகளும் அடங்கிய ஒரு கோர்ட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பெர்லின் தலைமை காரியாலயம். அது யுத்தக் குற்றவாளிகளின் குற்றங்களை கூடியசீக்கிரம் பரிசீலனை செய்யும்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.** (1) பிரிடிஷ் ராணுவ அதிகாரிகளின் ஆக்ஞைப்படி ஜெர்மன் கப்பல்களிலுள்ள உபயோகிக்கப்படாத வெடி குண்டுகளையும், சுரங்க வெடிகளையும், பீரங்கி குண்டுகளையும், விஷவாய்வுள்ள டப்பிகளையும், அகற்றி, அவற்றை வடக்குக்கடலில் மூழ்கடித்து வருகிறார்கள்.

(2) பர்மாவில் வேலை செய்துவந்த நெபாலீஸ் படைகள் அக்டோபர் மாத மத்தியில் திரும்பி அழைக்கப்படுவார்கள். தற்காப்புக்காக அனுப்பப்பட்ட படைகள், ஜப்பான் இந்தியாவைப் படையெடுக்க முற்பட்டபொழுது போரில் ஈடு படுத்தப்பட்டன. அவர்கள் கோஹிமாப்போரில் மதிக்கத்தக்க சேவை புரிந்திருக்கிறார்கள்.

---

# பர்மாவிலிருந்து போகன்வில்லிக்கு.

## நேசநேச நடவடிக்கையின் முன்னேற்றம்.

(டைம்ஸ் பத்திரிகை).

பர்மாவில் சிடாங்க் நதிக்கு மேற்கிலுள்ள 28-வது ஜப்பானிய சேனையின் எஞ்சிய பாகம் அழிக்கப்படுவதால் தென்கிழக்கு ஆசியாவிலும் தென்மேற்கு பஸிபிக்கிலும் அடுத்தபடியாக நடவடிக்கைகள் துவங்குமென்று ஊகிக்க முகாந்திரமிருக்கிறது.

இந்த இரண்டு யுத்த அரங்கங்களும் ஒன்றோடொன்று நெருங்கி வருகின்றன. போரில் அதிகப் பங்கெடுத்துக்கொண்ட ஆஸ்திரேலியர்கள் அடங்கிய நேசதேசப்படைகள் போர்னியோவிலுள்ள முக்கியமான துறைமுகங்களையும் விமான தளங்களையும் ஆக்கிரமித்தபின் தெற்கிலுள்ள ஜப்பானியரின் தற்காப்பு வரிசை பின்நோக்கிச் சென்றுவிட்டது. மூன்று வருஷங்களுக்குமுன் பிரமாதமாகத் தோன்றின, தெற்கு பர்மாவிலிருந்து, நியூகினியா, ஸாலமன்ஸ் வரையிலுள்ள கடற்கரையும் தீவுகளும் ஏற்கனவே விலாப்பக்கத்தில் தாக்கப்பட்டுவிட்டன. அதன் வடக்குக்கோடி பர்மாவிலுள்ள தென்கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த நேசதேச தரைப் படைகளால் துணிக்கப்பட்டுவிட்டது. கிழக்குப் பக்கத்திய தற்காப்புகளை ஆஸ்திரேலியர்கள் பின்துரத்தியடித்து வருகிறார்கள்.

இந்த அரண் இப்பொழுது பின்புறத்தில் தாக்கப்படுவதாலும், அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸில் ஊன்றிவிட்டதாலும் போர்னியோவில் ஆஸ்திரேலியர்களும், டச்சுக்காரர்களும், எல்லா தூரக்கிழக்கு சமுத்திரங்களிலும், பிரிடிஷ் அமெரிக்க நீர்மூழ்கிகளும் சுறுசுறுப்பாக இருப்பதினாலும் அதற்கும் ஜப்பானுக்கும் உள்ள போக்குவரத்து மார்க்கங்கள் ஒவ்வொரு நாளும் குன்றி வருகின்றன. தற்பொழுது காணப்படும் நடவடிக்கை பிரகாரம், வெகு சீக்கிரத்தில் தென்கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த நேசதேச நெடுந்தூரம் செல்லும் விமானங்களும் கிழக்கு இந்தீஸ் விமானப்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிகளும் விடுதலை பெற்றுவரும் போர்னியோவிலுள்ள நேசதேச தளங்களை உபயோகிக்கும் நிலைமையை பெற்றுவிடும்.

அங்கே லாபூவானும் வடக்கு போர்னியோவிலுள்ள மற்ற முக்கியமான ஸ்தானங்களும், தாரகானும், பாலிக்பாபானும் பிடிபட்டுவிட்டதினால் நேசதேசத்தார்களுக்கு உபயோகமுள்ள கப்பற் துறைகளும் சிறந்த எண்ணெய் பிரதேசங்களும் கிடைத்துவிட்டன. எண்ணெய் பிரதேசங்களை டச்சு இஞ்ஜினியர்கள் பழுதுபடுத்திவிட்டார்கள்.

இந்த பிராந்தியத்திலும், பர்மாவிலும், இந்துமகா சமுத்திரத்திலும் நேசதேசத்தாரின் லக்ஷியம் முன்னேறித் தாக்குவதுதான். ஜப்பானியப் படைகளை அழிப்பதற்காக மேலும் நடவடிக்கைகளைத் தவக்க தளங்கள் திரும்பிப் பிடிக்கப்படுகின்றன. ஐஶ்வர்யங்கள் சம்பாதிக்கப்படுகின்றன. ஜப்பானியப் படைகள் சைனாவில் போரை நடத்தக்கூடும். மேலும் ஜப்பானுக்கு தினசரி அதிகரித்துவரும் ஐஶ்வர்யங்களும் குறைக்கப்படுகின்றன. அதற்குக் கிழக்கில் நியூகினியாவிலும், நியூ பிரிடனிலும், ஸாலமன்ஸிவுமுள்ள போகன்வில்லித் தீவிலும் நேசதேசத்தார்கள் தற்காப்புப் போரை நடத்திவருகிறார்கள்.

எதிரியின் நீர்மூழ்கிகள் உபயோகிக்கக்கூடிய ஒளிகளை எதிரிகள் உபயோகிக்காமலும், எதிரி பழுதுபார்த்து, ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் நேசதேச கப்பற் படையைத் தாக்க உபயோகிக்கும் விமானங்கள் தளங்களை உபயோகிக்காமலும், மேற்கு பக்கத்திற்கு துருப்புகளையும் ஸப்ளைகளையும் கொண்டுபோகாமலும் தடுப்பதுதான் நேசதேச லக்ஷியம். நியூகினியாவில் எதிரி கடற்கரையிலிருந்து உள் நாட்டிற்குள் இறுதியில் துறத்தியடிக்கப்பட்டுவிட்டான். நியூ பிரிடனில் எதிரி காஸல் தீபகற்பத்தில் அடைபட்டிருக்கிறான். ஆகிலும் கடற்படை தளமும் விமான தளமுமான ரபால் ஜப்பான் வசமிருப்பதால் நமக்கு சில தொந்தரவுகள் ஏற்படுகின்றன. குறிப்பான தேச படங்களுள்ளதும், சிரம சாத்யமான போரை நடத்த வேண்டியதுமான போகன்வில்லியில் நீண்ட கால, கடுமையான காட்டுப்போர் முடிவடையும் தருவாயில் இருக்கிறது.

இதே சமயத்தில் 12-வது சேனை உள்பட அநேக படைகள் இந்தியாவிலும், தூரக் கிழக்கில் மற்ற இடங்களிலும் புதிய தாக்குதலுக்காகத் தயாராகி வருகின்றன. இப்பொழுது பருவகால மழை பெய்கிறது. இந்த கட்டத்தில் ஒரு சிறிது செயலின்மை ஏற்படத்தான் வேண்டும். இது வரையில் பணிவை ஏற்றுவந்த ஸோல்ஜர்கள் கலைக்கப்படுகிறார்கள், அல்லது சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு ஓய்வு அவசியம்தான். ஆகிலும் அவர்களுடைய சாமர்த்தியத்தை நாம் இழக்கக்கூடாது. அவர்களுக்கு பதிலாக வருகிறவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஆகிலும் சக்தி வாய்ந்த சாம்ராஜ்யப் படைகள் செய்யவேண்டிய வேலையை பிரிடிஷ் அமெரிக்க நிர்வாகங்கள் கூடிய சீக்கிரத்தில் நிர்த்தாரணம் செய்துவிடும். கடற் தளபதி மௌண்ட் பேடன் சமீப காலத்தில் ஜெனரல் மாக் ஆர்தரை சந்தித்துப் பேசியதும், பாட்ஸ்டாம் மகாநாட்டிற்கு கடற் தளபதி மௌண்ட் பேடன் ஆஜராகியிருந்ததும் முக்கியமான முடிவுகள் ஏற்படுமென்பதை குறிப்பிக்கின்றன.

---

# தூரக்கிழக்கில் இறுதித் தாக்குதலுக்குமுன்.

## ஜப்பானைத்தாக்க நேசதேச தயாரிப்பு.

### ஸ்குவாட்ரன் லீடர் சார்லஸ் கார்டனர்.

அநேகமாக பிரிடிஷ் கடற்படை பூராவும் தூரக்கிழக்குக்கு அனுப்பப்பட்டுவிட்டது. பிரிடிஷ் விமாப்படையிலுள்ள பிரம்மாண்டமான லிங்கன் வெடி விமானங்களும் அதிக பாரவாகியான லங்காஸ்டர் விமானங்களும் ஜப்பானையே தாக்க வெகு சீக்கிரத்தில் உபயோகிக்கப்படும். கடற்தளபதி மௌண்ட்பேடன் கமாண்டுகளின் மகாநாட்டைக் கூட்ட விமானமூலம் செல்லுகிறார்.

இந்த மூன்று முக்கிய இனங்களும் ஒன்றுபட்டு ஒரு விருத்தாந்தத்தை வெளியிடுகின்றன. ஜப்பானின் வீழ்ச்சியை துரிதப்படுத்த பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் ஐஶ்வர்யங்களும் அமெரிக்க ஐச்வர்யங்களும் இணைக்கப்பட்டுவிட்டன.

இந்த ஜாபிதா கவனார்கமுள்ளது. ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து துருப்புகளும், கப்பல்களும், விமானிகளும் மூன்றரை வருடங்களாக ஜப்பானுடன் போரை நடத்தி



வருகின்றன. இப்பொழுது மேற்கு முனைக்குப் படைகளை அனுப்பவேண்டுமென்ற இடஞ்சல் அவைகளுக்கு நீங்கிவிட்டது. டொப்ருக்கிலிருந்தும், கிரீட்டிலிருந்தும், வந்த ஆஸ்திரேலியர்கள் போர்னியோவில் வெற்றிபெற்று வருகிறார்கள்.

தென்கிழக்கு ஆசியாவில் கியாதிபெற்ற விமானப்படைகளைப்பெற்றுள்ள கனடியர்கள் பிரிடிஷ் காட்டுப் போர் பயிற்சி பள்ளிக்கூடங்களில் ஸோல்ஜர்களைப் பயில்விக்கிறார்கள். பலப்பெருக்குள்ள கனடிய கடற்படை அட்லாண்டிக் கடலிருந்து பசிபிக்குக்குத் திரும்பிவிட்டது.

பிரிடனின் சிறந்த துருப்புகளுடன் சேர்ந்து போர் புரிந்துவரும் இந்திய சேனை பர்மாவில் திரைப்போரில் ஜப்பானுக்கு மகத்தான தோல்வியை அளித்தது. ஜப்பானின் 15-வது, 28-வது, 33-வது சேனைகள் நொருக்கப்பட்டன.

இன்று இங்கிலாந்துக்கும் பசிபிக்குக்கும் மத்தியிலுள்ள ஆகாயங்களில் சுறுசுறுப்பு ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் போக்கு வரத்து விமானங்கள் தென்கிழக்கு ஆசியா போருக்கு பிரிடிஷ் ஸோல்ஜர்களை ஆயிரக்கணக்காக எடுத்துச்செல்லுகின்றன. துருப்பேற்றிச்செல்லும் கப்பல்களும் ஏராளமாக மத்தியதரைக்கடல் வழியாகவும் அராபிக்கடல் வழியாகவும் வந்துகொண்டிருக்கின்றன.

தெற்கு ஆபிரிக்காவிலிருந்தும் 1941, 1942-ம் வருஷங்களில் ஆபிரிக்க விமானப்படையில் தேர்ச்சிபெற்ற தீரர்களான விமானிகள் அனுப்பப்படுகிறார்கள். கிழக்கு, மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த டிவிஷன்கள் பர்மாவில் இரண்டு வருடங்களாக போர் நடத்தி வருகின்றன. மலேயா, சிலோன், கெனியா, மற்ற இடங்களிலிருந்தும் படைகள் வந்திருக்கின்றன.

ஒரு வருஷத்துக்குமுன் 25 லக்ஷமாக இருந்து இப்பொழுது அதிகரித்திருக்கும் பிரிடிஷ் படைகள் அடுத்த தாக்குதலுக்குத் தயாராக இருக்கின்றன.

பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த எல்லாக் கப்பல்களும் பிரிடிஷ் பசிபிக் கடற்படையிலாவது அல்லது சிலோனில் தளமுள்ள பிரிடிஷ் கிழக்கு இந்தீஸ் கடற்படையிலாவது இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

பிரிடிஷ் கடற்படையில் பின்கண்ட கப்பல்கள் இருக்கின்றன. எட்டு யுத்தக் கப்பல்கள், ஆறு பெரிய விமானந்தாங்கிகள், 20 அல்லது அதற்குமேற்பட்ட துணைக்காவல் விமானந்தாங்கிகள், பன்னிரண்டு கனமான சஞ்சாரிகள், 30, 40 லேசான சஞ்சாரிகள், ஏராளமான நாசகாரிகள், நீர்மூழ்கிகள், சுரங்கவெடி பாவும் கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், பழுது பார்க்கும் கப்பல்கள், மற்றும் நவீன கடற்படைக்கு அத்யாவசியமான உதவிக் கப்பல்கள்.

இந்தப் புள்ளிவிபரம் பிரிடிஷ் கடற்படையைப்பற்றி வெளிவந்துள்ள கணக்குகளிலிருந்து தொகுக்கப்படக்கூடியது. யுத்த சமயத்தில் கட்டப்பட்ட விமானந்தாங்கிகள், சஞ்சாரிகள், நாசகாரிகளையும் இந்தக் கணக்குகளுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

சுமாராக மதிப்பிட்டால் தூரக்கிழக்கில் போர்க்கப்பல்களில் 150,000 பிரிடிஷ் மாலுமிகள் இருந்துவருகிறார்கள். மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் கடற்கரை ஸ்டேஷன்களிலும் விமான தளங்களிலும் இருக்கிறார்கள். இவற்றைத்தவிர படைகளையிறக்கும் படகுகளிலும், சிறிய கப்பல்களிலும், ஜப்பானிய மத்தியக் கோட்டையைச்சுற்றி மேற்கிலிருந்து கிழக்கு வரையிலுள்ள 5,000 மைல் வளையத்தில் இருவகைப்பட்ட நடவடிக்கைக்காக காத்துகொண்டிருக்கும் நேசதேசப் படைகளும் இருக்கின்றன.

பிரிடனின் பிரானேமான சேவைப்படையான கடற்படை தூரக்கிழக்குக்கு வந்துவிட்டது. அதன் புதிய தாக்கும் சக்தியான கனமான வெடிவிமானங்கள் தூரக்கிழக்குக்கு புறப்பட்டுவிட்டன.

ஐரோப்பிய யுத்தம் உச்ச நிலைமையிலிருந்தபொழுதும் மீதப்படுத்தக்கூடிய ஒவ்வொரு விமானமும் தூரக்கிழக்குக்கு அனுப்பப்பட்டுவந்தது. அதனால்தான் நேசதேச விமான சக்தியானது தென்கிழக்கு ஆசியா கமாண்டை ஜப்பானின் உள்நாட்டு தற்காப்பு வளையத்துக்கு முக்கியமான சமயத்தில் வந்துவிடும்படிசெய்யப் பேருதவி செய்திருக்கிறது.

ஆகிலும் இப்பொழுதுதான் பிரிடிஷ் பாம்பர் கமாண்டின் பூராசக்தியையும் ஜப்பானைத் தாக்க அனுப்பக்கூடும். இவைகளை தூரக்கிழக்கில் உபயோகிப்பது விமான தளங்களின் இருப்பைப் பொறுத்தது. ஜெர்மனியைத்தாக்க ஏராளமாகக் கிடைத்த தளங்கள்போல் ஜப்பானைத்தாக்க அதிகமாக தளங்கள் கிடைக்கவில்லை. ஏற்கனவேயிருக்கும் தளங்களில் அமெரிக்க கனமான விமானங்களும் தங்கியிருக்கின்றன. இது ஒரு சிக்கலான பிரச்னையே ஒழிய தீர்க்கக்கூடாததல்ல. பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும், வெகுகாலமாக ஒத்துழைத்திருப்பதினால் அவைகள் இடவசதியைப்பற்றி கவலைப்படவில்லை. அவைகளுக்குத் தேவையானது அதிக விமானதளங்கள்தான். ஆகிலும் ஜப்பானைத் தாக்கக் கூடிய வசதியுள்ள ஒரு இடத்தில் பிரிடிஷ் பாம்பர் படைகள் ஜப்பானை அழிக்கும் மகத்தான யுத்தத்தை நடத்தத் தயாராக இருக்கின்றன.

படைகள் பூர்ணமாக ஒத்துழைக்கும் தருணம் வந்துவிட்டது. ரெங்கூனிலுள்ள கடற் தளபதி மௌண்ட்பேடனின் படைகள் அடுத்த நடவடிக்கைக்குத் தயாராக இருக்கின்றன. ஜெனரல் மாக் ஆர்தர் போர்னியோவில் போரை நடத்தி வருகிறார். இவ்விரண்டு கமாண்டுகளுக்குமிடையிலுள்ள இடைவெளி மூடப்பட்டு ஜப்பான் வசமுள்ள சைனாவைச்சுற்றி ஒரு வளையம் அமைக்கப்படும். ஜெனரல் மாக் ஆர்தரின் தலைமை காரியாலயத்தில் மாக் ஆர்தருடன் கூடிப்பேச மௌண்ட்பேடன் சென்றபொழுது அவருடன் உலாகாத் தலைமை ஆபீஸர்களும் சென்றார்கள். இதிலிருந்து மரியாதை செய்யும் முறையில் பேட்டியில்லையென்றும் திட்டம் நிறுவுவதற்கான மகாநாட்டை நடத்த வந்ததென்றும் அவர் வெளிப்படுத்தினார்.

மௌண்ட்பேடன் பிரிடனின் உயர்தர ஒன்றுபட்ட நடவடிக்கை கமாண்டர். அவரை தூரக்கிழக்குக்கு நியமித்தபொழுதே ஒன்றுபட்ட நடவடிக்கையின் தலைவர் என்ற முறையில் அவருக்குள்ள அனுபவம் மதித்துப்பார்க்கப்பட்டது. அவர் இருக்கும் ஸ்தானமும் முக்கியத்வமுள்ளது. ஏனெனில் தென்கிழக்கு ஆசியா சீனாவுடன் வடக்கு பார்ச்வத்தில் சேருகிறது, தெற்குப்பக்கத்தில் மாக் ஆர்தருடன் அது சேருகிறது. சைனாவில் சியாங்கைஷேக்கின் காரியாலய ஆபீஸராக இருப்பவர் ஜெனரல் வெடமெயர், அவர் இதற்குமுன் கண்டியில் மௌண்ட்பேடனின் டெபுடி அதிகாரியாக இருந்தார். சைனாவிலுள்ள அமெரிக்க விமானப் படைக்கு ஜெனரல் ஸ்ட்ராடமெயரை நியமித்ததிலிருந்து சைனாவுக்கும் தென்கிழக்கு ஆசியா கமாண்டுக்கும் மற்றொரு தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் ஸ்ட்ராடமெயர் தென்கிழக்கு ஆசியாவில் மௌண்ட்பேடனின் கிழக்கு விமானப்படை கமாண்டராக இருந்தார். தென்கிழக்கு ஆசியா கமாண்டுக்கும் சைனாவுக்கும் தொடர்பும் ஒத்துழைப்பும் இருப்பதுபோல, தென்கிழக்கு ஆசியா கமாண்டுக்கும் மாக் ஆர்தரின் வட்டாரத்துக்கும் தொடர்பும் ஒத்துழைப்பும் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நேசதேச விமானந்தாங்கிகளைச் சேர்ந்த விமானங்கள் குரீயைத்தாக்கியது.

### ஜப்பானியக் கடற்படைக்கு இகழ்ச்சி.

**யார்க்ஷையர் போஸ்டின் ராணுவ நிருபர்.**

ஜூலை 23உயன்று குரீயை விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் தாக்கியபொழுது எதிரியின் இரண்டு போர்க்கப்பல்களும் ஒரு கனமான சஞ்சாரியும், ஒரு லேசான சஞ்சாரியும் ஒரு துணைக்காவல் விமானந்தாங்கிக் கப்பலும் அடிபட்டு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன என்று கடற்தளபதி ஹால்ஸி சொல்லியிருக்கிறார். இதிலிருந்து ஒரு சமயம் சக்திவாய்ந்திருந்த ஜப்பானியக் கடற்படையின் எஞ்சிய பாகம் தாத்காலிகமாக திறமையற்றிருக்கிறதென்று பொருள்படும்.

ஜூன் மாத ஆரம்பத்தில் இந்தக் கடற்படையில், நான்கு அல்லது ஐந்து யுத்தக்கப்பல்களும், ஏழு அல்லது எட்டு விமானந்தாங்கிகளும் நாலு அல்லது ஐந்து சஞ்சாரிகளும் 50 முதல் 60 நாசகாரிகளும் இருந்தனவென்று உத்தியோக முறையில் மதிப்பிடப்பட்டது.

குரீயைத் தாக்கியதில் பழுதுபட்ட கப்பல்களுடன், 33,000 டன்கள் எடையுள்ளதும் 16 அங்குள பீரங்கிகள் உள்ளதுமான நாகெட் என்ற யுத்தக்கப்பலும் சென்றவாரத்தில் டோக்கியோவுக்கு அப்பாலிலுள்ள கடற்படை தளமான யோகோசுகாவை கடற்படையும், விமானந்தாங்கிகளில் சென்ற விமானப்படையும் தாக்கியபொழுது, பலமாக பழுதுபடுத்தப் பட்டது.



ஒன்று அல்லது இரண்டு ஜப்பானிய போர்க் கப்பல்கள்தான் பாக்கியிருக்கின்றன. கடற் தளபதி ஹால்ஸியிடம் மிகவும் மேன்மையுள்ள பிரிடிஷ் அமெரிக்க மூன்றாவது கடற்படை இருக்கிறதென்றும், அந்தப்படை வெகு சாமர்த்தியத்துடன் உபயோகிக்கப்படுகிறதென்றும் நினைக்கப்படுவதால், படையெடுப்பின்பொழுது அதை துறத்தியடிக்கப் படைகளை ஜப்பான் தேக்கிவைத்திருந்ததென்ற ஜப்பானின் கொள்கை ஒருவாறு போற்றத்தக்கதாக இருக்கிறது. அவ்விதம் செய்ததினால் ஜப்பான் அபாயத்தை விலைக்கு வாங்கிற்று. தற்காப்புப் போரை நடத்தும்பொழுது அதன் கடற்படை முடமாக்கப்பட்டுவிட்டது.

சென்ற மூன்று வாரங்களாக ஜப்பானின் கிழக்குக் கடற்கரையில் 1,300 மைல்கள் கொண்ட பாகத்தை நாம் கடற்படை மூலமாகவும் விமானங்கள் மூலமாகவும் தாக்கிவந்த பொழுதும் ஜப்பான் விமானப்படையை போருக்கு அனுப்பாமல் தேக்கிவைத்திருந்தது. அவ்விதம் செய்யப்படாமலிருந்திருந்தால் அது சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய கடற்படைக்கு வேவு பார்ப்பதின்மூலம் அதிக ஒத்தாசை செய்திருக்கக்கூடும்.

கடற் தளபதி ஹால்ஸியின் கடற்படையின் வருகையை வேவு பார்க்கும் விமானங்கள் கண்டுபிடித்திருந்தால் ஜப்பானியக் கடற்படைகள் நமது கடற்படையை சரிசமமுள்ள பலத்துடனோ அல்லது உயர்வான பலத்துடனோ வழிமறித்திருக்கக்கூடும். ஒரு நடவடிக்கையிலும் ஜப்பானிய 50, 60 நாசகாரிகளிடமிருந்தும், ஏராளமான நீர்மூழ்கிகளிடமிருந்தும், மோட்டார் மீன் வெடி படகு போன்ற சிறிய தளங்களிலிருந்தும் யாதொருவிதமான எதிர்ப்பும் ஏற்படவில்லையென்பதற்குக்காரணம் சுலபமாக அறியக்கூடியதாக இல்லை.

இந்த இகழ்சிகளுக்கு எண்ணெய், பெட்ரோல் குறைவு ஒரு காரணமாக இருக்கலாம். பிலிப்பைன்ஸிலிருந்தும் ஆகினாவாவிலிருந்தும் முற்றுகை செய்யப்பட்டதின் காரணமாக கடல்தாண்டிவரும் சாமான்கள் நின்றுபோய்விட்டதென்றாலும் ஜப்பானில் எண்ணெய் இருப்பு இருக்கிறதென்று தெரியவருகிறது. எண்ணெய் இருப்பை ஜப்பானில் பழுதுபடாமலிருக்கும் சேர்க்கை எண்ணெய் தொழிற்சாலைகள் அதிகப்படுத்திவருகின்றன.

---

## பிரிடிஷ் விமானப்படை சூருவளிக்காற்று சிட்டாங் நதி வளைவுப்பொறியைத் தாக்குகிறது.

### முண்டியடித்து தப்பியோட உத்தேசித்த ஜப்பானின் திட்டம் குலைந்தது.

**(விங்க் கமாண்டர் L. V. பிரேசர்).**

பருவ காலத்தில் காணப்படாத மகத்தான முறையில் பிரிடிஷ் சண்டை விமானப்படை, பைடர் வெடி விமானப்படையைச் சேர்ந்த காட்டு விமானப்படைகள் பர்மாவில் சிட்டாங் நதி வளைவில் ஜப்பான் ஆரம்பித்த போக்குக்காட்டும் போர்முனையைத் தாக்கின. ஸ்பிட் பையர் விமானங்கள் சேனைக்கு தற்காப்பு செய்வதிலிருந்து முன்னேறித் தாக்கத் துவங்கி விட்டன. நேசதேசத் துருப்புகளுக்கு 200 கஜங்கள் தூரத்திலுள்ள ஜப்பானியப்படைகளையும் அவைகள் சுட்டு வீழ்த்திவருகின்றன.

சிட்டாங் நதியின் மேற்குக் கரையில் ஜப்பானியர்களின் படை பலம் மிகுதியாக இல்லை. அதை ஜப்பான் பூராவாகப் பயன்படுத்திக்கொண்டது. ரெங்கூன், மாண்டலே இருப்புப் பாதையில் குவிக்கப்பட்டிருந்த பிரிடிஷ் படைகளை தெற்கு முகமாகச் செல்லும்படி செய்ய வேண்டுமென்பது ஜப்பானின் உத்தேசம். பிரிடிஷ் படைகள் பெகுயோமாவில் இருந்த படைகளை வளைத்து அவைகள் முண்டியடித்து வெளியேற முயற்சிக்கும்பொழுது அவைகளை அழிப்பதற்கு அங்கு திரட்டப்பட்டிருந்தன.

எதிரிக்கு துரதிருஷ்ட வசமாக சிட்டாங் நதி வளைவுப் போர் ஒரு போக்குக் காட்டியான நடவடிக்கை என்று பிரிடிஷ் கமாண்டர்கள் நன்கு அறிந்தார்கள். ஜப்பான் பதில் தாக்குதலை ஏன் துவக்கியிருக்கிறதென்றும் அவர்கள் அறிவார்கள். ஆகையால் அவர்கள் இந்த ஆமிஷத்தைக் கண்டு ஏமாந்துவிடவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பிரிடிஷ் விமானப்படையின் உத்தமபக்ஷமான முயற்சியை நாடினார்கள். கடுமையான கால நிலையையும் பொருட்படுத்தாமல் விமானப்படை சாத்தியமான அளவு ஒத்தாசை செய்தது. சேனையின் திட்டப்படி ஒவ்வொரு நடவடிக்கையையும் விமானப்படை நடத்திவந்தது.

ஸ்பிட்பயர் விமானங்கள் சிட்டாங் நதியின் இரு ஓரங்களிலுமுள்ள குன்றுக், மோக்
பாலினுக்கு இடையேயுள்ள பிரதேசத்தைப் பலமாகத்தாக்கின. இது தற்காப்பு செய்து
வரும் படைகளுக்கு உதவி செய்வதற்காகப் பாசாங்குத் தாக்குதல் போன்றது. மஸ்கிடோ
விமானங்களும், தண்டர்போல்ட் விமானங்களும் பெகுயோமாவிலிருந்து கிழக்கு முகமாகச்
சென்று டாஸ்கூடபெகு ரஸ்தாவையும், தெற்கு ஷான் குன்றுகள் வரையிலுள்ள
பிரதேசத்தையும் ஸ்ட்ராடஜிக் முறையில் தாக்கிவந்தன.

விமானப்படைகள் ரஸ்தாவிலும், நதியிலும் அசைந்து சென்ற எந்த வஸ்துவையும்
ஜப்பானியரின் சகலவிதமான ஒளிகளையும் தாக்கின. சமவெளியிலும் சாமான்களை மறைத்து
வைப்பதில் எதிரி நிபுணன். இருப்புப்பாதை அச்சுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள காட்டு
பிரதேசம் ஜப்பானின் சாமர்த்தியத்திற்கு அரிய சந்தர்ப்பம் அளித்திருக்கிறது.

ஆகிலும் மறைமுகப்படுத்துவதும், மிகவும் சௌகரியமற்ற காலநிலையும் ஜப்பானியர்களைக்
காப்பாற்ற முடியவில்லை. ஒளிகளிலும், தற்காப்பு முகாம்களிலும், அகிழ்களிலும், பனை
ஓலையால் அமைக்கப்பட்ட காட்டுக் குடிசைகளிலுமுள்ள ஜப்பானியர்கள் இரக்கமன்னியில்
வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டார்கள்.

இந்த லக்ஷியங்களைத் தாக்குமுன் விமானிகள் பருவ கால சூறவளிக்காற்றுகளை
சமாளிக்கவேண்டும். ஆகிலும் விமானிகள் லக்ஷியத்தை அடைய ஒருபொழுதும் தவறிவி-
வில்லை. அவர்கள் மூடத்தனமாகவும் ஒருபொழுதும் வெடிகுண்டுகளை வீசவில்லை.

பருவகாலத்தில் பறந்து செல்லும் பிரிடிஷ் விமானிகளின் சக்தி ஜப்பானியர்களுக்கு
ஆச்சரியகரமானதல்ல. 1943-ம் வருஷத்திலும் சென்ற வருஷத்திலும் ஜப்பான் இதைத்
தெளிவாகவும் அனுபவத்திலும் நன்கு உணர்ந்திருக்கிறது. ஆகிலும் சிட்டாங் நதி வளைவி
லுள்ள ஜப்பானியர்களுக்கு அதிக சூடு வேண்டியதுபோல் தோன்றுகிறது. சில ஜப்பானி
யர்கள் முகாமிலுள்ள நெருப்பைச்சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தபொழுதும் சிலர் ஓடையில்
காலையில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தபொழுதும் தாக்கப்பட்டார்கள். அந்த ஜப்பானியர்
களுக்கும் இப்பொழுது நல்லறிவு ஏற்பட்டுவிட்டது.

பீரங்கிக் குண்டுகளினாலும் தோட்டாக்களினாலும் கொல்லப்பட்டு இறக்கும் இரண்டு
அல்லது மூன்று எதிரி ஸோல்ஜர்களைப் பார்த்திருக்கும் சண்டை விமான ஓட்டிகளுக்கு
இந்த சந்தர்ப்பங்கள் அபூர்வமானவை. ஆகிலும் பீரங்கி குண்டுகளும் தோட்டாக்களும்
லக்ஷியத்தை ஆழித்துவிடும். அவைகளின் நாசத்தைப்பற்றிய தகவல்கள்தான் ஒரு வாரம்
கழித்து கிடைக்கக்கூடும். அதன்பின் பிரிடிஷ் சேனையைச் சேர்ந்த ரோந்துப் படைகள்
ஜப்பானிய ஸ்தானங்களுக்குள் நுழைந்து விமான நடவடிக்கையில் இறந்த சவக் குவியல்களைக்
கண்டுபிடிப்பார்கள். விமானிகள் தங்கள் கண்ணுக்குப் புலப்பட்டதைத்தான் வெளியிடக்
கூடும். சேனையைச் சேர்ந்த ஒரு ரோந்துப்படை பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லிற்று:—
"ஜப்பானிய ஸோல்ஜர்களின் சவங்கள் புதைகுழியிலேயே கிடந்தன".

நதியின் வளைவில் கடும்போர் நடைபெற்றபொழுது, விமான நடவடிக்கையின் வெற்றிக்கு
நேர்முக மேன்பார்வை போஸ்டின் உதவிதான் காரணமாகும். பிரிடிஷ் விமானப்படை
ஆபீஸர்கள் விமானிகளுக்கு நேத்திரங்கள்போலிருந்தார்கள். துருப்புகளுடன் முன்னணியில்
அவர்கள் நின்றுகொண்டு விமானப்படைகளுக்கு போதனைகளை ரேடியோ மூலம் அனுப்பி
வந்தார்கள்.

இந்தப் பிரதேசத்தில் ஆகாயத்திலிருந்து உற்றுநோக்குவதற்கு அதிக ஸ்தானங்கள்
இல்லை. மேலும் பருவகால மழையினால் ஏராளமான பாகங்களில் வெள்ளப்பெருக்கு
ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் V. C. P. உற்றுநோக்காளர்கள் பேருதவி செய்து
வருகிறார்கள். அவர்கள் கண்ணோட்டத்துக்குட்பட்ட லக்ஷியங்களையும் வெடி குண்டு
வெடிக்கும் சப்தத்துக்குள்பட்ட லக்ஷியங்களையும் தாக்கும்படி ஸ்பிட்பயர்களை அவர்கள்
ஏவியிருக்கிறார்கள். எதிரிப்படைகளை நேசதேசப் படைகள் துடைக்க முன்னேறிய பின்தான்
பிரிடிஷ் படைகள் விமானப்படைகளைப் பின்வாங்கும்படி செய்வார்கள்.

இந்தப் போரில் ஜப்பானியர்கள் மட்டும்தான் பாசாங்கு நடவடிக்கைகளை மேற்கொண்
டார்கள் என்பதில்லை. ஒரு சமயத்தில் உணவுப்பொருள்கள் மனிதர்கள் மூலம் ஜப்பானியரின்
குண்டுவீச்சுக்குட்பட்டு ஒரு பொட்டல் வழியாகக் கொண்டுபோக வேண்டியிருந்தது.
ஸ்பிட்பயர் விமானங்கள் ஒளிகளிலிருந்த ஜப்பானியர்களை வெளியே வரவொட்டாமல்
தாக்கிவந்தன. அப்பொழுது படைகளுக்குப் போதுமான உணவுப்பொருள் அனுப்பப்பட்டு
விட்டது.



# மகத்தான ஏமாற்றும் வித்தை.

## யுத்தத்தில் மறைமுகப்படுத்துவது.

ஹாு காஸன்.

மறைமுகப்படுத்துவது ஒரு யுத்த தந்திரம். சமாதானம் என்று பிறர் வெளியிடாத இயற்கையில் இது ஒரு சகஜமானது. நாகரீகம் படைத்த மானிட வர்க்கத்தில் இது விஞ்ஞான சாஸ்திர கலை. இது ஆபத்துக் காலத்தில்தான் அனுஷ்டிக்கப்படுகிறது. காட்டு மிருகங்களும், பறவைகளும், மீன்களும், பூச்சிகளும் மறைமுக ஏற்பாட்டினால்தான் பிழைத்திருக்கின்றன. ஆனால் மனிதன் இயற்கை முறைகளையும் சேர்க்கை முறைகளையும் இழந்துவிட்டான். ஆகை யால் மறைமுகப்படுத்தும் அவசியம் வரும்பொழுது அவன் மறுபடியும் அம்முறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். கால் கைகளை அசைப்பதைப்போல் இயற்கையாக உள்ள ஒரு சித்தியைப்பெற அவன் அவனுடைய புத்தி சக்தியை உபயோகிக்கவேண்டும்.

மனிதன் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலையோ, பாதையோ, அல்லது ஐஸ்கிரீம் தயாரிக்கும் இடமோ இயற்கையானபின் திரையுடன் ஸ்பஷ்டமாகப் புலப்படும். ஆகாயத்தி லிருந்து அநேக நூற்றாண்டுகளுக்குமுன் மனிதன் செய்த வேலைகள் நன்கு புலப்படும். ஆகாயப்படை எடுத்த ஒளிப் படங்களைப் பார்த்தால் ஒற்றைக்கல் கம்பங்களை இங்கிலாந்தில் உள்ள வில்ட்ஷியரிலுள்ள ஸ்டோன் ஹெஞ்சுக்கு இழுத்துச் சென்ற அடையாளங்கள் சுற்றி உள்ள புல் தரையில் காணப்படுகின்றன. சாதாரணமாக இது அதிக முக்கியத்வமுள்ளதில்லை. மனோக்யமாக இருக்கிறதென்று சொல்லலாம். யுத்த காலத்தில், முக்கியமாக விமானப் படை தோன்றியபின் மனிதர்களையும், நடவடிக்கைகளையும், தளவாடங்களையும் மறைத்து வைப்பது வெற்றிக்கு அத்யாவசியமாகும்.

இதை சாதிப்பதுதான் மறைமுகப்படுத்துவதின் லக்ஷியம். தூரக்கிழக்கு நடவடிக்கை களுக்கு திட்டம் போடும் பிரிடிஷ், அமெரிக்க நிபுணர்கள் இதன் முக்கியத்வத்தை உணரு கிறார்கள். தூரக்கிழக்கில் திடீர்தாக்குதலும், உள் கருத்தை மறைமுகப்படுத்தி வைப்பதும், தங்களை மறைமுகப்படுத்திக்கொள்ள துருப்புகளுக்கு பயிற்சி அளிப்பதும் ஜப்பான் பேரில் நேசதேசத்தாருக்கு ஏற்பட்ட வெற்றிகளுக்கு பேருதவி செய்திருக்கின்றன. இந்த தந்திரம் கடற் தளபதி மௌண்ட் பேடன் நடத்திய பர்மா போரில் நன்றாய் வெளிப்படுத்தப்பட்டது. பர்மா போரின் பெரும் பாகம் அடர்த்தியான காடுகளில் நடைபெற்றது.

மறைமுகப்படுத்துவதின் லக்ஷியம் சாதாரணமானது. லக்ஷியத்தைக்கண்டு பிடிக்காமலும் அல்லது தாமதத்தின்பேரில் கண்டு பிடிக்கும்படிக்கும் எதிரியை ஏமாற்றிவிடவேண்டும். இந்த லக்ஷியத்தைப்பெற மறைமுக திட்டம் வகுப்பவர் முன்னேறித் தாக்குவது அல்லது தற்காப்பு அல்லது இரண்டு முறைகளையும் மேற்கொள்ளலாம். இரண்டும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையுள்ளதே ஒழிய முரணானதல்ல.

அவன் எந்த முறையைக் கையாளுகிறானென்பது இரண்டு அம்சங்களைப் பொறுத்தது. முதலாவது எதனிடமிருந்து ஒரு லக்ஷியத்தை மறைமுகப்படுத்தவேண்டும். இரவு வெடி விமானத்திலிருந்தா அல்லது பிரிடன் வெகுகாலம் அனுபவித்த கபடமாக வரும் பகல் வெடி விமானத்திலிருந்தா? நெடுந்தூரம் சுடும் பீரங்கியிலிருந்தா அல்லது சிறிய ஆயுதங்களி லிருந்தா? ஒளிப்படப் பெட்டியிலிருந்தா அல்லது மனிதன் திருஷ்டியிலிருந்தா என்று அவன் கண்டுபிடிக்கவேண்டும்.

இரண்டாவதாக, லக்ஷியத்திற்கு எவ்விதமான மறைவு வேண்டும்? உபயோகமற்ற ஒரு சாமானை மறைக்க அதிகச் செலவும் அதிக குயுக்தியும் உபயோகிக்கப்பட்டால் அது வீணாகி விடும். இவைதான் அவனுடைய பிரச்னையின் அடிப்படையான கொள்கைகள். இந்த பிரச்னையைத் தீர்ப்பதில் அநேக அம்சங்கள் கவனிக்கப்படவேண்டும். பூகோள ஸந்நிவேசம், சிநேகோஷ்ண ஸ்திதி, தொழிலாளர்களும் தளவாடங்களும் கிடைப்பது, அமைப்பு, பரிபாலிப்புச் செலவு. ஒவ்வொரு பிரச்னையையும் அந்தந்த நிலைமையைப் பொறுத்து தீர்த்துவிடவேண்டும். மேலும் லக்ஷியத்தையும் அது இருக்கும் இடத்தையும் ஆகாயத்திலிருந்தும், தரையிலிருந்தும், எல்லா விதமான வெளிச்சம், காலநிலையைப் பொருத்தும் ஜாக்கிரதையுடன் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

பிரிடிஷ் நிபுணர்கள் ஐரோப்பாவில் கண்டதைவிட மாறுபாடான நிலைமை தூரக்கிழக்குப் போரில் காணப்படுகிறது. வெளிச்சமும், ஜோதோஷ்ண ஸ்திதியும், பிரதேச அமைப்பும் செடி கொடி வர்க்கங்களும் மறைமுகப்படுத்துவதில் புதிதான விசித்திரமான பிரச்னைகளை எழுப்பி இருக்கின்றன. உஷ்ணார்த்த ரேகையில் காணப்படும் உஷ்ணத்தைப் பொறுத்துக்கொள்ளக் கூடியதும் பூச்சிகளின் சேஷ்டையைத் தாங்கக்கூடியதுமான புதிய தளவாடங்கள் கண்டு பிடிக்கப்படவேண்டும்.

தீவு, காட்டுப் போருக்காக யுத்த தந்திரமும் திருத்தியமைக்கப்படவேண்டும். இங்கு மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக, கப்பல் தளங்கள், விமான தளங்கள் போன்ற பெரிய அமைப்புகளை மறைமுகப்படுத்துவது சாத்யமற்றது. ஏனெனில் அவைகள் இருக்கும் தீவுகள் அவைகளைவிட அதிக பரப்பு உள்ளவையல்ல. காடுகளில் அமைக்கப் பட்டுள்ள அவைகள் நூற்றுக்கணக்கான மைல்களில் ஒரே ஒரு தழும்புபோல காணப்படும். இரண்டாவதாக, தனிப்பட்டவர்களையும் படைப் பகுதிகளையும் ஒளித்துவைக்க காடுகள்தான் சிறந்தவைகள். இந்த அம்சம் நன்கு ஆராய்ச்சி செய்யப்படவேண்டும். மூன்றாவதாக, அசைந்து செல்லும் கப்பலை ஆகாயத்திலிருந்து புலப்படாமல் செய்ய ஒரு மறைவும் கண்டு பிடிக்கப்படவில்லையாதலால், இரு வகைப்பட்ட போரில் திடீர்தாக்குதல் என்பது, முன் னேறித் தாக்குவது அல்லது கருத்தை மறைமுகப்படுத்துவது, அல்லது லக்ஷியத்தை மறைத்து வைத்திருப்பது என்ற முறையினால்தான் வெற்றி பெறக்கூடியது.

இதற்காக களத்திலேயே சிறந்த பத்திரத்துக்குரிய நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப் படவேண்டியதுடன், மற்ற விரிவான அம்சங்களிலும் உயர்வான ஆலோசனை இருக்க வேண்டும். இந்த மகத்தான மறைமுக வித்தையின் அம்சங்கள் அபாரமானவை. சில்லரை யாக உள்ள, மோட்டார் வண்டிகளை டாங்கிகள் போலும், டாங்கிகளை மோட்டார் வண்டிகள் போலும், அமைப்பது, உஷ்ணார்த்தரேகைக்குச் செல்லுகிறவர்களுக்கு ஆர்க்டிக்குக்குரிய மூஸ்தீப்புகளை வழங்குவது, முதல், போலித் தரைமுகங்கள், பொம்மைகளைக் கட்டி அவை களை உபயோகிப்பது போன்ற பெரிய திட்டங்களும் இந்த மறைமுகத்தில் அடங்கியுள்ளவை.

மறைமுகப்படுத்துகிறவர்கள் வெளிச்சம், வர்ணம் என்ற இரண்டு இலக்கியங்களையும் அறியவேண்டும். இவ்விரண்டும் பர்மாவிலும் நார்மண்டியிலும் வித்தியாசப்படவில்லை. வர்ணத்தை அதிகப்படுத்தினால் அதன் உபயோகம் குறைந்துவிடுமென்று அவன் அறிய வேண்டும். அமைப்பு சாயையினின்றும் அவற்றை அமைக்கும் விமானங்களின் குண பேதத்தி னின்றும் கண்ணுக்குப் புலப்படும் என்று அறியவேண்டும். வர்ணத்தைவிட குண பேதமும் அமைப்பும்தான் முக்கியமென்பதை அவன் அறியவேண்டும்.

அமைப்பினால் பளபளப்பை எவ்விதம் அழித்துவிடுவதென்றும் வெளிப்படும் சாயைகளை வர்ணத்தினாலும் திரைகளாலும் எவ்விதம் அகற்றுவதென்றும் எங்கு போலி அமைப்புகளை யும் இரட்டைகளையும் உபயோகிக்கவேண்டுமென்றும் அவன் அறியவேண்டும். எந்நிலைமை யிலும் அவன் தோற்ற அமைப்பில் குற்றமில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தந்த நிலைமைக்குத் தக்கவாறு அவன் மறைமுகங்களை அமைக்கவேண்டும்.

மறைமுகப்படுத்துவது என்பது செயல் கலை. அது ஒரு முக்கியமான தொழில் பிரச்னையைத் தீர்த்துவிடுகிறது. அதற்கும் இரஸஞான சாஸ்திரத்துக்கும் சம்பந்தமில்லை. ஆகிலும் இந்த வேலையை சித்திரம் வரைகிறவர்கள் அல்லது சூக்ஷ்ம புத்தியுள்ளவர்கள் செய்து வருகிறபடியால் இது சாஸ்திரத்துக்குரியதென்று சொல்லலாம். எந்த கலையும் முற்றிலும் புதியதல்ல. மறைமுகம் என்பது ஒரு செடியின் விசித்திரமான வர்ணமுள்ள அநேக கிளை களாகும். இந்தச் செடியில் வேர்கள் அநேக இடங்களில் காணப்படுகின்றன. 18-வது நூற்றாண்டில் இருந்த சிற்ப வேலை விஸ்தாரமடைந்து அக்காலத்திலிருந்த வர்ண வேலையின் மூலம் அநேக உருவங்களாக மாறியது.

இந்த ஆராய்ச்சியை முடிக்குமுன், அது சமாதான காலத்திலும் உபயோகமுள்ளதாக இருக்குமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது நாட்டிற்கும் நகரத்திற்கும் உபயோக முள்ளதாக இருக்கும். நாட்டுப் புறங்களில் பத்திரத்துக்காக அமைக்கப்பட்ட ஆபாசமான தொழிற்சாலை கட்டடங்களை கண்ணுக்கு கோரமாக இல்லாத அநேக வர்ணங்களைப் பூசி மறைத்துவிடலாம். இரண்டாவதாக, டவுன் சீர்திருத்த திட்டத்துக்கு அது உதவியாக இருக்கும்.



அசைவற்றிருக்கவேண்டுமென்று வற்புறுத்தவும், விமானங்களைப் பாகுபாடு செய்யவும், திசை மாற்றத்தைக் குறிக்கவும் உள்நாட்டு அலங்காரத்தில் வர்ணங்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. தெருக்களில் அதன் உபயோகம் இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை.

பிரிடிஷ் மறைமுக ஏற்பாடுகள் யுத்த காலத்தில் திறமையுடனும் அழகாகவும், குதூ கலத்துடனும் நடைபெற்று வருகின்றன. நிபுணர்கள் அதில் ஈடுபட்டால் அது சமாதான காலத்திற்கும் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும்.

## ஜப்பானிய விமான நடவடிக்கையில் மாறுதல்கள்.

(மாஞ்செஸ்டர் கார்டியன்).

1941-ம் வருஷத்தில் ஜப்பானியக் விமானப்படை முன்னேறித் தாக்க அமைக்கப்பட்டி ருந்தது.

அதற்கு ஆரம்ப வெற்றி கிடைத்த சமயத்தில் அமெரிக்காவினிடம் பசிபிக்கில் ஒரு விமானம்கூட இல்லை. ஆகிலும் மேற்குப் பக்கத்தில் விஞ்ஞான சாஸ்திரமும் உற்பத்தியும் சமத்வத்தை மாற்றிவிட்டதினால் இப்பொழுது யுத்த அறிக்கை நிலயம் வெளியிட்ட அறிக்கை யின் பிரகாரம் ஜப்பானின் விமானப்படை இப்பொழுது தற்காப்புப் போரை மேற்கொண்டு விட்டது. அது சண்டை விமானங்களைக் கட்டுவதில் அதிகக் கவனம் செலுத்திவருகிறது. ஜூன் மாதம் வரையில் மாதா மாதம் சராசரி ஜப்பானுக்கு 1,000 விமானங்கள் நஷ்ட மேற்பட்டபோதிலும் அதன் உற்பத்தி மாதம் ஒன்றுக்கு 1,250, 1,500 என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. இதை அமெரிக்க உற்பத்தியுடன் ஒப்பிட முடியாதென்றாலும் நஷ்ட ஈடு செய்வதற்கு அது போதுமானது. அந்த விமானப் படையின் தரம் அபிவிருத்தியடைந் தாலும் விமானிகளின் தரம் அதிகரிக்கவில்லை. வாலிபருள்ளவர்கள் அங்கு மிகுதியாக இருந்தாலும், சிறந்த பயிற்சியளிக்கப்பட்டபோதிலும் அங்கு இயற்கையான நல்ல விமானிகள் குறைவாகயிருக்கிறார்கள். சிலாக்கியமாக இருந்தவர்கள் போரில் இறந்துபோய்விட்டார்கள்.

வெடி விமானங்களை அலைகளுக்குமேல் இருந்து சுட்டுவிடுவது என்ற ஜப்பானின் விசேஷ யுத்த தந்திரம் சூபர் பறக்கும் கோட்டைகள் சம்பந்தமாக ஓரளவு வெற்றிபெற்றது. ஆகிலும் ஜப்பானில் நூதன முறைகள் காணப்படவில்லை. ஜப்பான் நவீன உலகத்தில் காலம் கடந்து நுழைந்ததுதான் இதற்குக் காரணம். அதன் விமான ரக திட்டங்கள் பிறரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அதன் ஆயுதங்களும் அமெரிக்கா அநேக வருஷங்களுக்குமுன் உபயோகித்தவை. இரவில் பறந்து செல்லுவதும் ஒளிப்பட மூஸ்தீப்பு களும் அமெரிக்காவைப் பின்பற்றியவை. வெடி குண்டு வீசும் லக்ஷியத்தைக் காணும் அமைப்பு 1939-ம் வருஷத்தில் பிரான்ஸில் அமைக்கப்பட்டது போன்றது. ஒலிபெருக்குவதில் அது மற்ற நாடுகளுடன் சமத்வம் பெற்றிருக்கிறது. நேசதேசத்தாரின் நடவடிக்கை மூலம் அதற்கு ஏற்பட்டுவரும் நஷ்டத்துடன் ஜப்பானிய விமானப் படையின் இந்த அம்சங்களையும் நாம் கவனிக்கவேண்டும்.

## ஜப்பானுக்கு எண்ணெய்க் குறைவு.

### எதிரி விமானப்படையின் இகழ்ச்சி.

ஜப்பானின் விமானப்படையின் தற்போதிய சேஷ்டையின்மைக்குத் தகுந்த காரணம் எதிரிக்கு விமான எண்ணெய்க் குறைவுதான் என்று நேசதேச அறிக்கை வெளியிடுகிறது. சென்ற சில வாரங்களில் நேச இந்தக் குறைவு சமீபகாலத்தில் அதிகரித்து வருவதுடன், சமுத்திரங்களிலும் ஆதிக்கம் தேசத்தார்கள் போர்னியோவிலும் அதைச்சுற்றிலுமுள்ள பெற்று விட்டதால், எதிரிக்கு எண்ணெய் பிரச்னை பலமாகத் தோன்றிவிட்டது.

இந்த ஆதிக்கத்தினால் எதிரி போர்னியோவிலிருந்து பெற்று வந்த 70,00,042 காலன் எண்ணெயை இழந்து விட்டான் என்பதுடன் ஜப்பானுக்கும் சுமத்ரா, ஜாவாவுக்குமுள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. அவைகள் மற்ற எண்ணெய் ஸப்ளை செய்யும் பிரதேசங் கள். மூன்று வருஷங்களாக ஜப்பான் ஒரு வருஷத்திற்கு 90 மிலியன் பாரல் எண்ணெய்யைப் பெற்று வந்தது. அதில் ஒன்பதில் ஏழுபாகம் பர்மாவிலிருந்தும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும் சாராவாக், புருனேபிராந்தியங்களிருந்தும் கிடைத்து வந்தது. பாக்கி எண்

ணெய் ஜப்பானிலிருந்தும் சாகாலினிலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்தும் கிடைத்து
வந்தன.

ஜப்பானிடம் எண்ணெய் கையிருப்பு எவ்வளவு இருந்தாலும், ஜப்பான் இனிமேல்
20 மிலியன் பாரல்கள் எண்ணெய் ஸப்ளை செய்யும் ஜப்பானிய ஆதாரங்களைத்தான் நம்பி
யிருக்கவேண்டும். ஆகையினால் நான் ஜெனரல் மாக் ஆர்தரிடமுள்ள ஆஸ்திரேலிய,
டச்சுப்படைகளின் வெற்றிகரமான போர்னியோ நடவடிக்கை முக்கியத்வமுள்ளது.

பிலிப்பைன்ஸை நேசதேசத்தார்கள் திரும்பிப் பிடித்ததிலிருந்து ஜப்பானின் சமக்ஷேம
வட்டாரம் என்ற ஜமீனின் வாசற்படியையும் முன் வாசலையும், முன் கட்டடங்களையும்,
இழந்ததென்று வைத்துக்கொண்டால், போர்னியோவின் நஷ்டத்திலிருந்து ஜப்பானிட
மிருந்து, முக்கியமான பொக்கிஷமுள்ளவிடத்திற்குச் செல்லும் வழியிலுள்ளதும் ஜமீனில்
நடுமைய்யத்திலுள்ளதுமான ஒரு பெரிய கட்டடம் கைப்பற்றப்பட்டதென்று புலப்படும்.
அதன் மூலம் ஜப்பானுடைய யுத்த முயற்சிக்குக் கிடைக்கக்கூடிய எண்ணெய் ஒத்தாசை
குறைந்து விட்டது.

சமீபகாலத்தில் ஜப்பானியர்கள் நாசமடிக்கப்பட்ட பாலிக்பாபான் முக்கியமான
துறைமுகம். அதில் எண்ணெய் சுத்திசெய்யும் சாலையிருக்கிறது. சாதாரணமாக அந்த
இடத்தில் எண்ணெய்கள் ஏராளமாக உற்பத்தி செய்யக்கூடும். உயர்தரமான ஆக்டேன்
உள்ள விமான எண்ணெய் முதல், மற்ற எண்ணெய்களும், கிரீஸும் அங்கு தயாரிக்கப்படும்.

தாரகான் தீவு வடக்கில் 350 மைல்களிலிருக்கிறது. போர்னியோவில் முதல் மூலமாக
நேசதேசத்தார்களால் குருடாயில் உற்பத்தி செய்யும் நிலயங்கள்தான் கைப்பற்றப்பட்டன.
ஆஸ்திரேலியப்படைகளுக்குப்பின் டச்சு எண்ணெய் நிபுணர்கள் தாரகானிலும் பாலிக்பாபானி
லும் இறங்கினார்கள். தாரகானில் அமெரிக்க கடன் குத்தகை முஸ்தீப்புகளைக்கொண்டு பெரிய
எண்ணெய் உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களைத் திருத்தியமைத்து விடலாமென்று அவர்கள்
கண்டு பிடித்தார்கள். பாலிக்பாபானிலுள்ள எண்ணெய் சுத்திசெய்யும் சாலைகள் பலமாகப்
பழுதுபட்டிருப்பதால் அவைகளைப்பழுது பார்ப்பது கொஞ்சம் அதிக சிரமமுள்ளதாக
இருக்கும்.

சாராவாக்கிலுள்ள பெரிய, அதிக முக்கியத்வமுள்ள செரியா எண்ணெய் பிரதேசம்
ஜூன் மாதத்தில் திரும்பிப்பிடிக்கப்பட்டது. சமீபகாலத்தில் நேசதேசத்தார்கள்
போர்னியோவில், பாலிக்பாபானுக்கு வடக்கில் 28 மைல்களில் சாம்பொஜாவிலுள்ள நகரத்
தையும் எண்ணெய் பிரதேசத்தையும் திரும்பிப்பிடித்து விட்டார்கள்.

பூகோள சாஸ்திரிகளையும் கிழக்கு இந்தீஸைப்பற்றிய அறிவுள்ளவர்களையும் தவிர மற்ற
வர்கள் போர்னியோ ஒரு ஒதுக்குப்புறமான செல்வம் மிகுந்த நாடென்றும் அங்கு
ஸர்க்கார் விளையாட்டுகளில் சிறிய குழந்தைகளை பயமுறுத்தும் மூர்க்கத்தனமுள்ள காட்டு
மிராண்டிகள் வசிக்கிறார்களென்றும் நினைக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் ஒருவாறு
சரியானதுதான். தீவின் உள் நாட்டில் உலகத்திலேயே அதிகமான மரங்களுள்ள காடு
களிருக்கின்றன. இதை ஒருவரும் பயன் படுத்திக்கொள்ளவில்லை. ஏனெனில் உள்நாட்டுக்
குள் இன்னும் ஒருவரும் சென்று ஆராய்ச்சி செய்யவில்லை. அங்கு காண்டாமிருகங்கள்,
காட்டுப்பூனைகள், சிங்கமுள்ள பன்றிகள், முதலைகள், காட்டுப்பன்றிகள், வாலில்லாக் குரங்கு
கள் மிகுதியாக இருக்கின்றன. மேலும் அங்கு பல ரக பட்டுப்பூச்சிகளும், விட்டில் பூச்சி
களும், பறவைகளும் இருக்கின்றன. கொசுக்களும், 20 அடி நீளமுள்ள மலைப்பாம்புகளும்,
காடுகளில் ஏராளமாக இருக்கின்றன. அட்டைகள் அதிகத் தொந்தரவளிக்கும்.

1941-ம் வருஷத்தில் ஜப்பான் படையெடுத்ததற்குமுன் போர்னியோ நான்கு பாகங்
களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பிரிடிஷ் வடக்கு போர்னியோ சார்டர்ட் கம்பெனியின்
கீழ் பிரிடிஷ் வடக்குப் போர்னியோ பிரிடிஷ் ரக்ஷணைக்குட்பட்டு பிரிடிஷ் ரெஸிடெண்டின்
மேன்பார்வையிலுள்ள புருனே மலேயா, சுல்தான் ஆக்ஷி, அயல் நாட்டு விவகாரங்களில்
பிரிடிஷ் ரக்ஷணைக்குட்பட்டு புருக்மன்னரால் ஆக்ஷி செய்யப்பட்ட சாராவாக் பிராந்தியம்,
மிகப்பெரியதும் உபயோகமுள்ளதுமான டச்சு போர்னியோ. டச்சு போர்னியோவில்
3 மிலியன் ஜனங்களில் 70 சத விகிதம் வசித்து வருகிறார்கள். ஜாவாவில் சதுர மைலுக்கு
1,000 பேர்கள் இருந்தால் போர்னியோவில் சதுர மைலுக்கு 10 பேர்கள்தானிருக்கிறார்கள்.

இந்தத் தீவு ரேக்ஷரேகையால் இரண்டு பாகமாக்கப்பட்டிருக்கிறது. வருஷம் பூரா
விலும் கனமான மழையும் 92 டிகிரி உஷ்ணமுமிருப்பதினால் இது சுகமான வாழ்க்கைக்கு
லாயக்கற்றது.



# போர்னியோ.

3,100 சதுர மைல்கள் பரப்பும், 25 லக்ஷம் ஜனத்தொகையும் உள்ள போர்னியோ
உலகத்திலேயே மூன்றாவது மிகப்பெரிய தீவாகும். 1942-ம் வருஷம் ஜனவரி மாதத்
திற்குப்பின் அதைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. ஆனால் ஜப்பானின் புதிய தெற்கு
சாம்ராஜ்யத்திற்கு போர்னியோவை, நிர்வாக, தொழிற்சாலை மத்திய நிலயமாக அபிவிருத்தி
செய்வதென்று ஜப்பான் திட்டம் போட்டிருந்தது.

அதிலுள்ள எண்ணெய் ஸ்தாபனங்கள் அடிக்கடி கடற்படையினாலும், வெடி விமானங்
களாலும் தாக்கப்பட்டு வந்திருக்கின்றன. முக்கியமாக பாலிக்பாபானிலுள்ள எண்ணெய்
பிரதேசம் தாக்கப்பட்டிருக்கிறது. அதில் அநேக இடங்களில் ஜப்பான் தற்காப்புகளை
அமைத்திருக்கிறதென்றும், நேசதேச வெடி விமானங்களும் அவற்றின் துணைக்காவல் விமா
னங்களும் அந்தத் தற்காப்புகளை நொருக்க வெகுதூரம் பறந்து சென்றனவென்றும் தெரிய
வரும். அதிலும் ஜப்பானின் கொடுங்கோன்மைக்குட்பட்ட ஜனங்களைப்பற்றி ஒரு தகவலும்
வெளிவரவில்லை.

போர்னியோ நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தெற்கிலும் கிழக்குக் கடற்
கரையோரமாகவும் டச்சு போர்னியோ, இது டச்சு கிழக்கிந்தீஸைச் சேர்ந்தது. பிரிடிஷ்
ரக்ஷணைக்குட்பட்ட சாராவாக்குக்குப் பக்கத்தில் பிரிடிஷ் வடக்கு போர்னியோ, இதற்கு
புருக் என்பவர் அரசர். வடமேற்குக் கடற்கரையிலுள்ள பிரிடிஷ் ரக்ஷணைக்குட்பட்ட
நாடான புருனே, ஸ்ட்ரெயிட்ஸ் ஸெட்டில்மென்டைச்சேர்ந்த லாபுவான் தீவு.

அவற்றில் டச்சு போர்னியோ நான்கில் மூன்றுபாகம் கொண்டது. போர்னியோவின்
கடற்கரைகள் பள்ளமாகவும் சதுப்பாகவும், அநேக மைல்கள் வரையில் மான்குரோவ்
என்ற செடிகளுள்ள சதுப்பு நிலங்களும் இருக்கின்றன. மேலும் ஏராளமான சிறு தீவுகளும்
இருப்பதினால் அங்கு சுலபமாகச் செல்லமுடியாது. தேசம் பூராவிலும் மலைகளும், காடுகள்
நிரம்பிய பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன.

பெரிய படகுகள் வெகுதூரம் செல்லக்கூடிய அநேக நதிகளும் இருக்கின்றன. ஆகிலும்
முகத்துவாரங்களில் தடைகள் இருப்பதினால் கடலில் செல்லும் கப்பல்கள் நதிகளுக்குள்
செல்லமுடியாது. அநேக ஏரிகளும் இருக்கின்றன. உன்னதமான பிரதேசங்களில் நதிக
ளில் அநேக நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன. போர்னியோவில் ரப்பரும், சர்க்கரையும்,
கொப்பரையும், அரிசியும் மற்ற உஷ்ணரேகைக்குரிய பயிர்களும் ஏராளமாக இருக்
கின்றன. அங்கு ஏராளமான காண்டாமிருகம், யானைகள் உள்பட அநேக ஜீவராசிகள் வசித்து
வருகின்றன.

ஆகிலும் எதிரிக்கு போர்னியோ எண்ணெயினால்தான் அதிக முக்கியத்வமுள்ளது. கிழக்
குக் கடற்கரையிலுள்ள பாலிக்பாபனிலும் அதற்கு வடக்கிலுள்ள தாரகான் தீவிலும்,
உலகத்திலேயே ஆக்டேன் அதிகமாக உள்ள எண்ணெய் உற்பத்தியாகும் கிணறுகள் இருக்கின்
றன. சாராவாக்கின் வடக்கு எல்லையிலுள்ள மிரியும், அதற்கு 60 மைல்களிலுள்ள செரியா
வும் ஏராளமான அளவில் எண்ணெயை உற்பத்தி செய்கின்றன.

ஜப்பான் இந்தத்தீவை ஆக்கிரமித்தபொழுது, அங்கு அவர்கள் ஒரு மாதத்திற்குள்
வசப்படுத்தி விட்டார்கள். பிரிடிஷாரும், டச்சுக்காரரும் அவர்களிடம் உள்ள குறைவான
ஐச்வர்யங்களைக்கொண்டு எண்ணெய் பிரதேசங்களை அழிக்க முயன்றார்கள். இது மூன்று
வருஷங்களுக்கு முன் நடைபெற்றது. வெடிகுண்டு வீச்சு ஏற்பட்டபோதிலும் போர்னியோவி
லிருந்து ஜப்பானுக்கு ஏராளமான எண்ணெய் கிடைத்து வந்தது.

போர்னியோவின் சரித்திரத்தில் ஒழுக்கு நாடுகளில் காணப்படும் அழகும் அற்புதமும்
காணப்படுகின்றன. தாழ்வரைகளில் வசிக்கும் டையாக்ஸ்கள் அநேக நூற்றாண்டுகளாக
காட்டுமிராண்டித்தனமாக மனித வேட்டை செய்பவர்கள். கரடுமுரடான, இன்னும் பரி
சீலனை செய்யப்படாத உள்நாடுகளில் அவர்கள் இந்த குரூரமான தொழிலை நடத்தி வருகி
றார்கள். லாட்ஸ் அல்லது கடல் ஜாதியார்கள் கடற்கரையில் வசித்து கொள்ளையிலீடுபட்டி
ருக்கிறார்கள்.

சிங்கப்பூருக்கும் பிலிப்பைன்ஸுக்கும் மத்தியிலும் தாயிலாந்துக்குத் தென்கிழக்கிலுள்ள
போர்னியோ, 16-வது நூற்றாண்டில் ஸ்பைஸ் தீவுகளுக்குச்சென்ற டச்சு, போர்ச்சுகீஸ்
வியாபாரிகளின் கடல் மார்க்கத்திலிருந்து வந்தது. 17-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில்
பிரிடிஷ், டச்சு கிழக்கிந்தியா கம்பெனிகள் வியாபார ஸ்தலங்களை அமைத்தார்கள். 1698-ம்
வருஷத்தில் பிரிட்டனுக்கு போர்னியோவில் விசாலமான ஸ்தானம் கிடைத்துவிட்டது.

சண்டை மனப்பான்மையுள்ள தேசத்தார்களிடமிருந்து சதாகாலமும் தொந்திரவு ஏற்பட்டது. 1809-ம் வருஷத்தில் பிரிட்டனும், நூலாந்தும் தங்களுடைய ஸ்தானங்களைக் கைவிட்டு விட்டன. ஆகிலும் உள்நாட்டு கலகக்காரர்களுக்குள் கலகம் மூண்டது. ஐரோப்பிய வியாபாரிகள் இவருக்கு ரக்ஷணை யளிப்பதின் மூலம் மறுபடியும் அங்கு வேரூன்றினார்கள்.

போர்னியோவின் சரித்திரத்தில் ஐரோப்பிய அரசின் ஸ்திரமானதாக ஸ்தாபிக்கப்பட்டது தான் ஒரு ருசிகரமான நடவடிக்கை. இதற்கும் கொள்ளைக்காரர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகள்தான் காரணம். இந்தக் கொள்ளைக்கூட்டத்தார்கள் சிங்கப்பூருக்குப்போகும் கப்பல்களுக்குப் பேராபத்து உண்டு பண்ணினார்கள். 1839-ம் வருஷத்தில் ரிடையரான இந்திய சேனை ஆபீஸரான ஜேம்ஸ் புருக் கொள்ளைக்காரர்களை அடக்கியாள ராயலிஸட் என்ற படகில் புறப்பட்டார்.

அவர் அங்கு வந்தபொழுது சுல்தான் சாராவாக் மாகாணத்தில் படையெடுத்து வந்த டையாக்ஸ்களுடன் போர் நடத்திக்கொண்டிருந்தார். புருக்கின் உதவிகொண்டு அந்த கலகம் அடக்கப்பட்டது. இதற்கு வெகுமதியாக சுல்தான் புருக்கை சாராவாக்கின் மன்னராகச்செய்தார். அதற்குப்பின் ராஜா சுல்தானுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. சுல்தானுடைய சேனை முறியடிக்கப்பட்டது. அதன்பின் கொள்ளைக்கூட்டத்தாரை ஒடுக்க அவர் சட்ட திட்டத்தை இயற்றி, வியாபாரத்தையும் அபிவிருத்தி செய்தார். புருக்கின் சேவையைப் பாராட்டி அவருக்கு ஸர் பட்டம் வழங்கப்பட்டது.

1857-ம் வருஷத்தில் புருக் மன்னரை சீனக்கொள்ளைக்கூட்டத்தார்கள் தலைநகரிலிருந்து துறத்தி விட்டார்கள். ஆனால் அவர் கலங்கி விடாமல் ஒரு சிறியபடையுடன் திரும்பி வந்து அதைத்திரும்பவும் கைப்பற்றினார். அவர் அந்திய காலத்தை அமைதியுடன் டெவன்ஷயரில் கழித்து வந்தார். அவருடைய சந்ததியார்கள் அதற்குப்பின் சாராவாக்கில் ஆட்சி புரிந்து வருகிறார்கள். ஜப்பான் அந்த நாட்டை ஆக்கிரமித்தபொழுது அதன் பிரஜா மன்னரான புருக் ஆஸ்திரேலியாவில் வசித்துவந்தார்.

பிரிடிஷ் வடக்கு போர்னியோவில், அலெக்ஸாண்டர் டிாளவி என்ற ஒரு வாலிபமுள்ள ஸ்காட்லாந்து வாசி ஸ்பெயினின் முற்றுகையை முறியடிப்பதில் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டார். இந்த விருத்தாந்தமும், சாராவாக் விருத்தாந்தத்தைப்போல் ஸ்வாரஸ்யமுள்ளது. போர்னியோவில் அநேக துணிவுள்ள நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளை சொல்பகால அளவிற்குள் விவரித்துச்சொல்ல இயலாது.

## சாமான் கப்பல் மிதக்கும் கப்பற்தளமாகிவிட்டது.

### தூரக்கிழக்குக்கு பழுது பார்க்கும் கப்பல்.

இதற்குமுன் சாமான் கப்பலாக இருந்து இப்பொழுது மிதக்கும் கப்பற்தளமாகிவிட்ட மூல்லியன்கோவ் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு தூரக்கிழக்குக்குச் செல்லுகிறது.

இது லாயிட்ஸ் கடற்படை கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் கப்பல் கட்டும் அற்புதங்களில் விசித்திரமான நடவடிக்கையும் வெளிவந்திருக்கிறது. சில மாதங்களுக்கு முன் 10,000 டன்கள் எடையுள்ள இந்தக் கப்பல் சாமான் கப்பலாக இருந்தது. இப்பொழுது அது நவீன முறையில் அமைக்கப்பட்ட கப்பற்பழுது பார்க்கும் தளமாக அமைக்கப்பட்டுவிட்டது.

இதற்குமுன் சாமான்களை ஏற்றிச் சென்ற மூன் பக்கத்தில் நவீன முறையிலுள்ள யந்திர சாதனங்களுள்ள ஒர்க்ஷாப்புகளும், கனமான தகட்டை அடிக்கும் சாலையும், சொல்லப்பட்டவைகளும், பிளம்பர், ஜாயினர் சாலைகளும் இருக்கின்றன.

இதற்குமுன் அதில் ஒரு மேல் தட்டுதான் இருந்து வந்தது. இன்று அதில் மூன்று மேல் தட்டுகள் இருக்கின்றன. முதலாவது தட்டில் எஞ்ஜினியர், யந்திர நிபுணர்களின் ஆபீஸ்கள் இருக்கின்றன. இரண்டாவது தட்டில் கப்பற்படையினருக்கும் மற்ற வேலை செய்யும் கோஷ்டிகளுக்கும் இடவசதி இருக்கிறது. மூன்றாவது தட்டில் கப்பலின் பூரா அகலமுள்ள ஒர்க்ஷாப்புகள் இருக்கின்றன. அவைகளில் 350 டன்கள் எடையுள்ள பெரிய கனமான எஃகுத் தகடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

எல்லா ஒர்க்ஷாப்புகளிலும் தலைக்கு மேல் ஓடும் வழிகள் இருக்கின்றன. தகட்டு ஷாப்பில் தகடுகளை வளைத்து, தெளிவு எடுப்பதற்கு 200 டன் எடையுள்ள மின்சார சக்தியுள்ள பிரெஸ் இருக்கிறது. இது போல் துளைபோடுவதற்கும், தகடுகளை வெட்டுவதற்கும் மற்ற எஃகு வேலைகளைச் செய்வதற்கும் யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.



ஒவ்வொரு ஒர்க்ஷாப்பிலும் மின்சார மூலம் காய்ச்சிச் சேர்க்கும் சாதனமும் இருக்கிறது. சொல்லப்பட்டவையில் பெரிய உலைக்களம் இருக்கிறது.

மூல்லியன் கோவில் தூரக்கிழக்கு சமுத்திரத்திலுள்ள கப்பல்களின் அடி பாகத்தைக் பழுதுகள் பார்க்கக் கூடிய கோஷ்டிகளை செல்லக் கூடிய சிறிய படகுகள் இருக்கின்றன. அதில் தண்ணீருக்குள் மூழ்கும் படையும் யந்திரங்களும் இருக்கின்றன.

## பெல்ஸன் கொடுமைகளை அழிப்பது.

### கஷ்டப்படுகிறவர்களை சாதாரண வாழ்க்கை முறைக்குச் செல்ல உதவியளிப்பது.

(ஆஸ்வால்ட் டச்சு).

1945-ம் வருஷம், ஏப்ரல் மாதம், 15-ம தேதியன்று 21-வது பிரிடிஷ் கவசம்பூண்ட படைகளிடமும் 63-வது டாங்கி எதிர்ப்புப் படையிடமும் அவர்களை நோக்கிவந்துகொண்டிருந்த ஜெர்மன் சேனை காரியாலயத் தலைவர் சமீபத்தில் ஒரு காவல்முகாம் இருக்கிறதென்றும், அங்கு டைபஸ் ஜுரம் பரவியிருக்கிறதென்றும் சொன்னார். அந்தத் கொத்து நோயைப் பரவவொட்டாமல் செய்ய அந்த முகாமைச் சுற்றி ஒரு காவல் படை அமைக்கப்படவேண்டும் என்றும் அவர் யோசனை கூறினார்.

இதுதான் முதன் முதலாக பெல்ஸன் காவல் முகாமைப்பற்றி கிடைத்த தகவல். அந்த முகாமில் உடல் மெலிந்து 50,000, 60,000 பேர்கள் இருந்துவந்தார்கள். அநேக இறந்தவர்களின் சவங்களும் காணப்பட்டன. ராணுவ காரணங்களை உத்தேசித்து 21-வது கவசம் பூண்ட படை முன்னேறிச் சென்றது. அன்றும், மறு நாளும் 63-வது டாங்கி எதிர்ப்புப் படையும், 76-வது பீல்டு ஆஸ்பத்திரிப் படையும்) மற்ற பிரிடிஷ் படைகளும் இந்த முகாமுக்கு வந்தார்கள். உண்மையில் அது ஒரு நரகம்போலிருந்தது. இந்த முகாமைப் பற்றி அநேக கோரமான தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆகிலும் பிரிடிஷ் ராணுவ அதிகாரிகளும், தனிப்பட்ட ஸோல்ஜர்களும் இந்த முகாமிலிருந்து காப்பாற்றக் கூடியவர்களை ரக்ஷிக்கச் செய்த முறைகளும், ஏற்பாடுகளும் இன்னும் வெளியிடப்படவில்லை.

பெல்ஸனுக்கு பிரிடிஷ் துருப்புகள் வந்தபொழுது எவ்வளவு பேர்கள் உயிருடனிருந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. உயிருள்ளவர்களும், இளைத்துப்போனவர்களும், இறந்தவர்களும், மரப்பலகைகளிலும், சவப்பெட்டியைத் தூக்கிச் செல்லும் சாதனங்களிலும் சவங்கள் குவிக்கப்படும் இடங்களிலும் ஒன்றாகக் கிடந்தார்கள். உயிருள்ளவர்கள் மிகவும் களைத்துப்போய் பேசமுடியாமலிருந்தார்களாதலால், இறந்தவர்களையும், உயிருள்ளவர்களையும் பிரித்துச் சொல்ல முடியவில்லை. பிரிடிஷ் ஸோல்ஜர்கள் தங்களிடமுள்ள போர்வைகளையும், ஆடைகளையும், மூஸ்திப்புகளையும், உணவுப்பொருள்களையும் கொடுத்து, சாகும் தருவாயிலிருப்பவர்கள நிம்மதியாக உயிர் துறக்கவும், சோர்வுற்றிருப்பவர்கள் தப்பிப் பிழைத்துக்கொள்ளவும் உதவியளித்தார்கள்.

முதல் 14 நாட்களில் வைத்தியப் பயிற்சிபெறாத 1,600 ஸோல்ஜர்களும் ஒரு சில டாக்டர்களும், தாதிகளும் 50,000, 60.000 பேர்களை கவனிக்கவேண்டியிருந்தது. முகாமிலிருந்தவர்களில் 29,000 பேர்கள் 14 நாட்களுக்குள் உயிர்பற்றி ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பக்கூடிய நிலைமையை அடைந்தார்கள். 23,000-க்கு மேற்பட்டவர்கள் புதைக்கப்பட்டார்கள். அதில் 13,000 பேர்கள் துருப்புகள் வருவதற்கு முன்பே இறந்துவிட்டார்கள்.

பெல்ஸனைக் கைப்பற்றிய சில வாரங்களில் நமது துருப்புகளும், மற்ற உதவியாளர்களும் செய்த சேவைகள் அமானுஷமானவை. முகாமில் டைபஸ் ஜுரம் இருந்ததாலும், முகாம் அலக்ஷியம் செய்யப்பட்டிருந்ததாலும், அங்கு உயிருடனுள்ள பதினாயிரக்கணக்கானவர்களைக் காப்பாற்றுவதற்காக அவர்களை சமீபத்திலுள்ள ஜெர்மன் பான்ஸர் படை பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டியிருந்தது. அங்கு 15,000 ஜெர்மானியர்களும், ஹங்கேரியர்களும் வசித்துவந்தார்கள். அவர்களை அப்புறப்படுத்தி அந்த ஸ்கூல் பெரிய ஆஸ்பத்திரியாகத் தயாரிக்கப்பட்டது. நான்கு பிராந்தியங்களில் 13,000 படுக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஒரு நாளைக்கு மூன்று தடவை ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் பசியால் வாடிவரும் ஜனங்களுக்கு அளிக்கப்பட்டது. பிரஸவ விடுதியும், ஸ்திரீகள் விடுதியும், அனாதைக் குழந்தைகள் விடுதியும் அமைக்கப்பட்டன. தாயகம் திரும்ப லாயக்குள்ளவர்களாக இருந்தவர்களுக்கு அவ்விதம் செல்ல வசதியளிக்கப்பட்டது.

லண்டனிலிருந்து 96 வைத்தியப் பள்ளிப்பிள்ளைகள் பெல்ஸனுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் செத்துப்போகும் தருவாயிலுள்ளவர்களைக் காப்பாற்றியதுடன் கதியற்றவர்

களுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் டைமின் இன்ஜெக்ஷன்களைப் போடுவதிலும் உதவி செய்தவர்தார்கள். அசைந்து செல்லும் [illegible] அனுப்பப்பட்டது. உதவிக்கு [illegible] அனுப்பப்பட்டன. செஞ்சிலுவையும், நண்பர்கள் சங்கத்தைச் சேர்ந்த [illegible] அற்புதமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

அநேக டாக்டர்களுக்கு டைபஸ் ஜுரம் கண்டது. உடன்காலத்தில் டைபஸ் எதிர்ப்பு இன்ஜெக்ஷன் போடப்பட்டதால் ஜுரவேகம் குறைக்கப்பட்டது.

வைத்திய வசதி லெப்டினெண்ட் கர்னல் J. R. O. [illegible] போதனைப்படி நடந்தது. யகூதி சேனையின் சாப்ளின் [illegible] L. H. [illegible], J [illegible] அங்குள்ளவர்களுக்கு மத சம்பந்தமான உதவியளித்துவந்தார்கள்.

இந்த வேலை திருப்திகரமாக நடைபெற்றுவந்ததினால் [illegible] பெல்ஸன் பூராவும் காலி செய்யப்பட்டுவிட்டது. எல்லா எச்சரிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டபின், போதுமான அளவு தேக சௌகரியமடைந்தவர்களும், தாயகம் உள்ளவர்களும் தகுந்த துணையுடன் அனுப்பப்பட்டார்கள். அவர்களில் பெரும்பான்மையோருக்கு வீடு இல்லை. அவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கருகிலுள்ள [illegible] எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு ஒரு விடுதி அமைக்கப்பட்டது. [illegible] சௌகரியங்கள் அங்கு செய்து கொடுக்கப்பட்டன. அங்கு நல்ல கண்காணிப்பு செய்யப்பட்டு இந்த [illegible] வர்கள் சாதாரண வாழ்க்கைக்குவரும் நிலைமைக்கு [illegible] செய்யப்பட்டார்கள்.

குழந்தைகளுக்குக் கல்வி பயில்விக்க பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. வைத்திய வசதியின் மூலம் குடும்பத்தார்கள் ஒன்று சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் சாதாரண வாழ்க்கை நிலைமையை அடைந்து முகாம்களிலும் வேலை செய்துவருகிறார்கள். புத்தகங்களும், விளையாட்டுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. [illegible] ஏற்பாடுகளும், இடவசதியும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

பெல்ஸனில் கஷ்டப்பட்டவர்களில் 70 சதவிகிதம் ஐரோப்பா பூராவிலுமிருந்துவந்த யகூதிகள், பெல்ஸனில் உயிருடனிருந்தவர்களில் எவ்வளவு பேர்கள் பிழைத்திருப்பார்கள் என்று அறியக்கூடவில்லை. மேலும் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப அவர்கள் எவ்வளவு காலம் ஜீவித்திருப்பார்கள் என்றும் சொல்லமுடியாது. பெல்ஸனில் அவர்கள் வெகுகாலமாக அநேக கஷ்டங்களை அனுபவித்ததால் அவர்கள் நிரந்தரமான அழிவை உண்டுபண்ணிவிட்டன. ஆகிலும் அங்குள்ள 25,000, 30,000 ஜனங்களைத் துயரங்களை மறந்து எதிர் காலத்தில் சுகமான வாழ்க்கையை நடத்தும்படிசெய்ய மனித இயல்பிலுள்ள சகலமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

# பிரிடனின் இரண்டாவது தொழிற் புரட்சி.

## ஆறு வருஷ யுத்தத்தில் தொழிற் முறையில் முன்னேற்றம்.

(கர்னல் பிரெட்டன்).

நேசதேச விமானப் படைகள் ஜப்பானின் யுத்த தளவாட உற்பத்தி சக்தியை இரக்கமின்றி அழித்து வரும் பொழுது, தூரக்கிழக்கில் போர் முடிவடையும்படி செய்ததினால் எவ்வித பயங்கரமான ஆயுத பலத்தை ஜப்பானைத் தாக்குவதற்கு அது விலைக்கு வாங்கிவிட்டதென்று இப்பொழுது ஜப்பான் உணர்ந்து வருகிறது.

ஜப்பானியப் படைகள் பிராசீன முறையில் போரை நடத்த சிறந்த முஸ்தீப்புகள் பெற்றிருந்தன. 1943-ம் வருஷம் முற்பாதியில் நடைபெற்ற காட்டுப்போரில் பலமான முஸ்தீப்புகள் பெற்றிருந்த நேசதேசப் படைகளுடன் போர்புரிய ஜப்பான் போதுமான வசதி பெற்றிருக்கவில்லை. ஆகிலும் நேசதேசப் படைகள் படை சலனத்தாற்குக் குறைவான சௌகரியங்களிருந்ததினால், அரிதமாக சலிக்கக்கூடவில்லை. இதற்குக் காரணம் பின்வருமாறு:—மேற்குப் போர் முனையில் பிரிடிஷ் ஐச்வர்யங்கள் பூராவும் ஈடுபட்டிருந்த பொழுது ஜப்பானின் வஞ்சக புத்தியுள்ள, திடீர் தாக்குதலை சமாளிக்க அவசர அவசரமாக நேசதேசப் படைகள் திரட்டப்பட்டன. காட்டியுள்ள சப்பு நிலங்கள் வழியாக 25 ராத்தல் குண்டு வீசும் பீரங்கிகளை எடுத்துச்செல்ல [illegible] சளும் இல்லாவிட்டால், ஒரு மனிதன் [illegible] பீரங்கிகளையுடைய ஒரு எதிரியுடன் போர் புரிவதில் அசௌகரியமேற்படும். இந்த அசௌகரியத்தை முதலில், நியூகினியாவிலும், பர்மாவிலும் உள்ள உஷ்ணத்தரேகை பிரதேசத்தில ஸ்தாக்களை அமைக்



கும் சக்தி பெற்ற பிரிடிஷ், ஆஸ்திரேலிய, அமெரிக்க எஞ்சினியர்களும், பிறகு, விமானப் படை மூலம் ஸப்ளைகளை கொண்டுபோவதுமான முறையும் [illegible] செய்துவிட்டன. [illegible] ஆரம்பத்திலேயே முதல் முதலாக நியூகினியாவிலுள்ள [illegible] களுக்கும் பர்மாவிலுள்ள பிரிடிஷாருக்கும் ரஸ்தாக்களில்லாத பிராந்தியங்களில் விமான மூலம் ஸப்ளைகள் வழங்கப்பட்டன.

அடுத்தபடியாக ஜப்பானிய தற்காப்புப் பெட்டிகளை பிரிடிஷ் 25 ராத்தல் குண்டுகளை வீசும் பீரங்கிகள் தூளாக்கிவிட்டன. இறுதியில் பிரிடிஷ் 14-வது சேனை மத்திய பர்மாவின் சமவெளிக்கு வந்தபொழுது டாங்கிகள் ரெங்கூனுக்குப் போகும் மார்க்கத்தில் கத்தி வெண்ணெயை சுலபமாக வெட்டுவதுபோல, ஜப்பானிய தற்காப்பு நிலயங்களை சுலபமாக அழித்துவந்தன. மேற்குப் போர் முனையிலிருந்த பிரிடிஷ் படைகள் ஜெர்மன் சேனைகளைவிட 400 சதவிகிதம் உயர்வான கவசங்களைப் பெற்றிருந்தன என்று சமீப காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது கிழக்கு பிரதேசத்தில் இந்த வித்தியாசம் மிருகியாகயிருந்தது. அவர்களைவிட [illegible] கவசம் பெற்ற சேனைகளுடன் போர் புரிய வேண்டியிருக்கிறதென்று ஜப்பானுக்கு அறிவு ஏற்பட்டு வருகிறது.

ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதினால், ஸ்வதந்திரப் படைகளுக்கு அபாரமான சக்தியை வழங்கிய கைத்தொழில் சக்தியின் விருத்தாந்தம் முதன் முதலாக வெளியிடப்படுகிறது. யுத்த முயற்சிக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட பிரிடிஷ் மோட்டார் தொழிற்சாலையின் வேலை ரகசியமான விவரங்களை வெளியிடுவதன் மூலம் ஒன்றுபடுத்தப்படுகிறது.

1910-ம் வருஷத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற பிரிடிஷ் டாங்கி தூது கோஷ்டியின் தலைவரான மிஸ்டர் தேவார், அமெரிக்க ஷெர்மான் டாங்கிக்கு பிரிடன் செய்த பேருதவியை சமீப காலத்தில் எடுத்துரைத்தார். அமெரிக்க ஷெர்மான் டாங்கிகளும், கனமான பிரிடிஷ் சர்ச்சில், பிரிடிஷ் க்ராம்வெல் டாங்கிகளும்தான் மேற்குப் போர் முனை வெற்றிக்குப் பேருதவி செய்தன. அவர் பின் வருமாறு சொல்லுகிறார்:—"சண்டை அறையின் கோபுரமும், ஒன்றுபட்ட கவசத்தை அமைத்து ஆபரேடிங் செய்யும் பிரிடிஷ் முறையைப் பின்பற்றியது. வார்ப்பு கவசங்களும் பிரிடிஷ் உற்பத்தியை ஒட்டியவை"

உற்பத்தியும் பிரிடனின் சிறக்க ஆலோசனைப்படி அதிகமாக இருந்தது. மிஸ்டர் தேவார் பின் வருமாறு சொல்லுகிறார்:—எல் அலாமீன் போரில் ஈடுபட்ட ஷெர்மான் டாங்கிகளின் பெரும்பாகம் பிரிடிஷ் காண்டிராக்ட் மூலம் கட்டப்பட்டவை. அல்லது பிரிடிஷ் கம்பெனிகளால் தயாரிக்கப்பட்டவை. அமெரிக்காவில் முதல் கொடுத்து அமைக்கப்பட்ட கம்பெனிகளால் கட்டப்பட்ட ஷெர்மான் டாங்கிகளின் கால் பாகம் பிரிடிஷ் பொருளுதவிகொண்டு அமைக்கப்பட்டவை.

ரோல்ஸ்ராயஸ் கம்பெனியின் அற்புதச் செய்கைகளைப்பற்றி சமீப காலத்தில் புள்ளி விவரங்கள் கிடைத்திருக்கின்றன. யுத்த சமயத்தில் 1,50,000 மெர்லின் எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இவைகள் நேசதேச முன்னணி விமானங்களில் அமைக்கப்பட்டன. மேலும் டாங்கிகளுக்கும் அதிக வேகமுள்ள மோட்டார் மீன் வெடிப் படகுகளுக்கும் உபயோகிக்கப்பட்டன; மெர்லினைப்போல் $1\frac{1}{2}$-மடங்கு அதிக பருமனுள்ள கிரிப்பான் எஞ்சின் ஜப்பானியப் போரில் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது.

இவ்விதமான உயர்வான எஞ்சின்களை ஜப்பானியர்கள் கொஞ்சம்கூட சமாளிக்க முடியவில்லை. மேலும் ஆகாயத்தைப்போல் மற்றெந்த அம்சத்திலும் நேசதேசத்தாருக்கு அதிக ஆதிக்கம் கிடையாது. E. W. ஹைவ்ஸ் என்ற பிரிடிஷ் யந்திர நிபுணர் பின்வருமாறு சொல்லுகிறார்:—"அமெரிக்காவையும் ஜெர்மனியையும்விட பிரிடன் குழல் வாயுவால் ஓடும் யந்திரத்தை அமைப்பதில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது. கவசத்தை அதிசரிக்கும் வகையில் நாம் ஜெர்மனியைவிட 40 சத விகிதம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்; எண்ணெய் செலவு விஷயத்தில் நாம் 30 சத விகிதம் குறைத்து விட்டோம், நீடித்திருக்கும் தன்மையில் நமது விமானங்கள் அதிக உறுதி பெற்றிருக்கின்றன."

சென்ற ஆறு வருடங்களில் பிரிடனின் தொழிற் பயிற்சி சக்தியும் நூதன ஆராய்ச்சி முறையும் நன்கு பயன்படுத்தப்பட்டன. உத்தியோக முறையில் ஆராய்ச்சிக்காக அமைக்கப்பட்ட ஸ்தாபனங்களைத் தவிர, தேசம் பூராவிலுமுள்ள தொழிலாளர்கள், அநேக அற்புதங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதன் மூலம் பிரிடனில் இரண்டாவது தொழிற் புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

உதாரணமாக, லண்டனிலுள்ள சாதாரண பள்ளிக்கூடத்திலிருந்த ஆசிரியர்கள் இரண்டு
மிகவும் முக்கியமான உபாயங்களை மேற்கொண்டார்கள். அதாவது உலகத்திலேயே
ஒளிப்படம் பிடிப்பது, மற்றொன்று ரோடிக்ஸும். முதலாவது எல் அலாமீன் போரில்
வெற்றிகரமாகப் பயன்பட்டது. பார்வைக் கருவியின் ஒரு பாகமான ரோடிக்ஸ் பிரிடிஷ்
விமானப் படையின் கைரோ பார்வையின் முக்கியமான அம்சமாக இருந்தது. இதுதான்
ஐரோப்பிய யுத்தத்தின் கடைசி 12 மாதங்களில் திறமையுடன் உபயோகிக்கப்பட்டது

போரின் இறுதிக்கட்டம் முடிந்தபின் இந்த பல விதமான பிரிடிஷ் அபிவிருத்திகளும்
அநேக பரம்பரைகள் வரையில் விஞ்ஞான, தொழிற் பயிற்சி முற்போக்கை ஒருவாறு
பாதிக்கக்கூடும். எதன் மத்தியில் அவைகள் ஜப்பானுக்கு புத்தி புகட்டுகின்றன. காட்டு
மிராண்டித் தனமான அஞ்ஞானத்தினாலும் வெறியினாலும் ஜப்பானியர்கள் இந்த அபாரமான
சக்தியை தங்கள் பேரில் ஒன்றுபடும்படி செய்துவிட்டார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்யம் சிதறி
விடும் என்றும் ஜப்பானிய ராணுவ யதேச்சாதிகாரம் ஓங்கி நிற்கும் என்றும் ஆலோசர்கள்
ஜோஸ்யம் கூறியதை நம்பி மோசம் போனோமே என்று இப்பொழுது ஜப்பானியத் தலைவர்
கள் நக்கித்துக்கொண்டிருக்கிறார்கள்.

---

## மேஜர் கிளெமெண்ட் ஆட்லி.

### பிரிடிஷ் புதிய பிரதம மந்திரி.

குளோர்வி போல்டன்.

(நியூஸ் க்ரானிகள்).

ஜனங்களுக்குத் தலைமை வகிக்கும்படி ஏற்பட்டபோதிலும் மிஸ்டர் கிளெமெண்ட்
ஆட்லி ஜனங்களுடன் நெருங்கிப்பழகியவரல்ல.

அவர் புட்னியில் நியாயதிவாதிக்குப் பிறந்தவர். பிரிடிஷ் இந்தியாவுடன் சம்பந்தம்
பெற்ற அநேகர்கள் கல்வி கற்ற ஹெயில்பரி ஸர்வ கலாசாலையிலிருந்து அவர் ஆக்ஸ் போர்டி
லுள்ள யூனிவர்ஸிட்டி காலேஜுக்குச் சென்றார்.

20 வயது வருமுன் அவருக்கு லண்டனின் ஈஸ்ட் எண்டிலுள்ள ஜனசமூக நிலைமையைக்
கண்டு தாபம் உண்டாயிற்று. அவர் ஈஸ்ட் எண்டிக்குச்சென்று அங்குவாசம் செய்து கப்பல்
தள வேலையிலமர்ந்து ஜீவனம் செய்து வந்தார். அவர்கள் ஜனசமூகக்கக்ஷியில் சேர்ந்து
கொண்டார். அவர் இன்னர் டெம்பிள் நியாய வாதிகளுடன் சேர்ந்து கொண்டார். பிறகு
டாயின்பீ ஹாலின் காரியதரிசியாக ஆனார். அதன்பின் லண்டனின் பொருளாதார ஸ்கூலில்
ஆசிரியராக ஆனார்.

முதல் உலக யுத்தத்தில் அவர் தெற்கு லங்காஷயர் ரெஜிமெண்டிலும் டாங்கிப் படையி
லும் சேர்ந்து போர் புரிந்தார். அதன்பின் மறுபடியும் ஈஸ்ட் எண்டுடன் தொடர்பு
ஏற்படுத்திக்கொண்டார். 36-வது வயதில் அவர் லைம் ஹவுஸ் தொகுதிக்கு பார்லிமெண்டு
அங்கத்தினராக ஆனார்.

முதலாவது தொழிற்கக்ஷி நிர்வாகத்தில் ராம்ஸே மாக்டொனல்ட் அவருக்கு ஜூனியர்
உத்தியோகத்தை வழங்கினார். ஆகிலும் மிஸ்டர் ஆட்லி டோரிகளிடம் செய்நன்றியுள்ளவ
ராகயிருந்தார். 1927-ம் வருஷத்தில் அவரை இந்தியாவுக்குச் சென்ற ஸைமன் கமிஷனின்
அங்கத்தினராக டோரிகள் அனுப்பினார்கள். மௌனமாக அவர் இருந்தபோதிலும் அவர்
கூர்மையாக விஷயங்களை கவனித்து வந்தார்.

காமன்ஸ் சபையில் ஜார்ஜ் லான்ஸ்பரிக்கு பதிலாக தொழிற்கக்ஷியின் தலைவராகவும்
அதன் மூலம் எதிர் கட்சித் தலைவராகவும் வரும் வரையில் காமன்ஸ் சபை அவருடைய
பூரா சக்தியையும் அறியவில்லை. 1940-ம் வருஷத்தில் மிஸ்டர் சர்ச்சில் நிர்வாகத்தில்
சேர்ந்து கொள்ளும் வரையில் அவர் அந்த உத்தியோகத்தையே வகித்துவந்தார். எதிர்க்
கக்ஷியிலிருந்தபொழுது அவருடைய அலுவல் சுலபமானதாக இல்லை. மாக்டொனல்டின்
கூட்டு மந்திரி சபை தொழிற்கக்ஷிக்கு ஆபத்தான நிலைமையை உண்டுபண்ணி விட்டது.
ராஜீய முறையில் கக்ஷிமாறியதையும், ஜப்பான மஞ்சூரியாவை ஆக்ரமிக்கும் சமயத்தில்
உள்நாட்டு விஷயங்களில் கவனம் செலுத்தப்பட்டதையும் குறித்து மாக்டொனல்டை அவர்
நிந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

லைம் ஹவுஸிலிருந்து வந்த மாஜி கப்பல் தள வேலைக்காரருக்கு ஹெயில்பரியும் ஆக்ஸ்
போர்டும் அயல்நாட்டு உள்நாட்டு விவகாரங்களில் விரிவான அபிப்பிராயத்தை வளர்த்
செய்தன. உள்நாட்டு விவகாரங்களும் அலக்ஷியம் செய்யப்படவில்லை.



பிற்போக்குக் கக்ஷியின் விருப்பங்களை ஆட்லி ஆதரிக்கிறார் என்று நினைத்தவர்கள்
ஆச்சரியப்படும் படியாக அவர் ஸ்பானிஷ் உள்நாட்டுக் கலகத்தை பலமாகக் கண்டித்துப்
பேசினார். மஞ்சூரியாவின் கடைமைகளை அறிந்த அவர் ஸ்பானிஷ் உள்நாட்டுக் கலகம்
கொஞ்சம் கொஞ்சமாக விருத்தியடைந்து உலக யுத்தமாக மாறிவிடும் என்றும் அதிகாரத்தை
விரும்புகிறவர்களின் பேராசையைப் பூர்ணமாக அழித்தால்தான் இது நிவர்த்தியாகுமென்றும்
அவர் அறிந்தார்.

நடுநிலைமையுடனிருப்பது அசாத்தியம் என்று அவர் வாதம் செய்வார். பிரிடனிடமிருந்து
ஆயுதங்களை வாங்க ஸ்பானிஷ் தொழிற்கக்ஷி நிர்வாகத்துக்கு உரிமை அளிக்கப்படவேண்டு
மென்று அவர் வற்புறுத்தினார். 1937-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் அவர் ஸ்பெயினுக்குச்
சென்றபொழுது குடியரசு கக்ஷிக்காரர்கள் அவரை குதூகலமாக வரவேற்றார்கள். மேஜர்
ஆட்லி கம்பெனி என்ற படைப்பகுதியை ஸ்யாதிபெற்ற ஸர்வதேச பிரிகேட் அகாரணமாகத்
தயார் செய்யவில்லை. பிரிடனில் ஏற்பட்டிருக்கும் நிர்வாக மாறுதல் பிராங்கோவுக்கு மரண
தண்டனை விதித்ததற்கு ஒப்பானதாக இருக்கும். மிஸ்டர் ஆட்லி ஒரு எஃகு போன்ற
விரோதி என்று பாஸிஸ்டுகள் கண்டுகொண்டார்கள் என்பது போற்றத்தக்கது.

எதியோப்பியா போரைப்பற்றி ஆட்லிக்குள்ள மனப்பான்மையைக்கண்டு ஒரு இதாலியர்
அவரை மலயுத்தத்துக்கு அழைத்தான். அதற்கு மிஸ்டர் ஆட்லி பின்கண்ட பதில் எழுதி
அனுப்பினார். "ஸ்வதந்திர நாட்டிலுள்ள ஸ்வதந்திரமுள்ள ஆங்கிலேயர் அவருடைய
நிர்வாகத்தினுடையவும் மற்ற எந்த நிர்வாகத்தினுடையவும் நடவடிக்கைகளைப்பற்றி
அவருடைய சொந்த அபிப்பிராயத்தை வெளியிட ஸ்வதந்திரம் பெற்றிருக்கிறார் என்றும்,
ஸ்வதந்திர பார்லிமெண்டின் அங்கத்தினரான எவரையும் அவருடைய அபிப்பிராயத்தை
வெளியிடமுடியாமல் எந்த அருட்டலும் செய்ய முடியாதென்றும் அறியுங்கள். மல்யுத்தம்
காட்டுமிராண்டித்தனமானது. பிராசீன வழக்கமுள்ளது. இந்தமுறை பிரிடனில் வெகு
காலத்துக்குமுன் கைவிடப்பட்டது. ஏனெனில் அதன் மூலம் பலசாலிதான் வெற்றி
பெறுவான்.

அதன்பின் அவர் மூனிக் ஒப்பந்தத்தைப்பற்றி குறைகூறினார். சமாதானக்கொள்கையை
அவர் பலமாகக் கண்டித்துப்பேசினார். "இது கொள்கையல்ல, இது ஒருவிதமான மனப்
பான்மை. பிறர் சொல்லுக்குக்கட்டுப்படும் மனப்பான்மை" என்று அவர் சொன்னார்.

ஜெர்மனியின் அக்கிரமப்போரை அவர் வெறுத்தார். ஆகிலும் 1939-ம் வருஷத்தில்
ஆரம்பிக்கப்பட்ட கட்டாயப்படை திரட்டை அவர் ஆக்ஷேபித்தார். இதற்கு அவருக்குத்
தகுந்த காரணமுண்டு. இதன் மூலம் தொழிலாளிகளும் திரட்டப்படுவார்கள் என்று
அவர் பயந்தார். பணக்காரர்களைத் திரட்டினால் நலமாக இருக்குமென்று அவர் அபிப்
பிராயப்பட்டார்.

பரமவிரோதி என்று ஐரோப்பாவிலுள்ள பாஸிஸ்டுகள் மட்டும் நினைக்கவில்லை. பிரிடனி
லுள்ள அவமதிக்கப்பட்ட பாஸிஸ்டுகளும் கிழக்கு லண்டனில் அவருக்குக் கிடைத்திருந்த
அபாரமான கீர்த்தியைக்கண்டு பொறாமைப் பட்டார்கள். ஒரு சமயத்தில் அவரை பலாத்
காரமாக தூக்கிச் செல்ல முயற்சி செய்து அதில் அநேகமாக வெற்றிபெற்றார்கள்.

அவர் எல்லாவிதமான "சட்டையினரையும்" வெறுக்கிறார். அவர் சொல்லுகிறார்
"நீலச்சட்டையினர், பச்சை சட்டையினர், செஞ் சட்டையினர், அல்லது எந்த சட்டை
யினராக இருந்தாலும் நான் யதேச்சாதிகாரத்தை ஆக்ஷேபிக்கிறேன். பருத்தி ஆடை
யணிந்து அதிகாரம் வகிக்கிறவர்களையும் நான் ஆதரிக்கவில்லை. எல்லாதேசங்களிலும் எல்லா
அதிகாரத்தையும் ஒருவரிடம் ஏகபோகமாக ஒப்படைத்து விடுவதை நாம் காண்கிறோம்."

மிஸ்டர் சர்ச்சில் விஷயமறிந்துதான் மிஸ்டர் கிளெமெண்ட் ஆட்லியை டெபுடி பிரதம
மந்திரியாக நியமித்தார். அவருக்கு ஸமமாக அக்கிரமப்போரை வெறுக்கிறவர் ஆட்லிதான்.
அவரிடம் அபாரமான நம்பிக்கையை வைக்கலாம். அநேகம் தடவைகளில் நிர்வாக காரியங்
களுக்காக மிஸ்டர் சர்ச்சில் பிரிடனிலிருந்து வெளியே செல்லவேண்டியிருந்தது. மிஸ்
டர் ஆட்லி அப்பொழுதெல்லாம் மறைமுகமாக இருந்து அதிகாரம் செலுத்தி வந்தார்.

1941-ம் வருஷம் வேனிற் காலத்தில் மிஸ்டர் சர்ச்சிலின் நடையுடைகளைப்பற்றி
தோஷங்கள் ஏராளமாகக் காணப்பட்டன. அப்பொழுது ஒரு நாள் பிற்பகலில் மிஸ்டர்
சர்ச்சிலை ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைக் கடலில் சந்தித்தாரென்று மிஸ்டர் ஆட்லி ஒலிபெருக்கி
விட்டு அதன்பின் மெல்லிய இனிமையான குரலில் அட்லாண்டிக் சாஸனத்தின் ஷரத்துகளை
அவர் படித்தார்.

பிரிடனின் பிரதம மந்திரிகளாக வந்தவர்களில் ஆட்லியைப்போல் அடக்கமுள்ள
வர் ஒருவரும் கிடையாது. டௌனிங் தெரு 10-ம். வீட்டில் வசிக்கும் அம்மணியிடமும்,

அவருடைய பிள்ளைகளிடமும், மூன்று குமாரத்திகளிடமும் அதே அன்பும் பரிவும் முக்கியமாகக் காணப்படுகின்றன. [illegible]

உயர்ந்த [illegible] [illegible]

இந்த [illegible] [illegible]

---

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 260 (1-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13-8-45 | பத்தாம்பூர் | ... மாலை | 7.00 | 16-8-45 | கல்லூர் | ... மாலை | 7.00 |
| ,, | வைத்திக்கோவில் | ... ,, | 7.30 | ,, | [illegible] | ... ,, | 7.30 |
| 14-8-45 | கொன்னையூர் | ... ,, | 7.00 | 17-8-45 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | மேலச்செருப்பட்டி | ... ,, | 7.30 | ,, | [illegible] | ... ,, | 7.30 |
| 15-8-45 | [illegible] | ... ,, | 7.00 | 18-8-45 | முனிசிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | விராச்சிலை | ... ,, | 7.30 | 19-8-45 | கீரனூர் | ... ,, | 7.00 |
| | | | | ,, | [illegible] | ... ,, | 7.30 |

பிரஸங்கம் 261 (2-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20-8-45 | திருமெய்யம் | ... மாலை | 7.00 | 23-8-45 | புலியூர் | ... மாலை | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 | ,, | [illegible] | ... ,, | 7.30 |
| 21-8-45 | வடவாளம் | ... ,, | 7.00 | 24-8-45 | [illegible] | ... ,, | 7.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | ,, | [illegible] | ... ,, | 7.30 |
| 22-8-45 | அன்னவாசல் | ... ,, | 7.00 | 25-8-45 | முனிசிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| ,, | கீழக்குறிச்சி | ... ,, | 7.30 | 26-8-45 | ஆலங்குடி | ... ,, | 7.00 |
| | | | | ,, | [illegible] | ... ,, | 7.30 |

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4 மணி.

| | | | |
|---|---|---|---|
| 14—8—45 | வடகாடு. | 21—8—45 | [illegible] |
| 15—8—45 | கரம்பக்குடி. | 22—8—45 | [illegible] |
| 16—8—45 | குழிபிறை. | 23—8—45 | ஆலங்குடி. |
| 17—8—45 | புதுக்கோட்டை. | 24—8—45 | [illegible] |
| 18—8—45 | வெட்டன்விடுதி. | 25—8—45 | [illegible] |
| 19—8—45 | [illegible] | 26—8—45 | [illegible] |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. [illegible]

[illegible]

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—16-8-45.

புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ஆகஸ்டு 20௳ திங்கட்கிழமை [ந. 261

பிரஸங்கம் CCLXI.

# இரண்டாவது உலக யுத்தம் முடிந்தது.

## ஜப்பான் ஆயுதங்களைக் கீழே போட்டது.

### ஜப்பானியச் சக்ரவர்த்தி போரை நிறுத்தும்படி படைகளுக்கு உத்தரவிடுவார்.

### பாட்ஸ்டாம் பிரகடனத்தின் ஷரத்துக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

### இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்தது.

புதன்கிழமையன்று இந்திய ஸ்டாண்டர்டு மணி காலை 5-30 மணிக்கு லண்டனிலுள்ள பிரதம மந்திரியான மிஸ்டர் கிளமெண்டு ஆட்லியும், வாஷிங்டனிலுள்ள ஜனாதிபதி ட்ருமானும் ஜப்பான் சரணாகதி செய்தது என்று ஒரே சமயத்தில் வெளியிட்டார்கள்.

சரணாகதியை ஒப்புக்கொள்ள நேசநேச கமாண்டராக மாக் ஆர்தரை நியமித்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் சரணாகதி உடன்படிக்கையில் கையெழுத்துச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன.

நேசநேச கவசம்பூண்ட படைகளுக்கு யுத்தத்தை நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுவிட்டது. எல்லாப் போர்முனைகளிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கும், ஜப்பானியச் சக்ரவர்த்தி அவ்வித உத்தரவுகளைப் பிறப்புவிப்பார்.

சரணகதி செய்யுங்கள் அல்லது நிர்மூலமாக்கப்படுவீர்கள் என்ற பாட்ஸ்டாம் இறுதிக் கடிதம் அனுப்பப்பட்ட மூன்று வாரங்களுக்குப் பின்னும் ஹிரோஷிமாவை அணுகுண்டு அழித்த 10 நாட்களுக்குப் பின்னும், ருஷ்யா போர் தொடுத்த 7 நாட்களுக்குப் பின்னும் ஜப்பான் தோல்வியை ஒப்புக்கொண்டது.

செவ்வாய்க்கிழமை நடு இரவில் ஜப்பானின் 'சரணாகதியை வெளியிட்ட ஒலிபெருக்கியில் மிஸ்டர் கிளமெண்டு ஆட்லி நேசநேச சரணாகதி நிபந்தனைகளுக்கு, ஜப்பான் அனுப்பிய பதிலின் பூரா விவரத்தையும் வெளியிட்டார்.

"பாட்ஸ்டாம் பிரகடனத்தின் ஷரத்துக்களை அமுலுக்குக் கொண்டுவரப் போதுமான நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு கையெழுத்துச் செய்ய ஜப்பானிய நிர்வாகத்துக்கும், சாம்ராஜ்ய தலைமைக் காரியாலயத்துக்கும் அதிகாரம் அளிப்பதாக சக்ரவர்த்தி சொல்லியிருக்கிறார்".

இந்தத் தகவலை ராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளுக்கு அனுப்பி, அவர்களிடம் உள்ள படைகளுக்கு போரை நிறுத்தும்படிக்கும், ஆயுதங்களைக் கொடுத்துவிடும்படிக்கும் உத்தரவனுப்பவும் அவர் தயாராக இருக்கிறார்.

ஜப்பானிய பதில் பாட்ஸ்டாமில் பிரகடனத்தில் சொல்லப்பட்ட நிபந்தனையற்ற சரணாகதியை ஜப்பான் ஒப்புக்கொண்டது என்று கருதுவதாக ஜனாதிபதி ட்ரூமான் சொன்னார்.

ஜப்பானிய பதில் செவ்வாய்க்கிழமை இரவு ஸ்விட்ஸர்லாந்து மணி 7·10-க்கு ஸ்விஸ் நிர்வாகத்தினிடம் கொடுக்கப்பட்டது.

அதன் வாசகம் பின்வருமாறு:—பாட்ஸ்டாம் பிரகடனத்தின் ஷரத்துக்களை ஒப்புக்கொண்டதாக ஆகஸ்டு மீ 10௳ அன்று வெளியிடப்பட்டு, அதற்கு அமெரிக்க மந்திரியான மிஸ்டர் ஜேம்ஸ் பியர்ன்ஸ் ஆகஸ்ட் மீ 11௳ அன்று அமெரிக்க-ஆங்கில பிரிடன்-ருஷ்ய-சீன நிர்வாகங்களின் சார்பாக அனுப்பிய பதில் சம்பந்தமாக ஜப்பானிய நிர்வாகம் அந்த வல்லரசுகளுக்குப் பின் கண்ட பதிலை அனுப்புகிறது.

ஜப்பானியச் சக்ரவர்த்தி பாட்ஸ்டாம் பிரகடனத்தில் கண்ட ஷரத்துக்களை ஜப்பான் ஒப்புக்கொண்டதைப்பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.



# புதுக்கோட்டையில் வெற்றி தினக்கொண்டாட்டம்.

## 18—8—45 அன்று டவுன் ஹாலில் மாட்சி தங்கிய மன்னர் பிரான் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

சீமாட்டிகளே, சீமான்களே,

இன்று நாம் இந்தியாவின் வெற்றியைக்கொண்டாடுகிறோம் என்று மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்கள் சொன்ன மொழிகளை நான் மறு முறை சொல்லாமலிருக்க முடியவில்லை. இந்த யுத்தத்தில் நமக்கு மிகவும் கெடுதலை விளைவிக்கக்கூடிய போர் நமது நாட்டின் வாசற்படியிலேயே நடைபெற்றதென்று சொல்லலாம். சில மாதங்களுக்கு முன் வரையில் இந்தியாவுக்கு எந்த நிமிஷமும் அபாயம் நேரிடும்போலிருந்தது. ருஷ்யா ஜப்பான் பேரில் போர் தொடுத்ததும், ஜப்பான் பேரில் அணுகுண்டு வீசப்பட்டதும் ஜப்பானின் சரணாகதியை துரிதப்படுத்தி, எதிர் பார்த்ததற்கு முன்னதாகவே யுத்தம் முடிவுக்கு வந்தபோதிலும், அமெரிக்க படையினுடையவும், சாம்ராஜ்யப் படையினுடையவும், முக்கியமாக, பிரிடிஷ் கடற்படையினுடையவும், பிரிடிஷ் சக்தி வாய்ந்த விமானப் படையினுடையவும், உதவி பெற்ற இந்திய சேனைதான் எதிரியை அடிபணியச் செய்ததற்கு முக்கிய காரணமாக இருந்தது.

இந்த வெற்றி சந்தோஷத்தை உங்கள் எல்லோருடனும் பகிரங்கமாகவும், ஒன்று சேர்ந்தும், பகிர்ந்துகொள்ளுவதற்குத்தான் நான் இங்கு வந்துள்ளேன். இந்த மகத்தான வெற்றியைவிட நமது வாழ்க்கையில் வேறொரு சந்தோஷகரமான சம்பவம் இருக்கமுடியாது.

இந்த வெற்றியை நாம் அடைவதற்காக நமக்காக உயிர் துறந்த லக்ஷக்கணக்கான போர் வீரர்களுக்கும் சொல்லமுடியாத துயரங்களை அனுபவித்த பொது மக்களுக்கும் நன்றிசெலுத்துவது நமது முதலாவது கடமையாகும்.

யுத்தம் ஆரம்பமான முதல் முடிவடையும் வரையில் மதிக்க முடியாதவண்ணம் பேருதவி செய்திருக்கும் அமெரிக்காவுக்கும், இந்த கோரமான, பெருநாசம் விளைவித்த யுத்தத்தில் நம்முடன் சேர்ந்து தீரத்துடன் போரை நடத்திய மற்ற நேசநாடுகளுக்கும் நமது வந்தனம் உரித்தாகும்.

சத்தியமும், நீதியும் இறுதியில் வெற்றிபெறும் என்ற மற்றொரு உண்மையையும் இந்த வெற்றி வெளிப்படுத்தியிருக்கிறது. இதை நாம் மனதில் இறுத்தி வைத்துக்கொண்டு ஒழுங்கான மார்க்கத்தையே எப்போதும் நாம் கடைப்பிடிப்போம். மேலும், இந்த வெற்றி, பிரார்த்தனையின் பலனையும் ஸ்தாபித்திருக்கிறது. இந்த வெற்றி கடவுளின் நன்கொடை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சாச்வதமான சமாதானமும், சாந்தமும், சந்தோஷமும் உலகில் நிலைபெறவேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

நேசதேசத்தாரின் வெற்றிக்கு நமது ஸமஸ்தானம் உதவியளிப்பதற்காக, புகழக்கூடிய வகையில் யுத்த முயற்சியை ஆதரித்து, அதற்கு வேண்டிய அளவு ஒத்தாசை செய்தவர்களாகிய உங்களில் ஒவ்வொருவருக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் வந்தனம் செலுத்துகிறேன். நமது ராஜ சக்ரவர்த்திக்கு ஆதரவளிக்கவேண்டுமென்று நான்விடுத்த வேண்டுகோளுக்கு நீங்கள் எல்லோரும் சிறந்த முறையில் இணங்கி முன் வந்தீர்கள் என்பதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறேன், என்று சில மாதங்களுக்கு முன் நான் கூறியதை இப்பொழுது மறு முறையும் வெளியிடுகிறேன்.

கடைசியாக, நமது தேசத்தினுடையவும், நமது சமஸ்தானத்தினுடையவும்
அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் பாதிக்கக்கூடிய மகத்தான, அதிக சிரமமுள்ள
பிரச்னைகளை நாம் முழுமனதுடனும், ஆர்வத்துடனும் இனிமேல் ஆலோசனை
செய்யவேண்டும் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். நாட்டின்
முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும் உங்களில் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்
பும், ஒத்தாசையும் அவசியமாகும். எதிர் காலம் சந்தோஷகரமாக இருக்கும்படி
நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சிறந்த முயற்சியைச் செய்து வருவோமாக.

நமக்கு உதவியளித்து நம்மை ரக்ஷிக்குமாறு சர்வவல்லமையுள்ள கடவுளை
மனமுவந்து நாம் பிரார்த்திப்போமாக.

---

## மாக்ஷிமை தங்கிய ராஜ சக்ரவர்த்தியின் யுத்த முடிவு பிரகடனம்.

### 1945-ளு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி சொற்பொழிவுக் குறிப்புகள்.

"ஜப்பான் சரணடைந்ததின் மூலம் உலகத்தாருக்கு ஏற்பட்டிருந்த அவசியமான துயரங்
களுக்குக் காரணமாக இருந்த ஆறு வருஷப் போர் முடிவடைந்தது. குடியேற்ற நாடுக
ளுடையவும், சாம்ராஜ்யத்தினுடையவும் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் வந்த கவசம் பூண்ட
படைகள் தீவிரமான தைரியத்துடனும், சகிப்புத்தன்மையுடனும், போரை நடத்தி
இருக்கின்றன.

அவர்களுக்கும் இந்த வெற்றியை சம்பாதிக்க நமக்கு உதவியவர்களுக்கும் நமது
நேசநாடுகளுக்கும் நமது நன்றியை செலுத்துவது உரித்தாகும்.

யுத்தத்தில் செய்த தியாகங்கள் வீணாகாதபடி உலகத்தில் ஸ்வதந்திரத்தையும், சமா
தானத்தையும், ஜனசமூக நீதியையும், நிலைநாட்டுவதற்காக குடியரசு நாடுகளின் நிர்வாகங்
களுடனும் சமாதானத்தை விரும்பும் நாடுகளுடனும் நெருங்கி ஒத்துழைப்பதென்று நான்
என்னுடைய நிர்வாகம் உறுதிகொண்டிருக்கிறது.

### 15—8—45 தேதியுள்ள ஒலிபெருக்கிலிருந்து.

நாம் இழந்தவற்றைத் திரும்பவும் சம்பாதிக்க நாம் சாச்வதமான சமாதானத்தையும்,
ஐகிக, ஆத்ம லாபங்களை அடையவும் நாம் முயலவேண்டும்.

தூரக்கிழக்குப் போர்கள் சரித்திரத்தில் அநேக காரணங்களுக்காக கியாதிபெற்ற
வைகள். அவற்றில் ஒரு அம்சம் எனக்கும், சாம்ராஜ்ய மக்களான உங்களுக்கும்
பெருமை கொள்ளக்கூடியது.

இந்தப் போர்களில் அவர்கள் தோளோடு தோள் நின்று போரை நடத்தியிருக்கிறார்
கள். ஒவ்வொரு தேசத்திலிருந்தும் அவர்கள் வந்திருக்கிறார்கள். பிரிட்டனும், சாம்
ராஜ்யநாடுகளும், இந்தியாவும், குடியேற்ற நாடுகளும் படைகளை அனுப்பியிருக்கிறது.

"அவர்கள் சகோதர பாவத்துடன் போர் புரிந்தார்கள். தீரத்தினாலும், சகிப்புத்தன்மை
யாலும் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்து யுத்தக்
கொடுமைகளை அநுபவித்த ஸ்திரீகளுக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தை நான்
செலுத்துகிறேன்."

---

## மன்னர்பிரானுக்குப் பாராட்டுகள்.

### I

### மிஸ்டர் சர்ச்சில்.

"மறுபடியும் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளும் சாம்ராஜ்யமும் இந்த கோரமான யுத்தத்
திலிருந்து பத்திரமாகவும், குறைவுபடாமலும், ஒன்றுபட்டும் வெளியேறி விட்டது. நமது



வாழ்க்கைக்கு அபாயம் உண்டுபண்ணின பயங்கரமான கொடுங்கோன்மைகள் அழிக்கப்
பட்டு மண்ணைக் கவ்விவிட்டன. மன்னர்பிரான் முடியில் இப்பொழுது அதிக சோபை
காணப்படுகிறது. இந்த சோபை அநேக போர் வீரர்கள் அரியா வண்ணம் கோர
மான ராணுவ நடவடிக்கைகளுக்குப் பின் ஏற்பட்டிருக்கிறது. மேலும் இந்த அழகுடன்
மனிதவர்க்கத்தின் நம்பிக்கையும், சந்தோஷமும், ஆசீர்வாதமும் கலந்திருக்கிறது. இதுதான்
உண்மையான கீர்த்தி, நமது எதிர்கால நடவடிக்கையிலும் இந்த ஜோதி காணப்படட்டும்."

### II

### மிஸ்டர் ஆட்லி.

மன்னர்பிரான் என்ற ஸ்தாபனத்தை நாம் பாராட்டுகிறோம்.
மன்னர் பிரானும் ராணியாரும் காண்பித்த பக்தியை ஒரு பொழுதும் மறக்க
முடியாது. அவர்கள் ஜனங்களுக்கும் மன்னர்பிரானுக்குமுள்ள பாந்தவ்யத்தை
பலப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த பாந்தவ்யம் ஆடம்பரமாக வெளிப்படையாக உள்ளதல்ல. இது ஆழ்ந்த அன்பி
னாலும் நல்லுணர்ச்சியினாலும் ஏற்பட்டதாகும். இந்நாட்டில் மிஸ்டர் சர்ச்சில் சொன்ன
பிரகாரம், தேசத்தினிடமும், தேசமக்களிடமும் அதிக அன்பும், ஜனநாயக முறையிலுள்ள
ஜனப்பிரதிநிதிசபை, நிர்வாகம் முதலியவற்றை அறிந்தவருமான ஒரு மன்னர் இருக்கும்
பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. சமமேற்படக்கூடிய எதிர் காலத்தில் நமது அரசியல் நல்ல
முறையில் வேலை செய்து வந்தால் அது சச்சரவுகள் மிகுந்த உலகில் ஸ்திரத்தன்மைக்கு
உதாரணமாக இருக்கும்.

---

## 15—8—45 அன்று வைஸ்ராய் அவர்களின் ஒலிபெருக்கு.

---

மேற்கிலும், கிழக்கிலும் கிடைத்த வெற்றியில் இந்தியா அதிகப்பங்குக்கு பாத்தியம்
கோண்டாடலாம்.

அநாகரிகமுள்ள எதிரிகளைவிட சாமர்த்தியத்திலும் தேகவலிமையிலும், சிறந்தவர்
களென்றும் சிறந்த போர்வீரர்களென்றும் இந்தியப் போர்வீரர்கள் ருஜுச்செய்து
விட்டார்கள்.

சரித்திரத்திலேயே மிகவும் பெரியதும், பெரும் நாசம் விளைவித்ததுமான போர் ஜப்பானின்
நிபந்தனையற்ற சரணாகதிமூலம் முடிந்தது. ஜெர்மனியைப்போல அதுவும் துர்கதியை
அடைந்தது. அதிகப் பேராசையும், ராணுவ சக்தியும் பெற்ற ஜப்பான் இந்தியாவுக்கு
உண்மையான அபாயம் விளைவிக்கக்கூடியதாக இருந்தது. அதன் தோல்வி இந்தியாவின்
விசேஷ வெற்றியாகும். 1942-ம் வருஷ வேனிற் காலத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்டிருந்த
அபாயத்தை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். ஜப்பானியப் படையெடுப்பு ஏற்பட்டிருந்
தால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்குமென்றும் ஒருவரும் மதிக்கக்கூடவில்லை.

### அக்கிரமப் போர்.

ஜப்பானின் அக்கிரமப்போர் 1931-ம் வருஷம் பழமையான, புத்திசாலித்தனமுள்ள,
ராணுவ முறையில் பலஹீனமான நாட்டினிடமிருந்து மஞ்சூரியாவைப் பிடித்தபொழுது
ஆரம்பமாயிற்று. ஆறு வருஷங்களுக்குப்பின் சர்வதேச சங்கம் சக்தியற்றதென்றும்,
ஜப்பானை லாபத்தைக் கக்கிவிடும்படி செய்ய பிரியப்படவில்லையென்றும் கண்டுகொண்ட
ஜப்பான் சைனாவின் ,தலைநகரமான ஷாங்கையைத்தாக்கிற்று. இப்பொழுது சீனர்கள்
பலமாக எதிர்த்துப்போராடி அநேக கஷ்டங்களை சகித்துவந்தார்கள். அந்த எதிர்ப்பு அது
முதல் நீடித்திருந்து இப்பொழுது வெற்றிகரமாக முடிந்துவிட்டது. சில வருஷங்களுக்குப்பின்
கிழக்கு உலகில் ஆதிக்கம்பெற ஜப்பான் பேராசைகொண்டது. சமாதானம் பேசிக்கொண்டி
ருக்கும்பொழுது வஞ்சக புத்தியுடன் அது கபடமாக பேர்ல் துறைமுகத்தைத் தாக்கிற்று.
மலேயாவையும் மற்றொரு பலஹீனமான வல்லரசின் நாடு வழியாகச்சென்று படையெடுத்தது.

சிறிதுகாலம் ஜப்பானின் கை ஓங்கி நின்றது. மலேயா, சிங்கப்பூர், போர்னியோ, ஜாவா,
பர்மா முதலிய இடங்களில் அதற்கு வெற்றி கிடைத்ததால், தயாராக இல்லாத இந்தியாவுக்கும்,
ஆஸ்திரேலியாவுக்கும் சமீபத்தில் ஜப்பான் வந்துவிட்டது. அது பிலிப்பைன்ஸையும்
பிடித்துக்கொண்டது.

## ஜப்பானியர்களின் வெற்றி மறைவு.

ஜப்பானிய வெற்றிகளின் முடிவு என்ன? அமெரிக்காவின் பலமான ராணுவ பலம் ஒன்று திரட்டப்பட்டது. மேற்குப் போர்முனையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பிரிடன் இந்தியப் பாதுகாப்புக்காக அமெரிக்கப் படைகளைக்கொண்டுவந்தது. ஆஸ்திரேலியர்கள் தங்களுடைய நாட்டைக் காப்பாற்ற முன்னேறித் தாக்குவதென்று உறுதி கொண்டார்கள். ஜப்பானிய முன்னேற்றம் தடைப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகவும் அதிக கஷ்டத்துடனும் ஜப்பானியர்கள் பின் துறத்தியடிக்கப்பட்டார்கள். ஜப்பானியரின் கீழ்த்திசை, அல்லது உலக சாம்ராஜ்யக்கனவு ஒரு வருஷம் நீடித்திருந்தது. சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தைப் பூராவாக அவமதித்ததிலும், யுத்தக் கைதிகளையும், பொது ஜனங்களையும், ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஜனங்களையும் கொடூரமாக நடத்தியதிலும், அநாகரீகமுள்ள ஒரு தேசம் நாகரீகப் போர்வையைப் போர்த்திக்கொண்டிருக்கிறதென்று ஜப்பான் வெளிப்படுத்தி விட்டது.

ஜப்பானின் கடற்படை, ராணுவப்படை சக்திபெற்றதென்ற எண்ணமும் அழிக்கப்பட்டு விட்டது. அதன் கடற்படையை சாமர்த்தியமற்றவர்கள் ஓட்டிவந்தார்கள். அது போரில் சிதர அடிக்கப்பட்டுவிட்டது. நேசதேசப் படைகளுக்குமுன் ஜப்பானிய விமானப்படை தர்பலமுள்ளதென்று வெளியாகிவிட்டது. ஜப்பானிய தரைப்படைகளின் தந்திரத்தை நாம் அறிந்தவுடன் அவைகள் நன்றாய் முறியடிக்கப்பட்டன.

## வெற்றிபெற்ற வீரர்கள்.

இன்று அநேக, மகத்தான அபாயங்களிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். இந்தியா பெருமைகொள்ளக்கூடிய மூவகைப்பட்ட படைகளையும் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளுவோம். அவர்கள் ஆயிரக்கணக்காக மாகாணங்களிலிருந்தும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து இந்துமகா சமுத்திரம் வரையிலுள்ள இந்திய ஸமஸ்தானங்களிலிருந்தும், வந்திருக்கிறார்கள். அத்துடன் பழமையான, ராஜ விசுவாசமுள்ள நேபாலிலிருந்து வந்த வீரம் பொருந்திய படையும் சேர்ந்துகொண்டது.

இன்று உலகம் பூராவிலும் இந்திய சேனையின் தீரமும், சாதுர்யமும் பகற சாற்றப்பட்டிருக்கிறது.

நமது கடல் மார்க்கங்களைக் காபந்து செய்வதற்காக அபாரமான அபாயங்களுக்குள்ளான சாமான் கப்பலோட்டிகளையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம். நம்மைப் பாதுகாக்க உயிர் துறந்தவர்களையும் 2,500 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட பின் கண்ட கிரேக்க சாசனத்தின்படி ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம். அதன் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:-

அவர்கள் உறுதியுடன் இருந்திராவிடில், நமது நகரங்கள் தீக்கிரையாகிவிடும்.

நமக்கு சுதந்திரம் வழங்குவதுதான் அவர்களின் லக்ஷியம்.

இந்த முயற்சியில் அவர்கள் உயிர் துறந்தார்கள்.

அநேக வருஷங்களாக, நம்மையும் நம்முடைய சேனைகளையும் போஷித்துவந்த தொழிற்சாலை, விவசாயத் தொழிலாளர்களையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளுவோம். A. R. P. வேலைக்காரர்களுடையவும், தொழிலாளர்களுடையவும், ரயில்வே வேலைக்காரர்களுடையவும், மற்றவர்களுடையவும் முயற்சிகளை நாம் ஞாபகப்படுத்திக்கொள்வோம்.

மேற்கிலும் கிழக்கிலும் கிடைத்த வெற்றியில் இந்தியா ஒரு பெரும் பங்குக்கு பாத்தியம் கொண்டாடலாம்.

பெரிய உத்தியோகத்திலிருந்தாலும், சாதாரணமான வேலையிலிருந்தாலும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப்பற்றற்றவர்களுக்கும், உறுதியுடனும், தீரத்துடனும், அதிக பிரயாசையுடனும் வெற்றிக்கு பேருதவிசெய்த ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், பேருதவி செய்திருக்கும் ஸமஸ்தான மன்னர்களுக்கும், இந்த போராபத்திலிருந்து இந்தியாவைக் காப்பற்றியதற்காக நான் நன்றி செலுத்துகிறேன்.

நமக்கு உதவி செய்தவர்களுக்கும், நேசதேசத்தார்களுக்கும், மிகவும் நெருக்கடியான சமயத்தில் நம்பிக்கையை இழக்காத பிரிடனுக்கும், பொதுவான லக்ஷியத்துக்கு சிறந்த உதவிசெய்த அமெரிக்காவுக்கும், பிடிவாதமுள்ள ருஷ்ய மக்களுக்கும், அஞ்சா நெஞ்சம் படைத்த சைனாவுக்கும் இந்தியாவின் சார்பாக நான் வந்தனம் செலுத்துகிறேன். இந்நாடுகளின் யுத்தகாலத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் நாம் நன்றிசெலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.



## முயற்சி தளரக்கூடாது.

எதிர் காலத்தின் தோற்றமென்ன. சமாதானம் வந்துவிட்டாலும் அநேக சிரமமான ராஜீய, ஜனசமூக, பொருளாதார பிரச்னைகள் இருக்கின்றன. நாம் ஆறு வருடங்களாக யுத்த சிரமங்களை அனுபவித்திருக்கிறோம். அநேகர்கள் கஷ்டப்பட்டு சோர்வடைந்திருக்கிறார்கள். ஆகிலும் நாம் தளர்ச்சியடைவதற்கில்லை. எதிர் காலத்தில்தான் நாம் முக்கியமான அலுவல்களைச்செய்யவேண்டும். நம்மைக்காப்பாற்றியவர்களுக்கும், நமது போர்படையிலுள்ளவர்களுக்கும், நமது விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், நாம் செலுத்தவேண்டிய நன்றியை வாக்கினால் செலுத்தினால் மட்டும் போதாது. அவர்களின் வாழ்க்கையை அபிவிருத்திசெய்ய நாம் முயலவேண்டும். அவர்கள் நமக்கு சம்பாதித்துக் கொடுத்த சமாதானத்தை தைரியத்துடனும் புத்திசாலித்தனமாகவும் உபயோகிக்க நமக்கு கடவுள் தைரியத்தையும் நல்லறிவையும் கொடுப்பாராக.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 10—8—45. (வெள்ளிக்கிழமை). | ருஷ்யா கொரியாவைப் படையெடுத்தது. பாட்ஸ்டாம் மகாநாடு ஷரத்துக்களை ஒப்புக்கொள்ளத் தயார் என்று ஜப்பானிய ரேடியோ ஒலிபெருக்கிற்று. |
| 11—8—45 (சனிக்கிழமை). | ஜப்பானியரின் கோரிக்கையை நேசதேசத்தார்கள் பரிசீலனை செய்கிறார்கள். |
| 12—8—45 (ஞாயிற்றுக்கிழமை). | ஜப்பானிய சக்ரவர்த்தி நேசதேச உயர்தர கமாண்டரின் ஆதிக்கத்துக்குட்படவேண்டுமென்று நிபந்தனையை நேசதேசத்தார்கள் விதிக்கிறார்கள். |
| 14—8—45 (செவ்வாய்க்கிழமை). | ருஷ்யர்கள் முன்னேறி வருகிறார்கள். |
| 15—8—45 (புதன்கிழமை). | ஜப்பான் சரணாகதி செய்தது. இரண்டாவது உலக யுத்தம் முடிந்தது. ஜப்பானிய மந்திரி சபை ராஜிநாமா செய்தது. ருஷ்ய-சீன ஒப்பந்தம் மாஸ்கோவில் பூர்த்தியாயிற்று. |

### (B)-செய்திச் சுருக்கம்.

A. பிரிடிஷ் அமெரிக்க நடவடிக்கை.—

(1) ஆகஸ்டு 11ௗ அன்று அமெரிக்கப் படைகள் வடக்கு மாரியனாஸ் உள்ள அக்ரிஹான், சாரிகான், ஆஸ்கன்ஷன் ஆல்மகான, மாங் முதலிய தீவுகளை ஆக்கிரமித்தன.

(2) ஆகஸ்டு 12ௗ அன்று பிரிடிஷ்-அமெரிக்க கடற்படையிலிருந்த பிரிடிஷ் விமானங்கள் ஹான்ஷு பேரில் பறந்து சென்டைபேரில் குண்டுகளை வீசின. அன்று பிரிடிஷ் கடற்படைகள் காமைஷீ பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன. 8 அமெரிக்க நீர்மூழ்கிகள் ஜப்பானியக் கடலில் 46 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்தன.

(3) 13ௗ அன்று டோக்கியோவை விமானத்தாங்கிகளில் சென்ற 1,200, 1,500 சண்டை விமானங்களும் மீன் குண்டுகளைப் போடும் விமானங்களும் தாக்கின. ஒரு ஜப்பானிய விமானம் ஆகினாவாவில் பக்னர் விரிகுடாவில் இருந்த ஒரு அமெரிக்க யுத்தக் கப்பலை தாக்கி அதன் பேரில் குண்டுகளை வீசிற்று.

(4) சரணாகதி செய்யும் வரையில் பிரிடிஷ் அமெரிக்கக் கப்பற்படைகள் டோக்கியோவுக்கு சமீபத்திலும் மற்ற பசிபிக் கடல்களிலும் சஞ்சாரம் செய்து போருக்குத் தயாராக இருந்தன. புதன்கிழமை அன்று இந்திய ஸ்டாண்டார்டு மணி காலை 5½-க்கு லண்டனில் உள்ள பிரதம மந்திரியான மிஸ்டர் கிளமெண்டு ஆட்லியும் வாஷிங்டனில் உள்ள ஜனாதிபதி ட்ருமானும்

ஜப்பான் சரணாகதி செய்தது என ஒரே சமயத்தில் வெளியிட்டனர். ஜப்பானியச் சக்ரவர்த்தியும் போரை நிறுத்தும்படி படைகளுக்கு உத்தரவிட்டார்.

**B. ருஷ்யத் தாக்குதல்.—**

ஆகஸ்டு 9உ அன்று ருஷ்யா போர் தொடுத்தது.

I. மஞ்சூரியா.—(1) யுத்தம் துவங்கினவுடன் ருஷ்யா எல்லைச் சரகத்தைத்தாண்டி மஞ்சூரியாவுக்குள் விளாடிவாஸ்டக் பிராந்தியத்திலிருந்தும் எல்லைப்புற மங்கோலியாவிலிருந்தும் கிழக்கு மஞ்சூரியாவிலிருந்தும் மஞ்சூரியாவுக்குள் நுழைந்தது. ஆரம்பதினத்தன்றே காபாராவஸ்க் பகுதியிலுள்ள ஆமூர், உசூரி நதிகளை ருஷ்யப்படைகள் தாண்டின. ஒரு வாரத்துக்குள் வடக்கு மஞ்சூரியாமுழுவதும் பிடிபட்டது.

(2) ருஷ்ய சேனைகள் மூன்று முனைகளில் மஞ்சூரிய சமவெளியில் முன்னேறுகின்றன. பீகிங்குக்கு அருகிலுள்ள சீன மதில் சுவரையும் அடைந்துவிட்டன. ஜப்பானியர்கள் ஆயுதங்களைப் போட்டுவிடும் வரையில் போர் மூளும்.

(3) கீழ்க்கண்ட இடங்கள் பிடிபட்டன. மஞ்சௌளி, டாலாநூர், கிரின், சாங்சன், காபாராவ்ஸ்க், போக்ராணிச்னயா, சாக்சாலி, ஆய்கன், ஹெய்லார், ஆர்கன், கிட்கிகார், புக்டின், சிக்கி, ஹெய்ஹோ, ஹாலாஸ்-ஆர்ஷான், ஷோலன், சாம்பிஞய், மெண்டேக்.

II. கொரியா.—ருஷ்யர்கள் ஜப்பானியத் துறைமுகமான யூகியில் இறங்கி முக்கிய கடற்படை தளமான ராஷீனை ஆக்கிரமித்தார்கள்.

III. சகாலின் தீவில் ருஷ்யர்கள் ஆன்பேட்டு, யசுடாரு என்ற இடங்களில் இறங்கினார்கள்.

சைனா.—சீனப்படைகள் ஹாங்காங்கையும் சுவான்ஸியையும் திரும்ப ஆக்கிரமித்தனர். ட்ராகன்-டைகர் கணவாயை நோக்கி அவர்கள் முன்னேறுகிறார்கள்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிட்டிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**9—8—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—நாகஸாகி (Nagasaki), (2-வது அடாமிக் குண்டு போடப்பட்டுவிட்டது).

இலக்குகள்.—வட ஹான்ஷூ (Northern Honshu).

துறைமுகம்.—ஹிரோஷிமா (Hiroshima).

எண்ணெய்க் கிணறுகள், சேமிப்பு டாங்கிகள்.-அமாக்ஸாகி (Amagsaki).

பர்மா (Burma).

பாலம்.—பாங்காக் (Bonkok), சிங்கப்பூர் (Singaporc) ரயில்வே.

**10—8—45.** (வெள்ளிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

அர்ஸனல்.—டோக்கியோ (Tokyo).

ரயில்வே ஜங்ஷன்.-மஞ்சூரியா (Manchuria).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**11—8—45.** (சனிக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ரஸ்தா, ரயில் ஸ்தலங்கள், துறைமுகம்.—மஞ்சூரியா (Manchuria).

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**12—8—45.** (ஞாயிற்றுக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளை ஸ்தலங்கள்.—குமாடோ (Kumato), ஓய்டா (Oita).

பர்மா (Burma).

ஜப்பானியக் கப்பல்கள்.—சோயெண்டா (Soenda) ஜலசந்தி.

**13—8—45.** (திங்கட்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

இலக்குகள்.—டோக்கியோ (Tokyo).

ராணுவ ஸ்தாபனங்கள்.—மத்திய ஹான்ஷூ (Central Honshu).

பர்மா (Burma).

துருப்பு முகாம்கள்.—முடானுக்கு கிழக்கில் (Mudon) மோல்மீனுக்கு அருகில்.

**14—8—45.** (செவ்வாய்க்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ரயில் ரோட் ஸ்தலங்கள்.—மாரிபு (Marifu).

கப்பல்கள்.—கூரியின் தெற்கிலுள்ள ஜப்பானியக் கடற்கரை.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

**15—8—45.** (புதன்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானும் சரணடைந்துவிட்டபடியால் எங்கும் நேசதேச விமான நடவடிக்கைகளில்லை.



## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**10-8—45.** (வெள்ளிக்கிழமை முதல் **15—8—45.** (வியாழக்கிழமை).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

பர்மா (Burma).

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ஜப்பானின் சரணாகதி.** உதயமாகும் சூரியன் நிரந்தரமாக அஸ்தமயம் அடைந்தது. 15—8—45-ம் தேதியன்று காலை 5-30-மணிக்கு பாட்ஸ்டாம் மகாநாட்டின் ஷரத்துகளை ஜப்பான் இறுதியில் ஒப்புக்கொண்டதென்று பிரிட்டனும், அமெரிக்காவும் வெளியிட்டன. சரித்திரத்திலேயே முதல் முதலாக ஜப்பானிய சக்ரவர்த்தி ஜனங்களுக்கு பகிரங்கமாகப் பேசி சரணாகதி செய்தியைப் பிரகடனம் செய்திருக்கிறார். சூஸுகியின் மந்திரி சபை ராஜிநாமாச் செய்தது. அதன் யுத்த மந்திரி தற்கொலை செய்துகொண்டார். பஸிபிக்கில் உயர்தர கமாண்டரான ஜெனரல் டக்ளஸ் மாக்ஆர்தர் நேசதேசத்தாருக்காக மணிலாவில் சரணாகதியை ஒப்புக்கொள்ளுவார். இருதரப்பாரும் யுத்த நிறுத்த உத்தரவை பிறப்பித்துவிட்டார்கள்.

அக்கிரமப்போரை முதலில் ஆரம்பித்த ஜப்பான், சர்வதேச சங்கத்தை முதலில் எதிர்த்த ஜப்பான், பேர்ல் துறைமுகத்தை வஞ்சகமாகத் தாக்கிய ஜப்பான் மண்ணைக்கவ்விவிட்டது. படையெடுப்புக்குப் பயந்து சரணாகதியைச் செய்துவிட்டது.

வி வி வி வி வி

**இரண்டாவது உலக யுத்த முடிவு.** உலக யுத்தம் முடிந்தது. முதல் உலக யுத்தத்தைவிட உலகம் அளாவியும் சர்வதேசங்களையும் ஈடுபடும்படி இந்த யுத்தம் செய்துவிட்டது. 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் 3-ம் தேதி ஆரம்பித்த யுத்தம் ஏறக்குறைய ஆறு வருஷங்கள் நடைபெற்றது. சக்திவாய்ந்த கொள்ளைக்கூட்டத்தார்கள் உலகத்தை விழுங்கிவிட உத்தேசித்தார்கள். சமாதான வழியிலிருந்த தேசங்கள் தயாராக இல்லாதபொழுது முறியடிக்கப்பட்டு அடிமைத்தனத்துக்குட்படுத்தப்பட்டன. ஒரு சமயத்தில் பிரளயம் ஏற்பட்டு, குழப்பம் தோன்றி உலகம் கொடுங்கோன்மைக்குட்பட்டுவிடும் போல் தோன்றிற்று. கடவுளின் அருளால், பிரிட்டனின் சவாலும், அதன்பின் அத்துடன் மற்ற நாடுகளும் சேர்ந்து கெட்ட சக்திகளை அழித்துவிட்டன. இன்று நீதியும் நல்லொழுக்கமும் வெற்றிபெற்று ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. உலகத்தில் இனிமேல் இந்த உபத்திரவம் என்றும் ஏற்படாதென்று நம்புவோம்.

கடைசியாக சமாதானம் வந்துவிட்டது. ஆனால் அதற்கு அதிக கஷ்ட நஷ்டம் ஏற்பட்டது. பெரும் நஷ்டம் நின்றுவிட்டது, ஆயினும் பூ மண்டலத்தின் பெரும் பாகங்கள் அழிக்கப்பட்டுவிட்டன, லக்ஷக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் உயிர்துறந்துவிட்டார்கள். வெற்றி பெற்றவர்கள் மனதில் அகம்பாவமும் கர்வமும் இருக்க இடமில்லை. கடவுள் நன்கொடையாக அளித்த வெற்றிக்கு அவருக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும்.

வி வி வி வி வி

**நமது கடமை.** சந்தோஷம் பொங்கும் இச்சமயத்தில் நியாயமான கட்சியில் சேர்ந்து கொண்டவர்களுக்கும், போரில் ஈடுபட்ட நேசதேச மக்களுக்கும் ஜாதியார்களுக்கும், யுத்த ஆயுதங்களைத் தயாரித்த தொழிலாளர்களுக்கும், போர் புரிந்து வெற்றியை சம்பாதித்து வீடு திரும்பும் வீரர்களுக்கும், மற்றும் போரில் உயிர் துறந்து தங்களுக்கும் அவர்கள் ஜனித்த நாட்டிற்கும் அழியாப் புகழை சம்பாதித்தவர்களுக்கும் நன்றி செலுத்துவது நமது கடமையாகும். அவர்கள் அயல்நாடுகளிலோ, அல்லது சமுத்திரத்திலோ உயிர் துறந்திருக்கலாம். ஆயினும் அவர்கள் அழியாத கீர்த்தியையும் வீரப்புகழையும் சம்பாதித்துவிட்டார்கள். எதிர் காலத்தில் தோன்றக்கூடிய சந்ததியார்களுக்கு உலகத்தைப் பத்திரப்படுத்துவதற்கு அவர்கள் அபாரமான தியாகம் செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில், குறைவான அனுபவமும், முஸ்தீப்புகளும் உள்ளவர்கள் சிறந்த முஸ்தீப்புகளும் சக்தியை மிகுதியும் உள்ள படைகளுடன் போரை

நடத்தினார்கள். அதன்பின் அனுபவம் ஏற்பட்டு ஆயுதங்களும் வழங்கப்பட்டபொழுது அவர்கள் எதிரியை நொருக்கி எதிரியை நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்படி கட்டாயப்படுத்தி விட்டார்கள். ஆகையினால் இன்று வெற்றி பெற்றவர்களுக்கு சரணாகதியை ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் சமாதான மேஜைக்குச் செல்லவேண்டியதில்லை.

வி வி வி வி வி

**இறுதி கட்டம்.**

ஆகஸ்டு 10-ம் தேதி ஒரு மணிக்கு ஜப்பானிய ஒலிபெருக்கியில் ஜப்பான் சரணாகதி செய்வதென்று முடிவு செய்துவிட்டதென்று சொல்லப்பட்டது. நேசதேசத்தாருக்கு அனுப்புவதற்காக ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடிஷ் நிர்வாகங்களிடம் ஒரு கடிதமும் கொடுக்கப்பட்டது. ஜப்பானிய சக்ரவர்த்தியின் அரசுரிமைக்குப் பங்கம் ஏற்படக்கூடாதென்று ஒரு நிபந்தனை மட்டும் அதில் கோரப்பட்டிருந்தது. ஆகஸ்டு 11-ம் தேதி இரவு 9-மணிக்கு அதே மத்யஸ்த நாடுகள் மூலம் நேசதேசத்தார்கள் பதிலனுப்பினார்கள். ஜப்பானிய சக்ரவர்த்தி பசிபிக்கிலுள்ள நேசதேச உயர்தர கமாண்டருக்குட்பட்டிருக்கவேண்டுமென்று அதில் விதிக்கப்பட்டிருந்தது. இந்த அவமானமான நிபந்தனையை ஒப்புக்கொள்ளுவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. ஒரு சமயத்தில் ஜப்பானிய நிர்வாகம் குவாமிலுள்ள கடற்தளபதி நிமிட்ஸை சந்தித்துப்பேசிற்று என்று வதந்திகள் உலாவின. இறுதியில் ஜப்பான் முடிவுக்கு வந்தது. 15-ம் தேதியன்று சரணாகதியை ஒப்புக்கொண்டது.

— வி வி வி வி வி

**கடைசி வரையில் போர்.**

யுத்த நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் நேசதேச கமாண்டர்கள் எந்தப் போர் முனையிலும் போரை நிறுத்தவில்லை. இப்பொழுதுதான் எதிரியை அதிகமாகத் தாக்கி பிரமிக்கும்படி செய்யவேண்டும். மஞ்சூரியாவில் ருஷ்யா மின்னல் தாக்குதல் செய்ததுடன் பிரிட்டிஷ் விமானப் படை ஹான்ஷூ பேரில் பறந்து சென்டெய் என்ற கடற்படை தளத்தை நொருக்கிற்று. பிரிட்டிஷ் கடற்படை காமெய்ஷி பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தது. அமெரிக்க நீர்மூழ்கிகள் ஜப்பானியக் கடலில் 46 கப்பல்களை மூழ்கடித்தன. மாரியானுவைச்சேர்ந்த மற்ற 5 தீவுகள் பிடிக்கப்பட்டன. 1,500 விமானங்கள் டோக்கியோவைத் தாக்கி, கவுன்ஸில் அறைகளை நொருக்கின. தென் கிழக்கு ஆசியா போர் பிராந்தியத்தில் கடற்தளபதி மௌண்ட்பேடன் D தினத்துக்குத் தயாராக இருந்தான். சரணாகதிக்கு சற்று முன் நூற்றுக்கணக்கான வெடி விமானங்கள் ஜப்பான் பேரில் வெடி குண்டுகளை வீசின.

வி வி வி வி வி

**ஜப்பானிய சரணாகதிக்கு என்ன காரணம்?**

ராய்ட்டர் சொல்லுகிறபடி பாட்ஸ்டாம் இறுதிக் கடிதத்துக்கு மூன்று வாரங்கள் கழித்தும் அணு குண்டு வீசப்பட்டதற்கு 10 நாட்கள் கழித்தும், ருஷ்யப் படையெடுப்புக்கு ஏழு நாட்கள் கழித்தும் ஜப்பான் சரணடைந்தது. ஆகையால் வெளிப்படையான காரணங்கள், பாட்ஸ்டாம் முடிவுகள், அணு குண்டு, ருஷ்யா. இதற்கு முன்னதாக ஜப்பான் மூலைசப்பட்ட போரிலும் முறியடிக்கப்பட்டிருந்தது. இது ஜப்பான் அறிந்ததே. மூன்று வருஷமாக உறுதியுடன் நடைபெற்ற ஸாலமன்ஸ், நியூ பிரிடன், நியூகினியா, பிலிப்பைன்ஸ், மாரியானுஸ், ஐவோஜிமா, ஒகினாவா, சைனா, பர்மாப் போர்களும், கடல் முற்றுகையும், பசிபிக்கில் நடைபெற்ற விமான நடவடிக்கையும் ஏற்கனவே எதிரியின் முதுகெலும்பை முறித்துவிட்டன. கடைசித் தாக்குதல் ஏற்பட்டது எதிரி சுலபமாக வீழ்ச்சிபெற்றான்.

சரணாகதியை துரிதப்படுத்திய அம்சங்களை நாம் குறைத்துக் கூறவில்லை. மற்ற மகா நாடுகளுடன் ஒப்பிட்டால் பாட்ஸ்டாம் பயனற்றதென்றும் முற்றும் விரோதமானதென்றும் நாம் கருதவில்லை. கருதிய கோஷ்டியிலும் சேரவில்லை. நாம் அதன் விளைவுகளைக்கொண்டு அதன் முக்யத்வத்தை அறியக்கூடும். அணு குண்டை தயாரித்தபின் எதிரி நேசதேசத்தாரின் கைக்குள் அகப்பட்டு விட்டான் என்று நேசதேசத்தார்கள் அறிவார்கள். மனிதவர்க்கத்தினிடம் அனுதாபத்தினால் அவர்கள் மற்றொரு எச்சரிக்கையை அனுப்பினார்கள். நேசதேசக் கைதிகளை வெடிகுண்டு வீசும் பிராந்தியங்களுக்கு ஜப்பான் அனுப்பியதால் இரக்கப்படுவதற்கும் தாமதம் செய்வதற்கும் இடமில்லாமல் போய்விட்டது. யுத்த காலத்தைக் குறைக்க வேண்டுமென்று உலகம் கதறிக்கொண்டிருந்தது. ஜப்பானைத் தாக்கும் தருணம் வந்துவிட்டது. அணு குண்டு வீசப்பட்டது.



சொல்லப்படு
ருஷ்யா போர் தொடுத்தற்குக் காரணமும் இப்பொழுது ஸ்பஷ்டமாகச்
கிறது. ஒரு கட்டத்தில் ஜப்பான் ருஷ்யாவின் மத்யஸ்தத்தைக் கோரியது. அதே சமயத்
தில் டாக்டர் சூங் வந்தார். பாட்ஸ்டாமில் ஜப்பான் கதி நிர்ணயிக்கப்பட்டது. ஜப்பா
னுடன் போரைத் துவக்க ருஷ்யாவுக்கு ஒருபொழுதும் பிரியமில்லாமல் இல்லை. ஆகிலும்
அது காலத்தை பிரதிகூலித்து வந்தது. முதலில் மேற்குப் பக்கத்திய எதிரியை தீர்த்துக்கட்ட
வேண்டியிருந்தது. ஹிட்லரும் அவன் சக்தியும் அழிக்கப்படவேண்டும். அது முடிந்து
மேற்கு முனையிலிருந்த படைகள் கிழக்குக்குத் திரும்பியவுடன் ருஷ்யா ஜப்பானைத் தாக்
கிற்று. ஜப்பானில் பிரிடனும், அமெரிக்காவும் படையெடுக்கப் போகும் தருணத்தை ருஷ்யா
பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது ஆர்தர் துறைமுக அவமானத்தையும், 1905-ம் வரு
ஷத்தில் ருஷிமாவில் ஏற்பட்ட தோல்வியையும் அது நிவர்த்தி செய்ய அநேக வருஷங்களாகச்
செய்துவந்த ஆயத்தத்திலிருந்து தெரியவரும். 1933-ம் வருஷ ஆரம்பத்திலேயே மஞ்சூரிய
எல்லைச்சரக ஓரமாக ருஷ்யா காங்க்ரீட் தற்காப்புகளை அமைத்து வந்தது. விளாடிவாஸ்டாக்கி
லுள்ள கடற்படையைப் பலப்படுத்தியது. இந்த பிராந்தியத்தில் விமான தளங்களை அமைத்து
தூரக்கிழக்கு விமானப் படையையும் அதிகரித்து வந்தது. ஆகையால் போர் மூண்டவுடன்
மூன்று செஞ் சேனைகள் மஞ்சூரியாவுக்குள் புகுந்து வெற்றி பெற்றன என்பதில் ஒரு ஆச்சரி
யமுமில்லை. படைகள் நாளைக்கு நூறு மைல்கள் வீதம் முன்னேறின.

வி வி வி வி வி

**ஜப்பானின் நாடகம்.**

யுத்த நிறுத்த உத்தரவு பிறப்பிவித்த பின்னும் சில இடங்
களில் ஜப்பானியப் படைகள் போரை நடத்துவதற்கு
ஜப்பானின் வஞ்சகமும் காரணமா?
நாடமும், ஜப்பானிய திறமைக் குறைவும், அல்லது ஜப்பானின் வஞ்சகமும் காரணமா?
சரணாகதி சாஸனத்தில் கையெழுத்திட ஐஷிமாத் தீவுக்கு ஜப்பானியத் தூதரை அனுப்ப
வேண்டுமென்று மாக் ஆர்தர் டோக்கியோவுக்கு அறிக்கை யனுப்பியிருக்கிறார் என்றும் அதற்கு
பதில் வரவில்லை யென்றும் தெரியவருகிறது. (ஜப்பானிய தூதர்கள் ஐஷிமாவுக்கு வந்து
அமெரிக்கப் படகு மூலம் மணிலாவுக்குப் புறப்பட்டு விட்டார்கள் என்று தகவல் வந்திருக்
கிறது. பத்திராதிபர்). ஜப்பானிய சக்ரவர்த்தியின் உத்தரவை மீறி ஜப்பானிய விமானிகள்
நேச தேச தளங்களையும் அங்குள்ள கப்பல்களையும் தாக்கி வருகிறார்கள். பசிபிக் பூராவிலும்
பரவியிருக்கும் படைகளுக்குப் போரை நிறுத்தும்படி உத்தரவு அனுப்ப கொஞ்சம் காலமாகு
மென்று ஜப்பானியர்கள் சொல்லுகிறார்கள். இதே சமயத்தில் நேசதேசத்தார்கள் அவச்ய
மானவைகளைச் செய்துவருகிறார்கள். எதிரிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலம் தகவல்களை
அனுப்பிவருகிறார்கள். அவச்யமான இடத்தில் திருப்பித் தாக்கி வருகிறார்கள், துரோகத்தை
எதிர்பார்த்து ஜாக்ரதையுடன் இருந்து வருகிறார்கள். செம்படை போரை நடத்தி வருகிறது.
ஜப்பானியர்கள் ஆயுதங்களைப் போடும் வரையில் போர் நடந்தே தீரும். கடற் தளபதி
மௌண்ட்பேடன் அவனுடைய முனையில் தனிப்பட்ட சரணாகதி செய்யவேண்டுமென்று
சொல்லுகிறான். ஆகையால் ஜாக்ரதையுடனிருக்கவேண்டும்.

ஜப்பானியர்கள் தங்களுடைய குணத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்கள். பொது
மக்களுக்கு ஜப்பானிய சக்ரவர்த்தி செய்த பிரசங்கத்தில், இந்த சரணாகதி அணு குண்டினால்
அவச்யமேற்பட்டு நேசதேசத்தாருடன் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்று சொல்லுகிறார்.
அவர் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் அணு குண்டின் மூலம் ஜப்பானியரை
பொதுமக்கள் அழியாமல் காப்பாற்றப்படவேண்டுமென்று சொல்லுகிறார். கீழ் அருப்பான்
வேலை செய்யும் படைகள் கலகம் செய்துவரலாம். ஆனால் நேசதேசத்தார்கள் ஜாக்கிரதை
யுடனிருப்பார்கள்.

வி வி வி வி வி

**ஜப்பானிய தந்திரமும், நேசதேச தந்திரமும்.**

இந்த சரணாகதியினால் ஜப்பான் ராஜதந்திர முறையில்
வெற்றி பெற்றுவிட்டதென்று டெயிலி டெலிகிராப்
போன்ற பத்திரிகைகள் சொல்லிவருகின்றன. ஜப்பா
னிய சக்ரவர்த்தி இருக்கப் போவதினால் ஜப்பான் முறியடிக்கப்படவில்லை யென்றும் தாத்
காலிகமாக விட்டுக் கொடுத்திருக்கிறதென்றும் ஜப்பானியப் பொது மக்கள் நம்பியிருக்கிறார்
கள் என்று சொல்லப்படுகிறது. இந்த சரணாகதி ஜப்பான் மற்றொரு யுத்தத்துக்குத் தயார்
செய்துகொள்ள அவகாசம் சம்பாதிப்பதற்கான தந்திரம் என்றும் யுத்தத்தில் சோர்வடை
நேசதேசங்கள் சமாதான அலுவல்களில் கவனம் செலுத்தி அஜாக்ரதையுடனிருக்கும்
அவர்கள் பேரில் பாய்வதென்று ஜப்பான் நம்பியிருக்கிறதென்றும் அவர்கள் செ
கள்.

இந்த விஷயங்களெல்லாம் நேசதேசத்தார்களுக்குத் தெரியும். ஜப்பானிய சக்கர
வர்த்தியையோ அல்லது அவருடைய பிம்பத்தையோ ஜப்பானில் வைத்திருப்பதில்
நேசதேசத்தார்கள் ஒரு உயர்வான ராஜ தந்திரத்தைக் கையாண்டு இருப்பார்கள். நியூயார்க்
டைம்ஸ் பத்திரிகை சாதுர்யமாகச் சொல்லுகிறபடி ஹிரோஹிடோ இனிமேல் அவமான
மடைந்த தேவதையாக இருப்பார். சூரிய தேவதையின் குமாரர் இனிமேல் மாக்ஆர்தரின்
உத்தரவை எதிர் பார்த்திருக்கவேண்டும். ராஜ தந்திர முறையில் தெய்வமாகக்கொண்டாடப்
படக்கூடியவரைவிட அவமானமடைந்த ஒரு தெய்வம் இருப்பது நல்லது. மத சம்பந்த
மான சரித்திரங்களைப் பார்த்தால் விக்ரஹங்களை அவமானப்படுத்தினாலும் உடைத்தாலும்
ஒரு மதத்தையோ, அல்லது மத நம்பிக்கையையோ அழித்துவிடமுடியாது. கெடுதலை
வெளிப்படுத்துவதும், அவமானப்படுத்துவதும்தான் சிறந்த வழி. பேடிஜத்தை வைத்துக்
கொண்டு அதன் உண்மைகளை வெளிப்படுத்துவதுதான் நல்ல முறை.

ஜப்பானியர்கள் இதையும், இந்த நாசத்திற்குக் கொண்டுவந்த தலைவர்களின் வெற்றியை
யும் வெகு சீக்கிரம் அறிந்துவிடுவார்கள். ஜப்பானியர்கள் கடவுள் அம்சம் என்றும்,
உயர்வான ஜாதியென்றும், உலகம் பூராவும் அவர்களின் சௌகரியத்துக்காக ஏற்பட்ட
தென்றும் கொண்ட எண்ணங்கள் முட்டாள்தனமென்றும் அவர்கள் அறிவார்கள்.

வி வி வி வி வி

**செய்யவேண்டிய மற்ற அலுவல்கள்.**

மற்ற அலுவல்களில் கவனம் செலுத்தவேண்டிய தருணம்
வந்து விட்டது. பீரங்கிகள் சுடாவிட்டாலும், வெடி
குண்டுகள் வீசப்படாவிட்டாலும், நடைக்கும் வேலை
பாக்கியிருக்கிறது. தூரகிழக்கிலிருந்தும், கிழக்கு பர்மாவிலிருந்தும், டச்சு-கிழக்கிந்தியாவிலி
ருந்தும், கிழக்கு இந்தியிலிருந்தும், சைனாவிலிருந்தும் மற்று அநேக பசிபிக் தீவுகளிலிருந்தும்
எதிரியின் எஞ்சிய துருப்புகள் துரத்தியடிக்கப்படவேண்டும். இந்த பிரதேசங்களில்
ஒழுங்கு முறையும் நிர்வாகமும் மறுபடி அமைக்கப்படவேண்டும். உணவுப் பொருள் வழங்கப்
படவேண்டும், கஷ்டங்கள் சரிப்படுத்தப்படவேண்டும், புனருத்தாரண வேலை நடைபெற
வேண்டும். தூரகிழக்கு உலகம் பூராவும் இப்பொழுது ஒரே பாழாக இருக்கிறது. மேலும்
படைகள் கலைக்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படவேண்டும். யுத்த கால
உற்பத்தியிலிருந்து சமாதான கால உற்பத்திக்கு தொழிற்சாலைகள் மாறிவிடவேண்டும்.
தூரகிழக்கில் புனருத்தாரணம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கு முன்னதாகவே
நேசதேசத்தாருக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மேற்குப் போர் முனையைப்போல
கிழக்குப் போர் முனையில் வெற்றிக்காக ஆயத்தம் செய்ய நேசதேசத்தாருக்கு அவகாசம்
இல்லை. சிறிது காலம் வரையில் குழப்பமும் எதிர்பாராத சிரமங்களும் காணப்படலாம்.
ஆகஸ்டு 15-ம் தேதியன்று கடற்தளபதி மௌண்ட்பேடன் துருப்புகளுக்கு ஒலிபெருக்கியில்
பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—"எல்லோரையும் சீக்கிரத்தில்
கலைத்துவிடுவது முடியாது. போக்குவரத்து பிரச்னைகள் மிகுதியாக இருக்கும். யுத்தம்
முடிந்ததினால் இந்தியாவின் உள்நாட்டுப் போக்குவரத்து பிரச்னை தீர்ந்துவிடவில்லை.
தென் கிழக்கு ஆசியாவில் நடைக்கும் வேலை பாக்கியிருக்கிறது. பர்மாவிலிருந்தும், மலேயா
விலிருந்தும், மற்ற சமீப நாடுகளிலிருந்தும் ஜப்பானியர்களை நாம் அப்புறப்படுத்தவேண்டும்.
எதிரி பாழாக்கியுள்ளதும், சாதாரணமான நிர்வாகம் இல்லாததுமான மகத்தான பிரதேசங்
களில் பொதுஜன அதிகாரத்தையும் பொதுஜன ஸ்வதந்திரத்தையும் நிலை நாட்ட நாம்
ஆயத்தம் செய்யவேண்டும்."

வி வி வி வி வி

**குதூகலம்.**

"யுத்தம் தொடுத்த தலைவர்கள் ரோதனம் செய்துகொண்டு,
மார் அடித்துக்கொண்டு, தற்கொலை புரிந்துகொள்ளும்
ஜப்பானைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் இந்த வாரத்தில் எங்கு பார்த்தாலும் குதூகல
மும்; கொண்டாட்டங்களும், தேவதா பிரார்த்தனையும் நடைபெறுகின்றன. ஸ்பெயினும்
இந்த வைபவத்தை மூன்று நாட்கள் கொண்டாடுவதாகச் சொல்லிவிட்டது. குதூகலமான
கீதங்களும், ராணுவ அணிவகுப்பும், நீளமான ஊர்வலங்களும், இன்று உலகத்தாருக்கு
ஏற்பட்ட கஷ்ட நிவாரணத்தையும் சந்தோஷத்தையும் வெளிப்படுத்துகின்றன.

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் வெற்றிக் கொண்டாட்டம்.**

புதுக்கோட்டையிலும் தகுந்தபடி வெற்றி கொண்டாடப்
பட்டது. தலைநகரிலும் ஸமஸ்தானத்தின் இதர
பாகங்களிலும் கொண்டாட்டங்கள் 18-ம் தேதியன்று



நடைபெற்றன. தலைநகரத்தின் தெருக்கள் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்
கப்பட்டன. வீடுகளில் விளக்குகள் போடப்பட்டன. ஏழைகளுக்கு அன்னதானம் செய்யப்
பட்டது. சாயங்காலம் ஒரு அழகிய ஊர்வலம், யானைகள், ராணுவம், போலீஸ் முன்
செல்லவும், பாண்டும் நாதஸ்வரமும் வாசிக்கவும், முக்கியமான தெருக்கள் வழியே சென்றது.
தெரு ஓரங்களில் ஏராளமான ஜனங்கள் அதை தரிசிக்க திரள் திரளாக நின்றுகொண்டிருந்
தார்கள். ஊர்வலம் டவுன்ஹாலுக்குச் சென்றது. அங்கு ஒரு பொதுஜனக்கூட்டம் நடை
பெற்றது. அவ்வமயம் மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்.
அவருடைய சொற்பொழிவு இந்த சஞ்சிகையின் மற்றொரு பகுதியில் அச்சிடப்பட்டிருக்கிறது.
ஆகஸ்டு 19-ம் தேதியன்று, வந்தன வழிபாடும், தெய்வ ஆராதனையும் பிரார்த்தனையும்,
கோவில்களிலும், மசூதிகளிலும், மாதாக்கோவில்களிலும் நடைபெற்றன. அன்று குழந்தைக
ளுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது. ஆகஸ்டு 20-ம் தேதியன்று போலீஸ், ராணுவ,
சாரணர் அணி வகுப்பு நடைபெற்றது. மாட்சி தங்கிய மன்னர்பிரான் அவர்கள் அந்த
மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

வி வி வி வி வி

**சில்லரை விஷயங்கள்.**

1. பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய, பிரெஞ்சு நிர்வாகத்தைச்சேர்ந்த நிபுணர்கள்,
மொராக்கோவில் சர்வதேச வட்டாரமாகவும் 1940-ம் வருஷத்தில் ஸ்பெயின் அக்கிரமமாக
ஆக்கிரமித்ததுமான டாஞ்சியரின் எதிர் காலத்தைப்பற்றி ஆகஸ்டு 10-ம் தேதியன்று
ஆலோசனை செய்தார்கள்.

2. பிரிடிஷ் துருப்புகள் டச்சுகிழக்கிந்தீஸ் தீவுகளை ஆக்கிரமிப்பார்கள். டச்சு
பொதுஜன விவகார டிவிஷன் சுமாத்ராவில் பொதுஜன நிர்வாகத்தை ஸ்தாபிக்கும்.

3. மார்ஷல் பிடேயனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது. அதை ஆயுள்
பரியந்தம் தண்டனையாக டிகால் மாற்றிவிட்டான்.

4. ருஷ்யாவுக்கும் சைனாவுக்கும் நட்புகொண்ட ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்
பட்டது.

---

## ஜெர்மனியில் ராணுவ ஆக்கிரமணம்.

### மூன்று பெரிய வல்லரசுகளின் முடிவு.

(லெப்டினெண்ட் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

ஆகஸ்டு 2-ம் தேதியன்று பிரிடிஷ் அயல் நாட்டு ஆபீஸில் பெர்லினில் நடைபெற்ற
மூன்று வல்லரசு மகாநாட்டின் நடவடிக்கையைப்பற்றி வெளியிட்ட ரிபோர்ட்டு ராணுவ
விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறவர்களுக்கு ஒரு சிறிய ஏமாற்றத்தைத் தந்திருக்கும்.
ஏனெனில் அதில் யாதொரு விதமான ராணுவ விவரங்களும் காணப்படவில்லை. சுருக்கமாக
உள்ள அறிக்கையில்தான் ராணுவப் பேச்சு சம்பந்தமாக சில வார்த்தைகள் காணப்படுகின்
றன. அவை பின்வருமாறு:—"மகாநாட்டின்பொழுது மூன்று நிர்வாகங்களின் காரியாலயத்
தலைவர்களும் பொதுவான ராணுவ விஷயங்களைப்பற்றி விவாதித்து வந்தார்கள்". ஆகிலும்
விவரங்கள் காணப்படாததால் ராணுவ சம்பந்தமாக அபிப்பிராய பேதமில்லையென்று
தெரியவருகிறது.

ஜப்பானியர்கள் அவமானத்துக்குட்படாமல் தப்பிப் போவதற்கு அதில் ஒரு இடை
வெளியும் காணப்படவில்லை. ஜப்பானிய ராஜ தந்திரிகள் வம்பை விலைக்கு வாங்கினார்கள்.
இதிலிருந்து அவர்கள் முண்டியடித்து வெளியேறவேண்டும்.

ரிபோர்ட்டை வாசித்தபின் ஜெர்மனியின் மேன்பார்வைக்கான ஏற்பாடுகளை 1918-ம்
வருஷத்தில் முதல் உலக யுத்தத்துக்குப்பின் காணப்பட்டதுடன் ஒப்பிடவேண்டுமென்று
நினைக்கிறேன். இப்பொழுது ஜெர்மனி பூராவும் பிரிடிஷ் சாம்ராஜ்ய, அமெரிக்க, ருஷ்ய,
பிரெஞ்சுப் படைகளின் ராணுவ ஆக்கிரமணத்துக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. அப்பொழுது,
மேற்கு ரைன்லாந்தும் ரைன் நதியின் கிழக்குக் கரையிலுள்ள சில முன்னேறும் வாசல்களும்
தான் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. ஆக்கிரமிப்புப் படைகள் பிரிடிஷ் சாம்ராஜ்யம்,
அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியத்தைச் சேர்ந்தவையாக இருந்தன.

1918-ல் பெர்லினுக்கு மேன்பார்வை கமிஷன் ஒரு முன்னணி கோஷ்டியை அனுப்பிற்று. அது தனித்திருந்ததால் நிராயுதபாணிகளாக்கும் பிரச்னையை விவாதிக்க வந்த ஜெர்மன் ஜெனரல்கள் அந்த கோஷ்டிக்கு அபாரமான இடுக்கண்களை உண்டுபண்ணினர். யுத்த நிறுத்த ஷரத்துகளின் ஒன்றான நிராயுதபாணியாக்கும் பிரச்னையை நிறைவேற்றக் கூட்டப்பட்ட மீட்டிங்குக்கு யார் தலைமை வகிப்பது என்பது பற்றி ஜெனரல் மோலட்டுக்கும் ஜெர்மன் கோஷ்டியின் தலைவருக்கும் விவாதம் ஏற்பட்டது. ஜெர்மன் ஆபீஸர் படையினர்தான் மேன்பார்வை கமிஷனுக்கு இடையூறுகளை ஏற்பாடு செய்தார்கள்.

ஆகையால் ஜெர்மனி பூரணமாக நிராயுதபாணியாக்கப்பட்டு ஜெர்மன் ராணுவமும் கலைக்கப்படும் என்றும் ஜெர்மன் ஆபீஸர் படையும் புத்துயிர் பெறமுடியாமல் நிர்மூலமாக்கப்படும் என்று நான் ரிபோர்ட்டில் வாசித்தபொழுது எனக்கு அதிகத் திருப்தி உண்டாகிறது. இதுதான் சமாதானத்திற்கு திறவுகோல் போன்றது. ராணுவத்தை அழித்துவிட்டால் மட்டும் சிந்தரமான பயன் ஏற்படாது. நாசம் செய்யும் மனப்பான்மையே வேருடன் அழிக்கப்படவேண்டும்.

நாஸி தத்வத்தின் விஷம் ஏறினவர்களின் ரோகத்துக்கு பூர்ணமான சிகிச்சை ஏற்படுமென்று நான் நம்பவில்லை. ஆகிலும் நாஸி முறைகள் பயன்படாதென்று அவர்களுக்கு நாம் புகட்டவேண்டும். ஜெர்மனி விமானங்களைக் கட்டக்கூடாது. கப்பல்களை மிதக்கவிடக்கூடாதென்று கடுமையாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது. அமுல் நடத்தக்கூடாத எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாதென்பதுதான் ராணுவத்தின் முதல் கொள்கை. அந்த உத்தரவை அமுல் நடத்த, ஜெர்மனி அதை மீறினால் ஒரு கெடுதலும் ஏற்படாது என்று தோன்றும் வரையில் ஜெர்மனியின் ஆக்ரமிப்பு நீடித்திருக்கவேண்டும். அணு சக்தியை நாம் சேர்த்துக்கொண்டால் வாழ்க்கை, சாவு முதலியது சம்பந்தமான நமது அபிப்பிராயங்கள் மாறுதலடையும்.

---

## 25 வருஷமாக ஹிட்லரின் கோஷ்டி

ஜான் ஆட்ரி.

ஜெர்மன் யுவர்களின் கல்வியில் நேசதேசத்தார்கள் கவனம் செலுத்தவேண்டுமென்றால் அவர்கள் ஜெர்மன் ஆடவர்களையும், ஸ்திரீகளையும், ரக்ஷிக்கக் கூடியவர்களல்லவென்று தள்ளிவிடுவதென்று அர்த்தமா? 1920-ம் வருஷத்தில் ஹிட்லர் கோஷ்டி அமைக்கப்பட்ட பொழுது இவர்கள் 13 வயதுள்ள சிறுவர்களும் சிறுமிகளாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு இப்பொழுது வயது சுமாராக 40 இருக்கலாம்.

நான் ஏராளமாக வெகுகாலம் ஜெர்மனியில் சுற்று பிரயாணம் செய்திருக்கிறேன். அதன் சர்வகலாசாலை ஒன்றில கல்வி கற்றிருக்கிறேன். கல்வி சம்பந்தமான சுற்று பிரயாணத்திற்கு மாணவர் கோஷ்டிகளை அழைத்துச் சென்றிருக்கிறேன். அப்பொழுது ஹிட்லர் கோஷ்டியுடன் கலந்துகொள்ள வேண்டியதாயிற்று. ஜெர்மானியரின் குடிசையங்களைப் பற்றி எனக்கு அனுபவம் உண்டு. நான் ரைன்லாந்தின் அழகான கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன். 1920-ம் வருஷத்தில் ஹிட்லர் கோஷ்டியின் அங்கத்தினர் என்ற அடையாளச் சீட்டுள்ள குதூகலமுள்ள ஜெர்மன் மாணவர்கள் என்னை வரவேற்றார்கள். குடும்பவாழ்க்கை அழிந்துவந்தது. பூரரின் வார்த்தைதான் சட்டம். குழந்தைகளின் தகப்பனார்கள் முணுமுணுத்தால் S. A. படைகள் அவர்களை வழிக்குக்கொண்டு வந்து விடுவார்கள்.

குழந்தைகள் வயது வந்தபின் அவர்கள் நாஸிக்கட்சி விதிக்கும் பலவிதமான கஷ்டங்களுக்கு உட்படவேண்டும். அவர்கள் ஹிட்லரை ஆராதித்தார்கள். இயக்கத்தின் பிரதேச தலைமை காரியாலயம் இதை வற்புறுத்தியது. பையன்களும் பெண்களும் கஷ்டத்துக்குட்பட்டவர்களென்று நினைத்துக் கொள்ளவேண்டும். கல்வி கொடூரமாகவும், ஏற்பாடகவும் பரிஷ்காரமாகவும் நடைபெற்றது. ஹிட்லர் அதிகாரத்துக்கு வருவதற்கு 10 வருஷங்களுக்கு முன், அதிகாரத்தை மீறி அக்கிரமங்கள் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட S. A. கொலைக் கூட்டத்தார்கள் விசாரணை செய்யப்பட்டார்கள். பையன்கள் பிரதேசத் தலைவரின் ஆக்ஞைப்படி அந்த விசாரணையில் பிரசன்னமாகியிருந்தனர். இந்த விசாரணைகள் கக்ஷி அக்கறைகளுக்கு பிரசார முறையில் உபயோகமுள்ளவை.

வயது ஆக ஆக அவர்களின் அசம்பாவம் அதிகரித்தது. 15-வயதுள்ள பையன்கள் தெருக்களில் ஒத்திகை செய்வதையும், யூதர்களுக்கு சொந்தமான அல்லது யூதர்கள் மேல்



பார்க்கும் கடைகளை வழிமறித்ததையும் ஜன்னல்களில் ஜூடெஷுஸ் கெஷாப்ட் என்ற சீட்டுகளை ஒட்டுவதையும், சிற்றுண்டி விடுதிகள் கதவுகளில் "யூதர்களுக்கு வரவேற்பு இல்லை" என்று நோட்டீஸ்களை ஒட்டுவதையும் நான் பார்த்திருக்கிறேன்.

பொது உடைமைக் கக்ஷிக்காரர்களுடனும் யூதர்களுடனும் நேரிட்ட சச்சரவுகளில் அநேகர்கள் உயிர் துறந்திருந்தார்கள். அவர்களுக்கு பகட்டான ஈமகிரியைகள் நடைபெற்றன. பாண்டு வாத்தியத்துடன் உடுப்புப் போட்ட ஹிட்லர் கோஷ்டியும், அதன் ஸ்திரீகள் கோஷ்டியான பண்ட் ட்யூசர் மாடல்களும் ஊர்வலத்தில் முன் சென்றன. S. A. படைகள் கவசங்களுடனும், கடூரமாகவும் அகம்பாவத்துடனும் அணிவகுத்துச் சென்றார்கள். கருஞ் சட்டையணிந்த S. S. படைகள் தலை குனியாமல் நடந்து சென்றன. வெள்ளை வட்டங்களுக்குள் கருப்பு ஸ்வஸ்திகாக் கொடி போடப்பட்ட இரண்டு கெஜ நீளமுள்ள நாடாக்கள் புதைகுழிகளின் மேரில் போடப்பட்டன "ஜெர்மனி வாழ்க, நாமும் இறப்போம்" என்று அவர்கள் கீதம் பாடினார்கள். நண்பர்களின் சாவுக்கு ஆயிரம் மடங்கு பழி வாங்குவது என்று அவர்கள் பிரமாணம் செய்துகொண்டார்கள்.

1933-ம் வருஷம் முதல் அவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றிவந்தார்கள். டாச்சா, பெல்ஸன், சாக்ஸன் ஹாஸன், ஓரானியன்பர்க், பூகன்வால்ட் முகாம்கள் அமைக்கப்பட்டன. சரித்திரத்திலேயே பெரிய மனித வேட்டை விளம்பரம் செய்யப்பட்டது. ஹிட்லரின் வேட்டை நாய்கள் அவிழ்த்து விடப்பட்டன.

இப்பொழுது நாம் சற்று ஆலோசிப்போம். காவல் முகாம்களில் ஒன்றில் நடைபெற்ற அக்கிரமங்களின் விளைவுகளைப் பார்ப்பதற்காக நகரசபை அதிகாரிகளையும், சில உத்தியோகஸ்தர்களையும், நகரவாசிகளையும், சமீப காலத்தில் அமெரிக்க ஆபீஸர் வரவழைத்தார். விருப்பமில்லாமல் வரும் இந்த நகரவாசிகளுக்கு அவமானம் உண்டு பண்ணவேண்டுமென்று அமெரிக்க ஆபீஸர் நம்பியிருந்தார். ஆனால் அவ்விதம் அவர் எதிர் பார்ப்பது இயல்பா?

மிகவும் அழுக்கான பிரசாரத்தை அநேக வருஷங்களாக அவர்கள் கேட்டு கெட்டுப் போய்விட்டார்கள். இந்த காவல் முகாமிலுள்ளவர்களிடம் ஜெர்மானியர்களுக்கு யாதொரு அனுதாபமும் கிடையாது. அவர்களைத் துன்புறுத்துவதில் அவர்களுக்கு பேரானந்தம் இருந்தது. சற்று சௌக்கியமான முகாம்களிலுள்ள கைதிகள் அறைகளிலுள்ள ஓட்டைகள் வழியாக மற்றவர்கள் பேரில் நடத்தப்படும் கொடுமைகளைக் கவனித்து வந்தார்கள். அநேக வருஷங்களாக யூதர்கள் அக்கிரமச் செய்கைகளைப் பற்றி அவர்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். கிருஸ்து மதத்துக்கு விரோதமான சடங்குகளை அவர்கள் செய்தார்கள் என்று ருஜூப்பிக்கப்பட்டது.

அச்சிடப்பட்டு வெளியிடப்படாதபடி எந்த நடவடிக்கையும் கிடையாது. ஸ்ட்ரீகரின் டெர்ஸ்டர்மெர் துண்டு பிரசாரத்தை விட சில துண்டு பிரசுரங்கள் அமைதியுள்ளதாக இருந்தாலும் ரொம்பவும் விசித்திரமாகவும், ஆபாஸமாகவும், இருந்ததால் அவற்றை எல்லோரும் வெறுப்புடன் எறிந்துவிட்டார்கள், ஆகிலும் ஜெர்மானியர்கள் அவ்விதம் செய்யவில்லை. அவர்கள் அதைப்படித்து நம்பிக்கை கொண்டார்கள். கோபமும் வெறுப்பும் அவர்கள் மனதில் தோன்றின. அப்பேர்ப்பட்டவர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஏனெனில் அவர்கள் மனிதத்தன்மையுள்ளவர்களல்ல.

கக்ஷியைச் சேர்ந்த அதிகாரிகளின் பிரசாரங்கள் அறைகுறையான சமாசாரங்கள் அல்ல. வாரம் இரு முறை பிரசாரங்கள் செய்யப்பட்டன. விவாதமும் நடைபெற்றது. விஷயங்கள் ஜாக்கிரதையுடன் தயாரிக்கப்பட்டன. விஷயங்களும் உத்தியோக விஷயங்களுக்கு அனுகுணமானவை. மற்ற நாடுகளின் நாகரீகத்திலுள்ள கெடுதல்கள் சுட்டிக் காட்டப்பட்டன. குற்றம் குறைகள் ஜோடிக்கப்பட்டன. ஆபாஸமான ஏழை விடுதிகள் சாதாரண வாசஸ்தலங்கள் என்று சொல்லப்பட்டன. ஜெர்மானியர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று ஒன்றையும் நேராகப் பார்க்கக்கூடாது. அவர்கள் 16 ஷில்லிங்குகளுக்கு மேல் பணம் எடுத்துச் செல்லக்கூடாது. இங்கிலாந்துக்கு மட்டும் போகலாம். இங்கிலாந்து வெகுகாலம் சாவதானமாகயிருக்குமென்று அவர்கள் எண்ணினர். மேலும் வாலிபமுள்ள ஜெர்மானியர்கள் கொண்டுவரும் தகவல்கள் கக்ஷிக்கு உபயோகமுள்ளதாக இருந்தன. அநேக பாஷை பேசுகிறவர்களும் அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்.

ஜெர்மானியர்கள் எதையும் சுலபமாக நம்பிவிடுவார்கள். செக்குகளும், போலந்து ஜனங்களும், மற்ற தேசத்தவர்களும் அதம மனிதர்களென்றும் ஆகையால் உயர்வான ஜாதி

யாரை வைத்து அமுல் நடத்த சரியான தேசங்கள் என்றும் நம்பும்படி செய்யப்பட்டார்கள். இந்தக் கொள்கைகளை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். ஜெர்மன் சாம்ராஜ்யம் ஆயிரம் வருஷங்கள் நிலைத்திருக்க வேண்டுமாம். ஸீசர் நாளிலிருந்த ரோம் நகரவாசியைப் போல பெர்லின் வாசிக்கும் சம அந்தஸ்து இருக்கவேண்டும். அவர்கள் ஒரு உயர்வான நகரத்தின் வாசியாக இருக்கவேண்டும். உலகத்தின் எந்த பாகத்திலிருந்தாலும் ஒவ்வொருவரும் ஜெர்மனிக்கு ஜவாப் சொல்லவேண்டும். 1910-ம் வருஷத்தில் இந்தக் கனவுகள் பூர்த்தியாகி விடுமென்று தோன்றிற்று.

இந்த பயங்கரமான பிரச்னையைத்தான் நாம் தீர்க்கவேண்டும். இந்த நிலைமையை சமாளிக்கத்தான் நாம் கல்வியறிவிக்கவேண்டும். விருத்தாந்தம் பின்வருமாறு :—" பவேரியன் ஆல்ப்ஸ் மலையின் குகைகளிலுள்ள நான் என்னுடைய தூக்கத்திலிருந்து ஜெர்மனியின் நெருக்கடியான சமயத்தில் எழுந்திருப்பேன் என்றும் என்னுடைய வீரர்களைத் திரட்டிக் கொண்டு, ஜெர்மனியின் யுத்தக் கொடியை நாட்டி, போரை நடத்தி ஜெர்மனிக்கு வெற்றியை யும், க்ஷேமத்தையும், மறுபடியும் சம்பாதித்து விடுவேன் என்றும் பிரெடரிக் பார்பரோஸா சொன்னான். அந்த குகையின் மேல்தான் ஹிட்லர் அவனுடைய தலைமை காரியாலயத்தை அமைத்தான். பிரெடரிக் பார்பரோஸா ஓய்வெடுத்த இடம் பெர்கஸ் கார்டன்தான். ஹிட்லர் மத்தியகால சக்கரவர்த்தியின் அவதாரம் என்று கருதப்பட்டான்.

20-வது நூற்றாண்டுக்குள் எல்லா நாடுகளும் அடிமை நாடுகளாக ஆகிவிடும். ஜனத் தொகை குறைக்கப்படும். இந்தக் கொள்கையின் பிரகாரம் பிரான்ஸ் முறியடிக்கப்பட்ட பொழுது அதிலிருந்த 20 லக்ஷம் ஜனங்கள் யுத்தக் கைதிகளாக முகாம்களில் அடைக்கப் பட்டார்கள். இவர்கள் தாயகம் சென்றார்கள். ஜெர்மனி இழைத்த கொடுமைகளால் அவர் களின் தேக சுகம் கெட்டுபோய்விட்டது.

இதுதான் ஜெர்மனியின் உயர்வான திட்டம். இதுதான் ஜெர்மனியின் உயர்வான ஜாதியாரின் கதை. 1935-ம் வருஷம் வேனிற் காலத்தில் டிரெஸ்டனிலுள்ள சிற்றுண்டிக் கடையில் ஒரு வயது முதிர்ந்த அம்மணியுடன் பேசிக்கொண்டிருந்தேன். ஒரு முக்கியமான தெருவழியாக 16 வயதுள்ள ஹிட்லர் வாலிபர்கள் அணிவகுத்துச் செல்லுவதை நாங்கள் கவனித்து வந்தோம். சிற்றுண்டிசாலையைத் தாண்டிச் சென்றபொழுது அவர்கள் ஹோர்ஸ்ட் வெஸ்லஸ் கீதம் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மறைந்தவுடன் அவள் என்னிடம் சொன்னாள். "நமது யுத்த வீரர்கள் அழகாக இல்லையா? சென்ற யுத்தத்தில், நமது ரத்தம் வெள்ளமாக ஓடிற்று. நமக்கு உணவுப் பொருள் இல்லை. எங்களுக்குச் சரியான ஆடையும் இல்லை, பசியும் அதிகமாக இருந்தது. நமது மனிதர்கள் ஈக்களைப் போல இறந்தார்கள். காயம்பட்டவர்களுக்கு நானே கட்டுகளைக் கொண்டு கட்டுக் கட்டினேன். ஆனால் இது ஆச்சரியமானது, நாம் செய்த தியாகத்திற்குத் தகுந்த கௌரவமும் புகழும் ஏற்பட்டுவிட்டன.

## பாகோவின் கனவு உலகம்.

### பிராங்கோ இருக்கும் ஸ்பெயினின் தற்போதைய நிலைமை.

#### டெய்லி மெயிலின் மாட்ரிட் நிருபரான லாரன்ஸ் வில்கின்ஸன்.

மாட்ரிட்டில் பிராங்கோவை பாகோ அல்லது சிறுவன் என்று செல்லுவதுண்டு. அவர் நேசதேசத்தாரிடம் பின்வருமாறு சொன்னார் :—" நான் கவலைப்படவில்லை, நாங்கள் உங்க ளுடைய நடவடிக்கைகளில் குறுக்கிடவில்லை." ஸ்பெயின் சம்பந்தமான பிரச்னை தீர்ந்து விட்டதென்று நினைக்கலாம்.

பிராங்கோவை பாகோ என்று அழைத்தாலும் அவர் ஸ்பெயினின் ஒரு சர்வாதிகாரி வாய்ந்தவர்தான். கம்பீரமான தோற்றமுள்ளவருங்கூட. நாம் அதைப்பற்றி நிச்சயமாக ஒப்புக்கொள்ளவேண்டும். யுத்த சமயத்தில் ஸ்பானிஷ் மக்களுக்கு நம்மைப்பற்றி அதிக மாகத் தெரியாததுபோல் நமக்கும் ஸ்பெயினைப்பற்றி போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை.

இப்பொழுது பிராங்கோ பத்திரமாகத்தானிருக்கிறார். சில கபடமாகவுள்ள நண்டு பிரசாரகர்த்தாக்களைத்தவிர மற்ற எதிர் கக்ஷியினர் எல்லோரும் ஜெயிலிலிருக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து எவரும் குறுக்கிட்டால்தான் பிராங்கோவை பதவியிலிருந்து நீக்கமுடியும் இது சம்பவிக்கும்.



பிராங்கோவுடன் நெருங்கிப் பழகியவர்கள், அவர் இதை உணரவில்லையென்கிறார்கள். அவர் பின்வருமாறு சொல்லுகிறார் :—" நல்லது செய்வதற்கு நாம் எவ்வளவு சக்தி பெற்று இருக்கிறோமென்றும் உலக சமாதானத்தை நிலைநாட்டவும் ஒழுங்குமுறையை பரிபாலிக்கவும் நாம் எவ்வளவு அவசியமென்றும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை."

பிராங்கோ அதிகார சுகங்களை அனுபவித்திருக்கிறான். ஆகையால்தான் அதைவிட்டு விலக அவனுக்கு மனம் வரவில்லை. "இப்பொழுது காலம் தப்பிவிட்டது. அவன் முந்தியே அவ்விதம் செய்திருக்கவேண்டுமென்று அநேகர் செல்லிவருகிறார்கள்".

உள்நாட்டுக் கலகத்தின் முடிவிலோ அல்லது அதற்குப்பிறகோ அவர் வெளியேறியிருந் தால் அவரை தேசீய வீரரென்று கொண்டாடியிருப்பார்கள். சான்பிரான்ஸிஸ்கோ மகாநாடு அவனுடைய ஆட்சியைப்பற்றி அபிப்பிராயம் கூறுமுன் அவனுக்கு அவ்விதம் செய்ய சந்தர்ப் பம் இருந்தது. ஸ்பெயினைக் குறித்து பாட்ஸ்டாமில் முடிவுகள் செய்யப்படுமுன்னும் அவன் ராஜினாமா செய்திருக்கலாம்.

ஸ்பெயினின் ராஜதந்திர பிரதிநிதிகள் அயல் நாடுகளிலிருந்து ருசியில்லாத தகவல்களைக் கொண்டுவரும்பொழுது அவர்களுக்கு பிராங்கோ பேட்டி அளிப்பதில்லை. அவர்களுக்கு பேட்டியளித்தாலும் அவர்கள் சொல்லுவதை படபடப்புடன் கேட்டுக்கொண்டு பின்வருமாறு பதில் சொல்லுவான். "ஸ்பெயினில் என்னுடைய நிலைமை அசைக்கமுடியாதது. என்னிடம் சேனை இருக்கிறது. அவர்கள் என்னிடம் பிரியமாகயில்லாவிட்டாலும், ஜனங்களின் பெரும் பாகம் என்னை ஆதரிக்கிறார்கள்."

ராஜதந்திரிகள் வெளியே சென்று தலையை ஆட்டிக்கொண்டு "ஐயோ பாவம், பாகோ கனவு உலகில் இருந்துவருகிறான்" என்று சொல்லுகிறார்கள்.

## சாஸனத்தின் பொருளாதார அம்சம்.

### பிரெட்டன் உட்ஸ், சான்பிரான்ஸிஸ்கோவின் பிரச்னைகள்.

#### ராபர்ட் மாகே.

ஐரோப்பியப் போர் நடை பெற்ற அநேக வருஷங்களில் "யுத்தத்துக்குப் பிந்திய உலகம்" என்றும் "யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதாரம்" என்றும் அடிக்கடி சொல்லி வந்தார்கள். அக்கிரமப் போர் தொடுத்தவர்களின்பேரில் பரிபூர்ணமான வெற்றி கிடைப்ப தற்கு ஜப்பானின் இறுதித் தோல்வி அவசியம். ஆனால் யுத்தத்துக்குப் பிந்திய காலம் ஏற் கனவே துவக்கமாகிவிட்டது.

சமாதானகால இயல்புகளுள்ள வானம் தூரத்திலிருந்தாலும் நிர்மலமாக இருக்கிறது. சான்பிரான்ஸிஸ்கோவில் உலக பத்திர சாஸனம் கையெழுத்திடப்பட்டதிலிருந்து நேச நாடு கள் சமாதான வழியில் அடிவைத்துவிட்டார்கள் என்று பொருள்படுகிறது. யுத்தக்குப் பிந்திய உலகத்தில் சமாதனம் நிலவவேண்டும். இந்த உட்கருத்துடன் தான் சான்பிரான் ஸிஸ்கோ சாஸனத்தை அங்கீகரித்த 50 தேசங்களும் இனிமேல் சர்வதேச சம்பந்தங்களை நடத்துவதென்று உறுதிகொண்டிருக்கிறார்கள்.

அந்த சாஸனத்தின் அர்த்தம் விரிவாகயிருப்பதினால் அது யுத்தக்குப் பிந்திய உலகப் பொருளாதாரத்தில் பொது ஜனங்கள் கவனம் செலுத்துவதற்கு ஒரு தடங்கலாக இருக்கிறது. பொருளாதார பிரச்னைகளில் நுழைந்து ஆராய்ச்சி செய்வதில் பொது ஜனங்களுக்கு சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அது நிபுணர்களுக்குரிய சர்ச்சை என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். ஆகிலும் சர்வதேச சமாதானத்தை உறுதிபடுத்தும் சான்பிரான்ஸிஸ்கோ சாஸனம் ஏகமன தாக ஒப்புக்கொள்ளப்பட்ட உலக பொருளாதாரம் இல்லாமல் பூர்த்தியாகிவிடாது. இங்கு அநேக நுட்பமான விஷயங்கள் இருந்த போதிலும் பொதுப்படையான விஷயங்களில் சர்வ தேச ஒப்பந்தம் இருந்துவருகிறது. பிரெடன் உட்ஸ் மகாநாடு மூலம் அநேக வேறுபட்ட அபிப்பிராயங்கள் தோன்றிய போதிலும், அம்மகாநாட்டின் இறுதி நடவடிக்கையாக யுத்தத் துக்குப்பிந்திய பொருளாதாரம் சமாதான கால பொருளாதாரமாக ஒன்றுபடும் கட்டத்துக்கு ஆரம்பம் செய்யப்பட்டது.

பிரெடன் உட்ஸ் மகாநாட்டின் முடிவுகள் இன்னும் அமுலுக்கு வரவில்லை. அவைகள் அமெரிக்க காங்கிரஸ் அவற்றை அங்கீகாரம் செய்யக்கூடிய இறுதி கட்டத்தை அடைந்து விட்டன. பிரிடனில் அவைகள் பார்லிமெண்டின் முன் வைக்கப்படவேண்டும். அவை

களுக்குத் திருத்தப்பாடுகள் ஏற்பட்டாலும் அவைகள் அமுலுக்கு வருமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. அவ்விதம் அமுலுக்கு வராவிட்டாலும், சமாதான உலக பொருளா தாரத்தைத் துவக்கி அதை பரிபாலித்து வருவதற்கான சக்தியான பொருளுதவியை அளிக்க விஸ்தாரமான ஒன்றுபட்ட கொள்கைகளை பிரிட்டனும் அமெரிக்காவும் ஒப்புக்கொண்டுவிட்டன வென்பது குறிப்பிடத்தக்கது.

ஆகையால் சான்பிரான்ஸிஸ்கோவும், பிரெட்டன், உட்ஸும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்தமுள்ளவை, ஏனெனில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ராஜீய சம்பந்தங்களில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்பது போல ஸ்திரமான உலகப் பொருளாதாரத்தை அமைக்க சர்வதேச ஒத்துழைப்பும் அவசியமாகும். சான்பிரான்ஸிஸ்கோ சாஸனத்திலும் உலகப் பொருளாதாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது பொறுப்பலடயாக கவனிக் கப்பட்டிருக்கிறது. அது உபயோகமுள்ளதாக இருக்கவேண்டுமானால் பிரெட்டன் உட்ஸ் ஒப்பந் தப்படி ஏற்பட்ட விசேஷ அம்சங்கள் நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டும். ஆகையால் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் உள்ள மேதாவிகள் சமாதான காலத்தில் இரு பிரச்னைகளான ராஜீயம், பொருளாதாரம் என்ற இரண்டையும் ஒன்றுபடுத்திச் சொல்லுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக பிரிட்டன் பூராவும் ஒன்றுபட்ட அபிப்பிராயம் இருந்துவருகிறது. இது கக்ஷிகளின் ராஜீய விவகாரத்துக்குப் புறம்பானது. இந்த அபிப்பிராயத்தை மூன்றுவகை களாகப் பிரிக்கலாம். முதலாவது, பழைய ஜெனிவா ஒப்பந்தத்துக்கும் சான்பிரான்ஸிஸ் கோவுக்கும் உள்ள தெளிவான வித்யாசம் பின்வருமாறு:—1919-ம் வருஷத்தில் ருஷ்யா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை அது நிராகரித்துவிட்டது. 1945-ல் இந்த இரண்டு பெரிய வல்லரசுகளும் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் புதிய சமாதான திட்டத்தை முக்கியமாக ஆதரிக்கிறார் கள். இரண்டாவதாக, சான்பிரான்ஸிஸ்கோவில் பெரிய வல்லரசுகள் சமாதானத்தைப் பின்பற்றும்படி சிறிய வல்லரசுகளைக் கட்டாயப்படுத்தலாமென்று ஏற்பட்ட பொழுது சிறிய வல்லரசுகள், பெரிய வல்லரசுகள் சமாதானத்துடன் வாழவேண்டுமென்று கட்டுப்படுத்த ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் உலக சமாதானத்தைக் காப்பாற்றும் பொறுப்பு பெரிய வல்லரசுகளுடையதாகும்.

ஆகிலும் சமாதான மகாநாட்டின் நடவடிக்கைகளிலிருந்து பெரிய வல்லரசுகளின் கொள்கைகளை உலக அபிப்பிராயம் நன்கு பாதிக்கக்கூடுமென்று தெரிவாகிவிட்டது. கடைசி யாக, ஜெனிவா ஒப்பந்தம் இருந்தவரையில் கூட்டுபத்திரம் என்ற கொள்கை மட்டும் சமா தானத்தை நிலைநாட்டப் போதுமானதென்ற தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணிவிட்டது. ஆனால் அதில் ஒவ்வொருவரும் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டியிருக்க ஒருவரும் அதில் சிரத்தை காட்டவில்லை. புதிய சாஸனத்தின்படி சமாதானத்தை நிலைநாட்டுவது வல்லரசு களின் அலுவலாகும். சட்டத்தை அமுல் நடத்தும் சக்தியை அவர்கள் பெற்றிருப்பதால் அவர்கள் சட்ட வரம்புக்கு மீறியவர்கள். சிறிய தேசங்கள் போரை நடத்தக்கூடாதென்று அவர்கள் கட்டுப்படுத்தலாம். ஆனால் அவர்களுக்குள் இருக்கவேண்டிய சமாதானம் அந்த வல்லரசுகளின் சமாதான ஒத்துழைப்பினால் நிலைபெற்றிருக்கவேண்டும்.

சமாதானத்தின் பொருளாதார அம்சத்தைக் கவனிக்கும்பொழுது, தீர்க்கப்படவேண் டிய அநேக பிரச்னைகளில் ஒவ்வொன்றையும் கவனித்தால் முன்னேற்றமுள்ள உலக பொரு ளாதாரத்தை அமைக்க பிரிட்டன் சர்வதேச வியாபார ஸ்தலங்களில் மிகப்பெரியதாக மறுபடி யும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இது விஷயத்தில் பிரிட்டன் வெளியிடும் அபிப்பிராயம் காரிய காரணத்துக்கொத்ததாகும். அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் அயல்நாட்டு வியா பாரம் தேசீய பொருளாதாரத்தில் ஒரு அகஸ்மாத்தான நடவடிக்கையாக இருக்கும் பொழுது, பிரிட்டனின் தேசீயப் பொருளாதாரம் சர்வதேச வியாபாரத்தை ஆச்ரயத்திருக் கிறது.

அமெரிக்காவின் எதிர்கால பொருளாதார பிரச்னைகள் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் பிரச்னை யுடன் இணைக்கப்பட்டிருக்கிறபடியால், இது சம்பந்தமாக அமெரிக்காவில் காணப்படும் பொறுப்புள்ள அபிப்பிராயம், அமெரிக்கா பூராவிலும் 100-க்கு மேற்பட்ட சர்வகலாசாலைகளில் ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட கோஷ்டிகளின் ரிபோர்ட்டுகளின் சுருக்க விளக்கத் தில் அடங்கியிருக்கிறது.

அந்த கோஷ்டிகளின் ஒன்றுபட்ட முடிவுகள் பின்வருமாறு:—உலக பத்திரத்தினை யவும் க்ஷேமத்திநுடையவும், லக்ஷியங்களைப் பெறவேண்டுமானால் அமெரிக்காவுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்கும் நெருங்கிய ஒத்துழைப்பு அவசியமாகும். பொருளாதாரத்தை



புனருத்தாரணம் செய்ய பிரிட்டன் அதன் ஏற்றுமதிகளைப் பன்மடங்கு அதிகரிக்கவேண்டும். முதல் முதலாக அது உலக ஒத்துழைப்பைப் பெறவேண்டும். அவ்விதம் நடைபெறாவிடில் அது மற்றொருவருடன் மட்டும் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். அமெரிக்கா, பிரிடிஷ் பொருளாதாரத் தேவைகளை மதித்துப் பார்க்கவேண்டும். உலக பொருளாதாரத்தை பிரிடிஷ் பொருளாதாரமும், அமெரிக்க பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரமும் மிகுதி யாகப் பாதிக்கக் கூடுமாகையால், பிரிடிஷ் பொருளாதாரத்துக்குக் கெடுதி ஏற்படக்கூடிய கொள்கைகளை தவிர்க்கக்கூடிய அளவிற்காவது நமது பொருளாதாரத்தை பிரிடிஷ் பொரு ளாதாரத்துக்கு ஒத்தவகையில் அமைத்துக்கொள்ளவேண்டும்.

கடைசியாக, யுத்தத்துக்குப் பிந்திய வருஷங்களில் பிரிட்டன் ஏற்றுமதியை மிகுதியாக அதிகரித்துக் கொள்ளுவது அவசியமென்பதை அந்த கோஷ்டிகள் எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

இவ்விதமாக உலகப் பொருளாதாரத்தில் ஒருவர் மற்றொருவரின் பிரச்னைகளை அறிந்து விட்டார்கள் என்ற அடிப்படையைக் காண்கிறோம். உலகப் பொருளாதாரத்தில் அதில் பிரிட்டனும் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் முக்கியமான பங்கெடுத்துக்கொள்ளுமென்று அமெரிக்கா வில் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். எதிர்கால க்ஷேமத்திற்கு இதைவிட நம்பிக்கைக்குரிய சகுனம் வேறு ஒன்றும் கிடைக்காது.

---

## மூன்று வல்லரசுகளின் ஐரோப்பிய திட்டம்.

(விக்ஹாம் ஸ்டீட்).

பாட்ஸ்டாம் மகாநாட்டைப்பற்றி வெளியிடப்பட்ட அறிக்கையானது மகாநாட்டில் சிறந்த நடவடிக்கைகள் நடந்தனவென்ற தகவலை ஊர்ஜிதப்படுத்துகிறது.

குறிப்பாக, மூன்று வல்லரசுகளும் ஐரோப்பாவின் தாத்காலிகமான சீர்திருத்தத்திற்காக ஒரு திட்டத்தை நிறுவியிருக்கிறார்கள். திட்டங்களின் சில பாகங்கள் விரிவானவை. பிரதேச தேவைக்குத் தக்கவாறு திருத்தியமைத்துக் கொள்ளக்கூடியவை. ஆகிலும் அதன் முக்கியமான ஏற்பாடுகள் உருவானவை. அவற்றை சமாதான திட்டங்களும் மாற்ற முடியாதென்று தோன்றுகிறது.

சமாதான திட்டங்கள் என்று மூவரும் சொல்லுவதை சமாதான மகாநாடு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். 1919-ம் வருஷத்தில் பாரிஸ் சமாதான மகாநாடு கூடியது போலில்லாமல் அநேக நேசதேச மகாநாடுகளும் ஒப்பந்தங்களும் ஏற்பட்டு இறுதி முடிவு ஏற்படவேண்டுமென்று நேசதேசத்தார்கள் விரும்புகிறார்கள்.

சர்வதேச சங்கம்தான் உயர்வான அதிகாரி என்று அவர்கள் சொல்லுவதிலிருந்து சர்வ தேச சங்கம் சமாதான ஷரத்துகளை அங்கீகாரம் செய்யவேண்டுமென்று தோன்றுகிறது. இந்த ஏற்பாடு இதற்கு முன் இருந்த சர்வதேச ஏற்பாட்டிலிருந்து முக்கியமான மாறுதலாகும்.

இந்த விளக்கம் பாட்ஸ்டாம் பிரகடனத்தின் மூன்றாவது பிரிவில் காணப்படுகிறது. முதல் இரண்டு பிரிவுகள் மூலம் பிரிடிஷ், சீனா, பிரெஞ்சு, ருஷ்யா, அமெரிக்க அயல்நாட்டு காரியதரிசிகள் அடங்கிய ஒரு சபை ஸ்தாபிக்கப்படும். லண்டனில் ஒன்றுபட்ட காரியாலயம் நிரந்தரமாக அமைக்கப்படும். இந்த சபை இதாலி, ருஷ்யா, பல்கேரியா, ஹங்கேரி, பின் லாந்துடன் சமாதான உடன்படிக்கைகளை ஏற்பாடு செய்யும். சர்வதேச சங்கத்தின் ஆமோ திப்புக்கு அனுப்பக்கூடிய வரையில் பிரதேச நிர்ணயம் சம்பந்தமான பிரச்னைகளுக்கும் ஆலோசனை கூறும்.

சர்வதேச சங்கம்தான் உயர்ந்த அதிகாரி-என்பது சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பின் இதாலியும் மற்ற ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த நாடுகளும் அச்சங்கத்தின் அங்கத் தினர்களாகச் சேர்ந்துகொள்ளலாமென்பதினின்றும், அச்சுநாடுகளின் உதவிகொண்டு ஸ்தா பிக்கப்பட்ட ஸ்பானிஷ் நிர்வாகம் அதில் சேர்த்துக்கொள்ளப்படாதென்பதிலிருந்தும் ஊர் ஜிதமாகுகிறது.

பாட்ஸ்டாம் மகாநாட்டில் கீழ்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன. ஜெர்மனியை மேல் பார்வை செய்யும் பலமான விரிவான ஏற்பாடுகள். ஜெர்மனி பொருளாதார யூனிட்டாக இருக்கவேண்டும். பிரதேச சுய ஆட்சியை அடிப்படையாகக்கொண்டு ஜெர்மன் ராஜீய

வாழ்க்கை அமைக்கப்படவேண்டும். உலகத்தில் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் விரும்பும் ஜனங்களுடன் காலக்கிரமத்தில் ஜெர்மன் மக்கள் கலந்துகொள்ளுவதற்காக மத்திய ஜெர்மன் நிர்வாகமும் ஸ்தாபிக்கப்படலாம். பாட்ஸ்டாம் அறிக்கையில் தற்பொழுது யாதொரு மத்திய ஜெர்மன் நிர்வாகமும் அமைக்கப்படாது என்று சொல்லப்பட்டிருந்தாலும் ஜேர்மனியை நிரந்தரமாக பங்கு போட்டு பிறரின் ஆட்சிக்கு உட்படுத்துவதாகவும் அது உத்தேசிக்கவில்லை.

போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து முதலிய தேசங்களின் நடவடிக்கைகளைப்பற்றி எழுத நேசதேச பத்திரிகை நிருபர்களுக்கு சுதந்திரமுண்டு என்று சொல்லும் விஷயமும் குறிப்பிடத்தக்கது.

நாஸி ஜெர்மனி நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயமாக, ஜெர்மனியின் சமாதான கால பொருளாதாரத்துக்குத் தேவையில்லாத ஜெர்மன் உபரிப்பொருள்கள் நேசதேசத்தாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்படுகிறது. மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல ஜெர்மனியும் சாதாரணமான வாழ்க்கையை நடத்த அதற்குப் போதுமான ஐச்வரியங்களைத் தருவது நேசதேசத்தாரின் லக்ஷியம் என்று தோன்றுகிறது. பிரிட்டனும், ருஷ்யாவும் ஐரோப்பிய நாடுகள் என்று கருதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ருஷ்ய எல்லைக்கு மேற்கிலும் தெற்கிலுமுள்ள ஐரோப்பியர்தான் பொருளாதார முறைப்படி ஐரோப்பா என்று கருதப்படும்.

பாட்ஸ்டாம் அறிக்கையைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் பின்வருமாறு:—மூப் பெரியார்களும், தங்களுடைய நிர்வாகங்களும், ஜனங்களும், மற்ற நேச நாடுகளும் சேர்ந்து நியாயமான சாஸ்வதமான சமாதானத்தை நிலைநாட்டமுடியும் என்று நம்பியிருக்கிறார்கள். பாட்ஸ்டாம் மகாநாடு சமாதானத்தின் அஸ்திவாரத்தை விஸ்தரித்துவிட்டது. பிரிட்டனுக்கும், ருஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள பாந்தவ்யத்தையும், ஒத்துழைப்பையும், நல்லுணர்ச்சியையும் பலப்படுத்திவிட்டது.

---

# ஜப்பானின் பூர்ண முற்றுகை.

## சூபர் பறக்கும் கோட்டைகள் சுரங்கவெடிகளைப் பாவுகின்றன.

குவாமிலுள்ள டெயிலி டெலகிராப் நிருபரான N. C. பிரெயிட் வுட்.

சுரங்க வெடிபாவும் இறுதி நடவடிக்கையின் மூலம் ஜப்பானின் முற்றுகை பூர்த்தியாகி வருகிறது என்று சூபர் பறக்கும் கோட்டையிலுள்ள சுரங்கவெடி பாவும் நிபுணர் சொல்லுகிறார்.

அவர் மேலும் சொன்னதாவது:—கப்பல்களை மூழ்கடிப்பதும், பழுதுபடுத்துவதும் அவசியமென்றாலும் நாம் சுரங்கவெடிகளைப் பாவியதின்மூலம்தான் துறைமுகங்கள் மூடப்பட்டுவிட்டன. இது ஜப்பானின் கடற்படைக்குச் சங்கடத்தை உண்டுபண்ணிவிட்டது. ஜப்பானுக்கு ஆசியாவிலிருந்து உணவுப்பொருள்களும் யுத்த தளவாடங்களும் வந்து சேரவேண்டும். அதன் தலைவர்கள் சுரங்கவெடி பாவப்பட்ட கடல்வழியாக கப்பல்களை அனுப்பி நஷ்டத்துக்குள்ளாக்குகிறார்கள். ஜப்பானுக்கு பழுதுபட்ட கப்பலும் நஷ்டமானதுபோல்தான்.

யாமோடா என்ற கப்பல் ஷிமோனுசெகி ஜலசந்தி மூடப்பட்டுவிட்டதால் உள்நாட்டுக் கடலிலிருந்து பங்கோ கால்வாய் வழியாகத் துணைக்காவலுடன் வந்தபொழுது மூழ்கடிக்கப்பட்டதென்று அந்த நிபுணர் அறிவித்தார். சுரங்கவெடிகள் ஏராளமாக பாவப்பட்டிருப்பதினால் சென்ற இரண்டுமாதங்களில் ஜலசந்தியின் மேற்கு ஓரத்திலுள்ள மோஜி துறைமுகத்திற்குள் இரண்டு கப்பல்கள்தான் நுழைந்தன.

சூபர் பறக்கும் கோட்டைகள் சுரங்கவெடிகளைப்பாவியது 5 பாகங்களாகப் பிரிக்கப்படலாம்.

(1) ஓகினவாப் போரில் அமெரிக்காவுக்கு உதவுவதற்காக ஜப்பானியக் கடற்படையை அசைவற்றிருக்கும்படி செய்ய ஷிமோனோசெகி ஜலசந்தியும் ஹிரோஷ் உள்நாட்டுக் கடலிலுள்ள கப்பற்தளங்களும் முற்றுகை செய்யப்பட்டன.

(2) உள்நாட்டுக் கடலின் கடற்கரையிலுள்ள கப்பற் தளங்களும் முற்றுகை செய்யப்பட்டன.



(3) வட மேற்கு ஹான்ஷுவில் உள்ள துறைமுகக்கள் மூடப்பட்டன.

(4) ஜப்பானியத் துறைமுகங்களும், முக்கியமாக, கப்பற் துறைகளும் ஹான்ஷுவின் மேற்குப்பக்கமும் அதிக கவனத்துக்குள்ளாயின.

(5) கொரியாவில் பூசானிலிருந்து சைபீரிய எல்லை வரையிலுள்ள துறைமுகங்கள் மூடப்பட்டன.

சூபர் பறக்கும் கோட்டைகள் மே 13உ அன்று ஹான்ஷுவின் மேற்குக்கரை ஓரமாக சுரங்கவெடிகளைப் பாவின. ஏனெனில் கிழக்குக்கரை ஓரமாக அதிகக் கப்பல் போக்குவரத்து கிடையாது. ஜப்பானுக்கு மற்றும் இரண்டு பத்திரமான வழிகள்—ஒன்று வடக்கு கொரியா துறைமுகங்களுக்கும் மேற்கு ஹான்ஷுவுக்கும், மற்றொன்று கொரியாவின் தெற்கு பாகத்தையும் வட சைனாவையும் சுற்றியும் இருந்தன.

கொரியாவிலிருந்து ஜப்பானியக் கடல்வழியாக உணவுப்பொருள்களையும் தாவரப் பொருள்களையும் திருட்டுத்தனமாகக் கொண்டுவரும் ஜப்பானியக் கப்பல்கள் வழியில் உள்ள சிறிய தீவுகளில் நாள் முழுவதும் ஒளிந்துகொண்டிருந்தன. கப்பல்கள் துறைமுகங்களில் இருக்கும்போது அவைகள் மூடப்பட்டுவிட்டதால் கப்பல்கள் வெளியே வரமுடியவில்லை.

---

# விமானப்படையின் வெற்றி.

## எதிர்கால கடற்படைகளின் அமைப்பு.

E. கோல்ஸ்டன் ஷெப்பர்ட்.

(ஸண்டே டைம்ஸ்).

அமெரிக்க கடற்படை அதிகாரிகளில் சிலர் ஜப்பானிய கடற்படை தீர்த்துக் கட்டப்பட்டு விட்டதென்று நம்புகிறார்கள். அது சரியென்றால் அந்த வெற்றிக்கு விமான சக்திதான் முக்கிய காரணம்.

விமானந்தாங்கிகள் மிகுந்த முக்கியத்வமுள்ளவை. அவைகள் கூட்டம் கூட்டமாக பஸிபிக்கில் வேலை செய்துவருகின்றன. அமெரிக்க கடற்படை 100 கப்பல்களை உபயோகித்து வருகிறது. பிரிட்டிஷ் கடற்படையிலும் ஏராளமான விமானந்தாங்கிகள் பஸிபிக்கில் இருந்து வரக்கூடும்.

இரு கடற்படைகளும் சண்டைக் கப்பல்களையும் உபயோகித்து வருகின்றன. எவ்வளவு என்று புதியாவிட்டாலும் 20-க்குக் குறைவானவைகள் போரில் ஈடுபட்டிருக்கின்றன. கடற்படையின் எதிர்கால அமைப்பைப்பற்றிச் சொல்லவேண்டுமென்ற அவா அதிகமாக இருக்கிறது.

கடற்படை இலாகா விமான உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறதென்று காண்கிறோம். சென்ற ஆறு வருடங்களாக கடற்படை போரில்லாமலும் கடலிலும் எதிரியின் துறைமுகங்களிலும் விமான உதவிகொண்டு வெற்றி கிடைத்துவந்ததாலும் இந்த நடவடிக்கை யுக்தமானதுதான்.

ஜப்பானிய சமுத்திரங்களில் விமானந்தாங்கிகள் தரையிலுள்ள ஸ்ட்ராடஜிக் விமானப் படைக்கு உதவ டாக்டிக்கல் விமானங்களை அனுப்பி வருகின்றன. வெகு தூரத்திலிருந்து படையெடுக்கும் படைகளுக்கு விமானந்தாங்கிகளிலிருந்துதான் விமானப்படை உதவி கிடைத்துவருகிறது.

இச்சமயத்தில் யுத்தக்கப்பலின் உபயோகம் குறைந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. கடற்கரை பேரில் பீரங்கிப் பிரயோகம் செய்யும் கடற்போர் முளுவதற்கு இடமில்லை. விமானந்தாங்கிகளுக்கு அது ரக்ஷணையளிக்கலாம்.

யுத்த ஆரம்பத்தில் யுத்தக் கப்பலும், விமானந்தாங்கியும் சுலபமாகத் தாக்கப்படும் நிலைமைக்குட்பட்டிருந்தன. விமானப்படை ஆதிக்கத்தினால்தான் விமானந்தாங்கிகளுக்கு அபாரமான வெற்றிகள் கிடைத்தன.

பஸிபிக்கில் நேசதேச விமான ஆதிக்கம் மிகுதியாக இருப்பதால் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்களும் ஜப்பானிய தளங்களிலிருந்து புறப்படும் சிலாக்கியமில்லாத விமானங்களை முறியடித்துவிடுகின்றன. 1940-ம் வருஷத்தில் ஜெர்மனி புது உயர்வான மாதிரியான படைத் தாக்குதல் செய்ததுபோல, கடற்படைப் போரிலும் புதிய முறை கையாளப்பட்டு தற்காப்புகளாக அழிக்கப்பட்டு வருகின்றன.

நேசதேசத்தார்கள் அந்த சக்தியை அதிகரித்துவிட்டதினால், அதில் அநேக லாபங்கள் காணப்படுகின்றன என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. விமானந்தாங்கி உயர்வானதென்றும் சண்டைக்கப்பல் இலாக்கியமற்றதென்றும் குறைந்த பக்ஷம் பத்து வருஷங்கள் வரையிலாவது கருதப்படும். பவழக்கடல்போன்ற யுத்தங்களில் விமானந்தாங்கிகள் தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டதிலிருந்து இந்த அபிப்பிராயம் பலப்படுகிறது.

மற்றொரு யுத்தம் மூண்டால் முன்னேறித்தாக்குவதற்கும், தற்காப்புக்கும் புதிய ஆயுதங்கள் கிடைத்துவிடும். அவற்றுள் அவுட் வாணமும் பறக்கும் வெடிகுண்டுகளும் சேர்க்கப்படலாம். எதிரியைக் கண்டுபிடிக்கும் கப்பல்களும் விமானப்படையும் அபிவிருத்தி செய்யப்படலாம். ரேடியோலொகேஷன் கருவியும் ரேடியோமூலம் செல்லும் வெடிகுண்டுகளும் அநேக மாறுதல்களுக்கு உட்பட்டுவிடும். அப்பொழுது கப்பல்கள் விமான தளங்களாக உபயோகிக்கப்படமாட்டாது. கப்பல்களில் தானாகச்செல்லும் வெடிகுண்டுகள் ஏற்றிச் செல்லப்படலாம்.

அப்பொழுது யுத்தக் கப்பல்கள் மறுபடியும் கடற்படைப் போரில் முன்னேறித்தாக்க உபயோகிக்கப்படலாம். அது புதிய ஆயுதங்களுக்குச் சுலபமாக இரையாகிவிடலாம். நூறு மைல்களுக்குள் அதன்பேரில் வெடிகுண்டுகள் வீசப்படாவிட்டாலும் அது சுரங்க வெடிகளின்பேரில் மோதி மூழ்கடிக்கப்படலாம்.

விமானந்தாங்கியின் உபயோகம் இந்த யுத்தத்துடன் அற்றுப்போய்விடும் என்று சிலர் நினைக்கிறார்கள். நெடுந்தூரம் செல்லும் விமானங்கள் தோன்றியிருப்பதுதான் இதற்குக் காரணம். இதற்கு மாறாக வாதங்கள் இருந்தபோதிலும் அவர்கள் காஷி யதுவாகத்தானிருக்கிறது. அவுட் வாணங்களை அனுப்ப கப்பல்களை உபயோகிக்க முடியதென்று அநேகர்கள் முடிவு செய்துவிட்டார்கள். இது விஷயத்தில் கடற்படை நிபுணர்கள்தான் முடிவுசெய்ய முடியும். முற்போக்கானவர்கள் பெரிய அவுட் வாணங்கள் நெடுந்தூரம் செல்லும் விமானங்கள்மூலம் அனுப்பப்படும் என்று நினைக்கிறார்கள்.

---

## ஜப்பான்பேரில் கடற்படை பிரங்கிப் பிரயோகம்.

### பசிபிக் கடற்படையின் உயர்வான அடிக்கும் சக்தி.

(பிரியான் டன்ஸ்டால்).

யுத்த தந்திர முறையிலிருந்து தூரக்கிழக்கில் நடைபெறும் கிலாக்கியமான நடவடிக்கைகளில் பிரிடிஷ் அமெரிக்க பசிபிக் கடற்படையைச் சேர்ந்த பெரிய கப்பல்கள் ஜப்பானியக் கடற்கரைபேரில் பலமாகப் பீரங்கிப் பிரயோகம் செய்தது ஒன்றாகும்.

ஜப்பானின் முக்கியத் தீவான ஹான்ஷூவுக்கு சமீபத்தில் யாதொரு தொந்திரவுமின்றியும் பிரிடிஷ், அமெரிக்க சண்டைக் கப்பல்கள் அங்கும் இங்கும் சஞ்சாரம் செய்வது என்ற ஆச்சரியமான நடவடிக்கைக்கு யாது காரணம்? ஜப்பானுக்குப் போகும் தெற்கு, கிழக்குக் கடல்கள் வழியாக நேசதேச பசிபிக் கடற்படைக்கு உள்ள பொதுவான ஆதிக்கத்திலிருந்து பீரங்கிப்பிரயோகம் செய்யக்கூடிய சக்தி என்ற லாபம் கிடைத்திருப்பதுதான் இதற்குக் காரணம்.

சமீபத்தில் வந்துள்ள விமானந்தாங்கிகளிலிருந்தும் ஜப்பான் தாக்கப்படுவதிலிருந்து நேசதேசத்தாருக்கு கடற்படை, விமானப்படை ஆதிக்கம் உண்டென்பது ருஜுப்பிக்கப்படுகிறது. ஆகிலும் நேர்முகமாக பீரங்கிப்பிரயோகம் செய்யப்பட்டது அந்த ஆதிக்கத்தின் பகட்டான நடவடிக்கை. மேலும் பலமான தற்காப்புகளுள்ள கடற்கரையைத் தாக்குவதில் இதற்குமுன் கப்பல்களுக்கு ஏற்பட்டிருந்த பிரமங்கள் இப்பொழுது அறவே ஒழிந்து போய் விட்டன என்பதையும் அந்த நடவடிக்கை வெளியிடுகிறது.

ஆகிலும் தற்பொழுது பிரிடிஷ், அமெரிக்கக் கடற்படை பீரங்கிப் படையினர் தற்காப்புகளையும், விமான தளங்களையும், போர்முனையிலுள்ள துருப்புகளையும் தாக்கவில்லை. அவர்கள் தொழிற்சாலை யந்திரங்களையும் கட்டடங்களையும்தான் தாக்குகிறார்கள். அவைகள் மிகவும் பெரியதாகவும், ஸ்பஷ்டமாகவும், சுலபமாகத் தாக்கக்கூடியதாகவும் இருப்பதால் அவைகள் பீரங்கிகளுக்குத் தகுந்த லக்ஷியங்களாக இருந்தன. இந்த நிலைமை எதிரிக் கப்பற்படை போஸ்டன், நியூயார்க், சார்ல்ஸ்டன், சான்பிரான்ஸிஸ்கோ, லாஸ் ஏஞ்சலிஸ், அல்லது இங்கிலாந்தின் வடகிழக்குக் கடற்கரை அல்லது வேல்ஸின் தெற்குக் கடற்கரையிலுள்ள தொழிற்சாலை நிலையங்கள்பேரில் குண்டுகளை வீசுவது போலாகும்.



கடற்கரை லக்ஷியங்களை கப்பல்களின் உதவி மூலம் தாக்கும் முறையை பிரிடிஷ் கடற்படைதான் ஆரம்பித்தது. 1941-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் கடற்தளபதி சோமர்வில்லின் கடற்படை ஜெனோவா பேரில் பீரங்கிப்பிரயோகம் செய்தது. இதே சமயத்தில் பிரிடிஷ் மத்தியதரைக்கடல் கடற்படையும் இந்த தந்திரத்தைக் கையாண்டது. 1940—43-ம் வருஷங்களில் லிபியாவிலும் டுனிஸியாவிலும் போர்புரிந்த எட்டாவது சேனைக்கு கடற்படை பீரங்கி உதவியளித்தது. அதன்பின் பாண்டலேரியா, லாம்படுஸா, ஸிஸிலி பேரில் பீரங்கிப் பிரயோகம் நடைபெற்றது. கடைசியாக பிரிடிஷ் அமெரிக்கக் கப்பல்கள் ஸாலர்னோபேரில் பீரங்கிப் பிரயோகம் செய்தன.

இந்த சமயத்தில் மத்தியதரைக்கடலில் போர் பளுவை ஏற்றுவந்த பிரிடிஷ் கப்பல்களுடனும் மற்ற பிரிடிஷ், அமெரிக்க சஞ்சாரிகளுடனும், நாசகாரிகளுடனும் கிங் ஜார்ஜ் V என்ற கப்பல் உள்பட்ட பிரிடனின் நவீன போர்க் கப்பல்களும் அட்லாண்டிக்கிலிருந்து மத்தியதரைக்கடலுக்குக் கொண்டுவரப்பட்டன. பிரிடிஷ் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ள இந்தக் கப்பல்களின் அடிக்கும் சக்தி அபாரமானது. 1944-ம் வருஷம் நார்மண்டியில் ஜெனரல் ஈசன்ஹவர் இறக்கிய படைகளுக்கு ஒத்தாசை செய்த பழைய பிரிடிஷ், அமெரிக்க கப்பல்களைவிட இந்தக் கப்பல்கள் உயர்வானவை.

ஐரோப்பிய அலைகளில் 10, 14 அங்குல வாயுள்ள புதிய ரக பீரங்கிகளும் இருக்கின்றன. பழைய தரை லக்ஷியங்களைத் தாக்கிய 15 இஞ்சு பீரங்கிகள் உள்ள வார்ஸ்பைட் போன்ற பிரிடிஷ் கப்பல்களைவிட இந்தக் கப்பல்களின் பீரங்கி குண்டுகள் வெகு தூரம் சென்று லக்ஷியத்தை அடிக்கும்.

இன்று கப்பல்களிலுள்ள பெரிய பீரங்கிகள் 30,000 கெஜ தூரத்திலுள்ள லக்ஷியங்களையும் குறிப்பாகத் தாக்கும். வார்ஸ்பைட் என்ற கப்பல் 1940-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ம் தேதியன்று 26,000 கெஜ தூரத்திலுள்ள இதாலிய கமாண்டரின் கப்பலான செஸாரிபேரில் பீரங்கிப்பிரயோகம் செய்தது. சமீபத்தில் கட்டப்பட்ட கப்பல்கள் 1,500, 2,000 ராத்தல் குண்டுகளையும் ஒரு செகண்டுக்கு 2,500, 2,950 அடி வேகத்துடன் பிரயோகிக்கக்கூடும்.

மேலும் பிரிடிஷ் கப்பல்களில் ஒவ்வொன்றிலும் 5·25 அங்குலமுள்ள 16 பீரங்கிகளிருக்கின்றன. பிரிடிஷ் புதிய டிடோ வகுப்பைச் சேர்ந்த லேசான சஞ்சாரிகளிலும் இந்த பீரங்கிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 5·25 அங்குல பீரங்கிகளின் அடிக்கும் தூரமும் சக்தியும் அபாரமானது. பசிபிக்கிலுள்ள நியூ பௌண்ட்லாந்து, காம்பியா, உகாண்டா என்ற சஞ்சாரிகளிலுள்ள (6) அங்குல பீரங்கிகளும் ஒரு செகண்டுக்கு 3,000 அடி செல்லும் வேகமுள்ள குண்டுகளை வீசக்கூடும். ஒரு சஞ்சாரியின் பீரங்கிகளின் சுடும் சக்தி தரையிலுள்ள பீரங்கிப் படையின் குண்டு வீச்சுக்கு சமமானதென்று மதிப்பிடப்படுகிறது.

விமானப்படை லக்ஷியத்தைத் தாக்கிவிட்டால் கப்பற்பீரங்கிகள் துருப்பு சேமிப்புகளையும், டாங்கிகளையும், பீரங்கிகளையும், போர்முனை தற்காப்புகளையும் நொருக்கக்கூடுமென்று பிரிடிஷ் கடற்படை ருஜூச் செய்திருக்கிறது. அவைகள் உயர்தரமான வெடி குண்டுகளை உபயோகிக்கவேண்டும். அவைகள் லக்ஷியத்தில் பட்டவுடன் வெடிக்கவேண்டும் அல்லது லக்ஷியத்தின்பேரில் வெடிக்கவேண்டும்.

மேலும் கடற்படையிலுள்ள வெடிகுண்டுகள் தரையிலுள்ள காங்கிரீட் தற்காப்புகளைத் தாக்கவும் உபயோகப்படும். தரை பீரங்கிகளைவிட கப்பற்படை பீரங்கிகளின் அடிக்கும் சக்தி மிகுதியானதால், வெடிகுண்டுகள் காங்கிரீட்டைப் பிளந்து சென்று பிறகுதான் வெடிக்கும். கள சக்தியைப் பெற்றிருக்கும் விமான வெடிகுண்டுகளைவிட கப்பல்களிலிருந்து வீசப்படும் குண்டுகளுக்கு அதிக சௌகரியமிருக்கிறது.

---

## பசிபிக் போர் பிராந்தியத்தில் மூன்று கமாண்டுகள்.

### ஜப்பானைத் தாக்க ஸ்பாட்ஸ், நிமிட்ஸ், மாக்ஆர்தர்.

லெப்டினெண்ட் ஜெனரல் H. G. மார்டின்.

தூரக்கிழக்கில் மூன்று நேசதேச கமாண்டுகள் இருக்கின்றன. அமெரிக்க பசிபிக் கமாண்ட், பிரிடிஷ் தென்கிழக்கு ஆசியா கமாண்ட், சியாங்கே ஷேக்கின் சைனா கமாண்ட்.

அமெரிக்க பசிபிக் கமாண்ட்தான் எல்லாவற்றிலும் சிக்கலானது. அதில் மூன்று தனிப்பட்ட கமாண்டுகள் ஒன்றோடொன்று ஒன்றுபட்டிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக வாஷிங்டனில் ஒன்றுபட்ட தலைமை காரியாலயம் இருக்கிறது.

ஒன்றுபட்ட காரியாலயத் தலைவர்களுக்குக்கீழ் மூன்று தனிப்பட்ட கமாண்டுகள் இருக்கின்றன. ஸ்பாட்ஸிடம் ஸ்ட்ராடஜிக் விமானப் படை இருக்கிறது. நிமிட்ஸிடம், கடற்படையும் மாரின் படையும் இருக்கிறது. அதற்குத் தலைமை காரியாலயம் சைபான். மாக்ஆர்தரிடம் சேனையும் சேனைக்கு உதவிவரும் விமானப் படையும் இருக்கின்றன. அதற்கு மணிலா தலைமை காரியாலயம். இவைகளுக்கு ஒன்றுபட்ட தலைமைக் காரியாலயமிருக்கிறதாவென்று நாம் கேள்விப்படவில்லை.

ஸ்பாட்ஸின் ஸ்ட்ராடஜிக் விமானப் படையில் மாரியானஸில் தளமுள்ள 20-வது சேனையைச் சேர்ந்த B. 29 விமானப் படையும், ஓகினவாவுக்குவரும் எட்டாவது சேனையைச் சேர்ந்த விமானப்படையான B. 29, B. 17 விமானங்களும் இருக்கின்றன. பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த நெடுந்தூரம் செல்லும் விமானப் படையும் பசிபிக்கு வந்து ஸ்பாட்ஸின் கமாண்டுக்குட்படும்.

நிமிட்ஸிடம் பசிபிக் கடல் பிராந்தியத்தின் கமாண்டும், பசிபிக் கடற் படையின் கமாண்டும் இருக்கின்றன. சேனைத் தலைவராக அவர் தீவுகளையும் அவைகளிலுள்ள படைகளையும் மேன் பார்வை செய்கிறார். படைகளில் அலூஷியன் தீவுகளிலுள்ள 11-வது விமானப் படையும், கடல் விமானப் படையின் 1, 8 பகுதிகளும், ஸாலமன்ஸிலுள்ள மாரின் விமானப் படையின் 2, 4 பகுதிகளும் சேர்ந்திருக்கின்றன. எல்லாப் படைகளும் ஜப்பானை முற்றுகை செய்கின்றன. ஐவோஜிமாவிலுள்ள 7-வது சண்டை விமானப்படை, மாக்ஆர்தரிடமுள்ள கென்னியாவின் 7-வது சேனை உதவி விமானப் படையின் ஒரு பாகமாக இருந்தாலும், மாரியானஸிலிருந்துவரும் ஸ்பாட்ஸின் ஸ்ட்ராடஜிக் விமானப்படையுடன் அது ஒத்துழைக்க வேண்டியிருந்தாலும், நிமிட்ஸின் கமாண்டுக்குட்பட்டிருக்கிறது.

கடற்படை கமாண்டர் என்ற ஹோதாவில் நிமிட்ஸிடம் ஹால்ஸியிடமுள்ள ஒன்றுபட்ட பிரிடிஷ், அமெரிக்கக் கடற்படையும், அதைச் சேர்ந்த விமான தளங்களிலுள்ள விமானப் படையும், அலூஷியன் தீவுகளிலுள்ள வடக்கு பசிபிக் கடற்படையும் 7-வது கடற்படையும் இருக்கின்றன. 7-வது கடற்படையை ஒன்றுபட்ட காரியாலயத் தலைவர்கள் மாக்ஆர்தரிடம் ஒப்படைக்கவில்லை.

மாக்ஆர்தரும் இரண்டு கமாண்டை வகிக்கிறார். அவர் பசிபிக்கிலுள்ள அமெரிக்க சேனைகளின் தலைவர். தென்மேற்குப் பசிபிக்கிலுள்ள நேசதேசப் படைத் தலைவர்.

அமெரிக்கப் படைத்தலைவர் என்ற முறையில் அவர் ஜப்பானிய, அல்லது சீனப்படையெடுப்பில் கமாண்டு வகிக்கக்கூடும். இந்த ஹோதாவில் நிமிட்ஸிடமிருந்து ஸாலமன்ஸிலுள்ள சேனை, விமானப் படைகளின் கமாண்டை எடுத்துக்கொண்டுவிட்டார். ஆனால் ஸ்பாட்ஸிடமுள்ள ஸ்ட்ராடஜிக் விமானப் படை அதில் சேர்க்கப்படவில்லை. அவரிடமுள்ள டாக்டிகல் விமானப்படையில் 5-வது, 7-வது விமானப் படைகள் இருக்கின்றன. அதில் தண்டர் போல்டும், லிபரேடர்களும், மிட்சல் விமானங்களும் இருக்கின்றன. இது கென்னியின் தூரக்கிழக்கு விமானப்படையின் பெரும்பாகமாகயிருக்கிறது. இவற்றின் உதவிகொண்டு ஜப்பான்பேரில் தினசரி 5,000 டன்கள் எடையுள்ள வெடிகுண்டுகளை வீசுவதாக கென்னி சொல்லிவருகிறார். அவரும் ஸ்பாட்ஸும் ஜப்பானின் விமானசக்தியில் எஞ்சிய பாகத்தை அழிக்க முற்பட்டிருக்கிறார்கள்.

தென்மேற்குப் பசிபிக் கமாண்டர் என்ற முறையில் மாக்ஆர்தரிடம் பிலிப்பைன்ஸில் எதிரியைத் துடைத்துவரும் அமெரிக்கத் துருப்புகளும், போர்னியோவிலும், பேலானிஸியாவிலும் போர் புரியும் ஆஸ்திரேலிய டச்சுத் துருப்புகளும், (இந்தப் பிராந்தியத்தில் பிளாமி அவருக்கு டெபுடி), 13-வது விமானப் படை (கென்னியின் தூரக்கிழக்கு விமானப் படையின் எஞ்சிய பாகம்), 7-வது கடற்படையும் (இவ்விரண்டும் பிலிப்பைன்ஸ், போர்னியோவிலும் அவைகளைச் சுற்றிலும் நடைபெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றன), கடைசியாக அமெரிக்க 1-வது சேனையும் சேர்ந்திருக்கின்றன.



14,000-மைல்கள் தூரத்திலிருந்து விவரிக்கும் ஒருவருக்கு இவ்வளவுதான் பசிபிக் கமாண்டு அமைப்பைப்பற்றித் தெரியவருகிறது. ஸ்பாட்ஸும், நிமிட்ஸும், மாக்ஆர்தரும் ஜப்பானை நோக்கிப் பாய முயலுகிறார்கள். ஸ்பாட்ஸ் அங்கு பறந்துசெல்லுவார். நிமிட்ஸ் நீந்திச் செல்லுவார். மாக்ஆர்தர் நடந்து செல்லுவார். ஒவ்வொருவருடைய நடவடிக்கையும் காலதேசவர்த்தமானத்தைப் பொறுத்தது.

---

# தூரக்கிழக்கில் யுத்தப்போக்கு.

## ஐரோப்பியப் போருடன் ஒப்பிடல்.

### லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்.

எதிர்கால நடவடிக்கைக்கு பிருகிருத உலக யுத்தம் வெகுகாலமாக நடைபெற்றதால் செல்ல வேண்டியதில்லை. மாதிரியான முன் நடவடிக்கைகளுக்கு வெகுதூரம் சரித்திரத்தில்

அடைந்துவிட்டதென்று பசிபிக் போர் படையெடுப்புக்கு முற்போக்கான கட்டத்தை இரண்டு வருடங் கடற் தளபதி நிமிட்ஸ் சொல்லியிருக்கிறார். அவர் அபிப்பிராயத்தை அறிய மத்திய களுக்கு முந்திய நடவடிக்கையை கவனிக்க வேண்டும். 1943-ம் வருஷத்திலிருந்த தரைக்கடல் நடவடிக்கையை கவனிப்போம்.

1943-ம் வருஷம் மே மாதத்தில் வான் ஆர்னிடமுள்ள 3,00,000 படைகள் பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டரிடம் சரண் புகுந்தன. இதுதான் ஆபிரிக்காப்போரின் இறுதி கட்டம். ஐரோப்பியப்படையெடுப்புக்கு அதுதான் முற்போக்கான நடவடிக்கை. ஜூன், ஜூலை மாதங்களில் அடுத்த நடவடிக்கைக்குத் தயார் செய்யப்பட்டது. இந்த தாமதத்தைக்கண்டு ஜனங்கள் குறை கூறினார்கள்.

நேசதேச விமானிகள் ஆனால் அப்பொழுது ஒருவரும் ஓய்வு எடுத்துக்கொள்ளவில்லை. ஸிஸிலியிலிருந்தும் தெற்கு இதாலியிலிருந்தும் எதிரி விமானப்படைகளைத் துரத்தியடித்தார்கள். நேச தேசப்படைகள் ஸிஸிலியின் தெற்குக்கரையிலிறங்கியபொழுது ஸிஸிலி விமானதளத்திலிருந்து எதிரி விமானம் ஒன்றும் நடமாடவில்லை. தெற்கு இதாலியிலும் ஒரு விமானம் கூட இல்லை.

இந்த விமான நடவடிக்கையின்பொழுது மற்ற இரண்டு படைகளும் சும்மா இருக்கவில்லை. பிரிடிஷ் விமானப்படையும் கடல் விமானங்களும் இதாலியக்கப்பல்களை துறைமுகங்களைவிட்டு வெளிவராமல் அடைத்துவிட்டன. புதிய பூப்பிரதேசத்தில் போரை நடத்த ஸோல்ஜர்கள் பயிற்சி பெற்று வந்தார்கள். ஏனெனில் பாலைவன தந்திரத்திற்கும் திராக்ஷைக் கொடிகளும் மலைக்குன்றுகளும் உள்ள இடங்களில் நடைபெற வேண்டிய போருக்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு.

இவ்விதமாக படையெடுப்பு ஏற்பட்டபொழுது அது இனிது முடிந்தது. டுனிஷியா விடுவிக்கப்பட்டபின் தாக்குதலுக்காக படைகள் இறங்கி இருந்தாலும் ஸிஸிலியிலிருந்தும் தெற்கு இதாலியிலிருந்தும் விமானங்கள் சாமான் கப்பல்களைத் தாக்கியிருந்தாலும் படையெடுப்பு வெற்றிகரமாக இருந்திராது. ஏனெனில் தரைப்படையைவிட கப்பற்படையை விமானப்படை திறம்பட தாக்கக்கூடும்.

மறுமுறை இன்று 1943-ம் வருஷம் மத்தியதரைக்கடலில் நடைபெற்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. மாரியானஸிலுள்ள சூபர் பறக்கும் கோட்டைகள் முன்னணி விமான தளங்களிலிருந்து ஜப்பானியக் கடற்படையைத் துரத்தியடித்துவிட்டன. ஜப்பானிய போக்குவரத்துகளையும் தொழிற்சாலைகளையும் அவைகள் இரக்கமன்னியில் அழித்து வருகின்றன. விமானந்தாங்கிகளில் செல்லும் விமானங்கள் ஜப்பானிய உள்நாட்டுக் கடலிலுள்ள ஜப்பானியக் கடற்படையை அழித்துவருகின்றன.

படைகளைக்கொண்டு இதே சமயத்தில் துருப்பேற்றிச்செல்லும் கப்பல்கள் கடல்தாண்டி போகின்றன. ஸோல்ஜர்கள் புதிய பிரதேசத்தில் பயிற்சிபெற்று வருகிறார்கள். 1943-ம் வருஷ நடவடிக்கையுடன் ஒப்பிடுவது பொருத்தமாயிருக்கிறது. எதிர்காலநடவடிக்கையும் அதே மாதிரியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஜெர்மனி முறியடிக்கப்பட்டு பெர்லின் ஆக்ரமிக்கப்பட்டாலொழிய ஐரோப்பிய யுத்தம் முடிவடையாதென்று இருந்தபோதிலும் முதலில் போரை ஆபிரிக்காவில் துவக்குவது தான் சாவதானமென்று கருதப்பட்டது. ஆகையால் ஜப்பானை பிலிப்பைன்ஸிலிருந்து தாக்குவதைவிட மைசூர் வழியாகத் தாக்குவது சுலபமானது.

இனிமேல் நம்பிக்கை இல்லை என்ற கட்டத்தில் ஜெர்மனி, ஜப்பானின் நடவடிக்கைகளும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இறுதிவரையில் போராடுவோமென்றும், ரகசிய ஆயுதத்தை கையாளுவோமென்றும் படையெடுப்பு ஏற்பட்டால் தேசம் பூராவும் எதிர்க்குமென்றும் ஜப்பான் சொல்லிவருகிறது. ஹிட்லரும் அவ்விதமாகவே உள் நாட்டுப் படைகளை நம்பியிருந்தான்.

சாம்யத்தை இதற்கு மேல் சொல்லமுடியாது. ஜெர்மானியர்களைவிட ஜப்பானியர்கள் ஒழுங்கீனமாய் நடக்கக்கூடியவர்கள். ஜெர்மானியர்களைவிட கௌரவத்தை இழந்துவிடுவதில் ஜப்பானுக்கு அதிக பயம் இருந்துவருகிறது.

நகரங்கள் அழிந்துவரும்பொழுது ஜப்பானிய சக்ரவர்த்தி யுத்தத்தை நடத்தும்படி சொல்லி அதற்கு அதிக மதிப்பு இருக்குமானால், படைகள் இறங்கியபின் கொரில்லாப்படைகள்தான் போரை நடத்தக்கூடும். அதிக அவமானமில்லாமல் போரை நிறுத்துவதில்தான் தலைவர்கள் கவனம் செலுத்திவருகிறார்கள்.

---

## உலகத்திலேயே மிகவும் நீண்ட சப்ளைக் கோர்வை.

### பசிபிக்கிலுள்ள விமானங்களுக்கு தளவாடங்கள்.

(டெய்லி டெலகிராப்).

பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த விமானந்தாங்கிகள் ஜப்பானை நெருங்கிவரும்போது உலகத்திலேயே மிகப் பெரிய சப்ளை வசதியுடைய கப்பல்களுக்கு விமான சப்ளையை மிகுதியாக வழங்கிவருகிறது என்று கடற்படை இலாகா விளம்பரம் செய்திருக்கிறது.

மொத்தமாக 2 லக்ஷம் கடற்படையைச் சேர்ந்த விமான சாமான்கள், உதிரி பாகங்கள், விமானப்படையை சரியானபடி வைக்கும் முஸ்திப்புகள் கடற்படை இலாகாவைச் சேர்ந்த சப்ளை இலாகாவினால் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

சப்ளைகளை அனுப்ப பிரிடன் பூராவிலும் விமான சப்ளை டெப்போக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான டெப்போ பர்த்தில் இருக்கிறது. அங்கு 1,600 பேர்கள் வேலை செய்கிறார்கள். மற்ற டிப்போக்கள் சுவான்ஸீக்கு அருகில் ஸ்டாபோர்டிலும் லாங்னெக்கிலும் இருக்கின்றன. பர்த்துக்கு அருகில் உள்ள கோபனெகவில் பூமிக்குள் ஆயிரக்கணக்கான டன்கள் எடையுள்ள உதிரி பாகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்டோர்ஸ் பூமிக்குள் 70'யில் இருக்கிறது. பிரிடனில் பலமான குண்டுவீச்சு ஏற்பட்ட பொழுது இது உபயோகப்படுத்தப்பட்டது.

பசிபிக்குக்குச் செல்லும் கப்பல்களுக்கு சாமான்களை பிரிடன் பூராவும் விமானங்கள் கொண்டுபோகின்றன.

மற்றொரு ஸ்டோர் அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியாவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு குத்தகைக்கடன் சாமான்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அவைகள் நேராக பசிபிக்குக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. பிரிடிஷ் பசிபிக் கடற்படைக்கு ஸிட்னியிலும் கிழக்கு இந்தீஸ் கடற்படைக்கு சிலோனிலும் விமான சாமான் டெப்போக்கள் இருக்கின்றன. ஸிட்னியிலிருந்து 3,000 மைல்கள் தாண்டியுள்ள போர் முன்னணிகளுக்கு கப்பல்கள் மூலம் சாமான்கள் கொண்டுபோகப்படுகிறது. இந்த சாமான் கப்பல்களில் ஒரு பெரிய விமானந்தாங்கிக்கு வேண்டிய 12,000 விமான சாமான்கள் அனுப்பப்படுகின்றன. அவைகளிலிருந்து விமானந்தாங்கிகளுக்கு சாமான்களை கடற்படையைச் சேர்ந்த நிபுணர்களான ஸ்டோர் கீப்பர்கள் எடுத்துச் செல்கிறார்கள்.



## தென்கிழக்கு ஆசியாவில் ஸ்திரீ விமானிகள்.

### எல்லோரும் வாலண்டியர்கள்.

விமானப்படையைச் சேர்ந்த விமானப்படை ஆபீஸர் பிரிடனின் ஸ்திரீ உதவி விமானப்படையைச் சேர்ந்த விமானப்படை ஆபீஸர் லீதர் குவென்னுப் மூர்.

ஐரோப்பிய வெற்றிக்குப்பின் பிரிடிஷ் சேவையிலுள்ள ஸ்திரீகளெல்லாம் தாயகம் திரும்பிவிடமாட்டார்கள், படைகளைக் கலைப்பது தூரக்கிழக்குப் போரின் போக்கைப் பொறுத்து காலக்கிரமத்தில்தான் நடைபெறும். ஜப்பானைத் தாக்க அவசியமான மனித பலத்தைத் திரட்டுவது அதிக முக்கியத்வமுள்ளது. ஆகையால் பிரிடனிலுள்ள விமானப் படை ஸ்டேஷன்களில் வேலை செய்வதற்கும் தென்கிழக்கு ஆசியாவில் வேலை செய்துவரும் விமானிகளுக்கு பதிலாக முன்னணி தளங்களுக்கு அனுப்பப்படுவதற்கும் அல்லது அவசிய மானவர்களைத் திரும்பி அனுப்புவதற்கும் ஸ்திரீகள் தேவைப்படும்.

இந்தியாவுக்கும் ஸ்திரீகள் உதவி விமானப் படையைச் சேர்ந்த 1,000 பேர்கள் இந்தியாவுக்கும் சிலோனுக்கும் தன்னிச்சையாக வந்திருக்கிறார்கள். வாலண்டியர்கள் தான் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் 20 முதல் 33 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும். பிரிடனில் குடும்ப பொறுப்புள்ளவர்கள் பிரிடனில் குடும்ப கர்த்தவ்யமிருப்பதினால், கொஞ்ச காலத்தில் பிரிடனுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லக்கூடிய W. A. A. F. அங்கத்தினர்கள் கடல் தாண்டி சேவைக்கு அனுப்பப்படமாட்டார்கள்.

குடித்தனப் பொறுப்பில்லாத விவாகமான ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அநேக W. A. A. F.கள் வேலைக்கு முகாந்தமையாகச் சென்றாலும் அவர்களின் அநேகர் புருஷர்களையும் ஸ்திரீகளையும் சந்தித்திருக்கிறார்கள். W. A. A. F. அங்கத்தினர் பிரிடிஷ் விமானியை கடல் தாண்டியிருக்கும்பொழுது, விவாகம் செய்துகொண்டால் புருஷன் தாயகம் திரும்பும்பொழுது மனைவியும் கூடவரலாம் என்று சமீபத்தில் ஒரு உத்தரவு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு வந்த W. A. A. F-கள் டில்லியிலிருந்து அவர்களுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டதாகவும், தூரக்கிழக்கு ரம்யமானதென்றும் அங்கு பேரிச்ச மாமரங்களும் மனதைக் கவருகின்றனவென்றும் எழுதியிருக்கிறார்கள்.

தூரக்கிழக்குப் போரில் பிரிடன் அதன் பூரா சக்தியையும் ஈடுபடுத்துமாகையால் அநேகர்கள் தன்னிச்சையாக இங்குவர பிரியப்படுகிறார்கள். அவர்களுடைய சேவையை போர்முனைக்கருகிலே நடத்தவும் அவர்கள் பிரியப்படுகிறார்கள். பிரயாணம் செய்ய வேண்டுமென்ற ஆவலையும் அவர்கள் பூர்த்திசெய்து கொள்ளுகிறார்கள்.

நல்லறிவுள்ள ஒரு பெண்மணிக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம் அளிக்கிறது. யுத்தத்துக்குப் பிந்திய உலகில் இது உபயோகமுள்ளதாக இருக்கும். சாம்ராஜ்யத்தின் நாடுகளைப் பற்றியும் ஜாதியார்களைப்பற்றியும் அவளுக்கு நல்லறிவு ஏற்படும். படைகள் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும், ஒரு தேசத்தின் மனித பலமும் தொழிலாளர்களும் அதன் ராஜீய பொருளாதார நிலைமையை எவ்விதம் நிர்ணயிக்கும் என்றும் அறிந்துகொண்டார்கள். உலக சமாதானத்துக்கும் சகோதர பாவத்துக்கும் சர்வ தேசங்களுக்குள் நல்லுணர்ச்சி ஏற்படவும் இந்த சேவை உதவும்.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஸ்திரீ விமானிகளை சந்தித்தபின் அவர்கள் இந்த வேலையில் அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அநேகர்கள் இந்தியா, சிலோனின் பூகோளம், சரித்திரம், ராஜீயம் சம்பந்தமானவும் ஜனங்களின் பழக்க வழக்கங்களைப்பற்றிய அநேக புஸ்தகங்களைப் படித்து வருகிறார்கள்.

W. A. A. F. ஆபீஸர்கள் கல்கத்தாவில் விசேஷ சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவிலும், சிலோனிலும் உள்ள நிர்வாக, துப்பறியும், சமிக்ஞை, விளக்கம், கணக்கு, உணவுப்பொருள் விநியோகம் முதலிய இலாக்காக்களிலுள்ளவர்களுக்கு பதிலாக 100 ஆபீஸர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வேறுபட்ட சந்நிவேசத்திலிருந்து வந்தாலும் அவர்கள் இங்கிலாந்தில் செய்துவந்த குமாஸ்தா வேலைக்கும், டெலிபோன் ஆபரேடர்கள், சமிக்ஞையாளர்கள், வெயர்லெஸ் வேலை,

முஸ்தீப்பு உதவியாளர்கள், நிர்வாகம், நாதி வேலை, சிகை அலங்காரிகள் என்ற இனங்களில் இப்பொழுது செய்துவரும் வேலைகளுக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. தலைமை காரியாலயத்தில் அவர்கள் ஆபீஸ்களில் வேலை செய்துவருகிறார்கள். அடிக்கடி ஹோட்டல் களிலும் வேலை செய்வதுண்டு. சிலோனில் கடற்கரைப் படைகளில் அவர்கள் ஆபரேஷன் அறைகளிலும், பனை ஓலைகளால் அமைக்கப்பட்ட முஸ்தீப்பு ஸ்டோர்களிலும், மூங்கில் கம்புகள் பேரில் அமைக்கப்பட்ட கண்காணிப்பு முகாம்களிலும் வேலைசெய்து வருகிறார்கள். பிரிட்டனில் வேலைசெய்ததுபோல இங்கும் சேவை செய்கிறோம் என்று அவர்கள் சொல்லு வார்கள். இந்த வேலையை அவர்கள் உத்சாகத்துடன் செய்துவருகிறார்கள்.

பப்பாயிலுள்ள W. A. A. F. விடுதி நல்ல வசதிகள் அமைக்கப்பெற்றது. சாப்பாட்டு றூமில் நல்ல காற்றோட்டமும் ரம்யமாகவுமிருக்கும். பொழுது போக்கு முகாம்களும் வசதியாக இருக்கின்றன. பெண்கள் ஸ்நானம் செய்தபின், அந்தமனத்துக்கு முன் மேஜோடுகளையும் நீண்ட சட்டைகளையும் அணிந்துகொண்டு, படுக்கும்பொழுது கொசு வலையையும் உபயோகிப்பார்கள். கொழும்பிலும் மற்ற இடங்களிலும் ஸ்திரீகள் செங்கல் கட்டடங்களில் வசித்துவருகிறார்கள், ஸ்நானம் செய்கிறார்கள், விமானிகளுடன் பண்டக சாலைகளிலும், போஜன விடுதிகளிலும் கலந்து கொள்ளுகிறார்கள்.

தேக ஆரோக்கியத்தை உத்தேசித்து கடல் தாண்டிச் செல்லும் W. A. A. F—களுக்கு இங்கிலாந்திலேயே அம்மை மருந்தும் மற்ற மருந்தும் செலுத்தப்படுகின்றன. மேலும் வைத்தியர்கள் மூலம் தேக பரிசோதனையும் செய்யப்படுகிறது. அவர்களின் தேக சௌக்கியமும் மிகவும் ஜாக்கிரதையுடன் பராமரிக்கை செய்யப்படுகிறது. அநேக ஸ்திரீ, புருஷ டாக்டர்கள் இதை கவனித்து வருகிறார்கள். மேரி ராணியாரின் விமானப்படை தாதிப் படையைச் சேர்ந்தவர்களும் இதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

ஸ்திரீ விமானிகள் ஓய்வெடுத்துக்கொள்ளுவதற்கான முகாம்களும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சிலோனில் 6,000 அடி உயரத்திலுள்ள மலைகளில் ஒரு விடுதி இருக்கிறது. அங்கு சீதோஷ்ணம் மனோஹரமாயிருக்கிறது. அங்கு ஸ்நானம், படகு ஓட்டுவது, குதிரை சவாரி, விளையாட்டுகள் முதலியவற்றிற்கும் வசதி இருக்கிறது. நவீன அமைக்கப்பட்ட இந்த விடுதியில் W. A. A. F. களை அதன் எஜமானி கவனித்து வருகிறாள். அங்கு ராஜாவில் வந்துள்ள பையன்களும் ஆதரிக்கப்படுவார்கள்.

கடற்கரையிலுள்ள யூனிட்டுகளுக்கு கடலில் நீந்திச் செல்லுவது முக்கியமான பொழுது போக்கு. சில இடங்களில் பிரத்யேகமான இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அநேக ஸ்டே ஷன்களுக்கருகில் படகு ஓட்டுவது, குதிரைசவாரி, டென்னிஸ், ஹாக்கி, காப் முதலிய பொழுது போக்குக்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஸ்திரீ விமானிகளுக்கு அதிக சலுகை காட்டப்படவில்லை. ஆடவர்களைப் போலவே அவர்களும நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கிறார்கள். பிரிட்டனில் W. A. A. F. ஆபீஸர்களும் கமிஷன் பெறாத நிர்வாகிகளும் அவர்களின் க்ஷேமத்தையும், ஒழுங்கு முறையையும் கவனித்து வருகிறார்கள். அநுபவம் ஏற்பட்டு விட்டதால் அவர்கள் எந்த நிலைமைக்கும் தக்கவாறு நடந்துகொள்ளுவார்கள் என்று தெரியவருகிறது.

---

# வருங்காலத்தில் ஒரு விமான நஷ்டம் கூட ஏற்படாது

## சமாதான காலத்துக்கு யுத்தத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய முறைகள்.

(L. E. சௌல்).

ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் அநேக ரகசியங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவைகளும், இதற்கு முன் பிரசுரிக்கப்பட்டவைகளும், 5½-வருஷங்களாக பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரமும் தொழிற்சாலையும் தற்காப்புக்கும் முன்னேறித் தாக்குவதற்கும் எவ்வளவு சௌகரியங்களைச் செய்திருக்கின்றனவென்று வெளிப்படுத்துகின்றன.



ரிச்மாண்ட்பார்க்கின்

எதிரிகள் உண்டாக்கிய அநேக கஷ்டமான பிரச்னைகளைத் தீர்க்க ரிச்மாண்ட்பார்க்கின் முயற்சி செய்யப்பட்டன என்று தெரியவருகிறது. ஓரத்திலுள்ள ஸர்ரே குருமடாலயத்தில் முயற்சி செய்யப்பட்டன என்று தெரியவருகிறது. இங்கு விமான எதிர்ப்பு பீரங்கிப் படையின் கமாண்டிங் ஆபீஸரான ஜெனரல் பைல் சேனை நடவடிக்கையின் ஆராய்ச்சி கோஷ்டியைச் சேர்ந்த 120 விஞ்ஞான சாஸ்திரிகளைத் திரட்டினார். சர்வகலாசாலை பட்டதாரிகளும் ஆக்ஸ்போர்ட் பிரமுகர்களும் மறைமுகமாக்கப்பட்டிருந்த சாலைகளில் இரவு பகலாக வேலை செய்து வந்தார்கள்.

ரிச்மாண்ட் பார்க்கைச்சேர்ந்த 2,000 ஏகராக்களிலும், அங்குள்ள மைல்கள் 10 நீளமுள்ள கவர்களுக்குப் பின்னும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஏராளமாக வைக்கப்பட்டிருந்தன வென்று பிரதேச வாசிகள் அறிவார்கள். ஆனால் அங்கு ஒருவரும் சென்றதில்லை. அவர் களுக்கு பின்கண்ட விஷயங்கள்தான் புலப்படவில்லை. விஞ்ஞான சாஸ்திரிகள் பின்கண்ட விஷயங்களில் கவனம் செலுத்தி வந்தார்கள். ரேடியோ லொகேஷன்; தரைச் சுரங்க வெடிகளை அகற்றுவது, விமானத்தில் மனிதர்களையும் முஸ்தீப்புகளையும் ஏற்றுவது (சென்ற வருஷத்தில் ஜெர்மனியில் இது விமான மூலம் இறக்கப்பட்ட 6-வது டிவிஷன் மூலம் வெளியாகிற்று). பறக்கும் வெடி குண்டை ஒழிக்க விமான எதிர்ப்பு பீரங்கியைத் தயாரிப் பது. V-2 வெடி குண்டுக்குப் பரிகாரத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யப்பட்டு வந்த பொழுது ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டது.

பறக்கும் வெடி குண்டை

புதிய தாக்குதல் முறைக்குப் புதிய ஆராய்ச்சிகள் வேண்டும். ஆயிரக்கணக்கான அடிகள் உயரப்பறக்கும் சமாளிப்பது முதலில் சிரமமாக இருந்தது. ஆயிரக்கணக்கான அடிகள் உயரப்பறக்கும் வெடி விமானத்தைத் தாக்குவதற்கும் கீழாகப்பறக்கும் V-1 வெடி குண்டை அழிப்பதற்கும் வித்தியாசமுண்டு. தெற்கு ஆபிரிக்காவிலுள்ள விட்வாடர்ஸ்ராண்ட் சர்வகலாசாலையிலுள்ள ஜியோ—பிஸிக்ஸ் மாஜி ஆசிரியரான பிரிகேடியர் பேஸில் F. J. ஷோன்லாந்தும் அவருடன் ஒத்துழைக்கும் விஞ்ஞான சாஸ்திரிகளும் இந்த பிரச்னையைத் தீர்த்துவிட்டார்கள்.

நீர்மூழ்கி சம்பந்தமான ஆராய்ச்சி

ரிச்மாண்ட் பார்க்கின் மத்தியில் ஜலாசயங்களில் நீர்மூழ்கி சம்பந்தமான ஆராய்ச்சி செய்யப்பட்டு வந்தது.

பிரிடிஷ், அமெரிக்க, ஜெர்மன் விஞ்ஞான

ராடார் கருவி சம்பந்தமான ஆராய்ச்சியில் பிரிடிஷ், அமெரிக்க, ஜெர்மன் விஞ்ஞான சாஸ்திரிகளுக்குள் போட்டி ஏற்பட்டது. பிரிட்டனுக்கு நெருக்கடி ஏற்பட்டபொழுது ஜெர்மன் விமான நடவடிக்கையை தவிர்க்க அது ரேடியோ லொகேஷன் கருவியைக் கண்டுபிடித்தது. தாக்கிவிட்டுத் திரும்பிவரும் விமானங்களுக்கு ஆபத்து உண்டாகும்படி விஞ்ஞான சாஸ்திரி கள் செய்து விட்டார்கள். ஜெர்மன் விமானிகள் நம்பியிருந்த ரேடியோவை அவர்கள் அழித்துவிட்டார்கள். அப்பொழுது விமானங்கள் மலைகள் பேரில் மோதிக்கொண்டன. ஒரு சமயத்தில் தாக்குதலுக்குப் பின் ஒரு விமானம்கூடத் திரும்பவில்லை.

ஜெர்மனிக்குச் சென்று திரும்பி

இந்த அபாயத்தை ஜெர்மனி கண்டு பிடித்துவிட்டதால் ஜெர்மனிக்குச் சென்று திரும்பி வரும் விமானங்களுக்கு அபாயம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள புதிய முறைகளைக் கண்டு பிடிக்கவேண்டியதாயிற்று. ஜெர்மனி அதற்கும் பரிகாரங்களைத் தேடினாலும் பிரிடிஷ் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி சிலாக்கியமாகவே இருந்துவந்தது.

அநேக ரகசியக் கருவிகள் வெளியிடப்

ஜப்பானிய யுத்தம் முடிந்த பின்னும் பிரிட்டனின் அநேக ரகசியக் கருவிகள் வெளியிடப் படமாட்டா. மற்றவைகளைப் போல இங்கும் பிரிடிஷ் அமெரிக்க ஒத்துழைப்பு இருந்து வருகிறது. ஜெர்மனி எவ்வளவு தூரம் விஞ்ஞான சாஸ்திரத்தில் அபிவிருத்தியடைந்திருக் கிறது என்று கண்டுபிடிக்க பிரிடிஷ் அமெரிக்க நிபுணர்கள் ஐரோப்பாவுக்குச் சென்றிருக்கிறார் கள்.

புலடோ (பிரிட்டனுக்கும் பிரான்

இந்த சில யுத்த கால அற்புதங்களை வெளியிடுவோம். புலடோ (பிரிட்டனுக்கும் பிரான் ஸுக்கும் பூமியின் கீழ் செல்லும் எண்ணெய் குழாய்), பிடோ (விமான தளங்களில் காணப் படும் மூடு பனியை அகற்றும் ஏற்பாடு), மல்பெரி துறைமுகம் (D தினத்தன்று பிரான்ஸில் நேசதேசப் படைகளை இறக்க உபயோகிக்கப்பட்ட பெரிய அமைப்புகள்). இவைகளிலிருந்து நேசதேச வெற்றியில் பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் எவ்வளவு பங்கெடுத்துக் கொண்டார்கள் என்பது வெளியாகும்.

சாஸ்திரத்தின் நூதன ஆராய்ச்சிகள் யுத்த கால நாசத்துக்கு உதவியிருக்கின்றன.
ஆகிலும் அவற்றில் அநேகம் சமாதான காலத்துக்கும் உபயோகப்படும். உதாரணமாக
பீடோஸவையும் ஒரு விமானம்கூட நாசமாகாமல் கார்க்கும் ஜால அமைப்பையும் சொல்லலாம்.
விமானம் அடர்த்தியான மூடு பனியில் அட்லாண்டிக்கில் செல்லும்பொழுது இந்தக் கருவி
எங்கு செல்லுகிறோமென்று விமானிக்கு அறிவித்து விடும். இந்தக் கருவி பார்ன்பரோவி
லுள்ள பிரிடிஷ் விமானப் படை ஸ்தாபனத்தில் விஞ்ஞான சாஸ்திரிகளால் கண்டு பிடிக்கப்
பட்டது. யுத்த சமயத்தில் அது அநேகம் உயிர்களைக் காப்பாற்றிவிட்டது. மற்றொன்று
ஜாலக்கண். இது ஆஸ்திரேலியாவில் குதிரைப் பந்தய முடிவுகளைப் பதிவு செய்ய
உபயோகிக்கப்படலாம்.

இப்பொழுது லண்டனின் மேற்குப் புறத்தில் கடைத்தெருவில் வெடி குண்டு வீசக்குட்
பட்ட ஸ்தலத்தில் பிரிடிஷ் விமானப் படை கண்காக்ஷி நடைபெறுகிறது. அந்த ஹாண்ட்லி
பேஜ் ஹாலிபாக்ஸ் III வெடி விமானமும் இருக்கிறது. அதற்கு 13-ம் தேதி வெள்ளிக்
கிழமை என்று பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த விமானத்திலிருந்துதான் 22,000
ராத்தல் வெடி குண்டுகள் வீசப்பட்டன. அவைகளுக்கு 10 டன் டெஸ்லிகள் என்று
பெயர், அப்பெயர், ஆங்கில சங்கீத பாடகர் அவருடைய பருமனைக்கொண்டு ஜனங்களை
ஆனந்திக்கச் செய்யும் முறையைப் பின்பற்றியது. இந்த வெடி குண்டுகளைச் செய்ய
பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் 1940-ம் வருஷத்திலேயே திட்டம் போட்டார்கள்.
லங்காஸ்டரும் ஹாலிபாக்ஸும் வருமுன் எந்த விமானமும் அதைத் தூக்கிச்செல்ல முடிய
வில்லை. சென்ற மார்ச்சு மாதத்தில் அவைகள் முதல் முதலாக பியால்லி பெல்டிலுள்ள
இருப்புப்பாதை பாலத்தின் பேரில் போடப்பட்டன. அதிலிருந்து அபாரமான விளைவுகள்
ஏற்பட்டன.

---

## பீல்ட் மார்ஷல் ஸர் ஹாரோல்ட் அலெக்ஸாண்டர்

### பிராங்க் L. கிளக்ஹோஹன்

(நியூ யார்க் டைம்ஸ் சஞ்சிகை).

51 வயதுள்ள பீல்ட் மார்ஷல் அலெக்ஸாண்டர் நல்ல மல்லன் போன்ற ஆகிருதியுள்ள
வர். கிரேக்கர்களைப்போல் முகவின்யாசமுள்ளவர். அவருக்கும் மாஜி ஜான் பாரி மோருக்
கும் சாம்யம் உண்டு.

அவர் நறுக்கு மீசையுள்ளவர். அதுவும் அவருக்குப் பொருத்தமாகயிருக்கும். ராணுவ
உடுப்பும், உயர்ந்த ஜோடுகளும், சிவப்பு அடையாளங்கள் உள்ள சட்டையும், சிவப்பு வளைய
முள்ள குல்லாயும் அணிந்துகொண்டும் இந்த அயர்லாந்து வாசி ஒரு சரிகையைப்போல் தோன்று
வார். அவருடைய நீலக்கண்கள் அவருடைய மனோதிடத்தை வெளிப்படுத்துகின்றன.

அவர் புன்முறுவல் உள்ளவர். அவருடைய கண்களில் கோபம் மூண்டுவிட்டால் அவ
ருடைய சிப்பந்திகள் அவருடைய அழைப்பை நன்கு அறிந்துவிடுவார்கள். அவர் இனிமையான
குரலுள்ளவர். விஷயங்களை அழுத்திச் சொல்லுவார். அப்பொழுது அந்த த்வனி குறை
ந்துவிடும். அவர் நல்ல மல்லன். அவர் எப்பொழுதும் குதூகலமாகச் செல்லுவார்.
அலெக்ஸாண்டர் ஒருபொழுதும் கவலைப்படுவதில்லை.

அலெக்ஸாண்டருக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருக்கிறது. அவர் ஆயுள்பூராவும் அவருக்கு
அநேக அநுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அயர்லாந்தின் டைரோன் கௌண்டியின் ஸ்வான்
தாரான காலிடான் கரன்காவுடு பிரபுவின் மூன்றாவது குமாரரான அவர் சிறுவயதிலேயே
தகப்பனை இழந்தார். அவருடைய மூத்த சகோதரர்கள் அவரை போஷித்துவந்தார்கள்.

அவர் ஹாரோவிலும், ஸாண்ட்ஹர்ஸ்டிலும் பயின்று, முதல் உலக யுத்தத்தில் அயர்
லாந்துப்படைகளுக்குத் தலைமை வகித்தார். அவருக்குக் காயங்கள் ஏற்பட்டது. 26 வயதில்
அவர் ஒரு பட்டாளத்தின் லெப்டினெண்ட் கர்னல் வேலையிலமர்ந்து D. S. O., M. C. பட்டம்
பெற்றார். அவர் யுத்தத்தில் ஏகமாக முறைகளைக் கையாண்டபோதிலும் சொந்த நேர
தாவில் விசேஷமான தைரியத்தையும், நற்குணங்களையும் காட்டிவந்தார்.



1919-ம் வருஷத்தில் ருஷ்யப்போரில் அலெக்ஸாண்டர் லெட்விஷ் தரைப்படையை
நடத்திச்சென்றார். அவரிடம் சில ஜெர்மானியர்களும் பட்டாளத்தில் இருந்தார்கள். அவர்
களின் சக்திகளையும், குறைவுபாடுகளையும், மனப்பான்மையையும் அறிந்துகொண்டார். பிறகு
சேனை போட்டிப் பந்தயங்களில் அவர் ஒரு மைல் ஓட்டத்தில் வெற்றிபெற்று மிகவும் குறை
வான நேரத்தில் ஓடின ரிகார்டும் பதிவு செய்தார்.

10 வயதில் அவருக்குப் பெயர்கூட எழுதத்தெரியாது, ஆனால் அவருக்குப் பிரெஞ்சு,
ருஷ்ய, ஜெர்மன், உருதுபாஷைகள் பேசத்தெரியும். அநேக விஷயங்களில் கவனம் செலு
த்திவந்த அவர் சமாதான காலத்தில் படம் வரைந்து வர்ண பூசுவதில் ஈடுபட்டார். விஞ்
ஞான சாஸ்திரத்தைக் கற்றார். புராதனச் சின்னங்களிலும் கவனம் செலுத்தினார்.

மறுபடியும் யுத்தம் மூண்டது. 1-வது டிவிஷனுக்குத் தலைமைவகித்து அவர் பிரான்
ஸுக்குச்சென்றார். பிறகு அவர் முதலாவது படையின் கமாண்டை ஒப்புக்கொண்டார்.
அவர் ஜெர்மனியின் மின்னல் தாக்குதல் முறைகளைக்கண்டார். கார்ட் பிரபு இங்கிலாந்துக்கு
திரும்பிவந்தபொழுது அலெக்ஸாண்டர் எல்லா பிரிடிஷ் படைகளுக்கும் கமாண்டராக நிய
மிக்கப்பட்டார்.

டன்கர்க்கிலிருந்து பின்வாங்கியபொழுது பிரிடிஷ் சேனையின் புகழ் அழிந்தது. சிலருக்கு
புகழ் ஏற்பட்டது. புகழ் அதிகரித்தவர்களில் அலெக்ஸாண்டரும் ஒருவர். பிரிடிஷ் தெற்கு
கமாண்டின் சேனைத் தளபதியாக அவர் நியமிக்கப்பட்டார். முற்போக்கான எண்ணங்கள்
உள்ளவராகையால் பிரிடிஷ் யுவர்களை தேர்ச்சி செய்யவும் நவீன யுத்த தந்திரங்களிலும்
பிரச்னைகளிலும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் ராணுவப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த
வேண்டும் என்பதையும் அவர் ஆதரித்தார்.

1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 5-ம் தேதியன்று நெருக்கடியான சமயத்தில் அலெக்
ஸாண்டர் பர்மாவில் சேனாதிபத்யம் வகித்தார். அவருக்கு மறுபடியும் தோல்வி ஏற்பட்டது.
இரண்டு பலஹீனமான டிவிஷன்களுடன் அவர் நான்குமாத காலமாக மூன்று மடங்கு சங்கி
யையில் அதிகமான ஜப்பானியப் படைகளுடன் போரை நடத்தினார். அவர் படைகளில்
ஐந்தில் நான்கு பாகத்தை இந்தியாவுக்கு பத்திரமாக பின்வாங்கி வந்தார்.

இப்பொழுது அலெக்ஸாண்டருக்கு அச்சுநாட்டாரின் இரண்டு சேனைகளுடன் தொடர்பு
ஏற்பட்டுவிட்டது. அவருக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இது ஒரு நெருக்கடி
யான சமயத்தில் ஏற்பட்டது. ரோமல் அலெக்ஸாண்ட்ரியாவுக்கு 60 மைல்களுக்குள் வந்து
விட்டான். அங்கிருந்து நைல் நதியும், மத்தியக் கிழக்கும் வெகு சமீபத்திலிருந்தன. சர்ச்சில்
மாண்ட் காமரியையும், அலெக்ஸாண்டரையும் அங்கு அனுப்பினார். மற்ற விருத்தாந்தங்கள்
உங்களுக்குத் தெரிந்தவையே.

காஸ்லரின் இடைவெளிக்கருகில் நீங்கள் சிரமமான சமயத்தில் கமாண்டை ஒப்புக்
கொள்ளுகிறீர்கள் என்று ஒரு நிருபர் அலெக்ஸாண்டரிடம் சொன்னார்.

அவர் சிரித்துக்கொண்டே "ஒருவரின் திறமையை வெளிப்படுத்த இதுதான் நல்ல
தருணம்" என்று சொன்னார்.

இந்த வார்த்தைகள் பிரிடிஷ் ஜெனராலுக்கும் அயர்லாந்து வாசிக்கும் தகுதியானது
தான். அவர் ஒரு சமயம் தருக்கிய ஆபீஸர்களுக்கு நாட்டியம் பழகிக்கொடுத்தார்.

---

## வெற்றிக் கும்மி.

*By S. Thiruvenkataswami.*

1. யுத்தம் யுத்தமென்று எத்திசை தன்னிலும்
   நித்தம் நித்தம் மக்கள் பேசி வந்தார்
   புத்தப்புது வகை ஆயுதங்கள் கொண்டு
   யுத்தவீரர் பலர் போர் புரிந்தார்.
2. நாட்டின் ஆசை கொண்டு போர்தொடுத்தான் ஹிட்லர்
   நாசமடைந்தான் முடிவினிலே
   நாஸிகள் தோல்வியடைந்து நம் சேனை முன்
   நிபந்தனை யின்றிச் சரணடைந்தார்.

3. அச்சு நாட்டில் ஒன்று அற்று வீழ்ந்த பின்பும்
அச்ச மில்லாமலே ஜப்பானியர்
நிச்சயம் வெற்றி கிடைக்குமென் றெண்ணி
நேசக்கட்சியினரை எதிர்த்தார்.
4. ஜப்பானியர்களும் ஜெர்மன் மக்கள்போல
தப்ப முடியாமலே தவித்தார்
செப்பரிய வீரம் பெற்ற நம் வீரர்முன்
சட்டெனவே சரணமடைந்தார்.
5. வெற்று வெற்றியென்று வையம் முழுவதும்
வெற்றி முழக்கமின்று புரிந்தோம்
சுற்றி நின்ற பகை பட்டு ஒழிந்ததே
பற்றிய துன்பமும் நீங்கியதே.
6. ஈசனைப்பாடி துதித்திடுவோம் எங்கும்
பூஜைசெய்து களித்திடுவோம்
தேசம் முழுதிலும் சாந்தம் நிலவிட
தேவனைப் பிரார்த்தனை செய்திடுவோம்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 261. (2-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20- 8-45 | திருமெய்யம் | ... மாலை 7.00 | 23- 8-45 | புலியூர் | ... மாலை 7.00 |
| ,, | மேலூர் | ... ,, 7.30 | ,, | கண்ணங்குடி | ... ,, 7.30 |
| 21- 8-45 | வடவாளம் | ... ,, 7.00 | 24- 8-45 | மோசிலே-புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | சம்மட்டிவிடுதி | ... ,, 7.30 | ,, | மோசிலைக்கோட்டை | ... ,, 7.30 |
| 22- 8-45 | அன்னவாசல் | ... ,, 7.00 | 25- 8-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | மேலக்குரிச்சி | ... ,, 7.30 | 26- 8-45 | ஆலங்குடி | ... ,, 7.00 |
| | | | ,, | சாமிமங்கலம் | ... ,, 7.30 |

### பிரஸங்கம் 262 (3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27- 8-45 | குடுமியாமலை | ... மாலை 7.00 | 30- 8-45 | அரிமளம் | ... மாலை 7.00 |
| ,, | பாம்பூர். | ... ,, 7.30 | ,, | ராயவரம் | ... ,, 7.30 |
| 28- 8-45 | பெருங்களூர் | ... ,, 7.00 | 31- 8-45 | பொ. புதுப்பட்டி | ... ,, 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | ,, | வேந்தம்பட்டி | ... ,, 7.30 |
| 29- 8-45 | மலைக்குடிப்பட்டி | ... ,, 7.00 | 1- 9-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, 6.00 |
| ,, | மின்னுகோட்டை | ... ,, 7.30 | 2- 9-45 | குளக்காடு | ... ,, 7.00 |
| | | | ,, | கோட்டைக்காடு | ... ,, 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 21— 8—45 | போரம்பூர். | | |
| 22— 8—45 | மோசிலே-புதுப்பட்டி. | 28— 8—45 | ராமச்சந்திரபுரம். |
| 23— 8—45 | ஆலங்குடி. | 29— 8—45 | கரம்பக்குடி. |
| 24— 8—45 | புதுக்கோட்டை. | 30— 8—45 | கீழாநிலை. |
| 25— 8—45 | பொன்னமராவதி. | 31— 8—45 | புதுக்கோட்டை. |
| 26— 8—45 | மருதன்கோன்விடுதி. | 1— 9—45 | வெட்டன்விடுதி. |
| | | 2— 9—45 | ஏம்பல். |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸுபரின்டென்டென்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,500—23-8-45.


# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் வரு ஆகஸ்டு மீ 27உ திங்கட்கிழமை [ந. 262


பிரஸங்கம் CCLXII.

## மதராஸ் மாகாணத்தின் யுத்த முயற்சியைப்பற்றி மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர்.

### இந்திய சேனையின் மூன்றில் ஒருபாகம் இம்மாகாணத்தைச் சேர்ந்தது.

உலக யுத்த முடிவில் நான் மதராஸ் மாகாணத்தில் இருக்க நான் பெருமைகொள்ளுகிறேன். யுத்தம் வெற்றிகரமாக முடிந்து விட்டது.

ஒத்துழைத்தோம். 5½-வருஷங்களாக மற்ற நாடுகளைப் போலும் நாமும் கஷ்டப்பட்டோம். ஆகிலும் நாம் ஒத்துழைத்து, நமது சக்திக்குத் தக்கவாறு ஒத்தாசை செய்து, சிரமங்களை அனுபவித்து வெற்றியை சம்பாதித்து விட்டோம். மூன்று மாதங்களுக்குமுன் ராணுவ அணிவகுப்பு நடைபெற்ற பொழுதும் மீட்டிங் நடைபெற்றபொழுதும் யுத்தம் இவ்வளவு சீக்கிரத்தில் முடிவடையும் என்று நாம் எண்ணவில்லை. ஐரோப்பிய யுத்தம் முடிந்ததென்று குதூகலம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் குண்டுவீச்சு ஓய்ந்ததென்றும் ஜனங்கள் பத்திரமாக நடமாடலா மென்றும் பிரிடிஷ் மக்களான நாங்கள் சந்தோஷ மடைந்தோம். இங்குள்ளவர்கள், பிரிடிஷ், இந்திய, அமெரிக்க, சீனப்படைகள் நீண்ட காலமாக கடும்போரை நடத்தவேண்டியிருக்கும் என்று அறிந்தோம். கடவுளின் அருளால் யுத்தம் வெகுசீக்கிரம் முடிந்து விட்டது.

யுத்தம் இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் முடிந்து விட்டதென்று நீங்கள் ஆச்சரியப்படலாம். 1942-ம் வருஷ சம்பவங்களை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். ஜப்பான் ஆசியா பூராவையும் பிடித்துவிட்டது. இந்தியாவின் எல்லைச்சரகத்துக்கு வெகு சமீபத்தில் வந்து விட்டது. மதராஸ் பேரிலும் கல்கத்தாபேரிலும் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. சென்ற வருஷத்தில் ஜப்பான் அஸ்ஸாமில் படையெடுத்தது. யுத்தம் ஏன் இவ்வளவு சீக்கிரம் முடிவடைந்ததென்று நீங்கள் கேட்கலாம். சிங்கப்பூரும், ரெங்கூனும் விழுந்தபொழுதே ஜப்பான் அகலக்கால் வைத்து விட்டதென்று நான் சொன்னேன். ஜீர்ணம்செய்ய முடியாத வகையில் அவர்கள் உணவருந்தி விட்டார்கள். கிழக்கு அர்த்த கோளத்தை ஜப்பான் ஆக்கிரமித்து விட்டாலும் ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள சேனைகளுக்கு உணவுப்பொருளை அனுப்பவும் போக்குவரத்து மார்க்கத்தை பத்திரப்படுத்த மனிதபலமும், விமானபலமும், கடல்பலமும் பெற்றிருக்கவில்லை. 1942-ம் வருஷ வேனிர் காலத்திற்குப்பின் ஜப்பானிடமிருந்து ஒரு அபாயத்தையும் நான் எதிர்பார்க்கவில்லை.

### 1942-ல் மதராஸுக்கு ஆபத்து.

1942-ம் வருஷம் வேனிர் காலத்தில் நமக்கு உண்மையான பேராபத்து ஏற்பட்டிருந்தது. அபாயத்தை குறைத்துக்கூறி நாம் எடுத்துக்கொண்ட எச்சரிக்கை நடவடிக்கைகள் அனாவசியமானவை, மிகையானவை என்று சொன்னார்கள். நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அவசியமானவை என்றும், அவ்விதம் செய்யாவிடில் நாம் தவறு செய்திருப்போமென்றும்

மறுபடியும் சொல்லுகிறேன், ஜப்பானின் பேராசையைப்பற்றி இப்பொழுது இந்திய மக்கள் நன்கு அறிவார்கள். ஜப்பானியர்கள் ஆசியாகண்ட நாஸிகள். ஜெர்மானியர்களைவிட அவர்கள் அக்கிரம வழியைப் பின்பற்றினார்கள். ஆசியாவைக்கைப்பற்றி உலகத்தை ஜெர்மானியர்களுடன் பங்குபோட்டுக் கொள்ளுவதென்று ஜப்பான் விரும்பியது. அவர்கள் தோற்று விட்டார்கள். இதற்கு இந்திய மக்களின் வீரமும், தைரியமும், நல்லுணர்ச்சியும்தான் காரணங்கள்.

### மதராஸ் மாகாணத்திலிருந்து 5-லக்ஷம் துருப்புகள்.

நமக்கு உணவுப்பொருள் பிரச்னை ஏற்பட்டது. மத்திய நிர்வாகத்திலிருந்து வெகு தூரத்தில் நாம் இருந்து வருகிறோம். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கலைக்கப்பட்ட மதராஸ் படைகளை நாம் தயாரிக்கவேண்டியதாயிற்று.

யுத்தத்தில் இந்தியாவில் ராணுவத்துக்கு சேர்க்கப்பட்ட ஆட்களில் 5-ல் 1 பாகத்தினை அதாவது 5-லக்ஷம் பேர்களை சென்னை மாகாணம் சப்ளை செய்திருக்கிறதென்று பெருமையுடன் கூறுகிறேன்.

1939-ம் வருஷத்தில் நம்மிடம் கையளவு ஸாப்பர்களும் மைனர்களும் தானிருந்தார்கள். இம்மாகாண வாசிகள் போர்செய்வதில் சக்தியற்றவர்கள் என்ற அவச்சொல் இருந்துவந்தது. மதராஸ் ஸோல்ஜர் மற்ற எவரையும் போல சிறந்த போர் வீரனென்றும் ருஜுவு செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும் அந்த அவச்சொல் கிளம்பாது. எதிர்காலத்தில் எந்த நிர்வாகம் அமைக்கப்பட்டாலும் அது மதராஸ் ஸோல்ஜர் சிறந்த, உறுதியுள்ள, ராஜவிஸ்வாஸமுள்ளவன் என்று எண்ணக்கூடும்.

யுத்தம் முடிந்து விட்டாலும் படைகள் உடன் காலத்தில் கலைக்கப்படுமென்று எண்ணக் கூடாது. முகாந்தரத்துக்குத் தக்கவாறு படைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைக்கப்படும்.

அப்படியிருந்தாலும் இந்தியசேனை சமாதான வாழ்க்கைக்குத் திரும்ப அதிக காலம் பிடிக்கும். எல்லாம் முடிந்து விட்டதென்று ஜனங்கள் நினைக்கக்கூடாது. கவர்னரின் யுத்த நிதியையும், துருப்புகளுக்கான வசதியையும் மறந்து விடாதீர்கள். அநேக மதராஸ் வாசிகள் கடல்தாண்டி சேவை செய்து வருகிறார்களென்றும், சிங்கப்பூரிலும், மலேயாவிலும் ஜப்பானிலும், சமீபக் கிழக்கிலும் ஐரோப்பாவிலும் இருக்கிறார்கள் என்றும் போர் நடைபெற்றபொழுது அளிக்கப்பட்ட வசதிகளை இப்பொழுதும் பெறவேண்டுமென்று அவர்கள் பிரியப்படுகிறார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.

யுத்த அவசியத்துக்கு இல்லாவிட்டாலும் சமாதானத்துக்காக ஒவ்வொருவரும் தாராளமாகக் கொடுக்கவேண்டும். யுத்தம் முடிந்து விட்டதினால் வசதிக் குறைவு ஏற்படக்கூடாது. விமானங்களும், ஒளிகளும் தேவையில்லா விட்டாலும் துருப்புகளின் க்ஷேமம் கவனிக்கப் படவேண்டும். அவர்கள் நமக்கு வெற்றியை சம்பாதித்துக்கொடுத்திருக்கிறார்கள். சென்ற வருஷங்களில் காணப்பட்ட அபாயங்களிலிருந்து நம்மை அவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள். அவர்கள் சாதாரண பொதுஜன வாழ்க்கைக்குத் திரும்பும் வரையில் அவர்கள் க்ஷேமமாக வாழவேண்டும்.

### அணு குண்டு.

யுத்தம் இவ்வளவு துரிதமாக முடிந்ததற்குக் காரணம் யாது. சில நாட்களுக்கு முன் யுத்தம் அடுத்த வஸந்தகாலம் வரையிலும் இலையுதிர்காலம் வரையிலும் நடைபெறுமென்று எதிர் பார்த்தார்கள். யுத்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் உள. முதலாவதாவது அநேகர் எதிர் பார்த்தபடி ருஷ்யா போர் தொடுத்தது. இரண்டாவது அணுகுண்டு வீச்சு. தகவலறிந்தவர்கள் இதைப்பற்றி அறிவார்கள். அது உலகத்தாருக்கு ஆச்சரியமாக இருந்தது. அது அதிக சக்திவாய்ந்தது, நாசம் விளைவிக்கக்கூடியதென்று தெரியவந்தது. தவறாக உபயோகித்தால் அது நாகரீகத்தையும் உலகத்தையும் அழித்துவிடும்.

இதை உபயோகித்திருக்கக்கூடாதென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இதில் ஒரு தவறுமில்லை. யுத்தம் கொடுமையானது. அதை உலகம் பூராவும் பகிஷ்காரம் செய்யவேண்டும். இதைப்பற்றி ஒரு பிரிட்டிஷ் எழுத்தாளர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது பின் வருமாறு:—ஒரே இரவில் ஒரு குண்டை எறிந்து 20,000 பேர்களை அழிப்பதற்கும் 1,000 விமானம் வீதம் 20 நாட்கள் தாக்கி அதே ஜனங்களை அழிப்பதற்கும் யாதொரு வித்யாசமும் இல்லை. அணுகுண்டு பிரயோகத்தினால் தவறு ஒன்றுமில்லை. யுத்தத்தினால்தான் தவறு இருக்கிறது.



எந்த ராஜீயக் கக்ஷியைச் சேர்ந்தவராகயிருந்தாலும் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மற்றொரு யுத்தம் மூண்டால் அது குண்டினால் நாகரீகமே அழிந்து விடும். நாம் மிகவும் அவஸ்தைப்பட்டிருக்கிறோம். இவ்விதமான தீங்கு மறுபடியும் நேரிடாமல் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யவேண்டும்.

யுத்தம் நிறுத்தப்பட்டாலும் அங்குமிங்கும் சில சச்சரவுகள் நடைபெறும். உலகத்தில் சிரமமான பொருளாதார, ராஜீய, ஜனசமூக பிரச்னைகள் தோன்றும். பெரும் நஷ்டம் ஏற்படாமல் நாம் தப்பித்துக்கொண்டோம். நேசதேசங்களின் ஒற்றுமையினாலும், நல்லுணர்ச்சியாலும், தீரத்தினாலும் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டோம். நாஸி தத்வத்தையும் ஜப்பானிய ராணுவத்தையும் அழிக்க நேசதேசத்தார்கள் உள்நாட்டு வெளிநாட்டு சிரமங்களையும் பொருட்படுத்தாமல் ஆறு வருஷங்களாக ஒன்றுபட்டிருந்தார்கள்.

நாம் யுத்தத்தில் வெற்றிபெற்று விட்டோம். சமாதானத்தை நாம் இழந்து விடக் கூடாது. சமாதானத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லப்படுகிறது. சென்ற யுத்தத்தில் ஜெர்மனியை முறியடித்தவர்கள் உலகத்தில் இனிமேல் சமாதானமும் பத்திரமும் நிலைபெறுமென்று நினைத்தார்கள். அந்த எண்ணம் நிறைவேறவில்லை. நிரந்தரமாக சமாதானத்தை அமைக்கும் சந்தர்ப்பத்தை, நாம் நம்முடைய முட்டாள் தனத்தினாலும், தன்னல ஆசையினாலும், நல்லறிவு இல்லாததினாலும் இழந்து விட்டோம். இப்பொழுது நாம் உறுதியுடன் இருந்து எதிரிக்கு தோல்வியின் படிப்பினையை போதிக்கவேண்டும். நாம் இதை கடுமையான முறையில் போதிக்கவேண்டும்.

உங்களில் அநேகர் இந்த யுத்த சிரமத்தையும் மற்றும் சிலர் இரண்டு யுத்த சிரமங்களையும் அனுபவித்திருக்கிறீர்கள். யுத்தம் என்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்கள். அது எல்லோரையும் பாதிக்கிறது. ஒவ்வொருவரும் யாதாவது ஒரு வழியில் கஷ்டப்படவேண்டும். ஆகையால் கவசம்பூண்ட படைகளையும், ஆடவர்களையும், ஸ்திரீகளையும், சிறுவர்களையும், சிறுமிகளையும் நல்லெண்ணத்தினாலும், ஒற்றுமையினாலும் கடமையினாலும்தான் இம்மாதிரியான அவகேடுகளைத் தவிர்க்கலாம் என்று ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். யுத்தம் முடிவடைந்ததற்கும் கூடிய சீக்கிரம் நமது சொந்த அலுவல்களைக் கவனிக்க தாயகம் திரும்புவோம் என்பதற்கும் நாம் நன்றியறிவு உள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் மற்றவர்களுடன் சகோதரபாவத்துடனிருக்கவேண்டும். அவ்விதம் அந்நியோந்நிய பாவத்துடன் இருந்தால்தான் உலகத்தில் அநேக சந்ததிகள் வரையில் சமாதானம் நிலைபெற்றிருக்கும்.

## வார யுத்தச் செய்திகள்.

இந்த வாரத்தில் போர் ருஷ்யாவிலும் சைனாவிலும் நடைபெற்றன.

மஞ்சூரியாவையும், தெற்கு சாகாலினையும் (காராபூடோ) குரைல்ஸிலுள்ள பாராமுஷிரோவையும் ருஷ்யா ஆக்கிரமித்தது. குரைல்ஸ் தீவின் வடக்குக் கோடி தீவான ஷம்ஷூவில் ருஷ்யப் படைகள் இறங்கிவிட்டன.

ருஷ்யப் படைகள் கீழ்க்கண்ட இடங்களைப் பிடித்தன :— விபூலி, மிங்கூடா, டிமின், லின்சாங்க், பூடான்சன், குபண், கேயிலு, டங்க்னியாயோ, பூகடு, சாலுண்டன், டானிபூயான், சூலு, கோடாங்க், கிடாங், ஹார்பின், முக்டன், ஸாஙி, டான்ஹுவா, யேமு, கிரின், மூலான், டன்கி, டுன்கி, சானியூ, சிகிகா, நாயோரோ, உஸிரோயோ, ஷஹூரி, டெயிரன், ஆர்தர் துறைமுகம்.

சீனப்படைகள் மத்திய ஷான்ஸியின் தலைநகரமான டையானைத் திரும்பிப் பிடித்தார்கள். காண்டனுக்குச் சமீபத்திலுள்ள ஹூசௌ துறைமுகத்திற்குள் மறுபடியும் நுழைந்து விட்டார்கள்.

# யுத்தக் குறிப்புகள்.

**வந்தனை வழிபாடும் தெய்வ வணக்கமும்.** 19-ம் தேதி ஞாயிறன்று உலகமெங்கும் பிரார்த்தனை தினமாகக் கொண்டாடப்பட்டது. இந்த கோரமான யுத்தத்தின் முடிவை கடவுள் அளித்ததற்காக வந்தனம் செலுத்தப்பட்டது. அன்று யுத்தத்துக்குப் பிந்திய சமாதான பிரச்னைகளைத் தீர்க்கவும் அதற்காக ஒத்துழைக்கவும் எல்லோரும் சங்கல்பம் கட்டிக்கொண்டார்கள்.

வி வி வி வி வி

**சரணகதி.** ஒரு வாரத்திற்குப்பின் 16 ஜப்பானிய தூதர்கள் 19-ம் தேதியன்று மனிலாவுக்கு வந்து சரணகதி முறையை பிரிடிஷ், அமெரிக்க, ஆஸ்திரேலிய, ருஷ்ய பிரதிநிதிகளுடன் விவாதித்தார்கள்.

காலநிலை சரியாக இருந்தால் மாக் ஆர்தர் டோக்கியோவுக்கு அருகிலுள்ள ஆட்சுகி விமான தளத்தில் 27-ம் தேதியன்று இறங்குவார். அன்று கடற்படை, மரீன் படைகள் யோகோஸுகா கடற்படை தளத்தருகே இறங்கும். ஆக்கிரமிப்புப் படைகளின் முதல் பகுதி போர் முஸ்தீப்புகளுடன் ஞாயிறன்று இறங்கும். அது முன்பும் முன் எச்சரிக்கையாகக் கொண்டுவரப்படும். சரணகதி ஆகஸ்டு 31-ம் தேதியன்று டோக்கியோ பிராந்தியத்திலுள்ள அமெரிக்க மிஸ்ஸௌரி கப்பலில் நடைபெறும். டோக்கியோ விரிகுடாவில் பிரிடிஷ் கப்பல்களான ட்யூக் ஆப் யார்க்கும் கிங் ஜார்ஜும் பிரசன்னமாக இருக்கும்.

ருஷ்ய பிராந்தியத்தில் குவாண்டங் சேனை ஆகஸ்டு 21-ம் தேதியன்று ஹார்பினில் சரணடைந்தது. ருஷ்யர்கள் மஞ்சூரியா, தெற்கு சாகாலின் (காராபூடோ), குரைல் தீவிலுள்ள பாராமூஷிரோவைப் பிடித்தார்கள்.

வி வி வி வி வி

**சைனா.** காண்டனிலுள்ள ஜப்பானிய சேனை ஆகஸ்டு 19-ம் தேதி அன்று சரண் புகுந்தது. மற்ற ஜப்பானியப் படைகள் சைனாவின் 'பழைய' தலைநகரமான நான்கிங்கில் சரணடையும். ஹாங்காங்கில் பிரிடிஷ் நிர்வாகம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். ஜப்பானியப் படைகள் பிரிடிஷ் கடற்படையிடம் சரணடையும்.

பிரிடிஷ் கிழக்கிந்திய படையைச் சேர்ந்த யூனிட்டுகள் சிங்கப்பூரை ஆக்கிரமிக்கத் தயாராக இருக்கின்றன.

பர்மாவிலுள்ள ஜப்பானிய கமாண்டர் போரை நிறுத்தும்படி படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். சரணகதி உத்தரவு போகன்வில்லியில் விமான மூலம் போடப்பட்டது. நியூகினியாவில் போர் நின்றது. ஜாவாவிலுள்ள ஜப்பானியப் படைகளுக்கும் போரை நிறுத்தும் உத்தரவு வந்துவிட்டது.

டிமோரை போர்ச்சுகலிடம் கொடுத்துவிடுவதாக ஜப்பான் சொல்லிவிட்டது.

ஷாங்ஹேயிலுள்ள பிரிடிஷ், டச்சு, அமெரிக்கக் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

ஜப்பானில் விளக்கவிப்பு உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

வி வி வி வி வி

**போலந்து.** ருஷ்யாவுக்கும் போலந்துக்கும் போலந்தின் எல்லைச்சாக சம்பந்தமாக ஆகஸ்டு 16-ம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தப்படி ருஷ்யா தாத்காலிகமாக கிழக்கு ஜெர்மனியில் அமுல் நடத்தும். ருஷ்யா லைனை ஆக்கிரமிக்கும். போலந்து கர்சான் கோட்டுக்குக் கிழக்கில் இரண்டு மாகாணங்களைப் பெறும்.

வி வி வி வி வி

**ருத்தகைக் கடன்.** திட்டம் ஆகஸ்டு 21 முதல் நிறுத்தப்படும்.

வி வி வி வி வி

**பிலிப்பைன்ஸ்.** செப்டம்பர் 1-ம் தேதியன்று பிலிப்பைன்ஸில் ராணுவ நிர்வாகம் நின்றுவிடும்.



**இந்தோ-சைனா.** இந்தோ-சைனாவின் தெற்கு வட்டாரம் தென்கிழக்கு ஆசியா கமாண்டின் ராணுவ ஆக்ஷிக்கு உட்பட்டிருக்கும். சீனர்கள் வடக்குப் பகுதியின் சார்ஜை ஒப்புக்கொள்ளுவார்கள்.

வி வி வி வி வி

**ஸியாம்.** 1912-ம் வருஷத்தில் ஸியாம் அமெரிக்கா பேரில் யுத்தப் பிரகடனம் செய்தது. கட்டாயத்தின்பேரில் செய்யப்பட்டதென்று ஸியாம் சொன்னதை அமெரிக்க ஒப்புக்கொண்டது.

வி வி வி வி வி

**சமாதான சாஸனம்.** நேசதேச சமாதான சாஸனத்தை பிரிடிஷ் பார்லிமெண்ட் ஏகமனதாக ஒப்புக்கொண்டது.

வி வி வி வி வி

**இந்திய விஷயங்கள் :—**

(1) போரில் உயிர் துறந்தவர்களின் ஞாபகார்த்தமாக இந்திய சேனை, கடற்படை, விமானப்படையினருக்குப் பயிற்சி அளிக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்பாடு செய்யப்படும்.

(2) கலைக்கப்பட்ட படையினருக்கு சமாதான வாழ்க்கையில் வேலை கொடுக்க பத்து ஸ்தாபனங்கள் வேலை செய்துவருகின்றன. இன்னும் 71 அமைக்கப்படும். ஸ்திரீகள் பகுதியும் ஏற்பாடு செய்யப்படும். முடமாக்கப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் வசதி அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

(3) சில நிபந்தனைகளுக்குட்பட்டு சில ஸ்வான்தார்கள் சொந்த உபயோகத்துக்காக மதராஸ் மாகாணத்தில் உபரியாக உள்ள மாகாணங்களிலிருந்து அரிசியைக்கொண்டுபோகலாம்.

(4) யுத்தகால கட்டுப்பாடு கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டாலும் அவைகள் இன்னும் இரண்டு வருஷங்கள் வரையில் நிலைத்திருக்கும்.

(5) அடுத்த மாத முடிவில் பெட்ரோல் பங்கீடு எடுக்கப்பட்டுவிடும்.

---

## ஹிரோஹிடோவைப்பற்றிய விருத்தாந்தமும் புராணமும்.

*W. N. ப்யூயர் (டெயிலி ஹெரால்ட்).*

அயல்நாட்டாருக்கு ஹிரோஹிடா மன்னர் ஒரு அழகிய சிறிய மனிதன் என்று தோன்றும். தூரதிருஷ்டிக் குறைவும், பருமனான தேகமுமுள்ள அவர் பிலாக்கியமான புத்தியுள்ளவர் அல்ல, முட்டாளைப்போல் காணப்படுகிறார். ஜப்பானியர்களுக்கு அவர் அமைதியுள்ள தெய்வ சக்தி போன்றவர், சூரிய குமாரனான டென்னோ அமாடெராசு என்ற சூரிய தேவதையின் பரம்பரையில் 126-வது புருஷர். ஜப்பானியர்களுக்கு இது கட்டுக்கதையில்லை, இது சரித்திர பூர்வமான உண்மை.

80 வருஷங்களுக்குமுன் வெளி உலகத்திலிருந்து தனித்திருப்பதை ஜப்பான் உதறித் தள்ளியபின், கலகம் செய்து ஷோகன்களின் அதிகாரம் குலைக்கப்பட்டது. அப்பொழுது வாலிபமுள்ள சக்ரவர்த்தி சிங்காசனம் ஏறினார்.

ஒரு சில பிரபுக்கள் மேற்கு நாடுகளின் நாகரிகத்தை ஜப்பானில் பரவச் செய்தார்கள். பிரிடிஷ் அமைப்பை ஒட்டி ஒரு அரசியலும் அமைக்கப்பட்டது. டென்னோ சபை ஆக்ஷியை ஒப்புக்கொண்டார். அவருடைய தெய்வீக சக்தியும் காப்பாற்றப்பட்டது. ஹிரோஹிடோ மூன்றாவது சக்ரவர்த்தி, மெயிஜி சக்ரவர்த்தியின் பேரன், அவர் காலத்தில்தான் ஜப்பான் தொழிற்சாலைகளையும் ராணுவத்தையும் அபிவிருத்தி செய்தது. தாராள இயக்கம் நிலை பெற்றிருந்தால் அவரும் தாராள மனப்பான்மையுள்ள சக்ரவர்த்தியாக இருந்திருப்பார்.

அவர் மற்ற பையன்களுடன் பீர்ஸ் பள்ளிக்கூடத்தில் படித்தார். உலக விவகாரங்களை அறிய அவர் இங்கிலாந்துக்கு ஒரு சமயம் அனுப்பப்பட்டார்.

1926-ம் வருஷத்தில் அவர் சிங்காசனம் ஏறினார். அவருடைய ஆக்ஷிக்கு நாகரீகம் படைத்த சமாதானம் என்று அவர் பெயரிட்டார். ஆனால் ஒரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. சேனைத்தலைவர்களும் கடற்படைத்தலைவர்களும் நிர்வாகத்தை அடக்கியாண்டுவந்தார்கள்.

நாகரீகம் படைத்த சமாதானத்தைப்பற்றி ஹிரோஹிடோ கனவு கண்டிருக்கலாம்.
ஆகிலும் அவரைச் சுற்றியுள்ளவர்களை எதிர்த்தறிக்க அவருக்கு குணங்களும் அறிவும்
கிடையாது. அவர் ஜப்பானின் எஜமான். அவருடைய வார்த்தை வேதவாக்கியம். ஒவ்வொரு
வரும் அவரிடம் தெய்வபக்தி கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் ராணுவ, கடற்படை
அதிகாரிகளின் தாழ்மையான சேவகர்.

அவர் சக்ரவர்த்தி என்ற ஹோதாவில் ஒருவரையும் பார்க்காமல் மறைமுகமாக
இருந்தார். அவருடைய அரண்மனையிலும், ஹயாமாவிலுள்ள கடற்கரை வீடுகளிலும் அவர்
சாதாரண வாழ்க்கையை நடத்திவருகிறார்.

அவர் அன்புமிகுந்த புருஷன், தகப்பன். அவர் வெண்மையான குதிரைமேல் சவாரி
செய்வார். காப், டென்னிஸ் விளையாடுவார். நீந்துவார், கடற்படை பிராணி நூலில் அவர்
ஆராய்ச்சி செய்வார்.

அவர் சாதாரணமான வாழ்க்கையை நடத்திவருவார். அதிக ஆடம்பரம் அவருக்குப்
பிடிக்காது. உலகத்திலேயே அவர் மிகுந்த பணக்காரராக இருந்தபோதிலும் அவர்
அனாவசியச் செலவுசெய்ய பிரியப்படுகிறதில்லை. சக்ரவர்த்தி என்ற முறையில் அவருடைய
மனித இயல்பு அழிக்கப்பட்டுவிட்டது. அவருடைய சன்னதங்கள் அபரிமிதமானவை. மந்திரி
கள் அவர் முன் மண்டிபோடுவார்கள். சக்ரவர்த்தி தெய்வப்பிறப்பென்றும் சூரிய தேவதை
2,500 வருஷங்களுக்குமுன் ஜப்பானுக்குக் கட்டளையிட்ட விதியை நிலைநாட்டும் அவதார
புருஷரென்றும் சொல்ல எவ்வித முயற்சியும் செய்யப்படுகிறது.

ஜனங்கள் இதை நம்பினார்கள். இந்த நம்பிக்கையினால்தான், தோல்வியுற்ற ஜெனரல்கள்
தங்களுடைய அசக்தியை வெறுத்து தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள்.

---

## பிரிடனின் அயல்நாட்டுக் கொள்கை.

### காமன்ஸ் சபையில் அயல் நாட்டு மந்திரியின் பிரசங்கம்.

**20—8—45.**

இந்த யுத்தத்தில் நம் நாடு பிராமாண்ட தியாகங்களைச் செய்திருக்கிறது. இந்தத் தியா
கங்களுக்கு ஏற்றப்போல நமது வெளிநாட்டுக் கொள்கை இருக்கவேண்டும் என்று நான்
விரும்புபவன்.

இந்த மாபெரும் போராட்டத்தில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இந்த
யுத்தத்தில் போராடவேண்டி வந்த நேச நாடுகளின் தரை, கடல், ஆகாயப்படைத் தலைவர்
களிடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது. அவசியமே இந்த ஒத்துழைப்
புக்குக் காரணமாக இருந்திருக்கிறது.

இந்த ஒற்றுமையை நாம் காற்றில் பறக்கவிடக்கூடாது. இவர்களின் மகத்தான
சாதனங்களைக்கொண்டு சமாதான உலகத்தை ஸ்தாபிக்கவும் நாம் தவறக்கூடாது. சமாதா
னத்தை நிலைநாட்டுவதில் நாம் எப்படி முயலவேண்டுமென்பதையும் சபை அறியாது அல்லது.

நேச நாடுகள், குறிப்பாக ருஷ்யா, பெரிய கஷ்டங்களையடைந்திருக்கின்றன. இந்த
யுத்தத்தில் வெற்றிபெற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளால் பிரிடன் ரொம்ப ஏழையாகி
விட்டது. புனர் நிர்மாண வேலை ரொம்ப கஷ்டமாகவே இருக்கும்.

### விடுபட்ட ஐரோப்பிய நாடுகளில் நிலைமை.

இப்பொழுது விடுபட்ட ஐரோப்பிய நாடுகளில்தான் மிக்க மோசமான நிலைமை இருந்து
வருகிறது.

அங்கு இரண்டு பெரிய கஷ்டங்கள் இருக்கின்றன. அங்கு ஆதிக்கம் செலுத்தும்
ஜெர்மன் படைகளை எதிர்க்கவும், அவர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கவும்
அந்நாடுகளிலுள்ள மக்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இப்பொழுது இந்தப் பிரதேசங்களை மீட்ட பிறகும், அவற்றிலுள்ள மக்களை சர்க்கா
ருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படிச் செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது.

இரண்டாவதாக அங்கு ஆதிக்கம் செலுத்திவந்த ஜெர்மனியருக்கு இடையூறுகள்
விளைவிப்பதற்காக உற்பத்தியை கூடுமான அளவு குறைக்குமாறு அங்குள்ள மக்கள் அடிக்



கோரப்பட்டனர். இப்பொழுது அவர்களையே சோர்வின்றியும், கட்டுப்பாடுடனும் வேலை
செய்யுமாறு நாம் கோருகிறோம். பழைய நிலைமையிலிருந்து ஜனங்கள் புதிய நிலைமைக்கு
மாறுவதற்கு சகிப்புத் தன்மையும், பொறுமையும், உறுதியும் தேவை.

### அயல் நாடுகளில் வசிப்பவர்களின் பிரச்னை.

லக்ஷக்கணக்கான மக்கள் தங்கள் தாயகத்திலிருந்து வெளியே சென்றிருக்கின்றனர்.
இது மற்றொரு பிரச்னை.

இவர்கள் ஐரோப்பா விடுபட்டது முதல் இங்குமங்கும் அலைகின்றனர். உணவுப்பொருள்
களைத் திருடுகின்றனர். கொலை, பலாத்காரப் புணர்ச்சி முதலிய சமூக விரோதமான காரி
யங்களில் ஈடுபடுகின்றனர். அவர்களை மீண்டும் தங்கள் நாடுகளில் இறந்துவது தேச
கண்ட்ரோல் கமிஷனின் மிக்க சிரமமான வேலையாகும்.

தகவலிலிருந்து
சளிக்கிறமையன்று பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி வெளியிட்டுள்ள தகவலிலிருந்து
வேலை செய்துவருகிறார்கள்.
பிரிடிஷ் ஆபீஸர்களும், சிர்வாகிகளும் அதிகத்திறமையுடன் வேலை செய்துவருகிறார்கள்.
பிரிடிஷ் வட்டாரத்திலிருந்து 11,00,000 பேர்கள் காலி செய்யப்பட்டிருக்கிறார்கள். 3 லக்ஷம்
பேர்கள் மேற்குப்பக்கம் சென்றிருக்கிறார்கள். 6 லக்ஷத்துக்கு மேற்பட்ட ருஷ்யர்கள்
கிழக்குக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள். 2,00,000 இதாலியர்கள் தெற்கு நோக்கிச்
செல்லுகிறார்கள்.

இந்நாடுகளில் நாகரிக வாழ்க்கையை மீட்பதற்கும், உற்பத்தியைத் தடைபடாமல் நடக்
கும்படி செய்வதற்கும் ரொம்பகாலம் பிடிக்கும். பெருமுயற்சியும் வேண்டியிருக்கும். இது
பூர்த்தியாகிற வரையில் அரசியல் துறையில் நாம் சரியான ஏற்பாடுகளைச் செய்யமுடியாது.

பிரிடிஷ் வட்டாரத்தில் முகாம்களில் இன்றும் 10 லக்ஷம் அகதிகள் இருக்கிறார்கள்.
இன்றும் அநேகர் அலைந்து திரிகிறார்கள். இலையுதிர் காலத்தில் 6,45,000 பேர்கள்தான்
பாக்கியிருப்பார்கள். அவர்களில் ஐந்து லக்ஷம் போலிஷ் மக்களாக இருப்பார்கள்.

யுத்தக் கைதிகளின் பிரச்னை வேறு இருந்துவருகிறது. அவர்களில் சிலர் நாஸிக்கருத்து
கொண்டியவர்கள். அவர்கள்தான் ஆக்கிரமிப்பு நாடுகளில் கலகம் செய்துவந்தார்கள்.

### அனுதாபம் அவசியம்.

இந்நிலைமையில் வேலை செய்துவரும் கண்ட்ரோல் கமிஷனிடத்திலும், ஜெர்மனியிலுள்ள,
பிரிடிஷ் வட்டாரத்திலுள்ள பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரியினிடத்திலும், ஆஸ்திரியா,
ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியாவில் வேலை செய்துவருபவர்களிடத்திலும் நாம் அனுதாபம்
காட்டவேண்டும். அதன் சிரமங்களை உணரவேண்டும். இந்நாடுகளில் ராஜீய அதிகாரம்
பெற முயற்சிக்கிறவர்களுக்கு இது நல்ல தருணம். ஆகையால் ஒழுங்கான நிரந்தரமான
நிர்வாகத்தை அமைப்பதிலும், சட்ட திட்டங்களை அமுல் நடத்துவதிலும் விதிகளுக்குக்
கீழ்ப்படியும்படி செய்வதும், உபயோகமுள்ள வகையில் தொழிலாளர்களை உபயோகப்
படுத்துவதும் மிகவும் சிரமமான வேலையாக இருக்கும்.

### ஐரோப்பாவில் பொதுத்தேர்தல்.

இந்நாடுகளில் நடக்கும் பொதுத் தேர்தல்கள், பிரிடிஷ் பொதுத் தேர்தலைப்போல
இருக்குமென்று எண்ணவேண்டாம். அந்நாடுகளில் ஜனங்களின் உண்மைப் பிரதிநிதித்வம்
வாய்ந்த ஸர்க்காரை அமைப்பது அசாத்தியம். இந்த இடைக்காலத்தில் நாம் விரும்பாத
பல சம்பவங்கள் இந்நாடுகளில் நடக்கும்.

ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் நாம் ஆரம்ப முதலே உறுதியுடன் நடந்துகொள்ள
வேண்டும். அதாவது, இந்நாடுகளில் ஒரு சர்வாதிகாரத்துக்குப் பதிலாக மற்றொரு சர்வாதி
காரம் ஏற்படுவதை நாம் அனுமதிக்கக்கூடாது.

பாஸிஸ்டுகளையும், நாஸிகளையும் ஜனங்கள் வெறுப்பதினால் நாஸிகள், பாஸிஸ்டுகள்
அல்லாதவரையும் மிகப்பெரிய கக்ஷியின் பிரதிநிதிகளாகவும் வருகிறவர்களையும் இப்பொழுது
பாஸிஸ்டுகள், நாஸிகள் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பிரதிநிதிகள் அதிகாரம்பெற
ஆசைப்பட்டுப் பொதுத் தேர்தல் வேண்டாமென்று சொல்லிவருகிறார்கள்.

உலகத்தில் நமது
சித்தப்பிரமையடைந்து, யுத்த நாசத்திலிருந்து வெளிவந்திருக்கும் உலகத்தில் நமது
முதல் வேலை பொருளாதாரப் புனருத்தாரணத்தைக் கவனிப்பதுதான். ஜனங்கள் மீண்டும்
தங்கள் நாடுகளில் வீடுகளுடனும், ஜீவனோபாயத்துடனும் அமருவதற்கு நாம் கஷ்டப்பட்டு
வேலை செய்யவேண்டும்.

## அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படைகள்.

### மாஜி கூட்டுறவு மந்திரி சபையால் நிறுவப்பட்டது.

நமது வெளிநாட்டுக் கொள்கை கூட்டு ஸர்க்கார் கையாண்ட கொள்கையையே அடிப்படையாகக் கொண்டிருக்கும், கூட்டு ஸர்க்காரில் நானும், ஈடனும் நெருங்கி ஒத்துழைத்தோம்.

இந்த யுத்தத்தில் வெற்றிபெற்ற பெரிய வல்லரசுகளிடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்களும் அவற்றிடையே இருந்துவரும் ஒத்துழைப்புமே நமது வெளிநாட்டுக் கொள்கையை அஸ்திவாரமாகக்கொண்டிருக்கிறது.

ராணுவம் சம்பந்தப்பட்டமட்டில் பார்த்தால், அவை பெரிய வல்லரசுகள்தானென்று ஸம் வெற்றி பெறுவதில் அவைகள் ஏழைகளாகிவிட்டன.

சமாதானத்துக்கு காரியங்களாக நடந்துகொள்ளுவதே அவர்களின் பிரதான கடமை. மற்ற நாடுகள்மீது அவை ஆதிக்கம் செலுத்தக்கூடாது. ஒவ்வொரு நாடும் தனது க்ஷேமத்துக்காகவும், கூட்டு க்ஷேமத்துக்காகவும் உதவிபுரியும் நிலைமையை ஏற்படுத்துவது பெரிய வல்லரசுகளின் கடமையாகும்.

சென்ற யுத்தத்துக்கும், இந்த யுத்தத்துக்குமிடையே நாம் ஒரு கெட்ட கொள்கையைக் கையாண்டுவந்தோம். பந்தோபஸ்து அல்லாததால் இந்தக் காலத்தில் வியாபாரம் செழிக்க முடியவில்லை. வியாபாரம் இல்லாதது பந்தோபஸ்துக்கே ஆபத்தாக முடிந்தது. இப்பொழுது நாம் பந்தோபஸ்துக்கு வழி தேடிவிட்டோம். பழைய வியாபாரக் கொள்கையைக் கைவிடுவதற்கு இதுவே சமயம்.

சமூக அநீதிகள், ஜனங்களின் கஷ்டங்கள், வறுமை ஆகியவைகளைப்போக்க நாம் முயலவேண்டும்.

இவை ஒழிந்தால்தான் நமது வெற்றி பொருளாதாரச் செழிப்புக்கு அடிகோலியதாகக் கருதப்படும். ஆதலின் உலகப்பொருளாதாரப் புனருத்தாரணம்தான் நமது வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான லக்ஷியம்!

அயல்நாட்டு மந்திரிகளின் சபை லண்டனில் கூடும்பொழுது நாம் ஜெயிப்பது அல்லது பழிவாங்குவது என்ற எண்ணம்கொள்ளக்கூடாது. நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும் எதிர்கால சமாதானத்துக்குரியதா அல்லது எதிர்கால யுத்தத்துக்கு அடிகோலுமா என்று பார்க்கவேண்டும்.

ஐரோப்பாவில் பத்திரத்துக்கும், சரியான பொருளாதார அபிவிருத்திக்கும் விரோதம் ஏற்படலாம். அநேக ஜாதியார்கள் உள்ள ஐரோப்பாவை நோக்குங்கால் ஜெர்மனியிலிருந்து யுத்த மனப்பான்மையை அகற்றிவிட்டால்தான் ஐரோப்பாவில் ஒற்றுமை ஏற்படும் என நான் நம்புகிறேன்.

## கிரீஸ் சம்பந்தமான அபிப்பிராயம்.

### ஸ்திரமான ஜனநாயக நிர்வாகம் அவசியம்.

கிரீஸ் விடுதலைபெற்றபொழுது நாம் வெளியிட்டகொள்கையை இப்பொழுதும் நிர்வாகம் கடைப்பிடிக்கும். கிரீஸில் ஜனநாயக ஸர்க்காரை ஸ்தாபிப்பதுதான் நமது லக்ஷியம். தேர்தல் நடப்பதற்கு முன்பு புதிய ஸர்க்கார் அமைக்கப்படுவதற்கு நாம் சம்மதிக்கக் காரணமில்லை. கிரேக்க மக்களின் முடிவு தெரியும்வரையில் வால்காரிஸ் ஸர்க்கார் நிர்வாகம் நடத்தவேண்டும் என்றே நாம் கருதுகிறோம். கிரேக்கத் தலைவர்கள் ஒவ்வொரு வாரமும் நிர்வாகத்தை மாற்ற முயன்றால் கிரீஸ் சீர்திருத்தம் அடையாது. பிரிட்டன் நமது நாட்டை யாத்ரியாகக்கொள்ளட்டும்.

கிரீஸில் பொதுத் தேர்தலும், மன்னிப்பும் சீக்கிரமே நடக்கவேண்டுமென்று பிரிட்டன் வற்புறுத்தியிருக்கிறது.

அமெரிக்காவும், பிரான்ஸும், பிரிட்டனும் கிரேக்க தேர்தலை மேன்பார்வை செய்ய ஒத்தாசை செய்வதாக உறுதி கூறியிருக்கின்றன. பிரிட்டிஷ் குடியரசு நாடுகளின் பிரதிநிதிகளையும் உடன் சேர்க்க அழைப்பதாக எனது உத்தேசம். ஆஸ்திரேலியர்களும், நியூஸிலாந்து மக்களும் கிரீஸில் போர்புரிந்து நன்கு மதிக்கப்பட்டார்கள். தேர்தலை மேன்பார்க்க ருஷ்யா ஒப்புக்கொள்ளவில்லையென்பது வருந்தத்தக்கது. ஆயினும் பிரிட்டனுக்குவந்து பிரச்னைகளைச் சர்ச்சை செய்யவேண்டுமென்ற அழைப்பை கிரேக்க ரீஜன்ட் ஒப்புக்கொண்டுவிட்டார் என்று சந்தோஷத்துடன் அறிவிக்கிறேன்.



## யூகோஸ்லாவியாவின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்.

வடக்குப் பிரதேசத்தில் ஸ்லாவ் பாஷை பேசும் கிரேக்கர்கள் கடுமையாக நடத்தப்படுவதாக யூகோஸ்லாவிய ஸர்க்கார் கூறும் புகார்களுக்கு ருஜு கிடைக்கவில்லை. இந்த நிலைமையைப்பற்றி விசாரிக்க அமெரிக்க, பிரிட்டிஷ், சோவியத், பிரெஞ்சு ஸர்க்காரின் பிரதிநிதிகள் கமிஷன் ஒன்று அனுப்பப்படவேண்டுமென்ற யோசனையை நாம் வரவேற்கிறோம்.

இந்த பிரதேசத்தில் சமாதானமும், சந்தோஷமும் ஏற்படுமென்று நான் நம்புகிறேன்.

## எங்கும் ஒரே மாதிரிதான்.

பல்கேரியாவிலும், ருமேனியாவிலும், ஹங்கேரியாவிலும் அமைக்கப்பட்ட நிர்வாகங்கள் ஜனங்களின் பிரதிநிதித்வமுள்ளவையல்ல என்று நாம் நினைக்கிறோம். அங்கு ஒரு சர்வாதிகாரத்துக்குப் பதிலாக மற்றொரு சர்வாதிகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஜனநாயக முறையல்ல. அதன் அர்த்தம் விளக்கப்படவேண்டும்.

அங்கு அமைக்கப்பட்ட நிர்வாகங்கள் பிரதிநிதித்வமில்லாததால் ராஜதந்திர முறைக்கு ஒத்திருக்கவில்லை.

பல்கேரியாவில் கூடிய சீக்கிரத்தில் தேர்தல் நடைபெறப்போவதாகத் தெரியவருகிறது. வாக்காளர்களின் ஜாபிதா சுதந்திர முறையில் தயாரிக்கப்படவில்லை என்று நாம் நினைக்கிறோம்.

ஆகையால் அந்தத் தேர்தல்மூலம் அமைக்கப்படும் எந்த நிர்வாகத்தையும் நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம்.

பல்கேரிய சட்டத்தின் வரம்புக்குட்பட்ட கட்டுப்பாடுகளுடனும், விலக்குகளுடனும் நடக்கும் தேர்தல் நமது தேர்தல் எண்ணத்துக்கு முற்றிலும் விரோதமானது.

## இதாலி—பழிவாங்கும் கொள்கை கிடையாது.

இதாலியுடன் நியாயமான ஓர் சமாதான உடன்படிக்கையைச் செய்துகொள்ளவும், இதாலிய மக்கள் சுதந்திர முறையில் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக்கொள்ளவேண்டும் என்றும் பிரிட்டன் விரும்புகிறது. இதாலியுடன் போர் நடத்தியதில் பிரிட்டன் எண்ணிக்கையற்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மக்களை இழந்ததென்பதை ஒருபொழுதும் மறக்கமுடியாது. ஆனால் கடைசியில் இதாலியர்களே நாஸிகளைத் தாக்கும் காலமும் வந்தது.

வஞ்சம் தீர்க்கும் கொள்கையை இதாலி விஷயத்தில் கையாளுவது விவேகமுள்ளதென்று பிரிட்டன் நினைக்கவில்லை. இதாலிய மக்கள் இப்பொழுது இதாலியின் சாம்ராஜ்யக் கொள்கையை உதறித்தள்ளிவிட்டார்கள். அந்த நிலைமை மறுபடியும் ஏற்படக்கூடாதென்றும் முஸோலினி இருப்பதுபோல் எண்ணி இதாலியை நடத்துவதாக பிரிட்டன் உத்தேசிக்கவில்லை. இதாலியில் தேர்தல் நடத்தப்பட்டு மீண்டும் ஜனநாயக ஸர்க்கார் ஏற்படும் என்ற நினைப்புடன்தான் அதனுடன் நாம் நடந்துகொள்ள உத்தேசித்திருக்கிறோம்.

## பிரெஞ்சு நிர்வாகத்துடன் சம்பாஷணை.

பிரான்ஸ் சம்பந்தமாக பிரிட்டனின் கொள்கையை நான் பூராவும் பரிசீலித்து வருகிறேன். இந்த பெரிய தேசத்துடன் நாம் நல்ல உறவில் இருக்கவேண்டும் என்பது எனது பெரிய விருப்பம். பிரெஞ்சு ஸர்க்காருடன் பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்யப்போகிறேன். பிரிட்டனும், பிரான்ஸும் ஒத்துழைத்தால் ஐரோப்பாவின் நலனுக்கு அவை ரொம்ப உழைக்க முடியும். பேச்சு வார்த்தைகள் முடியும்வரையில் விவரமான அறிக்கை எதுவும் வெளியிடப்படாது.

லண்டனில் ஒரு தூதரை நியமிக்குமாறு பின்னிஷ் ஸர்க்காரை நாம் அழைத்திருக்கிறோம்.

## போலந்து.

### சமாதான மகாநாட்டில் எல்லைச்சரக நிர்ணயம்.

போலிஷ் வட்டாரத்துக்குட்பட்ட பிரதேசத்தைப்பற்றி சிறிது தகரார் ஏற்பட்டதென்று எனக்குத் தெரியும். போலந்தின் எல்லைச் சரகம் சமாதான மகாநாட்டில்தான்

நிர்ணயிக்கப்படும். கிழக்கு, மேற்கு நியஸிக்கு நடுவில் ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்
பட்டுவிட்டதாலும், பிரதேசம் போலிஷ்வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாலும் ஒன்று
மில்லாத நிலமை ஏற்பட்டிருக்கிறதென்றும் பிரதம மந்திரியும், நானும் பாட்ஸ்டாமில்
அறிந்தோம். பிரதேசத்தின் பொருளாதாரத்தையாவது திரும்பவும் அமைத்துவிடலாம்
என்றும், நாசம் ஏற்பட்ட ஐரோப்பாவுக்கு அந்தப் பிரதேசங்கள் பேருதவி செய்யலாம்
என்றும் நாம் முடிவு செய்தோம்.

போலந்தின் இறுதி எல்லை நிர்ணயம் இரண்டு விஷயங்களைப் பொறுத்திருக்கும்.
ரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்ட பிராந்தியத்தில் 10 லக்ஷம் போலிஷ்காரர்கள் இருக்கிறார்கள்.
இவர்கள் போலந்துக்கு வருவார்களா, ரஷ்யாவிலேயே இருப்பார்களா என்பது தெரிய
வில்லை. இரண்டாவதாக மேற்கு ஐரோப்பாவில் பல போலிஷ் துருப்புகளும், ஸிவிலியன்
களும் இருக்கின்றனர். ஜெனரல் மாண்ட் காமரியின் பிராந்தியத்தில் 5 லக்ஷம் போலிஷ்
காரர்கள் இருக்கின்றனர்.

## வார்ஸா உறுதிகள்.

போலந்தின் வருங்கால ஸர்க்கார் எப்படி இருக்குமென்பது தெளிவாகத் தெரியவில்லை.
இதற்காகவேதான் பிரதம மந்திரியும், நானும் பாட்ஸ்டாமில் போலிஷ் ஸர்க்கார் பிரதிநிதி
களைச் சந்தித்தோம். போலந்துக்குத் திரும்பும் போலிஷ்காரர்களுக்கு அங்கிருக்கும் மற்ற
போலிஷ் பிரஜைகளுக்கு இருப்பதைப்போன்ற உரிமைகள் தரப்படும் என்று போலிஷ்
பிரதிநிதிகள் உறுதிமொழி கூறினார்கள். பொதுத் தேர்தலும் பூர்ண சுதந்திரத்துடனும்
1921-ம் ஆண்டு அரசியல் முறைப்படியும் நடத்தப்படும் என்று அவர்கள் உத்தரவாத
மளித்தனர். 1946-க்குள் பொதுத் தேர்தல் நடக்குவதாக அவர்கள் உறுதிமொழி கூறினர்
மதசம்பந்தமான சுதந்திரமும் அளிக்கப்படுமென்று அவர்கள் உறுதி கூறினார்கள்.

உலக பத்திரிகாசிரியர்கள் தாராளமாகப் போலந்துக்கு வரவேண்டுமென்றும், தணிக்
கையில்லாத தகவல்களை வெளியிடவேண்டுமென்றும் நாங்கள் கூறியதை போலந்து ஒப்புக்
கொண்டது.

பிரிடிஷ்-போலிஷ் தேவைகளுக்காக லண்டனுக்கும், வார்சாவுக்கும் விமானப் போக்கு
வரத்து ஏற்பாடு செய்யப்பட்டு ஆரம்பமாகிவிட்டது.

பாட்ஸ்டாமுக்கு வந்திருந்த போலிஷ் நிர்வாகத்தினிடம் பிரிடன், போலந்தின் நட்பைக்
கோருகிறதென்றும், போலிஷ் பிரதிநிதிகள் செய்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்று
விட்டால்தான் அந்த நட்பு முதிர்ந்துவிடுமென்றும் பிரிடன் சொல்லியிருக்கிறது.

வெளிநாடுகளிலுள்ள போலிஷ்காரர்கள் தாயகம் திரும்பி, அதன் புனருத்தாரணத்தில்
ஈடுபடுமாறு இந்த உறுதிமொழிகளின்பேரில் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். பிரதான
போலிஷ் ஜனநாயகக் கட்சிகள் பொதுத் தேர்தலில் பங்கெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படு
மென்று நாம் எதிர்பார்க்கிறோம். எல்லாருக்கும் பேச்சு சுதந்திரமும், அரசியல் சுதந்திரமும்
இருக்கவேண்டும்.

வியாபாரம், பொருளாதாரம் சம்பந்தமாக சம்பாஷணைகள் நடைபெறுகின்றன.
இங்கும் சிரமங்கள் இருக்கின்றன. போலந்தின் போக்குவரத்து சீர்கெட்டிருக்கிறது.
உணவுப்பொருள் குறைந்திருக்கிறது. கால்நடையின் பெரும்பாகம் கொல்லப்பட்டிருக்கிறது.
இந்த சிரமங்களை நிவர்த்திக்க அதிககாலம் பிடிக்கும். ஆனால் ஜனநாயகத்தை அவர்கள்
அமைத்துவிட்டால் பிரச்னைகள் சுலபமாகத் தீர்ந்துவிடும்.

போலந்திலிருந்து ஸோவியத் துருப்புகள் வாபஸ் பெறப்படுமா என்று மார்ஷல்
ஸ்டாலினை நான் கேட்டேன். ஜெர்மனியிலுள்ள ஸோவியத் துருப்புகளுக்கு அத்யாவசிய
மான போக்குவரத்துகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஒரு சிறு படையே போலந்தில்
இருக்கும் என்றும், மற்றவை வாபஸ் பெறப்படும் என்றும் ஸ்டாலின் சொன்னார். இது
நியாயமான விருப்பமே.

இன்னும் போலந்தில் ரகசியப் போலீஸ் வைக்கப்படும் பிரச்னை பாக்கியிருக்கிறது.

இந்த உறுதிகளுடன் கடல் தாண்டியுள்ள போலிஷ் ராணுவத்தினரையும், பொது
மக்களையும் தாயகம் திரும்பிச் சென்று அங்கும் போலந்தின் புனருத்தாரணப் பொறுப்பை
ஏற்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.



# ஸ்பானிஷ் நிர்வாகம்.

## ஜனங்களின் பிரச்னை.

ஜெனரல் பிராங்கோவை
மிகவும் ஜனரஞ்சகமான விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன். பேசப்பட்டிருக்கிறது.
யும், ஸ்பானிஷ் பிரச்னையையும்பற்றி இங்கு அநேகம் தடவை ஸ்பானிஷ் நிர்வா
நமது நிர்வாகத்தின் அபிப்பிராயத்தை சுருக்கமாகச் சொல்லுகிறேன். வெளியிட்ட
கத்தை பொது மக்கள்தான் நிர்ணயிக்கவேண்டும். பெர்லின் மகாநாட்டில்
அறிக்கையைவிட அதிகமான சலுகை காட்டமுடியாது.

எனினும் உலக
ஸ்பானிஷ் மக்களை நிரந்தரமாகத் தண்டிக்க நாம் விரும்பவில்லை. அடிப்படை
நாடுகள் சங்கத்தில் ஸ்பெயின் அனுமதிக்கப்படாது. உலக நாடுகள் சங்கத்தின்
விதிகளை அது ஒப்புக்கொண்டபிறகே அது சேர்த்துக்கொள்ளப்படும்.

நமது விருப்பத்
ஸ்பெயினின் உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய நாடுகள் தலையிடுவதால் வலுக்கும்.
திற்கு மாறான விளைவுகள் ஏற்படக்கூடும். இதனால் பிராங்கோவின் கைதான் நமது
அந்நாட்டில் உள்நாட்டுக் கலகத்தையுண்டாக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும்
ஸர்க்கார் எடுத்துக்கொள்ளாது.

முயற்சிகளை நாம்
ஆனால் நிர்வாகத்தைத் திருத்தியமைக்க ஸ்பானிஷ் மக்கள் செய்யும் கட்சியினுடையவும்
ஆதரிப்போம். இது என்னுடையவும், ஸ்பானிஷ் குடியரசுக்
அபிப்பிராயம்.

## டெகரானிலிருந்து படை வாபஸ்.

பாட்ஸ்டா முடிவு
டெகரானிலிருந்து நேசதேசத் துருப்புகளை வாபஸ்பெறுவதாக ருஷ்யாவுக்கும்
செய்யப்பட்டது. எதிரியை முறியடிக்க உபயோகிப்பதற்காக பிரிடனுக்கும், படைகளை வாபஸ்
இடம்தர பாரஸீகம் ஒப்புக்கொண்டதினால், அந்த வேலை பூர்த்தியானவுடன்
பெறுவது தர்மம் என்று பிரிடன் அபிப்பிராயப்படுகிறது.

அதிகமாக உபயோ
ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக ஏற்பட்ட ஒப்பந்தத்தை அதற்கு அபிப்பிராயப்படுமென்று
கிப்பதென்பது கொள்கையல்ல. மற்ற நேச நாடுகளும் அவ்விதம்
பிரிடன் நினைக்கவில்லை.

டார்டனல்ஸ் ஜலசந்தி
மேலும் ஐரோப்பிய சமுத்திரங்களை சர்வதேசமயமாக்குவது, பிரச்னைகள் தீர்க்கப்பட
யின் ஸ்வாதீனம், துருக்கியின் நிலைமை முதலியவற்றைப்பற்றிய இப்பொழுது
வில்லை. இந்தப் பிரச்னைகள் அடுத்துவரும் வாரத்தில் கவனிக்கப்படும். வற்புறுத்தாமலிருந்தால்
அவைகளைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடும்படி
நான் சந்தோஷிப்பேன்.

பிரிடிஷ் காமன்
நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தையும், ஒன்று
வெல்தையும் ஏன் உலகத்தையே கூட பாதிக்கும் மிக முக்கியமான பிரதேசங்களில்
மத்தியதரைக் கடல் மத்திய கிழக்குப் பிரதேசமாகும்.

## தூரக்கிழக்கு பிரச்னை.

### ஹாங்காங்கை பிரிடன் திரும்பப்பெறும்.

உலக சமாதானம்
கீழ்க்கோடியில் புனருத்தாரண வேலைகளே நம்முன் நிற்கின்றன. பிரச்னையைப்போல் கடின
சம்பந்தப்பட்ட வரையில் இந்தப் பிரச்னையும், ஐரோப்பியப் சமாதானத்தை
மானதுதான். கீழ்க்கோடி வெகு தூரத்திலிருக்கிறது என்ற காரணத்தால்
பிரதேசவாரியாகப் பிரிக்கமுடியாது என்ற தத்வத்தை நாம் மறந்துவிடக்கூடாது.

நலன்களிலேயே நாம்
கீழ்க்கோடியில் விடுவிக்கப்பட்ட பிரிடிஷ் பிரஜைகளின் கூற விரும்புகிறேன்.
எப்போதும் கண்ணாக இருப்போம் என்பதை அவர்களுக்கு உறுதிமொழி
அந்நாடுகளில் சாதாரண வாழ்க்கை மீட்கப்படும்.

நடவடிக்கை எடுத்து
ஹாங்காங்கில் ஜப்பானிய சரணகதியை ஏற்க நமது துருப்புகள்
வருகின்றன. இன்னமும் தகராறுகள் இருக்கலாம்.

ஆனால் நமது சீன, அமெரிக்க சகாக்களின் சம்மதத்துடன் நமது பிரதேசத்தை நாம் திரும்பப்பெறுவோம்.

### ஸயாமில் எதிர்ப்பு இயக்கம்.

ஸயாமில் எதிர்ப்பு இயக்கம் வலுவடைந்துவருகிறது. பிரிடன் இந்த உதவியை அங்கீகாரம் செய்திருக்கிறது. அவைகள் பகிரங்கமாக இதுவரையில் போரைத் துவக்காததற்கு, ராணுவ முறையில் பிரிடன் செய்த உபதேசம்தான் காரணமாகும்.

பிரிடன்மீது யுத்தப்பிரகடனம் செய்ததை ஸயாம் ஸர்க்கார் ஆகஸ்ட் 16-ம் தேதி பிரகடனத்தின்மூலம் மறுத்துவிட்டதாக இப்பொழுது தெரியவருகிறது. நேசநாடுகளுடன் ஒத்துழைக்க ஸயாம் தயாராயிருப்பதாகவும் அப்பிரகடனம் கூறியது. இந்தப் பிரகடனம் நமக்கு வந்தவுடன் அது பூரணமாக ஆலோசிக்கப்படும். ஜப்பானுடன் ஸயாம் ஒத்துழைத்ததால் பல பிரச்னைகள் கிளம்பியிருக்கின்றன. ஸயாம் சம்பந்தமாக நாம் அனுஷ்டிக்கப்போகும் கொள்கை, இப்பொழுது ஸயாமில் பிரவேசிக்கவிருக்கும் நமது துருப்புகளின் கோரிக்கைகளுக்கு ஸயாம் எவ்வளவுதூரம் இணங்குகிறது என்பதையும், நஷ்டஈடு தரவும் சமாதானத்துக்கும், பொருளாதாரப் புனருத்தாரணத்துக்காகவும் அது எவ்வளவு தூரம் உதவிபுரியத் தயாராயிருக்கிறது என்பதையும் பொறுத்திருக்கும்.

### கைதிகள் நாயகம் திரும்புவது.

கீழ்க்கோடியில் கைதிகளாக இருக்கும் பிரிடிஷ்காரர்களை தாயகம் கொண்டுவர்து அங்கு கஷ்டப்படுகிறவர்களுக்குப் போதுமான வசதியை அளிக்கும் விஷயத்தை பிரிடன் முதலில் கவனிக்கும்.

### ருஷ்யா.

ஐரோப்பாவை நாஸி கொடுங்கோன்மையிலிருந்து விடுவிப்பதற்கு செஞ்சேனையின் வெற்றி மிகவும் பிரதான காரணமாக இருந்தது. அமெரிக்காவுடன் பிரிடன் கொண்டிருக்கும் நட்பும் புகழக்கூடியது.

### இந்த மற்றொரு ஸ்வர்க்கம்.

நாம் சரித்திரத்திலேயே பெருமைவாய்ந்த ஸ்தானம் வகிக்கிறோம். பிரிடனுக்கு நெருக்கடியான சமயத்தில் நிராயுதபாணிகளாக பிரிடன் எதிர்த்து நின்று, தோல்வியை ஏற்றுக்கொள்ளாமல் போரை நடத்தி, இந்தத் தீவை சுதந்திரக் கோட்டையாகச் செய்த பெரும் புகழ் இத்தீவின் மக்களுடையதாகும். இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் பின் வருமாறு சொல்லுகிறார். "நாம் கோட்டையைக் காப்பாற்றினோமென்றும், மனித வர்க்கத்தின் ஜீவனைக் காப்பாற்றினோமென்றும் திட்டமாகச் சொல்லலாம்". நமது கொள்கைகள், நமது மக்களின் சேவைக்கு ஒத்ததாக இருக்கவேண்டும்.

---

## ஸோல்ஜருக்குத் தகுந்த வேலையைக் கண்டுபிடிப்பது.

### இந்தியாவின் திட்டம்.

ஜப்பானிய யுத்தம் முடிந்தபின் மற்ற நாடுகளைப்போல இந்தியாவிலும் சமாதான பிரச்னை தோன்றிவிட்டது. படைகளைக் கலைப்பதும் கைசம்பூண்ட படைகளை பொதுஜன வாழ்க்கையில் அமைப்பதும்தான் மிகவும் முக்கியமான பிரச்னை. சமீபகாலத்தில் திரும்பி நிலைப்பாட்டுவது என்ற வார்த்தைகள் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன. சேவைப்படைகளிலுள்ள ஆடவர்கள் ஸ்திரீகள் சம்பந்தமாக இந்த பிரச்னை தோன்றியிருக்கிறது. பொதுஜன வாழ்க்கைக்கு அவர்கள் திரும்பிவர என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், அவர்களுடைய யுத்த சேவையை மறந்துவிடக்கூடாதென்றும் அவர்கள் வினவுகிறார்கள். இந்த பிரச்னைகளுக்கு மத்திய நிர்வாகமும், மாகாண நிர்வாகங்களும் நிறுவியிருக்கும் திட்டங்கள் பதிலளிக்கும்.



தேசிய முறையிலும், மாகாண முறையிலும் நீண்டகால, குறுகிய கால திட்டங்கள் அத்தியாவசியமாகும். திரும்பி நிலைப்பாட்டுவது என்ற பிரச்னையில் வேலை கொடுக்கும் திட்டம் அடிப்படையானது. படைகளிலுள்ளவர்களுக்குத் தகுதியான வேலை கிடைக்க வேண்டுமே என்றுதான் கவலை மிகுதியாக இருக்கிறது. வேலை ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் இல்லாத தேசத்திலிருந்து போருக்குச்சென்றவர்களிடம் இந்தக்கவலை மிகுதியாக இருக்கிறது. யுத்த காலத்தில் விசேஷ மாறுதல் ஏற்பட்டு வேலை ஏற்பாடு செய்யும் ஸ்தாபனமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தின் உதவியை போர்ப்படையிலுள்ளவர்கள் எவ்விதம் பெறுவார்.

உதவி கலைக்கும் முகாம்களிலேயே ஆரம்பமாகும். அங்கு பயிற்சிபெற்றவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து அவனுடைய யோசனை என்னவென்றும் வேலையை சம்பாதிக்க அவர்களின் உதவி தேவையா என்றும் விசாரிப்பார்கள். அவசியமான பொழுது தகவலும் உதவியும் அளிக்கப்படும். உதவி வேண்டியவர்களைப்பற்றிய தகவல்கள், சமீபத்திலுள்ள வேலை கொடுக்கும் ஆபீஸுக்கு அனுப்பப்படும்.

திரும்பி நிலைப்பாடு திட்டத்துக்கு வேலை கொடுக்கும் ஆபீஸ்கள்தான் முக்கியத்வமுள்ளவை. 10 ஆபீஸ்கள் இவ்விதம் ஏற்கனவே வேலை செய்துவருகின்றன. அடுத்த வருஷ ஆரம்பத்தில் இந்த ஆபீஸ்களின் சங்கியை 71-ஐ எட்டிவிடும். அது வரையில் ரெக்ருடிங் ஆபீஸ்கள் மாஜி போர்ப்படைகள் சம்பந்தமான வேலைகளைக் கவனித்துவரும். படையிலிருந்து திரும்பி அனுப்பப்பட்ட எவரும் அந்த ஆபீஸின் உதவியைப்பெறலாம். வேலை கொடுக்கும் சங்கத்தை ஏற்பாடு செய்ததென்பது இந்தியாவில் ஒரு துணிவுகரமான நடவடிக்கையாகும். அது என்ன வேலை செய்யக்கூடுமென்று அநேகர்கள் சந்தேகிக்கலாம். அது தொழிலாளர்களுக்குத் தகுந்த வேலையைப்பெற ஆலோசனை கூறும். முதலாளிகளும் சரியான வேலைக்காரர்களை அமர்த்தும்படி செய்ய ஆலோசனை கூறும். இந்த உத்தேசத்துடன் இந்த ஸ்தாபனம் போர்ப் படைகளிலிருந்து எவ்வளவு பேர்கள் கலைக்கப்படுவார்கள் என்றும் அவர்களில் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கக்கூடுமென்றும் தகவல்களைத் தொகுத்து வருகிறார்கள்.

மனுக்களையும், காலிஸ்தானங்களையும் பிரித்துவிடுவது ஒரு சிரம சாத்தியமான வேலை. பூர்ணமான விளைவு ஏற்படவேண்டுமானால் முதலாளிகளுடையவும் தொழிலாளர்களுடையவும் அக்கறைகள் கவனிக்கப்படவேண்டும். போர்ப் படைகளில் தகுதியுள்ளவர்களை அமர்த்துவது சகஜமாகிவிட்டது. இந்த முறை சமாதான காலத்துக்கும் பொருந்தும். இது நன்குமதிக்கப்பட்டிருப்பதால் ஸ்தாபனத்திலுள்ள சிப்பந்திகளுக்குத் தகுந்த பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது.

ஆபீஸ்களுடன் திரும்பி நிலைப்பாடு வேலை நின்றுவிடாது, தொழில், நிர்வாகம், விஞ்ஞானம் கைத்தொழில் முதலியவற்றிலிருந்து ஆபீஸர்களையும், யோக்கியதையுள்ளவர்களையும் கவனிக்க ஆபீஸ் ஸ்தாபனத்தின்கீழ் நியமன கிளைஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறது. எக்ஸ்சேஞ்ச் ஆபீஸைப்போலவே அதுவும் வேலை செய்துவரும். யோக்கியதை அவசியமான உத்தியோகங்களுக்கு தொழிலாளர்களை நியமிக்கவேண்டுமானால் கணக்குள் ஒன்று சேர்த்து தயாரிக்கப்படவேண்டும். இந்தக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு அதிக சாமர்த்தியம் வேண்டும்.

கலைக்கப்பட்ட ஸ்திரீகளும் கவனிக்கப்படுகிறார்கள். எக்ஸ்சேஞ்ச் திட்டத்தில் ஸ்திரீ கிளைஸ்தாபனமும் இருந்துவரும்.

தொழிற்பயிற்சிக்கும் தொழில்களுக்கும் பயிற்சிக்கும் வசதிகள் அளிக்கப்படும். இந்தப் பயிற்சிபெற்றவன் மற்ற தொழிலாளர்களுடன் வேலைக்குச் செல்லலாம். பயிற்சி தொழிற்சாலை தேவைகளுக்கும் யுத்தத்துக்குப் பிந்திய அபிவிருத்தி திட்டங்களுக்கும் ஒத்ததாக இருக்கும். பயிற்சியால் ஒரு பிரயோஜனமுமேற்படாத வகையில் கட்டுக்குப் பயிற்சி அளிக்கப்படமாட்டாது.

முடமானவர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவனுக்கும் கஷ்டநிவாரண புனருத்தாரண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் அவன் திறமையுடன் வேலை செய்யலாம். முடவனாகயிருந்தாலும் அவன் மற்றவர்களைப்போல் வேலை செய்யலாம். அவ்விதம் செய்தால்தான் கஷ்டநிவாரண வேலை பூர்த்தியாகும்.

கலக்கப்பட்டவர்களுக்கு, உதவியும், தகவலும், ஆலோசனையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திரும்பிவரும் ஸோல்ஜருக்கும், மாலுமிக்கும், விமானிக்கும் வேலையை வாக்குறுதி செய்வது முதல் கடமையாகும். அந்த வேலை அவனுக்குத் தகுதியாக உள்ளதாகயிருக்கும்படி செய்வதும் முக்கியமான வேலையாகும்.

---

# நேசதேச ரப்பர் பிரச்னையை இந்தியா எவ்விதம் தீர்த்தது.

## *11,000-க்கு மேற்பட்ட டன்கள் ஸப்ளை செய்யப்பட்டன.*

மலேயாவையும் டச்சு கிழக்கிந்தியத்தீவையும் நாம் திடீரென்று இழந்துவிட்டதினால் நேசதேசத்தாருக்கு ஒரு பெரிய பிரச்னை தோன்றிற்று. குரூட் ரப்பரை உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் 90 சத விகிதத்தை இழந்துவிட்டதாலும், ஜாக்கிரதையாக உபயோகித்தாலும் கையிருப்பு ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் நிலைக்கக்கூடியதாக இருந்ததாலும் சேனை, பொதுஜன வாகனங்கள், டாங்கிகள், கவசம்பூண்ட வண்டிகள், விமானங்கள், முதலியவற்றிற்கு வருஷத்திற்கு 10-லக்ஷம் டன்கள் ரப்பர் நேசதேசத்தாருக்கு தேவைப்பட்டது. அதைப் பெற பதில்வெட்டுகளைத் தயாரிக்கவேண்டியிருந்தது.

இந்த பிரச்னை அமெரிக்க சேர்க்கை ரப்பர் உற்பத்தி மூலம் தீர்க்கப்பட்டது. இந்தியாவில் சேர்க்கை ரப்பர் உற்பத்தி செய்யப்படாவிட்டாலும் இந்தியா குரூட் ரப்பர் உற்பத்தியை அதிகரிக்கவும் உபயோகத்தைக் குறைக்கவும் பெரும் முயற்சி செய்தது.

### மீதப்படுத்தும் ஏற்பாடுகள்.

முதலாவதாக ரப்பர் பொதுவாக உபயோகிக்கப்படக்கூடாதென்றும் ராணுவ, அல்லது பொதுஜன அவசியங்களுக்குத்தான் உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் கட்டுப்பாடு செய்யப்பட்டது. ரப்பரைச் சேமிப்பதும் விற்பதும் கட்டுப்பாடு செய்யப்பட்டது. அதன்பின் நிர்வாகம் ரப்பர் பூராவையும் விலைக்கு வாங்கிவிட்டது. டயர்களும் மற்ற பொதுஜன சௌகரியத்துக்குரிய இனங்களும் பங்கீடு செய்யப்பட்டன. உல்லாசப்பொருள்களான சுடுதண்ணீர் சீசாக்கள், டென்னிஸ் பந்துகள், காப்பந்துகள் மறைந்துவிட்டன. ரப்பர் சாமான்களை திருத்தியமைக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு குரூட் ரப்பருக்கு பதிலாக வழங்கப்பட்டன. திருத்தியமைப்பதற்காக தள்ளுபடி ரப்பர் அவசியமாயிற்று. உபயோகமற்ற டயர்களும் மற்ற ரப்பரும் சேமிக்கப்பட்டன.

யுத்த முயற்சிக்காக தொழிற்சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. சேனைக்கும் விமானங்களுக்கும், குழாய்களுக்கும், மின்சார கேபிள்களுக்கும் தேவையான ரப்பரை உற்பத்திசெய்ய புதிய தொழிற்சாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பின்கண்ட முக்கியமான சாமான்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ரப்பர் ஷீட்டுகள், மிதக்கும் பெல்டுகள், தண்ணீர் உட்புகாத ஆடை, காட்டுப்போருக்கான ஜோடுகள், சனுக்கெதியம் முஸ்தீப்பு முதலியவைகள். மேலும் அவசியமான பொதுஜனத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டன. யுத்தத்துக்குமுன் இந்தியா தொழிற்சாலைகளுக்கும் ரப்பர் சாமான்களுக்கும் தேவையான ரப்பரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது.

### உற்பத்தி.

1942-ல் ரப்பர் உற்பத்தி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மேற்குக்கரையிலுள்ள ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்தபின் ஒவ்வொரு வருஷமும் ரப்பர் உற்பத்தி அதிகரித்தது. மேலும் அஸ்ஸாம் எல்லைச்சரக மாகாணங்களிலிருந்தும் மற்ற பாகங்களிலிருந்தும் காட்டு ரப்பர் சேகரிக்கப்பட்டு, அது ராணுவத்தின் ஜோடுகளுக்கு உபயோகிக்கப்பட்டது.

ரப்பருக்கு பர்த்தியான சாமானைக் கண்டுபிடிக்க இந்திய நிர்வாகம் ஆராய்ச்சி செய்தார்கள். கிரிப் டோஸ்டெகியோ கிராண்டிப்லோராச் செடியை உற்பத்திசெய்யவும் முயற்சிக்கப்பட்டது. அது உசிதகாலத்தில் பயன்படாததால் அது கைவிடப்பட்டது.



இந்த நடவடிக்கைகளின் மூலம் இந்தியா அதன் தேவைகளைப் பூர்த்திசெய்துகொண்டதுடன் 11,500 டன்கள் ரப்பரையும் நேசதேசத்தாருக்கு அனுப்பிற்று.

கடைசியாக தொழிற்சாலைகளில் இந்தியா அமெரிக்க சேர்க்கை ரப்பரை உபயோகித்து நேசதேசத்தாருக்கு அவசியமான குரூட் ரப்பரை அனுப்பிவந்தது.

ஜப்பான் சரணடைந்துவிட்டதால் இந்த அவசியம் நின்றுவிடும். மலேயா, டச்சு கிழக்கிந்தீவிலிருந்து ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டால் பொதுஜனங்களுக்கு உபயோகமுள்ள மோட்டார்கார், ஜோடுகள், டென்னிஸ் பந்துகள், காப்பந்துகளுக்குத் தேவைப்படும் குரூட் ரப்பர் ஏராளமாகக் கிடைத்துவிடும்.

---

# யுத்தம், வெற்றி, விஞ்ஞான சாஸ்திரம்.

**ஸர் S. S. பட்னுகர்.**

சந்தோஷகரமாக யுத்தம் முடிந்துவிட்டது. இந்த வெற்றிக்கும் விஞ்ஞான சாஸ்திரம் செய்த உதவியை மறந்துவிடக்கூடாதென்பதற்காகவும், விஞ்ஞான சாஸ்திரியை அலக்ஷியம் செய்து வறுமைக்குட்படுத்தாமல் இருப்பதற்காகவும் நான் மறுபடியும் கிராம பாதிரியின் வார்த்தைகளை மறுமுறை சொல்லுகிறேன்.

“ஒரு சிறிய நகரத்தில் ஒரு சிலர்களிருந்தார்கள். அதை ஒரு பெரிய வல்லரசு தாக்கி முற்றுகை செய்து, கோட்டைகளை அமைத்தான். அதில் ஒரு ஏழ்மைத்தனமுள்ள புத்திசாலி இருந்தான். அவன் நகரத்தைக் காப்பாற்றினான். ஒருவரும் அவனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவில்லை. அப்பொழுது நான் சொன்னேன், வலிமையை விட புத்திதான் பலமானது. ஆகிலும் புத்திசாலி அவமதிக்கப்படுகின்றான், அவனை ஒருவரும் லக்ஷியம் செய்யவில்லை.”

யுத்தத்தைவிட சமாதானத்துக்கு விஞ்ஞான சாஸ்திரம் அதிக உதவி செய்யுமென்றும் இந்த யுத்தத்திலிருந்து வெளியேறும் புதிய ஜனநாயகம் விஞ்ஞான சாஸ்திரத்தை கௌரவிக்குமென்றும் தோன்றுகிறது.

விஞ்ஞான சாஸ்திரத்தின் பேருதவியை 5½ வருஷ யுத்த முயற்சியிலிருந்து வெளிப்படுத்தலாம். பிரான்ஸ் வீழ்ச்சிபெற்ற பொழுது பிரிட்டனுக்கு நெருக்கடி ஏற்பட்டது. அதற்கு படையெடுப்புப் பயம் ஏற்பட்டது. நகரங்கள் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. வெற்றிகரமான போரை நடத்த பிரிட்டனும் போதுமான முஸ்தீப்புகளும், தளவாடங்களுமில்லை. அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் கடல் மார்க்கமாக பிரிட்டனுக்கு வரும் கப்பல்களை விஞ்ஞான சாஸ்திரத்தில் முதிர்ச்சி பெற்ற எதிரி யூ படகுகளைக் கொண்டு தாக்கிவந்தான். பிரிட்டன் தற்காப்புப் போரை நடத்தி வந்தது.

பிரிட்டனுக்கு உதவிசெய்ய பிரிடிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு இதுதான் தருணம். விமான நடவடிக்கையிலிருந்து பிரிட்டன் அழிவு படுவதைத் தடுக்க பிரிடிஷ் விமான சாஸ்திரிகள் ராடார் கருவியைக் கண்டுபிடித்தார்கள். ரேடியோ கொள்கையைப் பின்பற்றி எதிரி வெடி விமானங்களின் வருகை கண்டுபிடிக்கப்பட்டு அலைகள் வழியிலேயே தாக்கப்பட்டன. பிரிட்டனுக்கான யுத்தத்தை ராடார் கருவி ஜெயித்தது. விஞ்ஞான சாஸ்திரிகள் அதை உண்டு பண்ணினார்கள்.

அதன்பின் ஜெர்மனி ஓட்டியில்லாத விமானங்களையும், அவுட்வாணங்களையும் அனுப்பி இங்கிலாந்தை அழிக்க முயன்றபொழுதும் ராடார் பிரிடிஷை ரக்ஷித்தது. கடலில் யூ படகுகளினுடையவும் காந்தக் கண்ணிகளுடையவும் உபத்திரவத்தை ஒழிக்க வெடிகுண்டுகளும் காந்தத்தை வெறுக்கும் முறைகளும் தயாரிக்கப்பட்டன. கடல் மார்க்கம் இவ்விதம் பத்திரப்படுத்தப்பட்டது.

அதன்பின் அமெரிக்கா யுத்தத்தில் சேர்ந்துகொண்டது. இரண்டு நாடுகளின் விஞ்ஞான சாஸ்திரிகளும் சேர்ந்து தற்காப்புக்கும் முன்னேறித் தாக்குவதற்கும் ஏராளமான ஆயுதங்களைத் தயாரித்தார்கள்.

விஞ்ஞான சாஸ்திரத்தின் அற்புதங்களில் பிரிடிஷ், அமெரிக்கப் புதிய முறைகள் புதிய மதிப்பைப் பெற்றன. பாலிதினும், ஸிலிகோன்ஸும் கண்டுபிடிக்கப்பட்டு தற்காப்பு டெலி

போன், தந்தி, நீர்மூழ்கி கேபிள்கள், விமானங்கள், மின்சார உற்பத்தி, மற்ற அநேக காரியங் களுக்கு உபயோகிக்கப்பட்டன. மலேயா, பர்மா, டச்சு கிழக்கிந்தியாவை இழந்ததினால் ஏற்பட்ட இயற்கை ரப்பர் குறைவை அமெரிக்க, சேர்க்கை ரப்பர் பூர்த்திசெய்தது. ரகசிய மான வெடிகுண்டு சிருஷ்டியும், உயர்தரமான ஆக்டேன் உள்ள காஸோலீனும், இஞ்சினில் அபிவிருத்தியும் சேர்ந்து ஜெர்மனியிலும், ஜப்பானிலும் பலமான விமான நடவடிக்கையைக் கையாள சாதகம் அளித்தது. கடல் ஜலத்திலிருந்து மாக்னிஷியமும், மண்ணிலிருந்து அலுமீனியமும் மாக்னு அலுமீனியம் என்ற கலப்படையையும் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ரோ அலுமீனியம் உதவிகொண்டு லேசான, வேகமான வெடிவிமானங்களும் சண்டை விமானங்களும் கட்டப்பட்டன. விமானம் கட்டுவதிலும் மாறுதல் ஏற்பட்டது. இருபாப்பில் செல்லும்டாங்கிகளும், மாப்பெரிய துறை முகங்களும், மோட்டார்களும் ஐரோப் பியப் படையெடுப்புக்கு உதவி செய்து யுத்தகாலத்தைக் குறைத்தன. கடலில் அபாரமான ஆபத்துக்குட்பட்ட மாலுமிகளுக்கு உயிரைக் காப்பாற்றும் உபாயங்கள் தயாரிக்கப்பட்டன. ஒளிகளிலுள்ள எதிரிகள் கருவிகளின் மூலம் நிர்மூலமாக்கப்பட்டார்கள். ரேடாரின் ஸ்திதியை விஞ்ஞான சாஸ்திரமூலம் கண்டுபிடித்ததினால் விமானப்படைக்கு பத்திரம் ஏற்பட் டது. டி நினைத்துக்கும் அலைவகள் மிகுந்த பிரயோஜனமுள்ளதாக இருந்தன.

யுத்தத்தில் ஜெர்மனியின் விஞ்ஞான சாஸ்திர அபிவிருத்தியும் சிலாக்யமானதுதான். V-1 V—2. குண்டுகளைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஜெர்மனியிலுள்ள ராணுவ அதிகாரிகள் அனுப்பும் தகவல்களிலிருந்து புதிய ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் ஜெர்மனி யில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன என்று தெரியவருகிறது. V—1, V—2-யைவிட அதிகத் தீங்கு விளைவிக்கக்கூடிய குண்டுகள் தயாராகி வந்தன. நாசம் விளைவிக்கக்கூடிய விஷவாயுவும் தயாரிக்கப்பட்டது.

நாசம் விளைவிக்கும் இந்த முயற்சிகளுடன் வைத்தியம், சத்திரம் இரண்டிலும் அபி விருத்தி ஏற்பட்டது. யுத்த சமயத்தில் இவைகளும் அபிவிருத்தி அடைந்தன என்பது குறிப்பிடத் தக்கது.

யுத்த கால வைத்திய அபிவிருத்திகளை சமாதான காலத்தில்தான் மதித்துப்பார்க்க முடியும்; ரத்தம் செலுத்தும் முறைகளும் காய்ந்த பிளாஸ்மாவை உபயோகிப்பதும் அநேக உயிர்களைக் காப்பாற்றிவிட்டன. நமது விஞ்ஞான சாஸ்திரிகள் பெனிஸிலின் என்ற மருந்தைக் கண்டுபிடித்தார்கள். சிந்தெடைனும், II—11-ம் வியாதியைத் தடுக்க கண்டுபிடிக்கப்பட்டன. பிளாஸ்டிக் சத்திர வைத்திய மூலம் முடமாக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. பூச்சியைக் கொல்லக்கூடிய D. D. T.-யும் காமாக்ஸாரும் பூச்சிகளை அழித்து வந்தன.

D. D. T. இல்லாதிருந்தால் உலகத்தில் தொத்துநோய்கள் பரவியிருக்கும். 1913-ம் வருஷத்தில் நேபிள்ஸில் டைபாய்ஜுரம் பரவியபொழுது இதுதான் 12½ லக்ஷம் ஜனங்களைக் காப்பாற்றிற்று. அநேக போர்முனைகளிலுள்ள மலேரியா போன்ற ஜுரம் போல்ஜர்களை பாதிக்காமலும் அது தடுத்து வந்தது.

இத்துடன் வற்றல் போடும் முறைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். யுத்தத்தின் நெருக்கடியான சமயத்தில் இந்த ஏற்பாட்டின்மூலம் கப்பல் இடம் குறைவுபட்டது. யுத்தத் தினால் கஷ்டப்பட்ட நாடுகளிலுள்ளவர்களுக்கு உதவி கிடைத்தது.

எல்லாவற்றையும்விட மேலாக அணு குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அணுவை அழிப் பதற்கும், ஆக்குவதற்கும் உபயோகிக்கக்கூடும் என்பது சித்தித்து விட்டது. ஆகையால் இந்த யுத்தத்தில் வெற்றிக்கு விஞ்ஞான சாஸ்திரம்தான் காரணமென்பது நிச்சயம்.

ஒவ்வொரு நாடும் விஞ்ஞான சாஸ்திர முறையில் இந்த யுத்தத்துக்கு எவ்வளவு உதவி செய்ததென்று சுலபமாகச் சொல்லிவிடமுடியாது. நேச நாடுகள் நெருங்கி ஒத்துழைத்து போரை நடத்தி வெற்றி பெற்றார்கள். ஒரு நாட்டின உற்பத்திகள் மற்றொரு நாட்டில் உபயோகிக்கப்பட்டன. பிரிடன் பெனிஸிலினை உற்பத்தி செய்தது. அமெரிக்கா அதை அபிவிருத்தி செய்து ஏராளமாகத் தயாரித்து உலகத்திற்கு வழங்கிறது. அமெரிக்கா ரடார் கருவிகளை அபாரமாக உற்பத்தி செய்தது. ஜெர்மானியர்களும் ரடார் கருவிகளை உபயோகித் தார்கள். அமெரிக்கா கண்டுபிடித்த வெடிகுண்டு சிருஷ்டி ரகசியமாக இருக்கவில்லை. எக்காலத்திலும் விஞ்ஞான சாஸ்திர முறையில் பூர்ணமான ஒத்துழைப்பு ஏற்பட்டிருந்தது.

அணு குண்டு இதைக் கன்று பிரகடனம் செய்கிறது. இந்த ஆயுதம் கண்டுபிடிக்கப்படு முன் அமெரிக்காவுக்கும், பிரிடனுக்கும் அட்லாண்டிக் விமானப் போக்குவரத்து நடைபெற்றது.



சிலாக்யமான உற்பத்திகள் பிரிடனிலும் அமெரிக்காவிலும் செய்யப்பட்டாலும் மற்ற நேச நாடுகளும் அவர்களுடைய, சர்பரா, தற்காப்பு, தாக்கும் பிரச்னைகளைத் தீர்த்துக் கொண்டன.

அணு குண்டு ஆராய்ச்சி சம்பந்தமாக 500 மிலியன் பவுன்கள் செலவிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும், கனடாவும் பிரதேச உற்பத்திகளில் ஏராளமான பொருள் செலவிட்டிருக்கின்றன.

இந்தியாவில் ஆராய்ச்சிக்கு வருஷம் ஒன்றுக்கு 5 லக்ஷம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந் தது. அது இப்பொழுது இந்தியா பூராவிலும் ஆராய்ச்சிக்காக 15 லக்ஷத்துக்கு அதிகரிக்கப் பட்டிருக்கிறது. இதுவும் இதுபோன்ற மற்ற குந்தகங்களிருந்தபோதிலும் இந்தியாவின் விஞ்ஞான சாஸ்திரம் யுத்தத்துக்குச் செய்த உதவி போற்றக்கூடியது.

இந்தியாவின் ஐந்து வருஷ யுத்த முயற்சியை இந்தத் தோற்றத்தைக் கொண்டும் யுத்த ஆரம்பத்தில் பிற்போக்கான நிலைமையிலிருந்த தொழிற்சாலைகளைக் கொண்டும் மதித்துப் பார்க்கவேண்டும். ஆசியாவுக்கு சர்பரா நிலயமாக இருக்கும் தருணம் இந்தியாவுக்கு ஏற்பட்ட பொழுது யுத்த அவச்யத்துக்காக தேசத்தின் பூரா ஐச்வர்யங்களையும் உபயோகிக்க, ரசாயன, உலோக, எஞ்ஜினியரிங் தொழிற் முறைகளில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று இந்தியா வும் அதன் நிர்வாகமும் முடிவு செய்தது. இதற்காக 1940-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் விஞ்ஞான சாஸ்திர தொழிற்சாலை ஆராய்ச்சி சங்கமும் அதற்குப் பின் ஆராய்ச்சி கவுன்ஸிலும் ஸ்தாபிக்கப்பட்டன. யுத்த காலத்திய இந்திய விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் இந்த ஆராய்ச்சி ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள்தான்.

வருஷத்திற்கு 5 லக்ஷம் ரூபாய்களை கவர்ன்மெண்டாரிடமிருந்து நன்கொடை பெற்ற இந்திய விஞ்ஞான சாஸ்திரிகள் யுத்தத் தேவைக்குப் பொருத்தமான ஒரு இந்தியாவைத் தயா ரித்தனர். இருபது ஆராய்ச்சி கமிட்டிகள், அதாவது கண்ணாடி, ரிப்ராக்டரீஸ், மின்சார ரசா யனம், தொழிற்சாலை பெர்மண்டேஷன், மருந்துகள், சாயச் சரக்குகள், கனமான ரசாயனங் கள், பிளாஸ்டிக்ஸ், கரி, உலோகம் முதலியன சம்பந்தமாக தொழிற்சாலைகளை அமைக்கவும் யுத்த முயற்சிக்கு உதவவும் அமைக்கப்பட்டன. இந்திய சர்வகலாசாலைகளில் ஆராய்ச்சி செய் வதற்கும் பொருளுதவி செய்யப்பட்டது. டிரக்டர், விஞ்ஞான சாஸ்திர, தொழிற்சாலை ஆராய்ச்சி ரசாயன பரிசோதனை சாலைகளும் அமைக்கப்பட்டன. இங்குதான் ஆராய்ச்சி கவுன் ஸில் வேலை செய்து வந்தது. விமான சாஸ்திர, தொழிற்சாலை ஆராய்ச்சி கவுன்ஸிலினால் பொருளுதவி செய்யப்பட்ட பங்களூர், கல்கத்தா, பம்பாய், மதராஸிலுள்ள நிலயங்களும் கவுன்ஸிலின் ஆராய்ச்சி நிகழ்ச்சிக்குப் பேருதவி செய்தன.

கவுன்ஸில் வேலை செய்த சொல்ப காலத்திற்குள் 200 பிரச்னைகள் பரிசோதனை செய்யப் பட்டன. டிரெக்டரின் ரசாயன பரிசோதனைசாலை இந்திய தொழிற்சாலைகளுக்கும், யுத்த முயற்சியின் விஞ்ஞான சாஸ்திரப் பகுதிக்கும் பேருதவி செய்தன. இங்கு சிலவற்றை உதாரணமாகக் கூறுவோம்.

யுத்தத்தின் காரணமாக உலகமெங்கும் இந்தியாவிலும் உலோகம் குறைந்துவிட்டது. அநேக தொழிற்சாலைகளில் இரும்புக்கு பதிலாக பிளாஸ்டிக்ஸ் உபயோகிக்கப்பட்டது. அதன் மூலம் அநேக அபிவிருத்திகளும் ஏற்பட்டன. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஜெர்மனி யிலும் பிளாஸ்டிக்ஸ் தளவாடங்கள் சேர்க்கை ஜவ்வினால் செய்யப்பட்டன. இந்த ஜவ்வுக்கு வேண்டிய தாதுப்பொருள்கள் இந்தியாவில் போதிய அளவு அரக்கு ஆராய்ச்சி சங்கத்திலும் இன்னும் மற்ற இடங்களிலும் உற்பத்தி செய்யக்கூடவில்லை. டிரெக்டரின் ரசாயன சாலை யிலும் பிளாஸ்டிக்ஸ் உண்டுபண்ணக்கூடிய இதர உள்நாட்டுப் பொருள்கள் ஆராய்ச்சி செய் யப்பட்டன.

அநேக வெற்றிகரமான முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன. ஜெட்டிஸன் டாங்கு களும், பெட்ரோல் உட்புகாத பிளாஸ்டிக்ஸ் டாங்குகளும் சணலிலிருந்தும், ஷெல்லாக்கிலிருந் தும் உற்பத்தி செய்யப்பட்டன. கட்டட தளவாடங்களை உற்பத்தி செய்ய பாகாஸி பிளாஸ் டிக்ஸ் தயாரிக்கப்பட்டது. ஷெல்லாக்கையும் சணலையும் உபயோகித்து, நார்ப்பலகைகளும், உலோகமில்லாத அண்டாக்களும், அடையாள அட்டைகளும், இன்ஸுலேஷன் சாமான்களும் செய்யப்பட்டன. மின்சார வேலைக்கு ஹார்ன்குப்பை பிளாஸ்டிக்ஸ் உபயோகிக்கப்பட்டது. விளக்கெண்ணெய்யிலிருந்தும் தையல்காரரின் கழிவு துணியிலிருந்தும் எளிதில் மடக்கக்கூடிய குழாய்கள் தயாரிக்கப்பட்டன. எனுமெல்கள், லாகர்கள், வர்ணங்கள், பிளாஸ்டிக்கள்

144428

## II

By செ. பழ. சிதம்பரம் செட்டியார்.

1. வெற்றி வெற்றி வெற்றி என்று
   வாழ்த்துரைகள் கூறுவோம்.
   வெற்றி வைபவம் நடத்தி
   வீறுகொண்டு பாடுவோம் (வெற்றி).
2. நாஸிகள் சரணடைந்தார்
   நாமடைந்தோம் வெற்றியே!
   நாசவேலை செய்த ஹிட்லர்
   நீக்கினான் தன் ஆவியை (வெற்றி).
3. ஜாப் படைகள் சிதறி ஓடி
   ஜெர்மன் மக்கள் போலவே
   செயலிழந்து அடி பணிந்த
   சீரிய நாள் கண்டோமே (வெற்றி).
4. அகிலமெல்லாம் அல்லல் தீர்ந்து
   அமைதியாக வாழவே
   அன்புடனே தெய்வபக்தி
   ராஜபக்தி செய்குவோம்! (வெற்றி).

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலையத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 262 (3-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 27-8-45 | குமியாமலை | ... மாலை | 7.00 |
| ,, | பரம்பூர் | ... ,, | 7.30 |
| 28-8-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 29-8-45 | மலைக்குடிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | கிள்ளுகோட்டை | ... ,, | 7.30 |
| 30-8-45 | அரிமளம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 31-8-45 | பொ. புதுப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | வேந்தன்பட்டி | ... ,, | 7.30 |
| 1-9-45 | முனிசிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 2-9-45 | குரக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 263. (4-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 3-9-45 | தென்னதிரையன்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | விசலூர் | ... ,, | 7.30 |
| 4-9-45 | மழையூர் | ... ,, | 7.00 |
| ,, | கரம்பக்குடி | ... ,, | 7.30 |
| 5-9-45 | பெருமாநாடு | ... ,, | 7.00 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| 6-9-45 | வாளரமாணிக்கம் | ... மாலை | 7.00 |
| ,, | எம்பல் | ... ,, | 7.30 |
| 7-9-45 | விராலிமலை | ... ,, | 7.00 |
| ,, | பொருவாய் | ... ,, | 7.30 |
| 8-9-45 | முனிசிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 9-9-45 | சீப்பழனி | ... ,, | 7.00 |
| ,, | ஆவூர் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 28—8—45 | ராமச்சந்திரபுரம். |
| 29—8—45 | கரம்பக்குடி. |
| 30—8—45 | கீழாநிலை. |
| 31—8—45 | புதுக்கோட்டை. |
| 1—9—45 | வெட்டன்விடுதி. |
| 2—9—45 | எம்பல். |
| 4—9—45 | வடகாடு. |
| 6—9—45 | குழிபிறை. |
| 7—9—45 | புதுக்கோட்டை. |
| 8—9—45 | பொன்னமராவதி. |
| 9—9—45 | தீத்தான்விடுதி. |

பிரஸ்துத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் ஸூபரின்டெண்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—28-8-45.